காவேரி தீபாவளி மலர் 1959

பொருளடக்கம்

ஸ்ரீ சார்ங்கபாணிஸ்வாமி-மூவர்ணப் படம் — ஜி. குஞ்சு
தீபாவளிக் காணிக்கை ... 1
பண்டித நேருவைப்பற்றின சில சிந்தனைகள்
சி. ஆர். பட்டாபிராமன், எம். பி. ... 2
பாரதத்தின் ஒளிமிகுந்த மாதர்கள்- ஸ்ரீமதி அம்புஜம்மாள் 5
எது கூட்டுறவு? — நா. ரகுநாத ஐயர் ... 8
பகவத்கீதை — ஜி. எஸ். மணி ... 11
டில்லித் தபால் — கே. ஸ்ரீநிவாஸன் ... 17
நம் வாசனைத் தாவரங்கள் — எஸ். விசாலாட்சி ... 22
ராவண நாரத சம்பாஷணை — புரொபசர் ஆர். சீனிவாசன் ... 25
திரு. காமராசர் — எஸ். என். ராமஸ்வாமி ... 31
பரகாலன் — திருவரங்கம் அமிழ்தன் ... 33
வளையல்காரன் — இதயன் ... 42
ஸ்ரீ கோமளவல்லித்தாயார்-மூவர்ணப் படம் — ஜி. குஞ்சு
மாமியாரின் தலைத்தீபாவளி — சேதி ... 49
கண்ணீரும் கதை சொல்லும் — கே. வி. நடராஜன் ... 59
இரண்டாவது தீபாவளி — எஸ். ஜி. ஆர். ... 67
மகுடேஸ்வரர் ஆலயம் — அ. ரா. கிருஷ்ணமூர்த்தி ... 76
சாவையும் வெல்லலாம் — விசால்தேவ் ... 82
ஸ்ரீமான் பாபநாசம் சிவன் — ரங்கராமானுஜ அய்யங்கார் ... 84
ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாமிர்தம் — ஹரினி ... 89
குடந்தை ஸ்ரீ ராமஸ்வாமி கோயில் சிற்பங்கள்-புகைப் படங்கள்
குழந்தையும் கஸ்தூரியும் — க. பஞ்சாபகேசன் ... 97
மனைவியா? மரக்கட்டையா? — எஸ். ஜி. ஆர். ... 105
நெஞ்சின் நிறைவு — வனமாலிகை ... 113
கண்ணமங்கையில் ஒரு வண்ண வடிவம்
தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் ... 121
வஜ்ர வீணை (தொடர்கதை) கே. சுந்தராம்பாள் ... 126
வேலையும் கூலியும் — ந. சிதம்பர சுப்ரமண்யன் ... 133
ராதை கண்ட தீபாவளி — வெங்கடலட்சுமி ... 137
மதுரை ஸ்ரீ மீனாக்ஷி மூவர்ணப் படம்—கொண்டையா ராஜு
பிரியதரிசினிக்கு ஒரு வார்த்தை — வளவன் ... 146
திருவனந்தபுரம் — லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் ... 153
மலையில் தீபாவளி — நா. கி. நாகராசன் ... 162
அஞ்ஞானம் — பூவாளூர் சுந்தரராமன் ... 168
திருமண அழைப்பு — ஏ. சுப்பையா ... 177
லக்ஷ்மணபுரியா, லக்னௌவா?- கே. ஸ்ரீநிவாஸன் ... 186
"சுட்டும் விழிச்சுடர் ... மூவர்ணப் படம்-கொண்டையா ராஜு
இன்பமே இங்கே வா! (தொடர்கதை)- தி. சேஷாத்திரி ... 195
பண்டை மகளிரின் பண்பு—வே. வேங்கடராஜுலு ரெட்டியார் 208
பூர்வதேசம் — தி. நா. சுப்ரமணியன் ... 213
ஆசையும் அதிர்ஷ்டமும் — க. சந்தானம் ... 221
ஹிந்துமதமே ஆதிமதம்! — எஸ். விஜயா ... 231
கலைக்கோயிலுக்குள் வாருங்கள் — ஜெமினி கணேசன் ... 233
நினைவுப்பாதையில் நிலைத்த நிகழ்ச்சிகள் — பத்மினி ... 235
திரை உலகம் — விஸ்வம் ... 237

எல்லாவித
கலர் பிளாக்குகள்
லைன்-ஆப்டோன்
பிளாக்குகளுக்கு

இந்த மலரில்
காணப்பெறும் பெரும்பாலான
பிளாக்குகள் எம்மால் தயாரிக்கப்
பட்டவை

வாசகர்களுக்கு எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்

எம். சி. அப்பாசாமி செட்டி & கோ

போன் 21902

சென்னை-1

ஸ்தாபிதம் 1890

காவேரி

PUBLIC LIBRARY
2 - NOV 1959

விகாரி-ஹூ	"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச்	ஐப்பசி
மலர் 19	செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"	இதழ் 3

தீபாவளிக் காணிக்கை

கானகங்களில் செடிகள் பூத்து மணம் வீசுகின்றன. தெள்ளிய ஸ்படிக மயமான நீர் வெள்ளமாகப் பாய்ந்தோடுகிறது. குயில்கள் பாடுகின்றன. ஆனால் அனுபவிக்க மலர்களைக் கொய்து அணங்குக்கு அணிவித்து அழகுபார்க்க, மணத்தை நுகர, நீரைப் பருக, பாட்டை ரசிக்க மனிதரில்லை. அதனால் இயற்கை கவலைப் படுவதில்லை. பிறப்பும், பிரகாசிப்பும், மடிதலும் வானத்திலுள்ள விண்மீன்களிலிருந்து மனித, தாவர ஜாதிவரை அனுபவிக்க வேண்டிய நியதி போலும்.

ஆயினும் மனிதன் இதனைப் பொருட்படுத்தாது என்றும் சிரஞ்சீவி போல் பாவித்துக்கொண்டு உண்டு களிக்கிறான், பண்டிகைகள் கொண்டாடுகிறான், குழந்தைகளுடன் குலாவுகிறான். மலர்களைத் தொகுத்து மாதர்களுக்கு அணிவிக்கிறான், அழகு பார்க்கிறான், களிப்பெய்துகிறான். பொழுது புலர்ந்ததும் மலர் வாடிவிடுகிறது, அழகு குலைந்து விடுகிறது, மணம் குன்றி விடுகிறது.

சிருஷ்டியில் மற்றுமோர் மலர் தோன்றியுள்ளது. அது தான் மனிதன் அறிவில் பூத்த மலர். இது வாடா மலர். மாக்களை மக்களாக்கும் சுடர். உள்ளங்களைப் பண்படுத்தி சிந்தனை சக்திகளைத் தூண்டி மனிதன் உய்ய வழி வகை செய்கிறது. கால வெள்ளங்களில் தோன்றி மறைந்த அறிவுச் சுடர்களிலிருந்து பொறிகளைப் பெற்று,பெரிய தீபமாக ஏற்றிவைக்கிறது. எதற்கு? மனிதன் பண்படைய, களிப்பெய்ய, அவன் உள்ளத்தில் உவகை பொங்க.

சிந்தனை சக்திபடைத்த மனிதன், தான் மறைந்தாலும் தன் புத்தியை உபயோகித்து வருங்கால சந்ததியினருக்கு அறிவுப் பொக்கிஷமாகச் சிறந்த நூல்களை எழுதிவைக்கிறான். தலைமுறை தலைமுறையாக இது வளர்ந்துகொண்டேபோய் புதிய புதிய சிருஷ்டிகள் தோன்றுகின்றன. மனிதனுக்கு இறைவன் அளித்துள்ள வாழ்நாளில் பாதிக்குமேல் பாலப்பருவம் இளமைச் சேஷ்டைகள் மூப்புத் தளர்ச்சி கொள்ளை கொண்டுவிடுகின்றன. எஞ்சியுள்ள காலத்தில் வயிற்றைக் கழுவப் பெரும் பகுதியை செலவழித்துவிடுகிறான். எனவே அவனுக்கு எல்லா நூல்களையும் நுகர அவகாசமில்லை.

தேய்க்கத் தேய்க்கப் பொன்னும், உபயோகிக்க உபயோகிக்கப் புத்தியும் பிரகாசிக்கும் என்பார்கள். அதேபோல் நமது ஓவியர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் வாய்ப்பளித்து தத்தம் தலைசிறந்த சிருஷ்டிகளைக் குவித்துத் தொடுத்து பத்திரிகைகள் புனித பண்டிகை தினத்தன்று வாசகர்களுக்கு காணிக்கையாக வெளியிடுகின்றன. படிக்கிறவர்களுக்கும் குதூகலம், எழுதுகிறவர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு. குறுகிய காலத்தில் சிறந்த சிருஷ்டிகளை ஒரே மலரில் காணும் வாய்ப்பு கிடைக்கிறது.

இத்தகைய மலர் தான் தீபாவளி மலர். இதனில் பல அன்பர்கள் தங்கள் கற்பனைத் திறனை எழுத்து வடிவத்திலும், ஓவிய மூலமாகவும் தீட்டியிருக்கிறார்கள். நமது பண்டைய கால சிருஷ்டிகளும் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. நவீன மனிதனின் மனதைக் கொள்ளை கொள்ளும் சினிமா நக்ஷத்திர நடிகர்களின் கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இதனை ஆக்குவதில் நமக்குப் பெரும் துணையாக நின்ற எழுத்தாளர்கள், ஓவியர்கள் கொண்டையா ராஜு-ராமலிங்கம், குஞ்சு, துரை, ராஜா, ரமணி, போட்டோ ராஜு, சென்னை ஆனந்தன், சாமா இவர்களைப் பாராட்டுகிறோம்.

வாசகர்களுக்கு நமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

மலர் செயற்கை மலர் தான்; குற்றங் குறைகள் இருப்பது சகஜம். வாசகர்கள் அன்னபக்ஷி போல் நல்லதைக் கிரஹித்து, தீபாவளி காணிக்கையாக இம் மலரை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

பண்டித நேருவைப்பற்றின — — — — சில சிந்தனைகள்

சி. ஆர். பட்டாபிராமன், எம். பி.

அடுத்த மாதம் பண்டித ஜவாஹர்லால் நேருவின் பிறந்த தினம் தேசமெங்கும் கொண்டாடப்பெறும். பைபிளில் கூறிய எழுபது வயதை அடைந்துவிட்டார். ஜனநாயக அமைப்பில் உள்ள நிர்வாகத் தலைவர்களில் ஒருவராயினும், மக்களின் அன்பிற்குப் பாத்திரமான தனித் தலைவர் என்பதில் ஐயமில்லை. சுதந்தரப் போராட்ட நாட்களிலிருந்தே மஹாத்மாவின் சீடராக இருந்த காலந்தொட்டு அவர் மக்களின் மனமொப்பியத் தலைவராகத் திகழ்ந்து வருகிறார். தற்கால உலகில் அவருடன் இந்த அம்சத்தில் அவருக்குச் சரி நிகராகக் கருதக் கூடியவர் வின்ஸ்டன் சர்ச்சில் எனலாம்.

இந்திய மனப்போக்கு, பண்பாடு இவைகளைப் பிரதிபலிக்கும் அவர் வாழ்க்கையிலுள்ள இரண்டொரு அம்சங்களைப் பற்றி மட்டுமே இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இந் நூற்றாண்டு முற்பகுதிகளில் இந்திய தேசிய காங்கிரஸில் அவர் நிகழ்த்திய பேச்சுக்களைத் துருவி ஆராய்ந்தால் அவருடைய சர்வதேச மனப்பான்மையும் தம் தம் வழியே தேசங்கள் ஒத்து வாழ இயலும் என்ற கொள்கையும் தெள்ளெனத் தெரியும். இக் கொள்கைக்கு நாமகரணமிட்டவரும் அவரே. இதை இன்று உலக நாடுகள் ஒத்துக்கொண்டுவிட்டன. இந்தியா தன் அடிமைத் தளைகளை தகர்த்தெறியாத அக் காலங்களில் அவர் நிகழ்த்திய இத்தகைய கொள்கைகள் பகற்கனவு என்று காங்கிரஸ் வட்டாரங்களில் சிலரால் கருதப்பட்டன. அன்றும் பஞ்சசிலம் நேருவால் பறையடிக்கப்பட்டது, அதோடு கலோனியல் ஆட்சியையும் இம்பீரியலிஸத்தையும் அன்றும் கண்டித்து வந்தார். எனவே ஆசிய-ஆப்பிரிக்க கண்டங்களிலுள்ள மக்கள் அவருடைய தலைமையில் அபார நம்பிக்கை வைத்துள்ளனர். பாண்டுங் மஹாநாடு அவருடைய ஆசையின் பூர்த்தி எனினும், ஆப்பிரிகாஆசியநாடுகள் மேற்கத்தியநாடுகளுக்கு எதிரிடையாகவோ கம்யூனிஸ்ட்-கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகள் பூசல்களிலேயோ பங்கெடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்பதைத் தெளிவாக்கினார். நடுநிலைமை வகிப்பதுதான் எப்பொழுதும் இந்தியப் பண்பாடு. புத்தரும், சங்கரரும் இதைத் தான் வற்புறுத்தினர். வேதங்களும் இதை பறையடித்தன. பரமாத்மா சேதன அசேதனப் பொருள்கள் எல்லாவற்றிலும் இருக்கிறார் என்று நம்பிக்கைக் கொண்டுள்ள மக்களுக்கு, தனித்து ஒழுகுவதோ வேற்றுமை மனப்பான்மையோ இருக்கமுடியாது. சகிப்புத் தன்மை ஹிந்துவின் அடிப்படைப் பண்பாடு. இக் கொள்கையைத் தான் நேரு சர்வதேச விவகாரங்களுக்கு விஸ்தரித்தார். இன்று ருஷ்யர்கள் இந்தியாபால் நன்றி காட்டுகின்றனர் என்றால், அவர்கள் இக் கட்டான நிலையில் சிக்கித் தவித்தபொழுது நமது பிரதமர் தம்மைச் சூழ்ந்துள்ள கஷ்டங்களை மதியாது, சகித்து பிறரை வாழவிடும் கொள்கையை வற்புறுத்திப் பேசினார்.

சமூக பொருளாதாரத் துறைகளில் நேருவிடம் நாம் இடைவிடாத கொள்கையைக் காண்கிறோம். இந்தியாவில் முற்றும் துறந்தவனுக்குத் தான் அளவற்ற மதிப்பும் மரியாதையும். வெறும் சக்ரவர்த்திகளையும், தனவந்தர்களையும் நாம் என்றும் புகழ்வதில்லை. மற்ற சீரிய பண்புகள் இல்லாத செல்வத்தைக் கொண்டாடியதில்லை. செல்வத்தில் பிறந்து இங்கிலாந்தில் முதல்தரமான ஹாரோ என்ற பப்ளிக் ஸ்கூலிலும், பிறகு கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் பயின்று பிறகு சட்டக் கல்லூரியில் தேர்ந்தார் நேரு. இந்தியா திரும்பிய உடன் எத்தகைய பதவியும், பணமும் அவருக்குக் கிடைக்கும் வாய்ப்பிருந்தது. ஆனால் பிடிவாதமாக தேச சேவையையும், தியாக வாழ்வையும் கடைப்பிடித்தார். சொல்லொண்ணா கஷ்டங்களும் இடைஞ்சல்களும் நித்திய சம்பவங்களாக இருந்த அச் சுதந்தரப் போராட்டக் காலங்களில், தலைவர்கள் தம் வாழ் நாளில் என்றோ ஒருநாள் தாம் தேசத்தை ஆள்வோமென்றோ சுதந்தர இந்

பண்டித நேரு குடும்பமும், கட்டுரையாளர் குடும்பமும்

தியாவில் பதவிக்கு வருவோமென்றே கனவிலும் கண்டார்களில்லை. தம் கொள்ளுப்பேரன் பேத்திகளாவது நாடு சுதந்தரமடைவதைக் காண்பார்கள் என்றுதான் நம்பி உழைத்தனர். முதன் முதலாக இந்திய தேசீய காங்கிரஸில் "தோழர்களே" (Comrades) என்ற அழைப்பு மொழியை நேரு உபயோகித்ததைக் காண்கிறோம். சமூக முன்னேற்றத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட அவர் தாரதம்யத்தையோ, எவ்வித சலுகையையோ கண்டு சகியார். அக்காலத்திய பெரியவர்கள், அவருடைய தந்தை உள்பட, அவருடைய புரட்சிக் கொள்கைகளைக் கண்டு அகல விழித்து அவருடன் ஒன்றிப்போக முயற்சித்தனர். கம்யூனிஸ்ட் ருஷ்யா உலக அரசியலில் ஒரு நிகரற்ற தேசம் என்பது இன்னும் ஒத்துக்கொள்ளப்படாத காலத்திலேயே நேரு தம் கொள்கைகளை வகுத்துக் கொண்டு பேசலானார். ஆயினும் அவர் கொள்கைகளுக்கு அடிமையல்ல. மனித வர்க்கத்தினுடைய சுதந்தரத்தையும், தனி மனிதனுடைய சுயேச்சையையும் பாதிக்கா வண்ணம் அக் கொள்கைகளும் மதங்களும் ஒழுக வேண்டுமென்பது அவர் கருத்து.

மதத்தின்பால் நேரு கொண்டுள்ள அபிப்பிராயங்களைப்பற்றி சிலர் சர்ச்சை செய்கின்றனர். ஹிந்து மதம் தவிர மற்ற ஏனைய மதங்கள்பால் அவருக்கு அனுதாபம் உண்டு என்கின்றனர். இங்கு அவர் கீதை உபநிஷத்துக்கள்பால் கொண்டுள்ள அபாரப் பற்றைக் குறிப்பிட வேண்டும். விஞ்ஞான ரீதியில் உலகில் முன்னேற்றமடைந்த நாடுகளுடன் இந்தியாவும் வெகு சீக்கிரத்தில் சரிநிகராகத் தலை தூக்கி நிற்க வேண்டும் என்ற ஆர்வத்தில், அவர் சிலரை, சிலருடையக் கொள்கைகளை, இடரக்கூடும். கர்மயோகிகள், இறைவனால் தம் கருவிகளாக சிருஷ்டித்து அனுப்பப்பட்ட தெய்வீகப் பிறவிகள், இவர்களால் இதனை செய்யாமலிருக்க முடியாது. அவர் திடகாத்திரராகவும், சந்துஷ்டியுடனும் நீண்டகாலம் ஜீவித்திருக்க இறைவனை வேண்டுவோமாக.

டயர் புதுப்பிப்பது வீண் செலவு என்று நான் கருதிவந்தேன். ஆனால்

இந்த புதுப்பித்த டயர்கள் புத்தம் புதியன போல் உழைக்கின்றன.

டி.வி எஸ். புதுப்பித்த டயர்களுக்கே இக்குணங்கள்

புது டயர் ஒன்றையும், டி. வி. எஸ் புதுப்பித்த டயர் ஒன்றையும் சேர்த்து வைத்தால், வித்தியாசம் காண முடியாது. டி. வி. எஸ். புதுப்பித்த டயர்கள், புதிய டயர்கள் எவ்வளவு மைலேஜ் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறோமோ, அவ்வளவு மைலேஜ் கொடுக்கும்.

மழுங்கிப்போன டயர்களை எறிந்துவிடாதீர்கள். டி. வி, எஸ். மூலம் புதுப்பித்து, பணத்தை மிச்சப்படுத்துங்கள். உங்கள் டயர்களை 8 மணி நேரத்திற்குள்ளாக புதுப்பித்துக் கொள்ளலாம். தென் இந்தியாவில் 201 ஊர்களிலுள்ள சதர்ன் ரோட்வேஸ் மூலம் உங்கள் டயர்களை சேகரித்து எடுத்துச் சென்று, புதுப்பித்து போக்கு வரத்து செலவு இனாமாக டி. வி. எஸ். திருப்பித்தரும்.



TVS/SI/247a

சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் ப்ரைவேட் லிமிடெட்

புதுக்கோட்டை - சென்னை

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)

பாரதத்தின் ஒளிமிகுந்த மாதர்கள்

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

பாரத நாட்டின் பெருமை அதன் பெண்களையும் பொருத்தது என்பது உலகறியும். வேதகால முதல் பாரத சரித்திரத்தில் பெண்கள் நிலையான ஓர் இடம் பெற்றுவிட்டனர். அக்காலத்தில் ஒளிவிடும் நக்ஷத்திரங்களாகத் திகழ்ந்த கார்க்கி, மைத்திரேயி முதலியோரது வரலாறு இவ் உண்மையை எடுத்துக்காட்ட வல்லது.

பேரிதிகாசங்களான பாரதம், இராமாயணம் முதலியவற்றிலும் பெண்களே நடுநாயகமாகத் திகழ்வதைக் காணலாம். திரௌபதியும், சீதையும் அவ்வக்காலச் சூழ்நிலைக்கேற்ப மிக உன்னதமான லட்சிய கதாபாத்திரங்களாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர். இன்றும் என்றென்றும் இம்மாதரசிகள் பாரதத்தின் பெண்குலத்திற்கு ஒளி காட்டி நிற்கின்றனர். இன்னும் நளாயினி, சாவித்திரி, தமயந்தி, அனசூயை போல்வாரின் வரலாறும் பெண் மக்கள் உள்ளத்தில் இடம்பெற்று அவர்கள் பண்பாட்டை வளர்ப்பதற்குரியதாக இருக்கிறது.

சங்க இலக்கியங்கள் மூலம் நம்நாட்டில் அறிவாற்றல் பெற்றுச் சிறந்து விளங்கிய ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்களைப்பற்றி அறிகிறோம். இவர்கள் இயற்றி வைத்துப்போன அறவுரைகளும் பிறவும் உலகுள்ளளவும் புகழ் மங்காது ஒளிர்வன. அறிவுத் துறையில் புரட்சியை உண்டு பண்ணிய லீலாவதி அம்மையார் வானசாஸ்திரக் கலையில் பற்பல ஆராய்ச்சிகளைச் செய்து பல உண்மைகளை கண்டறிந்ததன் பயனாகத்தான் இன்று நாம் பஞ்சாங்கங்கள், ஜியோமிதி, பீஜகணிதம் ஆகிய கணித சாஸ்திரங்களை அறிகிறோம்.

பாரதச் சரித்திரத்தின் இடைக்காலத்திலும் கண்ணகி, மணிமேகலை போன்ற வீரக் கற்பரசிகளைப்பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களுள் காண்கிறோம். தர்மத்தைக் காக்க இவர்கள் புரிந்த அருஞ்சாதனைகள் நாம் அறிவோம். அநித்தியமான இவ்வுலக இன்பங்களை வெறுத்து இறைவனோடு இரண்டறக்கலந்த ஸ்ரீ ஆண்டாளையும், மீராபாயையும் போன்ற தெய்வீக ஒளிபெற்ற சுடர்கள் நம் பாரத மண்ணில் உதயமானவையே.

புராண வரலாற்றில் திலகவதியார், காரைக்கால் அம்மையார் ஆகியோரைப்பற்றியும் அறியப்படுகிறது. இவர்களது அஞ்சா நெஞ்சுரம் நம்மை வியக்கச்செய்யும் வகையில் உள்ளது. சரித்திரத்தில் நிலையான புகழ் பெற்றுவிட்ட ராணி மங்கம்மாள் தமிழ் நாடெங்கும் தமது பெயரை விளக்கும் சத்திரம் சாவடிகளின் வாயிலாக அவரது ஊதார குணத்தை ஏழை மக்கள் எண்ணிப்பார்த்து அஞ்சலி செய்யும் வகையில் அணையாத ஜோதியாகத் திகழ்கிறாள்.

இடைக்கால இறுதிப் பகுதி நம் பாரதநாடு ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்டுத் தளையுண்டு கிடந்த இருள் சூழ்ந்த காலம். இந்தக் காலததேதான் வீராங்கனைகள் பலர்தோன்றி அன்னையின் விலங்கை அறுத்தெறிய அஞ்சா நெஞ்சத்தோடு அறப்போர் புரிய முன்வந்தனர். சுதந்தர இயக்கத்தில் பெண்கள் பெரும் பங்கு கொண்டனர். வீரப் போராட்டத்தைத் துவக்கி வைத்தாள் ஒரு பெண் மணி — ஜான்ஸி பாய். சுதந்தரக்கனல் சுடர் விட்டு எரிய ஆரம்பித்தது. முதல் உலகப் போர் மூண்டபோது ஹோம்ரூல்இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார் அன்னிபெஸண்ட் அம்மையார். விதேசிப் பொருள்களை பகிஷ்காரம் செய்யவும் மதுவை விலக்கவும், தேசீயக் கல்வித் திட்டத்தை அமைக்கவும் அரும்பாடுபட்டனர். அம்மையார் கவிக்குயில் சரோஜினி நாயுடு, தம் லக்ஷ்மணபுரி காங்கிரஸைத் தலைமை தாங்கி நடத்திய வீரப்பெரும் தியாகி, ஆங்கிலேயரை எதிர்த்து உப்பு சத்தியாக்கிரகத்தை நடத்தினர். இன்னும் இவர்போல் அரசியல் துறையில் முன்னணியில் நின்று அரும்பெரும் சாதனைகள் புரிந்த கமலாதேவி சட்டோபாத்தியாய, அன்னை கஸ்தூரிபா, கமலா நேரு, கஸின்ஸ் அம்மையார். ருக்மணி லெட்சுமிபதி ஆகியோரை நாம் மறக்க முடியுமா? இவர்களெல்லாம் பாரதத்தாய் ஈன்ற சுடர்மணிகள் அல்லவா?

இன்னும் இவை போன்ற நட்சத்திரங்கள் பல வானில் மின்னிக்கொண்டுதானிருக்கின்றன. இருண்ட நெறிகளில் நாம் செல்லாதவாறு ஒளி காட்டி வழிகாட்டி நிற்கின்றன. ஸ்ரீமதி துர்க்காபாய் போன்ற தியாக நக்ஷத்திரங்களைத்தான் குறிப்பிடுகின்றேன்.

அரசியல் துறையில் ஈடுபட்டு உப்பு சத்தியாக்கிரகம் நடைபெற்றபோது சிறைப்பட்ட இரத்தினங்களில் இவரும் ஒருவர், தன்னலம் பாராது தியாகமே உருவாக, பெண்குலத்தின் நலனுக்கே தம்மை அர்ப்பணித்த சுடர்மணிகள் இன்னும் இருப்பதனால் தான் அவர் காட்டும் நெறியைப் பின்பற்றி எண்ணற்ற மக்கள் வெற்றிப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

இதுபோல சமூகத் துறையிலும், கல்வித் துறையிலும் தன்னலமற்ற பணியாற்றிவரும் டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி, சகோதரி சுபலக்ஷ்மி அம்மாள், லேடி வெங்கட்ட சுப்பராவ், கிளப்வாலா ஜாதவ் ஆகிய சகோதரிகளும் வருங்காலப் பிரஜைகளாகிய இந்தியப் பெண்மணிகளுக்கு ஒளிகாட்டும் சுடர்களாக விளங்குவார்கள்.

இன்று தீபாவளி நன்னாள். தீப ஒளி எங்கும் வீசும் புது நாள். அத்தீப ஒளியிலே பாரதநாட்டுச் சுடரனைய இப்பெண் இரத்தினங்களைக் கண்டு சிந்தித்து அஞ்சலி செய்வோமாக!

Tel: "COFFEE" Phone: 107

ஸ்ரீ
லக்ஷ்மி காப்பி

பிராஞ்சுகள் :-
பஸ் ஸ்டாண்டு - தஞ்சாவூர்.
கடைத்தெரு - திருத்துறைப்பூண்டி.
ஓடத்துறைத்தெரு - திருவையாறு.
மகாத்மா காந்தி ரோடு - மன்னார்குடி.
மெயின்ரோடு - அம்பாசமுத்திரம்.
49, கீழரதவீதி-திருநெல்வேலி டவுன்.

கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்டு நெ: 152317.

தயாரிப்பவர்கள் : ஸ்ரீ லக்ஷ்மி & கோ
காப்பிக்கொட்டை, பவுடர், டீ & ஸ்ரீ லலிதா அப்பளாம் வியாபாரம்,
H. O. காசுக்கடைத்தெரு, தஞ்சாவூர்.
என்றும் தங்கள் ஆதரவை விரும்புகிறோம்.

முருகா வென்றே உருகுவாய்!

சன்மிஷ்டை

முருகா, முருகா, முருகா வென்றே
பெருகா தலுடன் உருகாய் மனமே.
ஆர்வங் கொள்வாய் ஆறு முகத்தாற்
கார்மே கம்போற் கருணை பொழிவான்.
அமரர் சேனைக் கரசே, குகனே
குமராய நமவெனக் கும்பிடு மனமே.
படர்க ளொழியும்; பந்தனை சிந்தும்
இடர்க ளெல்லாம் இரவிமுன் பனியாம்.
அன்பு வளரும்; ஆணவந் தளரும்
இன்பம் பெருகும்; துன்பம் ஒழியும்.
அறமுந் திருவும், அறிவும், ஆற்றலும்
வரமும், திவ்விய வாழ்வும் வளரும்.
வெற்றிவே லென்றால் வீரங் கனலும்,
கொற்ற மோங்குங் குலநல மோங்கும்.
கெடுத லொழியும், கீழ்மை யொழியும்
விடுதலை சேரும், வினைத்திட் பமுறும்.
தவக்கன லொளிரும் சிவக்கன லொளியைப்
பவப்பிணி தீரப் பரவுநன் மனமே.
திருவார் செவ்வேள் முருகா!
முருகா வென்றே உருகுவாய் மனமே!

எது கூட்டுறவு?

நா. ரகுநாத ஐயர்

பஞ்ச தந்திரத்தில் ஒரு கதை. ஓர் ஆண்டி தான் பிச்சையெடுத்த சோற்றில் தின்றது போக மிகுதியைக் கப்பரையில் இட்டு உயரத் தொங்கவிட்டிருந்தான். இரவில் ஒரு சுண்டெலி கீழேயிருந்து தாவித் தாவி அந்தச் சோற்றைத் திருடிற்று இதைக்கண்டு பாரைக்கோலால் அதன் வளையை இடித்து அங்கே எலியால் அரண்மனையிலிருந்து திருடிக்கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த தங்க நகையைக் கண்டான். அந்த நகையை அவன் அபகரித்த பிறகு மறுநாள் வழக்கம் போல் எலி சோற்றைத் திருட முயன்றாலும் அவ்வளவு உயரத் தாவுவதற்குத் தெம்பற்றுவிட்டது. ஆண்டி சொன்னான், "தங்க நகையின் பிரபாவம் அல்லவா எலிக்கு இவ்வளவு உயரம் தாவத் தென்பு ஏற்பட்டது. தனம் யௌவனத்தைத் தரும் அதில்லையேல், உடம்பு வலியோ மனத் தென்போ, ஊக்கமோ ஒன்றும் ஸித்திக்காது என்று".

இந்தக் கதையின் உண்மையைத் தனி மனிதனின் சுதந்தரத்தில் அடிப்படை நம்பிக்கையுள்ள மேல் நாட்டு ஜன நாயகங்களும் தெரிந்துகொண்டுதான் இருக்கின்றன. தனக்கென்ற சொத்து போதிய அளவுக்கு தனி மனிதன் கையில் இல்லையென்றால் அவனுக்குத் தன் சுதந்தரத்தை காப்பாற்றிககொள்ள முடியாது என்று அவைகளின் துணிபு. இதற்கு நேர் விரோதமாக கம்யூனிஸ்ட் ஏகாதிபத்தியங்களில் எல்லா சொத்தும் பொது மக்களைச் சேர்ந்தது என்றும், உழைப்பவரே சாப்பிடலாம் என்றும் பலவிதக் கொள்கைகள் நிலவி வருகின்றன. நமது பிரதமர் நேருஜி கம்யூனிஸத்தில் நம்பிக்கை தனக்கு இல்லையென்று சொல்லிக்கொள்ளுகிறார். தனிமனிதனின் சுதந்தரத்திற்கு ஒருநாளும் குறைவு விளைவிக்கக் கூடாது என்றும் சொல்லுகிறார். ஆனால் தம்மைப் பற்றின வரையில் தனி மனிதனுக்குச் சொத்து அவசியம் என்ற கொள்கையில் பிடித்தம் இல்லையென்றும் காங்கிரஸ் கட்சியின் நோக்கமாய் உள்ள ஸோஷலிஸத்தின் படி, பணக்காரன், ஏழை என்பதில்லாமல் எல்லோரையும் சம நிலையில் நிறுத்த வேண்டி சர்க்கார் சட்ட மூலமாகச் சொத்து உபரியாய் உள்ளவர்களிடமிருந்து அவர்களுடைய மிகுதியைச் சொத்தில்லாதவர்களுக்குப் பங்கிடுவதே ராஜதர்மம் என்று வாதிக்கிறார். அப்படிச் செய்தால் தனி மனிதனின் சுதந்தரம் என்ன ஆவது என்ற கேள்விக்குப் பதில் பிறர் புரிந்து கொள்ளும்படி அவர் இதுவரையில் சொல்லவில்லை.

கூட்டுறவு என்ற மந்திரத்தால் எதையும் சாதிக்கலாம் என்று அவர் பறை சாற்றி வருகிறார் என்பது உண்மையே. அந்தக் கூட்டுறவுமுறையே தனி மனிதனின் சுதந்தரத்தைக் கெடுக்காமல் பொதுமக்களின் நிலையை உயர்த்துவதற்கு வழி என்கிறார். இந்தக் கூட்டுறவை நமது மக்களின் நல் வாழ்க்கைக்கு அடிப்படையான விவசாயத்திலேயே புகுத்திவிட வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கிறார். ஜமீன்தார்களையும் மிராசுதார்களையும் நாளடைவில் ஒழித்து உழுபவனுக்கே நிலச்சுதந்தரம் என்ற கொள்கையை அமுலுக்குக் கொண்டு வந்து பல்லாயிரக் கணக்கான சொந்த நிலமில்லாத நபர்களுக்கு இதன் மூலம் சொத்து கொடுப்பதாக ஆசை காட்டி அவர்களுடைய ஆதரவைப்பெற்ற காங்கிரஸ் கட்சி இப்பொழுது இப்படி சொப்பனம் போல் கிடைத்த உரிமையைக் கூட்டுறவு என்ற வியாஜத்தைக்கொண்டு திரும்பிப் பிடுங்கிக்கொள்ள ஏற்பாடு செய்கிறது.

கூட்டுறவு ஸாகுபடி (Joint Farming) க்கும், பொது சாகுபடி (Collective Farming) க்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு என்றும் கூட்டுறவுப் பண்ணையில் சேருகிறவர்களுடைய நிலங்களின் வரப்பு முதலியவைகள் எடுக்கப்பட்டாலும் அவர்களுடைய பட்டாவும் சொத்து உரிமையும் பாதிக்கப்படாது என்றும், வருவாயிலிருந்து அவரவர்கள் சொத்தின் அளவுப்படி விகிதாசாரமாக லாபத்தில் பங்கு

கிடைக்கும் என்றும் கூறுகிறார். ஆனால் யாராவது ஒருவனோ அல்லது சிலரோ அனுபவத்தில் இந்தக் கூட்டுறவுப்பண்ணை திருப்திகரமாக இல்லை யென்று அதி லிருந்து தம்மைக் கழற்றிக் கொள்ள வேண்டுமென்றால் அது அவர்கள் இஷ்டம் போல் அனுமதிக்கப்படாது என்றும் கூறு கிறார். பண்ணையில் சேர்ந்த அத்தனை பேருமோ அல்லது பெரும்பான்மையரோ பண்ணையைக் கலைக்க வேண்டும் என்று யோஜித்து முடிவு செய்தால்தான் அது அனுமதிக்கப்படுமாம். தவிர கூட்டுறவுப் பண்ணையில் சேர்ந்த நிலத்தை ஒருவன் தன் முடைக்கு விற்கவோ ஒத்திவைக்கவோ அல்லது வேறு விநியோகம் செய்யவோ முடியாது. இந்த நிலைமையில் ஏட்டில் எழுதப்பட்ட சொத்துரிமை எதற்காகும்?

இந்த ஏட்டு உரிமையும் நாளடைவில் பறந்து போகும் என்பதற்கு ஜமீன்தார்கள் மிராசுதார்கள் இவர்களுடைய சொத்துரி மைகள் போன போக்கே போதுமான அத்தாட்சி. கூட்டுப்பண்ணைகளில் நிலச் முள்ளவர்கள், நிலமில்லாதவர்கள் எல் லோரும் சேர்க்கப்படுவதோடு அவரவர்கள் செய்யும் வேலைக்குத் தகுந்தபடி பண்ணை வருவாயில் விகிதம் கொடுக்கப்படும். இது போக எஞ்சியிருப்பதிலிருந்து தான் நிலச் சுவான்தார்களுக்கு நில வருமானம் விகி திக்கப்படும். வேலையாளர் சங்கங்களின் பலத்தை உபயோகப்படுத்தி பெரிய தொழிற்சாலைகளில் கிடைக்கும் வருவாயில் பெரும்பான்மை கூலியாட்களுக்கே கொடுக்கப்படவேண்டும் என்றும் முத லாளிகளுக்கு வருமானம் வரவரக் குறைய வேண்டும் என்றும் நாளடைவிலே முதலாளிகளோ நீக்கப்பட்டு தொழிற்சாலை கள் உழைப்பவர்களுக்குப் பிரத்யேக மாகவோ அல்லது பொதுமக்களுக்கோ (அதாவது, சர்க்காருக்கே) சொந்தமாக வேண்டும் என்ற தீவிர ஸோஷலிஸ்டு களின் நோக்கம் எல்லோருக்கும் அறிந் ததே. இப்படியிருக்க நிலத்தைப் பற்றிய வரையில் மட்டும் இந்த நோக்கம் நிறை வேற மாட்டாது என்றும் கூட்டுறவுப் பண்ணைகளில் சேர்ந்த நில முதலாளிகள் தங்களுடைய உரிமைகள் ஒரு நாளும் குறைவு படாதபடி சட்டத்தால் காப்பாற்றப் படுவார்கள் என்றும் காங்கிரஸ் கட்சியினர் பசப்பினால் கேட்பவர்கள் இதை நம்புவார் களா?

"கூட்டுறவு' என்ற வார்த்தையை உப யோகித்த மாத்திரத்தில் ஜனங்களுக்குள் அன்யோன்ய பாவமும் நட்பும் விருத்தி யாகிவிடும் என்ற ஒரு பொதுப்படையான எண்ணத்தை சற்று ஆராய்வது அவசியம். இந்திய சாம்ராஜ்யமே கூட்டுறவுப் பொது சமுதாயம் (Co-operative Common-wealth) ஆக நிருவப்படவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியினர் தீர்மானித் திருக்கிறார்கள். தேசத்தையாளும் அதி காரி முதல் கிராம பஞ்சாயத்து வரையில் எல்லா அதிகார ஸ்தாபனங்களும் கூட்டுற வுப் பாங்கின் படியே அமைக்கப்படவேண் டும் என்கிறார்கள். இது உண்மையில் இயலுமா? இப்படிக் கூட்டுறவு என்ற பெயரைச் சொல்லி நடிப்பவர்களால் ஜனநாயகத்தின் (democracy) அடிப் படைத்தத்துவம் பாதிக்கப் படாதா என் பதை யோஜித்துப் பார்க்க வேண்டும். ஜனநாயகம் என்றால் என்ன? பெரும் பான்மையோருடைய அபிப்ராயப்படி சர்க் கார் முதலிய ஸ்தாபனங்கள் நடத்தப்பட வேண்டும். ஆனால் சிறுபான்மையோரு டைய நியாயமான உரிமைகள் பாதிக்கப் படக்கூடாது. மேலும் எந்தத் தீர்மானம் செய்தாலும் அப்படிச் செய்வதற்கு முன் அதன் நியாயாநியாயங்களை பயமில்லாம லும் சந்தேகமில்லாமலும் வாதித்து முடிவு செய்யவேண்டும். அப்படிச் செய்த முடிவு கள் சிறுபான்மைக் கட்சியினருக்கு பூராவும் திருப்திகரமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் முடிந்தவரையில் அவர்களுடைய அபிப்ராயத்திற்கும் இடம்கொடுத்தே அந்த முடிவுகள் செய்யவேண்டும். பிறகு வரும் பொதுத் தேர்தல்களில் இந்தச் சிறுபான் மைக் கட்சிகள் பொதுமக்களின் பூரண ஆத ரவைப் பெற்று சர்க்காரை நடத்தும் அதி காரத்தைக்கைப்பற்றினால் முன்னே செய்த தீர்மானங்களை சட்டபூர்வமாக மாற்றுவதற் கும் அவைகளுக்கு உரிமையுண்டு.

கூட்டுறவை அடிப்படையாய் வைத்து உலகத்தில் எங்கும் காணப்படாத முறை யில் புது அதிகார ஸ்தாபனங்கள் ஏற்படுத்த முன் வந்துள்ள காங்கிரஸ் கட்சியினர் மேலே கூறிய ஜனநாயக ராஜ்ய முறை களை இந்த ஸ்தாபனங்களில் கையாள முடி யுமா அல்லது அவை கையாளப்படுமா என்று யோஜித்ததாகவே தெரியவில்லை. "கூட்டுறவு" என்றும் "பொதுநலம்" என் றும் சொல்லிக்கொண்டு அந்தந்த ஸ்தாப னங்களில் முக்கிய ஸ்தானங்களில்

இருக்கப்பட்ட சிலர் (அதிகாரவர்க்கத்தினர்) எந்தத் தீர்மானத்தை பண்ணினாலும் அதை எல்லோரும் ஒருமுகமாக ஆதரிக்கவேண்டும் என்றும் அப்படிச் செய்யத் தவறினால் அது கூட்டுறவு தத்துவத்துக்கும் பொது நன்மைக்கும் துரோகம் விளைவிப்பதாகும் என்றும் விடா பிரசாரம் செய்து சிறுபான்மையோரின் தன்னம்பிக்கையையும் பொது மக்களின் தன்னம்பிக்கையையும் பொதுமக்களின் பகுத்தறிவையும் கெடுத்துவிடுவார்கள். இதற்கு நிதர்சனமாக காங்கிரஸ் கட்சியின் ஐந்தாண்டுத் திட்டங்களை குறை கூறுபவர்கள் தேசத்துரோகிகள் என்றும் காங்கிரஸின் ஏகாதிபத்யத்தை எதிர்க்கும் சுதந்தரக் கட்சி முதலானவைகள் பொதுமக்களின் நலத்தைக் கெடுக்கும் பிற்போக்காளர்கள் என்றும் பிரதமர் நேரு முதல் நேற்று நாலணா கொடுத்துக் காங்கிரஸில் அங்கத்தினர் ஆனவர் வரையில் எல்லோரும் விடாமல் கூப்பாடு போடுவதையே பார்க்கலாம்.

"ஒருமை, "ஒருமை," என்று சொல்லிக் கொண்டு ஜனங்களுக்குள் நிலவி வரும் தகர்க்கமுடியாத நோக்க வித்யாஸங்களையும் ஒன்றுக்கொன்று முரணான தனி உரிமைகள் இருப்பதையும் மூடிவைப்பது மேலான ராஜ்ய தந்திரமல்ல. கூட்டுறவு ஓரளவுக்குப் பயனளிக்கும் என்பது உண்மையே. பொது மக்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்கு அவசியமான பண்டங்களை வாங்கி விற்பதற்கு கூட்டுறவு சங்கங்கள் (Consumer's Co-operatives) பெரிதும் பயன்பட்டுள்ளன. சங்கங்களின் அங்கத்தினர்களுக்கு நல்ல சாமான்கள் மலிந்த விலையில் தரகர் ஏராள லாபம் அடிக்காதபடி வாங்கிப் பங்கிடுவதும் பணமுடையுள்ளவர்கள் அதற்கென்று ஏற்படும் சங்கங்களில் சேர்ந்து அதிக வட்டி கொடுக்காமல் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதும், இதுபோன்ற ஒருமட்டுக்குள் அகப்பட்ட காரியங்களுக்குக் கூட்டுறவு தத்துவம் அவசியமே. ஆனால் அனுபவத்தையொட்டிப் பார்த்தால் மேல் சொன்ன கூட்டுறவு சங்கங்கள் கூட தனி மனிதர்களால் நடத்தப்படும் பலசரக்கு ஜவுளிக் கடைகள் லேவாதேவிஸ்தாபனங்கள் இவைகளுடைய போட்டியிருப்பதாலேயே தங்கள் காரியங்களை நிதானமாகவும் அங்கத்தினர்களுக்கு நஷ்டமில்லாத வகையிலும் நடத்தவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கின்றன. அந்த விதப் போட்டியில்லாத இடங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் எவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்தவிஷயம்.

ஒவ்வொரு தனி மனிதனும் பலவித உரிமைகளையும் பொறுப்புகளையும் பெற்றிருக்கிறான், ஒருவன் தன் வீட்டுச் செலவுக்கு வேண்டிய எண்ணெய் வாங்க வேண்டியிருக்கிறது. அவன் நிலத்தில் விளையும் நெல்லையோ அவன் விற்கும் நிலையிலிருக்கிறான். இந்த மாதிரி ஒவ்வொருவனும் உபயோகிப்பவன் (consumer), உண்டுபண்ணுபவன் (producer) என்ற பலவித வகுப்புகளிலும் காரியத்தையொட்டி சமயோசிதமாகச் சேரவேண்டியிருப்பதால் இப்பேர்க்கொத்த தனி மனிதர்கள் நிரம்பிய ஒரு சமூகத்தில் எல்லோரும் எல்லா விஷயங்களை பொறுத்த வரையிலும் ஒரு முகமாய் இருப்பார்கள் என்று எண்ணுவதற்கில்லை. இப்படி பல பிரத்யேகத் தேவைகளையும் உரிமைகளையும் அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்கள் அந்த சமூகத்தில் ஏற்பட்டால் இவைகளுக் கிடையே உண்டாகும் விவாதங்களையும் உரிமை முரண்பாடுகளையும் தீர்த்து வைப்பது ராஜீய அதிகார ஸ்தாபனங்களின் பொருப்பாலும். ஆகையால் அந்த ஸ்தாபனங்களையும் கூட்டுறவு முறையில் அமைப்பது என்பது மனித இயல்புக்கும் நடை முறை உண்மைக்கும் ஒவ்வாததாகவேதான் இருக்கும், அந்த அதிகார ஸ்தாபனங்களும் கூட்டுறவை அடிப்படையாகத்தான் கொண்டு இருக்கின்றன என்றும் அவைகளுக்குள் அபிப்ராய வேற்றுமைகள் புகுவதற்கு இடமில்லையென்றும் எப்பேர்ப்பட்ட வேற்றுமைகள் ஏற்பட்டாலும் அவைகளைச் சமரசமாகவே தீர்த்து விடலாம் என்றும் வாதிப்பது பொருந்தாது என்பது கிராமாந்தரப் பஞ்சாயத்துகளில் தற்காலம் காணப்படும் சண்டை சச்சரவுகளிலிருந்தும் உண்மை ஜனநாயகத்துக்கு முற்றிலும் மாறாக அவை நடத்தப்படுவதிலிருந்தும் நனகு புலப்படும். உடம்பில் ஏற்பட்ட காயத்தில் சீழ் பிடித்துக் கொண்டால் அதை மூடிமூடி வைத்தால் புரையோடி ஜன்னிதானே பிறக்கும். இந்த உண்மைகளை பொது மக்கள் ஆராய்ந்தால் காங்கிரஸ் கட்சியின் போலி நியாயங்கள் அம்பலமாகும்.

★

"அனன்யாஸ் சிந்தயந்தோ மாம்யே ஜனு: பர்யுபாஸதே தேஷாம் நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம்"—என்று பகவான் சொல்லியிருக்கும் கட்டத்தைப் படித்ததும் பலவேசம் பிள்ளையவர்களுக்கு கண்ணீர் பொங்கிவந்து மேலே பாராயணம் செய்ய முடியாமல் தொண்டையையும் அடைத்தது.

பலவேசம் பிள்ளையவர்களுக்குள்ள கவலைகளின் எண்ணிக்கை கணக்கிலேயே அடங்காதவை, பெரியதும் சிறியதுமாக அவருக்கு எவ்வளவோ வியாகூலங்கள் 'எதைப்பற்றியுமே பெரிதாக எண்ணுமல் எவரொருவர் என்னையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிருர்களோ அவர்களுக்கு வேண்டிய நித்யபடி தேவைகள் உட்பட சகலவிதமான பொறுப்புகளையும் நானே ஏற்று நடத்திக் கொடுக்கிறேன்' என்று கீதாசார்யன் அபயம் அளிக்கிருன்,

ஆனுல் எப்படி?

தம்மைப் பிடித்தாட்டும் கவலைகளை மறந்து தினந்தோறும் சிறிது நேரமாவது பகவானுடைய தியானத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்ற நினைப்பிலேயே அவர் கீதாபாராயணத்தை மேற்கொண்டார் என்பது என்னவோ உண்மை; அதேபோல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சோதனையுடன் வந்து வந்து போய்க் கொண்டிருந்ததும் வாஸ்தவமே.



ஆயினும் வரும் சோதனைகளிலிருந்து அவர்கடத்தப்படுகிருரா? அல்லது அவற்றை அவரே கடக்கிருரா? அந்த இடம் தான் பலவேசம் பிள்ளைக்கு புரியவில்லை.

வாய்தான் கணீரென்று குரலெடுத்துக் கீதையைச் சொல்லிக்கொண்டிருந்ததே தவிர மனம் அதில் ஈடுபட திடீரென்று மறுத்து விட்டு வேறு எதைப்பற்றியெல்லாமோ நினைத்து நினைத்து அலைமோதிக் கொண்டிருந்தது.

பலவேசம் பிள்ளையவர்களின் வீட்டு வாசற் பக்கமே திடீரென்று ஒரே ஆரவாரம் கேட்டது; பல குரல்கள் கூவிக்கூவி எதையோ மிக அவசரமாகத் தெரிவித்துக் கொண்டிருந்தன.

பலவேசம் பிள்ளை பாராயணத்தை அப்படியே நிறுத்தி விட்டு வாசலுக்கு வந்து பார்த்தார்.

அந்தக் கிராமத்தின் ஆரம்பப் பள்ளி சிறுவர்கள், சிறுமிகள் அத்தனைபேரும் அவர் வீட்டுத் திண்ணையில் குழுமிக் கிடந்தார்கள். அவரைக் கண்டதும் விஷயத்தை அவசரமாக அள்ளித் தெளித்தார்கள்.

"நம்ம வீட்டு குழந்தைக்கு காலில் நெருப்பு பட்டு வெந்து போச்சு"

"வாத்தியாரய்யா உங்களை உடனே கையோடு கூட்டி வரச்சொன்னரு."

"என்னது? யாருக்கு?" என்று பரப்பரப்புடன் கேட்டார் பிள்ளை.

"கல்யாணிக்குத்தாங்க! காலே தெரியலைங்க; அப்படி வெந்துபோச்சு"

"அத்தனை நெருப்புக்கு அவள் எங்கே போனுள்?"

"யாரோ நெல்லைப் புழுக்கிவிட்டு அடுப்பை அணைக்காமல் அப்படியே போட்டுவிட்டு போய்விட்டார்களாம். எல்லாப் பசங்களும் அங்கேபோய் அந்த அடுப்பைத் தாண்டித் தாண்டி விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துட்டு இந்தப்பிள்ளையும்போய் தாண்டியிருக்குது; அப்படியே தடுமாறி அடுப்புக்கு உள்ளே விழுந்துடுச்சு" என்று கொஞ்சம் விவரம் தெரிந்த பிள்ளையொருவன் விவரம் சொன்னுன்,

பகவத் கீதை

ஜி. எஸ். மணி

அதற்குள்ளாகவே இன்னொரு பையன் ஓடிவந்து "ரொம்ப ஆபத்தாயிருக்குதாம்; ஓங்களை ஓடனே கூட்டிவரச் சொன்னாங்க" என்று தெரிவித்தான்.

பலவேசம் பிள்ளை பதறிப்போய் ஓடினார்.

ஒரு பர்லாங்கு கூட இருக்காது பள்ளி கூடம், அவர் அங்கு போய் சேருவதற்குள்ளாகவே அந்தப் பள்ளிக்கூடத்தின் வாயிலில் ஒரே கூட்டமாகக் கூடிக்கிடந்ததையும் கவனித்தார். 'கிருஷ்ணபகவானே, காப்பாற்று' என்ற அபயக்குரல் பலவேசம் பிள்ளையின் அடி மனதிலிருந்தபடி லேசாக அரற்றியது. அப்புறம் நின்றுவிட்டது.

பெருமூச்சு வாங்கப் போய் நின்றார்.

குழந்தை கல்யாணி நெருப்பில் விழுந்த புழுவைப் போலவே துடியாய்த் துடித்து அலறிக்கொண்டிருந்தாள். வலது பக்கம் முழங்காலிலிருந்து பாதம் வரையில், காலே உருப்படியாகத் தெரியாத வகையில், எதையோ கொட்டி பூசி மெழுகி வைத்திருந்தார்கள். மேலே எழுதும் மையையும் ஊற்றியிருந்தார்கள்; வாழைப்பட்டையைக் கொதிக்க வைத்துப் பிழிந்து கொட்டியிருந்தார்கள்; புளியைக் கரைத்துப் பூசியமாதிரியும் தோற்றமளிததது; கூடிநின்று வேடிக்கைப் பார்த்தவர்களில் இன்னும் யார்யாரோ இன்னும் ஏதேதோ வைத்தியமெல்லாம் சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

பிள்ளையைக் கண்டதும் சிலர் உபசார வார்த்தைகள் பேசமுற்பட்டனர். ஆனால் அவர் ஒன்றையும் கவனிக்கவில்லை; நேரே போய் குழந்தையை வாரியெடுத்து தம் தோளில் போட்டுக்கொண்டு திரும்பிவிட்டார்.

பகல் பன்னிரெண்டு மணி சமயம் இருக்கும்; கடுமையான வெயில் வறுத்து எடுத்துக் கொண்டிருந்தது தீப்புண் பட்ட குழந்தைக்கு அது தாங்குமோ! எரிச்சல் எப்படி இருக்கும்? பாவம் — ஐந்து வயது நிரம்பிய குழந்தை; தகப்பனாரின் தோளில் துவண்டு போய் சாய்ந்து கிடந்தது.

கொண்டு வந்து தம் வீட்டுக் கூடத்தில் குளுமை நிறைந்த ஓர் இடத்தில் குழந்தையைப் படுக்கையில் கிடத்தினார் பலவேசம் பிள்ளை.

இரண்டு மைலில் இருந்துவந்த இங்கிலீஷ் வைத்தியருக்கு ஆள் பறந்தது.

அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாரும் வந்து வந்து பார்த்தனர்; ஏதோ கேட்டனர்; என்னவோ பேசினர்; போயினர்.

"அடாடா! முழங்கால் வரைக்குமா குழந்தைக்கு தீப்புண்? தணல் அதிகமோ அல்லது சூடேறிய சாம்பல்தானோ? குழந்தை வெகு நேரம் காலை நெருப்புக்குள்ளேயே விட்டு வைத்திருந்ததோ அல்லது சடக்கென்று உதறி எடுத்துவிட்டதோ? அதுவாகவே காலை எடுத்து விட்டதா அல்லது யாராவது வந்து தூக்கியெடுத்தார்களா?" என்றெல்லாம் எத்தனையோ கேள்விகள்.

பலவேசம் பிள்ளைக்குப் பதில் சொல்லவே தெரியவில்லை; யாருக்குமே, எதுவுமே, நிச்சயமாய் சொல்ல முடியவில்லை, அந்தக் குழந்தையிடமிருந்தும் நடந்ததைக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை.

ஒருவராவது ஒன்றையும் பார்க்கவில்லை, பார்த்த சில குழந்தைகளும் சரியாகக் கவனிக்கவில்லை; அனுபவிக்கும் குழந்தைக்கும் ஒன்றும் புரியவில்லை.

கீதோபதேசத்திலும் இப்படி ஒரு கட்டம் வருகிறதே! அவனுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும், ஆனால் அவனும் வாய் திறந்து எதுவுமே சொல்லமாட்டான். முன்னர் நடந்தது — இனி நடக்க இருப்பது எல்லாமே அவனுக்குத் தெளிவாகத் தெரியும். இருப்பினும் சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவிக்க மாட்டான்.

"ஓயாமல் ஒழியாமல் கீதை கீதையென்று உயிரைவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்! நீங்கள் கீதாபாராயணம் செய்வதற்குப் பலனை பார்த்துக் கொண்டீர்களா இப்போதாவது? நாம் எல்லாம் அதைப் படிக்கலாமோ — கூடாதோ? உங்களுக்குத்தான் ஒரு இழவும் தெரியவே மாட்டேனென்கிறது?" என்று அங்கலாய்த்தபடியே புலம்பித் தவித்தாள் பிள்ளையின் தர்மபத்தினி.

அதற்காக அவளை தெய்வ நம்பிக்கையோ அல்லது மதப்பற்றோ அற்றவளென்று கூறி விட முடியாது. யார் எதைச் செய்தாலும் சரி அப்படிச் செய்யலாமோ — கூடாதோ என்ற சந்தேகமும் அவளுக்குக் கூடவே வந்து விடும். 'சரியா — தப்பா' என்று நிச்சயமாக சொல்லவும் அவளுக்குத் தெரியாது. ஒரே வார்த்தையில் அவள் 'சம்சயாத்மா'!

ஒன்றுமே புரியாமல் ஊமையாகி உட்கார்ந்து கிடந்தார் பலவேசம் பிள்ளை; கண்கள் மூடியபடியே இருந்தன.

'அவள் சொல்லுவதுபோல் கீதையைப் படித்துப் படித்து கண்ட பலன்தான் என்ன? எல்லாவற்றையும் மூட்டைகட்டி எட்ட வைத்துவிடலாமா? என்ற எண்ணம் பிள்ளையின் அடி மனதிலிருந்து மெள்ள எட்டிப் பார்த்தது,

கூடவே குழந்தை கல்யாணியைப்பற்றி நினைப்பும் மிதந்தது. ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த அந்தப் பச்சிளங்குழந்தையின் காலையொடித்துப் போட்டது ஏன்?...ஏன்? .. ஏன்?......

'நாஞ அவள் காலை ஒடித்தேன்?' என்று யாரோ கேட்பதுபோல் தோன்றியது.

தம்மை அறியாமலேயே திடுக்கிட்டுவிட்டார் பலவேசம் பிள்ளை.

கதவைத் திறந்துகொண்டு யாரோ ஒரு பையன் 'குடுகுடு' வென்று உள்ளே ஓடி வந்தான், வந்தவன் நேரே கல்யாணி படுத்திருந்த பக்கம் போஞன்.

''ஏய், கல்யாணி! எழுந்து வாடீ, நொண்டி விளையாடலாம்?'' என்ற ஆர்வத்துடனே அழைத்தான்.

''யாருடா பையன் நீ? அவள்தான் ஏற்கனவே நொண்டியாகிப் படுத்துக் கிடக்கிருளே? நொண்டியாடுவதாம், நொண்டி!'' என்று கொஞ்சம் சிடுசிடுத்தார் பிள்ளை; அவனை உறுத்தி விழித்துக்கொண்டே "யார் வீட்டுப் பையனடா நீ?" என்று அதட்டிக் கேட்டார்.

உற்றுப் பார்க்கும் அவரருகே வந்து நின்ருன் அந்த பையன்; சுமார் ஆறேழு வயதுக்குள் இருக்கும்; ''இந்த வீட்டுப் பையன்தான் தாத்தா; என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு?'' என்று அதிசயப்பட்டுக்கொண்டே சொன்ஞன்.

உற்று உற்றுப் பார்த்துக்கொண்டே ''இந்த வீட்டுப் பையஞ?'' என்று கேட்டு தெரியவில்லையே'' என்ருர்; மேலும் சிறிது கவனித்துவிட்டு ''ஓஹோ, நீயா? என்ருர்,

''இப்போது தெரிந்துவிட்டதா?''

''ஓ, தெரிந்துவிட்டது.''

''என்ன தெரிந்தது?''

''என்ன தெரியவேணும்?''

''பலவேசம் பிள்ளையென்ருல் என்ன அர்த்தம் தெரியுமோ, தாத்தா?''

''அட, போக்கிரிப்பயலே! அது தெரிந்து உனக்கென்ன ஆகவேண்டும்?''

''எனக்கு ஒன்றுமில்லை; எல்லாம் உங்களுக்காகத்தான் கேட்டேன்.''

''என்னது, எனக்காகவா!''

''ஆமாம் தாத்தா — நான் கேட்டால் உங்களுக்குத் தெரியாது; நீங்கள் சொல்லுவதை மட்டும் நான் தெரிந்துகொள்ளணும்; அப்படித்தானே?''

''அட போடா வம்பா! நீ எங்காத்துப் பையனே இல்லை; போ, பேர......''

''போய்விடட்டுமா? திரும்பக் கூப்பிடக் கூடாது? சம்மதம்தானே?''

''என்னவோ போ — எனக்கொன்றுமே தெரியவில்லை; புரியவும் இல்லை; உன் இஷ்டம் போல் செய்துகொள்'' என்ருர் பிள்ளை,

அந்தப் பையன் மீண்டும் கல்யாணியிடம் ஓடிஞன்; தன்னேடு விளையாட வரும்படி அழைத்தான்.

கல்யாணியும் ஒரே பாய்ச்சலில் எழுந்துவிட்டாள்; இருவருமாகச் சேர்ந்துகொண்டு குதித்து விளையாடிக் கும்மாளம் போட்டனர்.

''கால், கால் — தீப்புண் பட்ட கால் அவளுக்கு! இந்தக்குதி குதித்தால் எப்படித்தான் குணமாகுமோ, தெரியவில்லையே?'' என்று அலறிக் கொண்டே எழுந்தோடி வந்தார் பலவேசம் பிள்ளை.

"என்ன தாத்தா நீங்கள் ஒன்று? அவளுக்குக் காலில் ஒன்றுமே இல்லையே? இல்லாததை இருப்பதாக நினைத்து வீண் தொல்லைப் படுகிறீர்களே? என்ன வந்து விட்டது இப்போது அவள் காலுக்கு?''

"இல்லாததை இருப்பதாக நினைக்கிறேஞ? குழந்தைக்குத் தீப்புண் பட்டது பொய் என்ரு சொல்லுகிருய்? உனக்கென்னல தெரியும் வாண்டுப் பயலே? நாளைக்கு காமே அழுகிச் சொட்டிஞல் நீயா வந்து வைத்தியத் செய்து குணப்படுத்தப் போகிருய்?'' என்று ஆத்திரப்பட்டுக் கத்திஞர் பலவேசம் பிள்ளை.

''நான் குணப்படுத்தாமல் பின்னே நீங்களே சொஸ்தப்படுத்திவிடுவீர்களோ?"

"யாரடா நீ? சுத்த அதிகப் பிரசங்கியாக இருக்கிருய்?'' என்று சீறிஞர் பிள்ளை,

"யாருடா நீ — யாருடா நீ? நல்ல கேள்வி இது! அசட்டுக் கேள்வி! சொல்லுகிறேன், கேளுங்கள்: நீங்கள் பலவேசம் பிள்ளை; நான் பலவேஷப் பிள்ளை; கடைசியில் இரண்டுக்கும் அதிக வித்தியாசமேதும் இல்லை. வேஷம் கலைந்துவிட்டால் நீங்களும் — நானும் ஒன்றுதான்!'' என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்ஞன் பையன்.

பலவேசம் பிள்ளைக்கு ஒரே பிரமிப்பாகப் போய்விட்டது. அந்த பையன் பேசுவதெல்லாம் ஆறேழு வயது பையன் பேசும் பேச்சாகவே இல்லை; எளிதில் புரியாத புதிராக இருந்தது. இன்னும் ஆழ்ந்து யோசித்தால் உயர்ந்த தத்துவம் செறிந்து காணப்பட்டது. பலவேசம் பிள்ளைக்குப் பொருள் எத்தனையோ ஜன்மம் எடுக்கிறவன்' என்று வியாக்யானம் செய்வதுபோல் படுகிறதே! உண்மைதான்; இதற்குமுன் எத்தனை ஜன்மமோ; அவற்றிலும் என்னென்ன பிறவியோ? இனி அடுத்து எத்தனை பிறவிகளோ?......

பையன் பலவேஷப் பிள்ளையாம்! அதாவது—பலமாதிரி வேஷம் போடுபவன் என்

பதுதானே கருத்து? அப்படியென்ருல் அந்தப் பையன் உண்மையில் யார்?

யோசித்து யோசித்து பலவேசம் பிள்ளைக்கு மூளையே குழம்பி விட்டது.

எதிரில் அந்தப் பையன் அழகு பூரிக்கச் சிரித்துக் கொண்டே, கிருஷ்ண விக்ர ஹத்தைப் போல், மோஹனுகாரமாக நின்ருன்......

என்ன தாத்தா அப்படி பார்க்கிறீர்கள்! என்னைப் பார்த்தால் உங்களுக்கு கல் யாணியைப் பார்ப்பதுபோல் இல்லை?''

''இல்லையே?''

''பின், யாரைப்போல் தெரிகிறது?''

''அதுவும் தெரியாமல்தானே விழிக் யறேன்?''

பையன் மேலும் பெரிதாகச் சிரித் தான்; ''நானே சொல்லிவிடட்டுமா?''

''சொல்லேன்?''

''நானே சொல்லுவதென்ருல் நீங்கள் இன்னெரு கேள்விக்குப் பதில் சொல்லி யாக வேண்டுமே?''

''கேளேன்; சொல்லுகிறேன்.''

''உங்களுக்கு கல்யாணி வேண்டுமா— நான் வேண்டுமா? ஒளிக்காமல் உள்ள தைச் சொல்லிவிடவேண்டும்.''

''எனக்கா?... எனக்கு...?'' பலவேசம் பிள்ளை பலமாக யோசித்தார்.

பையன் பிரமாதமாகச் சிரித்தான்;

பேரொலியாகப் பொங்கி பூரித்து நிற்கிறதே? அண்டமே தவிடுபொடி ஆவதுபோல் தொனிக்கிறதே?...

"இருவரும் வேண்டும்; நீங்கள் இருவருமே எனக்கு

"யோசனை செய்யவே கூடாது; உடனே 'பளிச்'சென்று பதில் சொல்லுங்கள்? யார் வேண்டும்?..." என்று பெரிதாக சிரித்துக் கொண்டே கேட்டான்.

பலவேசம் பிள்ளை அவசர அவசரமாக யோசித்தார்— "எனக்கு?... கல்யாணி...?...நீ இல்லை — இரண்டுபேருமே வேண்டும் — இரண்டு பேருமே வேண்டும்..." என்று உரத்த குரலில் கூவினார்.

சிரிப்பொலிதானா அது? அந்தப் பையனின் சிரிப்பொலிதானா அது? இல்லை; வேண்டும்" என்று மீண்டும் மீண்டும் தம் உயிரை கையில் பிடித்துக்கொண்டு அலறினார் பலவேசம் பிள்ளை. அங்கு கிளம்பிய அந்த பேரொலியிலே அவர் கூப்பாடு கொஞ்சமாவது எழும்பவேயில்லை. பிரளயக் காலத்தைப் பார்த்துத் தனித்து நின்று அழும் மனிதனின் விசும்பல்போல் அவர் கூப்பாடு அந்த எதிரொலியில் கலந்தே போய் விட்டது. அந்தப் பையனையும் காணமுடியவில்லை.

"பலவேசம் பிள்ளையவர்களே — ஏமாந்து விட்டீர்; விடிய விடிய கீதை படித்தும்

உமக்குப் பிறவி ஆசை விடவில்லையே? அடுத்த பிறவிக்கு அடிகோலிவிட்டீரே?" என்ற குரல் அப்பேரொலியின் நடுவே ஊருடுவி நின்றது,

"கிருஷ்ணா! கிருஷ்ணா! வந்தது நீயா? ஏமாந்துதான் விட்டேன்; ஏமாந்தே போய் விட்டேன்—கிருஷ்ணா! என் கருணைத் தெய்வமே, காப்பாற்று" என்று கதறியழுதார் பலவேசம் பிள்ளை.

மேருவின் சிகரத்திலிருந்து அதலபாதாளத்துக்கு உருண்டு வருவதைப்போல் அவர் உணர்ந்தார். அலறியடித்துக்கொண்டு விழித்துப் பார்த்தார்.

யாரோ அவரைத் தொட்டு உலுக்கிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன மிஸ்டர் பலவேசம் பிள்ளை! என்ன இது? வாயில் வந்தபடியெல்லாம் உளறிக் கொட்டிக் கொண்டே இருக்கிறீர்கள்! வீணாகக் கவலைப் படாதீர்கள்; கல்யாணிக்கு ஒரே வாரத்தில் தீப்புண் ஆறிவிடும்; பழய மாதிரி அவள் எழுந்து ஓடாவிட்டால் என்னைக் கேளுங்கள்" என்று டாக்டர் அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்,

என்ன சொல்லுவார் பலவேசம் பிள்ளை?

அநித்ய மஸுகம் லோகமிமம் ப்ராப்ய
பஜஸ்வ மாம்;
மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம்
நமஸ்குரு,
மாமே வைஷ்யஸி யுக்த்வைவ மாத்மானம்
மத்பராயண,

என்ற கீதா வாக்கியம் அவர் மனதில் சுழன்று சுழன்று வந்துகொணடேயிருந்தது. ★

—0—

அன்பர்களுக்கு மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்



எங்கள் சொந்த பட்டரையில் உறுதியான உழைப்புடன் உன்னதமாக தயாரித்த பித்தளை பாத்திரங்களும், பலவித டம்ளர் வகைகளும், குத்து விளக்குகளும், சுத்த முறி சாமான்களும், பலவித விக்ரஹங்களும் பெயர்பெற்றவை.

நாணயமும நம்பிக்கையும் உள்ள இடம்

மணி அண்ட் ராஜன் மெட்டல் வேர்ஹவுஸ்

நாச்சியார்கோவில்

பார்ட்னர்கள்: K. N. மணி உடையார் & T. தெய்வீகராஜன்

H. O. வடக்கு வீதி, நாச்சியார்கோயில்.

B. O. பேட்டை K. V. வடக்கு, கும்பகோணம்.



டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

தீபாவளி என்ன அழகான வார்த்தை! தீபங்களை வரிசையாக வைத்தால் எவ்வளவு மனோரம்மியமாக இருக்குமோ அவ்வளவு இனிமையாக இருக்கிறது "தீபாவளி" என்ற பதம். (மின்சார பல்புகள் மலிந்த இந் நாட்களில் தீபாலங்காரம் குறைந்து வருகிறது என்பதை நான் மறக்கவில்லை, குழந்தைகள் பட்டாசை எவ்வளவு வரவேற்கிறார்களோ அவ்வளவு பெரியவர்களும் தீபாவளியை வரவேற்கிறார்கள். ஏனென்றால் சொல்லிவைத்தாற்போல் தீபாவளியை அடுத்து சீதோஷ்ண ஸ்திதியும் மாறுகிறது. குளிர் விழ ஆரம்பித்த பிறகுதான் உற்சாகமும் உண்டாகிறது.

தீபாவளிப் பண்டிகை வருடா வருடம் டில்லியில் வெகு மும்முரமாகிறது. முதல் முதலில் சென்னை கைத்தறி நெசவாளர்கள் கோவாபரேடிவ் சங்கம் தங்கள் டிப்போவை ஸ்தாபித்து நூல் புடவைகளை நியாய விலைக்கு விற்கத் தொடங்கினார்கள். கரோல் பாக் என்ற பேட்டையில் தான் சர்க்கார் அல்லாத மற்ற உத்தியோகம் உள்ளவர்கள் (அடியேன் உள்பட) குடியிருக்கும் இடம். கிட்டத்தட்ட டில்லியின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு இந்த ஸ்தலத்தில் உள்ளது. கோவாபரேடிவ் சங்கம் வெகு முன் யோசனையுடன் இங்கும் ஒரு டிப்போவை ஏற்படுத்தியுள்ளார்கள். என் வீட்டில் உள்ள பெண்ணுய் பிறந்தவர்களுக்கு இன்னும் இவர்கள் புடவைகளின் சாயத்தின் தரத்தில் திடமான நம்பிக்கை ஏற்படவில்லை. அவர்களைச் சொல்லியும் பிரயோசனம் இல்லை, பல ஊர்களில் உற்பத்தியாகும் சேலைகள் ஒரே மாதிரியாகவா இருக்கும்? கும்பலில் கோவிந்தாபோடும் சேலை நெசவாளர்கள் பலர் இருக்கலாம்.

தீபாவளியை எல்லோரையும்விட உற்சாகமாக வரவேற்பவர்கள் சென்னையில் உள்ள பட்டுப் புடவை வியாபாரிகள். சென்னையில் வருடம் பூராவும் ஆகும் விற்பனையை இவர்கள் தீபாவளி சமயத்தில் ஆறு வாரங்களில் அடைகிறார்கள். தமிழன் பணம் தமிழகத்துக்குப் போவதுபற்றி எனக்கு சந்தோஷம் தான். ஆனால் டில்லித் தமிழனிடம் ஒரு புடவையைக் கொடுத்து ஒன்றரைப் புடவையின் விலையை தட்டிக் கொண்டு போவது தான் பிடிக்காத விஷயம். பொன்வாத்து நல்லதனமாக தினம் ஒரு முட்டைதான் கொடுக்கும் என்பதை சென்னை பட்டுப் புடவை

வியாபாரிகள் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும், என்னைக்கேட்டால் பிரபல பட்டுத்தறி முதலாளிகள் கோவாபரேடிவ் கள் மூலம் தங்கள் சரக்குகளை விற்பனை செய்வது நல்லது. அப்படிச் செய்தால் தான் கணவர்கள் தெனாலிராமனின் பூனை யைப்போல் பட்டுப் புடவை என்றதும் ஓடாமல் இருப்பார்கள். ஏனென்றால் தீபாவளிக்குப்பிறகு 'தீவாளி' யாகாமல் கணவர்கள் இருக்க விரும்புவது சகஜம் தானே!

* * *

இந்த தீபாவளி, தேச திருஷ்டியிலிருந்து பார்த்தால் அவ்வளவு உற்சாகமான தல்ல. தேசம் சுதந்திரம் அடைந்தது முதல் நாம் 12 தீபாவளிகள் கொண்டாடிவிட்டோம். தேச விவகாரங்கள் மேலோ கீழோ இருந்து வந்தபோதிலும் தேசத்தின் சுதந்திரத்துக்கு ஹானி வநததில்லை. இன்று அம்மாதிரி ஹானி தேசத்துக்கு வரலாம் என்பதற்கு அறிகுறிகள் இருக்கின்றன.

நேபா பிரதேசத்தில் சீனு ஆக்கிரமித்து சுமார் 40,000 சதுர மைல்கள விஸ்தீர்ண பூமிக்கு உரிமை கொண்டாடுவது நமக்குத் தெரிந்த விஷயம். நமது பிரதமர் "கேவலம் சிலஇடங்களுக்காக" சீனுவுடன் கடுமையான நடவடிக்கைகள் எடுக்காததும் தெரிந்த விஷயம். ஆனல் பொது மக்களுக்குத் தெரியாத விஷயம் என்னவென்றால் இந்திய கம்யூனிஸ்ட்டுகள் தேசத்துக்கு செய்யும் துரோகம். சீனு சம்பந்தமாக கம்யூனிஸ்ட்டு கள் வாயடைத்து இருந்தார்கள். எதிர் தரப்புக்கட்சிகள் சும்மா இருப்பார்களா? "இந்தியா - திபெத் எல்லையை மக்மஹோன் கோடுதான் நிர்ணயிக்கிறது. இதை நம் செந்தோழர்கள் ஒப்புக்கொள்ளுகிருர்களா?" என்று அடுத்தடுத்து சவால் விட்டார்கள். கம்யூனிஸ்ட்டுகள் பாடு திண்டாட்டமாகி விட்டது. வாயைத் திறந்தால் தங்கள் உண்மை நிலைமையைச்சொல்லி அழவேண்டி வரும். சொல்லாவிட்டால் கேரளத்து தேர்தலில் அவர்கள் கட்சி மண்ணைக்கவ்வும். ஆகவே கல்கத்தாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூடி மக்மஹோன் கோடு "இந்தியா - சீன" எல்லை அல்ல என்றும் இதை சாந்தி பூர்வமாக முடிவு செய்ய இந்திய சர்க்காரும் சீன சர்க்காரும் உட்கார்ந்து பேசவேண்டும் என்றும் கூறிற்று. படித்தால் விகல்பம் இல்லாத இந்த அபிப்பிராயம் மிகவும் விஷமமானது. இதற்கு அர்த்தம் என்ன வென்றால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவின் ஒரு பாகத்தை சீனுவுக்குத் தூக்கி பரிசாகக் கொடுக்கத் தயங்காத துரோகிகள் கூட்டம், இந்தியாவின் பாது காப்புக்கு ஆபத்து வந்தால் கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் தாய்நாட்டைக் காட்டிக் கொடுப் பார்கள் என்பது. இந்திய கம்யூனிஸ்ட்கள் பாடு சீனுவின் நடத்தை காரணமாக ஆபத் தான நிலைமைக்கு வந்துவிட்டது என்று மாஜி கேரள முக்கிய மந்திரி ஸ்ரீ ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் கூறினர். அதையொட்டி பம்பாய் கம்யூ னிஸ்ட் கட்சி மக்மஹோன் கோட்டை ஆதரித்தும் சீனுவின் போக்கைக் கண்டித் தும் ஒரு தீர்மானம் செய்தது. இப்பொழுது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாடு பெரும் பாடாகிவிட்டது ஏனென்றால் ஒருபுறம் இந்திய பொது ஜன அபிப்பிராயத்துக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்பட்டமாக தங்கள் அபிப்பிராயத்தை சொன்னல் மாஸ்கோ பெகிங் சம்பந்தப்பட்டவரை இந்திய கம்யூனிஸ்ட்கள் தீண்டாதவர்கள் ஆகி விடுவார்கள். ஏனென்றால் மற்ற நாடு களுக்கு உகந்தது எது என்பதை நிர்ணயிக் கும் உரிமை ருஷ்யாவையும் சீனுவையுமே சேர்ந்தது. மற்றெருபுறம் பம்பாயில் தோழர்கள் கம்யூனிஸ்ட் மகா தெய்வமான சீனுவை கண்டித்துவிட்டார்கள். இதை யெல்லாம் பார்த்து கம்யூனிஸ்ட் கனபாடி களான ஸ்ரீ ரானடைவ் கம்யூனிஸ்ட் கட்சியின் "புது யுகம்" என்ற சஞ்சிகையில் தன் கட்சியின் நிலைமையை பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். அவர் அபிப்பிராயம் இதுதான்: (1) மக்மஹோன்கோடு இந்திய திபெத் எல்லை அல்ல; (2) அது வெள்ளைக் காரர்களால் ஏற்படுத்தப்பட்ட "நாடு சுரண் டும்" கோடு; (3) இந்திய சர்க்கார்தான இந்திய சீன நல்லுறவை குலைக்கிருர்கள் (4) சீனு மிகவும் சாது, வாயில் விரலை வைத் தால் ஆனை மட்டும் தான் விழுங்கும்.

இதிலிருந்து தெளிவாகும் விஷயம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ருஷ்ய-சீன கம்யூனிஸத் துக்கு ஐந்தாம் படை, அதை கண்காணிப் பதில் இந்திய சர்க்கார் இன்னும் அதிக கவ னம் செலுத்தவேண்டும் என்பது. ஏன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையே தடைசெய் தால்கூட நல்லதுதான்.

இந்திய-சீன தகராறுமூலம் ஒரு மகத்தான உண்மை வெளியாயிற்று என்றால் அது சீனுவை ருஷ்யா நம்பவில்லை என்பதுதான். ருஷ்யப் பிரதமர் ஸ்ரீ குருஷெவ் அமெரிக்கா வுக்கு செல்லுவதற்குமுன் சீனு தன் ஆக்கிர மிப்புக் கொள்கையை ஆரம்பித்தது. ருஷ்யா வைப் பொருத்தவரை அது இந்தியாவுடன் நல்லுறவு கொண்டாடுவதையே விரும்பு கிறது. சீனுவின் போக்கை ஸ்ரீ குருஷெவ் மறைமுகமாகக் கண்டித்தது கம்யூனிஸ்ட் சரித்திரத்திலேயே அபூர்வமான சம்பவம். அதைவிட ஆச்சரியமான உண்மை ருஷ்யா சீனு ஒரு காலத்தில் ருஷ்யாவைச் சேர்ந்த உஸ்பகிஸ்தான், தாஸ்கிஸ்தான் முதலிய



திரு. ஏ. ஆர். ஷண்முகம் பிள்ளை

திரு. எம். சோமசுந்தரம் பிள்ளை

1919ம் வருஷம் எட்டு நபர்கள் பிரயாணம் செய்யக்கூடிய ஒரு பஸ்ஸுடன், துவங்கிய லயன் ஆட்டொமொபைல் ஸர்வீஸ் கம்பெனி

இன்று 53 சொந்த பஸ்களைக் கொண்டுள்ளது. இவை அனைத்தையும் வழங்கி, இதர வசதிகளை அளித்து வருபவர்கள் டி. வி. எஸ். ஸ்தாபனத்தார்.

"எட்டு நபர்கள் பிரயாணம் செய்யக்கூடிய ஒரு பஸ்ஸுடன் திருநெல்வேலி ஜங்ஷனில் திரு ஏ. ஆர். ஷண்முகம் பிள்ளை 1919ம் வருஷம் "லயன் ஆட்டொமொபைல் கம்பெனி"யைத் துவக்கினர். அதுமுதல் அவருடன் பணியாற்றி வந்த திரு எம். சோமசுந்தரம் பிள்ளை 1930ல் அவரது பங்காளியாகி விட்டார். இந்த ஸ்தாபனம் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 23 வழிகளில் 53 பஸ்களை தினம் 5,900 மைல்களில் செலுத்துகிறது.

நாங்கள் டி.வி.எஸ் ஸ்தாபனத்தாரோடு பண்புடன் கூடிய நல்ல உறவைக் கொண்டுள்ளோம். எங்களிடம் உள்ள எல்லா பஸ்களையும் அந்த ஸ்தாபனத்தார் கொடுத்திருப்பதுடன் மோட்டார் உறுப்புக்களையும், அத்துடன் சம்பந்தப்பட்ட மற்ற எல்லாத்தேவைகளையும் வழங்கியிருக்கிருர்கள்."

(ஒப்பம்) ஏ. ஆர் ஷண்முகம் பிள்ளை
எம். சோமசுந்தரம் பிள்ளை

தற்கால வியாபாரத்தின் வெற்றி அதனை உபயோகிக்கும் மக்களின் நல்வாழ்வையும் சுபிட்சத்தையும் பொருத்திருக்கிறது. இந்த லட்சியம் எங்களுக்கு மக்களின் நல்லெண்ணத்தை லாபமாக அளித்திருக்கிறது. மக்கள்தான் எங்கள் முன்னேற்றத்திற்கு போஷாக்கு அளிக்கிருர்கள்.

இன்று டி. வி. எஸ். ஸ்தாபனம் அதன் பல கிளைகளோடு தென்னிந்தியாவில் நாளுக்கு நாள் பெருகி வரும் மோட்டார் தொழிலின் சகலவிதத் தேவைகளையும் பூர்த்திசெய்து வருகிறது.

டி. வி. எஸ். ஸ்தாபனங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மதுரை-திருச்சி
திருநெல்வேலி-புதுக்கோட்டை
சேலம்-கோயமுத்தூர்
மோட்டார் வாகன விற்பனையாளர்கள், ஆட்டோமோபைல் என்ஜினியர்கள் மற்றும் பாடி நிர்மாணிப்பாளர்கள்.

சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை
பஸ், லாரி போக்குவரத்து ஸ்தாபனம்

மதருஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்,
மதருஸ்-பெங்களூர்
மோட்டார் உறுப்பு விற்பனையாளர்கள்.

சுந்தரம் இண்டஸ்டிரீஸ் பிரைவேட் லிமிடெட்,
புதுக்கோட்டை-மதருஸ்
சீர்கேடான டயர்களை புதுப்பித்துத்தரும் ஸ்தாபனம்.

மதருஸ் மோட்டார் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மதருஸ்.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதருஸ்-பெங்களூர்.
பியட், பிளைமத், பார்கோ, லேலண்ட் மற்றும் பெர்கூசன் டிராக்டர்கள்—இவைகளின் விற்பனையாளர்கள்.

சுந்தரம் பைனன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதருஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் ஆக்ஸெஸரீஸ் பிரைவேட் லிமிடெட், மதருஸ்.
அகில இந்தியாவிற்கு ஜி எம் (GM) உறுப்பு விற்பனையாளர்கள்.

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.

TVS 781 a

குடியரசுகளைக்கூட அடித்துக்கட்ட ஆசைப் படும் என்பது.

இன்று ருஷ்யாவில் அமல் நடப்பது ஸ்ரீ குருஷெவின் "சிரித்து மயக்கும்" கொள்கை, சீனுவில் நடப்பது கொலைகார ஸ்டாலினின் அடாபிடி பாதகக் கொள்கை. இன்று வரை சீனுவில் ருஷ்ய ஸ்தானீகராக இருந்தவரை சென்றவாரம் ஸ்ரீ குருஷெவ் மாற்றி ருஷ்யாவின் இன்றைய அபிப்பிராயத்தை பிரதிபலிக்கக் கூடிய ஓர் இளம் ஸ்தானீகரை சீனுவுக்கு அனுப்பியதில் அர்த்தம் மிகவும் உள்ளது என்பதை குறிப்பிட வேண்டும். ருஷ்யாவுக்கும் சீனுவுக்குமிடையே மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பது சுயேச்சை குடியரசுகள் சம்பந்தப்பட்டவரை சந்தோஷ சமாசாரமே.

குதிரை குப்புறத் தள்ளியதுமல்லாமல் ஆளைப் புதைக்க குழியையும் பறித்ததாம் என்று சொல்லுவார்கள். அது இந்தியாவைப் பொருத்தவரை மிகவும் பொருத்தமாகும்படியான ஒரு சந்தர்ப்பம் ஐ. நா. சபையில் ஏற்பட்டது. திபெத்தையும் டலாய்லாமாவையும் காட்டிக் கொடுத்த பாவம் நம்மை இலகுவில் விடாது. திபெத் சீனுவின் சமாசாரம் என்று சொன்னதன் பலனை நாம் இன்று அநுபவிக்கிரோம். நேபா சம்பந்தப்பட்டவரை திபெத்திடமிருந்து இந்தியாவுக்கு யாதொரு தொல்லையும் இல்லாமல் இருந்தது. திபெத் "சீனுவின் சமாசாரம்" ஆன பிறகு சீனு உரிமையுடன் நம் நாட்டை அமட்டுகிறது அல்லவா?

திபெத்தில் சீனுவின் ஆக்கிரமிப்பைப் பற்றி எடுத்துரைக்க ஐ. நா. சபையில் நாம் முன்வரவில்லை, தொலைவில் இருக்கும் அயர்லாந்து முன் வந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டாவது நாம் சீனுவின் நாடாளும் ஆசையைப்பற்றி ஒரு பிலாக்கணம் பாடி நமக்குள்ள கெட்ட பெயரை போக்கிக்கொண்டிருக்கலாம். நம் மேனன் இருக்கும் வரையிலும் நிரந்தர பிரதமர் நேரு இருக்கும் வரையிலும் நாம் அம்மாதிரி தவறு ஒன்றும் செய்துவிடமாட்டோம். "திபெத் விஷயத்தை பிரஸ்தாபிப்பதால் வல்லரசுகளின் 'குளிர் போர்' முற்றிவிடும்" என்று ஸ்ரீ கிருஷ்ண மேனன் சொன்னதைக் கேட்டு சுதந்தர நாடுகள் நகைக்கின்றன. நம் பிரதமரைப் பொருத்த வரை அவர் போக்கு அவருடைய பஞ்சசீலக் கொள்கையை அனுசரித்தது என்று புரளி செய்யலாம். ஆனல், மற்ற நாடுகளில், குறிப்பாக ஆசிய நாடுகளில், இந்தியா சீனுவைக் கண்டு நடுங்குகிறது என்றஅபிப்ராயமே மேலோங்கி வருகிறது. போருத குறைக்கு பிரதமரும் "சீனு போன்ற வல்லரசுடன் எப்படி பகைத்துக்கொள்ளுவது?" என்று வேறு கேட்டிருக்கிருர். பிரிட்டன் போன்ற வல்லரசுடன் நாம் பகைத்துத்தான் சுதந்தரமடைந்தோம், அந்த சுதந்தரத்துக்குக் காரணபூதர்களாக இருந்தவர்களில் ஸ்ரீ நேருவும் ஒருவர் என்பதை யாரும் மறக்கமுடியவில்லையே.

நிற்க, ஐ. நா, சபையில் நாம் நம்முடைய சுயநலனை உத்தேசித்தாவது நம்முடைய போக்கை மாற்றிக்கொண்டிருக்கலாம். அதுவும் நடக்கவில்லை. பாகிஸ்தான் போன்ற நாடுகள் சீனுவுக்கு எதிராக வோட்டுக் கொடுத்த பொழுது நேரடியாக திபெத்தில் சம்பந்தப்பட்ட இந்தியா மதில்மேல் பூனையாக விளங்கிற்று. இன்றும் நிலைமை முற்றிவிடவில்லை ஐ. நா. சபை கட்டாயம் சீனுவைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றலாம். அப்பொழுதாவது இந்தியா தன் நிலைமையை மாற்றிக்கொண்டு மார்ச்சு மாதம் நடந்த பாபத்துக்கு பிராயச் சித்தம் செய்து கொள்ளலாம். இது தான் குறைந்தபக்ஷம் இந்தியா தன் சுயமதிப்பை சர்வதேச வட்டாரங்களில் மீட்கச் செய்யக் கூடிய நடவடிக்கை.

* * *

சில இயக்கங்களுக்கு ஆரம்பத்திலேயே வாழும் குறிகள் உண்டாகும். சிலவற்றிற்கு குட்டிக்கொள்ளும்பொழுதே விக்னங்கள் ஏற்படும். கோவாபரேடிவ் பண்ணை தீர்மானம் நாகபுரியில் ராகு காலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அது உலக்கை தேய்ந்து உளிப் பிடியானதை ஒக்குமா? கோவாபரேடிவ் விவசாயம் எனபது நடைமுதலில் ஏராளமான உற்பத்தியை உண்டாக்கும் என்று எண்ணுவது பகற் கனவு என்பதை ராஜாஜி முதல் ரங்கா வரை பறைசாற்றியிருக்கிருர்கள். ஏன் என்பதற்கு பல காரணங்கள் உள. இந்தியக் குடியானவன் தன் நிலத்துடன் ஊன்றி வாழ்பவன். வெட்டியாக சுற்றுவதற்குப் பதில் தன் நிலத்தை சுற்றும்பொழுது ஒரு மாட்டின் சாணியை கர்ம சிரத்தையுடன் ,தன் நிலத்தில் உந்தித் தள்ளும்பொழுதும், வரப்பில் உள்ள மோட்டையை வெறும் கையால் அடைக்கும்பொழுதும் குடியானவனுக்கு நிலத்தின் மேல் உள்ள ஆசை வெளிப்படும். இது கிராமாந்திரங்களை அறிந்தவர்களுக்குத் தெரியுமேஅல்லாது டில்லியில் உள்ள "குளு குளு" காரியாலயங்களில் உள்ளவர்களுக்குத் தெரியாது,

ஜமீந்தாரியை ஒழித்தது மிகவும் அரிய காரியம், ஏனென்ருல் ஜமீந்தாருக்கும் நிலத்துக்கும் ஸ்னேகப் பிராப்திகூட கிடையாது. ஜமீந்தார் தன் உல்லாசப் பட்டண வாழ்க்கைக்காக வருடம் ஒருமுறைதன்கிராமங்களுக்குசென்று வீட்டுக்காரன் குடக்கூலி வாங்கியதைப்போல் வாங்கி வந்தான், ஆகவே ஜமீந்தாரி ஒழிந்த

பிறகு அங்கு நிலங்களை விவசாயம் செய்தவர்களிடை ஒரு புதிய உற்சாகம் தோன்றியது ஏனென்றால் அவர்கள் உற்பத்தி செய்வது தீர்வை முதலியவை நீங்கலாக அவர்களுடையது தானே? இதனால்தான் உணவுப்பெருக்கம் உண்டாயிற்று! இன்று கோவாபரேடிவ் என்ற பெயரால் நிலத்தின்மேல் குடியானவனுக்கு உள்ள பாசத்தை ஒழிக்கப்பார்க்கிறார்கள். கோவாபரேடிவ் பண்ணை ஏற்பட்டால் எல்லா உழவர்களும் ஒரே மாதிரி உழைப்பார்களா? பொது சமாசாரம் என்றவுடனேயே தனிப்பட்டவர்களின் சிரத்தை குறையும், நல்ல உழைப்பாளிகூட திண்ணை தூங்கியுடன் போட்டிபோட ஆரம்பிப்பான். உற்பத்தி அதிகரிப்பதற்கு பதில் குறைய ஆரம்பிக்கும்.

சீனாவில் கோவாபரேடிவ் பண்ணைகள் ஏராளமாக உற்பத்தியை அதிகரித்தனவே என்று சில பிராக்ஞர்கள் உடனே குறுக்கு சால் ஓட்டுகிறார்கள். சீனாவில் உள்ள சர்க்கார் மாதிரி சர்வாதிகார சர்க்கார் நிலத்திற்கு நிலம் கங்காணிகளைக் கொண்டு சவுக்கடி மூலம் உழைப்பைப் பெறுகிறார்கள். பட்டணத்து கம்யூனிஸ்ட்டுகள் விவசாயம்தொடங்கும் பொழுதும் மாசூல் அறுவடை ஆகும் பொழுதும் கிராமாந்திரங்களில் முகாம் செய்து தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள், ருஷ்யாவில் கூட்டுப் பண்ணையை எதிர்த்த லக்ஷக்கணக்கான உழவர்களை ஸ்டாலின் கூண்டுடன் கைலாஸம் அனுப்பினர் என்பதெல்லாம் நம் சோம்பேறி வேதாந்திகளுக்குத் தெரியாது. **எந்த உழவர்களின் ஒத்துழைப்பு மூலம் சீன கம்யூனிஸ்ட்கள் பதவிக்கு வந்தார்களோ அதே உழவர்களை அவர்கள் இன்று அன்றாடம் உழைத்து கூலிபெறும் அடிமைகளாக்கிவிட்டார்கள் என்பதை நாம் நம் நாடெங்கும் முரசடித்துப் பரப்பவேண்டும்.**

எதற்குப் பழைய கதையை இன்று நோண்டிப் பிடித்தேன் என்பதற்குக் காரணம் உண்டு. "நேரு சொல்லிவிட்டார், இனி அப்பீல் கிடையாது" என்பவர்களுக்கு உத்தரப் பிரதேசத்திலிருந்து பதில் கிடைத்திருக்கிறது. முன்னாள் ரெவினியூ மந்திரியும் நில விஷயங்களில் ஏராள அனுபவம் உள்ளவருமான ஸ்ரீ சரண்ஸிங் "கோவாபரேடிவ் பண்ணையை எக்ஸ்-ரே பிடித்தல்" என்ற அருமையான புத்தகம் எழுதியிருக்கிறார் அதில் நம் பண்டைய நாள் விவசாயம் உலகத்தில் மற்ற நாடுகளில் நிலவும் முறை, ருஷ்யாவிலும் சீனாவிலும் நடந்த அதிக்கிரமங்கள் முதலியவற்றை அலசி ஆராய்ந்து நம் நாட்டில் சுதந்தரப்பிரிய உழவனை ஒடுக்கி, கோவாபரேடிவ் பண்ணை என்ற தகிடுதத்தம் மூலம் குழிப்பாய்ச்சுவதன் அபாயங்களை விளக்கியிருக்கிறா. விவசாயத்தை பெரும்பாலும் நம்பிவாழும் நம் நாட்டில் கூட்டுப்பண்ணைகளுக்கும் இயந்திர பூதங்களுக்கும் இடம் இல்லை, உழவனுக்குத் தகுந்த உற்சாகத்தை அளித்தாலே உணவுப் பெருக்கம் கிட்டும் என்று சாங்கோபாங்கமாக இவர் விளக்கியிருக்கிறார்,

ஸ்ரீ சரன் ஸிங் நாகபுரியில் ஆணித்தரமாக கோவாபரேடிவ் பண்ணையை எதிர்த்து நேருவுக்கு பாயிண்ட் பாயிண்டாக பதில் சொன்னவர். அவர் புத்தகத்தை இந்தியாவில் எல்லாபாஷைகளிலும் மொழி பெயர்த்து "ஊர்ந்துவரும சர்க்கார் கம்யூனிஸத்தை" எதிர்ப்பது சுதந்திரப்பிரியர்களின் கடமை, தன் புத்தகம் மூலம் ஸ்ரீ சரன்ஸிங் நிலச் சுவாந்தார்களுக்கும் உழவர்களுக்கும் அரும்பணி யாற்றியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை,

* * *

எல்லா மனிதர்களும் என்றாவது ஒரு நாள் உலகத்திலிருந்து வெளியேற வேண்டியவர்கள். பதவியிலிருப்பவர்களுக்கு ஏதாவது முகாந்தரத்தைக் கொண்டு வெளியேற நேருகிறது, சுமார் 10 ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் நேருவுக்கு எதிராக ஒரு வார்த்தை சொன்னால் சொன்னவரின் முதுகைப்பிரித்து ஓடு மாற்றிவிடுவார்கள். ஆனால் இன்று நிலைமை என்ன? நேர் விரோதம். ஏன் என்பதற்கு பல காரணங்கள் உண்டு. பதவியில் தொடர்ந்து பல்லாண்டு இருப்பவர்களுக்கு பொதுஜனத் தொடர்பு அற்றுப் போகிறது. மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய முடியாமல் போகிறது. இதனால்தான் ஸ்ரீ ஜெ. பி. நாராயணன் பண்டிதநேரு சிறிது காலமாவது பிரதமர் பதவியைவிட்டு ஆக்க வேலையில் ஈடுபடவேண்டும் என்றார். அப்படிச் செய்திருந்தால் அவருக்கு உணவு நிலைமையைப் பற்றி அறிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். அப்படிச் செய்யாததால் கோவாபரேடிவ் பண்ணை தீர்மானம் அவரையே விழுங்கப்பார்க்கிறது,

அரசியலில் ஊறிய அறிவாளர்கள் பண்டிதர் இன்னும் இரு வருஷங்களுக்கு மேல் ராஜ்ய பாரம் செய்வது கடினம் என்கிறார்கள். இதற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. இன்றுவரை பிரதமரை முழுமூச்சாக ஆதரித்து வந்த பத்திரிகையுலகில் அவருக்கும் அவருடைய கொள்கைகளுக்கும் அபார எதிர்ப்பு இருக்கிறது. அவர் சிறிது காலம் விலகியிருந்து மறுபடியும் அரசியல் உலகில் பிரவேசித்தால் அதற்கு ஏராள பிரயோசனம் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் பதவியில் இருப்பவரை கட்சியின் ஆக்க வேலைக்கு திரும்பச் செல்லச் சொல்வது சாத்தியம் இல்லை. பதவியை உதறித் தள்ளி ஓய்வெடுத்த ராஜாஜிக்கும் பதவியில் உழன்று சோர்வடைந்த பிரதமருக்கும் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ளதைப்போல இருக்கிறது. சாதாரணமாக "தெற்கத்தியான்" என்று அலட்சியமாக இருக்கும் உத்தரப்பிரதேசம்கூட ராஜாஜி இன்னுமொரு சாத்வீகப் புரட்சியை விளைவிப்பார் என்று நம்புகிறது.

நம் வாசனைத் தாவரங்கள்

எஸ். விசாலாட்சி

ஆதிகாலம் தொட்டே நம் பாரதம் வாசனைத் திரவியங்களுக்குப் பெயர் போனது. மிகப் புராதன காலத்தில் நம் நாட்டிலிருந்து சந்தனம், அகில், ஏலம் போன்ற எத்தனையோ வாசனைப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கப்பல்களும் காரவான்களும் எகிப்து, ஈரான், கிரீஸ், ரோமாபுரி போன்ற தூரதூர தேயங்களுக்கெல்லாம போவது உண்டு எனச் சரித்திர ஏடுகள் செப்புகின்றன. வாசனைப்பொருள்கள், தைலங்களின் ஜன்மபூமி என அந்த அநாதி காலத்திலேயே உலகம் முழுவதும் பெயர் பெற்ற நாடாகும் நம் பாரதம்.

தனி விசேஷம்.

நம் நாட்டில் நிலவும் தட்ப வெப்ப நிலையில் ஒரு தனி விசேடம் உண்டு. உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவும் பல்வேறு விதமான சீதோஷ்ண நிலையை நாம் இங்கு காணலாம். அதேபோல் நம்நாட்டு மண்ணும் நீரும்கூட தனி விசேடமுடையவை. இதனால் உலகில் உள்ள எல்லா வகையில்லாவிட்டாலும் பெரும்பாலான வகை வாசனைப பூண்டுகள், செடிகள், வேறு தாவரங்கள் எல்லாம் நம் நாட்டில் வளர்கின்றன. உலகில் வேறு எந்த நாட்டிலும் இத்தனை வகை வகையான வாசனைத் தாவரங்களை காணுவது இயலாது இதனால்தான் அன்றும்சரி, இன்றும்சரி வாசனைத் திரவியங்கள் விஷயத்தில் நம் நாடே உலக நாடுகளிடையே முதன்மை பெற்று விளங்குகிறது.

ஆயிரம் வகை.

நம் பாரதத்தில் இப்பொழுது விதம்விதமான சுமார் ஆயிரம் வாசனை பூண்டுகளும், செடிகளும் வேறு தாவரங்களும் உள்ளன. இவை நீக்கி மற்ற வெளி நாடுகளில் வளரும் பெரும்பாலான வாசனைத் தாவரங்களை நட்டும் நாம் பயிராக்கலாம், அதற்குத் தேவையான தட்பவெப்பம், மண் வளம், நீர்வளம், மழை வசதிகள் எல்லாமே நம் நாட்டிலுண்டு. பாரதமெங்கும் இயற்கை செயற்கை இரு முறையிலும் வளரும் வாசனைத் தாவரங்களில் முக்கியமானவை பின் வருமாறு'

வாசனைத் தாவரங்கள்.

வாசனைப்புற்கள்: 1. கந்தவேலை 2. ரோஸா 3. மோதியா 4. தேபியா 5. எலுமிச்சை 6. இஞ்சி அல்லது சுக்குநாரி 7. கஞ்சனி 8. மஹாபனகிரி.

வாசனை இலைகள், தண்டுகள்: 1. பலவகையான துளசிகள் 2. யுகாலிப்டஸ் 3. பலவகையான நாகதோனை 4. புதினை வகைகள் 5. நாரத்தை, எலுமிச்சை, ஆரஞ்சு வகைகள் 6. கோவா 7. சிவகரந்தை 8. கருவா 9. வினைலோ 10. நேர் 11. கணேரி 12. திருநீற்றுப்பச்சை 13. ஓமவல்லி 14. கற்பூரவல்லி 15. சதகுப்பை.

வாசனைப் புட்பங்கள்: 1. ரோஜா வகைகள் 2, வனராஜா வகைகள் 3. கொன்றை ஜாதிகள் 4. சண்பக ஜாதிகள் 5. நாரத்தை, எலுமிச்சை, ஆரஞ்சு ஜாதிகள் 6. மகிழம் 7. கிராம்பு ஜாதிகள் 8. பாரிஜாதம் 9. மல்லிகை ஜாதிகள் 10. குங்குமப்பூ 11, தாழை.

வாசனைப் பழங்கள்; 1. எலுமிச்சை, நாரத்தை, ஆரஞ்சு ஜாதிகள் 2. வில்வம் 3. மா 4. ஏலம் 5. மிளகு 6. ஜாதிக்காய்.

வாசனை விதைகள்: 1. ஓமம் 2. சோம்பு 3. சீரகம் 4. கொத்தமல்லி 5. அரைக்கீரை விதை 6. சதகுப்பை.

வாசனை வேர்கள் கிழங்குகள்: 1. வெட்டி 2. விலாமிச்சை 3. வசம்பு 4. நீர்மேல் நெருப்பு எனப்படும் கல்லுருவி 5. இஞ்சி 6, அரத்தை 7, மஞ்சள் வகைகள் 8. நன்னாரி 9. மாகாளி 10. வெலேரியன்,

வாசனைக் கட்டைகள்: 1. சந்தனம் 2. அகில் 3. தேவதாரு 4. கற்பூரம் 5. மயூர்பங்கி 6, வினைலோ 7. சம்பாலிகா.

வாசனைப் பட்டைகள், பிசின்கள்: 1. கருவா 2. கர்ஜன் 3. குக்கில் 4. குங்கிலியம் 5. தேவதாரு 6. பெருங்காயம் 7. திகமாலை.

நவீன ஆராய்ச்சி.

நம் வாசனைத் தாவரங்களைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி நடத்தி நவீன முறையில் அவற்றைப் பயிர் செய்வதோடு, முன்னைவிட உயர்வானதும் நயமானதுமான வாசனைத் தைலங்கள் வடிக்கும் முறையைக் கண்டறிய கடந்த 1906-ம் ஆண்டிலிருந்து டேராடூனில உள்ள வன ஆராய்ச்சி நிலையம் முயன்று வருகிறது, இதன் பயனாக இமயமலையில் ஏராளமாக வளரும் சிர் (Pine) மரங்களிலிருந்து டர்பன்டைன் எண்ணெய், பிசின் முதலியவை தயாரிக்கும் தொழில் புதிதாக இப்பொழுது வளர்ச்சி அடைந்துள்ளது, சந்தனக் கட்டை, பாமரோசா, எலுமிச்சம்புல, இஞ்சிப்புல், வெட்டிவேர், யுகாலிப்டஸ் ஆகியவற்றிலிருந்து எண்ணெய் வடிக்கும் தொழிலும் நடந்து வருகிறது. ஜிரானியம் (Geranium) என்ற வாசனைப் புட்பச் செடிகளை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வந்து ஏர்க்காட்டில் வளர்த்து அங்கே அதிலிருந்து ஜெரானியம் எண்ணெய் (Oil of geranium) வடிக்கும் தொழில் வளர்ச்சியடைந்து வருகிறது. மலேயா, இந்தோனீசியா நாடுகளிலிருந்து பச்சோலி (Pacholi) என்னும வாசனைத் தாவரத்தை வரவழைத்து இங்கு விரிவாக பயிரிடும் முயற்சி இப்பொழுது நடந்துவருகிறது.

நவீன தொழிற்சாலைகள்.

முதலாவது உலக மகாயுத்தம் நடந்த காலத்தில் மைசூரில் எசன்சல் ஆயில் பிராடக்ட்ஸ் லிமிடெட் என புதிய கம்பெனி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஓமம், கிராம்பு, கருவா இலை (Cinnamon leaves) வெட்டிவேர் கர்ச்சிபுல், ஜாதிக்காய், தாவனம், பச்சோலி, மல்லி ஆகியவைகளிலிருந்து வாசனை எண்ணெய் வடிக்கும் தொழிலை அது மேற்கொண்டது. இந்தக் கம்பெனிக்கு லண்டனில் ஒரு காரியாலயமும் இருந்தது, நவீன இயந்திர சாதன வசதிகளுடன் நம் நாட்டில் இத்துறையில் ஈடுபட்ட முதல் கம்பெனி இதுவேயாகும். ஆனால் பண நெருக்கடி காரணமாக வேலைத் தொடங்கி 6-7 ஆண்டுகளுக்குள்ளேயே இக்கம்பெனி எடுத்து மூடப்பட்டு விட்டது. நம் நாட்டில் அப்ஸொல்யூட் (Absolute) கான்கிரீட் (Concrete) வாசனைத் தயாரிப்பில் ஈடுபட்ட முதல் கம்பெனியும் இதுவேயாகும். கரைசல் முறை (Solvent method) யைப் பின்பற்றி வாசனை எண்ணெய் தயாரிக்கும்போது அதிலிருந்து கரையாத தாவர மெழுகோடு கலந்த வாசனைப் பொருள் ஒன்று கிடைக்கும். கான்கிரீட் எனப்படுவது இதுவேயாகும். இந்த கான்கிரீட்டிலிருந்து மெழுகைத் தனியாகப் பிரித்துவிட்டால் கிடைக்கும் சுத்தமான வாசனைப் பொருளே அப்ஸல்யூட் எனப்படும்,

வேறு பல

ஆனால் இக்கம்பெனி வகுத்துக் கொடுத்த வழியைப் பின்பற்றி நாட்டில் நவீன இயந்திர சாதன வசதிகளுடன் ஹிந்துஸ்தான் அரோமாடிக்ஸ் (Hindustan Aromatics) என்னும் மற்றொரு கம்பெனி இத்துறையில் இறங்கியது. பனாரஸ், அலகபாத், பம்பாய் ஆகிய மூன்று நகரங்களில் தொழிற்சாலை ஏற்படுத்தி காங்கிரீட், அப்ஸல்யூட், இயற்கை சென்ட், வாசனை இரசாயனங்கள் (Aromatic chemicals), ரெஸினாய்டு (Resinoid), அத்தர், பொமேடு, ஓட்டோ, எஸன்ஸ், பன்னீர் வகைகள் முதலியவை தயாரிக்கத் தொடங்கியது. பிறகு இக்கம்பெனியைப் பின்பற்றியே பம்பாயில் டாட்டா ஆயில் மில்ஸ், எஸ். ஹெச். கேல்கர் அண்ட் கம்பெனி, கல்கத்தாவில் கல்கத்தா கெமிகல்ஸ், கோஷ் பிரதர்ஸ், கனோஜில் பனாரஸிதாஸ்கத்ரி, மனுவுன்லால் ராம்நாராயண், கான்பூரில் ஸ்டாண்டர்டு எசன்ஸ் ஆயில் டிஸ்டில்லர்ஸ், டில்லியில் குப்தா அண்டு கம்பெனி, கொச்சியில் டி. வி. தேவ் ஆகியவை நவீன வசதிகளுடன் இத்துறையில் இறங்கின, லீவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட், ஏ. போக் (பிரிட்டன்) ராபர்ட் அண்ட் கம்பெனி (பிரிட்டன்), நார்டன்ஸ் (ஹாலண்டு) ஆகியவிதேசிக் கம்பெனிகள் இத்தொழில் முன்னேற்றத்திற்கு ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் உதவி வருகின்றன.

இனாம்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு

பர்னல்

டியூபோடும் ஒரு அழகான 1960-ம் வருட காலண்டர் இலவசமாக அளிக்கப்படும்.

இருபது ஆண்டுகளாக பர்னல்— வெட்டுக்காயங்கள், கொப்பளங்கள், பூச்சிக்கடி, சிராய்ப்பால் ஏற்படும் புண்கள் முதலியவைகளுக்கு இன்றியமையாத புகழ்பெற்ற ஆன்டிஸெப்டிக் களிம்பாக விளங்குகிறது.

பர்னல் இன்றே வாங்குங்கள்.

பூட்ஸ் கம்பெனியாரின் ஓர் உன்னதமான தயாரிப்பு.

Boots

சுதேசி கம்பெனிகள்

மேலேகூறிய கம்பெனிகள் அன்றி வழக்க மான சுதேசிமுறையில் இத்தொழிலில் ஈடு பட்டுள்ள ஏராளமான சுதேசி கம்பெனிகளும் நம் நாட்டில் உள்ளன. இக்கம்பெனிகள் கன்னோஜ், கும்பகோணம், பெங்களூர், மைசூர், மதுரை, பண்டர்பூர், பூனை, பட்னு, பம்பாய் ஜான்பூர், கல்கத்தா,காசிபூர்,லக்னோ, டில்லி, அலிகார் ஆகிய நகரங்களில் உள்ளன.

உற்பத்தி

நம் நாட்டில் இப்பொழுது வருடம் சுமார் 2000 டன் டர்பன்டைன் தைலம், 100 டன் சந்தனத்தைலம், 700 டன் லெமன்கிராஸ் (எலுமிச்சம்புல்) தைலம், 90 டன் பாமரோஸா தைலம், 5 டன் ஜிஞ்சர் கிராஸ் (இஞ்சிப்புல்) தைலம், 10 டன் யுகாலிப்டஸ் தைலம், 7 டன் வெட்டிவேர் தைலம், 3 டன் விணுலோ தைலம், 3 டன் ஜெரானியம் தைலம், 2 டன் சின்னமன் தைலம், 2 டன் ஓமத்தைலம், 1டன் சிட்ரோனில்லா தைலம் தயாராகின்றன. இவை நீக்கி ரோஜா, மல்லிகை, தாழம்பூ அத்தர் மிகுதியாக வடிக்கப்படுகிறது. சந்தன எண்ணெயும் தயாரிக்கப்படுகிறது. ரோஜா, தாழை, புதினு ஆகியவைகளின் டிஞ்சரும் தயாரிக்கப்படுகிறது. ரோஜா இதழிலிருந்து குல்கந்து தயாரிக்கப்படுகிறது. ஆனால் இவை ஒவ்வொன்றும் எவ்வளவு தயாராகிறது என்பது தெரியவில்லை. ஒட்டு மொத்தமாக இத்தொழில்கள் மூலம் வருடா வருடம் சுமார் 10 கோடி ரூபாய் பெரு மதிப்புள்ள பொருள்கள் தயாராவதாக மதிப்பிடப்படுகிறது.

ஏற்றுமதி இறக்குமதி

நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வாசனைத் தைலங்களுள் லெமன்கிராஸ், சந்தனம் (சாண்டல் உட்) பாமரோஸா ஆகிய மூன்றே முதன்மை ஸ்தானம் வகிக்கின்றன. 1949-50, 50-51, 51-52, 52-53, 53-54, 54-55, 55-56 ஆகிய ஏழாண்டுகளில் நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியான சந்தனத்தைலம் முறையே 23, 38, 21, 32, 30, 31, 36 லட்சம் ரூபாய் பெருமதிப்பாகும். எல்லா வகையான வாசனைத் தைலங்களின் மதிப்பு முறையே 116, 250, 211, 112, 125, 234, 273 லட்சம் ரூபாயாகும். தைலமல்லாத மற்ற வாசனைப் பொருள்களின் மதிப்பு முறையே 1728, 2406, 2671, 1858, 1515, 1041, 900 லட்சம் ரூபாயாகும். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிந்தெடிக் வாசனைத் தைலங்கள், இரசாயனங்கள், வாதுமை எண்ணெய், பர்கமாட், காஜுபுட், கர்பூரம், கிராம்பு, யுகாலிப்டஸ், லவண்டர், லெமன் ரோஸ், பெப்பர்மின்ட், ஆகிய தைலங்களின் மதிப்பு இவ்வாண்டுகளில் முறையே 70, 102, 215, 89, 104, 120, 148 லட்சம் ரூபாயாகும்.

நான்கு ஆராய்ச்சி நிலையங்கள்

இத்தொழில் வளர்ச்சி சம்பந்தமான ஆராய்ச்சிகளை வன ஆராய்ச்சிக் கழகம், டேராடுன், தேசிய இரசாயன ஆராய்ச்சி நிலையம், பூனை; இந்திய விஞ்ஞானக் கழகம், பெங்களூர், ஹார்கோர்ட் பட்லர் டெக்னலஜிகல் இன்ஸ்டிடியூட், கான்பூர்; ஆகியவை மேற்கொண்டுள்ளன, நம் நாட்டிலேயே செயற்கை வாசனைப் பொருள்களான அயனேன ஜிரானியோல், ஸ்ட்ருரானெலோல், யூஜினேல், ஸ்ட்ரியோல், ஜிரானில் ஆஸிடே, ஸீனியோல், பேராகிரைசில் பினேல், ஆகியவை தயாரிக்க ஏற்பாடாகி வருகிறது.

உபயோகங்கள்

மனிதனுக்குப் பயன்படும் சோப்பு, அலங்காரப் பொருள்கள், ஊதுவத்தி, வாசனைப் பாக்கு, புகையிலை, மூக்குப்பொடி, காப்பி, தேயிலை, சாக்லெட், பிஸ்கட், சர்பத், கிரஷ், மார்கரின், மருந்துகள், பாலிஷ், காகிதம் முதலியவற்றிற்கு மணம் ஊட்ட மட்டுமின்றி அத்தொழில்களின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதவைகளாகும் இவ்வாசனைப் பொருள்கள்,

சிறப்பெய்த

உலகிலேயே மிகப் புராதனமானது நமது தாவர வாசனைத் தொழிலேயானுலும் மற்ற மேல்நாடுகளுடன் ஒப்பிடும்போது அது இன்னும் அவ்வளவு தூரம் முன்னேற்றம் கண்டுவிடவில்லை என்றே கூறவேண்டும். நவீன ஆராய்ச்சியின் காரணமாக மேல் நாடுகள் செயற்கை முறையில் மிக மலிவாக வாசனைப் பொருளகளைத் தயாரித்து உலக மார்க்கெட்டுகளில் போட்டி இடுவதால் நம் வாசனைத் திரவியங்களுக்கு நாளுக்கு நாள் கிராக்கி குறைந்து வருகிறது. இதைச் சமாளிக்க வேண்டுமானுல் அதற்கு நாம் சில காரியங்கள் செய்தாக வேண்டும். மேல் நாடுகளைப்போல் செயற்கை முறையில் மிகமலிவாக நாமும் வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யவேண்டும். இப்படி உற்பத்தி செய்தால் நம் இயற்கை வாசனைத் திரவியங்களின் எதிர்காலம் என்னுவது எனப் பலர் ஐயுறலாம். செயற்கையோடு இயற்கையையும் கலந்து புதுப்புது விதமான வாசனைகளை நாம் உலக மார்க்கெட்டுகளுக்கு அனுப்பலாம், இவ்விதமான வாசனைகளை தயாரிக்கும் வசதி மேல் நாடுகளுக்குக் கிடையாது. ஆகையால் அவற்றின் போட்டியை நாம் சுலபமாகத் தடுத்துக்கொள்ளலாம். மற்றொரு காரியமும் நாம் செய்யலாம். அமெரிக்காவிற்கு நம் நாட்டிலிருந்து செல்லும் சந்தனக்கட்டைக்கு சுங்கவரி கிடையாது. ஆனுல் நம் நாட்டிலிருந்து செல்லும் சந்தனுதி தைலத்துக்கு சுங்கவரி உண்டு. இதே போன்றதொரு கொள்கையை நாமும் அனுஷ்டிக்கலாம். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் வாசனை கச்சாப் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கலாம். தயாரான வாசனைகளுக்கு வரியை அதிகரிக்கலாம். இத்துறைகளில் நாம் கவனம் செலுத்தினுல் நம் வாசனைத் திரவியத் தொழிலின் எதிர்காலம் மிகவும் சிறப்பெய்திவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ராவண நாரத சம்பாஷணை

புரொபெசர்—ஆர். சீனிவாசன்......

லங்காதிபனான ராவணன் நிகரற்ற வீரனென யாவரும் புகழ அரசாண்டு வருகிறான். பிரம்மதேவனுடைய பௌத்திரனாகப் பிறந்து, சகல வித்தைகளையும் கற்று, கடுந்தவம் புரிந்து திரிமூர்த்திகளிடமிருந்து அநேக வரங்கள் பெற்று, திக்விஜயம் செய்து, தேவரும், முனிவரும் நடுங்கி அவனுக்குப் பணிவிடை செய்ய மஹோந்நத நிலையில் ராஜ்ய பரிபாலனம் செய்து வருகிறான். அப்படியிருந்தும் அவனுக்கொரு மனக்குறை இருந்தது. எப்போதும் தகுந்த வீரர்களுடன் போர் புரிந்து ஜயக்கொடி நாட்டி வந்தவனுக்குக் கொஞ்சகாலமாக யுத்தம் செய்ய இயலாதது பற்றி ஒருவித அலுப்பு ஏற்பட்டது. ஏனென்றால் தக்க வீரர்களை யுத்தத்தில் வென்றாகிவிட்டது. தனக்குத் தகுதியான எதிர் வீரன் யாருமில்லை. எங்கே போவது, யாருடன் போர் புரிவது, தோள் தினவு தீர எவனை எதிர்த்து அடக்கி ஜயபேரி முழக்கத்துடன் லங்கைக்குத் திரும்புவது என்று புரியவில்லை. எப்போதும் அமர்க்களத்திலேயே காலத்தைக்கழித்த வீரனுக்கு அடங்கி ஒடுங்கி அரண்மனையிலேயே இருப்பதென்றால் அது திருப்திகரமாயிருக்குமா? நாம் ஜீவிதத்தில் பார்த்திருப்போம், சில பென்ஷன் வாங்கிக் கொண்ட ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பொழுதைப் போக்க வழி தெரியாமல் திண்டாடுவதை. சிலர் அதன் நிமித்தம் வியாதிக்காரர்களாவதுமுண்டு. அதுபோலவே ராவணனும் எதிரிகளோடு போர் புரிந்து அதிலேற்படும் உற்சாகத்தை அனுபவிக்க முடியாமல் மனச்சோர்வடைந்தான், கலக்கமுற்றான், கவலையும் கொண்டான்.

ஒரு நாள் இந்தக் கவலையை ஒழிக்க அவனுக்கு ஒரு வழிதோன்றிற்று. எல்லாக் கவலைகளையும் நீக்கி மனச் சாந்தியை அளிக்கும் சங்கீதத்தை மறந்தேனே என்று வருந்தினான். சமீப காலத்தில் தனது ராஜாங்கத்தில் சங்கீதக் கலை அபிவிருத்தியைக் கவனித்துக் கொள்ள ஒரு தனி இலாகா ஏற்படுத்தியிருந்தான். தனது பந்துவான கானலோலன் என்று பெயருடைய ஒரு ராக்ஷஸனுடைய வற்புறுத்தலின் பலனாக இந்த புது இலாகா ஸ்தாபிக்கப்பட்டது. கானலோலன் ஒரு சங்கீத ரஸிகன். அவனையே அந்த இலாகாவிற்கு மந்திரியாக ராவணன் நியமித்திருந்தான். தான் சங்கீத சாலைக்கு வந்து நல்ல கானம் கேட்க விரும்புவதாக கானலோலனுக்கு தகவல் அனுப்பினான். அதற்கிணங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன; ராவணன் தனது பத்னி மண்டோதரியுடன் சங்கீத சாலைக்கு சென்றான்.

கானலோலன் நல்ல புத்திசாலி, ஆனால் அவன் மூளை எப்படியெல்லாமோ வேலை செய்யும். சங்கீதத்தில் புதிது புதிதான வழிகளும்' முறைகளும், பிரயோகங்களும் வேண்டுமென்று நோக்கமுள்ளவன். சங்கீத இலாகா மந்திரியானதால் அவனுடைய நோக்கங்களுக்கனுசரித்தே சங்கீதம் அனுஷ்டிக்கப்பட்டு வரத் தொடங்கிற்று. வித்வான்களும் அவனை திருப்தி பண்ணி அவனுடைய ஆதரவை பெற எண்ணி அவனபிப்ராயத்திற்கிணங்க சங்கீதம் கையாளத் தொடங்கினார்கள். இத்தகைய சிலபுது இயக்கங்களை ராவணனுடைய கவனத்துக்குக்கொண்டுர ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததில் கானலோலனுக்கு ரொம்ப சந்தோஷம். வெகு உத்ஸாகத்துடன் நிகழ்ச்சிக் குறிப்பு தயார் பண்ணினான். ராவணனும் வந்து தனதாசனத்தில் அமர்ந்தான், சங்கீதம் தொடங்க வேண்டியது

தான். அந்த சமயத்தில் தேவரிஷி நாரதர் வீணாகானம் செய்துகொண்டு அங்கு விஜயம் செய்தார். ராவணனும் அளவிலா ஆனந்தத்துடன் அவரை வரவேற்றான். சரியான சமயத்தில் சங்கீத கலாசிகாமணியாக விளங்கும் நாரத முனிவரே வரலானார் என்றால் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்.

சாதாரணமாகவே நாரத முனிவரிடத்தில் ராவணனுக்கு ஒரு தனி மரியாதை, மதிப்பு, சிநேகமெல்லாம் உண்டு. நாரதருக்கும் ராவணனிடத்தில் ஒரு விசேஷ அபிமான மிருந்து வந்தது. வேறு என்னென்ன துர்க்குணங்கள் ராவணனிடமிருந்தாலும் சங்கீதக் கலையில் அவனுக்கு விசேஷப் பற்றுதலும் ஆழ்ந்த அறிவுமுண்டு. நமது சங்கீதத்திற்கே ஆதாரமாயிருக்கும் ஸாம கானத்தைக் கையாண்டு கயிலையமர் முக்கண்ணன் மனதை மகிழ்ச்சியால் மலரச் செய்தவனல்லவா? ஆகவே இவ்விருவர்களுக்கிடையில் நட்பிருந்தது ஆச்சரியப் படத்தக்கதல்ல. அடிக்கடி நாரத முனிவர் லங்கைக்கு வருவதுண்டு, வரும் சமயங்களில் சங்கீத சம்பந்தமான அநேக விஷயங்களைப் பற்றிப் பேசுவதுண்டு. ஆகவே சங்கீதம் தொடங்கும் தருணத்தில் நாரதர் வந்ததில் ராவணனுக்கு உண்மையான ஆனந்தமுண்டாயிற்று.

நாரதர் சுற்றிப் பார்த்தார், விஷயமறிந்து கொண்டார். ராவணனும் நாரதரை நோக்கி, "முனிச்ரேஷ்ட, என்னிடத்தில் தங்களுக்கு உண்மையான அன்பு உண்டு என்பதற்கு, தாங்கள் இந்த சந்தர்ப்பத்தில் வந்ததே ஓர் அத்தாக்ஷி. சங்கீதம் தொடங்கும் சமயத்தில் விஜயம் செய்தீர்கள். என்னுடைய பாக்யமே பாக்யம். இந்த கான லோலனைத் தங்களுக்குத் தெரியுமோ? பார்த்திருக்க மாட்டீர்கள். இவன் இப்போது ஒரு புதிய மந்திரி. நமது ராஜாங்கத்தில் சங்கீதம் பரவி விருத்தியடைய ஒரு புது இலாகா ஏற்பாடாகியிருக்கிறது. அந்த இலாகாவிற்கு மந்திரி இந்த கானலோலன் தான். நல்ல ரஸிகன். சங்கீத சாஸ்திரத்தை நன்காராய்ந்தவன். நமது இசை முறையில் பல புது வழிகளையும் இயக்கங்களையும் செய்து வருகிறான். நானிதுவரையில் அவைகளைக் கேட்கச் சந்தர்ப்ப மேற்படவில்லை. எனக்குக் கொஞ்சகாலமாக ஒருவித மனக்கவலை யேற்பட்டு வருந்திக் கொண்டிருந்தேன். சங்கீதத்தில் மனதைச் செலுத்திக் கவலையை விலக்கலாமே என்று எனக்கின்று தோன்ற, கான லோலனிடம் சொல்ல, இந்த சங்கீதக் கச்சேரியை அவன் எற்பாடு செய்திருக்கிறான். தொடங்கும் சமயம் தாங்களும் வந்தீர்கள, என் அதிர்ஷ்டம் தான். கான லோலனுடைய அதிர்ஷ்டமும்தான். கச்சேரி தொடங்கலாமா?" என்று கேட்டான்.

நாரதரும் "ஆஹா, தொடங்கட்டுமே" என்று கூறினார். ஆனால் அவர் சொல்லும் விதத்தில் ஓர் உற்சாகக் குறைவு இருப்பது போல் ராவணனுக்குத் தோன்றிற்று முகத்தை உற்று நோக்கினான், எப்போதும் போலுள்ள மகிழ்ச்சிக் குறிப்புக்காணவில்லை. அதற்குள் கானம் தொடங்கிற்று.

முதலில் ஒரு பெண்மணியின் பாட்டு. நல்ல சாரீரம், ச்ருதியோடிழைந்து லயிக்கும் குரல். ஏதோ ஒரு ராகம் பாடத் தொடங்கினாள், நாரதர் திடுக்கிட்டுப் போனார், ஒன்றும் புரியவில்லை. ஏதோ ஒலிக்கூட்டம் கேட்டதே. யல்லாமல் இதயத்துக்கு ரஞ்சகமான அம்சம் ஒன்றையும் காணோம். நாரதர் பிரமிப்பதைக் கவனித்த கானலோலன், "ஸ்வாமி, இது ஒரு புது ராகம். நான் கற்பனை செய்தது. இதில் வரும் ஸ்வரங்கள அநேகமாக விவாதிஸ்வரங்கள், ஆரோஹணத்தில் பஞ்சம வர்ஜம், அவரோஹணத்தில் மத்யமம் வக்ரமாகப் பிடிக்கப்படுகிறது. இதற்கு **விவாதிஸ்வ ரூபிணீ** என்று பெயர் கொடுத்திருக்கிறேன். இதில் ஒரு கிருதியையும் அமைத்துள்ளேன். அது இப்போது பாடப்படும், தயவுசெய்து கவனியுங்கள்" என்று கூறினான். அதற்குள் அந்தப் பெண் ராகாலாபனத்தை நிறுத்தி அந்தக் கிருதியைப் பாடத் தொடங்கினாள். அதில் ஓரிடத்தில் நிறுத்தி நிரவல் செய்து ஸ்வரமும் பாடினாள். நாரதர் அசந்தே போனார்.

அடுத்த நிகழ்ச்சியாரம்பமாயிற்று, ஏழு பெண்கள் வரிசையாக வந்து நின்றுகொண்டு சேர்ந்து ராகாலாபனம் செய்யத் தொடங்கினார்கள். எடுத்துக்கொண்ட ராகமோ கமகம் நிறைந்தது. பாவம் ததும்பும் ராகம்! நாரதர் தனது காதுகளை மானஸீகமாக அடைத்துக்கொண்டார். அதற்கடுத்த நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் கான லோலன் நாரதரிடம் கூறினான், "முனிபுங்கவ! அடுத்த நிகழ்ச்சியை தயவுசெய்து நன்றாகக் கேட்டு, தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கோருகிறேன். அநேக சங்கீத கவனங்கள் வெகுகாலமாக அததற்குள்ள மெட்டுகளில் பாடப்பட்டு வந்திருக்கின்றன. அவைகளில் சில மெட்டுகள் பழகிப்போய் ருசி குறைந்து போயிருக்கின்றன. ஜனங்களுக்கும் புதிது புதிதான விருவிருப்புள்ள மெட்டுகளில்தான் விருப்பமும் ஏற்பட்டு வருகிறது. ஆகையால் அவைகளுக்கு புது மெட்டுகள் அமைத்து சில குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். இப்போது அந்தப் புது மெட்டமைந்த பாட்டுக்களில் சில பாடப்படும்". இதைக் கேட்டார் நாரதர், ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போனார். அந்த நிகழ்ச்சியும் முடிவு பெற்றது. இந்த ரீதியில் இன்னும் சில

நிகழ்ச்சிகள் நடந்தன. கச்சேரி முடிவடைந்தது, பாடக பாடகிகள் விடைபெற்றுச் சென்றார்கள். கானலோலன், ராவணன், மந்தோதரி, நாரதர் இவர்கள் நால்வர் மட்டும் இருந்தார்கள்.

ராவணன் நாரதரை நோக்கினான். அந்த நோக்கத்தில் ஒரு கேள்விக்குறி விளங்கிற்று. முனிவருமதையறிந்து கொண்டார். என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாய், ராவணா!" என்று நாரதர் கேட்டார். அதற்கு ராவணன், "நாரதரே, நம்மிருவருடைய நட்பு பலகாலமாயுள்ளது. தங்கள் முகத்திலிருந்து தங்களுக்கு இங்கு இன்று நடந்த சங்கீத நிகழ்ச்சியில் மகிழ்ச்சிக்குப் பதிலாக வெறுப்பேற்பட்டிருக்கிறதென்று எனக்கு நன்கு தெரிய வருகிறது. மேலும் உண்மையில் எனக்கே அது அவ்வளவு திருப்திகரமாகத் தோன்றவில்லை. அதைப்பற்றி தங்களுடைய உண்மையான அபிப்பிராயத்தையறிய விரும்புகிறேன்" என்றான். நாரதர் சற்று தயங்கிக்கொண்டே, "ராவணா, சாதாரணமாக இந்தமாதிரி விஷயங்களில் நான் எனது அபிப்பிராயத்தை வெளிப்படையாகக் கூறுவதற்கில்லை. உலகம் பலவிதம். நான் சொல்லுவதில் பலருக்கு விரசம் ஏற்படலாம். ஆகையால் மௌனம் ஸர்வார்த்த ஸாதகம், என்று மௌனமாயிருப்பதே நல்லது" என்றுரைத்தார். ராவணன் "ஸ்வாமி, தாங்கள் சொல்லுவது பொதுவில்ஞாயமே. ஆனால் என்னுடைய விஷயத்தில் தாங்களப்படியிருக்கக்கூடாது. சங்கீத சம்பந்தமான விஷயங்களில் தங்களுடைய அபிப்பிராயத்திற்கு நான் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறேன் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த விஷயத்தில் உள்ளதுள்ளபடி கூறத் தங்களைப் போல் தகுதியுள்ளவர்கள் யாருமில்லையென்பது எனக்குத் தெரியும். தாங்கள் கூறத்தயங்கினால் நான் யாரிடம் சென்று உண்மையை அறியக்கூடும், தாங்களே சொல்லுங்கள்" என்று மிகவும் வற்புறுத்த நாரதரும் பின் வருமாறு கூறினார்.

"கானலோலா, நான் சொல்லுவதில் ஏதாவது உனக்கு அஹிதமாயிருந்தால்வருந்தாதே. நீ நல்ல புத்திசாலி, சங்கீதக் கலையில் ஆழ்ந்த அறிவுள்ளவன் என்பது எனக்குத் தெளிவாயிற்று. ஆகையால் நான் சொல்லப்போகும் விஷயங்களின் உண்மையை நீயே நன்கறிந்து அங்கீகரிப்பாய் என்று எனக்குத் தோன்றுகிறது.

"சங்கீதாபிவிருத்திக்காக சர்க்கார் ராஜ்யாபரணத்தில் ஒரு தனி இலாகா ஏற்படுத்தி இருக்கிறது. என்று கேட்டபோதே என் மனத்தூக்கி வாரிப்போட்டது. இதற்கு நமது ராவணன் எப்படி சம்மதித்தான் என்று எனக்கு அதியாச்சரியம் ஏற்பட்டது. சர்க்காராவது சங்கீத இலாகாவது, இது என்ன விபரீதம்! கலைகள் ஜனசமூகத்தில் தானாகவே வளர்ந்து வரவேண்டுமே யல்லாது சர்க்காரதிகாரிகள் அதில் கைவைத்தால் அவ்வளவுதான், கலை வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி போட்டது போல்தான். ராவணா, நீ சங்கீதத்தில் உண்மையான பற்றுதலுள்ளவன், அதைச் சரியானபடி அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஆவல் கொண்டவன், எனக்கு நன்றாகத் தெரியும். கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் யதேஷ்டமாக ஆதரவு கொடு; சரியான ஆதரவில்லாமல் கலைஞன் கஷ்டப்பட்டான் என்ற அபக்யாதி வராமல் பார்த்துக்கொள்; பணத்தாலும் ஆதரவாலும் எவ்வளவு உதவி புரியலாமோ அவ்வளவையும் செய்; ஆனால் அந்தக் கலையின் பிரயோக முறையிலோ வளர்ந்து வரும் வழியிலோ கைவைத்து விடாதே. மஹா பாபம். ஒரு கலை ஸர்க்கார் கையிற் சிக்கினால் ராஜதந்திர ஆட்சிகள், உத்தியோக பரண குயுக்திகள் எல்லாம் அந்தக் கலையை பாதித்து அதை அதோகதிக்குக் கொண்டுபோய் விடும்; கலை மறைந்து கலையென்ற பெயரில் காண்டா மிருகம் கூத்தாடும். ராவணா! நீ இந்தப் பாபம் செய்யவேண்டாம். சங்கீத தேவதையின் சாபத்திற்குள்ளாக வேண்டாம்.

"மேலும், அந்தப் பெண்மணி ஒரு புது ராகம் ஆலாபனம் செய்து அதில் பாட்டும் பாடினாளே, அது என்ன ராகமா? ராகமென்பதென்ன, அதன் குணமென்ன, நோக்கமென்ன? ராகம் என்றால் இதயத்தை ரஞ்சிக்கச் செய்து ஒரு தனி பாவத்தை வெளிப்படுத்த வேண்டாமா? விதரணையில்லாமல் கண்டபடி ஸ்வரங்களைச் சேர்த்துப் பாடினால் ராகமாகுமா? அதுவும் விவாதி ஸ்வரங்களை உபயோகப்படுத்துவது மிகவும் ஜாக்கிரதையாகச் சாதுரியமாக செய்யவேண்டிய காரியம். ஒரு வெங்கலப் பானையுள்ளில் பலதினுசு கற்றுண்டுகளைப் போட்டு உருட்டினால் உண்டாகும் சப்தம் ராகமாகுமா? அந்தப் பெண் பாடின ராகம் எப்படி இருந்தது தெரியுமா, அந்தப் பானையிலுண்டாகும் சப்தத்தைக்கூட சகிக்கலாம், இந்த ராகத்தை சகிக்க முடியாது என்று தோன்றிற்று.

அந்தப்பெண் ஸ்வரமும் பாடினாள், ஸ்வரம் எதற்குப் பாடுவது, எவ்வளவு பாடுவது எப்படிப் பாடுவது என்கிற விவஸ்தை கிடையாதா? மிருதங்கச் சொற்கட்டுகளில் ஸ்வரத்தை யடைத்துக் கொட்டிவிட்டால் அது ஸ்வரம் பாடுதலாகுமா? ஸங்கீதத்திற்கு பாவம்தான் முக்கியம் என்பது உனக்குத் தெரியாதா? சாஸ்திரம், விவகாரம் எல்லாம் அந்த பாவத்தை வெளிப்படுத்துவதற்காக ஏற்பட்டன; விஷயத்தை யொட்டித்தான்

2 - NOV 1959

லக்ஷணமேற்பட்டது. சில ராகங்கள் ஸ்வரம் பாடுவதற்கே உசிதமில்லாதவை. நாகவராளி, த்விஜாவந்தி முதலிய ராகங்களுக்கு ஸ்வரம் பாடுவது அறிவில்லாமையே; ஸங்கீத உணர்ச்சியில்லாதவர்கள் தான் அத்தகைய தவறுதல் செய்வார்கள். மேலும் இரண்டாம் காலத்தில் ஸ்வரம் பாடுவது சில ராகங்களுக்குத்தான் பொருந்தாமலிருக்கும். ஸஹானா, நீலாம்பரி, யதுகுலகாம்போதி போன்ற ராகங்களுக்கு மத்யகாலமோ துரித காலமோ பொருந்தவே பொருந்தாது. பாவம் கெட்டுப்போகும். ராகமே விரஸமாகும். ஸங்கீதம்என்ன ஒரு சர்க்கஸ்ஸா அல்லது ஜாலவித்தையா? சிறந்த கலையல்லவா? அதை இப்படிக் கெடுத்து அதன் பெருமையைக் குலைக்கலாமா!

பலபெயர்களொன்று சேர்ந்து ராகாலாபனம் செய்தார்களே, அந்த விபரீதத்தை நானென்னவென்று சொல்லுவேன். கலையைக் கொலைசெய்ய நல்லவழி அது ராகத்தின் ஜீவன் மனோதர்மம். நாம் ராகம் பாடும்போது பற்பல கற்பனைகள் தோன்றும். ஒரு நாள் பாடினமாதிரியே மற்றொருநாள் ராகாலாபனம் செய்வது உண்மையான கலைஞனுக்கு சிரமமான காரியம். ராகாலாபனத்தில்தான் நமது ஸங்கீதத்தின் தனிச்சிறப்பான மனோதர்மம் உச்சஸ்தானத்தை யடைகிறது, சில சமயங்களில் சில ராகங்கள் பாடும்போது அனுசரணைக்காகக் கூட இருக்கும் தந்தி வாத்யங்கள் கூட இடையூறாகத் தோன்றுகிறது. அப்படியிருக்க பலபெயர்கள் சேர்ந்து ஒன்றாக ராகாலாபனம் செய்வது நமது ஸங்கீதக் கலைக்கு கொஞ்சம் கூட பொருத்தமில்லாது, அக் கலையின் உயிரையே மாய்த்துவிடும். ஸங்கீத தேவதைக்குப் பெரிய அபராதம் இது கானலோலா, உனக்கிப்படி யெல்லாம் விபரீதப் புத்தி வருவானேன். நீயோ நல்ல

கலைஞன், நீ இப்படிச் செய்வது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. கலிகாலத்தில் தான் இத்தகைய விபரீதங்கள் தலைவிரித் தாடப்போகின்றன, இந்த த்வாபர யுகத் திலேயே இந்த விபரீதங்களேதற்கு?

மேலும் பழைய பாட்டுகளுக்குப் புது மெட்டுகளமைத்துப் பாடினதையும் கவனித் தேன். ஒரு வாக்கேயக்காரர் ஒரு பாட்டை ஒரு மெட்டில் அமைத்திருக்கிறார். அந்தப் பாட்டு அவருடைய சிருஷ்டி, அவரது குழந்தை. அது உனக்குப் பிடித்தால் பாடு, இல்லாவிட்டால் விட்டுவிடு. அந்தப் பாட் டின் மெட்டை மாற்றுவதற்கு உனக்கென்ன அவகாசம்? மெட்டுத் தெரியாமல் சில சாகித் தியங்களிருக்குமானால் அவைகளுக்கு உசித மான நல்ல மெட்டுகளை அதற்கு யோக்கி யதையுள்ள வித்வான் அமைக்கலாம். வெகு காலமாக கையாளப்பட்டுவரும் பாட்டுகளின் மெட்டுகளை மாற்றி யமைப்பது நியாயமில் லாத காரியம். ஒரு புது மெட்டு நல்லதாகத் தோன்றுமானால் அதற்குத் தக்க புது சாகித் தியமமைத்துப் பாடலாமே அல்லாது, பழக் கமான மெட்டமைந்த ஒரு பழைய சாகித்தி யத்தை அந்தப் புது மெட்டில் அமைப் பது உசிதமில்லாத செய்கை. அந்தப் பாட்டு பிடிக்காமலிருந்தால் அதைப் பாடவேண்டாம், பிடிக்கவில்லை யென்று அதை சின்ன பின்னப் படுத்தவேண்டாம். எனக்குப் பிடித்ததான ஒரு புதுச்சட்டையை என் குழந்தைக் கமைக்கவேண்டுமென்பது குழந்தையின் கையையும் காலையும் கழுத்தை யும் வெட்டுவது போலாகும்.

இன்று நான் கேட்ட புது மெட்டுகள் ஒன்றாவது பொருத்தமானதாக எனக்குத் தோன்றவில்லை. சாகித்ய பாவம், ராக பாவம் லய பாவம் பொருந்தியிருக்கவேண்டாமா? பழைய மெட்டுகளே நன்றாகப் பொருந்தி யவை என்று தோன்றிற்று''.

நாரதர் இவ்விதம் சொல்லி முடிந்ததும் சில நிமிடங்களுக்கு ஒருவரும் பேசவில்லை. பிறகு ராவணன் எழுந்திருந்து நாரதர் காலில் வீழ்ந்து பின்வருமாறு கூறினான்:-

''ஸ்வாமி, தாங்கள் இன்று எங்களுக்குச் செய்த பேருபகாரத்திற்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்? முடியவே முடியாது. வேறு பல விஷயங்களில் நானீடுபட்டிருந்ததால் இந்த ஸங்கீதக்கலை விஷயத்தில் நான் கொஞ்ச காலமாக கவனம் செலுத்தாமலிருந்து விட் டேன். அதன் பலன்தானிந்த விபரீதம். முனி சிரேஷ்ட! தாங்கள் கூறியது அவ்வளவும் உண்மையே, உண்மையே. கானலோலனை யும் குற்றம் சொல்லுவதற்கில்லை. இசைக் கலைக்குத் தொண்டு செய்ய ஆர்வங்கொண்ட வன். ஆனால் விஷயங்களை எடுத்துச் சொல் லத் தகுந்தவர்கள் இல்லாததால் யாரோ சில சில பெயர்கள் சொல்லுவதைக் கேட்டு இப் படியெல்லாம் செய்திருக்கிறான். இன்று தாங்கள் சொன்ன அருமையானத் தத்துவங் களைக் கேட்ட பிறகு இனி இப்படிப் பட்ட தவறுதல்கள் ஒன்றும் வரமாட்டா. கானலோலா, இனி கலைக்காக நமது சர்க்கா ரில் தனி இலாகா ஒன்றும் வேண்டாம். ஆனால் நீ சங்கீதக்கலையின் அபிவிருத்தியைக் கவனித்துக்கொள், கலைக்கும் கலைஞர்களுக் கும் யதேஷ்டமான ஆதரவும் பண உதவியும் கொடுக்க ஏற்பாடு செய். கலைப்பிரவிருத்தி களில் நீ தலையிடவேண்டாம், கலைகள் தாமே வளர்ந்தோங்கட்டும், அதுதான் சரியான கலைத் தொண்டாகும். இந்த விஷயங்களில் உனக்கேதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் நமது நாரத முனிவரிடம் கலந்து கொண்டு வேண்டுவதைச் செய்தால் தவறுகள் ஏற் படாது. முனிபுங்கவ! ஸங்கீத தேவதைக்கு பெரிய அபராதம் செய்து மஹா பாபத்திற்கு உள்ளாகவிருந்த எங்களை அப்பாபத்தினின் றும் காப்பாற்றினீர்கள். இதை என்றும் மறவோம். தாங்கள் அடிக்கடி இங்கே வந்து இப்படிப்பட்ட புத்திமதிகளைக் கூறி ஸங் கீதக்கலைச் சிறந்தோங்கச் செய்யும் வழிகளில் நாங்களென்றும் ஈடுபட்டு நிற்க அருள் புரிய வேண்டும்''

திரு. காமராசர்

எஸ். என். ராமஸ்வாமி

●

"நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது"—குறள்.

[பொ-ரை—தன்னுடைய கொள்கைகளை விட்டு விடாதபடி, பிறருக்குத் தணிவாக நடந்துகொள்ளுகிறவனுடைய புகழ், மலையைக்காட்டிலும் மிகவும் பெரிது"—நாமக்கல் கவிஞர்.]

பாமர மக்களுக்கு, நிர்வாகத்தில் பெரிய உரிமை உண்டு என்பதை நிலை நாட்டியவர், காமராசர். தொண்டனுகைத் தொல்லைப்பட்ட நிலையில், பரிகசித்து, இகழ்ந்தவர் பலர், முதல் மந்திரி வீட்டை முற்றுகை போடும், தூதர்கள் மிகவும் பலர்—தற்போது. எந்தப் புற்றில், எந்தப் பாம்பு இருக்குமோ என, பயப்பட்டு, கதர் அணிந்தவர்களை அண்டும் காலம் இது. கதரின் தூயவெண்மை வெளியேறிவிட்டது என ஒருசில அறிவாளிகளின் மனம் உடைந்துவிட்டது. 1920-ம் ஆண்டு முதல், 27 வருடம் நிலவிய தூய்மையும், தியாக உணர்ச்சியும் நிலைக்கும் என எதிர் பார்ப்பது, மனித உணர்ச்சிக்கு எதிர் நீச்சல் போடுவது ஆகும். அவ்வுணர்ச்சிகள் ஓங்கும் என எதிர்பார்த்தால், ஏமாற்றமே நிலவும்—மனது கசப்படையும்; வெறுப்பு வெளிப் படையாகும்.

அது அந்தக்காலம், இது இந்தக்காலம் என பணியாற்றுகிறவர் காமராசர். அந்த நிம்மதியே, அவர் உயர்விற்கு ஆதாரம். மௌனத்தால், நண்பர்களை ஆட்கொண்டு, எதிரிகளை அதிரச் செய்கிறார். பலருக்கு திகிலே உறைவிடம்..நண்பர்களை எந்த கடின அலுவலுக்குமிடையே சந்திப்பார். வேண்டுகோட்களுக்கு, "பார்க்கலாம்" பதில் திருப்தி அளிக்கிறது. எதிரிகளை முகத்திற்குமேல் அடிப்பதில்லை; ஆனால் பொதுக்கூட்டங் களில் தாக்கலாம். முதல் அமைச்சரை "கண்டு போவதிலேயே" பலருக்குப் பரம இன்ப உணர்ச்சி...ஒரு சில ராஜீய வாதிகள், "சூழ்ச்சிக்காரன்" என வரம்பில்லாமல் ஏசுகிறார்கள்.

ஆனால் ராஜியத்தில் இதெல்லாம் வெகு சகஜம் என நிம்மதி கொள்ளக்கூடாது எத்துறையிலும், பண்பாடு பிரதிபலிக்க வேண்டும். தொண்டர்கள் துயரத்தால்தான் இன்று பேச்சு—வீண் பேச்சு உட்பட—சுதந்தரம் நிலவுகிறது என்பதை மேடைப்பிரசங்கிகள் உணரவேண்டும். அளவிற்கு மிஞ்சினால் அமிருதமும் நஞ்சாம்.

ஜனநாயகத்தில், பொதுஜன உணர்ச்சியை வசப்படுத்துவது கடினம். தேர்தல் முடிவடைந்த பிறகு, மக்கள் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். பிரதிநிதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிறகு, கட்சி மனப்பான் மைக்கு இடமில்லை—எதிரிகளும் இல்லை.

அரசாங்கத்தைச் சீர்ப்பட நடத்திக்காட்ட, பண்பாடும், அஞ்சாநெஞ்சமும் அடிப்படை, காமராசர் வேண்டிய சந்தர்ப்பங்களில், துணிவுடன் தீர்மானித்துச் செயலாற்றுவார், "சில்லரை" விவகாரங்களில் தலை இடுவதில்லை, பல ஊர்ப் பிரயாணத்தில் சலிப் படைவதில்லை. மக்களைக்கண்டு பேசுவதில்லை — ஆனால் தன் நிலைமையையோ, உணர்ச்சியையோ, தீர்மானத்தையோ வெளிப்படுத்துவதில்லை. எல்லாம் பரம ரகசியம்!

ஆப்த நண்பர்கள் எனச் சொல்லிக்கொள்ளுபவர்கூட, அவர் மனதை புரிந்துகொள்ள முடிவதில்லை. அதிர்ச்சி உண்டாக்கும் திடீர் சாதனைகள்; எதிர்பாராத நிம்மதி, மாறி மாறி எழும் வெளிப்படை சிந்தனைகள்.

பலரை திகைக்க வைக்கிறது. ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தியின் சீடராக இருந்தும், நேரிடையாக மவுனம்! ஸ்ரீமான் முத்துரங்க முதலியாருடன் பழகியும், வைதீகம் இல்லை. திரு. ஈ. வெ. ராவுடன் தொடர்ந்த நட்பு உண்டு எனச் சொல்லப்பட்ட போதிலும், சமூக—ஜாதி துவேஷம் காணப்படவில்லை. ஆராய்ந்தால், ஒருகால் உண்மை காணலாம், ஆனால், பயன் என்ன?

இன்று, காமராசர், காமராசராகவே இருப்பதுதான், அவர் உயர்வின் காரணம். பலர் பல நிந்தனை குவித்தாலும் பொருட்படுத்துவதில்லை. தனது கொள்கைகளை கடைபிடித்து, பொதுஜனத்திற்குத் தணிவாக நடப்பதில், ஆர்வம் கொள்ளுகிறார். அடுக்கு மொழிகளை விலக்கி, அஞ்சாமையைப் போற்றுகிறார், அதுவே அவர் சிறப்பு. படபடப்பு கிடையாது.

எல்லாவற்றிற்கும் மேல், ஸ்ரீமான் பொது ஜனம் ஆளுகிறார் என்ற மனப்பான்மையைத் தூண்டுகிறார்.

"முன்னேற்றத்தை" விலக்கி, தி. க, வை கண்டிக்காமல் இருக்கிறாரே எனப் பலர் வியப்படைகிறார்கள். ஏன் கண்டிக்கவேண்டும் என ஆராய்பவர்கள் ஒரு சிலரே. எது எதுவாகயிருந்தாலும், காமராசருக்கும் பொது ஜனத்திற்கும் நட்பு தொடர்கிறதா அல்லது சிக்கி அறுபட்டதா என்பது, **1962-ம்** ஆண்டு தான் நிரூபிக்கும்.

Telegrams: "KALIBRAND" Telephone: 108

"காளீ-பிராண்ட்"

எவர்சில்வர் பாத்திரங்கள்

தயாரிப்பவர்கள் :

காளீ-பிராண்ட்

கும்பேஸ்வரர் சன்னதி, :: கும்பகோணம்.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

சாஸ்திர முறையில் விக்ரகங்கள் செய்வதில் புகழ்பெற்றவர்கள்

எந்தவிதமான விக்ரகங்களும் எந்த உலோகத்திலும் ஆர்டருக்குச் செய்து தரப்படும்.

ஏஜெண்ட்ஸ்: "ருக்மணி குக்கர்"



முன்னுரை

[திருவரங்கப் பெருமாளைக்காண, ஆயிரம் கண்கள் வேண்டும்! ஆயிரங்கண்களைக் கொண்டு, ஒரு தடவை தரிசித்துவிட்டால், உள்ளங் குளிர்ந்து விடுமா? இதய தாபம் குறைந்து விடுமா? கோடி தடவைகள் காணவேண்டும்! அதற்கு மேலும் காணவேண்டும்.

ஊண் மறந்து உள்ளம் மறந்து விண் மறந்து மண் மறந்து ஏன், நம்மையே நாம் மறந்து கண்டுகொண்டே இருக்க வேண்டும்.

அந்த மாயவனின் திருவாய்மலரின் மலர்ச்சியைச்சுற்றி தங்களது இதய வண்டுகளை சுழலவிட்டு, சோழர்களும், பாண்டியர்களும் சிற்றரசர்களும், வள்ளல்களும், ஆலயத் திருப்பணி செய்திருக்கின்றனர்.

அவர்களிலே, பெரிதும் தலைமை வகிப்பவன் திருமங்கை மன்னனான சிற்றரசன் நீலன்! தனது பராக்கிரமத்தால் 'பரகாலன்' என்ற விருது பெற்றவன்.

பரகாலனின் மனத்தை வைஷ்ணவ மதத்திற்கு திருப்பியவளையும் திருவரங்கத்திற்கு திருப்பணி செய்யத் தூண்டியவளையும், அவன் வாழ்விலே நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சரித்திரத்தின் துணைகொண்டும் என் கற்பனையின் வழிகொண்டும், தேட முயற்சித்திருக்கிறேன்.........!]

1.

மந்தகாச மாலைநேரம்! எங்கும் ஒருவித அமைதி பரவி நிற்கிறது. கதிரவ சைத்திரிகன், புவியெங்கும் மஞ்சள் வண்ணத்தை பூசி விட்டு விட்டான்! அதனால், எங்கும் பொன்னின் பளபளப்பு! எதிலும் அழகின் மினுமினுப்பு.

பெருங்காட்டினுள்ளே நுழைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில், ஒரு குதிரை அதிவேகமாகச் செல்லுகிறது! அதன்மீது அமர்ந்திருக்கும் பரகாலனின் மனக்குதிரை

யுடன் போட்டி போட்டிக் கொண்டு செல்லு கிறது!

பரகாலன், யாரைத் தேடிச் செல்லுகிறான் கள்ளர்களை கண்ணி வைத்துப் பிடிக்கவா? கடுந்தவம்புரியும் துறவிகளைக்காணவா? அவன் முகத்தை நோக்கினால், அப்படிப்பட்ட அடிச்சுவடு ஒன்றும் தென்படவில்லையே!

ஏக்கம் பெருமூச்சு துடிதுடிப்பு இவைகளைத்தானே அவனது வீரமுகம் நொடிக்கு நொடி வெளியிட்டுக்கொண்டிருக் கிறது!

அதோ! தூரத்திலிருந்து கேட்கிற சத்தம். என்ன சத்தம்? சத்தமா, அது? அல்ல அல்ல! சதங்கையிலிருந்து எழுகின்ற கலீர் கலீர் நாதம்! செவி படைத்தோரின் ஆவியைக்குளிர் விக்கும் ஆனந்த கீதம்!

முட்புதரில் செந்தாமரை! கருமுகிலில் மின் னல்! இந்த நடுக்காட்டு ஓலைக் குடிசையில் தேவலோகத்து சுந்தரி!

இந்த குமுதவல்லியின் விழி அசையும் அழ கைச் சொல்லுவதா? இடைநெளியும் நெளி வைச் சொல்லுவதா? கைவீசும் வீச்சைச் சொல்லுவதா?

எதைச் சொல்லுவது? எதைச் சொல்லா மல் விடுவது?

இவளின் இளம்பிறை நெற்றியில் திகழும் திலகத்தையே நோக்கிக்கொண்டு ஏன் இவ் விதம் பரகாலன் நிற்கிறான்?

தனது கைவேலழகின் அமைப்பை, இவ ளது விழிகளில் காண்கின்றானா? தனது உடை வாளின் ஒளியை, இவளின் குங்குமச் செவ்வி தழ்களில் நெளியும் புன்னகையில் தேடுகி றானா? குமுதவல்லியைகண்டுவிட்ட மயக்கமா? அல்லது குடிசையினுள் செல்லுவதற்கான தயக்கமா?

"ஏன் ஸ்வாமி! வாயிலிலேயே நிற்கிறீர்கள்? அரண்மனையின் அந்தபுரத்தைப்போல் இந்த அரண்ய மாளிகையில் இல்லையென்றா?"

"அந்தப்புரம் — அம்சதூளிகா மஞ்சம் — ஆரணங்குகள் அத்தனையும் எனக்கு பிடிக்க வில்லை குமுதவல்லி! உன் முகமலர் காட்டும் சோபையில் சொர்க்கத்தைக் காண்கின் றேன்!" திணறும் மூச்சோடு சொற்கள் வெளி வந்தன,

"ஊம்; அப்படியா...!" குமுதவல்லியின் இதழ்களில் ஏளன நகை வெடித்தது.

"இதென்ன குமுதவல்லி! எங்கு பார்த்தா லும் ஐம்பொன் விக்ரகங்களாகக் காட்சி யளிக்கின்றன! இவைகள் உனது தமையன் மதனனின் படைப்புகளா?"

"ஆமாம்; ஸ்வாமி! திருமாலின் லீலைகளை சிலையில் வடித்திருக்கிறார் என் சகோதரர்! இதோ பாருங்கள் வில்வளைக்கும் இராமனை! ... இது, குழலூதும் கிருஷ்ணன்! ... இது பார்த்தனுக்கு தேரோட்டும் சாரதி!"

"கட்டைவிரலைக் சுவைக்கும் சின்னகண் ணனை பார்த்தீர்களா... இப்படிக் கொஞ்சம் திரும்பிப்பாருங்கள். உறியேறி வெண்ணெய் திருடும் பெரிய கண்ணனை! இது, பாற்கட லில் பள்ளி கொண்டிருக்கும் அனந்த சயனன்...!"

"என்ன குமுதவல்லி! வைஷ்ண வீட்டில் நடராஜனின் திருவுருவம்? ஹரியும் சிவனும் ஒன்று என்பதைக் காட்டுவதற்காகவா...? கேலியாக சிரித்தான் பரகாலன்.

"இன்னும் உங்களுக்கு பழைய குறும்பு போகவில்லையே! இரண்டு கைகளை யும் கூர்ந்து பாருங்கள்! ஒரு கையில் சங்கும் மறு கையில் சக்கரமும் இருப்பது தெரிய வில்லையா?"

அதிசயமாக இருக்கிறதே சிலை! இது மாதிரி உருவத்தை நான் கண்டதே இல்லை. சிறு பிள்ளையாக காளிங்கன்மீது குதித்த தோடு சரி; நடராஜனைப்போல் திருமால் எப் போது நடனம் புரிந்தார்?"

"அந்த சிவனுக்குத்தான் ஆடத் தெரியும் என்று நினைத்துக்கொண்டீர்களோ? எங்கள் பெருமாளுக்கும் திருநடனம் தெரியும்! சற்று நேரம் பொறுங்கள், பெருமாளின் ஆனந்தக் கூத்தை காண்பீர்கள்...!

விருட்டென்று குமுதவல்லி உள்ளே சென்று விட்டாள். பரகாலன் வாய் பிளந்து நின்றான். வைஷ்ணவத்திற்கு பரம வைரியாக இருந்த பரகாலனை மெல்ல மெல்லப் பரம வைஷ்ணவனாக மாற்றிவிட்டாள்குமுதவல்லி!

அவளுக்காக அவன் எதையும் செய்யச் சித்தமாகயிருந்தான்! அவளோ தனது உள் ளத்தையும் உயிரையும் அரங்கத்தம்மா னுக்கே அர்ப்பணித்திருந்தாள்.

'கல் கலீர்! கலீர்கல் கலீர்! கல்! கலீர்'

'யாரது? குமுதவல்லியா! அவளா, இப் படி பெருமாள் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்து, நம் முன்பு நிற்கிறாள்!

நடராஜ பாணியில் அல்லவா, தன்னை ஒப்பனை செய்திருக்கிறாள்! இடையில் புலித் தோலுக்குப் பதிலாக பொன்துகில்! கரங் களில் மானுக்கும் மழுவுக்கும் பதிலாக

பாஞ்சஜன்யமும் சுதர்சனமும்! தலையிலே கிரீடம்காலிலே சிலம்பு நெற்றியிலே திருமண் காப்புமார்பிலே செங்கழுநீர்மாலை!

அடடா! என்ன அற்புதமாக} ஜொலிக்கிறாள் குமுதவல்லி! இந்த வேடம் பிரமாதமாகப் பொருந்திருக்கிறது!

மத்தளத்தைத் தட்டினாள் ஒருத்தி. தாளத்தைக் கொட்டினாள் மற்றொருத்தி! பதத்தைப் பாடினாள் இன்னொருத்தி.

குமுதவல்லி ஆடினாள்! மீனைப்போல் துள்ளி மானைப் போல் தாவி, மின்னலைப் போல் நெளிந்து வில்லைப்போல் வளைந்து குழைந்து ஆடினாள்.

ஒரு கணம் இடது பாதத்தை தூக்கி ஆடினாள்! மறுகணம் வலது பாதத்தை தூக்கி, மாற்றி ஆடினாள்! பாடுகின்ற சொல்லிற்கு உருவத்தையும் பொருளையும் கண்முன்னே காட்டி ஆடினாள்!

குமுதவல்லியின் கால் சுழற்சியோடு தாளமும் மத்தளமும் போட்டி போட முடியவில்லை! பாடுகிறவளும் களைத்துப் போய் விட்டாள்.

எல்லாவற்றிக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? எதற்கும் ஒரு முடிவு இருக்கிறதல்லவா? கடைசியில், தொப்' பென்று பரகாலனின் பாதங்களில் விழுந்தாள் குமுதவல்லி.

அவளுக்குச் சிறிது நாழிகை வரைக்கும், மூச்சுமில்லை பேச்சுமில்லை! துளப தீர்த்தத்தை முகத்தில் தெளித்த பிறகு மயக்கம் தெளிந்தாள்,

"குமுதவல்லி, இதுவரைக்கும் இது மாதிரி ஓர் ஆட்டம் உண்டென்று, கேள்விப்பட்டது கூட இல்லை! பெருமாள் எப்போது உனக்கு இந்த நடனத்தை ஆடிக் காட்டினார்?

"ஸ்வாமி! சில மாதங்களுக்கு முன்பு, என் கனவில் வந்து ஆடிக்காட்டினார்; இந்த புவனத்தை ஆட்டிவிக்கும் குழல்நிற வண்ணன்!"

"என்றும், என் நெஞ்சிலே ஆடிக்கொண்டிருக்கும் நினைவை ஏற்படுத்திவிட்டாய் குமுதவல்லி!" உணர்ச்சிவயப்பட்டு பேச முடியாமல் தவித்தான் பரகாலன்.

அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு தாரை தாரையாக கண்ணீர் வடித்தாள் குமுதவல்லி! அவளுடைய பேச்சிலே அவலமும் வீரமும் கலந்த பரிமளித்தன. "பிரபு, என் கனவை நினைவாக்குங்கள்! எண்ணத்தை மண்ணாக்காமல், பொன்னாக்குங்கள்! திருவரங்க

தாம்பூலத்திற்கு சிறந்தது

ஏ. ஆர். ஆர். சீவல், கும்பகோணம்.

கோபுரத்தின் உச்சியிலே சுடர்விடும் விளக்காக எனது இதயத்தை ஆக்குங்கள்!"

"எனக்கு விபரம் புரியவில்லை! விளக்கமாகச் சொல்லு குமுதவல்லி!"

"திருவரங்கம் தங்களுக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும் குமுதவல்லி! திருவரங்கம், அரங்கனின் பொன்னரங்கம்! காவிரிக் கன்னியின் ஆடலரங்கம்! வைஷ்ணவர்களின் வைகுந்தம்!"

பெருமிதத்தால் விம்மினாள் குமுதவல்லி.

"நமக்கு வைகுண்டம் என்று சொல்லுங்கள்! நீங்களும் இப்போது வைஷ்ணவர் தானே! தங்களது வீரத் தோள்களிலே பொறிக்கப்பட்டுள்ள சங்கு சக்கர முத்திரைகளை ஒருமுறை பார்த்துக்கொள்ளுங்கள்!"

"சரி, குமுதவல்லி, நமக்கு திருவரங்கம் வைகுண்டம்! அதற்கு இப்போது என்ன வந்தது...?"

"இன்றைக்கு அந்த வைகுண்டம் இருக்கும் நிலைமை வாயால் சொல்ல முடியவில்லை! பெருங் காடாக இருக்கிறது! யானைகளும், புலிகளும், நரிகளும் உலவுகின்றன. மக்கள் குடியேற முடியவில்லை.

"அதற்கு, நாம் என்ன செய்ய முடியும்?" பரகாலன் குறுக்குக் கேள்வி கேட்டான்.

"காட்டை அழிக்கவேண்டும்! மிருகங்களை விரட்டவேண்டும்! பெரிய பெரிய மதிள் சுவர்களை கோயிலைச்சுற்றி எழுப்பவேண்டும்! மண்டபங்களைக் கட்டவேண்டும் – !" குமுதவல்லி மேலும் மேலும் என்னென்னவோ சொன்னாள்.

"ஆலயத் திருப்பணி புரிய, பொருள் வேண்டாமா குமுதவல்லி!" பரகாலன் பரிதாபக் குரலில் கேட்டான்,

"ஏன், தாங்கள் முயன்றால் முடியாததா?"

"நான் சிற்றரசன்; குறைந்த நிலத்திற்குச் சொந்தக்காரன்!"

"தாங்கள்தான், எனக்குப் பேரரசன்!" தங்களால் முடியுமென்று, நம்பித்தான் கூறினேன். தங்களுக்குக் கஷ்டமாக இருக்குமென்றால், என் கனவு கனவாகவே போகட்டும்! இந்த உடல் காவிரியில் மிதந்து வரும் வைஷ்ணவ முதலைகளுக்கு உணவாகட்டும்!"

பரகாலனின் கண்முன்னே, ஆயிரமாயிரம் மின்னல்கள் மின்னின! எண்ண இயலாத எண்ண மலர்கள் வெடித்தன! ஏதோ, ஒரு வித முடிவுக்கு வந்தவனாய் "இந்த வாட்டமும் வருத்தமும் எதற்கு குமுதவல்லி! உனக்கு பொன்தானே வேண்டும்! இன்னும் சில தினங்களில் தங்கக் கட்டிகளோடு வந்து. உன் கதவை தட்டுகிறேன்! சரிதானே; எங்கே இப்போது கொஞ்சம் சிரி- "நகை மலரை விரி!" அவளின் செங்கனி கன்னத்தில் லேசாகத் தட்டினான்.

குமுதவல்லி சிரித்தாள்! அந்தச் சிரிப்பில் சத்தமில்லை! ஏன் தெரியுமா? பரகாலனின் விரல்பட்ட ஸ்பரிசத்தால் சத்தத்தை நாணம் உண்டுவிட்டது.

மறுவினாடி, பரகாலன் அங்கு நிற்கவில்லை. தனது 'ஆடல்மா'வின் மீது அமர்ந்து, தட்டிவிட்டான். குதிரை வந்த வேகத்தை காட்டிலும், துரிதமாகப் பறந்தது. குமுதவல்லி, அவன் செல்லும் காட்சியை கண்கொட்டாமல் பார்த்து நின்றாள்.

2

பரகாலன், தூக்கம் பிடிக்காமல் உலவிக்கொண்டிருந்தான், எப்படிப் பொன் சேர்ப்பது? எவ்விதம் குமுதவல்லியின் ஆவலைத் தீர்ப்பது? அவளை, மணம் புரிந்து கொள்ளும் பேறு எப்போது கிட்டும்?"

"யாரங்கே.........?" கை தட்டினான் பரகாலன்.

மந்திரி மதிசேனரே வந்து நின்றார்.

"ஓ, நீங்களே வந்துவிட்டீர்களா? உங்களை அழைத்துவரச் சொல்லத்தான் ஏவல் கேட்போனை கூப்பிட்டேன்! நல்லது......! அரங்கனின் ஆலயத்திருப்பணிக்கு எவ்வளவு நிதி சேர்ந்திருக்கிறது? செல்வந்தர்கள் மூலம் கிடைத்த தொகை எவ்வளவு?"

மதிசேனர் பதில் சொல்லவில்லை. சிரம் தாழ்த்தி நின்றார்.

"ஏன் மந்திரி மௌனமாக நிற்கிறீர்கள்? என்ன நடந்து விட்டது, தயக்கமில்லாமல் கூறுங்கள்!"

புனித ஸ்னானம் செய்து, புத்தாடை உடுத்தி
மகிழ்ச்சியுற்றிருக்கும் உங்களுக்கு எங்கள்

தீபாவளி மங்கள வாழ்த்துக்கள்!

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R. S. **சேலம் ஜில்லா**
மானேஜிங் ஏஜண்ட்ஸ் : **சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்**

மணியம்

"மன்னிக்கவேண்டும் மன்னவா! தாங்கள் திருப்பணி செய்யப்போவதை மக்கள் விரும்பவில்லை.

"காரணம் என்ன?" பரகாலனின் கண்களில் கனல் பறந்தது,

"வைஷ்ணவக் கோயிலுக்கு பொருளுதவி புரிய மக்கள் மறுக்கிறார்கள்!"

"அப்படியா சேதி!" என்று அடித் தொண்டையைக் கிழித்துக்கொண்டு கேட்டான் பரகாலன்.

குமுதவல்லியிடம் கொடுத்த வாக்குறுதியை நினைத்துக்கொண்டவுடன் அவன் உள்ளம், மக்களின் போக்கால் குமுறி கொந்தளித்தது.

"இந்த அறிவுகெட்ட கூட்டத்திடமிருந்து பொருளை பெறுகிற வழி எனக்குத் தெரிந்து விட்டது! மருந்துக்கு கொம்பு கேட்டால் மான் தானாகத் தருமா? சிம்மத்தைப்போல் பரகாலன் கர்ஜித்தான்.

திருமங்கை மன்னனான பரகாலன் திருமணங்கொல்லை காட்டில் கூடாரம் அமைத்தான்! வழிப்பறி செய்யும் கொள்ளைக்காரனாக மாறினான்.

குழந்தைகள் என்று இரக்கம் காட்டவில்லை! குமரிகள் என்றும் விட்டுவிடவில்லை! வயோதிகர்கள் என்று வருத்தாமலில்லை!

அவனுக்கு வேண்டியது, பொன்—பொன்--பொன்! மூக்குப்பொட்டாக இருந்தாலும்



சரி! மாங்கல்யமாக இருந்தாலும் சரி! எல்லாம் அவனுக்கு ஒன்றுதான்.

பரகாலனின் மீது குற்றம் சாட்டிப் பயனில்லை! அவன் மனத்திலிருக்கும் குமுதவல்லி 'பொன் கட்டி வேண்டும்—பொன் கட்டி வேண்டும் என்று புலம்பிக்கொண்டிருந்தாள்! அவள் புன்சிரிப்பைக் காணவேண்டுமென்ற ஆவல், பரகாலனைக் கொடுமைக்காரனாக மாற்றியது.

ஒரு நாள்!

காட்டின் வழியே, தலைவிரி கோலத்துடன் ஒரு பெண்மணி வந்தாள், வடிக்கின்ற கண்ணீரோடு; வெடிக்கின்ற சொற்களோடு! அவளைக் கண்டவுடன் திகைத்துப் போய்விட்டான் பரகாலன்.

யாருக்காக, தீய வழிகளில் பொருள் சேர்க்கிறானோ, அவளே, அவன் கண் முன் வந்து நின்றாள்.

ஆமாம்; குமுதவல்லியேதான்! நா வறண்டது பரகாலனுக்கு! நிற்பவளை வெறித்து பார்த்தான்.

"எங்கே குமுதவல்லி, இப்படி வந்தாய்?"

"கொள்ளைக்காரனிடம் நகைகளை பறிகொடுப்பதற்காக வந்தேன்!"

"ஏன் இப்படி கோபமாகப் பேசுகிறாய்?"

"பின்னே, எவ்விதம் பேசவேண்டும்? உங்களை இந்த முறையிலா பொன் சேர்த்துக் கொண்டு வரச்சொன்னேன்?... அரங்கனின் ஆலயத் திருப்பணிக்கு, இந்த பாவப் பொருட்கள் வேண்டாம்! குருதியையும் உயிரையும் பலிகொண்டு பெற்ற பொன் கட்டிகள் வேண்டாம்!"

"தூய தொண்டிற்கு களங்கம் ஏற்பட நான் சகிக்க மாட்டேன்! என் அரங்கனும் பொறுக்க மாட்டான்--பொறுக்கவே மாட்டான்!" பொலபொலவென்று கண்ணீரை உகுத்தாள் குமுதவல்லி.

பரகாலனுக்கு 'குப்'பென்று வியர்த்து விட்டது! தான் செய்த செய்கைகள், எத்தகைய தவறுடையன என்பதை அப்போது தான் உணர்ந்தான்! அவன் உள்ளமும் உயிரும் உருகியது!

குரல் கம்மிப் பேசினான். "என்னை மன்னித்துவிடு குமுதவல்லி! பொன் வேண்டுமென்ற விருப்பத்தால், பிழை செய்துவிட்டேன். என் விழிக்கு இன்று ஒளி கொடுத்தாய்! வழிபறி செய்த பொருட்களை, திரும்பவும் உடமைக் காரர்களிடமே ஒப்படைத்து விடுகிறேன், நிச்சயமாக ஒப்படைத்து விடுகிறேன்."

பரகாலனின் பேச்சைக்கேட்டு குமுதவல்லியின் அழுத முகம், சிறிது மலர்ந்தது.

"குமுதவல்லி உன் கனவை நினைவாக்காமல் விடமாட்டேன். என்னை நம்பு! ஒருநாள், இல்லாவிட்டால் ஒருநாள், வெற்றிவேந்தனாக உன்னை வந்து சந்திப்பேன்.

குமுதவல்லி, பதிலொன்றும் உரைக்காமல், விடுவிடுவென்று போனாள்! பரகாலன் நீண்ட பெருமூச்சு விட்டான்,

பரகாலன் கொள்ளை கொண்ட பொருள்களை, மக்களிடமே வினியோகம் செய்து விட்டான்!' அவன் மனம் பெரிதும் சஞ்சலப்பட்டது. குமுதவல்லியை இந்த ஜென்மத்தில் அடைய முடியாது என்று எண்ணி, தற்கொலைசெய்துகொள்ள உத்தேசித்தான்.

விபரமறிந்த மந்திரி மதிசேனர் திடுக்கிட்டார்! பொன் கிடைக்கும் மார்க்கத்தை பரகாலனுக்கு காட்டினார்.

பரகாலனுக்கு புதிய தெம்பும் நம்பிக்கையும் ஏற்பட்டது! போதிய ஆட்களுடன் பொன் வேட்டைக்குப் புறப்பட்டான்.

சில வாரங்கள் சென்றன! ஒரு நள்ளிரவு வானத்தை பொத்துக்கொண்டு மழை கொட்டியது. மின்னற்கொடிகள், பாய்ந்து, மரங்கள் தீப்பற்றி எரிந்தன! இடிகள் பொடிபட்டன! விலங்குகள் பயந்து தறிகெட்டு ஓடின!

இவ்விதம் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்த வேளையிலும், குமுதவல்லி பரகாலன் வருவான் வருவான் என்று வழி பார்த்துக்கொண்டிருந்தாள்!

குமுதவல்லியின் ஏக்கத்தை போக்க திடுதிடுப்பென்று அங்கு தோன்றினான் பரகாலன்! அதிசயமும் ஆனந்தமும் பட்டாள் குமுதவல்லி!

"என்ன குமுதவல்லி, என்னைப் பேந்த பேந்த பார்க்கிறாய்! பேசாமடந்தையாகப் போய் விட்டாயோ! அல்லது இது குமுதவல்லியின் சிலையோ!"

"தங்களை இந்த நிலையில் பார்த்தவுடன் என்னால் பேசவே முடியவில்லை! எதற்காக இந்த மழையில் வந்தீர்கள்! உள்ளே சென்று நனைந்த ஆடைகளைக் களையுங்கள்!"

"அதெற்கெல்லாம் இப்போது நேரமில்லை குமுதவல்லி! இந்தப் பெட்டியை திறந்து பார்! அத்தனையும் தங்கக் கட்டிகள்! உன் இஷ்டப் பிரகாரம் திருப்பணிக்குச் செல விடலாம்."

"நிஜமாக, அத்தனையும் பொன் கட்டி களா?" பரபரப்போடு கேட்டாள்.

"ஆமாம் குமுதவல்லி ஆமாம்! உன் தமையனை வேண்டுமானாலும் சோதித்து பார்க்கச் சொல்!

குமுதவல்லி சொல்லாமலே, மதனன் ஒவ் வொரு கட்டியாக உரைத்துப் பார்த்தான். முடிவில், அத்தனை தங்கம் தங்கம் என்று குதித்தான்!

குமுதவல்லி பரகாலனின் கைகளைப்பற்றிக் கொண்டு, "ஏது இவ்வளவு பொன்கட்டி கள்? எங்கேயாவது புதையல் எடுத்தீர் களா?" என்று கேட்டு கொஞ்சிக் கூத்தாடி னாள்! அவளால் உள்ளத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

"ஆமாம் குமுதவல்லி! புதையல்தான் கிடைத்தது! அப்பப்பா! அதற்காக நான் பட்டிருக்கும் பாடுகள்......ச் சுச்சு !" பொன் கிடைத்த விபரத்தை கூருமல் குமுதவல்லி யிடம் மழுப்பினான்.

அவளிடம் அவன் உண்மையை கூருமல் மழுப்பினாலும் நாம் அப்படி மழுப்ப முடியுமா?

மந்திரி மதிசேனரின் யோசனைப்படி பரகா லன் 'நாகபட்டணத்'திற்கு வந்து சேர்ந்தான். அங்கே பிர்மாண்டமான புத்தவிஹாரத்தில் பொன்னாற்செய்த புத்த விக்ரகம் இருந்தது!

பரகாலன் தங்க விக்ரகத்தைக் கண்ட வுடன், துள்ளிக் குதித்தான் ஆனந்தத்தால்! அதிலுள்ள இன்னல்களை அறிந்தவுடன் குழம்பித் தவித்தான் இன்னது செய்வ தென்று தெரியாமல்!

புத்தரின் பின்புறமுள்ள தர்ம சக்கரம் காந் தத்தால் ஆனது! எப்போதும் நிற்காமல் நில்லாமல் சுழன்று கொண்டே இருக்கும்! அருகில் சென்ருல் ஆளையே கபளீகரம் செய்துவிடும்!

காந்த சக்கரத்தை நிறுத்தினால், தங்க விக் ரகத்தை எடுத்துவிடலாம்! எவ்விதம் சுழ லும் சக்கரத்தை நிறுத்துவது!

பரகாலனுக்கு கண்ணிற்கு எட்டுவது கைக்கு எட்டாமல் போய்விடும் போலிருந் தது! தலையை போட்டு உடைத்துக்கொண் டான்! ஒரு யோசனையும் அவனுக்கு

நவீன காலத்தின்
மிகச் சிறந்த பரிசு

"அத்தர் மஜ்மூஆ"

நெடுங்காலம் தங்கும்
நெகிழ்ச்சி தரும் நறுமணம்
எப்பருவத்திற்கும் ஏற்றது

அத்தர் மஜ்மூஆ
எல்லா பருவ காலங் களுக்கும் உகந்தது. இந்தியாவிலுள்ள மற்ற தைலங் கள், வாசனதிகளை விட நெடுங்காலம் நறுமணம் செறிந்து விளங்குவது.

மேல்நாட்டு வாசனதிகளும், அகர்பத்திகளும் எங்களிடம் கிடைக்கும்.

ரிஜிஸ்தர் நெ. 3918

H. M. ஜாகரீயா & பிரதர்ஸ்
வாசனதிகள் தயாரிப்பாளர்கள்
பம்பாய் - 3

ஆங்கிலத்திலாவது இந்தியிலாவது
கடிதப் போக்குவரத்து
செய்யவும்.

உதயமாகவில்லை! கடைசியில் புத்தனிடமே பிரார்த்தித்தான்.

"சித்தார்த்தனே! உம்மையும் திருமாலின் அவதாரமாகவே நான் மதிக்கிறேன். சமுத்ரக் கரையிலுள்ள இந்த இடம், என்றைக் காவது ஒரு நாள் சமுத்திரத்தோடு ஐக்கிய மாகிவிடும்! இந்த விக்ரகத்தின் உருவும் திருவும் மறைந்துவிடும்!"

"நான், அழிவில்லாத காரியத்திற்கு தங்க விக்ரகத்தை பயன்படுத்த போகிறேன்! என் விருப்பத்தை தாங்களும் விரும்பினால் எனக்கொரு வழிபுலப்பட வழிசெய்யுங்கள்!"

பரகாலனின் செயலை, புத்தபிரானும் ஆதரிக்கிறார் போலிருக்கிறது! இல்லாவிட்டால் அவனது உள்ளத்தில் இப்படியோரு விசித்திர யூகம் தோன்றி இருக்குமா?

வாழை மரங்களை வெட்டிக்கொண்டு வந்தான். இலைகளை கொய்து விட்டு, பட்டைகளை ஒவ்வொன்ருக சுழலும் சக்கரத்திதுள்ளே பரகாலன், தூக்கிவிட்டெறிந்தான்,

சக்கரத்தின் வேகம் சிறிது சிறிதாக குறைந்து கொண்டே வந்தது! வாழைமட்டைகள் நன்ருக சிக்கிக் கொண்டதால் முடிவில் காந்த சக்கரமே நின்றது.

இரவோடு இரவாக, தங்க விக்ரகத்தை எடுத்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தான். சிலையை உருக்கி, பொன்கட்டிகளாக மாற்றிஞன்! மறு விநாடி, குமுதவல்லியை வந்து சந்தித்தான்.

மதனன், மாற்றுடைகளை கொண்டுவந்து கொடுத்தான் பரகாலனிடம்! குமுதவல்லி, தன்னை புது மணப் பெண்ணுக அலங்கரித்துக் கொண்டாள்!

அந்த நள்ளிரவில், மழை நாதஸ்வரம் ஊத, மேகங்கள் மேளம் கொட்ட பரகாலன் குமுதவல்லியின் கழுத்தில் திருவை அணிவித்தான்! மங்கை மன்னனின் திருமணம் ஓலைக் குடிசையில் நடந்தேறியது,

திருவரங்கத்தில், குமுதவல்லியுடனும் மதனனுடனும் வந்து தங்கினுன் பரகாலன்.

நாடு முழுதுமிருந்து, சிற்பிகளும், கற்தச்சர்களும், கொத்தர்களும், பணியாட்களும் வந்து குவிந்தனர்.

கோயிலைச் சுற்றி, மண்டபங்கள் எழும்பின, கோபுரங்கள் உயர்ந்தன! வட திருக்காவேரிக்கு புதுத் துறைகள் அமைக்கப்பட்டன; குளங்கள் வெட்டப்பட்டன. செங்கழுநீரும் தாமரைகளும் வளர்க்கப்பட்டன! நெடிதுயர்ந்த மாமதில்கள் கட்டப்பெற்றன. வாகனங்கள்—ஆபரணங்கள் எல்லாமே புதிதாக பெருமாளுக்கு செய்யப்பெற்றன. பெரியகோயில் என்ற பெயருக்கேற்ப பெரிய கோயிலாகவே திகழ்ந்தது!

விண்ணகத்து வைகுண்டம் என்பதுவும் இதுதானே! கண்படைத்தோர் காணுகின்ற பெருநகரமும் இதுதானே!

பரகாலன் தனது சாமர்த்தியத்தாலும், திறமையினுலும், ஆலயத் திருப்பணியைச் செய்து முடித்தான்! குமுதவல்லி பூரித்து போனுள்!

அவளுக்கு அடிக்கடி உடம்புக்கு ஏதாவது வந்தது! மூச்சு விடமுடியாமல் திணறிஞள்! உடம்பு, பெரிதும் பலஹீனப் பட்டுவிட்டது! எப்படியோ, ஜென்மம் எடுத்ததன், கடமையைச் செய்து முடித்து விட்டாள்!

பரகாலனும் குமுதவல்லியும் அன்று திருமணம் புரிந்து கொண்டார்களே தவிர, இன்று வரைக்கும் இருவரும் மண்ணுலக இன்ப சுகத்தை அடையவில்லை.

வாடிப் போன மலர்மாலையைப் போல் குமுதவல்லி படுத்துக் கிடந்தாள்! அவள் முக முழுதும் களி யொளி வீசியது!

அவளருகில் ஆசைப் பெருக்கோடு பரகாலன் வந்து, அமர்ந்தான்!

"குமுதவல்லி, உன் கனவை நினைவாக்கி விட்டேன்! உன் எண்ணத்தை பொன்ஞக்கி, காட்டிவிட்டேன்! இனியும் நாம் இல்லற வாழ்வில் ஈடுபட எதுவும் தடையில்லை அல்லவா?"

"இல்லை ஸ்வாமி! ஆனுல்--! பெருமூச் சொன்று வெளிப்பட்டது.

"ஏன், இந்த தயக்கம்--?" பரகாலனின் குரலில் கரகரப்பு தெரிந்தது.

"தங்களை சிற்றின்பத்தில் ஈடுபடுத்தி, சாதாரண மனிதனுக்க நான் விரும்பவில்லை! நிலவுலகில் என்றும் நிலைத்து நிற்க கூடிய தேவ கைங்கரியத்தை தாங்கள் செய்து முடித்தீர்கள்!

"இம்மாதிரியே. தங்கள் புகழும், இந்த மண்ணும் விண்ணும் உள்ளளவும் நிலைத்து நிற்க ஆசைப்படுகிறேன்!" அதற்குள் குமுதவல்லியை இருமல் பிடித்து தொல்லைப்படுத்தியது! மூச்சுவிடத் திணறிஞள்.

பரகாலன் திடுக்குற்று வேதனைக் குரலில், "என்னை, என்னதான் செய்யச் சொல்லுகிருய் குமுதவல்லி?" என்று கேட்டான்.

"ஆசை, பாசம், குரோதம், காமம் இவைகளையே மாறி மாறி அனுபவித்து, பிறந்து பிறந்து இறந்து படுகிற மனித ஜென்மம் வேண்டாம்! பெருமாளின் திருவடித்தாமரையை பற்ற, பேரின்பப் பாதையை நோக்கிச் செல்லுங்கள்! தேவலோக வாசியாக மாற, அதுவே சிறந்த வழி!" குமுதவல்லிக்கு என்னவோ செய்வது போலிருந்தது.

"அப்படியானால் நீ.. ?" பரகாலன் அழுதே விட்டான்.

"நான் வந்த காரியம் முடிந்துவிட்டது ஸ்வாமி! இன்றிரவுக்குள் என்னை, அரங்கன் தனது பாதாரவிந்தங்களில் சரண்புக அழைத்துக் கொள்ளப் போகிறான்!...அப்பப்பா! இப்போது, எவ்வளவு இன்பமாக இருக்கிறது தெரியுமா! ... உம் ... கொஞ்சம் கீதையை எடுத்து வாசியுங்கள்!"

குமுதவல்லியின் முகம் அழகாக விளங்கியது.

பரகாலனின் கண்களில் நீர் தத்தளித்தது! இதுவரைக்கும் அழுதறியாத வாய், அழுதது! சோகமும் துயரமும் அவனை வந்து ஒட்டிக் கொண்டன.

பரகாலன் கீதையைப் படித்தான். ஸ்லோகத்தை கேட்டுக் கேட்டு குமுதவல்லி பரவசப் பட்டாள். அவளுக்குச் சொல்ல இயலாத பேரின்பம்! ஆசைக் கனவுகள் பலித்து விட்டால், யாருக்குத்தான் மகிழ்வு இருக்காது!

விடியற்காலைப் பொழுது! அரங்கன் உபய நாச்சிமாரோடு வந்து, குமுதவல்லியின் கண்களுக்கு காட்சி கொடுத்தான்! மறு விநாடி, குமுதவல்லி தனது குமுத விழிகளை மூடிக் கொண்டாள்.

எங்கிருந்தோ, மரத்திலிருந்து பழுத்த தென்னை மட்டை விழும் ஓசை கேட்டது!

பரகாலன் அழவில்லை! அவன் எதற்காக அழவேண்டும்? ஏன் அழவேண்டும்? மனைவி...மண்.. பொன் முதலிய ஆசைகளை துறந்துவிட்ட துறவி அவன்! பாசத்தையும் பற்றையும் விட்டுவிட்ட வைஷ்ணவத் தொண்டன் அவன்! இனி, அவன் நினைவெல்லாம் தெய்வ கைங்கரியந்தான்!

திருப்பள்ளியெழுச்சியை அறிவிக்க ஆலயத்துமணி 'டணார் டணார்' என்று முழங்குகிறதே, உன் காதுகளில் விழவில்லையா?

பரகாலா, புறப்படு! உனக்கு இனிமேல் எதற்கு இந்த கூர்வாளும் கொலைக் கருவிகளும்? வேண்டாம் இவைகள்!

பனையோலையையும் எழுத்தாணியையும் எடு!... அதோ அரங்கத்தம்மான் உன்னை அழைக்கின்றான்! போ..! வாஞ்சையோடு அழைக்கிறான், ஐந்துதலை அரவின்மீது அயர்ந்து கிடப்பவன்!

தக்க தருணம் வந்து விட்டது! தாமதம் செய்யாதே! அவன் புகழ்பாடப் போ... போ...! திரும்பிப் பார்க்காமல் வேகமாக போ...!

திருவரங்கம் பெரிய கோயிலின் கர்ப்பகிரகக் கதவுகள் சாத்தப் பட்டிருந்தன, காமதேனுவான கறவைப் பசு நின்றது, 'தட்டொளி' ஏந்தி நின்றனர் சிலர்! மலர் மாலை ஏந்தி நின்றனர் பலர்! வீணை மெல்ல அதிர்ந்து கொண்டிருந்தது.

பரகாலன் அங்கு வருவதற்கும் திருப்பள்ளியெழுச்சி நடைபெறுவதற்கும் சரியாக இருந்தது! பள்ளி யெழுச்சிப் பாட அவன் வரவில்லை! பரந்தாமனை பள்ளி யெழுப்ப நாம் யார் என்ற நினைப்பு அவனுக்கு!

திருமங்கை மன்னனான பரகாலன் தான் இதயத்து அஞ்சலியை சங்க முத்தமிழிலே குழைத்துப் பாடினான்! உள்ளம் உருக ஊனெல்லாம் நெக்குருகப் பாடினான்!

பக்தன் எழுச்சி பெற்று விட்டான். அதனால் பகவான் உறங்கிக் கொண்டருந்தார்! உறங்கிக் கொண்டிருந்தாராவது? உறங்குவதுபோல் பாசாங்கு செய்தார்!

எதற்கு இந்த பாசாங்கோ? எல்லாம் திருமங்கை மன்னனின் ஐம்பது அமுத பாடல்களையும் கேட்பதற்காகத்தான்!



வளையல்

மாலதி தூரத்திலே வளையல்காரனைப் பார்த்துவிட்டாள். மாடி அறையினின்று வெள்ளம்போல் இழிந்து வந்தாள்.

"இன்னும் நாலு நாளிலே கண்ணாலம் ஆகப்போறப் பொண்ணு — ஒன்னு இருக்குதா பாரேன்! என்று பாட்டி நொடித்தாள்.

"என்னமோ, பாட்டியாகவே பொறந்தாட்ட மாதிரி! உங்க காலத்திலே நீங்க எத்தனைகுதிபோட்டிருப்பீங்க?" என்றுசொல்லிக் கொண்டே பேத்தி "ரங்கய்யாவர்றான் பாட்டி, ரங்கய்யன்!" என்றாள் கும்மாளத்தோடு.

அந்த ரங்கய்யாவிடந்தான் பேத்தி கலியாண வளையல் அணிய வேண்டும் என்று பாட்டிக்கு.

ரங்கய்யன் கைராசிப் பேர்வழி. அவனிடம் வளையல் அணிந்துகொண்டால், வாழ்விலே வளமை தவழும், பசுமை கொஞ்சும், மங்களம் குலவும் என்று ஊர்வாசிகளுக்கு ஒரு நம்பிக்கை.

கன்னிப் பெண்கள், அவனிடம் அணிந்துகொண்டால் சீக்கிரம் கலியாணம் ஆகும் என்று சூழ்வார்கள். இப்படி எப்போதும் அவனுக்கு கிராக்கி அதிகம். ஆனால், அவன் தான் வணங்கி வியாபாரம் செய்பவன் அல்ல!

"சீ! இதென்ன? பெட்டியைத் தூக்கிக்கிட்டு — ஊர் ஊராக அலைஞ்சிக்கிட்டு—வெயிலிலே? என்று ரங்கன்

காரன்

சலித்துக் கொள்ளும்போது பார்க்கவேண்டும். ஒரு படி விளக்கெண்ணெய் விழுங்கிய வன் முகம்கூட கோணாது அப்படி.

அவனுடைய தந்தைக்கும் அவனுக்கும் இப்படி எப்போதும் — ஏதாவது வாதமும்,

தர்க்கமும், சண்டையுந்தான்! பையன் காளையாக வளர்ந்து விட்டானே! பூரிக்கிறோமே! என்ன பலன்? என்று அவர் சலித்துக் கொள்ளுவார். அவனோ ஊர் மேய்ந்து கொண்டு திரிந்தான்! பையன் பலே மைனர்!

காளையாக வளர்ந்து விட்டோமே? வாழ்க்கை நுகத்தடியை அப்பாவோடு சற்று சுமப்போமே? என்று கனவிலும் அவன் கருதியது கிடையாது.

மைனர்தான்! ஒருவிதத்தில் நல்லதே! இவனிடம் போய் பரம்பரை வியாபாரத்தைஒப்படைப்பதா? எத்தனை வண்ண மலர்க் கரங்களைப் பற்றி, நீவி வளைய விட வேண்டும்? ச்சே!

இதயன்

குலத் தொழிலே கௌரதை குறைந்து விடாதா. இந்த முட்டாளாலே? வளையல் வியாபாரிகளுக்கு இப்படி ஒரு தலையிறக்கமா? என்று பிள்ளை போக்கை உணர்ந்து தந்தை வாளா இருந்து விட்டார்.

“நாயுடுகாருவுக்கு ஏக கவலே! பையன், வயசு! நாளைக்கி பொறுப்பு தெரிஞ்சு, அவன் உங்கபேரை கொண்டு வராட்டி பாருமே?”

“ஓய் காக்காவும் குஞ்சும் பறக்கையிலே தெரியும், ஓய்!”

“சவால் மாமா! இந்த மீசையை நான் எடுத்துடறேன்! அவன் தங்கம் தங்கந்தான்! என்னமோ சேருவாரோட சேர்ந்து... கூடு வாரோட கூடி..” என்று ரங்கனுடைய மாமா அவனுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினர்.

இதுதான் வேளை என்று, நின்ற காலில் நின்று, அவர் மகள் ரத்தினும்பாளை திருவளர் செல்வன் ரங்கய்யாவுக்கு முடித்து வைத்து விட்டாள் தாயார். ஒரு சமாதானத்துக்குப் புகழப்போயி இப்படி ஒரு நிரப்பந்தம் வந்து தொலைக்குமா? என்று அந்த மாமன் வருத்த மான வருத்தப்பட்டார்.

ரங்கய்யாவுக்கு காலாகாலத்திலே ரத்தி னுவை கொண்டு வந்து கால்கட்டுப் போட்டு விட்டதில் எல்லாம் ஒழுங்காகி விட்டது. ரங்கனுடைய மேய்ச்சல் நின்று விட்டது. பெண்ணை தாரை வார்த்தவர்களும் ஆயாசம் தீர்ந்தனர். அப்பாவோடு பாரத்தைச் சுமக்க தயங்கின பிள்ளை, இப்போது பெண்டாட்டி யோடு நுகத்தடியை சுமக்க முன் வந்துவிட் டது! பெண்—ரத்னு ரத்தினந்தான்! சூரி!

ரங்கய்யா வளையல் பெட்டியை தூக்கிக் கொண்டான். வளையல்கள் நிறைந்த கயிறு குஞ்சலத்தை இருபுறமும் வழிய தோளில் போட்டுக் கொண்டான். விவேகானந்தர் மாதிரி தலையிலே தலைப்பாகைக் கட்டு, வெய் யில், மழையை அவன் கவனிக்கவில்லை, புறப் பட்டு விடுவான் வியாபாரத்துக்கு.

பெரியகடை சதுக்கத்தில் ஒரு கடை அமர்த்திக்கொண்டு அக்கடாவென்று குந்தி விடவேண்டும் என்ற லட்சியத்தை நோக்கி ரங்கன் நடை போட்டபடி இருந்தான்.

பட்டு வளையல் ... பம்பாய் வளையல் ... அரக்கு வளையல் ... அழகு வளையல்... பூ வளையல் ... தந்த வளையல் ... வளையல் வாங்கலியா— வளையல்!” என்று அவன் குரல் அதோ வீதியில் ஒலிக்கிறது. ஓடோடி வந்து மாலதி, “ரங்கய்யா!” என்று அழைத்தாள்.

ரங்கய்யாவை மாலதிக்கு வெகு நாளாகத் தெரியும். இன்று அவளை ரங்கன் பார்க்கை யில் ‘மாலதியா இது?’ என்று அப்படியே அசையாது நின்றுவிட்டான்.

அவன் வியாபாரம் தூக்கித் திரிந்த தொடக் கத்தில் அந்த பெண் ‘இவ்வளவுண்டு’ கிடந் தாள். இன்றோ? ... ... ‘கொசு மொய்த்த கன்னியை குமரியிலே பாருடா! என்று அவ னுடைய மாமா அடிக்கடி கூறும் பழமொழி தான் அவன் நினைவுக்கு வந்தது. ஒரு கணம் அப்படியே அவன் மெய்மறந்து போனுன்! ச்சே! இதென்ன? நம்ப வியாபாரத்துக்கே வினை!’ என்றுகூட நினைத்தான் அவன்...... வந்து, என்ன எண்ணம் ஓடுகிறது பாழும் நெஞ்சில்! அந்த வளையல்காரனுக்கு நிமிடத் துக்கு நிமிடம் நெஞ்சம் வசம் பிறழ்ந்தது. அதுபோலவே அங்கு எண்ணற்ற வளை யல்கள் ‘பட் பட்’ டென்று துண்டு துண்டா யின! —அவளது கொழுவிய பூங்கரங்களைப் பற்றி வளையல் அணிவிக்கையில், “திருஷ்டி அம்மா!” என்று உளறி கொட்டினுன்.

ஆமாம் அப்பா! நாளை புதன்கிழமை -- கலியாணம்!” என்றுள் பாட்டியும் தாயாரும்.

நெஞ்சம் ஒருகணம் துணுக்குற்றது ரங்க னுக்கு! எத்தனையோ மலர்க்கரங்களைப்பற்றி பிடித்து, நீவிய அவனுக்கு இன்று என் னமோ பெரிய சோதனை. வியர்த்துக்கூட போய்விட்டது. “இடாமலேயே போய்விட லாமா?” என்றுகூட ஒரு பலவீனம் கிளர்ச்சி யில் அவனுக்குத் தோன்றிவிட்டது.

“உடையறதுக்கெல்லாம் நான் காசு தந் தூடறேன்” என்று தாய் ஒருபுறம்,

கிராம தேவதையை ‘அசலாம்பிகா தேவி’ என்று நினைத்துக் கொண்டான் ரங்கன். எப்படியோ அணிந்துவிட்டான் வளையல்களை. அன்று அவனுக்கு நஷ்டமான வளையல்கள் அவன் வரலாறிலேயே கிடையாது.

மாலதி ஒயிலாக வளையல் குலுங்கும் கர அழகை ஒருமுறை பார்த்துவிட்டு, பீடக் காலே கழற்றி, எழுந்து நின்று, வளையலே விழுந்து வணங்கினுள். “மஞ்சள் குங்குமத் தோடு தீர்க்க சுமங்கலியா, பதினறும் பெத்து பெருவாழ்வு வாழணும் தாயி!” என்று வாழ்த்தினுன் வளையல்காரன்; என் றுமில்லாமல், என்றும்போல அவன் குரல் கம்பீர மாக ஒலிக்கவில்லை.

காலத்தின் வயிற்றில் பின்னும் பத்து ஆண் டுகள் பிறப்பெடுத்து மறைந்தன. எவ்வ ளவோ மாற்றம் உலகில்! குப்பை கோபுர மாகிவிட்டது! கோபுரம் குப்பையாகி விட் டது! வளையல்கார ரங்கன் முதலாளியாகி விட்டான். அவன் கடை, பெரிய கடை சதுக் கத்தில் நியான் ஒளி வீசி பலரை அழைக்கி றது! மாலதி...? இதோ நிற்கிருள்...முதலாளி

'புக் பண்ணி வந்து விட்ட சேதியை, கடை குமாஸ்தா' பெயர் சகாதேவன் — அன்று பகலிலேயே வந்து முதலாளியிடம் தெரிவித்து விட்டான். 'பெங்களூர் சரக்கு! ஜோக்கா இருக்கா!' என்று வர்ணித்தான்.

வருகைக்கு—சற்று நேரம் வாடகை மனைவியாக இருக்க! என்ன மாற்றங்கள் நிகழ்கின்றன ஐயா, என்ன மாற்றங்கள் நிகழ்கின்றன!

பண வசதி ஏற்பட ஏற்பட, மனிதனுக்கு ஏதாவது ஒரு தீய அம்சம் குடியேறியாக வேண்டும் என்பது நியதி போலும்! ரங்கய்ய நாயுடுகாருக்கு (இப்போது முதலாளியல்லவா, ஆகவே நாயுடுகாரு!) அப்படி ஒன்றும் புதிதாக வந்து குடியேறவில்லை! அடங்கிக்கிடந்த பழையதே இப்போது வந்து ஒட்டிக்கொண்டுவிட்டது. பழையபடியே அவர் மைனர் ஆகிவிட்டார், வீட்டிலே ரத்தினா ஐந்தும்பெற்றும் 'போஷாக்காகத்தான்' இருந்தாள், 'அதெல்லாம் 'சர்வீஸ்' ஆகிவிட்டது!' என்றார் முதலாளி! சொல்லமாட்டாரா? பணக்கொழுப்பு ஆயிற்றே!

பத்து மணி இரவு! மைனர் கோலத்தில் உள்ளே நுழைகிறார் ரங்கய்ய முதலாளி. அறை, சோபன அறையாக காட்சியளிக்கிறது. அவர் நுழைவை, அத்தர் வாசனை முன்னாடி சென்று, மாலதியிடம் கட்டியம் கூறுகிறது!

நுழைந்தவர் அப்படியே பாம்பை மிதித்து விட்டவர் மாதிரி நின்றுவிட்டார். மாலதியும் அப்படியே! மறுகணம் வலுவில் ஒரு புன்சிரிப்பை சிந்தினாள், வையம் கிறங்கியது! ஆனால் வந்தவரோ மசியவில்லை, வந்தபடியே வெளியேறிவிட்டார்!

"அன்று.... அன்று.... இவளைக் கண்டு கும்மாளித்த மனமா இது—இப்படி இன்று பின் வாங்குகிறது?" என்று அவர் நினைத்தார்.

என்றாலும், அந்த மனம் இன்று பிறழவில்லை! வெகு சாதாரணமாக அவர் சென்றுவிட்டார்.

மறுநாள் காலையில் மீண்டும் அவர் அந்த அறைக்கு வந்தார்! தரையில் படுத்தபடி விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள், மாலதி. ஆம்! மாலதி விழுந்தே விட்டவள் தான்! ஆம்! விழுந்து போனவளை தூக்க வந்தேன்!" என்பதுபோல ரங்கய்யா அவளை தொட்டுத் தூக்கி நிறுத்தினார். அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது.

'சர்வர்' ஒருவன் காப்பி டிபன் செட்டை கொண்டு வந்து அறையில் வைத்துவிட்டுப் போனான். அவன் சென்றதும் முதலாளி கதவை தாளிட்டார், "உன்னை நான் 'மஞ்சளும் குங்குமமோடு தீர்க்க சுமங்கலியா...' என்று வாழ்த்தவில்லையா? நன்றாக கவனமிருக்கிறது!" என்றார்.

"அது பொய்த்து விட்டது!" என்று அழுதாள் மாலதி. பலமுறை இப்படி அவள் உருகி நெஞ்சம் வெடித்து அழுதாள்—புலம்பி.

"இதுவரையில் அப்படிதான். இனி அப்படி பொய்க்காது" என்றார் முதலாளி.

தன்னை அங்கீகரிக்க அவர் தயங்கவில்லை என்று மகிழ்ந்தாள் மாலதி. கண்களைத் துடைத்துக்கொண்டு ரங்கய்யாவை நன்றி சுரக்க ஒரு பார்வை பார்த்தாள்.

"உனக்கு இந்த நரகத்திலிருந்து விடுபட ஆசையில்லையா?"

"ஆசை இல்லையா?" அவர் வினாவே அவருக்கு விடையாக கிடைத்தது. அதில்தான் எத்தனை ஆர்வம் தொனித்தது?

"அப்படியானால்...... பொய்யாகிப் போன எனது வாழ்த்தை, இன்றுமுதல் மெய்யாக்கி வைக்கிறேன் பார்!"

பூரித்தாள் பாவை! அவர் தன்னை கலியாணம் செய்துகொண்டு, நிரந்தரமாக, மனைவி என்ற நிலையில் வைத்திருக்க விரும்புகிறார் போலும்! என்று மகிழ்ந்தாள் மாலதி.

"மாலதி......... இதுதானே உன் பெயர்? எனக்கு நன்றாக கவனமிருக்கிறது... உனக்கு நேர்ந்துவிட்ட கசப்பான வாழ்க்கையை நான் ஒன்றும் கேட்கப் போவதில்லை; நீயும் சொல்லவும் வேண்டாம்! நீ விரும்பினால், சென்றது கனவுபோல் மறைந்துவிடும்! கௌரவமாக நல்வாழ்வு வாழலாம்!"

"என் அதிர்ஷ்டம் இது! ஆனால் ஒரு கண்டிஷன்! நாலுபேர் அறிய நீங்கள் என்னை மணம் புரிந்து கொள்ளவேண்டும்" என்று மாலதி கேட்டே கேட்டு விட்டாள்.

முதலாளி சிரித்து விட்டார், எனினும் அவர் கண்களில் நீர் வழிந்தது. "பெண்ணே! ஒரு காலத்தில் உனக்கு நான் வளையல் அணிவித்து வாழ்த்தியவன். இன்று கூறுகிறேன்: அன்று அதை என்னால் அணிவிக்கவே முடியவில்லை இப்படி ஒரு 'வேளை' வந்து நேருமே என்றுதானோ என்னவோ? உனது மெத்தென்றிருந்த கொழுவிய கரங்களைப் பற்றுகையிலேயே அன்று நான் கட்டுக் கடங்கா உணர்ச்சி பரவசம் கொண்டேன். அன்று எனக்கு நல்ல சோதனை—வாழ்நாளிலேயே! அவ்வளவு ஆசை பொங்கியது. இன்று? இன்றோ—இதோ நீ என் எதிரில்! என்றாலும், எனக்குதான் பசியே இல்லை! என்று நான், உனக்கு என் கையால் வளையவிட்டேனோ, அன்றே நீ எனக்கு உடன் பிறப்பாகிவிட்டாய். உனக்குத் தெரியாது வளையல்காராகள் குல ஒழுக்கம்- அவர்கள் பெருமை! உனக்கு விளக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், ஒன்று சொல்லுகிறேன். வளையல்காரர்களாகிய நாங்கள் இன்றைக்குக் கூட எங்கள் மனைவிமார்களுக்கு வளையல் அணிவிப்பதில்லை: அணிவிக்க மாட்டோம். அப்படி ஒரு நியதி உண்டு எங்களிடம். அப்படி அணிந்துவிட்டால், அவள சகோதரியாகி விடுவாள், மாலதி! மாலதி!! நீயும் என் சகோதரியாகிவிட்டாய் என்றோ! என்றும் நான் அந்த குல வழக்கத்தை மீறேன்! புரிந்து கொண்டாயா? இனியாவது என் வார்த்தைக்கு வேறு அர்த்தம் கற்பித்துக்கொள்ளாமல் பேசு..."

மாலதி உள்ளம் நெகிழ்ந்து போனாள். தடாலென்று அவன் காலடியில் விழுந்து, "மன்னிப்பீர்களா? என்னை மன்னிப்பீர்களா? அண்ணா?" என்று கதறினாள்.

"நீயல்லவா என்னை மன்னிக்கவேண்டும்—கடையனை?" என்று அந்த நல்ல அண்ணன் அவளுக்கு நல்லாசி வழங்கி, தூக்கி நிறுத்தினான்... இனி மாலதிக்கு என்ன குறை?

CHALASA INDUSTRIES

KUMBAKONAM

Plastic Manufacturers & Electrical Contractors

FOR

Municipalities & Panchayat Boards.

—(0)—

CHALASA AGENCIES

KUMBAKONAM

DISTRIBUTORS:

BRITANNIA BISCUITS

SUB-DISTRIBUTORS:

Jhonson & Jhonson Products

Ortho Pharmaceuticals

STOCKISTS:

The Ramaraja Surgical Cotton Mills Limited,

RAJAPALAYAM

எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்!

பண்டிகைகளில் சிறந்தது

தீபாவளி

பட்டாசுகளில் சிறந்தது

TRADE MARK

S.F.F. KMU.

மான் மார்க்

பட்டாசுகளே!

தயாரிப்பாளர்கள்:

சுந்தரம் பயர் ஒர்க்ஸ் பாக்டரி

கும்பகோணம்

பாரதத்தில் தலை சிறந்து விளங்கும் எங்கள்
பட்டாஸ்வெடி; சுருட்டுவெடி; நரகாசுரன் வெடி;
ஸ்வான் பேளு வெடி; தண்டர் வெடிகளும்

ஸ்புட்னிக் வாணங்களும்

கண்கவர் வர்ணங்களில் மின்னும் மத்தாப்புகளான
கார்னேஷன்; மிஸ் யூனிவர்ஸ்; ஸில்வர்;
சந்திரஜோதி; மான் ஸ்பெஷல் பென்சல் முதலான

56 ரகங்களும் எல்லோராலும் விரும்பப்படுகின்றன.

★

சுந்தரம் பயர் ஒர்க்ஸ் பாக்டரி

கும்பகோணம்.

மாமியாரின் தலைத்தீபாவளி

"சேதி"

மாலதி கேட்கிருள் :

"என்ன சிரிக்கிருய்?"

"........."

"ஆமாமடி! உண்மைதான்' உதட்டைப் பிதுக்குகிருயே!'

"........."

"நம்ப மாட்டாய்! இல்லை? இன்னும் சொல்லுகிறேன் கேள். ஆச்சரியத்தால் ரத்தக் குழாய் வெடிக்காதே! சமையற்காரியே சம்மந்தியானுர்! ... இது எப்படி?

"இரண்டும் ஒரே கதையா அல்லது...?'

"இரண்டு தலைப்புகளும் ஒரே கதைக்குத் தான். முழுவதும் கேள். புரியும்... சொல்லட்டுமா?

மாலதி சொல்லுகிருள்

வனஜாவின் தந்தை அந்தக் கடிதத்தைப் படித்ததும் திடுக்கிட்டார் கடிதத்தை எடுத்துக் கொண்டு தன் மனைவி—வனஜாவின் தாயிடம் வந்தார்.

"அடிப் பாவி; விழுந்து விட்டதடி இடி நமது தலையில்!" என்ருர்; அலறினுர்.

வனஜாவின் தாயாரும் அலம்பிய இரு கைகளையும் இடுப்புப் புடவையில் இரண்டு புறமும் ஒத்தித் துடைத்துக் கொண்டு ஓடி வந்தாள்-காவில் இடறியதையும் பாராட்டாமல் சமையல் அறையினுள்ளிருந்து

"ஏன்? என்ன? அது யாரிடமிருந்து கடிதம்...?

அவர் பேசவில்லை அப்படியே, மழைகால மண் சுவர்போல் இடிந்து கீழே குவியலாக உட்கார்ந்து விட்டார். கண்களிலிருந்து மேல் மழையாக விழுந்து ஓடிக் கொண்டிருந்தது ஆருத் துயரத்தின் பிழிந்தெடுத்த சாறு!

"சம்பந்திதான் எழுதியிருக்கிருன். போட்டிருக்கிருன் பெரிய கல்லாகத் தூக்கித் தலையில்! இனி என்ன செய்வோம்? என்ன செய்வோம்?"

வனஜாவின் தாயாருக்கும் தானறியாமல் அழுகை வந்தது. அடக்கிக்கொண்டே "என்ன என்று சொல்லமாட்டேன் என்கிறீர்களே?" என்ருள்.

"சொல்லுகிறதா? சொல்லுவதற்கில்லையடி வந்திருக்கிற செய்தி? கேட்டுச் சாகிறதற்கு வந்திருக்கும் ஓலை இது. வனஜாவை அவர்கள் தள்ளிவைத்துவிட்டார்களாம்...!

"ஊம்!" என்ற அம்மாள் மீண்டும் தன் நிலைக்கு வர சிறிது நேரம் பிடித்தது.

"ஏனும்?"

அந்தத் தருணத்தில் குதித்துக்கொண்டு ஓடி வந்தாள் வனஜா! அந்த முகிழ்த்த மலரைத் திரும்பிப் பார்த்தனர் தாய் தந்தையர். இதோ மலரும்போதே கருகிவிடுகிறதே இதன் வாழ்வு! என்று ஏங்கி அங்கலாய்த்தன அந்த இரு இளகு பெரு உள்ளங்களும். இருவரும் கண்களைத் துடைத்துக்கொண்டனர். "சூழ்நிலையில் நீங்கள் ஏற்றிவைத்திருந்த நெடிப் பிடிப்பைக் குறைக்க வேண்டும்; இல்லையேல் பெண்ணின் மென் மலருள்ளம் சுருண்டுவிடும்!" என்று அவர்கள் உள்ளுணர்வு அவர்களை அடித்தது அதற்காக அவர்கள் அவ்வாறு முயன்றார்கள். ஆனால் வனஜா கெட்டிக்காரி; துணிச்சல்காரி. நிலைக் கும் வயதுக்கும் மீறியன அவள் துணிவும் பிடிவாதமும். அவற்றிற்குச் சற்றும் சளைக் காதது அவளுடைய முன்னறிவு.

"என்ன அப்பா, அம்மா, என்ன இது?" என்றாள் வனஜா தன் ஆட்டப்பாட்டம் எல்லா வற்றையும் அப்படியே நடு வானில் தொங்க விட்டு அதற்கு அப்பால் திரையும் இட்டு.

தாய் தந்தை இருவரும் சற்றுத் தயங்கினர். வனஜா தந்தையின் கை எதையோ மறைக்க முயலுவதைக் கண்டாள் வெடுக்கென்று பாய்ந்து பிடுங்கினாள், படித்தும்விட்டாள்.

"அப்பா!" என்று கத்திய அவளை, "என் செல்வமே" என்று தாய் கட்டிக்கொண்டாள்.

சற்றுநேரம் தாய் பெண் அரவணைப்பிலும், இருவருடைய தோற்றம், தந்தையின் பார்வை யிலும் கழிந்தது. ஒருமுறை கீழுதட்டால் பல்லைக் கடித்தாள் வனஜா. "அப்பா கவலைப் படாதேயுங்கள். இந்த எடுப்பார் கைப்பிள்ளை யின் எண்ணம் என்ன? என்று தெரிந்துகொண்டு விடுவோம்!" என்றாள். உடனே சென்று மடமட என்று ஒரு கடிதம் எழுதினாள்: கடிதம் அழுகை யாக இல்லை. அதற்காக அதிகாரமாகவும் இல்லை. அன்புக்கு உரிமை காட்டிய அந்தக் கடிதம் மரியாதையான அழைப்பையும் இனிமையுடன் ஏற்றுக்கொண்டு வனமாலியின் கல்லூரி விலா சத்தை நோக்கிச் சென்றது.

* * *

வனஜா பேருக்கு வனமாலியிடம் இருந்து கடிதம் வந்தது. அதன் வாசகம் இது தான்:

வனஜாவுக்கு,

உன் கடிதம் கிடைத்தது. தக்க காரணங்கள் கொண்டுதான் என் தந்தை இந்த ஏற்பாட்டைச் செய்திருப்பதாக எழுதியிருக்கிறார். இனி இதை மறந்து பேசாமல் இருந்துவிடுவதுதான் சரி. இருதரப்பினருக்குமே நல்லது. இல்லையோ, வீணில் உங்கள் சேதி அம்பலமாகிவிடும்.

ஒன்றுமட்டும் சொல்லிவிடுகிறேன். கடிதம் எழுதும் உன் துணிவு எனக்கு அச்சமே தரு கிறது. என் தந்தை செய்தது சரி என்று துணிய உதவுகிறது.

கெட்ட காலத்தினால் உனக்கு
தாலிகட்ட நேர்ந்த
வனமாலி.

கடிதத்தைப் படித்தவுடன் வனஜாவின் உள்ளம் கொதித்து எழுந்தது.

'உங்கள் சேதி அம்பலமாகிவிடும்?'

'அப்பா, என்ன சொல்லுகிறீர்கள்?'

'நான் சென்று அந்தச் சம்பந்தியை ஒருமுறை பார்த்துவிட்டு வரட்டுமா அம்மா?'

வனஜாவின் தாய் 'சரி' என்றாள். தானும் வருகிறேன் என்றாள். "அவனையும் அழைத்துக் கொண்டுபோய் அவர்கள் சொத்து என்று ஒப்படைத்துவிட்டு வந்துவிடுவோம்!" என்றும் ஒரு யோசனையும் கூறினாள்.

வனஜா மண்டையை ஆட்டினாள்.

'அம்மா, வேண்டாம்; போய் அவமானப்படா தீர்கள்.

"பிறகு?"

"ஆண்டவன் விட்ட வழி...!"

ஆண்டவன் விட்டவழியோ அவர்கள் ஏற்றுக் கொண்ட வழியோ, அது மிகவும் குறுகலாகவும் சக்தி நிறைந்ததாகவும் இருந்தது.

அந்த அதிர்ச்சியில் படுத்த வனஜாவின் தந்தை பிறகு எழுந்திருக்கவேயில்லை. கணவன் இறந்த பிறகு வனஜாவின் தாய் கணக்குப் பார்த்தாள். சமையல் வேலை செய்தால்தான் சாப்பிட முடியும் என்பதுதான் அந்தக் கணக்கின் நிகரமாகத் தென்பட்டது அப்படியே அவள் ராவ் பகதூர் ராஜாராமன் வீட்டில் சமையற்காரியாக ஆனாள். வனஜா மேலே படிக்கவில்லை. அவளும் தாயார் தொழிலிலேயே தேர்ந்தாள் ராஜாராமன் வீட்டா ருக்கு அவர்களிடம் அலாதி அன்பு ஏற்பட்டது. வாழாவெட்டி என்று திட்டாமல் அவர்கள் அந்தப் பெண்ணையும் சேர்த்தே பராமரித்தனர். அவளும் நாளாவட்டத்தில் தன்னைப் பாவிய விதவைஎன்று சொல்லிக்கொள்ளுவதற்கு அச்சப் படவில்லை. ராவ் பகதூர் ராஜாராமன் பங்கஜம் என்ற பெண்ணையும் வெங்கடகிருஷ்ணன் என்ற பிள்ளையும் பெற்று வளர்த்தார்; குடியும் குடித் தனமுமாக்கினார் அவர்களுடன்தான் வளர்ந்தாள் வனஜா. வனஜா பிறகு பங்கஜம் வீட்டுக்குச் சீதனமாக வந்தவள்போல் வந்தாள். அந்த வீட்டிலேயே சமையற்காரியாகத் தன் தாயின் தொழிலையே ஏற்றுக் கொண்டாள் அதெல்லாம் இருபத்தைந்து வருஷக் கதை. இப்பொழுது வனஜாவுக்கு நாற்பத்திரண்டு வயது. பங்கஜ மும் இல்லை. அவர் கணவரும் இல்லை இருபது வயது நிரம்பிய அவள் பையன் சேகரன் இருந் தான். அவனுக்கு ஒரு தங்கை இருந்தாள். மாலதி என்பாள். மாலதி கல்லூரியில் இரண்

நாளொரு மேனியாய், பொழுதொரு வண்ணமாய்...

ரெக்ஸோனு
சோப்

உங்கள் சருமத்தை எழிலோங்கச் செய்கிறது

ரெக்ஸோனுவில் 'கேடில்' என்ற விசேஷப் பொருள் அடங்கியுள்ளது; எழிலூட்டும் பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமே 'கேடில்' என்பது. ரெக்ஸோனுவின் மிருதுவான நுரையினல் நன்ருகத் தேய்த்துக் குளித்து, நாளொரு மேனியாக ஓங்கும் எழிலுடன் விளங்குங்கள்!

உங்கள் எழிலுக்கு...ரெக்ஸோனு

ஆஸ்திரேலியாவிலுள்ள ரெக்ஸோனு ப்ரொ. லிமிடெட் சார்பாக, இந்துஸ்தான் லீவர் லிமிடெடினல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

RP. 159-X52 TM

டாம் ஆண்டு பி. ஏ. படித்துக் கொண்டிருந்தாள். சேகரன் I. A. S. க்குத் தயார்செய்து கொண்டிருந்தான்.

பிறகு?

....

ஊம்ஹூம் அவள் சொல்ல மாட்டாள்; மாலதி அதற்கு மேல் எப்படிச் சொல்லுவாள்? வெட்கமாயிருக்காதோ? நான்தான் சொல்ல வேண்டும்.

நான் சொல்லுகிறேன்

பாதையை மறைத்துக்கொண்டு வந்து நின்றது அந்த ஈருருளி. மாலதி திடீரென்று தனக்கெதிரே நீண்டுவரும் அந்தப் புத்தகத்தைப் பார்த்தாள். 'மன்னிக்கவேண்டும்' என்ற பேச்சைக்கேட்டாள்,

"அவள் உதடுகளை அரங்கமாகக் கொண்டு எழில் காட்ட முறுவலும் பெருமைகாட்ட பேச்சுக்களும் போட்டியிட்டதே 'எங்கே?' என்று கேட்டான் அவன் குறும்பாக!

"எங்கே...?" அவள் தட்டித் தடவினாள்.

"ஆம். பாலஸ் எதிரேயுள்ள பூங்காவிலுள்ள பலகையின்மேல் வைத்துவிட்டீர்கள். எடுத்துத் தொடர்ந்து வந்தேன் பஸ்ஸில் ஏறிவிட்டீர்கள். வாடகை சைக்கிள் எடுத்துக்கொண்டு தொடர்ந்து வந்தேன்..."

இருவரும் நின்றிருந்த இடம் சொக்கிக் குளத்தில் ஜவஹர் ரோட்டின் முனை. ஒன்றும் நம்பர் பஸ்ஸிலிருந்து இறங்கி நடக்க ஆரம்பித்தாள் அவள்.

அந்தப்பேச்சு வெளியேறிய வாயைத் தன்னகத்தே கொண்ட அந்த முகத்தைப் பார்த்தாள். அவள் உள்ளம் திடீர் என்று பிலிம் அறுந்து விடவே தனி ஒரு நிலையை அடையும் சினிமாக்கொட்டகையாக நின்றது. கண்கள் தேன் குடிக்கும் வண்டுகள்போல் அந்த முகத்தின் அழகுச் சுனையின் இழுப்பு மலரில் கால்களைக்க, சிறகு கனக்க அப்படியே நின்றுவிட்டன.

"இது உங்கள் புத்தகம் தானே?"

"ஆம்... வைத்துவிட்டேன் தவறி... ஊம் ஊம்!"

இருவரும் கைகளை நீட்டிக்கொண்டிருந்தார்கள் கண்கள் பார்வைகளைக் கவ்விக்கொண்டிருந்தன. அழகு மூலைத்தாச்சி விளையாடிக்கொண்டிருந்தது, இதயம் இடம் மாற முயன்றது. புத்தகம் மாத்திரம் இன்னும் கைமாறவில்லை.

“எடுத்துக் கொள்ளுங்கள். விடைகொடுங்கள் நான் வருகிறேன்” தன் நிலைக்கு இறங்கிவந்த அவள் அந்தப் புத்தகத்தைத் தன் கைகளில் வாங்கினாள். அவர்கள் விரல் நுனிகள் இடித்தன என்று நான் சொல்லவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்களே!

அவள் நடந்தாள். தயக்கம்கொண்ட அந்த நடை அவன் உள்ளத்தைத் திருகிஎடுத்தது. நடையை வேகப்படுத்தினாள். உடல் சிறு ஆட்டம்தர அன்னம் மிதப்பதைப்போல் நடந்தாள் அவள். புது மோட்டாரில் தலைத் தீபாவளிக்குப் போகும் புதுமாப்பிள்ளையின் உள்ளம்போல் அவள் நடை போதை தந்து கொண்டிருந்தது. அவன் ஒரு பெருமூச்சு விட்டு, சைக்கிளின் பெடலின்மேல் காலை வைத்தான். அவள் திரும்பி பார்த்தாள்.

இவன் நின்றான்.

அவள் திரும்பி வந்தாள்.

"ஏன்?"

"என் வீடு சமீபத்தில்தான் இருக்கிறது. அதோ அந்த முனை திரும்பியவுடன் இரண்டாவது வீடு.........!"

"சரி."

"வாருங்களேன்'!'

ஒருகணம் போகலாமா என்று நினைத்தான் அவன். ஆனால் அது சரியல்ல என்று பட்டது. 'சைக்கிள் வாடகை சைக்கிள்; மற்றொருமுறை வருகிறேன்!" என்றான்.

அன்று அவன் சைக்கிள் விட்டுக்கொண்டு அந்த அழகர் கோயில் சாலையில் திருமலை நாயக்கர் அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்த போது சைக்கிளே அதிசயப்பட்டது. சாலை அதைவிட அதிசயப்பட்டது இதயத்துடிப்புக்கும் சைக்கிள் வேகத்துக்கும் போட்டி ஏற்பட சாலை நடுவராக அமர்ந்திருந்தது!

மாலதிக்கும் அன்று எல்லாம் புதுமாதிரியாகவே இருந்தன.

மாலதியின் மாறுதலைச் சில நாட்களாகவே கவனித்தாள் வனஜா மாமி. அவளுக்கு ஒருவாறு எல்லாம் புரிந்துவிட்டது.

'மாலாக் கண்ணு!' என்று அவள் அழைத்தாள்.

மாலா வந்து அவள் மடியில் படுத்துக்கொண்டாள்.

'என்ன மாமி?'

வனஜா அவள் தலையை இரண்டு கைகளாலும் தடவிக் கொடுத்தாள். சரிந்த மேலாக்கை அவள் மேலே எடுத்து வைத்துச் சரி செய்தாள். பாவாடையை எடுத்து அவள் புறங்கால்கள் வரை இழுத்துவிட்டாள். பிறகு அவள் முகத்தையே விடாமல் பார்த்துக்கொண்டிருந்தாள் சற்றுநேரம்.

'என்ன மாமி பார்க்கிறீர்கள்?'

'ஒன்றுமில்லை...' மாமி இழுப்பதைக் கேட்ட அவள் 'சொல்லுங்க மாமி...' என்று சிணுங்கினாள்.

மாலதி! நீ என்னிடம் முழு நம்பிக்கையும் வைத்திருக்கிறாயோ?'

'அது என்ன மாமி சந்தேகம்! நீங்கள்தானே எனக்குத் தாயார்மாதிரி!'

'அதுதான் கேட்டேன். நான் ஒரு கேள்வி கேட்பேன்; இல்லை ஒரு சேதி கேட்பேன். மறைக்காமல் சொல்லவேண்டும்!'

'மாலதி சும்மா இருந்தாள். ஆனால் அவள் முகபாவம் கேள்விக் குறியுடன் கண்டிப்பாய் மறைக்கமாட்டேன்! என்ற உறுதிமொழியை வாய் திறவாமல் தந்துகொண்டிருந்தது.

'அந்த மனோகரன் என்கிற பையன் யார்?'

திடுக்கிட்டாள் மாலா. ஆனால் சமாளித்துக் கொண்டாள். முகம் நாணத்தால் சிவந்தது. இமைகள் தளர்ந்தன. அப்படியே அவள் மடியிலேயே புரண்டு குப்புறப் படுத்தாள்.

அவள் முதுகைத் தடவிக் கொடுத்தாள் வனஜா. அவள் கண்களிலும் நீர் சுரந்து வந்தது.

வெடுக்கென்று எழுந்திருக்கப்போன அவளை அப்படியே கட்டி மீண்டும் மடியில் படுக்க வைத்தாள்.

இருவரும் பேசவில்லை.

மெதுவாகச் சொல்லத் தொடங்கினாள் மாலா:

அவர் தியாகராயர் கல்லூரியில் எம். ஏ. பொருளாதாரம் படிக்கிறாராம்...!'

"பிறகு..."

"அதிகம் தெரியாது!'

"கண்ணே. சங்கோசப்படாதே. அவனை ஒரு நாள் வீட்டுக்கு அழைத்து வா... பயப்படாதே. நான் நல்லதுதான் செய்வேன் என்று நம்பிக்கை உண்டல்லவா...!'

'சரி' அம்மாமி!' என்றாள் மாலதி.

* * *

மனோகரன் வந்துவிட்டுப் போனது முதல் வனஜாவின் நடத்தையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அடிக்கடி சிந்தனை மயக்கத்தில் இருப்பதை மாலதியும் கவனித்தாள் சேகரனும் கவனித்தான். என்றாலும் அவள் சேகரனைத் தானே தூண்டித் தூண்டி வனமாலியிடம் சென்றுவரச் செய்தாள் சுருங்கச் சொன்னால் மணம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்தாள். திருமணத்துக்கு இரண்டு நாளுக்கு முன் வனஜா மாமி எங்கேயோ போய் விட்டாள்' திருமணம் ஒன்றும் குறைவில்லாமல் நன்றாக நடந்தேறியது. என்றாலும் சேகரனும் மாலதியும் மட்டும் மன நிறைவற்றவர்களாகவே இருந்தார்கள். மாலதியின் மனக்குறை மனோகரனையும் பாதிக்காமலில்லை.

Cauveri—Deepavali Malar, (Nov.) 1956

SISTA'S-SG-73

சிறிதளவு *டினோபால்

வெள்ளைத் துணிகளை

அதிவெண்மையாக்குகிறது



* டினோபால், ஜே. ஆர். கெய்கி. எஸ். ஏ. பாஸல். ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்.

தயாரிப்பவர்கள் : ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட். வாடி. வாடி. பரோடா

ஏக விநியோகஸ்தர்கள் : ஸுஹ்ருட் கெய்கி டிரேடிங பிரைவேட் லிமிடெட. பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்-1

வனமாலி சொன்னார்;

கலியாணம் நடப்பதற்கு முன்னதாகவே மனோகரன் சொன்னான். அந்த அம்மாள் குடைந்து குடைந்து கேட்டாளப்பா! உங்களைப் பற்றி, உங்கள் வீடு வாசல் சொத்து எல்லாவற்றையும் கேட்டார்கள். முதலில் எனக்குக் கோபம் வந்தது. பதில் சொல்லவேண்டாம் என்றுகூட எண்ணினேன். ஆனால் அவர்கள் மனது வைக்காவிட்டால் மாலதி கிடைப்பது நரிக்கொம்புதான் என்று தெரியுமாதலால் கேட்டதற்கு ஒழுங்கான பதில் சொன்னேன்."

அப்பொழுதே எனக்கு அந்த எண்ணம் தட்டுப்பட்டது.

அவள் கேட்டாளாம்—"மாலதி தாய் தந்தையற்ற பெண். அவளைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியுமா?" என்று

"நானும் தாயில்லாப் பையன்தான்" என்றானாம் இவன்.

இதெல்லாம் கேட்டவுடன் எனக்குச் சந்தேகமாகவே இருந்தது. மனோகரன் தந்தையான என் குணம் அறிந்தவளல்லவா அவள்! ஆனால் அவள் வெளியிடாத தகவலை நானும் என் குழந்தைகளிடம் வெளியிடவில்லை.

இருபத்தைந்து வருஷங்கள்—அப்பப்பா...... அதை நினைத்து இன்று என் உள்ளம் எவ்வளவு துணுக்குறுகிறது என்ன மகா பாதகம் செய்து விட்டிருக்கிறேன்!

எனக்கு ஒரு நப்பாசை இருந்தது. பாசத்துடன் மாலதியை வளர்த்தவள் அவள். ஆகவே எப்படியும் அவள் நல்வாழ்வு வாழ்வதைக் காண வராமல் இருக்கமாட்டாள். திருமணத்தின் போதே திருட்டுத்தனமாக அவள் கண்குளிரக் கண்டு களித்துத்தான் இருப்பாள். எனக்கு அதற்கு நேரமில்லாமல் போய்விட்டது. கிடைத்திருந்தால் கையும் களவுமாகப் பிடித்திருப்பேனே அவளை!

திருமணம் நடந்தது ஆனி மாதம். ஐப்பசியில் தீபாவளி வருகிறது. சேகரன் எழுதியிருந்தான். 'மாமாவுக்கு நமஸ்காரம் நாங்கள் சிறுசுகள். நீங்களே வந்து இருந்து தீபாவளியை இங்கே நடத்திவைக்க உதவவேண்டும். முன்னமேயே வந்துவிட்டால் சாமான் வாங்க, வைக்க எல்லாவற்றிற்கும் உதவியாக இருக்கும்,' என்று சரிதான் என்று நானும் போனேன். கூடவே, உள்ளூர இருந்த நப்பாசையும் இழுத்துச்சென்றது என்று சொல்லி விடுவதில் என்ன வெட்கம்.

மேலே மாலதி சொல்லுவாள்.

நானும் அவரும்–போடி அவர்தாண்டி, பேரைச் சொல்லமுடியாது! தெரிந்துகொள் இல்லையென்றால் போ. உள்ளே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். 'சமையற்கார அம்மா இருக்கிற இடம் தெரிந்ததா?" என்றார் அவர். அவருக்கே அவ்வளவு அக்கரை இருந்தால் என்னைக் கேட்க வேண்டுமா? அழுதுகொண்டே 'அவர் மடியில் சாய்ந்தேன் 'அழாதே' இந்த வருஷம் படிப்பு முடியட்டும். எங்கேயாவது அலைந்து அவரைக் கண்டுபிடித்து விடுகிறேன்! என்றார் அவர். அதே சமயம் வனஜா என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்கவே நான் பலகணியின் பக்கம் சென்றேன் நான் அங்கே கண்ட காட்சி என்னை மின்சாரம் கொண்டு தாக்கிற்று. அந்தசமயம் என் வாயை அவர் கை பொத்தியிருக்காமல் போனால் மாமி என்று அலறியிருப்பேன் அவர் தடுத்தார் நாங்கள் கவனித்தோம்.

"வனஜா......"

மாமி நின்றார். இருவரும் பேசவில்லை. பிறகு என் மாமனார் சொன்னார்.

"வனஜா எங்கிருந்து ஆரம்பிப்பதென்றே தெரியவில்லை."

"எனக்கும் எங்கே முடிக்கிறதென்றும் புரியவில்லை......"

"வனஜா! நீ கோபித்துக்கொள்ள உரிமையுண்டு. ஆனால் எனக்காக ஒரே ஒரு கருணைபுரி. பிறகு நீ எங்கே சென்றாலும் நான் பேசமாட்டேன்........."

அப்பொழுதும் அவள் பேசவில்லை

"வனஜா நான் பாவி. அந்தச் சமயத்தில் என் கண் மூடியிருந்தது. படித்தும் புத்தியற்றவனாக இருந்தேன். உன்மேல் சுமத்தப்பட்ட வீண்பழியை நம்பினேன் உன் உள்ளத்தைக் குரூரமாகத் துளைத்தேன்.

நானும் நன்மையடையவில்லை. பிறகு மணம் புரிந்துகொண்டவள் கையில் சிக்கிப் படாதபாடு பட்டேன். அப்பொழுதெல்லாம் உனக்கு இழைத்த தீங்குக்கு இது வேண்டும் இன்னும் வேண்டும் என்று என்னை நானே நொந்துகொண்டேன் கடைசியில் மகாராஜியும் போய் விட்டாள், இந்த மனோகரனை விட்டு விட்டு எனக்கு என்னவோ வாழ்நாளில் ஒருமுறை உன்னைச் சந்திப்பேன், மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவேன்! என்ற எண்ணம் இருந்துவந்தது நீயும் இருக்கும் இடம் தெரியாமல் எப்படியோ ஏமாற்றி விட்டாய். கடைசியில் இன்று சந்தித்தேன்..."

'நீங்கள் இந்த நேரம்...?'

"அதுவா. உன்னை நான் எதிர்பார்த்தேன். உன் கடிதம் உன்எழுத்து எல்லாம் என் நினைவுத்திரையைவிட்டு அகலவேயில்லை. இந்த வீட்டைவிட்டுப் போகுமுன் நீ எழுதி வைத்துவிட்டுப் போன கடிதத்தின் எழுத்துக்கள் என் மனதின் எண்ணத்துக்கு உயிரூட்டின. திருமணத்தின் போதே நீ இந்தத் திருட்டுத்தனம் செய்திருப்பாய் என்பதும் என் உறுதியான நம்பிக்கை...!'

அவள் சிரித்துத் தலையைக் குனிந்தாள்.

உச்ச நிலைக்கு விருத்தியடைந்துள்ள உன்னத விற்பனை.

லோமா உங்கள் கேசத்தை கருமை
யுடன் விளங்கச் செய்வதுடன் அதை
எழிலுடன் பிரகாசிக்கவும் செய்கின்றது.
அதனால்தான் பெரியோரும்,
சிறியோரும், ஆடவரும், பெண்டினரும்,
எல்லோரும் ஒருமுகமாக, இந்தியாவிலும்,
மற்றும் வெளிநாடுகளிலும்
லோமாவையே விரும்பி வாங்குகிறார்கள்.

லோமா

கேசத்தைக் கருமையாக்குவதில்
பாரினில் புகழ்பெற்றது.

பூரண ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்—1
ஏஜெண்டுகள் :
ஸி. நரோத்தம் அண்டு கோ. பம்பாய்—2

TAM

மதராஸ் ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் ஜே. பாலாபாய் & கோ., 260, எஸ்பிளனேட், மதராஸ்.

ஸிலோன் ஏஜண்டுகள்:
மெஸர்ஸ் சிர்ருல் காதிர் & கோ.,
41 & 43, 2-வது கிராஸ் தெரு, கொழும்பு-11.

அவர் நெருங்கி அவள் தலையைத் தொட்டு நிமிர்த்தினர். அவள் தடுக்கவில்லை,

"எனக்கும் உங்கள் உருவம் மறக்கவில்லை, மனோகரனை முதல்நாள் பார்த்தவுடன்...!" அவள் மேலே பேச நாணினள்.

'நீ இன்று கண்டிப்பாக வருவாய் என்று எண்ணியே நான் கொல்லையைச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். வரமாட்டாயா உள்ளே..."

மாமி பதில் சொல்லவில்லை. எனக்கு இனிப் பொறுக்க முடியவில்லை 'அம்மாமி என்று அலறிக் கொண்டே ஓடி அவர் கால்களில் விழுந்தேன் அவர் குனிந்து என்னை வாரி எடுத்தார்.

"முதலில் நீங்கள் சொல்லுங்கள்—'என்னைவிட்டுப் போகமாட்டேன்' என்று!" அழுதேன்.

"அசட்டுப்பெண்ணே—நான் இங்கே இருக்க முடியுமா? இருந்தால் உன்நிலைமை என்ன ஆகும் தெரியுமா!"

"தெரியும் நான் நாட்டுப் பெண்ணுவேன்' நீங்கள் மாமியாராவீர்கள். சமையற்கார அம்மாவாக இருக்கமாட்டீர்கள். நான் சமையல் செய்து உங்களுக்குப் போடவேண்டும்."

"அப்படி இழிவடைவதால் என்ன லாபம் அசட்டுப் பெண்ணே!"

"அம்மா...அம்மா எனக்கு அம்மா கிடைப்பாள் மாமியாரும் கிடைப்பாள்!" என்றேன் நான்.

மனோகரனும் "எனக்கும் அப்படித்தான்!" என்ருர்,

என் மாமனுரும்—"வனஜா சொல்ல எனக்கு உரிமையில்லை...!"

"ஏன் சொல்லி விடுங்கள் இந்த உயிர் கவுட்டுத்தனமாக இதை நினைத்துத்தானே இவ்வளவு நாள் சதி செய்து வந்திருக்கிறது!" என்ருர் மாமியார்.

சேகரன் இரவு பத்து மணிக்குத்தான் வந்தான் வரும்போதே "எல்லாம் வாங்கிவிட்டாயா" என்ருர் என் மாமனுர்.

ஆமாம்! என்று சொல்லி அவன் எல்லாவற்றையும் எடுத்துப் பரப்பி வைத்தான்.

அந்த மூட்டையில் ஒரு பட்டுப்புடவை அதிகமாக இருந்தது. சில நகைகளும் ஒரு தாலிச் சங்கிலியும் இருந்தது.

அண்ணு, "இவை ஏன்" என்று விழிக்கிருன் என்று எனக்குத் தெரிந்தது. அவனைப் பேச விடாமல் "அண்ணு என் மாமியார் வந்திருக்கிருர், தெரியுமா!" என்றேன்.

அண்ணு மறுபடியும் விழித்தான்.

அதற்குள் நன்ருய் முழுகி தாலியையும் சரட்டில் அணிந்து வெளியே வந்த வனஜா மாமியைப் பார்த்துவிட்டான்.

'மாமி!'

'அவர்தான் அண்ணு, என் மாமியார்!'

'அவளுக்குத்தானப்பா இந்த நகை எல்லாம்!' என்ருர் வனமாலி.

புரிந்ததா இப்பொழுது?

மாமியாருக்குத் தலைத் தீபாவளி எப்படி நடந்தது என்று?

புரிந்தது, புரிந்தது, இந்தப் பெருமையில் இருக்கும் உன்னை உன் தலைத் தீபாவளியின் விமரிசையை இப்பொழுது கேட்க முடியாதென்பதும் கூடவே புரிந்துவிட்டது.

2 -NOV

கண்ணீரும் கதை சொல்லும்...

கே.வி.நடராஜன்

"போஸ்ட்!"

கோபால சர்மா ஊஞ்சலிலிருந்து எழுந்து உட்கார்ந்தார்.

கடைக்குட்டி பாரு, 'அப்பா, அக்கா எழுதியிருக்கிறாள்!' என்று ஓடி வந்தாள். பாருவுக்கு வயது நாலு. யார் கடிதம் எழுதினாலும் அக்கா தான் எழுதினாள் என நம்பும் சிறுமி!

அப்பிஞ்சு விரல்களுக்கிடையே உள்ள கடிதத்தை அவர் கை வாங்கியது. மாப்பிள்ளை சிவராமகிருஷ்ணனின் கையெழுத்து. கடிதம் பிரிக்கலாமா? சொரியலாம்; சிரங்குக்கு ஆதுரம்தான்: ஆனால் எரிச்சலை யார் தாங்குவது? பிரிக்கலாம். பிரித்ததை மூட முடியுமா?—மன இழை வளர்ந்தது.

கடித உறை கிழிக்கப்பட்டு கீழே விழுந்தது.

"மாமனார் அவர்களுக்கு.

விறைப்பற்ற மாப்பிள்ளையும், அடியில்லா பிள்ளையும் பிரயோசனப்படுவதில்லை. 'ஆயிரம் பொய் சொல்லிக் கல்யாணம் செய்யலாம்! தங்களுக்கோ அந்த அளவு எதற்கு? 'பொன் வைக்குமிடத்தில் பூவையாவது வை' என்பர். மணமுள்ள மல்லிகை, ரோஜா மகிழம்பூவையாவது வைக்கக் கூடாதா? வாசனை அற்ற அழகற்ற காகிதப்பூ போன்ற குரோட்டன்ஸ்களையா வைப்பது! சீர் வகைகளைச் சரியாகச் செய்யக்கூடாதா? வரதட்சணை கிடக்கட்டும். சிறப்பாகச் சீர்கள் சீராய் வரும் என்றீர்கள். 'சொன்னதைச் செய்திடத் தாமதம்' ஏனோ? 'மறதி' மாமனார்களின் 'காபிரைட்' உரிமையோ? மோதிரம் நோன்பிற்குவரும் என்றீர்கள். தற்சமயம் கடையில் பொன்னகை இருக்கும் அது. அல்லது தட்டானிடம் இருக்கலாம். அதைத் தங்கள் கடைக்குட்டி பாருவுக்கு என்று வரும் கணவனுக்காவது மறந்துவிடாமல் சரியானநேரத்தில் மன அன்புடன் கொடுத்துவிட வேண்டும்என்றுகேட்டுக்கொள்ளுகிறேன். குடித்தனத்திற்கு என்று பாத்திரங்கள் கட்டில்மேஜை பீரோ வாங்கித் தருவதாக எழுதினீர்கள். அளவுக்கு மீறி வாக்கு தருவது ஏனோ? பெண்ணையும் பெட்டியையும் அனுப்பினீர்கள். பெண் வசிக்கப்போகும் ஊர் மிகப் பெரியதாயிற்றே! அடுப்பங்கரையிலே அமர்ந்து அலைவது அவளுக்கு ஆகவே ஆகாது என்று தாராள மனப் பான்மையில் நடந்து கொண்டீர்கள் போலும்! ஓட்டலிலே தம்பதிகள் இருக்கட்டும் என எண்ணினீர்கள் போலும்!

எனக்கு மங்களூருக்கு மாற்றலாகி விட்டதால் பெண்ணைத்தற்சமயம் ஊருக்கு அழைத்துச்

சென்று பிறகு 'சீருடன்' அவளை அனுப்பவும், அவளுக்கு உரிய 'டிராவலிங் அலவன்ஸ்' நேரில் தரப்படும்.

இப்படிக்கு,
சிவராமகிருஷ்ணன்".

"அட! விஷயம் முற்றிபோச்சே! எழுதிய கதையை உடனே பத்திரிகை ஆசிரியருக்கு அனுப்பிடவேண்டும். மணமான பெண்ணையும் புக்ககத்திற்குஅனுப்பவேண்டும். ஆனால் திரும்பிய கட்டுரை போல......"

"ஏன்னா! கடுதாசியை வைச்சுண்டு என்ன கோட்டை கட்றேள்! 'செக்' ஏதாவது உண்டா? அல்லது ஏன் இப்படி தட்சன் யாகசாலையிலே இருப்பதுபோல"...... அவர் மனைவி சீதா அவர் சிந்தனையைக் கலைத்தாள்.

"என்னடி உளறல்!"

அவர் உபமானத்தை மனத்திற்குள்ளே அலசினார். சிவ-தட்ச யுத்தக்கொடியை உயர்த்தியாச்சே!

"சுந்தரி சௌக்யமா? "குளிச்சுண்டு" இருக்காளோ? எப்போ குழந்தை வர்ராளாம்? குடித்தனம் எப்படியாம்?"

"அவ இன்னும் இரண்டு நாளிலே வராளாம்!"

"அப்பாடா! எனக்கு அப்பவே தெரியுமே! மாப்பிள்ளை ரொம்ப நல்லவர்னு! அவள் அதிர்ஷ்டம் மகா பிரமாதம். அகமுடையான் அமையரதற்கு அவள் தேனபிஷேகம் போன ஜன்மத்திலே பண்ணியிருக்கணும்!"

"ஆமாம்! இந்த ஜன்மத்திலே நான் மாப்பிள்ளைக்குச் சொர்ணபிஷேகம் செய்யணும்! பெண் அதிர்ஷ்டம் தெரிஞ்சிருக்கே! மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை! 'சீர்' என்பதற்காக எந்த மடையன் பெண்டாட்டியை அலைக்கழிப்பான்? இன்னும் செய் என்றால் போச்சு! படிச்ச முட்டாள்!"

"ரொம்ப அழகுதான்! யார்யாருக்கு எங்கங்கே உசிர்நாடியோ அங்கங்கு கை வைச்சாத்தான் காரியம் ஆகும்!

"நீங்களும்தான் அந்தக் காலத்திலே எங்கப்பாவை ஒரு பீரோவிற்காக ஆட்டிவைச்சேளே! அப்போ பீரோதான் ஒசத்தியாச்சு; பெண்டாட்டியை மறந்தேள்! எரியும் வீட்டிலே பிடுங்கின வரை லாபம்; மாடு கறவை நிற்பதற்கு முன், உதைப்பதற்குமுன், கறந்துவிட வேண்டும்! நீங்களா கஷ்டப்பட்டு சம்பாதிச்சேள்! எவனோ தந்துட்டு போறான்!"

"அடியே, பாக்கிப் புராணத்தை நாளைக்கு வைச்சுக்கோ!"

"ஆமாம், உண்மையைப் புராணம், புரட்டு என்று புரளி பண்றது புருஷலட்சணம்!"

"ஹஉம்; 'பாத்திரம்வர்லே, பெண்ணை அழைச்சிண்டு போ' என்கிறானே?"

"செடிக்கு எரு, தண்ணீர், காவல் எல்லாம் இருந்தாத்தானே மலரும்?"

"எங்கே பணமிருக்கு இப்போ? பிராவிடண்ட் பண்டு பாக்கி நிற்கிறது. பையன் B. A. போறான்; பணம் கட்டணும். இதிலே இது ஒரு கூத்து..."

"அலை ஓய, தலைமுழுக முடியாது! கடனோ, உடனே பட்டுத்தான் சமாளிக்கணும்; செய்தாத்தான் நிறைஞ்சு தோணும்; 'அது' கண்ணை வேறு கசக்கிக்கொண்டு நிற்குமே!"

"தாடி எரியறபோது, பீடிக்கு நெருப்பா? சமயா சந்தர்ப்பம் தெரியாமே, மாப்பிள்ளை இப்படியா...?

......" மாப்பிள்ளை கைக்கு மோதிரம் எப்போ போடறது?"

"மோதிரம் இல்லேன்னு, அவ்விரல் கோபித்துக் கீழே விழுமாக்கும்!"

"வீராப்பு என்னத்துக்கு: பிள்ளை பெற்றவா ஒசத்திதான்; நாம் தாழ்வுதான்! ஒரு கை தட்டினா, சப்தம் வருமா என்ன?"

"நான் சிக்கி முக்கிக் கல்லாக்கும்! தட்டினால் திடீரெனப் பொறி பறக்கும்!"

"அப்புறம் ஊரே 'இலங்காதகனம்'தான்! என்னவோ யாரோ மாப்பிள்ளையைக் கேலி செய்திருப்பா; சிறுசு அல்ல, உடனே கடுதாசி எழுதிடுத்து, நீங்கள் இன்னும் ஒருமாசத்திலே செய்வதாக நேரே சொல்லிட்டு வாங்கோ! பாவம் சுந்தரி என்ன நினைக்கிறாளோ?"

'என்ன நினைக்கும்! அப்பா கூட்ஸ் வண்டி நிறையப் பாத்திரங்களை எல்லாம் அடுக்கிண்டு 'ஸ்பெஷலா' வருவார்னுட்டு 'வழிமேல் விழி வைத்து'ப் பார்ப்பாள்! அசடு! அவனை ஒரு வழியாச் சமாளிக்காமே, சும்மா நிற்கிறது! படிக்காத பெண்டாட்டியே படிச்ச அகமுடையானை அப்படியே கைக்குள்ளே வைச்சிருக்க, இவள், நம்ம குடித்தனத்திற்கு நாம்தான் சாமான் வாங்கிக்கணும். சின்னக் குழந்தையா சொக்காய் தச்சுத்தரமாதிரி? சம்பாதிப்பது எதற்கு? என்று அவனை வளைக்காமே அப்பனையே எதிர்பார்க்கிறதே! கண்ணீர் விட்டு அழத்தெரியும்!"

"சுதந்தரம், சமத்துவம் என்பது புத்தகத்திலே, வாயிலேதான் இருக்கு! வாழ்விலே, புருஷாள் வீம்பிலே, அகப்பட்டு அலையறது! நெருப்புக்குத் தப்பிப் பிசாசு கையிலே அகப்பட்டா, குரங்கு கையிலே பட்ட பூமாலையாகப் பெண்கள்..."

'சரி, லேடீஸ் கிளப்' இது இல்லே! அவளை இன்னிக்கு அழைச்சிண்டு வரப் பட்டணம் போறேன்!

'அப்பா, அக்கா வரும்போது, ரிப்பன் வாங்கி வாயேன்!'

'அட சட், நீ ஒண்ணு!'

'ஏன் இந்தக் கையாலாகாத கோபம்?'

பாரு அவருக்கு அழகு காட்டுகிறாள்! 'அப்பா, அத்திம்பேர் வரட்டும், அடிக்கச் சொல்றேன்! என்றாள்.

'அடி போக்கிரி!' இருவரும் சிரிக்கிறார்கள்.

2

"எப்போது மங்களூருக்கு வருவது?" என்றாள் சுந்தரி.

'வீடு கிடைத்தவுடன்' என்றான் சிவராம கிருஷ்ணன்.

'சட்டுனு வீட்டைத் தேடணும்!'

'எல்லாம் எனக்குத் தெரியும்! பெட்டியிலே சாமானை எடுத்துவை!'

கண்ணீர் அவள் கண்களைத் திரை இட்டது.

மவுனம் அவர்களிடைத் திரையாக வீழ்ந்தது. அதைக் கிழித்து எறிந்து பார்க்க

இருவரும் விரும்பவில்லை. காயத்திலே 'சீழ்' இருப்பதைப் பார்க்க யார் விரும்புவர்? ஏன் இந்தப் பிணக்கு!

அன்றிரவு படுக்கை அவள் புரண்டலில் தடுமாறி கசங்கித் திகைத்தது! தலையணை ஈரமாக்கப்பட்டது!

3

"நீங்க எழுதினது எல்லாம் புரிஞ்சுது, மாப்பிள்ளை! ஆனால்..."

"அதன்படி செய்ய இஷ்டமில்லையாக்கும்!"

"மனஸ்தாபம்தான் நிற்கும்! எப்படியும் நான் செஞ்சுடறேன்!"

"ஊஹூம், அதெல்லாமில்லை! கொஞ்சநாளைக்கு அவளுக்கும் 'சேஞ்சு' (Change) இருக்கும்! வீடும் கிடைக்கும், உங்களுக்கும் அவகாசம் இருக்கும்! நான் ஆபீஸிலே 'சார்ஜ்' ஒப்பிச்சுட்டு வரேன்!"

சிவராமகிருஷ்ணன் செருப்பு சப்தம் வீட்டைவிட்டு மறைந்தது.

"என்னடி சுந்தரி! இப்படிப் பிடி கொடுக்காமே பேசறானே?"

"உங்க மாப்பிள்ளைதானே அவர்!"

"அட! மத்தளத்திற்கு இரண்டுபுறந்தான் இடி! எனக்கோ?" அவர் மவுனமானார்.

"என்னவோ கொஞ்சநாள் என்னோடு இருடி!" அப்பத்தான் ஒற்றுமை வேர்விடும்! என்றார் பிறகு.

"வேரோ, கடப்பாரையோ? யார் கண்டது?"

அவர் மேலே பேச முடியவில்லை. கைப்பூணுக்கோ கண்ணாடி வேண்டும்?

4

"மாப்பிள்ளை, தீபாவளிக்கு வாங்கோ! கடுதாசியும் போடறேன்!" அவர் உள்ளே அமர்ந்தார். ப்ளாட்பாரம் திமிலோகப்பட்டது!

"எப்போதும் வாசலேகதி என்று தபாலைத் தினமும் எதிர் பார்ப்பேன்! உடம்பைப் பார்த்துக்குங்கோ... வீடும் பாருங்கோ..."

"இடம் கிடைச்சதும் எழுதறேன்!"

"அதுவரை மாட்டோளாக்கும்?"-முத்து கண்ணில் பிறந்தது. "......................"

வண்டி அவர்களின் உணர்ச்சிகளை அலட்சியம் செய்து புறப்பட்டது. "சேராத தண்டவாளங்களை சேர்க்கும் வண்டிபோல, எம் வாழ்வைச் சேர்க்கும் "சீர்வண்டி" எப்போது வரும்? சீர் இல்லாட்டி குடித்தனமில்லே! பெண் வாழ்வாள், மலருவாள் என நம்பிக் கல்யாணம் செய்த வருக்குப்பதில்! எனக்குப் பிரிவு; அவருக்கு வீம்பு அப்பாவிற்கு ஆயாசம்! கல்யாணமாகி முதன் முதலிலே பிறந்தகத்திற்கு அழுதுகொண்டேவா போவது அப்பா, நான்ஏன் பிறந்தேன்?—அதுவும் பெண்ணாக?" அவள் கண்களில் ஈரம் துளிர்ந்தது. 'மழைக்கண்ணாள்' என்றுஅவளை அழைக்கலாமா?

"கரி விழுந்ததா? கதவை மூடுகிறேன்!" என்றார் சர்மா?

அவர் மனமோ, "மடையன் கிருகலட்சுமியை அழவிடுகிறான்!" என்றது. ஆஹா, கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்கிறார்களே?

அடுத்த ஸ்டேஷன் வந்தது.

அதற்குள் சர்மா தூங்கிவிட்டார்.

ஒரு பெரியவரும் பெண்ணும் ஏறினர்.

"ஸார், கொஞ்சம் இடம் விடறேளா?" சர்மா எழுந்தார். "எவ்வளவு தூரம் பிரயாணமோ? பெண்ணை முதன் முதலிலே பிறந்தகம் அழைத்துச் செல்லுகிறீர்களா?" என்றார் புதியவர்.

"குப்பான்பட்டி வரை!"

"நான் மாசான்குடி வரை! ஜயம், உட்காரும்மா, நிற்காதே உடம்புக்கும் ஆகாது!"......

"உங்கள் பெண்ணுக்கும்!"

"ஆமாம் ஸார்! கல்யாணம் ஆன மறுநாளே மாப்பிள்ளை அழைச்சிண்டு போனான். ஆடிப் பண்டிகைக்கு ஒருநாள் வந்தாள் இப்பத்தான் மறுபடி வர்ரா! இப்போ 'பூ சுத்தணும்;' மாசம் ஐந்து ஆச்சு, நடுவிலே அனுப்ப மாட்டேன்னான். சாப்பாட்டு கஷ்டமாம்! ஹூம். போன வருஷம் பிரம்மச்சாரி. அப்போ ஹோட்டல்! என்ன 'குக்கர்' வைச்சுண்டா போறுதா? பெண்டாட்டி என்ன அப்படி கிழிச்சுடறான்? பெற்றவா மனசை, மாப்பிள்ளை ஏன் கவனிக்கறு? "என்னவோ பெற்றமனசு கேட்கவில்லை; கேட்டுவைச்சேன், 'இல்லை' என்ற பதில்தான் நாக்கிலே இருக்கே? ஆனால் 'இப்போ' பாருங்கோ, 'தனிமை' இருக்கே! மாப்பிள்ளை மாட்டேன் என்று சொல்ல முடியுமா என்ன?"

அவர் குரலில் பெருமை கலந்த பூரிப்பு படர்ந்தது. எதிரே உள்ள பெண்ணின் முகத்தில் கர்வம்கலந்த மகிழ்ச்சி! தாயாகும் பேறு அல்லவா

சுந்தரி மனத்திலோ பொறாமை கலந்த கரிப்பு தோன்றியது. சர்மா உள்ளத்திலோ ஆசை கலந்த வெறுப்பு ஊசலாடியது. தன் பெண்ணையும் அப்படி அழைத்துச் செல்ல ஆசை, தற்சமய நிலையால் வெறுப்பு, இரண்டும் உருண்டன. இருவரும் மாசான்குடி வராதா, ரயில் பறக்காதா என வேண்டினர். எதிரே இருந்த இருவரும் அவர்கள் மூடிய கண் பார்வைக்கு இலக்காயினர் ரயிலோ 'கடமை'பாதையிலே ஓடியது. மனங்களிலே எண்ணங்கள் ஓடின.

குப்பான் பட்டியில் இருவரையும் இறக்கிய சிரமம் தீரப் பெருமூச்சுவிட்டு நகர்ந்தது இரும்பு ரயில்!

தி கும்பகோணம் பாங்கி லிமிடெட், கும்பகோணம்.

(ஸ்தாபிதம்: 1904)

ஷெட்யூல்ட் பாங்க்

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூபாய்	5,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	4,33,010
ரிஸர்வ் நிதிகள்	,,	5,24,000

மொத்த செலாவணி ஒரு கோடியே இருபது லட்சத்திற்கு மேல்

பிராஞ்சுகள்

மன்னார்குடி	திருவாரூர்	கொடவாசல்
நாகப்பட்டிணம்	மணப்பாறை	வலங்கிமான்
நன்னிலம்	மாயூரம்	ஜெயங்கொண்டம்
அய்யம்பேட்டை	பொறையார்	அரியலூர்
திருக்காட்டுப்பள்ளி	ஆடுதுறை	

வட்டி விகிதங்கள்

சேவிங்ஸ் பாங்க் டெபாஸிட் 2½% **நடைமுதல் கணக்கு 1%**

3, 6, 12, 24 மாதங்களுக்கு முறையே தொகைகள் வாங்கிக் கொள்ளப்படும். வட்டிவிகிதங்கள் ஆபீசில் தெரிந்துகொள்ளலாம், சகலவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்.

எஸ். மகாலிங்க அய்யர், பி.ஏ., பி.எல்.,
சேர்மன்.

"அக்கா, நீ மாத்திரம் ஏன் வந்தே? அத்திம்பேரை ஏன் 'ஆச்சிண்டு' வரல்லே! சினிமாவுக்கு அத்திம்பேருடனே போவேனே! அப்பா எப்போதுமே பசங்களோடே பாடம் படிக்கிறு; அம்மா சமையல் பண்ரு; நான் உங்கூடத்தான் ஊருக்கும் வருவேன்!" என்ருள்.

"சரிடி, சும்மா அளேச்சுடாதே! போ, விளேயாடு!"

5

அன்று வெள்ளிக் கிழமையானதால் எண்ணெய் தேய்த்துக் குளித்துத் தலையை வாராது நுனியில் முடிந்து கடிதம் எழுத ஆரம்பித்தாள். ஆம், நான்கு மாதமாகக் கடிதமே வரவில்லை. தபால்காரனே, 'கடிதம் இன்றும் இல்லே அம்மா! என்று கேலிசெய்யும் அளவிற்கு வந்து விட்டதே! முதன் முதலே இப்போது தான் கடிதம் எழுதும்நிலே ஏற்பட்டது. 'க்ஷேமம் என்று எழுதினள்! எப்படி க்ஷேமமாம்: உடம்புதான் க்ஷேமமாயிருக்கிறதே தவிர உள்ளம்? பொய்யைத்தான் எழுதுவதா? பிரிவிலே மகிழ்ச்சி உண்டா? அவள் மனம் எண்ண காய்களே உருட்டியது. 'கடிதமே ஏன் எழுதவில்லே? என்றும் மேலும் எழுதினள். ஒரு வேளே வீடு கிடைக்கவில்லேயோ? கிடைத்ததும் எழுதுகிறேன் என்ருரே!

கடிதம் வரும் வரும் என்று மனம்தான் எப்படித் துள்ளிற்று? இப்போது எப்படி ஏமாந்தது? கொதிக்கும் பாலிலே, பொங்கி வழியும் பாலிலே, ஏன் நீரைத் தெளிக்கிரேம்? பால் தரம் குறைகிறதே! 'ஜேபிக்குள் எடுத்துச் செல்லும் பூந்தோட்டம் புத்தகம் என்பீர்கள். எனக்கோ உங்கள் போட்டோவேதான் என்று நான் எப்படி எழுதுவேன்? மலர்க்குவியலாக இருப்பது உங்கள் கைக்குட்டைதான்! அவள் மனம் கையை நிறுத்தியது. ஒரு கைபார்வையை மறைக்கும் நீரைக் கண்ணிலிருந்து வழித்தது.

பிறகு மேலே எழுதினள்—

"தீயானது புகையால் சூழப்பட்டுள்ளதுபோல், கண்ணுடி அழுக்கால் மறைக்கப்பட்டிருப்பினும், சிசு, கருப்பையால் சூழப்பட்டு இருப்பினும் ஒருநாள் அவை வெளியாவதுபோல, உங்கள் அன்பும் இன்று கோபத்தால் மறைந்திருந்தும் வெளியாகி என்னே அணேக்குமா?"—

ஏக்கம் பெருமூச்சை எழுப்பியது!

கை தாமதித்தது. மேலே என்ன எழுதுவது எனத் தயங்கினள். பேனு கீழே வந்தது. அதிலே 'சுந்தரி சிவராமகிருஷ்ணன்' என இருந்தது—பொன் எழுத்தால்! முதன் முதலில் கணவனேக் காணும் காரிகையின் கண்சுழிப்பு, குழந்தையை அணேத்துக்கொள்ளும் தாயின் பரபரப்பு, தாயின் முந்தானேயிலே மறைந்து எட்டிப் பார்க்கும் சிறுவனின் ஆவல் எல்லாம் அவள் கண்களிலே சுடரிட்டன. வெறுத்தாலும், 'அன்புடைக் கணவர்தானே?' ஏனே இப்படி மாறிவிட்டாரே? பாழும் சீர்வகைகளே? எனக்குச் சீர் என் கணவன் தானே?

மறுபடியும் பேனு காகிதக் காதலியைத் தழுவி முத்தமிடத் தயாராக அணங்கு கையிலே நின்றது. என்ன எழுதுவது?

சீட்டுக்கட்டு முதலிலே உள்ள ஒழுங்கிலே மறுபடியும் பன்முறை குலுக்கியும் வருவது கடினம். அதுபோலத்தான் வாழ்வின் அமைதியும், 'ஒருமுறை கலக்கப்பட்டால்!' நாம் வாழாது விடப்பட்ட நாட்களேக் கண்ணீரும் திருப்பி அழைக்காது!

பேனுவும் காகிதமும் பன்முறை குலவின. கடிதம் பூர்த்தியாயிற்று. பல இடங்களில் எழுத்துக்குள் கண்ணீரால் கலக்கப்பட்டிருந்தன! அவள் நினேத்தாள்—'எப்படிக் கணவருக்குக் காதலிகள் கடிதம் எழுதினர்? தாமரை இலேயிலே நகத்தால் கீறி சகுந்தலே எப்படி வரைந்தாள்? செம்பஞ்சுக் குழம்பிலே அல்லித் தண்டினல் வரைந்தாளா? ஆனல் அவள் மனம் ஆசை வெட்கம் இவற்ருல் நிரம்பியிருந்தது! என் மனத்திலோ இருள்; கோபம்! என் கண்களில் வடியும் நீரைத் துடைக்க முன்வர மாட்டாரா அவர்?

மன உணர்ச்சிகளேக் காகிதத்தில் கொட்டிய சுமை தீர அட்ரஸை அன்புடன் எழுதினள், உரையைக் கையில் வைத்துக்கொண்டே, 'கடவுளே, என்னே ஏன் இப்படிச் சோதிக்கிருய்! என்று இந்தப் பிரிவு முடியும்?' என்று ஏங்கினள். என் மனத்தை என் கடிதம் அவரிடம் எடுத்துச் சொல்லுமா?

கடிதம் தபால் பெட்டியைச் சரணடைந்தது. அவளுக்கு இரண்டு நாட்கள் கழிந்தன, பதிலே கதியில!

6

"என்ன அழகான வீடு, சிவராமா, இவ்வளவு வாடகைக்கு ரொம்ப சல்லீசடா! அது சரி, உன் பெண்டாட்டி என்று வருவாள்?"

"கோபால், இன்னும் ஒருவாரத்தில் தருவித்து விடணும்..."

"இப்படித்தான் பேசுகிருய், இத்துடன் பல வாரங்கள் போய்விட்டன! நான் கேட்கிறேன் என்று நினேக்காதே! ஊரிலே என்ன பேசிக் கொள்ளுகிருர்கள் தெரியுமா உனக்கு? என் அனுதாபங்கள் உனக்கு!

"என்ன நீ கரடி விடுகிருய்?"

"உம், ஆபீஸ் மானேஜர் என்று இருந்தாலே இப்படித்தான்! உன்னேப்பற்றி உன்மனேவிக்குக் கூட கடிதம் போய்விட்டது! சிவராமா, உன்னே

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு — S/9-X52 TM

யும், உன் வேடி ஸ்டெனோ டைபிஸ்ட்! சரோவைப்பற்றியும் முடிபோட்டுப் பேசுகிறார்கள்! உலகத்திலே நாலு பேருக்குப் பயந்து வாழ வேண்டியிருக்கிறது!"

"சட், பொறாமைக்காரப்பயல்கள்! அவள் என் சகோதரி மாதிரி; என்னவோ, பாவம், ரொம்ப கஷ்டப்படும் குடும்பம்! மற்றபடி இப்படி..."

"நெருப்பு என்றால் வாய் சுடுமா? சொல்லிவிட்டேன்! ஒரு விஷயம் தெரியுமா? பக்கத்துத் தெரு ராமஸ்வாமி இருக்கிறாரே, அதான் 'ஹெட் கிளார்க்' அவர் தன் பையனுக்குச் சரியாகச் சீர் தரவில்லை என்று, பையனையும் மாட்டுப்பெண்ணையும் பிரிச்சு வைச்சுட்டார். கடுதாசி போடக் கூடாது. ஆறு மாசம் இப்படி இருந்ததா! பாவம், பருவப்பெண் அல்லவோ? உணர்ச்சி வசப்பட்டு கணவனுக்குக் கடிதம் எழுதியது. கடிதம் பிரித்துப் பார்த்தார் அவர். பையனாவது படிப்பதாவது...அப்போது தெருவில் வந்து தந்தி கொடுத்துவிட்டுத் திரும்பினான் தந்திச் சேவகன். பையன் கையில் பிரிபடாத தந்தி! பிரிக்க, அப்பெண் கிணற்றில் தஞ்சம் அடைந்து விட்டாளாம்...சீர், சீர் என்று பேராசை பிடித்தவரால், சீருக்கே சிறப்புதரும் குடும்பப்பெண்ணை இழந்தார். பையன் பாயைப் பிராண்டுகிறான்! பாவிகள்! பணம் செலவுக்கே தவிர, குவிப்பதற்கா? கையாலாகாதவன்கள்! சம்பாதிக்கத் திறமையற்றப் பேடிகள்! பிறரைக் கொள்ளையடிக்கும் தீவட்டி கொள்ளைக்காரர்கள்! படித்த மடையர்கள்! அயோக்கியர்கள்!...இத்தனைக்கும் பணப்பசை உடையவர் அவர்!"

"கோபால் என்ன இது?" சிவராமனின் குரல் கம்மியது.

"நண்பா, மன்னித்துவிடு. அன்பு செய்யக் கூடிய பெண் மனத்தைவிட, என்ன சிறந்த சீர் எவருக்குக் கிடைக்கும்? பையனும் பைத்தியம் ஆனான்? பணமே சுகம் தருவதற்குத்தானே? அவரை இனி யார் மதிப்பர்? ஏதோ கோப உணர்ச்சியில் திட்டிவிட்டேன் அப்பெண்ணின் கண்ணீர் அவரைச் சும்மா விடாது!"

"ஆமாம், ஆமாம்!" என்றான் சிவராமன்

"சரி, நான் ஏதோ பேசிவிட்டேன். சிவா, சீக்கிரமே இந்த அபவாதங்களை அழிக்க மனைவியை அழைத்துவிடு. மேலும் கல்யாணம் ஆகாத சரோவின் வாழ்வு வேறு இருக்கிறது. அதை ஏன் அழிக்கக் காரணமாக இருக்கவேண்டும். வரட்டுமா?"

கோபால் சென்றுவிட்டான்.

நெடுநேரம் தூங்காமல் படுக்கையில் புரண்டான் சிவராமகிருஷ்ணன்... மனத்தேள் அவனைப் பன்முறை கொட்டியது. அக்கடிக்கு மருந்து அருகில் இல்லையே?

7

"அப்பா, வீடு கிடைத்துவிட்டதாம். இன்றே புறப்படும்படி கடிதம் போட்டிருக்கிறார்" என்றாள் சுந்தரி! ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துவிட்டாள் அவள்.

"அப்பவே தெரியும் எனக்கு மாப்பிள்ளை நல்லவர் என்று." என்றாள் சீதா. பெருமை குரலில் பேசியது!

"அப்போ சீர்வகையறாவுக்கு......" சர்மா தயங்கினார்.

"அப்பா அதைப்பற்றியும் எழுதியிருக்கார்... சீர் விஷயமே தேவையில்லையாம். நான்தான் புறப்படணுமாம்" பெருமை உள்ள வெட்கம் வார்த்தைகளை அமுக்கியது.

"ஏது மனசு மாறிடுத்தா?"

"சரிசரி, தயாராக இரு. தேனபிஷேகம் தானடி நீ போன ஜன்மம் பண்ணியிருக்கே! அதிர்ஷ்டக்காரி! நான் சொன்னது என்றுமே சோடை போனதில்லே!"

"போம்மா!"........

தாமரை மலர் சூரியனைக் கண்டுதான் மலருகிறது. பெண்ணின் முகம் கணவனைக் கண்டு தான் மலருகிறது.

சர்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை! எல்லாம் புரிந்தமாதிரியும் திண்டாடினார்! "நமக்கு எது தான் புரிகிறது இவ்வுலகில்?"

சிட்டாய் அவள் தன் பொருள்களைப் பெட்டியில் வைத்து மூடினாள்.

ரயில் சர்மாவையும் சுந்தரியையும் மங்களூருக்கு அழைத்துச் சென்றது.

கொடிக்கு அழகு தருவது அணைக்கும் தருதானே? தரையிலா புரளுவது அது?

மழை தரும் மேகத்தைக் கண்டு மயங்கி மயில் தோகை விரித்து ஆடியது!

நீர் கிழித்த வடுபோல் சீர் மறைந்தது.

இரண்டாவது தீபாவளி

'எஸ்.ஜி.ஆர்'

உலகம் உற்சாகத்துடன் உறவாடிக் கொண்டிருந்தது. வெளி உலகம் ஆனந்த எக்களிப்பில் முக்கி முக்கி எழுந்து கொண்டிருந்தது'

தெரு முழுவதும் சிறுவர் சிறுமியர்களின் விளையாட்டு மைதானமாகக் காட்சி தந்தது. பாலர்முதல் இளைஞர்வரை கொளுத்தி எரிந்து கொண்டிருந்த பட்டாஸுகளின் சப்தம் தெருவையே இரண்டுபடுத்திக் கொண்டிருந்தன.

எங்கும் எந்த வீட்டிலும் எவர் உள்ளத்திலும் இன்ப ஊற்றைச் சுரக்கச் செய்து கொண்டிருந்தது, மறுநாள் வரவிருக்கும் தீபாவளி.

ஆனந்தம் அலைபாயும் அந்த நேரத்திலே, இன்ப வெள்ளம் பெருக்கெடுத்தோடும் அந்தச் சமயத்திலே, ஒருஜீவன்; ஒரே ஒருஜீவன் மட்டும் துன்பக்கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தது.

சாருமதி!

அவள் சாருமதியாகவா இருந்தாள் அப்போது அல்ல! சந்திரமதியாகத்தான் காட்சி தந்தாள் அவள். அவள் உடல் மட்டுமல்ல, உள்ளமும் அழுதது. காரணம்...?

தீபாவளிதான்! விடிந்தால் வரவிருக்கும் தீபாவளிதான். இந்தத் தீபாவளிப் பண்டிகை வராமலேயே இருந்திருந்தால், அவள் எத்தனையோ நிம்மதியாக இருந்திருப்பாள். ஆனல், அவள் வேண்டாமென்பதற்காகப் பண்டிகை வராமலேயே இருந்து விடுமா?

கூடத்திலே தங்கை பத்மா மெல்லிய குரலில், "உன்னைக் கண்டு நான் ஆட, என்னைக்கண்டு நீ ஆட உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி" என்று உற்சாகத்துடன் பாடிக்கொண்டிருந்தாள் தான் சமீபத்தில் பார்த்த சினிமா பாட்டை.

ஆமாம், உற்சாகத்துடன் ஆடும் நிலையில்தான் இருந்தாள் பத்மா. கொஞ்ச நேரம் போனல் அவளுடன் சேர்ந்து ஆட வந்து விடுவார் அவளுடைய அவர்! அப்பாகூட ஸ்டேஷனுக்குப் போய் விட்டார் பத்மாவினுடைய 'அவ'ரை அழைத்துக் கொண்டுவர. மறுநாள் அவளுக்குத் தலை தீபாவளியாயிற்றே. அவள் உள்ளம் உற்சாகத்தில் ஆடத்தானே செய்யும்.

ஆனல் சாருமதி...?

உற்சாகத்துடன் ஆடமுடியாவிட்டாலும்வருத்தத்துடன் வாடாமலாவது இருக்கக்கூடாதா?

எப்படி இருக்க முடியும்? மறுநாள் தீபாவளி—அதுவும் தங்கையின் தலை தீபாவளி. அவள் அடைய முடியாத ஆனந்தத்தைத் தங்கை மட்டும் அடையப்போகிருள். அதைப் பார்த்துக் கொண்டு அவள் எப்படி உற்சாகத்துடன் ஆட முடியும்?

சென்ற வருடம் இதே சமயத்தில், இதே தினத்தில்—தீபாவளிக்கு முன் தினத்தில், அவள் உள்ளமும் ஆடிக்கொண்டுதான் இருந்தது. தங்கை பத்மாவைவிட பன்மடங்கு உற்சாகத்துடன் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தது அவள் மனம். இன்று போயிருப்பது போலவே அன்றும் அவள் தந்தை அவளுக்குரிய 'அவ'னை அழைத்துவர ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தார். தலை தீபாவளியை எப்படி எப்படியெல்லாமோ கொண்டாடவேண்டும் என்று திட்டம்போட்டு வைத்திருந்தாள் சாருமதி. ஆனல்...?

திட்டம் மறுநாள் விடியற்காலையில்—அந்தத் தினத்தன்று-அந்தத் தலைதீபாவளி தினத்தன்று-தவிடுபொடியாகிவிடும் என்று கண்டாளா அவள்?

அவள் கணவன் ராஜாமணி வராமல் இல்லை, வந்தான். வரவேற்க வந்திருந்த மாமனாருடன் 'ஜம்'மென்று புதுமாப்பிள்ளை மிடுக்குடன்தான் வந்தான். ஆனால் வந்தவன்......?

தன் கடமையை மறந்தான். மனைவி என்ற உயிருள்ள — உணர்ச்சியுள்ள ஒரு ஜீவன் தனக்காக ஏங்கிக்கொண்டிருப்பதை மறந்தான். சுயநலக்காரனாக மாறிய அவன், அந்த விடியற் காலை நேரத்திலே, தன் புது மனைவியுடன் எண்ணெய் ஸ்நானம் செய்து புத்தாடையுடுத்தி மகிழ்ந்திருக்க வேண்டிய நேரத்திலே, அவளை வாட விட்டுவிட்டுச் சென்றுவிட்டான்.

அதற்குப் பிறகு அவன் திரும்பி வராததுமட்டுமல்ல, ஒரு கடிதம் — ஒரேஒரு கடிதம்கூடப் போடவில்லை.

ஏன்.........?

* * *

"விரலுக்குத் தகுந்த வீக்கம்தான் வீங்க வேண்டும். நம் அந்தஸ்துக்கு தகுந்த அந்தஸ்துள்ளவர்களிடம்தான் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும்" இந்தப் பொன்னான பழமொழியை மறந்துவிட்டார் ராகவாச்சாரி — சாருமதியின் தந்தை.

ஏழைக் குமாஸ்தாவான அவர், தன் மூத்த பெண்ணுக்குப் பட்டதாரியான மாப்பிள்ளை தேடியதே முதல் குற்றம். பண்புள்ள மாப்பிள்ளையாகத் தேடாதது இரண்டாவது குற்றம். கடன் வாங்கிக் கல்யாணம் செய்த அவர் சம்பந்தி வீட்டார் — ராஜாமணியின் பெற்றோர் கொடுத்த ஜாபிதாவுக்கு ஆயிரம் ரூபாய் குறைத்துச் சீர் செய்தது மூன்றாவது குற்றம். கல்யாணத்தின் போது எழவிருந்த அந்த ஆயிரம் ரூபாய்க் கலாட்டாவை நிறுத்துவதற்காக, தலை தீபாவளியின்போது அந்த ஆயிரம் ரூபாயைப் பணமாகவோ, அல்லது நகையாகவோ கொடுத்துவிடுவதாகப் பூசி மெழுகியது நான்காவது குற்றம்.

இப்படிக் குற்றங்களை அடுக்கிக் கொண்டே போனால், அதற்கு ஓர் எல்லையில்லாமலேயே போய்விடும்.

ராஜாமணியை அப்படியொன்றும் முரடன் என்று கூறிவிட முடியாது. திருமணத்துக்கு முன்பே, இவ்வளவு செய்தால்தான் செய்து கொள்ள முடியும் என்று ஒருஜாபிதா கொடுத்துவிட்டான். பையன் சொத்துள்ளவனாகவும், பட்டதாரியாகவும் இருக்கிறான் என்று, ராகவாச்சாரிதான் விரலுக்குத் தகுந்த வீக்கம் வீங்கப் பார்த்தார். பயன்...?

* * *

சாருமதிக்கு மணமான இரண்டு மாதங்களுக்குள்ளேயே தலை தீபாவளி வந்து

விட்டது. தந்தையின் கடிதத்துடன் பெண்ணின் அன்புக் கடிதமும் ராஜாமணிக்குப் பறந்தது, தீபாவளி அழைப்பாக.

தீபாவளிக்கு முன்தினம் ராஜாமணி கிளம்பும் பொழுது—

"ராஜா! கல்யாணத்தின்போது அவர்கள் சொன்னதை மறந்து விடாதே. தலை தீபாவளியின்போது அந்த ஆயிரம் ரூபாய்க்கு நகையாகவோ ரொக்கமாகவோ கொடுத்து விடுவதாகக்கூறி இருக்கிறார்கள். ஏமாற்றிவிட்டுப் போகிறார்கள். அவர்கள் சொன்னபடி செய்தால்தான் நீ அங்கு தீபாவளி கொண்டாடலாம், இல்லையோ...?"—அவன் அம்மா ஒரு முறைக்கு இருமுறையாகக் கூறி அனுப்பிய வார்த்தைகள்.

மறப்பானா ராஜாமணி அதை?

ரயிலிலிருந்து இறங்கிய மாப்பிள்ளையை ஸ்டேஷனிலேயே வரவேற்று அழைத்துச்சென்றார் ராகவாச்சாரி.

அன்று காலையிலிருந்தே இன்ப வானிலே சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தாள் சாருமதி

மறுநாள் தலைதீபாவளியாயிற்றே. அதுவும் தவிர திருமணத்துக்குப் பிறகு முதன் முறையாகக் கணவனைவேறு சந்திக்கப் போகிறாள். மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா?

அக்காக்காரி, ஓரிடத்தில் நில்லாமல் துள்ளித் திரிவதைக்கண்டு, அனுபவமில்லாத தங்கை பத்மாவால் விழிக்கத்தான் முடிந்தது அப்போது. பிறந்தது முதலே அவளுடன் இருந்துவரும் தங்கை, பெற்றோர்கள் முதலியவர்கள் உடன் இருக்கையில் எழாத ஆனந்தம்—நேற்று வந்து தாலிகட்டி சொந்தம்கொண்டு விட்டுச்சென்ற ஒருவன் வருகிறான் என்றவுடன் பீறிட்டுக் கிளம்புகிறது என்றால், பத்மாவுக்கு ஆச்சர்யமாகத்தான் இருக்கும். இயற்கையின் அந்த 'ரகசிய விளையாட்டு' மணமாகாத அவளுக்கு எப்படித் தெரியமுடியும்?

மாப்பிள்ளை வீட்டிற்குள் நுழைந்தான். வீடு திமிலோகப்படத் தொடங்கிவிட்டது.

* * * *

மறு நாள்! விடியற்காலை.

புனித நாள் தீபாவளித் திருநாள். மங்கள ஸ்நானம் செய்து, புத்தாடையுடுத்தி மகிழ வேண்டிய தினம். எல்லாவற்றிற்கும் மேலாக, சாருமதிக்கும் ராஜாமணிக்கும் தலை தீபாவளி. வாழ்க்கையிலேயே நாம் மறக்கமுடியாத ஒரே ஒரு நாளல்லவா அது?

"சாரு...சாரு" என்ற விடியற்காலை நான்கு மணிக்கு அவர்கள் படுத்திருந்த அறைக் கதவைத் தட்டினாள் தாயார்.

விழித்துக்கொண்ட சாருமதி கதவைத் திறந்தாள். ராஜாமணி தூங்கிக்கொண்டிருந்தான்.

"அவரை எழுப்பு, ஸ்நானம் செய்ய நேரமாகி விட்டது. உம்..." என்றாள் அம்மா.

வெட்கத்துடன் கணவனைத் தொட்டு எழுப்பினாள் சாருமதி.

சாருமதியின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டே எழுந்தவன், "அதற்குள்ளாகவா நேரமாகிவிட்டது?" என்றான்.

"அம்மா எண்ணெய் தேய்ச்சுக்கக் கூப்பிடறா" என்றாள் அவள்.

எண்ணெய் என்றவுடன் 'பட்'டென்று ராஜாமணிக்குப் புறப்படும்போது தன் தாய் கூறி அனுப்பியது நினைவுக்கு வந்தது.

வந்ததிலிருந்து அதுவரை, சாருமதியோ, அவள் தந்தையோ தீபாவளிக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியோ. கல்யாணத்தின்போது கொடுப்பதாகச் சொன்ன ஆயிரம் ரூபாயைப் பற்றியோ ஏதும் கூறவில்லை.

அவள் கைகளைப் பிடித்துக்கொண்டே எழுந்தவன், 'சட்'டென்று அவள் கைகளை விட்டுவிட்டு "சாரு... உங்கப்பா எங்கே? அவரைப் பார்க்கணும் அவசரமாக..." என்றான்.

சாரு போய் அப்பாவை அனுப்பிவைத்தாள்.

மாமனாரைக் கண்டவுடன், "மாமா! கல்யாணத்தின்போது நீங்க சொன்னதை மறந்திருக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன். தீபாவளிச் சீரோடு அந்த ஆயிரம் ரூபாயும் தயார்தானே...?" என்று, சுற்றி வளைக்காமல், நேரடியாகவே கேட்டுவிட்டான்,

ராகவாச்சாரி ஒரு கணம் மௌனமாக விருந்தார். மறு விநாடி, "மாப்பிள்ளை!" என்றார் குழைவாக, தீபாவளிச் சீர் செய்துவிட்டேன், ஆனால்...?"

ராஜாமணியின் புருவங்கள் இரண்டும் நெற்றிக்கு ஏறின.

'ஆனால்...?' என்று சிறிது தயங்கிய அவர், "ஆயிரம் ரூபாய் பணம்தான் பெயரவில்லை...... பெரிய மனசு பண்ணி கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். எப்படியும் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் கொடுத்து விடுகிறேன்..." என்னார் திணறியபடி.

"உம்..." என்று ஓர் உறுமல் பதிலாக வந்தது ராஜாமணியிடமிருந்து. அதே சமயம் அம்மா கூறி அனுப்பிய 'ஏமாற்றிவிடப் போகிறார்கள்' என்ற சொல் நினைவுக்கு வந்தது.

"என்னை என்ன ஏமாந்த மாப்பிள்ளை என்று எண்ணி தலையில் மிளகாய் அறைக்கிறீர்களா? கல்யாணத்தின்போது, நாணயம் தவறமாட்டீர்கள் என்று ஒப்புக்கொண்டேன். ஆனால், இப்போதல்லவா தெரிகிறது நீங்கள் நாணயமற்றவர் என்பது, நாணயமில்லாத உமது பெண்ணும் எனக்கு வேண்டாம்" என்றவன், குனிந்து தான் கொண்டுவந்த பெட்டியை எடுத்தான்.

"மாப்பிள்ளை" என்று மிகவும் பணிவுடன் கூறியவாறு, ராகவாச்சாரி அவன் கைகளைப் பிடித்தார்.

"விடும் கைகளை... மனுஷனுக்கு நாணயம் மிகவும் அவசியம். அதிலலாதவன் மனுஷனே யல்ல" என்று கூறிவிட்டு, பெட்டியுடன் வாசலை நோக்கி நடந்தான்.

அவன் ரேழியைக் கடக்கும்போது—

இரண்டு மென்மையான கரங்கள் அவன் கால்களைப் பிடித் ன. சூடான நீர்த்துளிகள் அவன் பாதங்களில் விழுந்தன.

"சீ! விடு காலை... நாணயமற்ற அப்பனுக்குப் பிறந்த பெண்தானே... நீ மட்டும் எப்படி இருப்பாய்...? உன் நீலிக் கண்ணீரையெல்லாம் கண்டு மயங்குபவன் நானல்ல..." என்று அவள் கைகளை உதறிக்கொண்டு விடுவிடென்று தெருவில் இறங்கி நடந்துவிட்டான்.

மாமனார் பின்னாலேயே ஸ்டேஷனுக்கு ஓடினார். ஆனால், மாப்பிள்ளைமட்டும் திரும்பவில்லை.

*   *   *   *

எட்டு மாதங்கள் எப்படியோ உருண்டோடி விட்டன. ராஜாமணி அன்று சென்றவன் சென்றவனே, திரும்பி வரவேயில்லை.

ராகவாச்சாரி மாப்பிள்ளைக்கு உருக்கமாகப் பல கடிதங்கள் எழுதினார். சாருமதி தன் கணவனுக்குக் கண்ணீரைக் கடிதங்களாக்கி அனுப்பி எதற்கும் பதிலே கிடையாது.

விரலுக்குத் தகுந்த வீக்கம் தான் வீங்க முயன்றதன் விளைவை எண்ணி, நாட்களை வருத்தத்துடன் தள்ளுவதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று அவருக்கு.

இந்தச் சமயத்தில்...

அக்கா சாருமதி அரதிர்ஷ்டசாலியாக வளைய வந்துகொண்டிருக்கும்போது, தங்கை பத்மாவுக்கு அடித்தது யோகம். வெறும் யோகமா அது...? ராஜயோகம் என்றுதான் சொல்ல வேண்டும் அதை.

அவர்கள் இருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில், விருந்தாளியாக வந்திருந்தான் நாராயணன் என்ற அந்த இளைஞன். தாய் தந்தையற்றவன். சொத்து அதிகம் இல்லாவிட்டாலும். கை நிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்தான்.

அவன் பத்மாவைப் பார்த்த வேளை, அவளுக்கு அதிர்ஷ்ட வேளை என்றுதான் சொல்லவேண்டும். கண்டவுடனேயே, பத்மாவிடம் மனத்தைப் பறி கொடுத்துவிட்டான் 'நாராயணன்.'

எதிர் வீட்டுக்காரர் சுற்றி வளைத்து, திருமண விஷயத்துக்கு வந்தார்.

உடனே ராகவாச்சாரி, "இதோபாரும்; ஆயிரம் ரூபாய் பணம் இல்லாத காரணத்தால் முதல் பெண் வாழாவெட்டியாக இருக்கிறாள். இப்போதிருக்கும் நிலையில் பணம் கிடைத்தால்கூட, முதலில் அவளை மாமியார் வீட்டுக்குத்தான் அனுப்புவேன். பத்மாவின் கல்யாணத்தைப்பற்றி நான் யோசிப்பதே இல்லை. அது ஆண்டவன் கையில் தான் இருக்கிறது" என்று தனது வறுமையைத் திட்ட வட்டமாகக் கூறிவிட்டார்.

'பத்மாவின் கல்யாணம் என் கையில்தான் இருக்கிறது' என்று நாராயணன் கூறவில்லை. செயலில் காண்பித்து விட்டான். தன்னுடைய சொந்தச் செலவில். திருப்பதியில் பத்மாவை மணந்து கொள்ளுவதாக அவனே ராகவாச்சாரியிடம் சென்று தெரிவித்தபோது, அவர் அவனை மனிதனாக நினைக்கவில்லை. மகானாகத்தான் எண்ணினார்.

உலகிலே இரண்டு விதமான மனிதர்கள் இருக்கிறார்கள். நல்லவர்கள்; கெட்டவர்கள். அது போல், இரண்டுவிதமான மாப்பிள்ளைமார்களும் இருக்கின்றனர். பணம் கொடுக்கவில்லையென்று மனைவியைத் தள்ளி வைக்கும் மாப்பிள்ளை; பணத்தைக் கொடுத்துக் கல்யாணம் செய்து

வாஸ்மால்

ஏன் கேசகருமைக்குச் சிறந்ததென்பதற்கு

3

நல்ல காரணங்கள்

✱ உண்மையிலேயே கேசத்தைக் கறுப்பாக்குவதோடு, நரையைத் தடுக்கிறது.

✱ கேசவளர்ச்சியை ஊக்குவதோடு பொடுகு, சொட்டை முதலிய கேச நாசினிகளைத் தடுக்கிறது.

✱ சிறந்த கேச சாதனமாவதோடு, மென்மையான நறுமணத்தைக் கொண்டு, கேசத்தை நன்கு பாதுகாக்கிறது.

Vasmol
The HAIR DARKENER that keeps its promise

வாஸ்மால்

பெயருக்கேற்ற கேசகருமைத் தைலம்

ஹைஜனிக் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்
தபால்பெட்டி 1192, – பம்பாய்-1.

—: சென்னை ராஜ்ய வினியோகஸ்தர்கள் :—
R. L. கௌடர் & கம்பெனி
59, பந்தர் தெரு, – மதராஸ்.

கொள்ளும் மாப்பிள்ளை. நாராயணனையும் ராஜாமணியையும் எடை போடாமல் இருக்க முடியவில்லை ராகவாச்சாரியால்.

ஆடம்பரம் ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி, தன் சொந்தச் செலவில், திருப்பதியில் பத்மாவைத் தனது மனைவியாக்கிக் கொண்டான் நாராயணன் தீபாவளிக்குப் பிறகு, நாள் பார்த்துக்கொண்டு விடுவதாக ராகவச்சாரி கூறிவிட்டதால் பிரியா விடை பெற்றுச் சென்றான் அவன்.

கடிதங்கள் பத்மாவுக்கும் நாராயணனுக்கும் பாலம் அமைத்துக் கொண்டிருந்தன.

* * *

இந்தச் சமயத்தில்—

தீபாவளி நெருங்கிக்கொண்டிருந்தது. பத்மாவின் தலை தீபாவளி, அவளையும் அவள் கணவனையும் ஒன்றாகச் சேர்க்கப்போகும் தீபாவளி அல்லவா அது?

பத்மா வாசல் அறையில் உட்கார்ந்துகொண்டு தன் அன்புக் கணவனுக்கு தீபாவளி அழைப்புக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள்.

கூடத்தில் உட்கார்ந்தவாறு இதைக் கவனித்துக்கொண்டிருந்த சாருமதிக்குப் பழைய எண்ணங்கள் குமிழியிட்டன. சென்ற வருடம் அவளும் இதேமாதிரித்தானே—

அந்த நினைவு வந்தவுடனே 'சட்'டென்று அவளுக்கு ஓர் எண்ணம் பிறந்தது. "நாமும் அவருக்கு ஒரு கடிதம் எழுதினால் என்ன?"

அசட்டு யோசனைதான் இது. அவள் இதுவரை எத்தனையோ கடிதங்கள் எழுதிவிட்டாள் ராஜாமணிக்கு. எதற்குமே அந்த மலை அசைந்து கொடுக்கவில்லை. பத்மாவின் திருமணத்திற்குக் கூட வராதவன் ஆயிற்றே அவன். அவனா மசிவான்?

இருந்தும், பத்மா கடிதம் எழுதுவதைக் கண்டதும், தானும் தன் கணவனுக்கு எழுதவேண்டும் போலிருந்தது அவளுக்கு. உடனே பேனாவையும் பேப்பரையும் எடுத்து, எழுத உட்கார்ந்துவிட்டாள் அவள்.

"அன்புள்ளவருக்கு..." என்று ஆரம்பித்தவுடனேயே அவளுக்கு விரக்தியுடன் சிரிக்கவேண்டும் போலிருந்தது. அன்புள்ளவராக இருந்தால் அற்ப பணத்துக்காக அவளைப் பிரிந்திருப்பாரா...? கடிதம் தொடர்ந்தது.

"அடுத்தவாரம் தீபாவளிப் பண்டிகை சென்ற வருடம் உங்களையும் என்னையும் பிரித்த அதே தீபாவளிப் பண்டிகை, அதிர்ஷ்டக்காரி என் தங்கை பத்மாவுக்குத் தலை தீபாவளியும் கூட.

ஆயிரம் ரூபாயிலே நம் உறவு ஊசலாடும் என்று நான் கனவுகூடக் கண்டவளில்லை. சென்ற வருடம் தீபாவளிக்கு நீங்கள் வந்தது, எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவதற்கு முன்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.

பிராங்கைடிஸ், தொண்டைப்புண், மண்டைநீர், அடைப்பு, ஜலதோஷம் மற்றும் இருமலுக்கு உடனேயே நிவாரணமளிக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

FPY-54-TAM.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

சோல் ஏஜண்டுகள்:-
தாதா அண்டு கம்பெனி,
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3

அப்பாவைக் கூப்பிட்டது; இல்லை என்று தெரிந்ததும் நமது தலை தீபாவளி என்பதையும் மறந்து, அப்போதே கிளம்பிச் சென்றது எல்லாவற்றையும் நினைக்கும்போது என் நெஞ்சு வெடித்துவிடும்போலிருக்கிறது.

நான் போட்ட எத்தனையோ கடிதங்களுக்குப் பதில் இல்லை. இந்தக்கடிதத்தையும் நீங்கள் கிழித்து எறிந்துவிடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் உங்களுக்கு எழுதவேண்டும் என்று தோன்றிற்று. எழுதிவிட்டேன். உங்களை இனி நான் எப்போது காண்பேனோ? சாவதற்குள் ஒருமுறை உங்களைக் கண்டுவிடுவேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இப்படிக்கு,
துர்ப்பாக்கியசாலியான
தங்கள் மனைவி,
சாருமதி."

கடிதத்தை எழுதி முடித்த சாருமதி நிமிர்ந்தாள். பத்மா, தன் கணவனுக்கு எழுதிய கடிதத்துடன், தபாலாபீஸுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தாள்.

"பத்து... அப்படியே இந்தக் கடிதத்தை அவர் விலாஸத்துக்கு அனுப்பிவிட..." என்று தன் கடிதத்தையும் அவளிடம் கொடுத்தாள்.

பத்மா மௌனமாகக் கடிதத்தை வாங்கிக் கொண்டு சென்றாள்.

* * *

பத்மாவின் கடிதம் கண்டவுடனேயே, தீபாவளிக்கு முன் தினம் தான் புறப்பட்டு வருவதாக மாமனாருக்குக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டான் நாராயணன். மாமனாரும் மாப்பிள்ளையை அழைத்துவர ஸ்டேஷனுக்குச் சென்றுவிட்டார்.

இரவு மணி எட்டு!

குட்டி போட்ட பூனைபோல் உள்ளுக்கும் வாசலுக்கும் நடந்து கொண்டிருந்தாள் பத்மா. ஏழு மணியிலிருந்தே, அவள் இவ்வாறு நடை பழகிக்கொண்டிருக்கிறாள்! பாழாய்ப்போன ரயில் சீக்கிரம் வந்து தொலைக்கப்படாதோ' என்று அவள் மனம் ரயில்வேக்காரனைச் சபித்துக்கொண்டிருந்தது.

சாருமதி இதயத்தைக் கல்லாக்கிக்கொண்டு, இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள்.

மணி எட்டு முப்பது!

வாசலில் வண்டிச் சப்தம்!

மானைப் பாய்ந்தாள் பத்மா. வண்டி அவர்கள் வீட்டுக்குத்தான்.

வண்டியிலிருந்து முதலில் இறங்கினார் ராகவாச்சாரி. அடுத்து இறங்குபவரை வரவேற்க, ஆவலுடன் கண்களைக் கொட்டியபடியே வாயிற்படியில் நின்றுகொண்டிருந்தாள் பத்மா. வண்டிக்குள்ளிருந்து மாப்பிள்ளை இறங்கினான்.

ஆனால் இதென்ன...? பத்மாவின் முகம் ஏன் இப்படிப் போய்விட்டது...? கண்கள் ஏன் அப்படி நிலைக்குத்தி நிற்கின்றன? காரணம்...?

வண்டியிலிருந்து இறங்கியது—

மாப்பிள்ளையேதான்! இரண்டாவது மாப்பிள்ளையல்ல; மூத்த மாப்பிள்ளை. நாராயணன் அல்ல; ராஜாமணி. பத்மாவின் கணவனல்ல; சாருமதியின் கணவன்.

ஆச்சர்யம், ஆனந்தம், குழப்பம், கலவரம் ஆகிய உணர்ச்சிகளால் சூழப்பட்டு, ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டாள் அவள்.

சாருமதிக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. உள்ளே நுழைந்த கணவன் கால்களில் உணர்ச்சிப் பெருக்கால், தொப்பென்று விழுந்த அவளைத் தூக்கி நிறுத்திய ராஜாமணி "வந்துவிட்டேன் சாரு, வந்துவிட்டேன். தலை தீபாவளி கொண்டாட வந்துவிட்டேன். உங்கப்பா இவ்வளவு பெருந்தன்மையானவர் என்று எனக்கு முன்பே தெரியாமல் போய்விட்டதே? இவ்வளவு நாணயமானவர் என்பது அப்போதே தெரியாமல் போய்விட்டதே. நடந்த நிகழ்ச்சிகளை எனக்காக நீ மறந்துவிடு..." என்று கூறிய போது, அவளுக்குத் தலையும் புரியவில்லை வாலும் புரியவில்லை. ஆனால் அப்போதிருந்த சூழ்நிலையில் அவள் எதையுமே புரிந்துகொள்ள முயலவில்லை. வராத கணவன் — கொண்டாட முடியாத தலை தீபாவளியைக் கொண்டாட வந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியில், அவள் காரணம் ஏதும் கேட்கவே விரும்பவில்லை.

ஆனால், பத்மாவோ...?

குதித்துக் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தாள், சோகப் பதுமையாக உட்கார்ந்து விட்டாள் ஓர் இடத்தில். சாருமதி பத்மாவாகவும் பத்மா சாருமதியாகவும் மாறிவிட்டனர் ஒரு கணத்தில்.

வருத்தம் எதனால் அவளுக்கு? சாருவின் கணவன் வந்து விட்டதாலா? அல்ல...? தன் கணவன் வராததால். ஆமாம், எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவள் கணவன், அன்று இரவு முழுவதும் வரவே இல்லை.

* * *

விடிந்தது!

பத்மா கொண்டாட வேண்டிய தலை தீபாவளி சாருமதி ஆனந்தத்துடன் கொண்டாடிக் கொண்டிருந்தாள். பத்மாவின் கணவன் வராததால், அவனுக்கென்று வாங்கி வைத்திருந்த ஜரிகை வேஷ்டியை ராஜாமணிக்குக் கொடுத்து விட்டார் ராகவாச்சாரி.

மங்களஸ்நானம் செய்து, புத்தாடையுடுத்தி தன் கணவனுடன் சிறு குழந்தைபோல் வாசலில் பட்டாஸ் வெடிக்கும் சாருமதியைப் பார்த்தவாறு ரேழியில் நின்றுகொண்டிருப்பதைத் தவிர, வேறு ஒன்றும் அவளால் செய்யமுடியவில்லை.

வருகிறேன் என்று கடிதம் போட்ட நாராயணன் ஏன் வரவில்லை?

* * *

காலை மணி எட்டு.

வாசலில் மணிச் சப்தம் கேட்டது. பத்மா வெளியே வந்தாள். தபால்காரன்தான். எக்ஸ்பிரஸ்டெலிவரியை வாங்கிக்கொண்டு கையெழுத்துப்போட்டு அவனை அனுப்பிவிட்டுக் கவரைப்பிரித்தாள். அவளுக்குத் தெரியும் நிச்சயம் அது தன் கணவனிடமிருந்து வந்த கடிதம்தான் என்பது.

"அன்புள்ள பத்மா,

பாவம் நேற்று என்னை எதிர்பார்த்து நீ ரொம்பவும் ஏமாற்றமடைந்திருப்பாய். அதே சமயம், அக்கா சாருமதி, மிகவும் ஆனந்தப்பட்டிருப்பாள், காரணம், நான் வரவேண்டிய இந்த ரயிலில் அவள் கணவர் ராஜாமணி வந்திருப்பது தான். இல்லையா?

புரியவில்லையா? கடிதத்தை மேலே படி.

சென்ற வாரம், என்னை வரச்சொல்லி நீ ஒரு கடிதம் எழுதினாய் அல்லவா? அந்த கடிதத்துடன் மற்றொரு கடிதமும் இணைந்திருந்தது. உன் அக்கா சாருமதி தன் கணவன் ராஜாமணிக்கு எழுதிய சோகக் கடிதம்தான் அது. தவறுதலாக அந்தக் கடிதத்தையும் உன் கடிதத்துடன் சேர்த்து எனக்கு அனுப்பிவிட்டாய் நீ. அது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது தெரியுமா?

ஆயிரம் ரூபாயிலே ஊசலாடும் உன் அக்காவின் வாழ்வை எனக்குத் தெளிவாகப் புரியவைத்துவிட்டது அந்தக் கடிதம். மணமாகியும், தலை தீபாவளி கொண்டாட முடியாமல் வாடும் சாருமதியின் வேதனையை என்னால் தாளமுடியவில்லை. அவள் வேதனையில் உருகும் இந்நேரத்தில், நாம் மட்டும் ஆனந்தமாகத் தலை தீபாவளி கொண்டாடுவதா? அக்காவுக்குத்தானே தலை தீபாவளி முதலில் வரவேண்டும்? அதுதானே நியாயமும்கூட. அப்படியிருக்க தங்கைக்குத் தலை தீபாவளி முதலில் வரலாமா?

ராஜாமணி இதற்கு முன் என்னைப் பார்த்தது கிடையாது. அதுவும் நல்லதாகப் போய்விட்டது. நானே நேரில் சென்று, நான் யாரென்று கூறாமலேயே, உன் தந்தை கொடுக்கச் சொன்னதாக ஆயிரம் ரூபாயை அவனிடம் கொடுத்தேன். பணத்தைக் கண்டதும் மலைத்துவிட்டான் அவன். உன் தந்தை தலை தீபாவளி கொண்டாட அவசியம் அவனை வரச்சொன்னதாக ஒருமுறைக்கு மூன்று முறையாகக் கூறிவிட்டு வந்தேன். இந்நேரம் சாருமதியும் ராஜாமணியும், தங்களது இரண்டாவது தீபாவளியைத் தலை தீபாவளியாகக் கொண்டாடிக் கொண்டிருப்பார்கள் அங்கே.

பத்மா? வருத்தப்படாதே. தலை தீபாவளிக்கு நான் வரவில்லையே என்று கவலைப்படாதே. அடுத்த வருடம் ஜமாய்த்து விடுவோம் நம் தலை தீபாவளியை. அடுத்த வாரம் உன்னைக்காண

அங்கு வருகிறேன். இதற்குள் தன் கணவனுடன் சந்தோஷமாக மாமியார் வீட்டுக்குப் போய்விட்டிருப்பாள் உன் சகோதரி என்று நினைக்கும் போது எனக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா? கடைசியாக ஒன்று. இந்தக் கடிதம் பற்றி ஒருவரிடமும் மூச்சுவிடாதே.

இப்படிக்கு,
நாராயணன்"

கடிதத்தைப் படித்து முடித்த பத்மா தலை நிமிர்ந்தாள். அதே சமயம் அவள் உள்ளம் தனக்குத்தானே கூறிக்கொண்டது:

"அக்காவின் கடிதத்தை நான் மறந்துபோய் ஒன்றும் என் கடிதத்துடன் அவருக்கு அனுப்பவில்லை. தெரிந்தேதான் அனுப்பினேன். அக்காவின் கடிதம் அவள் கணவரின் உள்ளத்தைத் தான் தொட முடியவில்லை. நிச்சயம் என் கணவரின் மனத்தைத் தொடும் என்று எனக்குத் தெரியும். நான் எதிர்பார்த்ததுதான் நடந்தது. அவர் தீபாவளிக்கு வராததுதான் நான் எதிர்பாராதது."

"என்ன கடிதம் அது?" என்று கேட்டுக்கொண்டே வெளியே வந்தார் ராகவாச்சாரி.

"மாப்பிள்ளைக்கு லீவு கிடைக்கவில்லையாம். அதனால் தீபாவளிக்கு வர முடியவில்லையாம்" என்று கூறிவிட்டாள், அவள்.

வாசல் அறையில், சாருமதியும் ராஜாமணியும் வாய்விட்டுச் சிரிக்கும் சப்தம் பத்மாவின் செவிகளில் விழுந்தது.

இப்போது அவள் மனத்தில் கலக்கம் இல்லை; கலவரம் இல்லை; துயரம் இல்லை. பண்பும் அன்பும் கொண்ட கணவர் தனக்கு வாய்த்திருக்கிறார் என்ற பெருமிதம்தான் அங்கே நிழலாடியது.

அழகிய அச்சு வேலைகளுக்கு
புதிதாக தயாரிக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள்!

லலிதா ரோமன்
(Patent Regd. No. 94604-D)

14 pt. 60 lbs.
உலகம் பல தொழிலில் சுழன்று
லும் ஏர்த்தொழிலின் பின் நிற்

12 pt. 60 lbs.
கின்றது; உழவு செய்ய முடியாமல்
மற்றத் தொழிலைச் செய்கின்றவர் எல்
லாரையும் தாங்குவதால் உழவு செய்

11 pt. 60 lbs.
கின்றவர் உலகத்தார்க்கு அச்சு ஆணி
போன்றவர். உழவுத் தொழில் செய்து
அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்

10 pt. 60 lbs.
றவரே உரிமையோடு வாழ்கின்றவர்; மற்றவர்
எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின்
செல்கின்றவரே. நெல்வளம் உடைய தண்

9 pt. 60 lbs.
ணளி பொருந்திய உழவர்கள், பல அரசரின்
குடைநிழல்களையும் தம் குடையின்கீழ்க் காண
வல்லவர் ஆவர். கையால் தொழில் செய்து

8 pt. 30 lbs.
உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர்
பிறரிடம் சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு
ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார். உழவருடைய கைத்

கிடைக்குமிடம் :—
தி மதராஸ் டைப் பவுண்டரி, 38, ஜோன்ஸ் தெரு
மதராஸ் - 1



பனசங்கரி ஆலயமும் புஷ்கரணியும்.

மகுடேஸ்வரர் ஆலயம்

அ. ரா. கிருஷ்ணமூர்த்தி

அகஸ்திய முனிவருக்குத் திடீரென்று ஒருநாள், கல்யாணம் செய்துகொண்டு புத்திரப் பேறு கொள்ள வேண்டுமென்று ஆவல் தோன்றிற்று. எல்லோரையும் போலவே அவரும் தன் மனைவி சிறந்த அழகியாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். இதைப் போய் பிரம்ம தேவனிடம் எப்படிச் சொல்லுவது என வெட்கப்பட்டாரோ என்னமோ அவரிடம் போகவில்லை! அழகில் சிறந்த ஒரு பெண் குழந்தையைத் தானே சிருஷ்டி செய்தார். அந்தக் குழந்தை பெண்மையடையும் வரை வளர்வதற்காக விதர்ப்ப நாட்டு மன்னனிடம் விட்டு விட்டு தவம் செய்யப் போய்விட்டார். விதர்ப்ப மன்னன் அந்த குழந்தைக்கு லோபா முத்ரை எனப் பெயரிட்டு தன் சொந்த மகளைப் போல பாவித்து வளர்த்து வந்தான். வயதடைந்ததும் யௌவனத்தின் முழு பூரிப்போடு விளங்கினாள் லோபா முத்ரை. அக்கம் பக்கத்திலிருந்த ராஜ குமாரர்களுக்கு இது முனிவர் விவகாரம் என்று தெரியும். லோபா முத்ரையின் அழகில் கொஞ்சம் சபலம் தட்டியும் அவர்கள் ஒருவர்கூட அந்தப்பக்கம் நாடவில்லை. அகஸ்தியர் தன் தவத்தையெல்லாம் ஒரு வழியாக முடித்துக் கொண்டு லோபா முத்ரையை முறைப்படி மணந்து கொண்டார். அப்போது புத்திர உற்பத்திக்குச் சரியான காலமாக அகத்தியருக்குப் படவில்லை. லோபா முத்ரையை அழைத்துக்கொண்டு கங்காத் வாரத்திற்குச் சென்று நிஷ்டையில் அமர்ந்து விட்டார்.

வெகுகாலம் கழித்து கண் விழித்து எழுந்து லோபா முத்ரையை அணுகினார். அவளுடைய தெய்வீக அழகு அப்போது அகஸ்தியரைக் கவர்ந்தது. அவள் சிவந்த மேனியில் மரவுரி பளிச்சென்று துலங்கியது. காதுகளில் ருத்ராக்ஷ குண்டலங்களும், கழுத்தில் துளசி மணி மாலையும் அவளுக்கு ஆபரணங்களாயிருந்தன. அரண்மனையில் ராஜபோகத்தில் வளர்ந்த லோபாமுத்ராவுக்கு முனிவர் தன்னை அணுகும்போது. நகைகள் பூட்டி அலங்கரித்துக்

கொள்ள வேண்டுமென்று ஆசை. கணவரிடம் மெல்லத் தன் விருப்பத்தை வெளியிட்டாள். அகஸ்தியருக்கு அதெல்லாம் அவசியமாகப்படவில்லை. 'ஆடைகளும் ஆபரணங்களும் இவளுக்கு மேலும் எப்படி அழகுதர முடியும். இவள் உடலில் புரளுவதால் அவைகளல்லவோ அழகு பெற வேண்டும், என்று எண்ணினர். ஆனுலும் மனையாளின் விருப்பத்தை ஒதுக்க முடிய வில்லை.

ஆபரணங்களை யாசிப்பதற்காக ஓர் அரசனிடம் சென்றார். அவன் அகஸ்தியரை மிகுந்த பயபக்தியோடு வரவேற்று அவர் பாதங்களைக் கழுவிப் பூஜித்தான். அகஸ்தியர் அவனை வாயாரவாழ்த்தி அவன் அதிதியாகத் தங்கினர். பின்பு அவர் கோரிக்கையை அரசனிடம் மெல்ல வெளியிட்டார், அதைக்கேட்டதும் மன்னன் உண்மையில் பயந்துவிட்டான். அவன் அரண்மனையிலுள்ள பொக்கிஷங்களையும், பொன்னையும் ஆபரணங்களையும் சேர்த்தால்கூட அகத்தியர் கேட்பதற்குத் தகுந்த பெருமானம் ஆகாதே! இருந்தாலும் அவருக்கு யோசனையாவது சொல்லுவோம் என்ற முறையில் "முனிவர் பெருமானே! மேற்கு மலைத்தொடர் பகுதியில் மணிமதி என்ற பகுதியை தானவ இல்வலன் என்ற அரக்கன் தன் தம்பி வாதாபியுடன் ஆட்சி புரிந்து வருகிறன். தாங்கள் கேட்கும் அவ்வளவு பொருள்கள் அவனைத்தவிர வேறு யாரிடமும் இல்லை. ஆனுல் அவன் முனிவர்களை அதிதிகளாகக்கொண்டு வஞ்சனையால் கொன்று புசித்துவிடுவதாக சொல்லுகிருர்கள். ஆகையால் தங்களை மணிமதிக்குப் போகும்படிச் சொல்லவும் என் மனம் உடன்படவில்லை" என்ருன்.

அகஸ்தியர் அரக்கனின் குணங்களை பொருட்படுத்தவில்லை. அவனிடம் செல்வம் இருக்கிறது என்று தெரிந்ததில் மகிழ்ச்சியடைந்து உடனே புறப்பட்டார். இல்வலன் அகஸ்தியரை மிக்க மரியாதையுடன் வரவேற்று பலவித உபசாரங்கள் செய்தான். அவர் கேட்கும் பொருள்களையெல்லாம் தருவதாக வாக்களித்தான். அகஸ்தியர் மனம் குளிர்ந்தது. இல்வலனின் அதிதியாகத் தங்கினர். வழக்கம் போலவே இல்வலன், அவன் தம்பி வாதாபியை ஆடாக மாற்றிச் சமைத்து அகஸ்தியருக்கு விருந்திட்டான். இல்வலனும், வாதாபியும் அதிதிகளை இப்படித் தான் உபசரித்து விருந்தளிப்பது வழக்கம். அதிதியாக வருபவர் அதை புசித்து எழுந்ததும் "வாதாபி...ஓடிவா!" என்று இல்வலன் கூப்பிடுவான். விருந்தினரின் வயிற்றைக் கிழித்துக் கொன்று ஆடாக இருந்த வாதாபி வெளி வருவான். இதே முறையைப் பின்பற்றி "வாதாபி வெளியே வா" என்று அழைத்தான் இல்வலன். அகஸ்தியருக்கு விஷயம் புரிந்து விட்டது. வாதாபி உணவாக இருக்கும் தன் வயிற்றை மேலாக தடவி விட்டார். அழுத்தமாக ஓர் ஏப்பத்துடன் "வாதாபி, ஜீர்ணமாகி விடு–" என்றும் சொல்லிவிட்டார். வாதாபி அகஸ்தியர் வயிற்றில் முழுதாக ஜீர்ணமாகி விட்டான். தானவனுக்கு நடுக்கம் கண்டது. மிகுந்த தபோ வலிமை படைத்த அகஸ்தியரைக் குறைவாக மதிப்புப் போட்டது தவறு என உணர்ந்தான். என்ன செய்வது! காலம் கடந்த யோசனை பயன் படவில்லை. அகஸ்தியரின் பார்வையில் இல்வலன் பிடி சாம்பலாகி விட்டான்.

இந்த இடம் மகுடேஸ்வரர் ஆலயம் உள்ள இடம் என்கிருர்கள். அந்த ஆலயத்தில் உள்ள விஷ்ணுபுஷ்கரணி என்ற குளம் அகஸ்திய முனிவரால் தோற்றுவிக்கப்பட்டதாம். சில புண்ணிய தீர்த்தங்களில் நீரர்டினுல் கங்கையில் ஸ்நானம் செய்த பலன் என்றுசொல்லுவார்கள்.இந்த புஷ்கரணியில் ஸ்நானம் செய்தால் கங்கைக் கரையில் தவம் செய்த பலன் என்கிருர்கள். அதிலும் வைகாசி மாத லளித பௌர்ணமியன்று ஸ்நானம் செய்வது மிக விசேஷம் என்று அநேக யாத்ரிகர்கள் அன்று அங்கே கூடுகிருர்கள்.

அந்த விஷ்ணு புஷ்கரணியைப்பற்றி ஒரு கதை உண்டு (ஒரு ராஜகுமாரிக்குப் பைத்தியம் பிடித்தது. நரியைப்போல முகம் இருந்தது, என்று இது போன்ற கதைகளுக்குக் காசி ராஜனின் பெண்ணை தான் கதாநாயகியாக வைத்துச் சொல்லுவார்கள்) அதைப்போலவே இந்தக் கதையிலும் காசிராஜன் பெண்தான் குரங்கு முகத்தோடு பிறக்கிருள். அவள் உடல் பாகமெல்லாம் மனித ரூபத்திலும், முகம் உட்பட தலை குரங்கு உருவோடும் இருந்ததாம். மிகவும் மனவருத்தத்தோடு இருந்த ராஜனுக்கு அந்தப் பெண் வயதடைந்ததும் பெருங் கவலை பிடித்துக்கொண்டது. அவளைக் கல்யாணம் செய்து தர வேண்டுமே! எவன் இந்த குரங்குமுகப் பெண்மணியை மணந்து

கொள்ளுவான்! பல அறிஞர்களைக் கண்டு ராஜா தன் குறையைச் சொல்லிக்கொண்டான். எவரும் அவன் கவலையைப் போக்க முடியவில்லை. ஒரு நாள் சாதுகர்ண என்ற அறிஞரைக் கண்டு தன் வருத்தத்தை வெளியிட்டான். அவர் திரிகால ஞானியாதலால் அவன் பெண் முன் பிறப்பில் குரங்காக இருந்து மகுடேஸ்வரர் ஆலயத்தின் சுற்றுப் புறத்தில் இருந்ததாக தெரிவித்தார். கடைசி காலத்தில் விஷ்ணு புஷ்கரணியின் கரை மீது இருந்த ஔதும்பர மரத்தில் இருந்து கொண்டு அந்த குரங்கு உயிரிழந்ததும் உடல் குளத்தில் விழுந்து விட்டது. அப்போது தலை மட்டும் நீரோடு தாழ்வாக இருந்த மரக் கிளையில் சிக்கிக் கொள்ளவே நீரில் படவில்லை விஷ்ணு புஷ்கரணி நீரில் முழுகிய புண்ணியத்தால் உடல் மனித உருவோடும் தலை புஷ்கரணி நீரில் படாததால் குரங்கு வடிவத்தோடும் பிறந்திருப்பதாக சாதுகர்ண சொன்னர். காசி ராஜன் தன் மகளை அழைத்துக்கொண்டு போய் விஷ்ணு புஷ்கரணியில் ஸ்நானம் செய்வித்ததும் முகமும் மனித உருவடைந்து விட்டதாம்.

இந்த விஷ்ணு புஷ்கரணியில் ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. அதனுள் ஒரு பக்கம் பஞ்ச முகலிங்கம் இருக்கிறது. நான்கு பக்கங்களிலும் நான்கு முகமும், மேல் பக்கம் ஒரு முகமுமாக ஐந்து முகங்களைக்கொண்ட அந்த லிங்கத்தைத் தரிசனம் செய்ய நீரில் முழுகி மண்டபத்தினுள் தலையைத் தூக்கிப் பார்க்க வேண்டும். அந்த பஞ்ச முகங்கள் ஒவ்வொன்றிலும் தான் என்ன பொலிவு. இந்த மண்டபத்துக்குள் ஒருவரும் லேசில் காண முடியாதபடி வந்து இருக்கிறேமே என்ற பெருமிதமா! மற்றொரு பக்கத்தில் ஒரு லிங்கம் இருக்கிறது. அந்த மூர்த்தியை சங்கரலிங்கம் என்கிறார்கள்.

அந்த குளத்தையும் அதன் நடுவில் உள்ள மண்டபத்தையும் நிர்மாணித்தவர்களின் கற்பனைதான் என்ன! மலையருவி ஒன்று எந்தப் பக்கமாக வருகிறது, எங்கிருந்து வருகிறது என்றுகூடத் தெரியாமல் குளத்தில் வந்து கலக்கிறது. மற்றொரு பக்கம் இன்னொரு சிறு ஓடை வழியாக ஜலம் வெளியேறி பாபவிநாசம் என்ற மற்றொரு சிறு குளத்தை நிரப்புகிறது. இந்த குளத்தின் கரையை ஒட்டி ஒரு விநாயகர் அமர்ந்திருக்கிறார். இதிலிருந்து இன்னொரு வாய்க்கால் வழியாக ஜலம் வெளியேறுகிறது. விஷ்ணு புஷ்கரணியில் எப்போதும் ஒரே அளவான புத்தம் புதிய மலை ஊற்று நீர். அந்த ஜலத்தைப் பருக தான் என்ன இன்பம்! குளத்து ஜலத்துக்கு ருசி உண்டா என்று தோன்றும். வாய்க்கு ருசி மட்டுமல்ல. உடலெல்லாம் ஒரு கிலு கிலுப்பு அந்த ஜலத்தைப் பருகிய உடன் ஏற்படுகிறது. பத்து மைல் நடந்தோ வண்டியிலோ வந்த களைப்பெல்லாம் ஒரு வாய் நீரை அள்ளிப் பருகியவுடன் பறந்து விடுகிறது.

பத்து மைல் வண்டி சவாரியோ, கால் நடையோ இல்லாமல் மகுடேஸ்வரர் ஆலயத்திற்கு வரமுடியாது தற்போது மஹாகூட் என்று வழங்கும் மகுடேஸ்வரர் ஆலயம் பீஜ்பூர் ஜில்லாவில் உள்ள பாதாமி (பண்டைய வாதாபி) யிலிருந்து பத்து மைல் தூரத்தில் மலையடிவாரத்தில் இருக்கிறது. இதன் அருகில் ஊரோ, வேறு வீடுகளோ கிடையாது. மலையடிவாரத்தில் அடர்ந்த தோப்பின் மத்தியில் உள்ள மகுடேஸ்வரர் ஆலயத்திற்குப் போவதற்கு பாதாமியிலிருந்து டாங்காவில் போகலாம். வாடகைதான் ஏழு ரூபாய் கேட்கிறார்கள். நடந்தும் வரலாம். ஆனல் அவ்வளவு தூரம் மலையோரமாகவே மனித சஞ்சாரமற்ற இடத்தில் தனிவழி நடக்கவேண்டுமே. அந்த சூழ்நிலையில் தனியாக நடப்பது கொஞ்சம் அச்சம்தரும் செயல்தான். நான் தனியாகத்தான் ஸைகிளில் சென்றேன்.

பீமசேனன் திரௌபதிக்கு மலர்கொண்டு வருவதற்காக போன போது ஆஞ்சனேயர் கிழ குரங்கு வடிவத்தில் வழியில் வாலை நீட்டி உட்கார்ந்து கொண்டிருந்தாராமே. அதைப்போல நான் போயிருந்தபோது பாதையில் உட்கார்ந்திருந்த மூன்று குரங்குகளில் ஒன்று தன் வாலை பாதையின் அகலத்துக்கு நீட்டிக்கொண்டிருந்தது. குரங்குகள் என்றல் இங்கே உள்ள குரங்குகளைப்போல அல்ல அவை. இருகால்களாலும் எழுந்துநிற்க முடியுமானல் நம்மைவிட சற்று உயரமாகவே இருக்கும். அதன் முகத்தில் மூக்குபுறமும் அதைச்சுற்றியும் ரத்தச்சிவப்பு நிறம் உடலெல்லாம் அடர்ந்து கருத்தமயிர். வெகு அருகில் வந்ததும்தான் அவைகளை கவனித்தேன். பாதையின் ஓரத்தில் இருந்த சிறு இடைவெளி வழியாக சைகிளின் சக்கரம் குரங்கின் வாலின் மேல் படாமல் போகவேண்டும். ஒரே புழுதியான ரஸ்தா. வேகமாகவும் போக முடியாது. குரங்கின்மீது தீண்டியிருந்தால் கவனிக்காதது போல் உட்கார்ந்திருந்த அவை என்ன

ஆரோக்கியத்தை விரும்புவோர் எப்பொழுதும் லைப்பாய்
உபயோகித்தே நீராடுவார்
விளையாடும்போதும் சரி, வேலை
செய்யும்போதும் சரி, அழுக்கிலிருந்து
நாம் தப்பமுடியாது. நம் ஆரோக்
கியத்திற்கு நிரந்தரமாக ஆபத்து விளை
விக்கும் நோய்க் கிருமிகள் அழுக்கில்
இருக்கின்றன. அக் கிருமிகளை கழு
விக் களைந்து உங்கள் ஆரோக்கி
யத்தைப் பாதுகாப்பது
லைப்பாய் சோப்.
அன்றாடம் லைப்பாய் சோப்
தேய்த்துக் குளித்து உங்கள்
ஆரோக்கியத்தைக் காத்துக்
கொள்ளுங்கள். லைப்பாய் ஸ்நா
னம் புதுமலர்ச்சி யூட்டுகிறது.
LIFEBUOY
FOR SAVING LIFE
FOR PRESERVATION OF HEALTH
SOAP
MADE IN INDIA FROM PURE VEGETABLE OILS ONLY
HINDUSTAN LEVER LIMITED
LIFEBUOY SOAP
இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு
L/P. 2-X52 TM

மகுடேஸ்வரர் ஆலயத்தில் புஷ்கரணியும், சிறு ஆலயங்களும்.

செய்யுமோ, அவைகளைத்தான் கேட்கவேண்டும். ஏதோ மகுடேஸ்வரர் அருள்தான் அந்த குறுகிய இடத்தில் அதன்மீது படாமல் போனது.

மகுடேஸ்வரர் ஆலயத்திற்குச் சற்று முன்பாக வலது புறத்தில் இரண்டு புராதன ஆலயங்கள் உள்ளன. கட்டடத்தின் கற்களெல்லாம் கல கலத்து சிலமடைந்திருக்கும் அவைகளின் முதுமைத் தோற்றமே நமக்கு அந்த ஆலயங்கள்மீது ஒரு தனி பக்தியை உண்டாக்குகிறது. அங்குள்ள இரண்டு சன்னிதியில் ஒன்று ஹடகேஸ்வரர் சன்னிதி. மற்றொன்று பைரவேஸ்வரர் சன்னிதி. பைரவேஸ்வரர் சன்னிதியில் இப்போது மஹா விஷ்ணு வீற்றிருக்கிறார். அதன் உள்ளே கூட சரிவர போய்ப் பார்க்கவில்லை. பூஜை முதலியன இல்லாத அந்த இருண்ட கர்ப்பக் கிரகத்தினுள், புலி இருக்குமோ, சிறுத்தை இருக்குமோ, என்ற பயம்! மலைப்பிரதேசமாயிற்றே! கூட அந்த குரங்கு பயம் வேறு முற்றும் தணியவில்லை.

மகுடேஸ்வரர் ஆலய சுற்றுப்புற சுவருக்குள் திராவிடபாணி முறையிலும், வட இந்தியபாணி முறையிலும் அநேக சிறு சிறு ஆலயங்கள் உள்ளன. அங்கு நுழையும் போதே முதலில் கிழக்கு பார்த்து இருக்கும் ஆலயம்தான் மகுடேஸ்வரர் சன்னிதி. தெற்குக் கோடியில் உள்ள மற்றொரு பெரிய ஆலயம் மல்லிகார்ஜுனர் சன்னிதி. இடையில் உள்ள குளத்தின் மேற்குக் கரையில் பிநாகநாதர், ராமலிங்கர், கபிலேசர், வ்யாக்ரபாதேஸ்வரர், வேணுகோபாலர், வீரபத்ரன், முதலிய பல உப ஆலயங்கள் உள்ளன.

லகுளீசர் என்பது சிவனின் ஒரு வித அம்சம். அந்தப் பகுதியில் எல்லாம் லகுளீசர் ஒரு முக்கியமான தெய்வம். இங்கு லகுளீசருக்கு ஒரு சிறு கோயில் உள்ளது. இந்த லகுளீசரின் காதுக்குப் பக்கத்தில் ஒரு பாம்பின் உருவம் இருக்கிறது. இது லகுளீசரின் காதில் பாம்பு ஏதோ ரகஸ்யம் சொல்லுவது போல அமைந்திருக்கிறது. அங்கு வந்திருப்பவர் எப்படிப்பட்டவர் என்று அறிந்து லகுசளீரின் காதில் சொல்லுகிறதாம் அந்த பாம்பு இப்படி அதை வியாக்யானம் செய்தார் அந்த அர்ச்சகர்.

மகுடேஸ்வரர் ஆலயத்தின் வடக்குப் புறமாக அம்பிகையின் சன்னிதி இருக்கிறது. இந்த அம்பாளுக்கு லஜ்ஜா கௌரீ என்று பெயர் அவளுடைய சக்திக்கு அங்கு தொங்கிக்கொண்டிருக்கும் சிறு சிறு தொட்டில்களே போதுமான காட்சிகளாகும். புத்ரசந்தானம் அளிக்கும் சக்தி உடையவளாம் இந்த அம்பிகை. இந்த சன்னிதியின் முன்பு உள்ள பொம்மை தொட்டில்களின் எண்ணிக்கை கணக்கில்லாதவை. மனித சஞ்சாரமும், போக்குவரத்து வசதியும் மிகவும் குறைவான இங்கு எவ்வளவு தொட்டில்கள் இருக்கிறதோ, அத்தனை குடும்பங்கள் லஜ்ஜா கௌரீ தேவியின் அருட் பிரசாதத்தில் புத்திரப் பேறு பெற்று பிரார்த்தனை செலுத்தியவர்கள். சற்று தள்ளி சரஸ்வதி தேவியின் சன்னிதி உள்ளது. ஒரு கையில் அங்குசபாசம் ஏந்தி, மற்ற இரு கைகளில் ஜபமணியும், புஸ்தகமும் ஏந்தி, இன்னொரு கையில் அபயமளித்துக் கொண்டிருக்கிறாள் சரஸ்வதி தேவி.

மகுடேஸ்வரர் சாதாரண லிங்க உருவிலேயே வீற்றிருக்கிறார், ஆவுடையார் தரை மட்டத்தோடு இருக்கிறது. வெள்ளியில் ஏகமுக கவசமிட்ட மகுடேஸ்வரர் சன்னிதியின் முன்பு நிற்கும் போது மனம் விவரிக்க முடியாத நெகிழ்வுடன் மெழுகாக குழைந்து விடுகிறது. மேலை சாளுக்கிய மன்னர்கள் மகுடேஸ்வரரை தங்கள் இஷ்ட தெய்வமாக வணங்கி வந்தனர். மாமன்னர்களெல்லாம் வந்து நின்று வணங்கிய அந்த அர்த்த மண்டபத்தில் நின்று மகுடேஸ்வரரை தரிசிக்கும்போது தெளிவற்றவன் மனதில்கூட தத்துவம் தோன்றிவிடும். பல நூற்றாண்டு காலமாக எத்தனையோ, பெரியவர்களும், சிறியவர்களும்

ஹடகேச்வரர், பைரவேச்வரர் கோயில்.

இங்கு வந்து நின்று மகுடதேவனை தரிசித்திருப்பார்கள். இன்று அவர்களில் ஒருவருமில்லை. மகுடேஸ்வரர் மட்டும். மனனன் பராமரிப்பில் இருந்தாலும் சரி, ஓர் ஏழை அர்ச்சகனின் பராமரிப்பில் இருந்தாலும் சரி, அதே அருள் நோக்கோடு என்றும் அப்படியே இருக்கிறார்.

மகுடேஸ்வரர் ஆலயத்தின் முன்பாக இருந்த தர்ம ஜயஸ்தம்பத்தில் கி. பி. 601-ம் ஆண்டின் கல்வெட்டு ஒன்று இருக்கிறது. மங்களேசன் என்ற சாளுக்கிய மன்னனின் உத்தரவின்படி, மங்களேசனுடைய தகப்பனாரின் மனைவி (மாற்றாந்தாயாக இருக்கலாம்) துர்லபா தேவியால் மகுடேஸ்வரநாதரின் ஆதீனத்திற்கு பத்து கிராமங்களை விடுத்திருக்கிறார், என்று கல்வெட்டில் உள்ளது. கால சூரிகளின் சொத்துக்களை நம்முடைய தெய்வமான மகுடேஸ்வரநாதரின் உத்ஸவாதிகளுக்காக நம் மூத்த சகோதரர் (கீர்த்தி வர்மன்) தந்தையார் (புலிகேசி) முதலியவர்களால் செலவிடப்பட்டது என்றும் கல்வெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தர்ம ஜயஸ்தம்பம் ஆர்யபுரி (அய்வோலி)யில் இருந்த புபேசன் என்ற வணிகனின் இரு மைந்தர்களால் நிறுவப்பட்டது என்றும் அதில் கண்டிருக்கிறது. இந்த ஸ்தம்பம் தற்போது பீஜ்பூர் பொருட்காட்சி சாலையில் இருக்கிறது.

இன்னொரு முக்கியமான கல்வெட்டு ஆலய மண்டபத்தில் இருக்கிறது. விஜயாதித்ய சாளுக்கியனுடைய (கி. பி. 696-733) தாசி சூளே விளுபோதி, மகுடேஸ்வரநாதருக்கு வெள்ளிக் குடை, ரத்னபீடம். முதலியவைகளை அளித்ததைப்பற்றியும் இன்னும் நிலங்கள் வழங்கியதைப் பற்றியும்! இந்த கல்வெட்டு சொல்லுகிறது. மற்றொரு கல்வெட்டு இந்த தலத்தை பாபம் தீர்க்கும் புண்ய ஸ்தலம் என்று கூறுகிறது. இந்த கல்வெட்டுகளிலிருந்து இந்த ஆலயம் கல் வெட்டுக் காலங்களுக்கு முன் கட்டப்பட்டதென்று தெரிகிறது. கி. பி. 550-66-ல் ஆண்ட புலிகேசி மன்னனின் காலத்தில் இந்த ஆலயம் கட்டப்பட்டிருக்கலாம் என்றுசொல்லுகிறார்கள்.

ஒரு காலத்தில் சாளுக்கிய சாம்ராஜ்யாதிபதிகளின் பராமரிப்பில் இருந்த இந்தக் கோயில் இன்று ஓர் ஏழை அர்ச்சகரின் பராமரிப்பில் இருக்கிறது. அந்த அர்ச்சகர் கோயிலிலேயே ஒரு மண்டபத்தில் சமைத்து ஈஸ்வரனுக்கு நிவேதித்துவிட்டு தானும் சாப்பிட்டுவிட்டு அங்கேயே காலத்தை கடத்துகிறார்.

இங்கு பங்குனி மாதத்தில் மகுடேஸ்வரருக்கு உத்ஸவம் நடக்கிறது. உத்ஸவம் எளிய முறையில் நடந்தாலும் கூட்டம் பெரியதாகவே இருக்குமாம், ஈசன் சன்னிதியில் திருமணம் செய்து கொள்ளுவதை சுற்றுப்புறத்து ஜனங்கள் புனிதமாகக் கருதி பிரார்த்தித்துக் கொள்ளுகின்றனர். இந்த கோயிலை ஒட்டிய மலைச்சரிவில் ஒரு மண்டபம் இருக்கிறது. இதன் இருபுறமும் ஓர் அரக்கனும், அரக்கியும் புடைப்பு உருவத்தில் (Bas-relief) உள்ளனர். அக்காலத்தில் வாதாபி, இல்வளனைக் குறித்து இங்கு ஏதாவது உத்ஸவம் நடந்ததோ என்னமோ!

மகுடேஸ்வரர் ஆலயத்திற்கு போகும் வழியில் பாதாமியிலிருந்து மூன்று மைல் தூரத்தில் ஸ்ரீ பனதேவி ஆலயம் என்ற பிரசித்திபெற்ற கோயில் ஒன்று இருக்கிறது. தற்போது உள்ள கோயிலின் விமானம் மகம்மதிய பாணியில் இருக்கிறது. இந்த ஆலயம் விஜயநகர ஆட்சி காலத்தில் மிகவும் பிரசித்தி அடைந்திருந்ததாக கல்வெட்டுகள் உள்ளன. இந்த ஆலயத்தின் இடது பக்கத்தில் பிராசீன ஆலயம் இருந்ததாம். இது ராஷ்ரகூடர் காலத்திலிருந்து, ஸ்ரீ பனதேவி, ஸ்ரீ பனசங்கரி, சாகும்பரி முதலிய பெயர்களுடன் மிகவும் பிரசித்திபெற்று இருந்தது. இங்கு ஜனவரி மாதத்தில் நடைபெறும் ரதோத்ஸவத்திற்கு அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து சுமார் ஒரு லக்ஷம் மக்கள் கூடுகிறார்களாம். ○

சாவையும் வெல்லலாம்

விசால்தேவ்

நிலவைப்பற்றி வான சாஸ்திரிகளும், ஜோதிடர்களும், கவிஞர்களும் வேறு பலரும் பற்பலவிதமான கற்பனைகள் செய்து வந்த காலம் இப்பொழுது மலையேறும் நிலை ஏற்பட்டுள்ளது, இதேபோல் எமனையும் எமலோகத்தைப் பற்றியும் மனிதன் செய்து வந்த செய்து வரும் கற்பனைகளும் மங்கி மறையும் காலம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. "சந்திரனுக்குப் போகலாம்; சாவையும் வெல்லலாம்" எனக் கூறும் அளவுக்கு இப்பொழுது விஞ்ஞானம் வளர்ச்சியுற்றிருக்கிறது.

கடந்த நூற்றுண்டிலேயே திட கரியமில வாயு (Solid Corbon di-oxide) திரவ ஆவிகள் (liquid gas) தயாரிக்கும் முறைகளை விஞ்ஞானிகள் கண்டறிந்துவிட்டனர். இதன் மூலம் பொருள்களைக் குளிரச் செய்வது மிகவும் சுலபமாகிவிட்டது: இந்தக் குளிரச் செய்யும் முறையை உயிருள்ள ஜீவன்கள் மீது பிரயோகம் செய்து சோதனைகள் நடத்தும் காரியத்தை விஞ்ஞானிகள் பலர் சமீப காலத்தில் மேற்கொண்டுள்ளனர்.

இவ்விதம் அவர்கள் நடத்தும் சோதனைகளை இரண்டுவகையாக நாம் பிரிக்கலாம்; மனிதனே, பறவையோ, வண்டோ எதுவானுலும் சரி, அப்படியே முழுவதும் குளிரச் செய்து அதனுல் அவற்றின் உடல் நிலையில் ஏற்படும் மாற்றங்கள், பலன்கள் முதலியவைகளை ஒரு பிரிவினர் ஆராய்கின்றனர். அவற்றின் உடலிலிருந்து பல்வேறு உறுப்புக்கள், தசைகள், உயிர் அணுக்கள், திசுக்கள், முதலியவற்றைத் தனித்தனியே பிரித்தெடுத்து அவற்றைக் குளிரச் செய்து அதனுல் ஏற்படும் பலன்கள், மாற்றங்களை மற்ருெரு பிரிவினர் ஆராய்ந்து வருகின்றனர்.

உயிரினங்களை வெப்ப இரத்தம் (Hot blooded) படைத்தவை, குளிர் இரத்தம் படைத்தவை (Cold blooded) என இரண்டு பெரும் பிரிவுகளாக ஏற்கனவே விஞ்ஞானிகள் பிரித்துள்ளனர். மனிதன் வெப்ப இரத்தமுள்ளவன். மீன்கள் குளிர் இரத்தமுள்ளவை. குளிர் இரத்தமுள்ள உயிர்களின் உடல் வெப்பம் வெளியில் நிலவும் வெப்ப நிலைக்கு ஏற்றபடி ஓர் எல்லை வரையரைக்கு உட்பட்டு கூடவும் குறையவும் செய்யும். குளிர் இரத்தப் பிரிவைச் சேர்ந்த சில வகைப் புழுக்களுக்கு எவ்விதக் குளிரையும் தாங்கிக் கொள்ளும் அற்புத சக்தி இருக்கிறது. அவை 0° சென்டி கிரேடு வெப்ப நிலையை மட்டு மல்ல அதற்குக் குறைவான வெப்ப நிலையையும் தாங்கிக்கொள்ளுகின்றன. 0° சென்டி கிரேடுக்கும் குறைவாக அவற்றின் உடல் வெப்பம் குளிரும்போது அவற்றின் உடலில் உள்ள நீர் அம்சம் உறைந்து பனிக்கட்டியாக மாற ஆரம்பிக்கிறது. அந்நிலையில் கூட அவை உயிர் வாழ்கின்றன.

வெப்ப இரத்தம் படைத்த உயிரினங்களின் உடல் வெப்பம் எப்பொழுதும் ஒரு நிலையில் இருந்துவரும். வெளியில் நிலவும் வெப்பம் குளிருக்கு ஏற்றபடி அது மாற்றமடைவதில்லை. சாதாரணமாகப் பெரும்பாலான வெப்ப இரத்தம் படைத்த உயிரினங்களின் உடல் வெப்பம் 37° சென்டி கிரேடுக்கு குறைவாக இருப்பதுமில்லை. 41° சென்டி கிரேடுக்கு கூடுதலாகவுமிருப்பதில்லை. இந்த எல்லைக் கோட்டைத் தாண்டினுல் பொதுவாக அவற்றிற்கு மரணமே ஏற்படுகிறது. என்ற நம்பிக்கை நிலவுகிறது. வெளி உலகில் நிலவும் வெப்ப நிலையை விட இந்த வெப்ப இரத்தம் படைத்த உயிரினங்களின் உடல் வெப்ப நிலை எப்பொழுதுமே அதிகமாகத்தான் உள்ளன.

குளிரான பிரதேசங்களில் வாழும் சில வெப்ப இரத்த உயிரினங்கள் குளிர்காலத்தில் சீதள நித்திரை (Hebervation) புரிவதுண்டு. அச்சமயம் அவற்றின் உடல்நிலையை பரிசோதித்ததில் சீதள இரத்தம் படைத்த உயிரினங்களின் இலட்சணங்கள் அவை பெற்றிருப்பது தெரிய வந்தது, சீதள நித்திரை புரியாத வெப்ப இரத்தம் படைத்த உயிரினங்களின் உடல் வெப்பத்தை செயற்கை முறையிலோ இயற்கை முறையிலோ குளிரச் செய்தால், மேலே குறிப்பிட்டவரையரையை தாண்டும் போது அவற்றின் இருதயத் துடிப்பு நின்றுவிடுகிறது. உடப்சில்லிட்டு மரணம் சம்பவிக்கிறது என்லே இதுவரை கருதப்பட்டு வந்தது. கருதற பட்டும் வருகிறது.

சமீபத்தில்பல சோதனைச்சாலைகளில்நடந்த ஆராய்ச்சிகளின் பலனுக ஒரு மிக முக்கியமான புதிய உண்மை ஒன்று தெரிய வந்துள்ளது. வெப்ப இரத்த உயிரினங்களின் உடல் வெப்பநிலை இயற்கை முறையிலோ செயற்கை

முறையிலோ 0° சென்டிகிரேடுக்கு குறைந்தாலும் சரி, குறைக்கப்பட்டிருந்தாலும்சரி அவற்றிற்கு மரணம் நேரிடுவதில்லை, 0° சென்டிகிரேடுக்கும் குறைந்து அவற்றின் உடலிலுள்ள நீர் பனிக்கட்டியாக உறையத் தொடங்கினாலும் சாவு சம்பவிப்பதில்லை, உடலில் உள்ள நீரில் 50% க்குமேல் பனிக்கட்டியாக உறைந்த பிறகே மரணம் சம்பவிக்கிறது. ஆராய்ச்சிகள் மூலம் புதிதாகத் தெரியவந்துள்ள மிக முக்கியமான ஓர் உண்மையாகும் இது. உயிரினங்களை அப்படியே உடல் முழுவதுமாகக் குளிரச்செய்து ஆராய்ச்சி நடத்தும் விஞ்ஞானப் பிரிவினர் இதைக் கண்டறிந்துள்ளனர்.

உயிருள்ள உடலிலிருந்து ஏதாவது அவயவத்தையோ, திசுவையோ தனியே நீக்கி அவற்றின்மீது குளிர் பிரயோகம் செய்து சோதனை நடத்தும் மற்ற பிரிவினர் சிறிது காலத்துக்கு முன்பாக ஓர் உண்மையைக் கண்டறிந்தனர், முதுகெலும்பில்லாத உயிரினங்களின் அவயவங்களையும் திசுக்களையும் சீதளப் பிரயோகம் செய்து உயிரோடு வைத்திருக்கலாம் என்பதே அதுவாகும், ஆனால் மனிதனைப் போன்று முதுகெலும்புள்ள உயிர்களின் அவயவங்களையும் திசுக்களையும் குளிரச் செய்வதாலோ அவை மரணமடைகின்றன என்பதே சமீப காலம்வரை இருந்த நிலையாகும்,

பிரித்தெடுத்த உயிர் அவயவங்களை சில வகைப் பொருள்களோடு, முக்கியமாக கிளிசரினோடு கலந்து குளிரச் செய்தாலும் சரி, குளிரச் செய்து பிறகு வெப்பம் ஊட்டினாலும் சரி, அதனால் அந்த அவயவம் மரணமடைவதில்லை. இவ்விதம் பால் கொடுக்கும் பல உயிரினங்களின் திசுக்கள் (Tissues) சுக்கில அணு (Sperm), இரத்த சிகப்பணு (Red Corpuscle), எண்டோக்ரீன் திசு (Endocrine Tissue) முதலியவைகளை குளிரச் செய்து நீண்டநாள் வரை உயிரோடு வைத்திருப்பது சாத்தியமாகியுள்ளது. மறுபடியும் அவற்றிற்கு வெப்பம் ஊட்டி, பூரணமாக மீண்டும் உயிர் பெறச் செய்து இரத்த ஓட்டத்தை உண்டாக்கி பழையபடி உடலோடு பொருத்தி விடுவதிலும் வெற்றி கண்டுள்ளனர் இந்தப் பிரிவைச் சேர்ந்த விஞ்ஞானிகள்.

இந்த இரண்டு பிரிவினரும் தொடர்ந்து இத் துறைகளில் மேலும் பல புதிய ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர். மனிதனுக்குச் சாதாரணமாகப் பெரும்பாலான நோய்கள் ஏதாவது ஓர் அவயவம் சரியாக இயங்காத காரணத்தாலோ அல்லது பழுதுபட்டு போவதாலோதான் சம்பவிக்கின்றன. பெரும்பாலோர் சாவுக்குக் காரணமாக அமைவதும் இதுவேயாகும். ஆனால் இப்பொழுது இப்புதிய ஆராய்ச்சி மூலம் மனிதனின் பழுது பட்ட மூளையையோ, ஹிருதயத்தையோ, நுரையீரலையோ, பித்த பையையோ துண்டித்துத் தனியே எடுத்து குளிரச் செய்து அவற்றை உயிரோடு நீண்டகாலம் வைத்திருப்பது சாத்தியமாகியிருக்கிறது. இவ்விதம் வைத்திருக்கும்போது அவற்றை மிகவும் நல்ல முறையில் பழுது பார்ப்பதும் சாத்தியமாகியுள்ளது.

இவ்விதம் அவயவம் துண்டித்து நீக்கப்பட்ட நோயாளி அதன் காரணமாக மரணமடைந்துவிடுவாரே என அஞ்சவும் அவசியமில்லை, அவன் உடலையும் குளிரச் செய்து உயிரோடு நீண்டகாலம் வைத்திருக்கலாம். பழுது பட்ட அவன் அவயவத்தைச் சரிசெய்து அவன் உடலோடு மீண்டும் இணைத்துவிடலாம். பிறகு வெப்பமும் உயிரும் ஊட்டலாம். அப்பொழுது அவன் புத்துயிர்பெற்று நோய் நீங்கி புதிய மனிதனாக நடமாட ஆரம்பிப்பான். இவ்விதம் நோயை வெல்லலாம். முதுமையை வெல்லலாம். சாவையும் வெல்லலாம்.

இன்று சந்திரனுக்கு மனிதன் போகலாம். சுக்கிரனுக்கு போகலாம், செவ்வாய்க்குப் போகலாம். ஆனால் இதற்கு இன்று பெரும் தடையாக நிற்பது இப்படிப் போகும் வழியில் நிலவும் பலவிதமான தட்ப வெப்ப நிலைகளைச் சமாளித்துக்கொண்டு உயிரோடு அக்கிரகங்களை அடையும் வழி இன்னும் அறியப்படாததேயாகும. இதற்காக நம் யோகப்பியாச முறை பயன்படுமா என ராக்கெட் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். இந்த சீதளப் பிரயோக முறையும் இதற்காக ஆராயப்பட்டு வருகிறது. ஆகையால் இந்த ஆராய்ச்சியின் வெற்றி மனித இனத்தை பிணி, மூப்பு, சாக்காடு மூன்றிலிருந்தும் விடுவிப்பதோடு மேலோக யாத்திரைக்கும் உதவக்கூடியதாகும்.

ஸ்ரீமான் பாபநாசம் சிவன்

ரங்கராமானுஜ அய்யங்கார்

ஸித்தவித்யாதரி ஸ்ரீமதி வீணை தனம்மாளை பற்றிய ஒரு கட்டுரை முன்பு 'காவேரியில்' வெளியானது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அன்னிபெஸன்ட் அம்மையார் ஸ்ரீமதி தனம்மாள் போன்றவர்கள் ஆயிரம் வருஷங்களுக்கு ஒருவர்தான் உலகில் அவதரிப்பார்கள் என்ற கருத்தை வெளியிட்டிருந்தேன். அப்படிப்பட்ட மகிமை வாய்ந்தவர்களில் மற்றொருவரைத் தற்போது சிந்தித்து மகிழ்வோமாக!

திருவையாற்றில் கோயில் கொண்டு விளங்கும் இறைவன் பஞ்சநதீசுவரர் என்ற ப்ரணதார்த்திஹரர். ஆண்டுக்கு ஒருமுறை அடியார் வினை தீர்க்க அவர் திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் (தில்லைஸ்தானம்), ஆகிய ஏழு திருத்தலங்களுக்குப் பவனி செல்லுவது வழக்கம். இந்த வைபவத்திற்கு "ஸப்த ஸ்தானத் திருவிழா" என்று பெயர். ஆண்டவரை ஏற்றிச்செல்லும் பல்லக்கைத் தொடர்ந்து அடியார்களும் பற்பல பஜனைக் கூட்டத்தார்களும் கோலாகலத்துடன் திரண்டுபோவார்கள்.

அவற்றில் ஒன்றை எதிர் நோக்கி, மாலைப் பொழுதானாலும், அன்று உணவு அருந்தாமல், தனது வீட்டின் வாயிலில் ஒருவர் காத்திருக்கிறார். பத்தாயிரத்திற்கு மேற்பட்ட ஹரிகதாகாலக்ஷேபங்களைச் செய்து, தனக்கு ஒப்பாரும் மிக்காரும் எக்காலும் இல்லை என்பதை நிலைநாட்டிய மகான் பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர், திருப்பழனத்திற்குப் பல்லக்கு வந்ததும் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு, "சிவன்வாள் பஜனை வரவில்லையே," என்று அவர் ஆவலுடன் நிற்கிறார். "மஹாப்ரபோ, பரமசிவா, நின் மனம் கனிந்தருள் தர வா வா," என்ற கோஷம் திடீரென்று அவருடைய செவியை எட்டுகிறது. மறுகணம் ஒரு பஜனைக் கூட்டம் அவருடைய குடிலின் முன் நிற்கிறது. சாஸ்திரிகள் மெய் சிலிர்த்து, கண்களில் நீர் ததும்ப, கூட்டத்தின் நடுவில் எளிய தோற்றத்துடன் நிற்கும் "வாமன" மூர்த்தியைக் கரம் குவித்து வணங்கி பானக பூஜை நடத்தி, வழிவிட்டனுப்பி, பின்னர் பசியாறும் நிமித்தம் உள்ளே போகிறார்.

மற்றொரு காட்சி: மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி பிரம்மோற்சவத்தில் வெண்ணெய்த்தாழித் திருநாள். ராஜரத்னம்

பிள்ளையின் அமோகமான ஸாவேரி பெருந்திரளான கூட்டத்தைப் பரவசமாக்கி வருகிறது. திடீரென்று ஒரு சிறுவன் அவரிடம் வந்து, "வந்துவிட்டாங்க". என்கிறான். சரேலென்று பிள்ளையவர்கள் தனது நாதஸ்வரத்தை அச் சிறுவன் கையில் ஒப்புவித்து, தவில்காரரை நோக்கி, "தம்பி ஆனந்தமாக நடக்கட்டும்" என்று சொல்லி. கூட்டத்தை விலக்கிக்கொண்டு பரபரப்புடன் வெளியே போகிறார். ஸ்வாமியின் பல்லக்கின் பின் ஒரு பஜனைக் கூட்டம் நிற்கிறது. அதன் நடுவில் எளிய உடை உடுத்தி, மெலிந்த மேனியுடன் ஒருவர் நாமாவளி சொல்லுகிறார். நெற்றியில் விபூதியும் கழுத்தில் ருத்திராட்சமும் துலங்க, ஞானசம்பந்தரோ என்று பிரமிக்கும்படியான தோற்றத்துடன் அவர் இறைவனை நினைத்து, உள்ளம் உருகப் பாடுகிறார், "பதித பாவன ராம, பசுபதி நுத நாம," என்ற நாமாவளியைத் தோடி ராகத்தில் அமைத்துப் பாடுகிறார். சிலப்பதிகாரக் காலம் தொட்டு வளர்ந்து பக்குவம் பெற்ற ராகம் அல்லவா? அதன் பற்பல நுட்பங்களும் நன்றாக ஒலிக்கின்றன. ராஜரத்னம் பிள்ளை தன் வசமிழந்து லயித்து நிற்கிறார். அவரே தோடி மேளக்காரர் என்று கொடி நாட்டியவர். இதற்குள் பல்லக்கு முன்னேறுகிறது. பிள்ளையவர்களும் பக்தரை வணங்கி, "நாயனக்காரரோடு

(மன்னார்குடி சின்னப்பக்கிரி) தோடியும் மறைந்தது என்று ஏங்கினேன். அது அமரத் தன்மையுடன் இருக்கிறது என்பதைத் தங்களிடம் இன்று கண்டேன்" என்று சொல்லித் தன் ஸாவேரியை நினைத்துக்கொண்டு திரும்புகிறார்.

இன்னொரு காட்சி: *திருவையாற்றில்* தியாகராஜ உற்சவம் விமரிசையாக நடக்கிறது. காலையில் ஒருவர் மேடையில் பாடுகிறார். பெரிய வித்வான்கள் பலர் அந்தப் பாட்டைக் கேட்டு நானாவிதமாகத் தங்களுடைய மதிப்பையும் ஸந்தோஷத்தையும் வெளியிட்டபடியே உட்கார்ந்திருக்கின்றனர். அந்தச் சமயத்தில் ஒரு சிறுவன் காவேரிக் கரையிலிருந்து தோய்த்துப் பிழிந்த ஒரு வேஷ்டியைக் கையிலேந்தி, அந்த வழியே வருகிறான். "சியாம ஸுந்தராங்க ஸகல சக்தியு நீவேரா" என்ற தன்யாசி க்ருதி பையனின் கவனத்தை இழுக்கிறது. ஒரு பந்தற்காலில் சாய்ந்தபடியே கண்மூடி அந்த இசை வெள்ளத்தைப் பருகுகிறான். ஐந்து கட்டை ச்ருதி அளவில் கணீரென்ற குரலுடனும் பாவ புஷ்டியுடனும் விளங்கிய அந்தக் கீர்த்தனத்தைப் பாதியில் விட்டுப் போக மனமில்லாமல் நிற்கிறான். அது முடிந்ததும், "ராதா முக கமல மது ரஸிகம்," என்ற காபி ராக கீர்த்தனை அவனை மயக்குகிறது. அதனை முற்றும் கேட்டு விட்டுப் பிறகு கலியாண மஹால் என்ற விடுதிக்கு விரைந்து நடக்கிறான். அவனுடைய இசையாசான் தாமதித்து வந்ததற்காக அவனுக்குப் பளீரென்று ஓர் அறை கொடுத்தார் "சிவன்வாள பிரமாதமாகப் பாடிக் கொண்டிருந்தார்கள். வரும் வழியில் அதைக்கேட்ட எனக்கு, அதை விட்டு வர மனம் இல்லை. நான் என்ன செய்வேன்?" என்கிறான். "அதை முன்னரே சொல்லி யிருக்கலாமே, ஓடிவந்து என்னிடம் தெரிவித்திருந்தால் நானும் வந்திருப்பேனே," என மொழிகிறார் ஸ்ரீ மகாராஜபுரம் விசுவநாத ஐயர்; அந்தச் சிறுவன் யார்? செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸ அய்யர்.

பொருத்தமான இரண்டொரு காட்சிகளை மேலும் நோக்குவோம். காலஞ்சென்ற 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இருப்பிடம். இசையில் நல்ல தேர்ச்சியும் நுண் சுவை உணர்ச்சியும் பெற்ற ரஸிகர்களின் கூட்டம், "கருணை செய்வாய்" என்ற ஹம்ஸத்வனி கீர்த்தனத்துடன் ஆரம்பித்த இன்னிசை "ஸ்ரீ ராமஜய மங்களம்" என்ற ஸுரடி ராகத்திலமைந்த மங்களத்துடன் முடிகிறது. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி இந்தக் கட்டுரையாளரைத் தனியே அழைத்து, "இப்படிப்பட்ட தேவகானத்தைக் கேட்டு அனுபவிக்க ஒருவாய்ப்பை எனக்கு அளித்ததற்குத் தங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. ஆனால் ஒரு ஸந்தேகம். இன்று பாடியவை அவருக்கு ஏற்கனவே பாடந்தானா? அல்லது பக்திப் பரவசத்தினால் அவ்வப்பொழுது பல வகை உருவெடுத்த சிந்தனைப் பெருக்கா?" என்று கேட்டார். "தாங்கள் சொல்லுவது ஒருவகையில் பொருத்தமே. உண்மையான க்ருதி கர்த்தா ஒருவர் பாடும்பொழுது இத்தகைய உணர்ச்சி கேட்பவர்களுக்கு உண்டாவதுஇயற்கை. எனக்குள்ள விரிவான பாடாந்தர பலத்தைக் கொண்டு நோக்கும்பொழுது ஓர் உண்மை புலப்படுகிறது. தியாகராஜஸ்வாமிக்குப் பிறகு தோன்றிய எண்ணிறந்த க்ருதி கர்த்தாக்களில் இவரே முதல்வர் என்பது எனது தாழ்மையான கருத்து. இவருடைய தமிழ்க் கீர்த்தனங்கள் நூறு ஸ்வரரூபமாகத் தயாரித்து வைத்திருக்கிறேன். அந்த நூலின் வெளியீட்டிற்குத் தங்களுடைய உதவி இன்றியமையாதது" என்று விடை பகர்ந்தேன்.

ஒரு சமயம் இந்தப் பெரியாருடைய இசையின் பெருமையை விரித்துரைக்க நேர்ந்தது. சொன்னது இக் கட்டுரையாளர். கேட்டது ஸ்ரீமதி தனம்மாள். "மறுமுறை உங்கள் ஸபாவில் அவர் பாடும்போது என்னை அழைத்துப் போங்கள்" என்று அம்மாள் உத்திரவிட்டார். அதன்படியே முழுநேரக் கச்சேரி ஒன்றை ஊக்கத்துடன் கேட்டார். முடிவில், "ஸ்வாமி, தங்கள் ஸங்கீதத்தைக் அறிந்து மதிப்பிடத் தற்காலம் அறிஞர்கள் குறைவு," என்று வருத்தத்துடன்சொன்னார். ஒரு சமயம சிதம்பரம் ஸ்ரீ ஸ்ரீரங்காச்சாரியார் என்ற மாபெரும் கலைஞர் ஓர் இடத்தில் ஹரிகதா காலக்ஷேபம் செய்வதற்காகப் போய்க்கொண்டிருந்தார். வழியில் "சிறுத்தொண்ட நாயனார்" சரித்திரம் ஹரிகதை ரூபமாக நடந்துகொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்ரீரங்காச்சாரியார் ஹரிகதை செய்து கொண்டிருந்த பாகவதரைக் கண்டதும் வண்டியை விட்டிறங்கி சிறிது நேரம் கூட்டத்தின் ஓரத்தில் நின்றார், தனது நிகழ்ச்சி நிரல் தாமதிப்பதைப் பக்கத்தில் இருந்தவர் அவருக்கு ஞாபகப் படுத்தினார். "என்னுடைய ஹரிகதை அவர்களுக்கு விருப்பம். இவருடைய ஹரிகதை எனக்கு விருப்பம். இரண்டையும் பூர்த்தி செய்வது அவசியமே" என்று சொல்லித் தன் வழியே சென்றார், கால தாமதம் ஆனதைக் குறித்து வருத்தம் தெரிவித்த ஸபைத் தலைவரை அன்று பன்மடங்கு திருப்தி செய்து அதிகமான ஸன்மானம் பெற்ற ஸ்ரீ ஸ்ரீரங்காச்சாரியார், "இந்த லாபம் சிவன்வாளின் அருள் வாக்கைக் கேட்டதனால் கிடைத்தது." என்று பாராட்டிப் பேசினார்.

இம்மாதிரி நிகழ்ச்சிகளை மேன்மேலும் அடுக்கிக் கொண்டே போகலாம். சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்வரை இருந்த பெரிய இசை ஞானிகள் எல்லோரும் பெருமதிப்புடன் இவரைக் கொண்டாடியதை நேரில் காணும் பாக்கியம் இந்தக் கட்டுரை



யாளருக்கு இருந்தது. இவ்வளவு சிறந்த இசை மொழி வல்லுநரான பிரும்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்களைக் குறித்த சில கருத்துக்களைக் "காவேரி'' நேயர்களுடன் பங்கு கொள்ளும் விருப்பத்துடன் எழுதியதே இக்கட்டுரை.

இவருடைய வாழ்க்கை வரலாற்றில் விசேஷமான நிகழ்ச்சிகளோ, அதிசயிக்கத் தக்க புரட்சிகளோ ஏதும் இல்லை. வறுமையுடன் போராடி ஏறக்குறைய நாற்பது வருஷங்கள் மிகுந்த கஷ்டப்பட்டார். 1890-ம் ஆண்டு தஞ்சை ஜில்லா போலகம் என்ற கிராமத்தில் பிறந்த இவர் தனது ஆறுவது பிராயத்திலேயே தந்தையை இழந்து, திருவனந்தபுரம் சென்று எளிய ஜீவனம் நடத்திவந்தார். நூரணி மகாதேவ பாகவதர், ஸாம்ப பாகவதர், வலியகோயில் அம்மையார், ஆகியவர்களிடம் ஆரம்ப இசைப் பயிற்சி பெற்றார். ஸ்ரீ நீலகண்டதாஸர் என்ற பக்த சிரோமணியின் சிஷ்யர்கள் பலருடைய நட்பின் மூலம் அவருடைய மனோஹரமான தமிழ்க்கிருதிகள் பலவற்றைப் பாடம் செய்தார்.

1910-ம் வருஷம் தஞ்சை திரும்பியவர், தேவாலயங்கள் தோறும் பஜனை செய்து, பக்தராக விளங்கி, போலகம் ராமையா என்ற பெயர் மாறி பாபநாசம் சிவன் ஆனார். இவருடைய சிறந்த ஸங்கீத ஞானத்தையும், உன்னதமான சாரீரத்தையும், நல்லொழுக்கம், தன்னடக்கம், பற்று ஒழிந்த மனப்பான்மை இவைகளையும் கண்டறிந்த மூவர் இவரிடம் அதிகமான அன்பும் அனுதாபமும் கொண்டனர். அவர்கள் பழையவனம் ஸுப்பய்யர், மூங்கில்குடி கண்ணுஸ்வாமி அய்யர், திருவாரூர் வழக்கறிஞர் மஹாதேவ அய்யர் ஆகியோர். அவர்கள் ஸ்ரீ சிவன் அவர்களுக்கு 1917-ம் ஆண்டு லக்ஷ்மி என்ற பெண்மணியை மணம் செய்வித்தார்கள்.

குடும்ப வாழ்க்கையின் கவலைபெரிதாகியும், அவர் தனது வாழ்க்கை முறையைச் சிறிதும் மாற்றிக்கொள்ளவில்லை. பாரதநாடு முழுவதும் தீர்த்தாடனம் செய்து பக்தராகவே காலம் கழித்து வந்தார். சென்னையில் சில அன்பர்களின் ஆதரவு பெற்றுக் கபாலீசுவரர், கற்பகாம்பிகை, இவர்களின் நிழலில் சிறிது காலம் வசிக்கலானார்.

ஸ்ரீ நீலகண்டதாஸர், ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியோரின் தமிழ்ப்பாடல்கள் ஏராளமாக இவருக்குப் பாடம் இருந்தது. கோனேரிராஜபுரம் வைத்தியநாத அய்யர் என்ற மகா வித்வானுடன் இவருக்கு மிகவும் நெருங்கிய தொடர்பு இருந்தது, அவருடைய பரந்த கற்பனாசக்தியின் மகிமையை ஸ்ரீ சிவன் நன்றாக அறிந்து பயன் படுத்திக்கொண்டார். வைத்தியநாத அய்யருடைய சங்கீத பாணி இவரிடம் செவ்வனே பிரகாசிக்கிறது. தாய்மொழியின் மீது இவருக்கு இருந்த அன்பும் வைத்தியநாத அய்யரிடம் இவர் கற்ற இசைப் பண்பும் இவருக்கு க்ருதிகள் இயற்றும் வல்லமையை ஈந்தன, இசையும் கருத்தும் நன்றாக விளங்கும் கீர்த்தனங்களைத் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் கவனம் செய்யலானார். அந்தக் காலத்தில் இவருடைய கீர்த்தனைகள் வெகுவிரைவில் பிரசாரம் பெற்றுக் கச்சேரி மேடைகளிலும் கிராமபோன் இசைத் தட்டுகளிலும் பிரபலமாயின. ஆயினும் இவர் பக்த குசேலராகவே வாழ்ந்து வந்தார்.



இவரிடம் நீண்டகாலமாக பக்தியும் பிரேமையும் கொண்ட சென்னை வாசி ஒருவர் இவரைப் பலவந்தப் படுத்தி இவருடைய கீர்த்தனங்களை ஒரு நூல் வடிவாக வெளியிடத் திட்டம் போட்டார். ஏறக்குறைய 9 மாத காலம் தீவிரமான பிரசாரம் செய்து பொதுஜனங்களின் நன்கொடையின் மூலம் 'கீர்த்தனமாலை' என்ற இவருடைய நூல் அச்சேறியது. 1934-ம் வருஷம் நவம்பர் மாதம் அந்தப் புத்தகம் எழும்பூர் ஜெகன்னாத பக்த சபையில் அரங்கேற்றம் கண்டது. அருணாசலக்கவிராயரின் "ராமநாடகம்" என்ற இசைநூலுக்குப் பின் முதலாவதாகப் பொதுமக்களின் ஆதரவு பெற்று அரங்கேறிய புத்தகம் இதுவே என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. மேலும், ஒரு க்ருதி கர்த்தாவின் நேர்முகமான மேற்பார்வையில் அவருடைய இசையின் வடிவங்கள் சிறிதும் மாறாமல் பதிப்பிக்கப்பட்டதும் இந்த நூலின் தனிச்சிறப்புக்களில் ஒன்றாகும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றித் தெரிதல் அவசியம். ஸ்ரீ புரந்தரதாஸர், ஸ்ரீ தியாகராஜஸ்வாமி, ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் முதலியோரின் க்ருதிகள் அவர்கள் பாடிய படியே இன்று விளங்குகின்றன என்று சாதிப்பது சரியன்று கர்ணபரம்பரையாகப் பலதலைமுறைகள் வந்திருப்பதனால் அவைகளின் உருவம் பலபடியாக மாறுபட்டு இருப்பதை மறுப்பதற்கு இல்லை. இதுபோலல்லாமல் ஸ்ரீ சிவன் அவர்களின் "கீர்த்தனமாலை" அவருடைய இசையின் உயர்வை அழியாவகை செய்திருப்பது கர்நாடக சங்கீதத்தின் அதிர்ஷ்டம் என்றே கொள்ளுதல் முறை.

மார்க்க சங்கீதம் ஆத்மலாபத்தை இலக்காகக் கொண்டது என்பது தமிழர் பண்பு. ஆண்டவனின் வரப்பிரஸாதமாகப் பெற்ற கவிதா சக்தியும் ஸங்கீத ஞானமும் இரண்டறக் கலந்து இறைவன் வழிபாடு ஒன்றையே கருதி உள்ளுணர்ச்சி பொங்கி எழுங்காலை உயர்ந்த கருத்துக்கள் இசை வடிவமாகப், பெருக்கெடுக்கும். இப்படிப் பிறந்த பாடல்களே உயிர் பெற்றவை. கர்நாடக ஸங்கீத மும்மூர்த்திகளின் க்ருதிகள் பிறந்தது இவ்வாறே. ஸ்ரீ சிவன் அவர்கள் தனது பாடல்களை இயற்றியதும் இவ்வாறே. ஸொந்த ஸாகித்தியம்'' என்று பிரகடனம் செய்வது தற்காலம் மலிந்துவிட்டது. தவிர, தமிழறிவை மாத்திரம் கொண்ட பலர் இலக்கணத்தை ஆதாரமாகக் கொண்டு பாடல்களை முடைந்து, அவைகளை இசைச் சட்டத்தில் புகுத்தப், பிறர் உதவியை நாடுவதும் இந்நாட்களில் பெருகிவிட்டது. இப்படியாக மொழி ஒருவர், இசை ஒருவர் என்ற பழக்கத்தை 'ஸங்கீத ரத்னாகரம்' எழுதிய சார்ங்க தேவரே இகழ்ந்து நகைக்கிறார்.

கலை உலகில் அரும் பெரும் சாதனையைக் கண்டவர்கள் தங்கள் வாழ் நாட்களில் பெருமிதமான ஆதரவையோ ஸுகமான வாழ்வையோ காண்பது அரிது. ஆனால் இந்த விதிக்கு விலக்காக ஸ்ரீசிவன் அவர்களுடைய இசைத் திறமை "கீர்த்தனமாலை"யின்

வெளியீட்டிற்குப் பின் சடுதியில் பிரபலம டைந்தது. பேசும் திரைப்பட முதலாளிகள் இவரைச் சூழ்ந்துகொண்டனர். தமிழில் வெளிவந்த முதற் பேசும்படம் "ஸீதா கல்யாணம்" என்பது. அந்தப் படத்தின் இசைப் பகுதி முழுவதையும் ஸ்ரீ சிவன் அவர்களே அமைத்தார். இந்தப் படத்தின் ஸங்கீதம் பொதுஜனங்களின் மனதைக் கவர்ந்தது. ஆகவே அதைத் தொடர்ந்து சுமார் எழுபது படங்களுக்கு இசை அமைக்கும் பொறுப்பு இவரைச் சார்ந்தது. சலியாத உழைப்பின் மூலம் "பக்த குசேலர்" "குபேர குசேல ராஜர்."

வருவாய் மிகுந்து வாழ்வு உயர்ந்தும், அவர் மனம் மாறாது இறைவன்பால் நிலைத்து இருந்தது. ஆகையால் தான் பிறந்த ஊராகிய போலகத்தில்உள்ள திருக்கோயிலையும்மூன்று குளங்களையும் 50,000 ரூபாய்க்குமேல் செலவிட்டு திருப்பணி செய்து விமரிசையாகஸம்புரோக்ஷணையும் நடத்தினார். 1950-ம் வருடம் கலையனபர்கள் பலர் கூடி அவருடைய அறுபதாவது ஆண்டுப் பூர்த்தியை ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடினார்கள். அந்த ஸமயம் சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு அப்பொழுது அமைச்சராக இருந்த குமாரஸ்வாமி ராஜா தலைமை வகித்தார். அந்தப் பொதுக்கூட்டத்தில் நிகழ்ந்த பல சொற்பொழிவுகளும் முடிவில் ஸ்ரீ சிவன் அவர்களின் நன்றி விளக்கமும் தமிழர் கலைப் பண்பின் உயர்விற்கு ஒரு தகுந்த அத்தாட்சி எனலாம்.

கடைசியாக, தற்காலம் தென்னாட்டில் சாஸ்திரீய ஸங்கீதம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கவனிப்பது அவசியமாகும், ஸங்கீத ஸபைகளில், கச்சேரிகளின் எண்ணிக்கை மிகமிகக் குறைந்து, நாட்டியமும் நாடகமும் தீவிரமாகப் படையெடுத்து வருகின்றன. நிதானமாகவும் விஸ்தாரமாகவும் சாஸ்திரீய ஸங்கீதத்தைக் கேட்கும் பழக்கமே மிக விரைவில் மறைந்து வருகிறது. இந்த நிலைமை நாள் தோறும் சீர்கேடடைந்து வருகிறது. ரேடியோ நிலையங்களும் நாடாப் பதிவும் (Tape Recording) மலிந்த இந்த நாட்களில் ஸ்ரீ சிவன் அவர்களைப் போன்ற ஒரு பெரிய இசை வள்ளல், ஊதியத்தை நாடி, "உனைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ" என்பது போன்ற பாடல்களை இயற்றும் சூழ்நிலைக்கு இடங்கொடுப்பது எவ்வளவு துக்ககரம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஜனாதிபதியின் ஸன்மானம் ஆண்டு தோறும் நடந்து வருகிறது. இந்த நூற்றாண்டிலேயே இணையற்ற வாக்கேயகாரராக விளங்கும் ஸ்ரீ சிவன் அவர்களை இதுகாறும் புறக்கணித்திருப்பது கர்நாடக ஸங்கீதத்திற்கே ஒரு குறைவல்லவோ?

பற்பல தொழிலாளர்கள் மாநாடுகள் கூட்டித் தங்களுடைய தொழிலைப் பற்றிய பிரச்னைகளை ஆராய்கின்றனர். இப்படிப் பட்ட மாநாடு ஒன்றை ஸங்கீத வித்துவான்கள் கூட்ட முன்வருவார்களா? ஒருவர் பாட்டை ஒருவர் கேட்பதே இல்லை என்ற நியதியில் தொழில் நடத்தும் வித்துவான்கள், ஸ்ரீ சிவன் அவர்களைப் போன்ற ஓர் அருமையான (வாக்கேயகாரர்) க்ருதிகர்த்தாவின் பெருமையை உணர்ந்து அவருடைய அரிய கலைச் செல்வத்தைத் தங்களுக்குப் பங்கீடு செய்து கொள்ள முன் வருவார்களா?

இப்பொழுது ஸ்ரீ சிவன் அவர்களுக்கு வயது அறுபத்தி ஒன்பது. மூப்பும் பிணியும் அவரை வாட்டுகின்றன. எனினும் இன்னும் புதிய புதிய க்ருதி மணிகளை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து கொண்டே இருக்கிறார். அவரிடம் நேரில் பாடல்களைக் கற்கும் பெரும் பாக்கியம் இனியாவது நமது வித்துவான்களுக்குக் கைகூடுமாக!

இருள் விலகவேண்டுமானால், ஒளியின் உதவி வேண்டும். வேறு எந்தவிதமான சாதனங்களினாலும் இருளைப் போக்க முடியாது. அதேபோல உள்ளத்திலே சேர்ந்துள்ள அஞ்ஞான இருளைப்போக்க வேண்டுமானால் பக்தி ஒளி வீச வேண்டும், அதற்குக் கடவுளின் அருள் ஒளி வேண்டும். நாம் அறிந்தோ அறியாமலோ, நமது உள்ளத்திலே படிந்துள்ள அழுக்குகளைப் போக்க வேண்டுமானால், அன்பின் உருவமான ஆண்டவனைப் பாடவேண்டும், அன்புப் பெருக்கினால் அவனைப் பாடினால், அன்புணர்ச்சி வளர்ந்து ஆண்டவனிடம் உள்ளம் ஒன்றி விடும்,

ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருதம்

ஓமாரி.

சமுதாய வாழ்வின் உயிர் நிலையே அன்பும் அருளும் தானே! அன்பிலும், அருளிலும் தோய்ந்து வளரும் சமுதாயம் அறநிலையிலே சிறந்து விளங்குகின்றது. உடலுக்கு உறுதியளிக்கிறது உணவு. அறிவுக்கு ஆனந்தம் தருகிறது இலக்கியம். இதயத்திற்கு இன்பமும், பலமும் தருகிறது பக்தி. உள்ளத்திலே அன்பு ஊற்று பொங்கி எழும்போது மனிதன் செய்யும் செயல்கள் எல்லாம் புனிதமாகிறது. தன்னலம் அங்கே தலை காட்டுவதில்லை. பரிசுத்தமான அன்பு வளர, வளர இதயத்திலே ஓர் இனிமை தோன்றும்.

உலகப்பொருள்களிலே வைக்கும் ஆசை, தன்னைச் சேர்ந்த மக்களிடத்திலே செலுத்தும் அன்பு, இவைகள் மனித உள்ளத்தை அன்பு செய்யப் பழக்குகின்றது. இதுவே பக்தியின் ஆரம்பநிலை.

"உலகப் பொருள்களிடத்திலே அறியாமையினால் நாம் செலுத்தும் அன்பைக் கடவுளிடத்திலே வைத்தால், அந்த அன்புதான் பக்தியாக மாறுகின்றது," என்று குந்திதேவி கூறுகின்றாள். ஆம் அன்பு என்பது மலர்ந்து, முதிர்ந்து கடவுளிடத்திலே செலுத்தப்படும்போது பக்தியாக உருவெடுக்கின்றது.

வாழ்க்கை என்னும் சருக்குமரத்திலே—மிக்க கவனத்துடன் முன்னேற வேண்டிய வாழ்க்கைப் பாதையிலே— வழி தவறி மோகத்தினால் கவனம் பிசகி வழுக்கி விழுந்தவர் பில்வமங்களர், அவரை சரியான பாதையிலே அழைத்துச் சென்றவள் சிந்தாமணி. அவருடைய உள்ளத்திலே ஞான ஒளியைத் தூண்டி ஒளி வீசச் செய்தவர் ஸோமகிரி என்ற ஞானப் பெரியார்.

பில்வமங்களர் சிந்தாமணியிடம் இணையற்ற அன்புக்கொண்டிருந்தார். அவளிடம் உள்ளத்தை சமர்ப்பணம் செய்திருந்தார். ஆனால் அதே அன்பு மாறிவரும்போது, அப்படியே பூர்ணமாகக் கண்ணனிடம் சென்று ஒன்றிவிடுகின்றது. உன்னதமான பக்தியாக மலர்ந்து விடுகின்றது. அன்புதானே அன்பை வளர்க்கின்றது? ஆகவே தன்னிடம் அன்புகொண்ட பில்வமங்களரை, அருள்மூர்த்தியான கண்ண பிரான் கோல் கொடுத்து, வழி காட்டி அழைத்துச் சென்றதில் அதிசயமென்ன?

தன்னலமற்ற உள்ளம் படைத்த சிந்தாமணியின் தூண்டுதலினாலும், ஞானப் பெரியார் ஸோமகிரியின் உபதேசத்தினாலும், எல்லாவற்றிற்கும் மேலாக நிற்கும் கண்ணனின் அருள் விலாசத்தினாலும், ஞானமும், பக்தியும் பெற்று உலகம் புகழ விளங்கினார் பில்வமங்களர், கண்ணனுடைய அற்புத லீலைகளைப்பாடி "லீலாசுகர்" என்ற சிறப்புப் பெயரைத் தாங்கி, தெய்வ சன்னிதியிலே புனிதமடைந்த பக்த சிரோமணி பில்வமங்களர் என்பவராகும்.

தெய்வத் தமிழிலே திருப்புகழை நமக்களித்த அருணகிரி நாதரும், தேவ பாஷையிலே நமது செவிகளுக்கு அமுதூட்டிய லீலாசுகரும் பெண் மோகத்திலே உழன்று, பிறகு அதை வெறுத்து, பேரின்பத்திலே ஆழ்ந்து, உலகத்திற்கு என்றுமே அழியாத கவிதைச் செல்வங்களைத் தந்தருளிய ஞானிகள்; நமது நாட்டு ஞானச் செல்வர்கள், பக்தி மேலிட்டு, பரவச நிலையடையும் போது தாம் கண்ட அற்புதங்களை எல்லாம் உன்னதமான ரசம் நிரம்பிய கவிதைகளிலே நிலைக்க வைத்துச் சென்றிருக்கிறார்கள்.

அதேபோலவே பக்தர் லீலாசுகரும் கண்ணனின் அற்புதமான லீலா விசித்திரங்களை தன் அகத்திரையிலே கண்டுகளிக்கிறார். உடனே அவைகளை சுவைமிகுந்த இனிய பாடல்களாக—அழகு மிகுந்த வாக்கிய வர்ணக்கலவையிலே குழைத்துத் தீட்டிய வர்ணச் சித்திரங்களாக அமைத்து நம் கண்முன்னே கொண்டு நிறுத்தி இருக்கிறார்.

ஆம்! ஒரு சித்திரக் கலைஞன் தீட்டும் சித்திரம் அவன் கண்களின் உதவியைக் கொண்டு தீட்டுவதில்லை. அவன் உள்ளமும், அறிவும், அதன் விளைவான உணர்ச்சியும், கற்பனையுமே அங்கே வேலைசெய்கின்றன. அதேபோல வெறும் அடுக்குச் சொற்கள் மட்டும் கவிஞனின் சிருஷ்டிக் கவிதையாகாது. அதிலே உள்ளத்தின் இன்ப உணர்வோ, துயர உணர்ச்சியோ தேங்கி நிற்பதைத்தான் சிறந்த கவிதையாகக் கொள்ளமுடியும், கவிஞன் முதலில் தான் காண்கின்ற பொருளிடம் அன்பு கொள்ளுகிறான். அன்பிலே பிறக்கின்றது ஆனந்தம். ஆனந்தம் எல்லையற்ற ஓர் உணர்ச்சியைத் தூண்டுகிறது. உள்ளத்து இன்ப உணர்வே கவிதையாக உருவெடுக்கின்றது.

"உளங்கனிந்த போதெல்லாம் உவந்து பாடுதுமே" என்ற நாவுக்கரசரின் சொல் நமக்குக் கவிதையின் பிறப்பைத் தெரிவிக்கின்றது! அளவுக்கு மேற்பட்ட உணர்ச்சியே கவிதையாகிறது.

அதுபோல பக்திபெருக்கினால் உள்ளம் கனிந்த லீலாசுகர் தன் அகத்திரையிலே ஓர் அழகு வடிவத்தைக் காண்கின்றார். உடனே அதனிடம் இணையிலாத அன்பு கொள்ளுகிறார், அந்த அன்பு அவருடைய உள்ளத்திலே ஆனந்தத்தை நிரப்புகின்றது. ஆனந்தம் நிறைந்த அன்புக்

சந்திரசேகரபுரம்
கூட்டுறவு பண்டகசாலை

சுய முயற்சி என்னும் உரம் இட்டு, ஒற்றுமை உழைப்பின் மூலம். நன்னீர் பாய்ச்சி, சுயநலம்போன்ற ஆபத்துகளிலிருந்து பாதுகாத்து வந்தால் **கூட்டுறவுப் பயிர்** நன்கு செழித்தோங்கி சிறந்த பலன் அளிக்கும்.

15 ஆண்டுகள் சேவையின் பலன்

	அங்கத்தினர்கள்	வியாபாரம்
1944—45	137	ரூ. ... 15,455
1958—59	2,035	ரூ. 31,55,915

125 சிப்பந்திகள் மாதந்தோறும்
ரூ 7,000 ஊதியம் பெறுகிறார்கள்

ஜி. கருப்பையா மூப்பனார்
தலைவர்.

காதலிலே ஒன்றிய அவர் உள்ளம், இனிய பாடல்களை இசைக்கின்றது. அவர் கற்பனையில் எழுந்த அழகுச் சித்திரங்களை, சொற்களாகத் தீட்டினார். இதோ அந்தச் சொற்சித்திரங்கள் நம்கண் முன்னே உருவெடுத்து நிற்பதைப் பாருங்கள். அதைப் பாடும்போது அந்த இனிய அமுதகானம்



நமது செவிகளுக்கு இன்பமூட்டுகிறது. கூடவே மனக்கண்களின் முன் ஒரு சித்திரக்காட்சியையும் கொண்டுவந்து நிறுத்துகின்றது. பக்திதத்துவம் உள்ளத்திலே வளர இந்த சித்திரச் சாலையிலே சென்று ஒவ்வோர் ஓவியத்தையும் கண்டு களித்து கர்ணாம்ருதமான ஒவ்வொரு பாடலையும் கேட்டு மகிழலாம் வாருங்கள்.

இதோ சர்வலோகசரண்யனான கண்ணபிரானின் பாதகமலங்கள் அதன் அழகை கவி நமக்கு எடுத்துச் சொல்லுகிறார், மனம் உருகிப் பிரார்த்தனைச் செய்கிறார்.

निखिल भुवन लक्ष्मी नित्यलीला स्प दाभ्यां

कमल विपिन वीथी गर्व सर्वङ्कषाभ्यां ।

प्रणमदभयदान प्रौढिगाढोद्धताभ्यां

किमपि वहतु चेतः कृष्णपादाम्बुजाभ्यां ॥

"அழகிலே தமக்கு இணையாருமே இல்லை என்று கர்வம்கொண்டு நின்றதாம் தாமரை மலர்கள். கண்ணனுடைய அழகுப்பாதங்கள் அந்த கர்வத்தை எல்லாம் ஒருநொடியில் சிதற அடித்துவிட்டதாம். மூவுலகத்திலேயும் உள்ள சௌந்தர்ய சமூகத்தை எல்லாம் சேர்த்து வைத்ததுபோல இணையில்லாத சோபையுடன் விளங்குகின்ற கோபாலனுடைய பாத கமலங்கள் என் உள்ளத்திலே நிலைத்து நின்று என்னைக் காத்து ரக்ஷிக்கட்டும்.'' என்று வேண்டுகின்றார் லீலாசுகர்.

பிறகு அவருடைய அழகை அள்ளிப் பருகுகின்றார். திருவடிகளைப் பற்ற பூர்ண உருவம் வேண்டாமா? பாத தாமரைகளில் சுழன்ற அவருடைய உள்ளமாகிற வண்டு, கண்ணனின் உருவத்தைக் கண்டு இசைபாடுகின்றது. முதலில் கருணை நிரம்பிய கண்களை கவனிக்கின்றார். பாடுகின்றார்,

प्रणय परिणताभ्यां प्राभवालम्बनाभ्यां

प्रतिपद ललिताभ्यां प्रत्यहं नूतनाभ्यां ।

प्रतिमुहुरधिकाभ्यां प्रस्नुवल्लोचनाभ्यां

प्रभवतु हृदये नः प्राणनाथः किशोरः ॥

"ஆஹா! அந்தக் கண்களிலேதான் எவ்வளவு கருணை! கம்பீரம், அன்பு வசீகரஒளி இவைகளுடன் விளங்கும் அந்தக் கண்கள் ஒவ்வொரு விநாடியும் புதிது புதிதான கவர்ச்சியுடன் விளங்குகின்றனவே! காண்பவர் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டு, மயக்கி ஆட்கொள்ளும் சக்தி நிறைந்து காணப்படுகின்றதே! அந்தக் கருணை நிறைந்த கண்கள், அந்த குளுமையான பார்வையே நமது உள்ளத்தை அவன் பாதங்களிலே அர்ப்பணம் செய்யத் தூண்டித் துணை நிற்க வேண்டும். என் உயிர் துணைவன் கண்ணன் என் இதயத்திலேயே அசையாமல் நிற்க வேண்டும்.'' என்று வேண்டுகின்றார்.

இப்போது கண்ணனுடைய முகத்தின் திவ்விய சௌந்தர்யத்தை, அனுபவித்துப் பாடுகிறார்.

माधुर्य वारिधि मदा न्धतरङ्ग भङ्गी

श्रृंगार संकलित शीतकिशोर वेषम् :

आमन्दहास ललितानन चन्द्रबिम्ब

मानन्दसंप्लवमनुप्लवतां मनो मे ॥

"லோகநாதன் கிருஷ்ணனுடைய வடிவழகு மிக்க மதுரமானது. அகண்ட சமுத்ரத்தைப் போன்றது. அந்த அழகு சமுத்திரத்திலே பொங்கி எழும்புகின்ற சிருங்கார விலாச அலைகளின்,—லீலைகளின் அழகு

உணர்ச்சி மயக்கமூட்டுகின்றதே. அவனுடைய இளமை — குளுமை, நிலவைப் பொழியும், அந்தப் புன்னகை நிரம்பிய முக

மண்டலமும், பக்தர்களின் மனதிலே ஆனந்த வெள்ளத்தை நிரப்பிவிடுகின்றதே! இவ்வளவு மோகமான அந்த

திருமுகத்தை என் உள்ளம் இடைவிடாமல் தியானிக்கட்டும்.'' என்று வேண்டுகிறார்.

இதோ அவன் குழலூதும் காட்சியை ரசிக்கிறார்.

अव्याज मञ्जुल मुखाम्बुज मुग्धभावै:
आस्वाद्यमान निजवेणु विनोदनादम् ।
आक्रीडतामरुण पाद सरोरुहाभ्यां
आर्द्रे मदीय हृदये भुवानार्द्रमोज: ॥

"சௌந்தர்யநிதியான அந்த முகத்தினழகைக் குழலை வைத்துக்கொண்டு ஊதும்போது பார்க்கவேண்டும். ஆஹா! என்ன ரம்யமான காட்சி! சற்றே குவிந்து சிவந்த உதடுகளும், கொஞ்சம் வளைந்து, நெளிந்து நிற்கும் புருவங்களும், அந்தப் புருவங்களுக்கு மேலே நெற்றியிலே சிறிது குறுகி, மடிந்து தோன்றுகின்ற ரேகைகளும், குழலோசையினின்றும் எழும் நாதத்தின் ரசானுபவத்தினால் ஏற்பட்ட ஒரு மயக்கமூட்டும் கண்களும், குழலிசையின் இனிய தெய்வ கானத்தின் பாவத்தில் ஈடுபட்ட தன்மையை அப்படியே என் கண் முன்னால் கொண்டு நிறுத்திவிட்டது, இந்த இணையற்ற அழகுக் காட்சியைக் கண்டவர்கள் உள்ளமெல்லாம் இனிக்கின்றது. இப்படி எல்லாரையும் வசீகரித்து நெகிழப்பண்ணுகின்ற கண்ணன் என் நெஞ்சத்திலே பக்தி ரசத்தைத் தெளித்து, பதப்படுத்தி அங்கே தன்னுடைய சிவந்த பாதத் தாமரைகளை வைத்து நர்த்தனம் செய்யட்டும்.'' என்று பாடிய லீலாசுகர் திடீரென்று கண்ணன் மறைந்துவிட்டதைப் பார்த்துப் பதறிவிடுகிறார். அப்போது,

कदा वा कालिन्दी कुवलयदल श्यामलतरा:
कटाक्षा लक्ष्यन्ते किमपि करुणा वीचिनिचिता: ।
कदा वा कंदर्प प्रतिभटजटा चन्द्रशिशिरा:
किमप्यन्तस्तोषं ददति मुरळी केळिनिनदा: ।

கம்பீரமான ஆழமும், ஆழத்தினுடைய அடையாளமான நீல நிறமும் கொண்ட யமுனா நதியிலே பூத்த கருநெய்தல் புஷ்பத்தின் இதழைவிட கருமையானதும், கருணை என்னும் அலைகளை வீசும் குளிர்ந்த கடாக்ஷமும் என் எதிரே எப்போது தோன்றப் போகிறதோ! அவன் என் கண்ணெதிரே தோன்றி அனுக்ரஹம் பண்ணவிட்டாலும், ஜடாதரனான சிவனுடைய ஜடாமுடியில் வாழும் சந்திரனுடைய குளுமையும், இனிமையும் கலந்த அந்த குழலோசையினாலாவது என் மனதை ஆனந்தமுற செய்யக் கூடாதா? என் செவிகளிலே அந்த இன்ப மயமான அமுதம் பாய்ந்து என் இதயத்தைக் குளிரச் செய்யக்கூடாதா? என்று ஆற்றாமையுடன் தவித்துக் கொண்டிருந்த லீலாசுகருடைய செவிகளிலே அப்போது ஓர் இன்ப ஒலி கேட்டது. அதுதான் புல்லாங்குழலின் இன்ப நாதம். அந்த குழல் நாதத்தின் எதிரொலியும், அவன் ஆனந்த நர்த்தனம் செய்வதால் ஏற்பட்ட காற் சதங்கையின் கலகலவென்ற ஓசையும் கேட்டது. அதைக் கேட்ட அவருடைய உள்ளம் பரவசநிலையிலே ஆழ்ந்தது. "ஓ! கண்ணா! என் உயிரே! உன் கருணைதான் என்ன? உன் வேணுநாதம் என் உள்ளத்திலே இன்ப வெறியை ஊட்டுகின்றதே! நீயும் என் எதிரேவந்து காட்சிதரக் கூடாதா? என் அப்பனே!'' என்று துதித்துப் பாடுகிறார். வேண்டுகிறார்.

हे देव हे दयित हे जगदेकबन्धो ।
हे कृष्ण हे चपल हे करुणैक सिन्धो ।
हे नाथ हे रमण हे नयनाभिराम ।
हा हा कदानु भवितासि पदं दृशोर्मे ॥

"ஹே! தேவதேவா! ஹே! எல்லோருக்கும் இஷ்டமான தேவா! சகலப் பிராணிகளுக்கும் பந்துவான கண்ணா! கருணாநிதியே! ஸர்வலோக சரண்யனே! ஆனந்தத்தில் ஆழ்த்தும் கண்ணா! காண்பவர் கண்களுக்கு இனிமையானவனே! என் கண்களுக்கு எப்போது காட்சி தரப் போகிறாயோ?'' என்று சொல்லி மேலும்,

अमून्य धन्यानि दिनान्तराणि
हरे त्वदालोक न मन्तरेण ।
अनाथ बन्धो करुणैक सिन्धो ।
हा हन्त हा हन्त कथं नयामि ।

"கண்ணா! நான் பாபங்களால் சூழப்பட்டவன்தான். இருந்தாலும் நீ கருணா சமுத்ரமல்லவா? அனாதபந்துவல்லவா? உன்னைத் தவிர எனக்கு வேறு பந்து யாரிருக்கிறார்கள்? தயாநிதியான உனக்கு தயை இல்லை எனச் சொல்ல முடியாது. நானோ அனாதை! யாருமற்றவன். என் பாபங்களை உன் நாம பஜனத்தால் பொசுங்கிப்

போய் விட்டது. அப்படி இருக்க ஏன் என் எதிரே வரக்கூடாது? உன்னைக் காணாத நாட்களை நான் எப்படி கழிப்பேன்! கஷ்டம்! கஷ்டம்!" என்று பாடி துதிக்கிறார்.

அப்போது கருணைக் கடலான கண்ணன் தன் பக்தனுடைய கஷ்டத்தைக் கண்டு, அவனுடைய ஆற்றாமைக் கண்டு மனங் கரைந்து அவர் எதிரே வந்து தோற்றம் அளிக்கிறார். லீலாசுகர் ஆச்சர்யத்தினால் பூரித்துப் பார்க்கிறார். தன் எதிரே காணப் படும் அந்த தெய்வீக ஒளியும் அதனிடையே தோன்றுகின்ற அந்த மோகன வடிவமும், லீலாசுகருடைய உள்ளத்திலே ஓர் அதிசய உணர்வைத் தருகின்றது. அவர் பரவசத்துடன் நினைக்கிறார். இது யார்? என்று

मारः स्वयं नु मधुर द्युति मण्डलं नु

माधुर्यमेव नु मनो नयनामृतं नु ।

वाणीमृजा नु मम जीवित वल्लभो नु ।*

बालोय मभ्युदयते मम लोचनाय ॥

"இது யார்! இதோ என் கண்களுக்கு விருந்தாகத் தோன்றி நிற்கும் இந்த பாலகன் யார்? மன்மதனா? அல்லது குளிர்ச்சியுள்ள சந்த்ரமண்டலமா? இனிமையெல்லாம் திரண்டு நிற்கும் அற்புத வடிவந்தானா? என் உள்ளத்திலே, கண்களிலே நிறைந்து அமுதமாக இனிக்கும் இந்த வடிவழகன் யார்? இவன்தான் என் கண்ணனா? என் வேண்டுகோளுக்கு இணங்கி, மனம் வைத்து இங்கே வந்துவிட்டானா?" என்று அதிசயத்திலாழ்ந்து பரவசமாகப் பாடுகின்றார்.

[ஸ்ரீ கிருஷ்ண சாந்நித்யம் என்ற பகுதியில் சில பாடல்கள்.]

ஸ்தாபிதம் 1947.

மாயவரம் பைனான்ஷியல் கார்ப்பொரேஷன் லிட்.,

(பப்ளிக் லிமிடெட் ஸ்தாபனம்)

13-ஈ, கச்சேரி ரோடு, தபால் பெட்டி எண் 18, மாயவரம்.

நீண்ட காலமாகவே உயர்தொகைகளில் ஏலச்சீட்டு நடத்துபவர்கள்

கிளைகள்

மாயவரம்	காரைக்கால்	பாண்டிச்சேரி	திருப்பாபுலியூர்
கச்சேரி ரோடு,	66, வயல்கரை வீதி.	77, காந்தி வீதி.	67, தேரடி வீதி.

கீழ்க்காணும் ஏலச்சீட்டுகளுக்கு மெம்பர்கள் சேர்த்துக் கொள்ளப்படும். செலுத்தும் தொகைக்கு கணிசமான லாபம் மட்டுமல்ல; தேவையானபோது கடன் பெறலாம். எப்பொழுதும் மெம்பராகச் சேரலாம். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

மாத ஏலச்சீட்டு மெம்பர்கள் 40 மாதங்கள் 40

சந்தா.	தொகை.	சந்தா.	தொகை.
ரூ. 25-00	ரூ. 1000-00	ரூ. 100-00	ரூ. 4000-00
ரூ. 50-00	ரூ. 2000-00	ரூ. 150-00	ரூ. 6000-00
ரூ. 75-00	ரூ. 3000-00	ரூ. 250-00	ரூ. 10000-00

தினசரி சீட்டு. மெம்பர்கள் 20.

சந்தா.	நாள்	தொகை.	ஏலமுறை
ரூ. 10-00	500	ரூ. 5000-00	25 நாளுக்கு ஒரு ஏலம்.
ரூ. 12-50	400	ரூ. 5000-00	20 நாளுக்கு ஒரு ஏலம்.
ரூ. 20-00	500	ரூ. 10000-00	25 நாளுக்கு ஒரு ஏலம்,
ரூ. 25-00	400	ரூ. 10000-00	20 நாளுக்கு ஒரு ஏலம்.

போர்டார் உத்திரவுப்படி

ஆர். கல்யாணசுந்தரம்

மானேஜிங் டைரெக்டர்



விழாக்களும்

கோ-ஆப்டெக்ஸ் ஆடையும்

ஆடைக்கோ அல்லது இதர
பல அலங்காரங்களுக்கோ.
அனேகமாக எல்லா இந்திய
இல்லங்களிலும் கோ-ஆப்டெக்ஸ்
ஓர் உன்னத நிலையைப் பெற்று
விட்டது. அதிலும், கோ-ஆப் டெக்ஸ்
துணியில் தயாரித்த ஆடைகளோ
விழா காலங்களில்
பெரிதும் விரும்பப்படுகின்றன

இத் தீபாவளி விழாவுக்கு,
கோ-ஆப்டெக்ஸ் சேலைகளில.
கவர்ச்சியான ரகங்கள்
வேஷ்டிகள் சோளிகள்
சர்ட்டிங்குகள் அலங்காரத்
துணிகள் முதலியன நம் தேசத்
திலுள்ள எல்லா விற்பனை
நிலையங்களிலும். டெப்போக்
களிலும் காட்சியிலுள்ளன

SISTA'S

வாழ்த்துக்களுடன்

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகள்

சென்னை ராஜ்ய
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
பாந்தியன் ரோடு
சென்னை-8

2 -NOV 1959

குழந்தையும் கஸ்தூரியும்

க. பஞ்சாபகேசன்...

அன்று 'யூகலிப்டஸ்' மரங்கள் வீசிய நெடி சற்று அதிகமாகவே இருந்தது. எதிரே மலைச் சரிவில் மலைப்பாம்பென நழுவி ஓடிக்கொண்டிருந்த துப்புரவான சாலையில் யூகலிப்டஸ் எண்ணெய்ப் பார்ஸல்களைச் சுமந்து சென்ற லாரிகள் வேறு வீசிவிட்டுப் போன நெடி...

அந்த நெடியோடு உறவாடிப்போய்ப் பழக்கப்பட்டுவிட்டது என் மனம். காம்பௌண்டுச் சுவரையொட்டிச் சாய்வு நாற்காலியில் திறந்தவெளியில் அமர்ந்திருந்தேன்.

என்னைச் சுற்றி வீட்டுச் சிறு தோட்டம். சாய்வு நாற்காலியின் மேல் விளிம்பில் பட்டு என் முகத்துக்கு மேலே மலையில் காண முடியாத சூரியனுக்காக ஏங்கி நின்றது சூரிய காந்தி; நிமிர்ந்து உட்கார்ந்தவனின் கண்ணெதிரில் சற்று தூரத்தில் பூத்திருந்த ஒற்றை மஞ்சள் ரோஜா தெரிந்தது! காலையில் பூத்தது இந்த மாலையிலும் ஒளி மங்கிப் போகவில்லை. சரோஜியும் நானும் சென்ற மாதம் ஊட்டி பொட்டானிகல் நந்தவனம் சென்றிருந்தபோது, அவள் ஆசைப்பட்டு வாங்கி வந்திருந்த பதியன்.

எத்தனை குட்டையான செடி! அதற்குள் ஓர் ஒற்றை மலரை ஈந்து விட்டது. அதைப் பார்க்கும் போதே சரோஜியின் அழகான முகம் ஞாபகத்துக்கு வந்தது எனக்கு...

அவளும் ஒரு மலரைக் கொண்டு வரத்தான் போயிருக்கிறாள்...

"சார்" என்ற குரல்

திரும்பினேன். காம்பௌண்டுக் கதவருகில் தொழிற்சாலை 'அட்டெண்டர்' நின்று கொண்டிருந்தான், கையில் மாதிரிப் பார்ஸல்களுடன்.

யூகலிப்டஸ் எண்ணெய் பரிசோதனைக்கு வந்துவிட்டது. தொழிற்சாலையில் மட்டுமல்லாமல், என் வீட்டிலும் முக்கிய உபகரணங்களுடன் ஒரு சிறிய ரசாயன சாலை வைத்திருந்தேன் நான்.

அங்கே கொண்டுபோய் அவைகளை வைக்குமாறு சொல்லிவிட்டு மீண்டும் என் நினைவு உலகில் உலவ முனைந்தேன்.

ஒரு கெமிகல் இஞ்சினீயர் இப்படி மலைகளுக்கு நடுவில் வந்து அகப்பட்டுக் கொள்ளுவானோ? பூர்வ ஜன்மத்தில் பெரிய தலைவலியால் பாதிக்கப்பட்டிருப்பேனோ? கைநிறையச் சம்பளமும் வீடும் போனஸும் எல்லா வசதிகளும் தந்திருக்கிறார்கள். யூகலிப்டஸ் எண்ணெயாக இருந்தால் என்ன, அல்லது விளக்கெண்ணெயாகவும் இருந்தால்தான் என்ன!

பட்டப் படிப்புக்குப் பரீட்சை எழுதிய போது முருகப் பெருமானை வேண்டிக் கொண்டேன். 'உன் தாள் என்றும் மறவாமல் இதயத்தில் வைத்துப் போற்றுவேன்' என்று வேண்டிக் கொண்டவனுக்குச் சுப்பிரமணியக் கடவுள் முதல் வகுப்புத்

தேர்வு கொடுத்ததோடல்லாமல், உடனே நீலகிரி மலைக்கும் இழுத்துக்கொண்டான். அவன் குறிஞ்சி நிலத் தெய்வமாயிற்றே!

வந்தபோது ஒருவன்தான். ஆனால் விட்டுவைத்தார்களா? சரோஜியை மணந்தேன்.

கல்யாண தினத்தன்று இரவு மல்லிகை மஞ்சத்தில் சரோஜி என்னிடம் பூர்வ ஜன்மத்துக் கதைகளைக் கூடப் படிக்கத் துவங்கி யிருந்த சமயத்தில், "எனக்கு மலை வாசம் என்றால் ரொம்பப் பிடிக்கும்" என்றாள்.

"எப்படி? நீ தான் தஞ்சாவூர்ப் பெண்ணாயிற்றே? மலை என்றால் என்ன விலை என்றல்லவா கேட்பாய்?" என்று கேட்டேன் நான்.

என் கேலி சரோஜியின் உள்ளத்தைக் குத்தி விட்டது. தளதளப்பான தாமரை முகம் சற்றே கூம்பியது. அதில் நழுவி ஓடும் நீர்த் துளிகளென இரு கண்களிலும் கண்ணீர் பனிபோல் புறப்பட்டது. "அப்படியானால் என்னை அழைத்துப் போக மாட்டீர்களா?" வரிசையான தேவதாரு மரங்களின் அசைவொலியைப் போல குரல் தாபத்திலும் வேதனையிலும் துடித்தது.

அவளை இறுக அணைத்துக்கொண்டு, "அங்கே இல்லாத அதிசயங்களா? அவ்வளவையும் உனக்குக் காட்ட அழைத்துக்கொண்டுதான் போகப் போகிறேன்!" என்றேன்.

மலை முகடுகளிலிருந்து அந்தியின் இருள் மெதுவாக நடந்துவந்து கொண்டிருந்தாற் போலிருந்தது. சாய்வு நாற்காலியில் படுத்திருந்த எனது தனிமையை நினைவு படுத்துவதைப் போலத் தூரத்துத் தொழிற்சாலையிலிருந்து மாலை 'ஷிப்டு' முடிந்து வந்துகொண்டிருந்த தொழிலாளர்கள் உற்சாகமாகப் பேசிக்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள்.

பெருமுச்செறிந்துகொண்டே எழுந்து சாய்வு நாற்காலியை மடக்கி உள்ளே எடுத்துக்கொண்டு போனேன்.

யூகலிப்ட்ஸ் எண்ணெய்ப் பரிசோதனையின் நடுவில்—

மனத்தில் மலர்ந்த'மற்றொரு காட்சி—

அன்றொரு நாள் தொழிற்சாலையிலிருந்து வெகு உற்சாகமாக வந்தேன் நான். காரணம் பையில் மூன்று மாசச் சம்பளம்—போனஸ் பணம்!

இதயம் பரிசோதனைக் குழாயில் சூட்டில் துடிக்கும் திரவத்தைப் போலத் துடித்துக் கொண்டிருந்தது. சரோஜிக்கு என்ன வாங்கலாம்? ஊட்டிக்குப் போய் அவள் கேட்பதையெல்லாம் மறுநாளே வாங்கிக் கொடுத்துவிடலாமா? ஒரு நவீன ஜரிகைப் புடவை, அவள் பொன்னான கைக்குப் பொன் கடிகாரம், அந்தச் சுவர்ணக் கழுத்தை அலங்கரிக்க முத்துமாலை...

நான் போனஸ் பெற்றதில் என் மனைவிக்கு எத்தனை பெருமை! ஒரு தொழிலாளியைவிட அவனுடைய மனைவி எத்தனை பெருமைப் படுகிறாள், போனஸ் பணம் வந்ததில்!

முட்டைக்கோஸ் நறுக்கிக் கொண்டிருந்தவளின் மென்கரத்தைப் பற்றினேன்!

"என்ன வாங்கித் தரவேண்டும், உனக்கு?"

"எனக்கு எல்லாம் இருக்கிறதே. உங்களுக்கு நாலு நல்ல கோட்டும், 'பாண்ட்டும்' வாங்கிக்கொள்ளவேண்டும்..."

"இருக்கிறதைப் போட்டுக் கிழிக்கவே என்னால் முடியவில்லை....சொல், நாளைக்கே ஊட்டி போகிறோம்!"

"ஊட்டி போய்?"

"இந்த உலகத்தையே வாங்கிக்கொண்டு வருவோம், சரோ!"

"பணத்தை வீணாக்கலாமா? பாங்கியில் என் பெயருக்குப் போடுங்கள் "

"பணம் வட்டியில் குட்டி போடும் என்று பார்க்கிறாயா, சரோ? அதெல்லாம் முடியாது.. பணத்தை உனக்குத்தான் முழுவதும் செலவழிக்கப் போகிறேன்!" என்றேன் தீர்மானமாக.

ஆனால் என்னால் முடிந்ததா? கால்வாசிப் பணம்கூடச் சரோஜியின் நிமித்தம் செலவழியவில்லை. முக்கால்வாசிப் பணம் இப்போதும் போஸ்டாபீசில் அவள் பெயரில் தூங்குகிறது...

பரிசோதனையை முடித்துக் கொண்டு, வேலைக்காரன் கொண்டுவந்து வைத்த சாப்பாட்டைச் சாப்பிட்டு முடித்தேன், எண்ணெய்க்குச்'சர்டிபிகேட்'எழுதிவேலைக்காரன் வசம் கொடுத்துத் தொழிற்சாலைக்கு அனுப்பினேன், வட இந்தியாவில் எங்கேயோ விஷ ஜுரம் பரவியிருக்கிறது.... அங்கே இன்னும் இரண்டு நாளில் நூறு

உங்களுக்கும்-
சினிமா நட்சத்திரங்-
-களின் மாசற்ற
மேனியழகு
பெண்மையழகிற்கு ஆதாரம்
மாசற்ற மேனியே என்பது பத்மினி
போன்ற அழகிற் சிறந்த சினிமா
நட்சத்திரங்கள் அறிந்த உண்மை.
பத்மினி கூறுகிறுர்: "எனது மேனியைத்
தெளிவுடனும் மென்மையுடனும்
வைத்திருக்க நான் உபயோகிப்பது
தூய, வெண்மையான லக்ஸ்
டாய்லெட் சோப்". நறுமணமிக்க
லக்ஸ் டாய்லெட் சோப்பை உங்கள்
மேனியழகிற்கும் ஏன்
உபயோகிக்கக்கூடாது? லக்ஸ்
டாய்லெட் ஸ்நானத்தின்
இன்பமே இன்பம்!
LUX
LUX
TOILET SOAP
தூய, வெண்மையான
லக்ஸ்
டாய்லெட்
சோப்
சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப்
LTS. 601-X52 TM
ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

காலன் எண்ணெய் அனுப்பப்படவேண்டும்...

கட்டிலில் வந்து உட்கார்ந்து அறையின் ஜன்னலைத் திறந்தேன். யூகலிப்ட்ஸ் மரங்களின் நெடி குறைந்து கீழே எங்கோ பள்ளத்தாக்கில் கிளைத்திருந்த பன்னீர்மரங்கள் அனுப்பிக் கொண்டிருந்த வாசம் மனத்தை மகிழ்விப்பதாக இருந்தது.

படுக்கை விளக்கின் சன்னமான சிவப்பு ஒளி அறையின் சுவரில் பூசியிருந்த மெல்லிய நீல வர்ணத்தை அற்புத மயமாக்கிக் காட்டிக்கொண்டிருந்தது.

ஜன்னலுக்கு வெளியே வானம் துளி மேகமில்லாமல் நிர்மலமாக இருந்தது, மலையில் இம்மாதிரியான நாட்களில் இப்படி இருப்பது அதிசயமே. கார்காலத் துவக்கம் நிகழ்ந்து பத்து நாட்களாகிவிட்டன. துளி மேகமில்லை; சொட்டு மழையில்லை.

சரோஜியிடமிருந்து அன்றையதினம் கூடக் கடிதம் வந்திருந்தது; "மழைவெளுத்துக் கட்டுகிறதா? ஓவர்கோட் போட்டுக் கொள்ளாமல் ஆபீஸுக்குப் போகாதீர்கள். மூக்குக் கொண கொணத்தால் இருக்கவே இருக்கிறது. உங்கள் யூகலிப்ட்ஸ் எண்ணெய். போன வருஷம் மழையின்போது உங்களருகில் நான் குடையாக இருந்தேன் இப்போது? என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். இன்றுகூட அம்மா, டாக்டரம்மாவிடம் அழைத்துப் போனாள். அநேகமாக இன்னும் ஒரு வாரத்துக்குள் பிரசவம் ஆகிவிடலாமாம்..."

என் உடம்பு புல்லரித்தது. ஜன்னல் வழியே திடீரென்று, 'சில்'லென்று வந்த காற்றினால் உண்டான புல்லரிப்பா? அல்லது, ஒருவாரத்துக்குள் பிரசவம்....என்கிறாளே அதனால் புல்லரித்ததா?

மழைக்கு ஆஸ்பதமாகச் 'சில்'லென்ற வாடை தொடர வாரம்பித்தது. கண்ணாடிக் கதவுகளை மூடி மறுபடியும் படுக்கையில் வந்து படுத்துக் கொண்டேன். கையில் அள்ளிவிடலாம் போல் நட்சத்திரங்கள் தெரிந்தன, அவற்றில் ஒன்று மிகப் பிரகாசமாகத் தெரிந்தது. 'உனக்கு ஆண் குழந்தை பிறக்கும்' என்று இதயத்தின் ஒரு மூலையில் அது அறிவித்ததோ?

குழந்தை....

நினைவு 'குழந்தையைச்' சுற்றி ஓடத் துவங்கியது எனக்கு மீண்டும்.

போனஸ் பணம் வந்த மறுநாள் சரோஜியும் நானும் உதகமண்டலத்துக்குப் புறப்பட்டோம். நாலு மைல் 'ஜீப்' பிரயாணம் பண்ணி, ஊட்டிக்குச் செல்லும் பிரதம சாலையை ஒட்டியிருந்த 'லவ்டேல்' ரயிலடி நிலையத்தில் குழந்தையைப்போல் தவழ்ந்து வந்து கொண்டிருந்த நீலகிரி எக்பிரஸில் ஏறினோம்.

கைகளில் ஆளுக்கொரு பூங்கொத்து; இலைகளே மலர்களைவிட அழகாகத்தெரிந்த இலைக் கொத்துகள்தாம் அவை!

எதிரும் புதிருமான பெஞ்சிகள். எங்களைத் தவிர யாருமில்லை அந்தப் பெட்டியில்! இருட்டுக் குகையில் ரயில் போனபோது சரோஜி குழந்தைபோல என்னிடம் ஒண்டினாள்.

வெளிச்சம் வந்தபோது "எனக்குப் பயமாயிருந்தது" என்றாள்.

"வெறும் குழந்தை நீ" என்றேன்.

அன்று பூராவும் அவள் என்னைக் குழந்தை மாதிரி நினைத்தாள்; நான் அவளைக் குழந்தைமாதிரி நினைத்தேன்.

ஊட்டி ஏரியில் படகில் போனபோது, மிக நெருக்கமாக வந்து அமர்ந்து கொண்டே, "எவ்வளவு அழகான காட்சியாக இருக்கிறது பார்த்தீர்களா?" என்றாள்.

"அழகைப்பற்றிச் சொல்லும்போது ஏன் உன் குரல் இப்படி நடுங்குகிறது?" என்று கேட்டேன் நான்.

"வருஷம் பூராவும் இதை இங்கே அனுபவிக்கிறீர்கள் என்று சொல்லுகிறீர்களே, ஆச்சரியமாக இருக்கிறது..."

"அழகில் பிறந்தவர்கள் ஆபத்தைப்பற்றி எண்ணிப்பார்ப்பதில்லை' அவர்களுக்கு ஆபத்து வரவும் வராது...."

அப்போது படகுக்காரன் துடுப்பை ஒரு வலி வலித்துத் திருப்பவே படகு சற்றே சாய்ந்தது.

நான் 'சட்'டென்று பயத்துடன் சரோஜியின் கரங்களைப் பற்றிக்கொண்டேன்.

"பார்த்தீர்களா! குழந்தைமாதிரிப் பயப்படுகிறீர்களே!" என்று கலகலவென்று நகைத்தாள் சரோஜி.

படகுக்காரன் முறுவலித்துத் தனது படக மொழியில், "உங்களுக்குச் சீக்கிரமே ஒரு தங்கக் குழந்தை பிறக்கட்டும்" என்றான்.

அதை நான் சரோஜிக்கு மொழிபெயர்த்துச் சொன்னபோது, அவள் முகத்தில் புலனுகிய நாணம் கவிழ்ந்த மலர்ச்சியை அவளை மணந்துகொண்ட நாளிலிருந்து அதுவரை நான் கண்டதே இல்லை.

அன்று மறுபடியும் நாங்கள் எங்கள் வீட்டுக்குத் திரும்பியபோது இரவு எட்டுமணியாகிவிட்டது.

வீட்டுக்கு வந்து சேர்ந்த பத்து நிமிஷத்துக்குள் மழை 'சோ' வென்று கொட்டத் துவங்கிவிட்டது.

"நல்லவேளை. வழியில் மழையில் அகப்பட்டுக்கொள்ளாமலிருந்தோமே" என்றாள் சரோஜி.

"மழை ஆரம்பித்துவிட்டது சரோஜி இந்த மலையில்! மலையையே மறைத்துவிடும் மழையாக்கும்! நாளைக் காலையில் நீ வெளியே நின்று பார்த்தாயானால், சுற்றியும் ஆயிரம் நீர்வீழ்ச்சிகளைப் பார்க்கலாம் உன் கூந்தலை அவிழ்த்துவிட்டது மாதிரி அப்படிக் கொட்டும் அருவிகள்!" என்றேன்.

கட்டிலில் புரண்டு படுத்தேன், என்ன, இன்னுமா ஒரு மனிதனுக்குத் தூக்கம் வராது? இது என்ன விந்தை, இன்று சரோஜியின் உள்ளம் என்உள்ளத்தை இப்படி ஆக்கிரமித்திருக்கிறதே! எழுந்து ஏதாவது படிக்கலாமா? ஆபீஸ் பைலை வைத்துக்கொண்டு ஏதாவது எழுதலாமா?

எழுந்து, பெரிய விளக்கைப் போட்டுக்கொண்டேன்; மேஜை அருகில் 'பைலை' நாடிப்போனேன்...

மேஜை மேல் தவழும் கிருஷ்ணன் பொம்மை. அற்புத நீல வண்ணத்தில் நிமிர்ந்து என்னை நோக்கியது பொம்மைக் குழந்தை-கிருஷ்ணன்.

மனத்தில் சபலம், அப்படியே எடுத்து முத்தமிடலாமா என்று.

எனினும் ஏதோ தயக்கம் தடுத்தேவிட்டது.

கிருஷ்ணன் பொம்மைக்கெதிரே ஒரு சிமிழ் — தந்தச் சிமிழ் — இருந்தது. அதை எடுத்ததும், மணம் நாசியைத் தாக்கிற்று.

சிமிழுக்குள் கஸ்தூரியைப் பத்திரப்படுத்தி யிருக்கிறாள் சரோஜி.

"உங்கள் யூகலிப்டஸ் எண்ணெய் எனக்குத் தலைவேதனை உண்டாக்குகிறது. இந்தக் கஸ்தூரி அந்த வலியைப் போக்க உதவும்" என்றாள் அதை வாங்கிய தினத்தன்று.

ஆனால் அதை வாங்கிய சந்தர்ப்பம்?

மறுபடியும் நினைவுகள்...

விளக்கைப் 'பட்'டென்று அணைத்து 'பெட்' விளக்கை போட்டுக்கொண்டு கட்டிலில் வந்து படுத்தேன்.

தந்தச் சிமிழை மார்பில் வைத்துக்கொண்டேன். இப்போது நட்சத்திரங்களை மேகங்கள் மூடிவிட்டன. மழை எந்தச் சந்தர்ப்பத்திலும் மலையைப் போர்த்திவிடலாம்.

கஸ்தூரி கிடைத்த தினத்துக்கு என் நினைவு பறந்தது.

வசந்தகாலம் என்றெண்ணும்படி ஒருநாள், அந்த மழைக் காலத்திலும் வந்துற்றது.

அங்கங்கே மலை வாழைகளில் தொங்கிக்கொண்டிருந்த செவ்வாழைப்பழக் குலைகள் சூரிய ஒளியில் மின்னிக்கொண்டிருந்தன. கைகளால் அளாவிப் பறித்துவிடலாம்போலிருந்த பலாப் பழங்கள் மரகத வொளியைச் சிந்திக்கொண்டிருந்தன. தேவதாருப் பூக்கள் சிவலிங்கத்தை அபிஷேகம் செய்ததுமாதிரி, மலைகளை அபிஷேகம் செய்வித்திருந்தது.

சரோஜிக்கு உள்ளம் உவகை தாங்கவில்லை. ஜன்னல் வழியே ஒவ்வொன்றையும் காட்டிக்கொண்டு என்னிடம், "ஆகா, என்ன அழகு! இறக்கை இருந்தால் மலைக்கு மலை தாவிக் குழந்தைபோல விளையாடலாம்! முருகன் ஏன் மலைவாசம் செய்யமாட்டான் என்கிறேன்? குறவள்ளியைக் கண்டு மயங்காமலிருக்கமுடியுமா அவனால்? என்றாள்" உற்சாகமாக.

'பலே பலே' என்றேன் நான்.

வாசலிலிருந்து குரல்—

'ஷார்!...ஷார்...!

யார் இது 'ஷார்'

அம்பிகா விலாஸ்

காந்திபார்க் வடபுறம் :: கும்பகோணம்

வீட்டுத் தயாரிப்புக்கு ஒப்பான சாப்பாடு
சுசி ருசியான பலகாரங்கள்
மரியாதையான பராமரிப்பு
சுத்தம் நிரம்பிய வசதிகள்

இவைகளுக்குப் பெயர் பெற்றது.
சுவைத்துத் திருப்திபெறக்கூடிய இடம்.

அம்பிகா விலாஸ் ஹோட்டல்

ஒரு தடவை அங்கே சாப்பிட்டால்
பின்பு அதன் நிரந்தர
வாடிக்கைக்காரராவது திண்ணம்

P. S. நாராயணஸாமி அய்யர்
புரோப்ரைட்டர்.

பிராஞ்சு:- டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

நானும் சரோஜினியும் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு வாசலுக்கு வந்தோம்.

அங்கே நின்றுகொண்டிருந்த பேர்வழி—

ஒரு மலைநாட்டுக் குறவன். பெண்ணு ஆணு என்று புரியவைக்காமல் அணிகலனகளைப் பூட்டிக்கொண்டிருந்தான், அதிலும் அரை உடம்பில்தான். அவன் கண்களில் பரபரப்பு; கைகளில் நடுக்கம...

அவன் கையை உற்றுக் கவனித்தேன் ஒரு பொட்டலத்தைக் கொண்டுவந்திருந்தான்.

படக மொழியில் பதற்றத்துடன் பேசினன் அவன்:

'ஷாரு, கஸ்தூரி வேணுமா ஷாரு, கஸ்தூரி? அசல் கஸ்தூரி! நஞ்சங்காட்டு மலைக் காட்டிலே புடிச்சமான் கொழுப்பு ஷாரு! நீலகிரி மலைக்கே ஒரு மானுக இருந்திச்சு அது. அதைத் தேடிப் புடுச்சு கஸ்தூரியை எடுத்தேன்...'

'எதுக்கப்பா எங்களுக்கு? வேண்டாம் என்றேன். அவன் விடவில்லை.

'வாசனை பார், ஷாரு! கீழே இறங்கி மேட்டுப் பாளையமோ, கோயமுத்தூரோ போனேனுனுல் இதற்குக் கொள்ளையாச் சம்பாதிப்பேன்! ஆனு ஷாரு, இப்போ எனக்கு அவசரம்! இதை வைச்சுக்கிட்டு ஒரு அஞ்சு ரூவா கொடு போதும்! என் சம்சாரத்துக்கு பிரசவமாகிக்கிட்டு இருக்குது... அது வயித்துலே ஒரு கஸ்தூரி பொறந்துக்கிட்டு இருக்குது... செலவுககு வேணும் ஷாரு! உனனைத் தெய்வமா நம்பியிருக்கேன். கைவிட்டுப்புடாதே!'

'என்ன' என்று கேட்ட சரோஜிக்கு விஷயத்தை விளக்கினேன்.

சரோஜி மறுவார்த்தை பேசவில்லை; தாமதிக்கவுமில்லை; 'விடுவிடு' வென்று உள்ளே போய் ஓர் ஐந்து ரூபாய் நோட்டைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தாள்.

கஸ்தூரி வீட்டுக்கு வந்தது.

'அவன் பொய் சொல்லுவான்' என்றேன் நான்.

'இது நிஜக் கஸ்தூரியாகவே இருக்காது, அம்மா! இந்த மலைக் குறவர்கள் ஏதாவது சொல்லுவார்கள்!' என்றுன் வேலைக்காரனும்.

சரோஜி புன்னகை செய்துகொண்டே அதைத் தந்தச் சிமிழில் இட்டு மேஜைமேல் தவழும் கிருஷ்ணன் பொம்மை எதிரில் வைத்து என்னை நோக்கித் திரும்பினுள்;

'சொல்லட்டுமா?'

ஆளை விழுங்கும் அந்தப் புன்னகையில் மதி மயங்கிப்போன நான் 'சொல்லாமலே புரிகிறது' என்றேன். சரோஜியின் கண்கள் தவழும் கிருஷ்ணனையே உற்று நோக்கின...

இனி கண்டிப்பாய்த் தூங்க வேண்டும் என்று கண்களை இறுகப் பொத்திக் கொண்டேன். வெளியே மழை 'சர் சர்'ரென்று வீசிக் கொண்டிருந்த சத்தம் கேட்டது.

திடீரென்று 'காலிங் பெல்' 'டிரிங்' என்று அலறியது.

யார் வந்திருக்கிறார்கள்? தொழிற்சாலையிலிருந்து அழைப்பு வந்திருக்கிறதா?...

இதற்குள் வேலைக்காரன் வெளியே போய் வந்தான், கையில் ஒரு தந்திக் கவருடன்!'

இதயம் துடி துடிக்கக் கவரைப் பிரித்தேன்—

"ஆண் குழந்தை. கஸ்தூரியும் சரோஜியும் சௌக்கியம்."

வேலைக்காரன் இருக்கிறானே என்று கூடப் பார்க்கவில்லை. தவழும் குழந்தைப் பொம்மையை முத்தமிட்டேன்; தந்தச் சிமிழைத் திறந்து கஸ்தூரி மணத்தை இதயம் நிறைவு மட்டும் நுகர்ந்தேன்.

* * *

மறுநாள்.

வீட்டு வாசலில் குழந்தை அழுகுரல் கேட்டு ஓடி வந்தேன். அதற்குள் என் கஸ்தூரி வந்து விட்டானு?

அந்தக் குறவனும் குறத்தியும் அவர்கள் கையில் குழந்தையுமாக நின்றிருந்தார்கள்,

"நாங்கள் இந்த மலை விட்டு அடுத்த மலை போறோம், ஷாரு! உங்களிடம் சொல்லிவிட்டு, குழந்தையையும் காட்டி விட்டுப் போகலாம் எனறு வந்தோம்" என்றான் குறவன், படக மொழியில்.

குறத்தி நாணத்துடன் தன் குழந்தையின் அழகையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் புறப்பட்டு மலைச்சாரலில் இறங்க ஆரம்பித்தார்கள். வெகுநேரம் நின்றுகொண்டு அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

என்னிடம் மணத்தை அளித்துவிட்டு அவனும் தாங்கிக்கொண்டு போகிறான். மனம் குழந்தை மாதிரிக் குதூகலித்தது. ★

மனைவியா மரக்கட்டையா?

எஸ்.ஜி.ஆர்

“ஹா—க்!”

சாருமதியின் தொண்டையிலிருந்து விம்மலொன்று வெடித்துச் சிதறியது. ‘கரகர’ வென்று கண்களில் சுரந்த கண்ணீர் பட்டுக் கன்னங்கள் வழியே பாய்ந்து. அவள் கையில் வைத்திருந்த கடிதத்தின்மேல் விழுந்தது.

நீர் நிறைந்த கண்களுடன் சாரு அந்தக் கடிதத்தைப் பார்த்தாள். கடிதமா அது...? அல்ல, அல்ல! பத்திரிகை. கல்யாணப் பத்திரிகை. சீமந்த முகூர்த்தப் பத்திரிகை. இன்னும் இரண்டே மாதங்களில் அவள் தங்கை ராதை தாயாகப் போவதை அறிவிக்கும் பத்திரிகை.

சீமந்தப் பத்திரிகையைக் கண்டு—அதுவும் அவள் ஆசைத் தங்கை ராதையின் சீமந்தப் பத்திரிகையைக் கண்டு அவள் கண்ணீர் விடுவதென்றால்...? உற்சாகத்தால் விம்மித் துணிய வேண்டிய அவள் இதயத்திலே விம்மல் கிளம்புகிறதென்றால்...?

காரணம் இல்லாமல் இருக்குமா...?

“ஏண்டி பெண்ணே. என்னடி கடிதாசு அது...? யார் போட்டிருக்கா...”—சமையலறையிலிருந்து வெளிப்பட்ட அவள் மாமியார்க்காரி வழக்கமான தனது கீச்சுத் தொண்டையில் கேட்டாள்.

கண்களைத் துடைத்துக் கொண்ட சாருமதி, சீமந்தப் பத்திரிகையை மாமியாரிடம் மௌனமாக நீட்டினாள்.

“என்னடி சமாசாரம்னு கடிதாசை நீட்டறியே ...எனக்குப் படிக்க கண் தெரிஞ்சா உன்னை ஏன் கேக்கறேன்?”—அதே கீச்சுத் தொண்டை.

“ராதைக்குச் சீமந்தமாம். அதுதான் பத்திரிகை...”—துக்கத்தை அடக்கிக்கொண்டு அவள் கூறிய வார்த்தைகள்.

“தங்கைக்கு சீமந்தம் வந்துடுத்தா...? இனிமே உன் அம்மா கழுத்து தலையிலே நிக்காது போ...”—கூறிவிட்டு, அந்த எலித்தொண்டை மறுபடியும் சமையல் அறைக்குள் தஞ்சம் புகுந்துவிட்டது.

தன் மாமியார் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் ‘சுருக்’கென்று தைத்தன சாருமதியின் உள்ளத்திலே. ‘என் அம்மாவை ஏன் மாமி பழிக்கிறீர்கள்? அவளை பாட்டியாக்கும் பாக்கியத்தை என்னால்தான் அளிக்க முடியாமல் செய்துவிட்டீர்கள்’ என்றால், என் தங்கை அளிப்பதைக் கண்டு ஏன் மாமி பொருமுகிறீர்கள்?’ என்று கேட்க அவள் மனம் துடித்தது.

ஆனால், முடியுமா அப்படிக்கேட்க? வாயிருந்தும் ஊமையாக, கண்ணிருந்தும் குருடியாக செவியிருந்தும் மந்தமாக, உயிரிருந்தும் உணர்ச்சியற்ற ஜடமாக அந்த வீட்டில் உலவி வரும் அவளால் கேட்க முடியுமா அப்படி?

* * *

சாருமதியை நாகராஜன் பெண் பார்க்க வந்தபோது அவனைப் பற்றி அவளுக்குத் தெரிந்த விஷயங்கள் இரண்டு. அவன் ஏற்கனவே மணமானவன் என்பது ஒன்று; முதல் தாரத்தை இழந்த அவன் மூன்று வயதுப்பெண் குழந்தைக்குத் தகப்பன் என்பது இரண்டு.

நாகராஜனுக்கு அப்போது வயது முப்பது தான். சாதாரணமாக எல்லோரும் முதல்மணம் செய்து கொள்ளும் வயதுதான். இருபத்திமூன்று வயதான சாருமதிக்கு அவன் பொருத்தமில்லை யென்று சொல்லுவதற்கு இடமில்லை. ‘இரண்டாம் தாரம்’ என்பதைக் கூட மறந்து விடலாம். ஆனால் அந்தக் குழந்தை...? முதல் தாரம் விட்டுச் சென்ற மூன்று வயதுப் பெண் குழந்தை...?

சாருமதி ஒருகணம் யோசித்தாள். ஒரே ஒரு கணம்தான்' மறுகணம்...?

"எனக்குப் பூரண சம்மதம். அம்மா!"—தன் முடிவை அழுத்தமாகக் கூறி விட்டாள்.

சாருமதியின் தாய் மீனுட்சி மட்டுமல்ல, அவள் தங்கை ராதைகூட அயர்ந்து விட்டாள் அவள் அழுத்தமான முடிவைக் கேட்டு.

"சாரு! நன்ருக யோசித்துச் சொல்லு... முதல் தாரத்துக் குழந்தை ஒண்ணு வேறு இருக்கு... பின்னுலே, ஏதாவது தகராறு வந்தால், அம்மா தான் என்னே இங்கே கொண்டுவந்து தள்ளிட்டான்னு சொல்லக்கூடாது..."— மீனுட்சி பேச வில்லை; அவள் தாய்ப்பாசம் பேசியது. அதுக்கு சாரு கூறிய பதில்—

"எனக்கு நான்கு வருஷத்துக்கு முன்னுலேயே கல்யாணமாகியிருந்தால், இப்போது அதேமாதிரி ஒரு குழந்தை இருக்குமல்லவா? எனக்குக் கல் யாணமாகி நான்கு வருஷமாயிடுத்துன்னு நினேச்சுடறேன்!"

தான் பெற்ற செல்வத்தின் இந்தப் பதில் உண்மையிலேயே தாயைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது.

"அக்கா! உனக்குக் கீழே நான்கு தங்கைகள் கள் கல்யாணத்துக்கு இருக்கிருர்கள்ன்னு, கல்யா ணத்துக்குச் சம்மதம் கொடுத்திருந்தா சொல்லி விடு... ஏனென்ருல்..."— தங்கை ராதை முடிக்க வில்லே.

"நான் ஒன்றும் அவ்வளவு பெரிய தியாகியல்ல. என் மனசுக்குப் பிடித்தே, நான் அவரை மணக்கச் சம்மதிக்கிறேன்." என்று 'பட்'டென்று கூறி விட்டாள் அவள்.

பிறகென்ன...?

நாகராஜனுக்கும் சாருமதிக்கும் திருமணம் நடந்தேறியது. முதல் முறையாக சாருமதியும் இரண்டாம் தரமாக நாகராஜனும் அக்னி வலம் வந்து அருந்ததி பார்த்தனர்.

* * *

முதல் இரவு!

இரண்டாம் கல்யாணமாயினும், தங்கள் பெண்ணுக்கு முதல் கல்யாணம்தானே என்று சாருமதியின் பெற்ருேர்கள் முறைப்படி செய்ய வேண்டியதையெல்லாம் செய்தனர்.

இரண்டு அழகிய பஞ்சு மெத்தைகள், அந்த அறைக் கட்டில்களில் புது மணத் தம்பதிகளின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தன.

அநுபவமில்லாத தங்கைக்காரி, அநுபவத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அக்காக்காரியைக் கேலிசெய்தவண்ணம், அறையினுள் கொண்டு விட்டு வந்தாள்.

அறையினுள்ளே—

மெத்தையில் அமர்ந்திருந்தான் நாகராஜன் சாருமதி உள்ளே வந்த மறுகணம், எழுந்து சென்று கதவைத் தாள்போட்டான். அடுத்த கணம்—

கட்டில் அருகில் வந்தவன் சாருமதி திடுக்கிடக் கூடிய செயல் ஒன்றைச் செய்துவிட்டான்.

வேகமாக இரண்டு மெத்தைகளில் ஒன்றைச் சுருட்டியவன், அறைக் கோடியில் அதைக் கொண்டுவந்து போட்டான். சாருமதி அதிர்ந்து நிற்கையிலே...

"உம்... நீ அங்கே படுத்துக்கொள்..." என்று அதிகாரமாகக் கூறியவன், கட்டிலில் 'தொப்' பென்று உட்கார்ந்தான்.

சிலேயாக நின்றுகொண்டிருந்த சாருமதி, 'தொப்'பென்று அவன் கால்களில் விழுந்தாள். சூடான கண்ணீர் அவன் கால்களே நனேத்தது.

"நான் செய்த தவறென்ன...? எனக்கேன் இந்தத் தண்டனே..." விம்மும் அவள் இதயத்தி லிருந்து கிளம்பிய வார்த்தைகள்.

"நீ தவறு செய்ததாக யார் கூறியது? நீ தவறு செய்யாமலிருக்கத்தான் இந்த ஏற்பாடு."

கண்ணீர் பளபளக்கும் கண்களுடன் அவனே ஏறிட்டு நோக்கிஞள் அவள். "தவறு செய்யாம லிருக்கவா...? நானு...? யாருக்கு...!"

"ஆம், நீதான்! என் குழந்தைக்கு!"—வார்த் தைகள் சற்று சூடாகவே வந்தது அவன் வாயி லிருந்து.

அவள் புரியாமல் விழித்தாள்.

"இதோ கேள்; நான் உன்னே மணந்துகொண் டது என் சுயநலத்துக்காக அல்ல; என் குழந்தை யின் சௌக்கியத்திற்காக. வயதான என் தாயால் அதை வளர்க்க முடியாது என்பதற்காக. கடமைக்காக நான் உன்னே மணந்தேனேயன்றி என் கருத்துக்காக மணக்கவில்லே: நீ இந்த வீட் டினுள் நுழைந்தது என் குழந்தையைக் கண் ணுங் கருத்துமாகக் காப்பாற்றவே யொழிய, என்னுடன் காதல் விளேயாட்டு விளேயாட வல்ல...!"

சம்மட்டி கொண்டு தன் தலேயில் யாரோ ஓங்கி அடிப்பது போன்றிருந்தது சாருமதிக்கு. அவன் கூறிய ஒவ்வொரு சொல்லும் கூரிய ஈட்டியாக அவள் உள்ளத்தில் பாய்ந்து சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குச் சில நிமிடங் கள் பிடித்தன அவளுக்கு. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவள் கேட்ட முதல் கேள்வி இதுதான்.

"நீங்கள் என்னிடம் அன்பாக இருந்தால் நான் உங்கள் குழந்தையைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துக் கொள்ள மாட்டேன் என்றுதானே நீங்கள் நினேக்கிறீர்கள்...?"

FOR

Quality Printing

AND

Block-Making

CONTACT:

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE

46, ARMENIAN STREET :: MADRAS-1.

Grams: **PRINTHOUSE** *P. B. No.* **1569** *Phone*: **4037**

கும்பகோணத்தில்

மணமான காப்பியும் சிற்றுண்டிகளும் சுவையான உணவும்
தங்க காற்றோட்டமான ரூம்களும் வசதிகளும் அளிக்கும்

ஸ்தாபனம்

ஆரியபவன்

பெரியதெரு, :: கும்பகோணம்.

கடைத்தெருவுக்கும் டவுனுக்கும் மத்தியிலுள்ளது
வியாபாரிகளுக்கும் யாத்ரீகர்களுக்கும் வசதியுள்ளது

பிராஞ்சு :—

மதருஸ் ரெஸ்டாரெண்ட்

மடத்துதெரு — கும்பகோணம்

Proprietor: M. R. சேதுராமன்

"ஆமாம்!"

"அப்படி யார் சொன்னது உங்களுக்கு?"

"என் உள்ளம் சொன்னது. என்னைப் பெற்றெடுத்த தாய் சொன்னாள் அப்படி. இது போதாதா?"

"ஆ........"

"ஏன் அதிர்ச்சியடைகிறாய்? தியாகம் புரியத் தயாராகத்தானே நீ மறுமணத்துக்கு இசைந்தாய். பின் எதற்காக இந்த அதிர்ச்சி. உன் கணவனின் அன்பை நீ மறந்து விடத்தான் வேண்டும். தாயாகும் பாக்கியத்தை நீ துறந்து தான் ஆக வேண்டும். உனக்குக் குழந்தை பிறந்தால், என் முதல் தாரத்துக்குக் குழந்தை மாற்றாந்தாய் என்ற கொடுமைக்கு ஆளாகிவிடும். நீ உன் சொந்தக் குழந்தையின்பத்திலே என் குழந்தையைத் துன்பக்கடலில் ஆழ்த்திவிடுவாய். ஆகவேதான் இந்த ஏற்பாடு. நான் தீர ஆலோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். இனி எந்தச் சக்தியாலும் என் முடிவை மாற்ற முடியாது."

தன் முடிவைக் கூறிவிட்டு, அவன் படுக்கையில் படுத்துவிட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் குறட்டை சப்தம் அவனிடமிருந்து எழுந்தது.

தலையணை கண்ணீரில் நனைய, அன்றைய இரவைத் துன்ப இரவாக, துயிலா இரவாகக் கழித்தாள் அவள்.

மறுநாள் காலையில், கதவைத் திறந்துகொண்டு அவள் வெளியே வந்தபோது, கதவுக்கு வெளியே காத்திருந்த தங்கை ராதை விஷமச் சிரிப்புடன் அவளை வரவேற்றாள். "அக்கா! கொஞ்ச நேரமாவது ராத்திரி தூங்கியிருக்கக்கூடாதா? கண்ணெல்லாம் ஏகமா சிவந்திருக்கே..." என்று, ராதை அவள் காதருகில் கிசுகிசுத்தபோது சிரமப்பட்டு நாணப் புன்னகையை வரவழைக்க வேண்டியதாயிற்று அவள்.

ராதை கூறியதில் தவறென்ன? ராத்திரி முழுவதும் அவள்தான் கண்ணே மூடவில்லையே.

சாருமதியைக் கொண்டுவந்துவிட வந்தவர்கள், ஊருக்கு கிளம்பிவிட்டனர். அவள் எவரிடமும் — தன் தாயிடம் கூட — இரவு நடந்த நாடகத்தைப்பற்றிக் கூறவேயில்லை. சந்தோஷமாகத் திரும்பி சென்றுகொண்டிருக்கும் அவர்களை, தன் சோக வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தைக் கூறி, எதற்காக சங்கடப்படுத்த வேண்டும் என்று, விஷயத்தைத் தன் மனத்துக்குள் அடக்கிக்கொண்டாள்.

* * *

நாட்கள் வெகுவேகமாக ஓடிக்கொண்டிருந்தன

நாகராஜன் மிகவும் ஜாக்கிரதையுடன் அந்த வீட்டில் நடமாடி வந்தான். சாருமதியிடம் நெருங்கிக்கூடப் பேசுவதில்லை. அவனுக்குச் சாதம் போடுவதிலிருந்து இரவு படுக்கும்போது பால் கொடுக்கும் வரை, அவன் விஷயங்கள் அனைத்தையும் அம்மாக்காரிதான் செய்வாள். சாருமதி தன்னிடம் நெருங்கிப் பேசினால், எங்கே தன் மனம் சபலம் அடைந்துவிடுமோ என்ற பயம் அவனுக்கு. அந்தப் பயத்துக்கு அம்மாக்காரி வேறு தூபம் போட்டு வந்தாள்.

"டேய் நாகு! ரொம்ப ஜாக்கிரதையா நடந்துக்கோடா...... நான் இல்லாத சமயம் அந்தப் பொண்ணு பல்லை கில்லைக் காட்டும். ஏமாந்துப் போறே... அப்புறம் குழந்தை கதி அவ்வளவு தான். ஜாக்கிரதை!"

இது போதாதா அவன் உள்ளம் கற்பாறையாக. ஆனால் சாருமதி...?"

அவளால் தன் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டு வளைய வர முடிந்ததா? கடமை மனைவியாகத் தன்னை ஆக்கிக்கொள்ள முடிந்ததா? தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு மரக்கட்டையாக, உயிரற்ற ஜடப் பொருளாக, தாய்மைப் பாசத்தைப் பெறாத மலடியாகத் தன்னை நினைத்துக்கொண்டு வாழ்நாட்களைக் கடத்த எண்ணிய அவள் அதில் வெற்றி பெற்றாளா?

எப்படி முடியும்? பருவத்தின் பிடியிலே சிக்கித் தவித்துவரும் ஒரு பெண்ணால் அது எப்படி முடியும்? 'மனைவி' என்ற சொல்லின் முழுப் பயனையும் அடையமுடியாமல், வேலைக்காரியாக, சமையற்காரியாக, வளர்ப்புக் குழந்தைக்குத் தாயாக மட்டும் ஒரு மனைவியால் இருக்க முடியும் என்றால் அவளைப் பெண் என்றே கூறமுடியாதே!

பல நாட்கள் கண்ணீர்க் குளத்திலே மிதந்து வந்தாள். தன் கணவன் மனத்தைத் தன் பால் இழுக்க முடியுமா என்று சில நாட்கள் யோசித்துப் பார்த்தாள். அவனுடன் அருகிலிருந்து பேசினால்தானே, அவள் அவன் மனத்தை மாற்ற முடியும்? அதற்கு முட்டுக் கட்டையாகத்தான் எலித்தொண்டை மாமியார்க்காரி எப்பவும் அவர்களுக்குக் குறுக்கே கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றி நின்றுகொண்டிருந்தாளே. இரவிலேதன் அறையிலே அந்தக் குழந்தையுடனும் மாமியாருடனும் கதவைத் தாள் போட்டுக்கொண்டு படுக்கவேண்டும். நாகராஜன் கூடத்திலே படுத்துக்கொள்ளுவான். சிறு சத்தம் கேட்டாலும் மாமியார்க்காரி .கண் விழித்துக்கொண்டு விடுவாள்.

இந் நிலையில் ஒரு பெண்—உணர்ச்சியுள்ள ஒரு பெண் என்ன செய்வாள்?

தற்கொலை செய்துகொள்ளுவதைப்பற்றி அவள் பன்முறை சிந்தித்ததுண்டு. ஆனால் ஏனோ கோழைத்தனமான அந்தச் செயலுக்கு அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. பின வேறு வழி...?

பல நாட்கள் அடக்கி அடக்கி மனத்துக்குள் வைத்துக் கொண்டிருந்தவள், பிறந்த வீட்டிற்

குச் சென்ற சமயம் ஒருநாள் கதறித் தீர்த்துவிட்டாள் தன் தாயிடம்.

பெற்றவள் பேயறைந்தவள் போலானாள்—மகள் கூறியதைக் கேட்டதும். தங்கை ராதை கன்னத்தில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டாள்—கன்னி கழியாத தன் அக்காவைப் பார்த்து.

அம்முறை பெண்ணைத் தாயும் தந்தையும் சேர்த்து புக்கத்தில் கொண்டுபோய் விட்டனர். பெற்றவளின் வயிறு சும்மா இருக்குமா பெண்ணின் இந்நிலை கண்டு? தங்கையின் மனம் சங்கடப்படாமல் இருக்குமா அக்காவின் அவல வாழ்வைக் கேட்ட பிறகு?

இருவருமே சுடச்சுடக் கேட்டு விட்டனர் அந்த எலித் தொண்டையை.

"உங்களுக்கே ஒருபெண் இருந்து, உங்கள் மாப்பிள்ளை இந்தமாதிரி நடந்து கொண்டால் உங்கள் மனம் என்ன பாடுபடும்? பெண்ணான உங்களுக்கு ஒரு பெண்ணின் மனம் ஏன் புரிய மாட்டேன் என்கிறது? பிள்ளைக்குப் புத்தி சொல்லி திருத்துவதை விடுத்து, அவனுக்கு மேலும் மேலும் தூபம் போட்டு, மகனையும் மாட்டுப் பெண்ணையும் சேரவிடாமல் செய்கிறீர்களே? நீங்களும் ஒரு தாயாரா? என் மகள் இருந்தால் அவளை இங்கேயே வெட்டிப்போட்டுவிடுவேன்"—இது அவள் அம்மா மீனாட்சி.

"உலகத்திலேயே எங்க அக்காவைப் போன்ற பொறுமைசாலி வேறு யாருமே இருக்க முடியாது... அவளாக இருக்கவே இந்த வீட்டில் இன்னும் பொறுமையுடன் இருக்கிறாள். நானாக இருந்தால்...?"—இது தங்கை ராதை.

முடிவு...?

பேச்சு நின்றது. ஆனால், செயலில் எந்தவிதமான மாற்றமும் நிகழவில்லை. அவர்கள் இதைக் கேட்டுவிட்டு வந்ததனால், மாமியாரிடமிருந்து மருமகளுக்குக் கிடைக்கும் 'அர்ச்சனைகள்' அதிகமாயிற்றே தவிர நிலைமை பழையபடியேதான் இருந்து வந்தது.

மகள் 'வாழாவெட்டி'யானாலும் பரவாயில்லை என்று, அழைத்துக்கொண்டு வந்துவிடலாம் என மீனாட்சி பலமுறை நினைத்ததுண்டு. ஆனால், தனக்குக் கல்யாணம் செய்யவேண்டிய பெண்கள் நான்கு பேர் இருக்கின்றனர் என்ற எண்ணம் தான், நினைத்ததைச் செயல்படுத்த முடியாமல் தடுத்து வந்தது. மூத்த பெண் வாழாவெட்டி என்றால், அந்த வீட்டில் பெண்கொள்ள எவன் துணிவான்?

இந்நிலையில் ராதைக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. பையன் ஏழைதான். ஆனால் கலைஞன். முதல் தாரம்தான். ஒரு தரம் சுடுபட்டவர்களாயிற்றே. இனி இரண்டாம்தாரம் என்ற பேச்சையே எடுப்பார்களா?

'பையன் பெண்டாட்டியை சந்தோஷமாக வைத்துக்கொள்ளுவானா?' என்று ஒரு முறைக்குப் பலமுறை தீர விசாரித்த பிறகே, தன் இரண்டாவது பெண்ணை அந்த இளைஞன் கையில் பிடித்துக் கொடுத்தாள் பெற்றவள்.

ராதை உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிதான். தன்மேல் உயிரையே விடும் ஆசைக் கணவனை அடைந்தது மட்டுமின்றி, மணமான ஒரே வருடத்தில் தாயாகப் போகும் பாக்கியத்தையும் பெற்றுவிட்டாளே.

தங்கையின் சீமந்தப் பத்திரிகையைக் கண்டு மகிழவேண்டிய அக்காக்காரியோ...?

வேதனையிலே வெந்து மடிந்துகொண்டிருந்தாள்.

* * *

சீமந்தத்துக்கு முன்னாள்...!

மனைவியை அழைத்துக்கொண்டு நாகராஜன் வந்து சேர்ந்தான். மகனையும் மருமகளையும் தனியே அனுப்புவதில் தாயார்காரிக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லைதான். இந்தப் பெண் வழியில் பேசி, அவன் மனத்தை மயக்கி விடப் போகிறதே என்ற பயம். ஆனாலும் வேறு வழி...? சீமந்தத்துக்கு அவனும் போவது—அதுவும் தன்னைப் பழித்துவிட்டுச் சென்றவர்கள் வீட்டுக்குப் போவது—அவ்வளவு நன்றாக இருக்குமா...? வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு தான் அனுப்பி வைத்தாள்.

சீமந்த வீட்டினுள் அடி எடுத்து வைத்த சாருமதியின் கண்களில் முதலில் பட்ட உருவம் தங்கை ராதைதான்.

ராதையா இவள்...? அடேயப்பா...? எவ்வளவு அழகாக வெளுத்து விட்டாள்...? கன்னங்கள் இரண்டும் ஆப்பிள் மாதிரி எவ்வளவு அழகாக சிவந்து உப்பியிருக்கின்றன. உடம்பு தங்கம் மாதிரி ஜொலிக்கிறதே...!

பாவம், சாருமதி! பிள்ளை பெறப் போகும் பெண்களுக்கே ஒரு தனிக் கவர்ச்சியும் அழகும் வந்து விடும் என்பதை அறியாத அப்பாவி.

"அக்கா!" என்று ஓடி வந்து சாருமதியைக் கட்டிக்கொண்டாள், மடி நிறையத் தாய்மை பூரித்துப் பொங்கும் தங்கை.

தங்கையின் கரங்கள் அக்காவின் முதுகை இதமாகத் தடவிக் கொண்டிருந்தன. ராதையின் கன்னங்களில் கண்ணீர் பளபளத்தது. ஏன்...?

அக்கா அடைய முடியாத பாக்கியத்தைத்தான் மட்டும் அடைந்து விட்டோம் என்பதாலா? அல்லது உணர்ச்சிகளை உள்ளத்தில் அமுக்கி, உலகின் கண்களுக்குப் புருஷனுக்கு மனைவியாக வாழ்ந்து, வாழ்க்கையை நரகமாகக் கழித்துக் கொண்டிருக்கும் அக்காவின் அவல வாழ்வை நினைத்ததாலா?

எதை நினைந்துக் கண்ணீர் விட்டாளோ அவள்?

* * *

இரவு வந்தது!

அக்காவும் தங்கையும் தனி அறையை நாடிச் சென்று விட்டனர் படுக்க - தங்கள் உள்ளங்களை உறவாடவிட.

கூடத்தில் ஒரு பக்கத்தில் மூத்த மாப்பிள்ளை நாகராஜன் படுத்திருந்தான் மற்றொரு பக்கத்தில் இரண்டாவது மாப்பிள்ளை சுந்தரம் – ராதையின் கணவன், தனது உறவுக்கார மனிதர் ஒருவருடன் படுத்துக் கொண்டான்.

சுந்தரமும் அவன் பக்கத்தில் படுத்திருந்த மனிதரும் பேசிக் கொண்டிருந்தனர். தூக்கம் வராத நாகராஜன் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"உங்களுக்குத் தெரியுமா மாமா, போன வாரம் இந்த ஊரில் ஒரு பரபரப்பான சம்பவம் நடந்ததே... பேப்பரில் கூட வந்ததே..." என்றான் சுந்தரம் திடீரென்று.

"இந்தப் பிள்ளைப்பாக்கம் கிராமத்திலே வரக்கூடிய அளவுக்கு என்னடா சம்பவம் நடந்தது" என்றார் பக்கத்தில் படுத்திருந்தவர்.

For **PURE SILK SAREES**

visit

ARKONAM

V. SUNDARESA IYER SONS

Big Street, Kumbakonam.

CONSULTANT &
ARCHITECT IN TEXTILES

*

Supply: **Prompt Reasonable**
and
At Fair Prices

*

Aim: **Honesty is**
our Motto

"அது தான் மாமா, நாலு வயசுக் குழந்தை யொன்றை, ஒரு பெண் தலையைத் திருகி......"

மாமா மட்டுமல்ல, தள்ளிப் படுத்திருந்த நாகராஜனும் திடுக்கிட்டு விட்டான்.

"என்னடா சொல்றே நீ...தன் பெண், குழந்தையின் தலையைத் திருகியா"—மாமா பதறினர்.

"ஆமாம், மாமா! தலையைத் திருகிக் கொன்றிருக்கிருள்—நாம் கத்திரிக்காய், வெண்டைக்காய் பறிப்பது போல."

"என்னடா இது நம்பவே முடியவில்லையே!"

"நடந்திருக்கிறதே...அந்தக் குழந்தை முதல் தாரத்துக் குழந்தை...அப்பன்காரன் இரண்டாம் கல்யாணம் பண்ணிண்டான்' ரெண்டவதாக வந்தவள் ஒரு மலடி. அவளுக்குக் குழந்தையே பிறக்கல்லே...குழந்தையில்லா பெண்ணுக்குத் தாய்ப் பாசம் எப்படி பிறக்க முடியும்? குழந்தையின் அருமை எப்படித் தெரியும்? குழந்தை பெற்றிருந்தால் அல்லவோ அதன் அருமை பெருமை தெரியும்? முதல் தாரத்துக் குழந்தை ஏதோ விஷமம் செய்திருக்கு...மலடியான அவளுக்குக் குழந்தையை எப்படி கண்டிக்கணும்—எப்படி தண்டிக்கணும் என்பதெல்லாம் எங்கே தெரியப்போறது. கோபத்திலே, அப்படியே அந்தக் குழந்தையின் தலையைத் திருகி..."

நாகராஜனுக்கு இதயமே நின்றுவிடும் போலாகிவிட்டது.

"சுந்தரம் என்ன இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இத்தனை துணிச்சலா?"—மாமா திகைத்துப் போய்க் கேட்டார்.

"துணிச்சல் இல்லே மாமா இது! அவள் தாய்ப் பாசத்தை உணர முடியாததனுல் வந்த வினை. அவளுக்கே ஒரு குழந்தை பிறந்திருந்தால், குழந்தையின் அருமை பெருமை தெரிந்திருக்கும். பெற்றவளுக்குத் தான் தெரியும் பிள்ளையின் அருமை. பெருதவள் இதயத்திலே, அன்பு, பாசம் எல்லாம் எப்படி சுரக்க முடியும்? அவள் மட்டும் பெற்றவளாக இருந்தால், அந்தக் குழந்தையை ஒருக்காலும் அப்படிச் செய்தே யிருக்கமாட்டாள்..."—சுந்தரம் மூச்சுவிடாமல் பேசித் தீர்த்துவிட்டான்.

"நீ சொல்லறது வாஸ்தவம் தாண்டா. எதுவுமே அதை அனுபவித்த ர்களுக்கும்" உணர்ந்தவர்களுக்கும் மட்டுமேதான் தெரியும். பெண் தான் தாயானல்தான் குழந்தையின் அருமையை உணர்கிருர். நீ சொல்லுவதுபோல, பெருதவனுக்கு என்ன தெரியும் பிள்ளையின் பெருமை!"— மாமா சொல்லிவிட்டுத் திரும்பிப் படுத்தார்.

அன்று இரவு நாகராஜனுக்கு சிவராத்திரியாகிவிட்டது.

மறு நாள்!

'இரண்டு நாட்கள் இருந்துவிட்டுப் போங்கள்' என்று பன்முறை வற்புறுத்தியும், அன்றே மனைவியுடன் கிளம்பி விட்டான் நாகராஜன்.

கிளம்பும்பொழுது, பிரியாவிடை கொடுத்த தங்கை ராதை, சாருமதியின் காதருகில் வந்து, "அக்கா! கவலைப்படாதே. கட்டாயம் கடவுள் கண் திறக்கத்தான் போகிருர். அடுத்த வருஷம் நீ எனக்கு சீமந்தச் சாப்பாடு போடத்தான் போகிருய்" என்று ரகசியக் குரலில் கூறி வழி அனுப்பினுள்.

இரவு எட்டு மணிக்கு இருவரும் வீட்டை அடைந்தனர். சாப்பாடு ஆன பிறகு, வழக்கம் போல், மகனுக்கு மெத்தையைக் கூடத்தில் கொண்டு வந்து போட்டாள் தாயார்க்காரி.

"அம்மா! என் மெத்தையையும் உள்ளேயே போட்டுடு... நான் இன்றைக்கு அறையினுள்ளேயே படுத்துக்கறேன். நீ கூடத்தில் படுத்துக்கோ...' நாகராஜன் அமைதியாகக் கூறியதைக் கேட்டதும், தாயார்க்காரி திடுக்கிட்டுவிட்டாள்.

"என்னடா, நாகு! நீ என்ன சொல்லறே... நீ உள்ளே படுத்துக்கிறியா...? என்னடா இது...? அந்தப் பாவிப் பெண் உன் மனசை..."—கீச்சுத் தொண்டை முடிக்கவில்லை.

"அம்மா, அவளும் இல்லே, இவளும் இல்லே... என் மனசை யாரும் கலைக்கவில்லை. சொன்னல் சொன்னபடி கேள். நானும் அவளும் ரூமில் படுத்துக்கொள்ளப் போகிருேம்" என்றவன், தாயின் பதிலுக்குக்கூடக் காத்திராமல், தன் மெத்தையை எடுத்துக்கொண்டு அறைக்குள் சென்றுவிட்டான். அடுத்த கணம், தாயாரின் படுக்கை கூடத்தில் வந்து விழுந்தது. அதைத் தொடர்ந்து —

டொக்!

அறைக் கதவு தாள் போடும் சப்தம்! மகனின் மாற்றம் புரியாமல் அம்மாக்காரி, கூடத்திலே, ஸ்தம்பித்து நிற்க, அறைக்குள்ளே அம்பிகையின் படத்தை நோக்கி கரம் குவித்து வணங்கிக் கொண்டிருந்தாள் சாருமதி.

தன் வாழ்வில், தன் தங்கை ராதைதான் விளக்கேற்றி வைத்தாள் என்பதும், தன் கணவன் சுந்தரத்தினிடம் விஷயத்தைக் கூற, வேண்டுமென்றே தங்கள் ஊரில் நடக்காத 'அந்தச் சம்பவத்தை' நாகராஜன் காதுபடக்கூறி, சாருவின் கணவன் நாகராஜன் மனத்தை மாற்றச் செய்தாள் என்பதும் அவளுக்குத் தெரியவே தெரியாது. ★

நெஞ்சின் நினைவு

"வனமாலிகை"

இளமங்கையின் நாணங் கலந்த முகத்தைப்போல மேல்வான விதானம் செக்கராகக் காட்சி யளித்தது, பறளியாற்று வெண்மணலில் உட்கார்ந்திருந்த முரளி அதை வெறித்துப் பார்த்தான், அவன் எதிரே ரகுநாதன் முரளியின் முகத்தில் முளைத்து அழியும் உணர்ச்சிக் குமிழிகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"சார்!"

முரளி ரகுநாதனைத் திரும்பிப் பார்த்தான்.

"நீங்கள் இந்த ஊருக்கு மாற்றலாகி வரும்போது கலகலப்பாக இருந்தீர்கள்; பழகினீர்கள். ஆனால் இப்போது சில நாட்களாக உங்களிடம் கலகலப்பே இல்லை. உங்கள் வாழ்க்கையில் ஏதோ சோக ரகசியம் இருக்கிறது" என்றான்.

முரளி கம்பெனி மானேஜர். ரகுநாதன் அந்த கம்பெனியிலுள்ள குமாஸ்தா. இருவருக்கும் ஒரே வயதுதானிருக்கும். ஆனால் முரளியின் முகம் வயதுக்குத் தக்கதாக இல்லை. ரகுநாதன் முகத்தில் குடும்பத் தொல்லையைச் சுமக்கும் அறிகுறிகள் காணப்பட்டன.

"ஆமாம். கொஞ்ச வருஷங்களுக்கு முன் என் இதயத்தைப் பீதிச் சுறுவளி சொந்தமாக்கிக் கொண்டது. ஆனால் சிலகாலமாக அது அடங்கிக் கிடந்தது. இந்த ஊருக்கு வந்த ஒரு வாரத்திற்குப் பிறகு எதிர்பாராத விதமாக ஒருநாள் அவளைப் பார்த்து விட்டேன். அதன் பிறகு அடங்கிக் கிடந்த பீதி புயலாகச் சீறி என்னைச் சித்திரவதை செய்கிறது".

"அவளா? யாரது?"

"ரகு, உங்களை என் உடன்பிறந்த சகோதரனாக நினைத்து என் கதையைச் சொல்கிறேன். உங்களிடம் சொல்லுவதால் என் இதயச் சுமை சற்று இறங்கினாலும் இறங்கலாம். ஆனால் அவள் பெயரை மட்டும் நீங்கள் கேட்கக் கூடாது."

"சரி கதையைச் சொல்லுங்கள்" என்றவாறே ரகுநாதன் சப்பணம் போட்டு நேரே உட்கார்ந்தான்.

"என் தந்தை ஜூனியர் எஞ்சினீயர், பத்து வருடங்களுக்கு முன் என் தந்தை உத்தியோகம் பார்த்தக் குழித்துறையில் இருந்தோம். ஒற்றைத் தெருவில் எங்கள் வீட்டிற்கு

அடுத்த வீட்டில் பரமார்த்தலிங்கம் என்பவர் குடும்பத்தோடிருந்தார். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் என் பள்ளித் தோழி.

எஸ். எஸ். எல். ஸி படிப்பை அங்கேயே முடித்தேன். அதன்பிறகு கல்லூரிப் படிப்பிற்காக நாகர் கோயிலுக்குச் சென்றேன் வாரந்தோறும் குழித்துறைக்குச் சென்று விடுவேன். வெள்ளிக்கிழமை விளககு வைக்கும் நேரத்தில் என் வரவை எதிர்பார்த்து எங்கள் வீட்டு வாசலில் காத்திருப்பாள் அவள்.

''எனக்கு என்ன வாங்கிட்டு வந்தே முரளி?''

''உனக்கா?'' என்று கேட்டுவிட்டு தலையில் பலமாகக் குட்டுவேன்,

''இப்படித்தான் காலேஜில் சொல்லிக் கொடுக்கிறார்களா?'' என்றவாறே சிணுங்குவாள்.

அவள் சிணுங்குவதைப் பார்த்து நான் ரசிப்பேன். அதன்பிறகு அவளுக்காக வாங்கிச் சென்றிருக்கும் பொருளை அவளிடம் கொடுப்பேன். அதைப் பெற்றுக்கொண்டதும் அவள் முகம் அன்றலர்ந்த ரோஜா மாதிரி ஒளி வீசும்,

காலம் உலகத்தில் புதிய புதிய பொருட்களை உற்பத்தி செய்தது. எங்கள் உள்ளங்களிலும் புதுப்புது உணர்ச்சிகள் கொப்புளித்தன காலமெனும் மாயாவி அவள் உடம்பில் அழகை வாரி இறைத்தான். துடைத்து வைத்த வெண்கலச் சிலைமாதிரி, சுழலும் விழிகளுடன் அவள் விளங்கினாள். அவளைப் பார்க்கும்போதெல்லாம் நான் இனம் புரியாத இன்ப மயக்கத்தில் மூழ்கிவிடுவேன்.

அவள் தந்தை ஏதோ கடையில் சுமாரான சம்பளத்தில் வேலைசெய்தாலும் அவளுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை.

இரண்டு வருடங்கள் நாகர்கோயிலில் படித்தபிறகு பி. ஏ படிப்பதற்காகத் திருவனந்தபுரம் சென்றேன். மாதத்திற்கு ஒரு தடவை வீட்டிற்கு வருவேன் அவளைப் பார்க்காமல் என் மனம் தவித்தது இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு துணிந்து அவளுக்குக் கடிதம் எழுதினேன். உடனே அவளும் அதற்குப் பதில் எழுதிவிட்டாள்.

'கடிதத்தைப் படித்து முடித்ததும் கிழித்துப்போட்டுவிடுங்கள்' என்று ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுவாள். அவள் எழுதும் கடிதங்களை ஆயிரம் தடவைகள் படித்தாலும் ஆசை தீராது. எல்லாக் கடிதங்களையும் பத்திரமாகப் பெட்டியில் வைத்துக் கொண்டேன். அவள் நினைவு நெஞ்சில் மிதந்தால் என் கைகள் தானகப் பெட்டியைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்துவிடும்.

அவள் எனக்குக் கடிதம் எழுதிய பிறகு அவளை முதல் தடவையாகச் சந்தித்த அந்த நாளை என்னால் மறக்க முடியவில்லை.

என் வரவை எதிர்நோக்கி வாசலில் உட்கார்ந்திருந்தவள் என்னைக் கண்டதும் உள்ளே ஓடிவிட்டாள். அவள் முகம் செக்கர் வானமாக மாறியது.

''அம்மா எங்கே?'' என்று அவளைக் கேட்டேன்.

''அத்தை கோயிலுக்கு'' என்னை ஏறிட்டுப் பார்க்காமலே பதில்சொன்னாள். அடேயப்பா! பெண்களுக்கு வெட்கம் எங்கிருந்து வந்து விடுகிறதோ? ஒரு மாதத்திற்கு முன் சிரிக்கச் சிரிக்கப் பேசி என் சிந்தனையைக் கவர்ந்தவளிடம் இவ்வளவு மாற்றமா? இதுதான் பெண்மையா?

அன்று இரவு நெடுநேரம் வரைக்கும் நான் அவள், அம்மா மூவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்பா உத்தியோக விஷயமாக வெளியூர் போய்விட்டார்.

அவள் பெயரைச் சொல்லி, ''அவளுக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்தாய்?'' என்று அம்மா கேட்டாள் நான் அவசரத்தில், ''நான் வந்திருப்பது போதாதா?'' என்று கேட்டுவிட்ட பிறகுதான் என் தவறு புரிந்தது. அவள் கண்களை உருட்டி விழித்தாள். அம்மா அதை கவனிக்கவில்லை.

பி. ஏ பரீட்சை எழுதிவிட்டு ஊருக்கு வந்தேன். கோடை விடுமுறையைக் குதூகலமாக அவளுடன் கழிக்கலாமென்று இன்பக் கோட்டை கட்டினேன். ஆனால் என் எண்ணத்தில் மண் விழுந்து விட்டது.

நான் கோடை விடுமுறைக்காக ஊருக்கு வந்த ஒரு வாரத்தில் எனக்கும் அப்பாவிற்கும் தகராறு ஏற்பட்டு விட்டது. சாதாரணமாக வீசிய காற்று புயலாக மாறிவிட்டது. அதற்குக் காரணம் அவ்வளவு பெரிதாக இல்லை.

என் அப்பாவுக்கும் சித்தப்பாவுக்கும் கொடுக்கல் வாங்கலில் மனக்கசப்பு ஏற்பட்டது. என் சித்தப்பா மகளின் கல்யாணத்திற்கு என் அப்பாவிடம் இரண்டாயிரம் ரூபாய் கைமாற்றாக வாங்கியிருந்தார். மூன்று வருஷங்களாகியும் வட்டியுமில்லை; முதலும் வந்தபாடில்லை. ஆகையால் அப்பா அவர்மேல் வழக்குப் போடவேண்டும் என்று சொன்னார். அதை நான் அடியோடு எதிர்த்

‘டெட்’டினுல் வெளுத்த ஆடைகள் எவ்வளவு வெண்மை, எவ்வளவு பிரகாசம்

டெட் - இந்தியாவின் அற்புதமான பரிசுத்தகரணி. எல்லா வற்றையும் சுத்தம் செய்ய உபயோகிக்கலாம். சோப்பை விட மேலானது.

அது சோப்பைக்காட்டிலும் வெகு சீக்கிரத்தில் சுத்தம் செய்கிறது. கடினமான தண்ணீரோ அல்லது மிருதுவான தண்ணீரோ எதுவாயிருந்தாலும் சுத்தம் செய்யக்கூடியது. எண்ணெய்ப் பசையை உடனே அகற்றுகிறது. அழுக்கை இல்லாமல் அபரிதமான நுரையை உண்டாக்குகிறது.

டெட், வெண்மையான ஆடைகளை பிரமிக்கும்படி வெள்ளை வெளேரென்று வெண்மையாக்குகிறது. கலர் ஆடைகளை பிரகாசமாக வெளுக்கிறது. அது உங்களுக்கு மிகவும் பிடித்த மென்மையான ஆடைகளுக்கு மிகவும் உகந்தது

எவ்வளவு அழகு !

அதிசக்திவாய்ந்த டெட் எல்லா ஆடைகளையும் சுத்தம் செய்வதற்கேற்றது.

பருத்தியோ, பட்டோ, உல்லனோ, நைலானோ ரேயானோ எதுவாயிருந்தாலும் டெட்டை உபயோகிக்கலாம் குளிர்ந்த ஜலத்தில் கரைத்து உபயோகிக்கும் டெட், துணிகளைப் பாதுகாத்து நீண்ட காலம் உழைக்கச் செய்கிறது.

shilpi 709

தேன். அப்பா பிடிவாதக்காரர் என்பது உலகறிந்த உண்மை. சித்தப்பாவும் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் இருக்கவில்லை. இல்லாமைதான் காரணம். அவரைக் கோர்ட்டிற்கு இழுத்தால் கேவலம் யாருக்கு?

அப்பா என்னைக் கண்டபடி திட்டினர். என் இரத்தம் கொதித்தது. அன்று விடியற் காலம் பெட்டியிலிருந்து இருநூறு ரூபாய் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டே புறப் பட்டு விட்டேன்.

சென்னையிலிருந்து பம்பாய்க்கு ரயிலில் போய்க் கொண்டிருந்தபோது ரயிலில் சௌதாமினி என்பவரை சந்தித் தேன். அவர் பம்பாயிலுள்ள ஒரு பெரிய வியாபாரி. அவரே என்னிடம் பேச்சுக்கொடுத்தார். கடைசியில் என் னைப்பற்றி சொல்ல வேண்டி வந்தது. ''வேலைதேடி பம்பாய் போகிறேன்'' என்று சொல்லிவைத்தேன். அவர் மகிழ்ச்சியுடன் தன் கம்பெனியில் வேலை தருவதாகச் சொன்னர்.

அவரது கம்பெனியில் மூன்று வருஷங்கள் வேலை பார்த்தேன். கைநிறையச் சம்பளம் கிடைத்தது. வீட்டை நினைக்கா விட்டாலும் அவளைப்பற்றி நினைக்காமலிருக்க முடிய வில்லை. மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவளைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு அதிகரித்தது. நான் வீட்டை விட்டுப் புறப் படும்போது அவள் எழுதிய கடிதங்களையும் எடுத்துக் கொண்டேன். என் வேதனைக்குக் கடிதங்கள் மருந்தாக இருந்தன.

மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவளைப் பார்ப்பதற்காகக் குழித்துறைக்கு வந்தேன்.

நான் வரும்போது இரவு எட்டு மணியிருக்கும். பம்பாயிலிருந்து குழித்துறை வரைக்கும் ஏதோ ஒரு வேகத்தில் வந்துவிட்டேன். பஸ்ஸைவிட்டு இறங்கியதும் என்கால்கள் தயங்கின. தெரிந்தவர்கள் முகத்தைப் பார்க்கத் திராணி இல்லை.

பெட்டியை கையில் எடுத்துக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டேன். வீட்டின் கதவு பூட்டியிருந்தது. அவளது வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தயங்கித் தயங்கி அவள் வீட்டிற்குச் சென்றேன்.

என்னைக் கண்டதும் அவள் திடுக்கிட்டுப் போனுள். பதிந்த விழிகள் சில கணநேரம் பழியாகக் கிடந்தன.

"வாருங்கள்" அவளது செம்பவள இதழ்கள் அசைந்தன.

"எங்கள் வீட்டில் ..."

"அவர்கள் இங்கிருந்து செருப்பாலூருக்கு மாற்றலாகிப் போய் ஒருவருஷமாகிறது" என்ருள்.

"நீங்களா? இப்போதுதான் வருகிறீர்களா?" அதற்குள் அவள் தந்தை வந்துவிட்டார்.

"ஆமாம்."

"இவ்வளவு காலமும் எங்கே போயிருந்தீங்க?

பம்பாய் வாழ்வை சுருக்கமாகச் சொல்லி முடித்தேன்.

"நல்லது தம்பி, சரியான சமயத்திலே வந்திட்டீங்க. வருகிற வெள்ளிக்கிழமை நம்ம ... வுக்கு கல்யாணம். கட்டாயம் நீங்க வரணும்". என்தலை சுற்றியது என் உள்ளத்தில் செந்தீ பிடித்துக் கொண்ட தன்மை ஏற்பட்டது. என் வாழ்வில் இடிவிழும் செய்தியைக் கேட்கவா நூற்றுக்கணக்கான மைல்களைக் கடந்து வந்தேன்.

சற்றுநேரத்தில் அவள் தந்தை தைக்கக் கொடுத்த துணிகளை வாங்குவதற்காக வெளியே சென்றார். அவளிடம் மறைந்திருந்து பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

அவளிடம், "ஊரை விட்டு ஓடிவிடுவோம். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது" என்று மன்றாடிக் கேட்டேன். அவள் மறுத்து விட்டாள். "நீங்கள் வருவீர்கள் என்று நினைத்து மூன்று வருஷங்கள் காத்திருந்தேன். வரவில்லை. . . . நம் காதலைக் கனவாக நினைத்துக் கொள்ளுங்கள்."

எனக்கு ஆத்திரம் பற்றி எரிந்தது!

"கடைசியாகக் கேட்கிறேன், என்னோடுவர முடியுமா, முடியாதா?"

"நான் வேறொருவருக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டுவிட்டேன். உங்களோடு வரமுடியாது".

"நீ இன்னொருவனோடு சுகமாக வாழ்வதை நானும் பார்த்து விடுகிறேன். நீ எழுதிய காதல் கடிதங்கள் என்னிடம் பத்திரமாக இருக்கின்றன. எனக்குப் போட்டியாக வந்த அவனுக்கு அவற்றைப் பரிசாகக் கொடுத்து உன் வாழ்வைச் சீரழித்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு, அவள் பதிலுக்குக் கூடக் காத்திராமல் வெளியே இறங்கி நடந்தேன்.

கோபம் கனலைப் போன்றது. சிந்தனைத் தண்ணீர் பாய்ந்தால் அது அணைந்து போகும் அவள் வாழ்வைக் கெடுக்க நினைத்த நான், அவள் இன்பமாக வாழ வாழ்த்திவிட்டு வந்த சுவடு தெரியாமலே பம்பாய்க்குத் திரும்பி விட்டேன்.

ஒரு வருஷத்திற்குப் பிறகு கம்பெனி விஷயமாக சென்னைக்குவந்திருந்தேன் தற்செயலாக குழித்துறை ஆசாமி ஒருவரை சந்திக்கும் துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. அவரிடம் அவளைப்பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன பதில் என்னை நிலைகுலைய வைத்தது.

கல்யாணம் நிச்சயமானதும் இரவோடிரவாக ஊரை விட்டு ஓடிப்போக நினைத்து அவள் எனக்குக் கடிதம் எழுதியதாகவும், அதன்படி நான் போய் அவளுக்குப் புத்திமதி கூறிவிட்டு வந்ததை யாரோ கண்ணால் பார்த்ததாக மாப்பிள்ளையிடம் கூறியிருக்கிறார்கள். குருவி உட்கார பனம்பழம் விழுந்த கதை போலாகிவிட்டது.

விதி என்னைமட்டுமென்ன, அவளையும் வஞ்சித்துவிட்டது.

"ரகு, அவள் உள்ளத்தைத் தான் என்னால் தொட முடிந்ததே தவிர அவள் உடலை என்னால் தொட முடியவில்லை. எங்கள் உள்ளங்களில் காதல் மலர் பூத்த பிறகு அவள் தீயாகி இருந்தாள். எட்ட நின்று பேசுவாள்; நெருங்கினால் நெருப்பாகிவிடுவாள் உடலால் உத்தமி அவள்! ஒரு வாரத்திற்கு முன் அந்த உத்தமி ஒரு குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரியிலிருந்து வருவதைப் பார்த்தேன். என்னால் அவள் வாழ்வு சீரழிந்துவிட்டதை நினைக்கும் போது என் இதயத் துடிப்பு நின்றுவிடும் போலிருக்கிறது. அவள் காலில் விழுந்து..." முரளியின் கண்கள் நிறைந்தன.

தன் இதயச் சுமை குறைந்ததற்கு அறிகுறியாக பெருமூச்சொன்று நெஞ்சிலிருந்து வெடித்து வெளிவந்தது.

"வாலிபர்கள் காதலிப்பது இயற்கை, அதைத் தவறு என்று சொல்லமுடியுமா?" என்றான் ரகுநாதன்.

"தவறில்லையென்பதை உலகம் ஒப்புக் கொள்ளுமா, ரகு?" முரளியின் கண்ணீர்த் துளிகள் வெண் மணலில் விழுந்தன.

"நேரமாகிவிட்டது, புறப்படுவோம்."

ஆடைகளில் ஒட்டியிருந்த ஆற்று மணலைத் தட்டித் தள்ளிவிட்டு இருவரும் நடந்தனர்.

"எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டுப் போங்கள்" என்றான் ரகு. முரளி எவ்வளவோ மறுத்தும் ரகு விடவில்லை.

சாயம் போன புடவை மாதிரி கிடந்த வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் முரளி. அவள் வாழ்வும் சாயம்போன புடவை மாதிரி தானே இருக்கும்!

"ஏய் உமா, காப்பி சீக்கிரம் கொண்டு வாயேன்" என்றான் ரகு. அந்தப் பெயரைக் கேட்டதும் முரளி திடுக்கிட்டுப் போனான். கையில் காபபியுடன் வந்த உமாவைக் கண்டதும் அவன் முகம் முருங்கைப்பூமாதிரியானது. அவளும் அவனைப் பார்த்து விட்டாள் அவள் அவனைத் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

ரகுநாதனின் முகத்தில் இலேசாகப் புன்னகை படர்ந்தது!

உமா உள்ளே போய்விட்டாள்.

உமேஷ் யோக தரிசனம்

(முதல் பாகம்)

ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராட்டி
ஆகிய நான்கு மொழிகளில்

(ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்திரஜி எழுதியது)

ஜீரணக்கருவி, நரம்பு, சுவாசகோசம், மூத்திர உறுப்புகள், மற்றும் வேறு அவயவங்கள் ஆகியவற்றைச் சீராக இயங்கவைக்கும் வழிவகைகளைக் கூறும் யோக சாஸ்திரத்தின் உண்மையைப் பற்றிய அருமையான விளக்கம். யோகம், இயற்கை வைத்தியம், ஜீவாணுக்களின் இயல்பான வல்லமை, மனத்தத்துவச் சிகிச்சை முதலியவற்றின் வாயிலாகப் பல வேறு நோய்களை முற்றும் குணப்படுத்த முடியும் என்பதை, 108 அசல் யோகாசனப் படங்கள் நிரம்பிய இந்த நூல் நன்கு விளக்குகிறது.

ஆண்–பெண், இளைஞர்–முதியவர், ஆரோக்கியமுள்ளவர்–நோயாளி ஆகிய அனைவருக்கும் உபயோகமானது. ஒவ்வொரு வீட்டிலும் ஆஸ்பத்திரியிலும் வாசகசாலையிலும் கட்டாயம் இருக்கவேண்டிய புத்தகம் இது.

விலை : ரூ. 15/-; தபாற் செலவு ரூ. 2/- தனி. வி. பி. பி. கிடையாது.

யோகாசன சித்திரப்படங்கள்

வழவழப்பான ஆர்ட் காகிதத்தில் கண்ணைக் கவரும் விதத்தில் பெரிதாகச் சித்தரிக்கப்பட்ட வரைபடமும் இங்கே கிடைக்கும். இந்த யோகாசனங்களை உங்கள் வீட்டிலேயே எளிதாகச் செய்யலாம். அவை உங்கள் உடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கும். விலை ரூ. 2–50. தபால் செலவு உள்பட மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

யோகாசன வகுப்புக்கள்

காலையிலும் மாலையிலும் ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமத்தில் தவருமல் நடைபெறுகின்றன. பெண்மணிகளுக்குத் தனி வகுப்புக்கள் உண்டு. பெண் உபாத்தியாயர்களே பெண்மணிகளின் வகுப்பை நடத்துகிருர்கள்.

ராம்தீர்த் பிராமி தைலம்

ஸ்பெஷல் நெ. 1
ரிஜிஸ்டர்டு

பொடுகு, தலைமயிர் விழுதல் ஆகியவற்றை நீக்கும் ஒப்பற்ற இந்தக் கூந்தல் தைலம், சிறந்த மூலிகைகளைக் கொண்டு விஞ்ஞான முறையில் தயாராகிறது. மூளைக்குக் குளுமையும், உடலுக்கு வலுவும், சுகமான தூக்கமும் அளிப்பது. உடலைத் தேய்த்து, பிடித்து விடுவதற்கு மிகவும் உகந்தது. எல்லோருக்கும் எக்காலத்துக்கும் உபயோகமானது.

விலை பெரிய புட்டி ரூ. 4/-, சிறிய புட்டி ரூ. 2/-. எங்கும் கிடைக்கும்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

தாதர், செண்ட்ரல் ரயில்வே, பம்பாய்-14. போன்: 62899.

ராம்தீர்த் பிராமி ஆயில் டெப்போ, 257, தங்கசாலைத் தெரு, சென்னை-1

முரளி ரகுநாதனைப் பார்த்தான், அந்தப் பார்வை நீதிபதியின் முகத்தைப் பார்க்கும் குற்றவாளியின் பார்வைபோலிருந்தது.

"சார், எங்களுக்கு மணமான அன்று மாலையே எல்லாக் கதைகளையும் அறிந்து கொண்டேன். நானும் ஒரு காலத்தில் உங்களைப் போல் காதலித்துக் கைப்பற்ற முடியாமல் சமூகம் தடைசெய்து விட்டது. சமூகத்தின் முகத்தில் கரியைப் பூச நினைத்தேன். காதலில் தோல்வி கண்ட ஒருத்தியை அடைய விரும்பிய என் எண்ணம் நிறைவேறி விட்டது. உமா என்னைப் பொருத்தவரைக்கும் தூய்மையானவள்."

"ரகு" என்று அலறினான் முரளி!

"நீங்கள் மனதை வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள். உங்களை உமா அண்ணாவாக நினைக்கிறாள். உடன் பிறந்த தமையன் இல்லாத குறையை நீங்கள் போக்கி விட்டீர்கள்"

உள்ளே குழந்தை அழுதது. அதை உமா எடுத்துக்கொண்டு வந்தாள்.

"மாமாவைப் பாருடா கண்ணு"

குழந்தை முரளியைப் பார்த்து சிரித்தது.

முரளியின் மனம் புடம்போட்ட தங்கமாகப் பிரகாசித்தது.

"மாமாவை சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கொண்டு மாமியுடன் வரச்சொல் ராஜா" என்றாள் உமா.

முரளி நிறைந்த நெஞ்சோடு, புது மனிதனாக விடைபெற்றுக்கொண்டான்.

கும்பகோணத்தில்

மணமுள்ள காப்பிக்கும், உயர்தரமான சிற்றுண்டி வகைகளுக்கும், நல்ல சாப்பாடு வசதிகளுக்கும்

சிறந்தஇடம்

நியூ ரங்கவிலாஸ் ஹோட்டல்

ரயில்வே ஸ்டேஷன் ரோடு

வெளியூர் வியாபாரிகள், நண்பர்கள், யாத்ரீகர்கள் தங்குவதற்கு காற்றோட்டமும் வசதிகளும் நிறைந்த

ரூம்கள் கிடைக்கும்

நியூ ரங்கவிலாஸ் லாட்ஜிங் ஹவுஸ்

ரயில்வே ஸ்டேஷன் எதிரில்

பழைய **R. M. S.** பில்டிங்

Proprietor: R. M. P. SITARAMAN

கண்ணமங்கையில் - -
- - ஒரு வண்ண வடிவம்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

பக்தர்களுக்கு அருள்புரியும் பரந்தாமன் மிக்கக் கருணை உள்ளவன். எந்த நேரத்தில் எவர் அழைத்தாலும், எத்தனை ஜோலியிருந்தாலும் அழைத்த உடனே அருள்புரிய வந்து விடுவான் அவன். நடந்து வந்தால், இல்லை ஓடி வந்தால்கூட நேரம் அதிகம் ஆகுமே என்றுதன்னுடைய கருடவாகனத்தின் மீதேறி பறந்தே வந்து சேருவான். இத்தகைய அவனது கருணையை விளக்க எழுந்த கதையே கஜேந்திர மோக்ஷம். கதை இதுதான்.

ஒரு யானை ஒரு பெரிய தடாகத்தில் இறங்குகிறது நீர் அருந்த. குளத்திற்குள் இறங்கி நின்ற யானையின் காலை குளத்தில் உள்ள முதலைஒன்றுபற்றிக் கொள்ளுகிறது. யானைக்குத் தண்ணீருக்கு வெளியே பலம் அதிகம்; ஆனல் முதலைக்கோ தண்ணீருக் குள் வலியதிகம். பலப்பரீக்ஷையே நடக் கிறது இரண்டிற்கும் கொஞ்ச நேரம். முதலை யானையை விடுவதாயில்லை, யானை யிஞலோ தன்னை விடுவித்துக்கொள்ள இயலவில்லை. இந்த நிலையில் யானை, 'ஆதிமூலமே' என்று கதறுகின்றது இந்த ஓலம், வைகுண்ட வாசனை பரந்தாமன் காதிலே விழுகிறது. அவனே பன்னக சயனனுக, பூதேவி அடிவருட, சீதேவியின் மடியில் தலை சாய்த்து. அறிதுயிலில் அமர்ந்திருக்கிருன். யானையின் ஓலம் கேட் டதும் அலறிஎழுந்து தன் மனைவியரிடம் கூட விடைப்பெற்றுக் கொள்ளாமல், கருடன்மீது ஏறிக்கொண்டு யானையைக் காக்க விரைந்து வந்து விடுகிருன் குளக் கரைக்கு. தன் கையிலிருந்த அல்லித் தண்டை நீட்டி, யானையைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி அப்படியே இழுத்து யானையைக் கரை சேர்த்து விடுகிருன் அவன்.

நல்லகதை. நல்லதொரு உண்மையை விளக்க எழுந்த கதை. வாழ்க்கை என்ற சாகரத்திலே இறங்கும் மனிதனுக்கு எத் தனையோ ஆபத்துக்கள் அங்கே நிறைந் திருக்கின்றன. காமம், குரோதம், லோபம் என்ற முதலைகளால் பிடிபட்டு சாகரத்திற் குள்ளே அவன் முழுகிவிடுகின்ற நிலை வருகின்றபோது அவன் செய்யவேண்டிய தெல்லாம் கூவியழைத்துக் குரல் கொடுக்க வேண்டியதே. இறைவனே எத்தனை வேலைகள் இருந்தாலும் அத்தனையையும்



பெருமாள்—நின்ற திருக்கோலம்.

கோதண்டராமன்.

அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்து, மனிதனுக்குக் கைகொடுத்து முதலைகளினின்றும் மீட்டுக் கரை சேர்ப்பான். இறைவனது இந்த அளப்பரிய கருணையை விளக்க எழுந்த கதைதானே இது. இதனையே பெரியாழ்வார்.

பதக முதலை வாய்ப்பட்ட களிறு
கதறிக் கைகூப்பி, என் கண்ணா! கண்ணா என்ன
உதவப் புள் ஊர்ந்து அங்கு உறுதுயர் தீர்த்த
அதகன்...

என்று பரந்தாமனை, பக்தவத்சலனைப் பாடுகிறார்.

இந்த கஜேந்திர மோக்ஷம் என்னும் கதை கலைஞர்கள் உள்ளத்தையெல்லாம் கவர்ந்திருக்கிறது. கவிஞர்கள் பாடி இருக்கிறார்கள்; சைத்ரீகர்கள் தீட்டி இருக்கிறார்கள்; சிற்பிகள் செதுக்கி இருக்கிறார்கள். எனக்கு ஓர் அனுபவம் சில வருஷங்களுக்கு முன்னால், ஒரு நடன நிகழ்ச்சியைக் காணச் சென்றிருந்தேன் நிகழ்ச்சி நிரலில் கஜேந்திர மோக்ஷம் என்று ஒரு நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டிருந்தது. இதை நடித்துக்காட்ட மேடைமீது வந்தவர் ஓர் ஆண்மகன் இவர் எப்படி இக்கதையை நடம் ஆடிக்காட்டுவார் என்று நான் மயங்கியிருந்தபோது அவர் ஆடவே ஆரம்பித்துவிட்டார். பின்னணியில் மெல்லோசை எழ, இவரே தன் இரண்டு கைகளையும் லளிதமாக வளைத்துத் தடாகத்தில் அலை வீசும் மெல்லிய அலைகளைக் காண்பித்தார். அதன்பின் அதே கைகளால் அல்லி மலரும் அற்புதக் காட்சியைக் காட்டினார். அல்லிக் குளமே என் கண்முன் வந்தது. கொஞ்சநேரத்தில் அவரது நடை கம்பீரமாக ஒரு யானை நடந்து வருவது போலவே இருந்தது. நாலுகாலும் ஒரு தும்பிக்கையும் இல்லாத குறைதான். என்றாலும் யானை ஒன்று வருகிறது, அது குளத்தில் உள்ள படிக்கட்டுகளில் இறங்குகிறது. என்ற உணர்ச்சியை உண்டாக்கிவிட்டார் நடிகர். குளத்தில் இறங்கிய யானை நீர் குடிப்பதாக, தும்பிக்கையால் நீரைவாரி இறைப்பதாக எல்லாம் காட்டமுடிந்தது அவரால், இப்படி யானையாக தடாகத்தில் இறங்கியவரே சிறிது நேரத்தில் முதலையாக மாறிவிட்டார். உடலை வளைத்து, வளைத்து தண்ணீருக்குள் வருகின்ற முதலை, அம்முதலை யானையைப் பற்றிக்கொள்ளும் காட்சி. அப்போது யானை தன்னை மீட்டுக் கொள்ளமுடியாதபடி தவிக்கும் தவிப்பு எல்லாவற்றையும், நடிகர் ஒருவரே நின்று காட்டினார் சில நிமிஷநேரங்களில் இதுவரை தடாகமாக, யானையாக, முதலையாக மாறிமாறி நடித்தவரே கருடன்மேல் ஆரோகணித்துவரும் ஆதிமூலமாகவும் காட்சி கொடுத்தார். பின்னர் யானையை முதலையின் பிடியினின்றும் விடுவித்து மோக்ஷம் அளித்ததையுமே காட்டினார்.

இப்படி கஜேந்திர மோக்ஷத்தை ஒரே நடிகர் மேடைமீது நடித்துக் காட்டிய போது நான் அப்படியே அதிசயித்து நின்றேன். அத்தனை அழகு இருந்தது நடிகர் நடனத்தில், அவரது கற்பனையில். ஒரேயொரு கஷ்டம் நடிகருக்கு எவ்வளவு கற்பனை இருந்ததோ அத்தனை கற்பனை காண்பவர்களுக்குமே இருக்க வேண்டியிருந்தது, இந்த நடன நிகழ்ச்சியை அனுபவிக்க. ஆனால் இந்த நடன நிகழ்ச்சியை எல்லாம் காணாமலேயே ஒரு கலைஞர், ஒரு சிற்பி, இந்த நடிகரின் கற்பனைத் திறனையும் விஞ்சும் அளவிலே இதே கஜேந்திர மோக்ஷத்தை உருவாக்கி இருக்கிறார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே. ஒரு



புனித தீபாவளி நன்னாளிலே

புத்தாடையுடுத்தி புத்தமுதுண்டு

புனித வாழ்த்துக்கள் பரிமாறி

சற்றே கண்ணயரும் வேளையில்

இதமான காற்று மெல்ல வீசி

இன்பம் யாவும் தருபவை,

போனிக்ஸ்

விசிறிகள்

Mfrs: ENG. WORKS OF INDIA (Private) Ltd., CALCUTTA-2

சென்னை, ஆந்திர ராஜ்யங்களுக்கும், பாண்டிசேரிக்கும்
பிரதான ஏஜெண்டுகள் :

கில்லண்டர்ஸ் அர்பத்நாட் & கோ., லிட்., சென்னை-1.

மைசூர், கேரள ராஜ்யங்களுக்கும் பிரதான ஏஜெண்டுகள்:

ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன்
(பிரைவேட்) லிட்.,
எர்ணாகுளம்-திருவனந்தபுரம்-பெங்களூர்

EWI LTD

CHARI-1059

சிற்பி அவனுக்கு நாலு நாலரை நீளமும்
இரண்டு இரண்டரை அடி அகலமும்
உள்ள கருங்கல் ஒன்று கிடைக்கிறது.
கல்லின் கனம் எல்லாம் ஓர் அடிதான்
இருக்கும். இந்தக் கல்லிலே அவன் இக்
கஜேந்திர மோக்ஷத்தைச் சித்திரிக்க
முனைந்திருக்கிறான். எத்தனையோ கால
மாக, உள்ளக் கிழியில் உரு எழுதிய
கற்பனைதானே, ஆதலால் கல்லின் குறு
கிய அளவு எல்லாம் அவன் கற்பனைக்குக்
குறுக்கே வரவில்லை. கல்லின்மேல் பக்கத்
தின் பெரும்பகுதியை கருடனுக்கும் பெருமா
ளுக்குமே ஒதுக்கி விடுகிறான் இனி அடித்
தளத்தில் உள்ள சிறிய பகுதியில் பெரிய
யானையையே செதுக்குகிறான். அங்கே
எஞ்சியுள்ள கொஞ்சஇடத்திலேயே யானை
யின் காலைப் பிடிக்கும் முதலையுமே
உருவாகி விடுகிறது. எல்லாம் ஒன்றோ
டொன்று நெருக்கமாக இருக்கும் இடத்
தில், உடல் வளைத்துச் சமாளித்துக்
கொண்டு நிற்கின்றன சிற்ப வடிவில்.
கல்லின் அளவில் இடம் இல்லையே தவிர
கலைஞன் உள்ளத்தில் இடத்திற்கு
குறைவே இல்லையே. அந்த கலைஞனின்
கைத் திறனால் விரிந்து பரந்த ஓர் அற்புதக்
கற்பனையே அல்லவா உருவாகி இருக்
கிறது. ஆம்! ஒரே நடிகர் நடத்திய கற்பனை
நடனத்தைவிட ஒரே கல்லில் உருவாக்கிய
கற்பனை வடிவினைக் கண்டு அப்படியே
அதிசயித்து விடுகிறோம் நாம்.

நீங்கள் எளிதாக புகைப்பட உருவில்
காணும் இவ்வண்ண வடிவினைக்காண
நேரே கண்ணமங்கைக்கே செல்ல வேணும்
திருவாரூர் சென்று மேற்கே ஆறு மைல்
வந்தாலும்சரி; இல்லை, கும்பகோணம் குட
வாயில் வழியாய் கிழக்கே இருபது மைல்
போனாலும்சரி திருக்கண்ணமங்கை சென்று
சேரலாம். அங்குள்ள பக்தவத்சலர்
கோயிலுக்குள்ளும் நுழையலாம்
கர்ப்பக்கிரஹம் சென்று பெருமாளைத்
தொழுவதன் முன்னமேயே அவரை வலம்
வரலாம், அப்படி வரும்போது வடபக்கம்
கோஷ்டத்தில் நின்றுகொண்டிருக்கும்
இந்த ஆதிமூலமாம் பக்தவத்சலனையே தரி
சிக்கலாம். இத்தனை சிரமம் எடுத்து
இங்கு வந்ததற்குப் பலன் இன்னும் கொஞ்
சம் அதிகமாகவே உண்டு. அன்று அம
ரர்க்கு அமுதளித்த அந்த பக்தவத்சலனின்
பத்து அவதாரங்கள் அத்தனையும் அங்கே
காணவிட்டாலும், 'சிறு விரல்கள் தடவிப்
பரிமாற, செங்கண்கோடச் செய்யவாய்



கஜேந்திர மோக்ஷம்.

கொப்பளிப்ப, குறுவெயர்ப்புருவம் கூட
லிப்ப குழல் கொடு ஊதும் வேணு
கோபாலனின் திரு உருவைக் காண
லாம். இரணியன் தன் உடல் கிழித்து
உதிரம் உறிஞ்சிய நரசிம்மனின்
பயங்கர உருவையும், இரணியாக்ஷன்
பிடியினின்றும் பூமாதேவியையே மீட்டுக்
கொண்டுவரும் வராகமூர்த்தியையுமே பார்க்
கலாம். இவர்களோடு கோதண்டம் ஏந்திய
கையனாய் நீண்டு நிமிர்ந்து நிற்கும் அந்த
ராமனையுமே காணலாம் இன்னும் 'எல்லாம்
நானே' என்று கீதாச்சாரியார் சொன்னது
போல் சங்குசக்கரதாரியாய் நின்ற கோலத்
தில் சேவை சாதிக்கும் பெருமாளையுமே
பார்க்கலாம் அங்கே. இன்னும் யார்யாரை
அங்கு காணலாம் என்று நான் சொல்லப்
போவதில்லை. சென்று காணுங்கள் என்று
ஆவலைத் தூண்டிவிடுவதோடு நிறுத்திக்
கொள்ளுகிறேன்.

பக்தவத்சலனின் துணைவியாக நிற்பவள்
அபிஷேகவல்லித் தாயார். அவளது கர்ப்பக்
கிரஹத்தில் ஒரு நல்ல தேன்கூடு. கண்ண

மங்கைக் காராளனிடத்திலும் அவன் துணைவி அபிஷேகவல்லியிடமும் ஆராத காதல் கொண்ட முனிவர் சிலர் வரம் வேண்டி தேன் உண்ணும் வண்டுகளாக மாறி அவ்விருவரையும் சுற்றி ரீங்காரம் இட்டுக்கொண்டே இருக்கிறார்கள் என்பது புராண வரலாறு. 'தேமருவு பொழில் இடத்து மலர்ந்த போதில் தேனதனைவாய் மடுத்து' சேகரித்து, பக்தர்களுக்கு அருளும் இவ் வண்டுகள் செய்த பாக்கியமே பாக்கியம். இவர்களை நினைக்கும்போது பக்தவத்சலனை எண்ணாத மானிடரையுமே நினைந்திருக்கிறான் மங்கை மன்னன்.

மண்ணாடும், விண்ணாடும்,
  வானவரும் தானவரும் மற்றும் எல்லாம்
உண்ணாத பெரு வெள்ளம்
  உண்ணாமல் தான்விழுங்கி உய்யக்கொண்ட
கண்ணாளன், கண்ணமங்கை நகராளன்
  கழல்ஆடி, அவனை உள்ளத்து
எண்ணாத மானிடத்தை
  எண்ணாத போதெல்லாம் இனியவாறே

இனி நாம் எல்லாம் எண்ணாத மானிட வரிசையில் சேர வேண்டியவர்கள் அல்ல தானே!

தந்தி: PAPERMALL தபால் பெட்டி நெ. 1266. டெலிபோன்' 55166, 3075

ஜெனரல் பேப்பர்ஸ் லிமிடெட்

16, அரண்மனைகாரத்தெரு, மதராஸ்-1.

உங்களது காகிதப் பிரச்னைகளை உங்களது திருப்திக்கு உகந்தவாறு பூர்த்தி செய்து கொள்ளக்கூடியதும் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான சிறந்ததொரு ஸ்தாபனம்

★ சகல இந்திய மில்களின் காகிதங்கள் ★ அட்டைகள்
★ நேபா நியூஸ்பிரிண்ட் ★ காலிகோ. கிளாத்

ஏராளமாக ஸ்டாக் செய்து விற்பவர்கள்.

எங்களுக்கோ அல்லது அருகாமையிலுள்ள எங்கள் கிளை ஆபீஸிற்கோ எழுதுங்கள்.

கிளை ஆபீஸ்கள்:

பெங்களூர் ஸிடி	—	தந்தி, Kagazmall	டெலிபோன்: 4917
கோயமுத்தூர்	—	தந்தி, Papermall	டெலிபோன்: 1047
திருநெலவேலி ஜங்ஷன்	—	தந்தி, Papermall	டெலிபோன்: 201
மதுரை	—	தந்தி, Papermall	டெலிபோன்: 619
திருச்சி	—	தந்தி, Papermall	டெலிபோன்: 519
சிவகாசி	—	தந்தி, Papermall	டெலிபோன்: 100
கும்பகோணம்	—	தந்தி, Papermall	—
சேலம்	—	தந்தி, Papermall	—

மானேஜிங் ஏஜண்டுகள்: **கனி & கம்பெனி** டெலிபோன்: 85552

தொடர் கதை

கே. சுந்தராம்பாள்

அத்தியாயம் 3.

“கலையிழந்து காணப்பட்ட வீணைவிகாரில் யந்திரம்போல் வழக்கப்படி நடைபெறும் விஷயங்கள் நடந்துகொண்டுதானிருந்தன.

“சசி புறப்பட்டுச் சென்ற மூன்ருவது நாள் காலைப் பத்திரிகையில் ரயில் விபத்தைப்பற்றிய செய்தியைப் படித்த அத்துல்யத்தின் மனம் எங்கோ சென்றது. சசி இந்த ரயிலில்...... மேலே சிந்திக்கும் சக்தி அகன்று விட்டது அந்த சமயம்.

“சித்தப்பா! பத்திரிகைச் செய்தியைப் பார்த்தீர்களா” என்று கேட்டவண்ணம் அவர் முன் வந்து நின்ருள் கலா. அதற்குமேல் பேசும் சக்தி அவளிடமிருந்தும் விலகிவிட்டது.

“மேலே என்ன செய்வது” என்ற முடிவிற் வந்துவிட்டேன் கலா.

“சித்தப்பா” என்று அலறியவண்ணம் அவரின் கால்களைக் கட்டிக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள்.

“அழாதே கலா! இந்த ரயிலில்தான் போயிருக்கிருன் என்று எப்படிச் சொல்லமுடியும்? எதற்கும் நாம் விபத்து நடந்த இடம்வரை போய் விசாரித்துப் பார்க்கலாம். தயாராகு. காரிலேயே போகலாம் அம்மாவும் வருகிருளா? கேள்” என்ருர்.

அதற்குள் காட்டுத்தீ போல் பரவிய செய்தியால் லக்ஷ்மியும் மேகலாவும் அவ்விடம் வந்தார்கள் விஷயத்தை விளக்கினர் அத்துல்யம்

“நான் எங்கும் வரவில்லை சுவாமி. நீங்களிருவருமே போய்வாருங்கள்” என்று சொல்லிவிட்டுக் கலாவின் பக்கம் திரும்பி, “அடி படித்த முட்டாளே அங்கே போய்ப்பார். அவனுக்கு ஆபத்து என்பது தெரிந்தால் பிறகு என் முகத்தில் விழிக்காதே” என்ருள்.

“மேகலா! இது என்ன பேச்சு! மூளை குழம்பி விட்டதா உனக்கு” என்று கத்தினுர் அத்துல்யம்

“மூளை குழம்பாமலிருப்பதுதான் கஷ்டமாக இருக்கிறது சுவாமி. சாதாரண அறிவுள்ள பெண்ணுக்கு இந்தவிதமான அற்புத யோஜனையெல்லாம் தோன்ற முடியாது. அதிகம் படித்து அதன் மூலம் பரிவு காட்டப் போய் எல்லார் வாயிலும் மண்ணை வாரிப்போடும் பணியைச் செய்திருக்கிருளே அதற்கு என்ன பரிசு கொடுப்பது சொல்லுங்கள் சுவாமி! சொல்லுங்கள்.”

“ஏன்? அந்த அதிகம் படித்த முட்டாள், இன்னும் சற்று நின்று கேட்பதற்கென்ன. இல்லையென்ருல் சட்டென முன்னேசென்று பளார் என கன்னத்திலறைந்து விஷயத்தைச் சீர்படுத்துவதற்கு இல்லாமல் கோழையாக ஓடிப்போகவேண்டுமா? குழந்தையைக் கண்டபடி பேசாதே அம்மா கலா உனக்கு ஒருநாளும் குறைவு ஏற்படாது. ஏதோ கால வித்யாஸம். சரி புறப்படு.”

“சித்தப்பா எல்லாம் என்னுல் வந்த வினை தான்” முகத்தை மூடிக்கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள் லெக்ஷ்மி.

“இதைப்பார் லெக்ஷ்மி இப்படியெல்லாம் பேசினுயானுல் என்மனம் மிகவும் வேதனைப் படுகிறது தெரியுமா நம்மால் ஒன்றுமே செய்வதற்கில்லை, எல்லாம் விதியின் கூற்று. நாம் எல்லோருமே புறப்படலாம். ஆனுல் அம்மா வரமறுக்கிருள். நீ அம்மாவிற்குத் துணையாக இரு. வீணை எதையாவது நினைத்துக்கொண்டு நீ அழுதுகொண்டிருக்காதே அம்மாவைத் தனியாக விடாதே” என்ருள் கலா.

“ஆகட்டும் கலா.”

அத்துல்யமும் கலாவும், விபத்நடந்த இடம் போய்ச் சேரும்பொழுது மாலை ஐந்துமணியாகி விட்டது உயிர்ச்சேதம் சொல்பம்; படுகாயம் தான் அதிகம். இறந்தவர்களைப் படம் எடுத்து வைத்திருக்கிருர்கள். மனம் படபடக்க விரல்கள் நடுங்க தொண்டை வறளப் படத்தைப் பார்த்தார்கள் அப்பாடா பெருமூச்சு விட்டார்

கள். பக்கத்து நகரத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்று காயம் பட்டவர்களைப் பார்த்தார்கள். அதிலும் சசியில்லை.

"ஐயோ! பகவான்தான் காப்பாற்றினார் அவன் இந்த ரயிலில் பிரயாணம் செய்யவில்லையென்பது ஸ்பஷ்டமாகத் தெரிந்துவிட்டது. நகரத்து ஹோட்டல்களில் ஒருவேளை தங்கியிருப்பானோ" என்று பார்த்துவிட்டு ஊர்திரும்பலாம் என்றார்.

ஊர் முழுவதும் தேடியலைந்தார்கள். பிறகு இரவு ஒரு ஹோட்டலில் தங்கிவிட்டுக் காலையில் மறுபடியும் ஊரைச் சுற்றி விஜாரித்துக்கொண்டு விபத்து நடந்த இடத்து வழியாகவே வரும் பொழுது, சசி படுத்திருந்த அறைப்பக்கமாகத்தான் கார் சுற்றிக்கொண்டு சென்றது. நல்லவிதி இருந்திருந்தால் இந்த இடம் விபத்து நடந்ததற்கு சமீபமாக இருக்கிறதே இந்தக் குடிசை மக்களிடம் விசாரித்துப் பார்க்கலாமா? என்று கலாவும் அத்துல்யமும் இறங்கியிருந்தால், சசியை அடைந்து சந்தோஷத்தில், சவாரி செய்திருக்கலாம். அல்லது பாமினி வாசல் பக்கம் நின்றிருந்தால், இந்த இடத்தில் இந்த மாதிரிப் பெண் நிற்கிறாளே. ஒரு வேளை விபத்தின் காரணமாகத் தங்கியிருப்பார்களோ ஏதாவது உதவி வேண்டுமா? என்று கேட்கலாமே என்று காரை நிறுத்தியிருந்தால் காதும் காதும் வைத்தாற் போல் கஷ்டம் விலகியிருக்கும்.

வண்டி சென்ற சப்தம் கேட்டு வெளியில் வந்த பாமினியிடம் அவ்விடம் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் "அம்மா! அந்த மோட்டாக்காரிலே உங்களாட்டமா பொண்ணு ஒண்ணும், ஒரு பெரிய ஐயாவும் இருந்தாக" என்றன.

"விதி! அது சதி செய்து தடுத்துவிட்டது" என்பதறியாதவளாக யாரேனும் விபத்து நடந்த இடத்தைப் பார்க்க வந்து போவார்கள் என்று குழந்தைகளுக்குப் பதில் சொன்னாள் பாமினி.

"விபத்து நடந்த ரயிலில் சசி, பிரயாணம் செய்யவில்லை யென்பது தெளிவாகிவிட்டது" என்ற முடிவிற்கு வந்தவர்களாக கலாவும் அதுல்யமும், அவனுக்கு ஆபத்தொன்றும் ஏற்படவில்லை. அவன் எழுதி வைத்திருந்தபடி சில தினங்களில் திரும்பி வந்துவிடுவான் என்ற முடிவுடன் ஊர் வந்து சேர்ந்தார்கள்.

"அம்மா! அவருக்கு ஆபத்தொன்றுமில்லை. அந்த ரயிலில் அவர் பிரயாணம் செய்யவில்லை" யென்பதை நாலா பக்கமும் விஜாரித்துத் தெரிந்து மேகலாவினிடம் சொன்னாள் கலா.

"தேவி!" என்று கண்களை மூடி கையெடுத்துக் கும்பிட்டாள் மேகலா. பிறகு "கலா! ஏதோ என் மன வேதனையினால் உன்னை கடிந்து கொண்டு விட்டேன் எப்படியும் அவன் வந்து விடுவான் கவலைப்படாதே" என்று மகளை அணைத்து ஆறுதல் கூறினாள்.

இன்று வருவான் நாளை வருவான் என்று ஒரு மாதத்தை ஓட்டினார்கள். என்றாலும் வெட்டிப் பொழுதாக்கவில்லை. பத்திரிகைகளிலெல்லாம் அவனை வீடு திரும்பும்படியான செய்திகளை பிரசுரம் செய்தார்கள். அத்துல்யரின் பிரதான சிஷ்யர்களில் இரண்டுபேர்கள் ஊர்ஊராச் சென்று தேடினார்கள். பலன் பூஜ்யமே இப்பொழுது மனக்கவலை அதிகரிக்கத் தொடங்கியது. இந்த நிலைமையில் ஒருநாள் "சித்தப்பா, லெக்ஷ்மிக்கு சங்கீதாப்யாஸம் எப்படித் தெரியுமா? மூன்றே மாதத்தில் அவள் நன்றாகப்பாட வேண்டும். நான் மூன்றே மாதத்தில் பரதநாட்டியம் ஆடப் பழகப் போகிறேன"

"எதற்கம்மா இந்த ஏற்பாடு?"

"சித்தப்பா மாதம் ஒன்று ஓடிவிட்டது. தகவல் ஒன்றுமே தெரியவில்லை. என்ன செய்து கொண்டிருக்கிறார், என்ன எண்ணிக் கொண்டிருக்கிறார் என்பதே தெரியவில்லை. ஊர்ஊராகச் சென்று பரதநாட்டியமாடிக்கொண்டே போனால் எவ்விடத்திலாவது அவர் கலையார்வம் அவரைக் காட்டிக் கொடுத்துவிடுமென்று நினைக்கிறேன்.

"சரி! உன்னிஷ்டம்போலவே செய். நான் எதுவுமே நினைக்கப் போவதில்லை. விதிவிட்ட வழியில் நடக்கவேண்டும். உன்முயற்சி வெற்றி தரட்டும். இன்றே ஆசிரியர்களுக்கு ஏற்பாடு செய்கிறேன்"

"இரவு பகல் எந்த நேரமும் வாணியின் சிலை முன்பு சலங்கை ஒலி எழும்பிக்கொண்டே இருந்தது. தன்னால் ஏற்பட்ட விளைவுதானே சசியின் பிரிவு. சசியையும் கலாவையும் ஒன்று சேர்ப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்த லெக்ஷ்மி இரவு பகல் அசுர சாதகமாக சங்கீதாப்யாசம் செய்து வந்தாள்.

"ஏற்கனவே தன் தாயினிடம் பரதம் பயின்ற கலாவிற்கு மூன்று மாதத்தில் அரங்கேற்றம் நடந்தது அதிசயமல்ல. ஆனால் லெக்ஷ்மி, பதம் பாடத்தயாரானதுடன் கலாவுடன் சேர்ந்து பாடி மேடைக் கச்சேரிக்கும் தயாரானதுதான் அத்துல்யத்தை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

வீணைவிகாரை தக்ஷிணாமூர்த்தியின் பின்னை சந்தானத்தினிடம் ஒப்புவித்துவிட்டு, கலா, மேகலா, லெக்ஷ்மி, அத்துல்யம், தக்ஷிணாமூர்த்தி மற்றும் சங்கீத கோஷ்டியுடன் சுற்றுப்பிரயாணத்திற்குப் புறப்பட்டார்கள்.

நாளையிரவு புறப்படப் போகிறார்கள். எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்தாகிவிட்டது இரவு அவரவர்கள் படுக்கைக்குச் சென்றுவிட்ட பின் கலா அவர்களுக்கென்று கட்டப்பட்ட அலங்கார ஹாலுக்குச் சென்றாள் எல்லா சாவிகளும் அவள் வசம் தானிருந்தன. அதனால் ஒருவருமறியாமல் தனியாகவே சென்றாள். ஹாலில் கட்டிலிற்கு எதிர்புறமாகவுள்ள அலங்கார மேஜை மீது, மாலை யணிந்து மணக்கோலத்தில் சசியும் கலாவும் நின்றபடி எடுத்த பெரிய அளவுள்ள படம் ஸ்டாண்டில் வைக்கப்பட்டிருந்தது படத்தையே உற்றுப் பார்த்தபடி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

"சசி! இப்படி ஒருகாலம் வருமென்று நான் கனவிலும் கருதவில்லையே. விநாசகாலே விபரீத புத்தி என்பதுபோலாயிற்றே என்விதி! சசி நான் வேண்டுமென்றோ, உங்கள் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பினாலோ அந்த ஏற்பாட்டைச் சொல்லவில்லையே அத்தான்! லெக்ஷ்மி! திக்கற்ற அவள் மனம் வருந்தக் கூடாதே என்பதுதானே எனது நோக்கம் 'சசி! என்னைப் புரிந்துகொள்ள வில்லையே தாங்கள், ஐயோ! தாங்கள் எவ்விடத்திலிருக்கிறீர்களோ? என்ன கஷ்டப்படுகிறீர்களோ? அல்லது யாராவது ஒரு பெண் உங்களை ....ஐயோ என்றால் நினைக்கவே முடியவில்லையே. சசி! சசி! சசி!" படத்தின் மீது தலையை வைத்து குலுங்கக் குலுங்க அழுதாள். சற்று நேரம் அழுதபின்பு அவள் மனம் சற்றுத் தெளிவுபட்டது.

"அத்தான் நாளை நான் புறப்படப் போகிறேன் வெற்றி காணவேண்டும். ஊர் ஊராக ஆடுவேன். ஏன் உங்களைக் கண்டு பிடிக்கத் தெருத்தெருவாக முச்சந்தி முச்சந்தியாக ஆடத் தயங்கேன், என் பரிதாபத்தைக் கண்டு இரங்கி ஓடிவந்துவிடுவீர்கள் அத்தான்! என்னை விட்டு உங்களால் இருக்கவே முடியாது சசி! இப்பொழுது உங்களைக் கண்டுபிடித்து அடைந்துவிட்டேனானால், லெக்ஷ்மியைப் பற்றிப் பேசி உங்கள் மனதைப் புண் படுத்தவே மாட்டேன். நீங்கள் லெக்ஷ்மியை கடமை தவறாது நடத்துவீர்கள் என்னை மன்னியுங்கள் அத்தான் மன்னியுங்கள்" என்று பலவாறு புலம்பி வேண்டிக்கொண்டு வெளியே வந்தாள். லெக்ஷ்மியும் கலாவும், கலாவின் தனியறையில் ஒரே கட்டிலில் தான் படுத்து உறங்குவது பழக்கம். தன் அறைக்கு வந்த பொழுது லெக்ஷ்மியை அறையில் காணவில்லை. இவ்வளவு நேரத்திற்குப் பின் என்ன செய்கிறாள்? என்று எண்ணியவாறு வெளியே வந்தாள் லெக்ஷ்மியின் அறைப் பக்கம் வரும் பொழுது உள்ளே விளக்கு எரிவது தெரிந்தது. கதவு மூடியிருந்தது என்றாலும் ஒரு சிறு துவாரம் கதவில் தெரிந்தது என்ன செய்கிறாள் என்று அத்துவாரத்தின் வழியாகப் பார்த்தவளின் கண் நிலைக்குத்தி நின்றது உடம்பு சில்லென வியர்த்துக் கொட்டவே, கதவின் மீது கையை வைத்தாள் திறந்துகொண்டது. அங்கு அவள் கண்டகாக்ஷி.

அவள் மேஜை மீதும் கலா சசி கல்யாணப் படம் வைத்திருந்தது. நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள் லெக்ஷ்மி எதிரில் மேஜை மீது

2 - NOV 1959

ஒளியேற்றப்பட்ட விளக்கு !



மகிழ்வு அளிக்கும், வாழ்த்தால் மனம்
களிக்கும், நலலெண்ணத்தைத்
தெளிக்கும், நெஞ்சு இனிக்கும்
தீபாவளி விழாக்கோலம் எங்கும்!
தீபாவளியால் இதயத்தே
பொங்கும் மகிழ்வும்,
நிறைவும் பூரிப்பும், பாதுகாப்பு
உணர்வும் எதிர் காலத்தும்,
ஏன்? என்றும்
உமதாகட்டும்.

உங்களுக்கும், உங்களைச்
சார்ந்தோருக்கும் உரிய
வருங்காலப்பாதுகாப்பு
தனை உறுதி செய்யட்டும்
ஆயுள் இன்ஷ்யூரன்சு

ஆயுள் இன்ஷ்யூரன்சு

—நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே நீங்கள்
பாதுகாப்புப் பெறும் பொன்னாளாம்.

EP/LIC/SZ/9

படத்தின் பக்கத்தில் "விஷம்" என்று எழுதிய பாட்டிலும் அதற்குப் பக்கத்தில் கண்ணாடித் தம்ளரில் விஷம் கலந்த பாலும் வைக்கப்பட்டிருந்தது. சத்தப்படாமல் கதவைத் திறந்து கொண்டு செல்லுமுன் டம்ளரை கையிலெடுத்து விட்டாள் லெக்ஷ்மி.

ஓடிச் சென்று டம்ளரைப் பிடுங்கி, முகங் கழுவ அமைத்திருந்த பேஸினில் கொட்டி குழாயையும் திறந்து விட்டுவிட்டு லெக்ஷ்மியினருகில் வந்தாள். எதிர்பாராமல் கலாவைக் கண்டதும் திக்பிரமை அடைந்து உட்கார்ந்திருந்த லெக்ஷ்மி, கலா அருகில் வரவும் எழுந்து தடாலென்று அவள் காலின் மீது விழுந்து முழங்கால்களைக் கட்டிய வண்ணம்!

"கலா! நான் எப்பொழுது சாக நினைத்தாலும் யாரேனும் வந்து தடுத்துவிடுகிறார்கள்; நான் இருந்து யாவருக்கும் துன்பத்தையே கொடுக்க வேண்டுமென்பது ஆண்டவனின் கட்டளையா? என்னை மன்னித்துவிடு கலா, நான் அசட்டுப் பிடிவாதம் செய்து உன் வாழ்வில் குறுக்கே புகுந்தது, எவ்வளவு மதியீனமான காரியம் என்பது வர வரத்தான் புலனாகிறது கலா.

"இப்பொழுது எல்லோரும் படும் துன்பத்திற்கு மூலகாரணம் நான் தானே கலா. உன் வாழ்வில் நான் குறுக்கிடாமலிருந்தால், இன்றைக்கு இந்த வீணா விஹார் ஆனந்த சாகரத்தில் முங்கிக் குளித்துக் கொண்டிருக்கும். நீ இன்பமயமான வாழ்க்கை நடத்திக்கொண்டிருப்பாய் சித்தப்பா வஜ்ர வீணை வாசித்திருப்பார். பட்ட மரம் துளிர்த்தாற் போல, அத்துல்ய மேகலா ஜோடி சங்கீதாம்ருதத்தை ஜகமே பருகும். சசி கலா ஜோடி சங்கீதம் அதைவிட ஒருபடி மேலே போயிருக்கும். இவையெல்லாம் பகல் கனவாய் முடிந்தது. யாரால் சொல்லு; கலா சொல்லு".

"முடிந்ததா உனது துன்பமொழி, எழுந்திரு. நான் சொல்லுவதையும் சற்றுக் கேள்" என்று அவளைத் தூக்கி நிறுத்தினாள். தனது இரண்டு கைகளையும் அவளது இரு தோள்களிலும் வைத்து, "லெக்ஷ்மீ நீ புத்திசாலியென்று நினைத்திருந்தேன். இப்படி வடிகட்டின முட்டாள் தனமான செய்கையிலிறங்குவாயென்று கனவிலும் கருதவில்லை. விஷயங்களைச் சிந்தனை செய்து பார்த்தாயானால் யார்மீதிலாவது கடுகளவு குற்றம் கண்டுபிடிக்க முடியுமா? இப்படி அவரைப் பிரிந்து நான் தவிக்கவேண்டுமென்பது விதியின் கட்டளையாக இருந்தால், நீ இல்லாவிடில் வேறு ஏதாவது காரணம் ஏற்படும். பிரிவுத் துன்பம் என்பது உனக்கு மட்டுமில்லையா?"

"இல்லை கலா இல்லை. நான் என் எதிர் காலத்தை எதிர்பார்த்தவிதம் வேறு. இங்கு என்னை நீங்கள் யாவரும் நடத்தும் விதம் வேறு. அவருடன் தாம்பத்ய வாழ்க்கை தொடர்பு கொள்ளுவது என்பதை நான் கனவிலும் கருதியவளல்ல. என் உணர்ச்சியே தனிரகம் கலா-"

"சரி; அப்படியே இருக்கட்டும் நீ சொன்னதிலிருந்து குற்றவாளி நான்தானென்பது தெள்ளத் தெளிவாய் விளங்கிவிட்டதல்லவா?"

"ஐயோ கலா! என்ன சொல்லுகிறாய்?

"உன்னிடம் நான் அதிகப் பரிவு காட்டி அவரிடம் பேசினதனால் தானே, அவர் கடமை தவறுகிறார் என்று நான் சொல்லுவதாக நினைத்து விட்டார். நீ இந்த விஷத்தைச் சாப்பிட்டிருந் தாயானால், இப்பொழுது ஒருவாறு எதிர்பார்க் கும் நல்வாழ்வு, என் வாழ்க்கையிலேயே பெற முடியாது. தான் மறைந்ததும், அந்த வேகத் தில் உன்னால் தானே அவன் போனான் என்று உன்னைத் திட்டியிருப்போம் கஷ்டம் தாங்காமல் உயிரைவிட்டாள் என்று எங்கள் மீது நிச்சய மாக பழியேற்படும். அவர் என்னை மன்னிக்கவே மாட்டார். பிறகு நான் உன்னைப் பின்பற்றுவ தைத்தவிர வேறு வழி உண்டா? நீயே சொல்லு"

"கலா! இதை நான் சிந்திக்கவேயில்லை கலா! சிந்திக்கவேயில்லை."

"லெக்ஷ்மி! எனக்கும் சசிக்கும் ஏற்பட்ட காதலானது கணவன் மனைவி என்ற முறையில் அமைந்ததல்ல, ஐந்து வயதில் முதல் பார்வை யிலேயே இருவரும் ஐக்யமாகிவிட்டோம். அந்த வயதில் காதலா! ஒருவர் மீது மற்றவர் கொண்டி ருக்கும் பாசத்தை அன்பை பின்னிப் பிணைத்திருக் கும் உணர்ச்சியை விவரித்துச் சொல்லப் பதமே கிடையாது. என் சசி என்னைவிட்டுப் பிரிந்து இவ்வளவு நாள் இருக்கவே முடியாது லெக்ஷ்மி! அவர் தன நினைவை யிழந்து எங்கோ யாரிடத்தி லோ அகப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்றே நினைக்கிறேன் அதற்காகவே தான் இந்த சுற்றுப் பிரயாணத்தை ஏற்பாடு செய்தேன். எதற்குச் சொல்லவந்தேனென்றால், அப்படிப்பட்ட சசிக்கு ஆபத்து நேர்ந்திருந்தால் கூட, அம்மா சொன்ன படி அங்கேயே மாண்டிருக்கமாட்டேன்."

"ஐயோ கலா இதென்ன பேச்சு" அழுதவாறு கூறினாள்" "நடுவில் பேசாதே! கேள்! சசியில்லை யென்றால் கலா உயிர் வாழ முடியாது, ஏன் அது என் சுயநலத்தைத் தான குறிக்கும். என் மனப் புயலை மறைத்துக் கொண்டு, தியாக வாழ்க்கை நடத்தும் சித்தப்பாவையும், அம்மாவையும் கண் போல் காத்து, இந்த ஸ்தாபனத்தை வீணைவிகார் வாசிகளின் நலன்களை கண்ணெனக் காப்பேன். சங்கீதத்திலேயே இரவு பகலைக் கழிப்பேன். என் கடைசி மூச்சு வரை கடமை கடமையென்று கடமையிலே, என் கணவனைக் கொண்டிருப் பேனே தவிர தற்கொலை செய்துகொள்ள மாட்டேன். நான் தற்கொலை செய்து எனது கஷ்டத்தை நிவர்த்தி செய்துவிடலாம்; ஆனால் மேலே சொன்னவர்களின் கெதி என்னவாகும்? சிந்தனை செய்துபார். உன் முயற்சி உன் சுயநலத் தை[illegible]தானே குறிக்கிறது" என்று நிறுத்தினாள்.

"கலா என்னை மன்னித்துவிடு. இனிமேல் இது மாதிரி செய்யவேமாட்டேன். நீ சொல்லுகிற படியே நடந்து வருவேன். இது சத்யம்."

"சரி அது உண்மையானால் வா, வாணியின் சிலை யிருக்குமிடம் செல்லுவோம்" என்று அவள் கையைப்பற்றி இழுத்தபடி நடந்தாள்.

மங்கின விடி விளக்கொளியிலும், சிலைக்கருகில் சதா எரிந்துகொண்டிருக்கும் குட விளக்கொளி யிலும், அந்த நிச்சப்தமான வேளையில் வாணி புன்சிரிப்புத்தவழ கம்பீரமான பார்வையுடன் இவர்களை வாழ்த்துவது போன்றிருந்தது சிலை யருகில் வந்து நின்றதும்.

"உம் லெக்ஷ்மி! நான் சொன்னபடி செய்" என் றாள் "இனி எந்தவிதமான கஷ்டங்கள் வந் தாலும், மனம் எவ்வளவு துன்பப்பட்டாலும், எங்கள் குலதெய்வம்முன்னுகை, தற்கொலை செய்து கொள்ளுவதில்லையென்று பிரமாணம் மெடுக்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு கலா நீயும் எனக்காக ஒரு வாக்குறுதி கொடுக்கவேண் டும்"

"என்ன விஷயம் சொல்லு"

"கலா, உன் வாழ்வு மலர்ந்து தானாகவேண்டும் இல்லையேல் சத்யத்திற்கு மதிப்பே கிடையாது. அதனால் நமது சுற்றுப் பிரயாணத்தில் நிச்சயம் அவரை அடைந்து விடுவோம். பிறகு நீ, அவரி டம் எனக்காகப் பரிந்து பேசுவதில்லை யென்று தெய்வத்தின் முன் வாக்களி"

"அதன் அவசியம்?

"அவர் என்னை ஒருநாளும் குறைவாக நடத்த மாட்டார். அது என் மனதிற்கு நிச்சயமாகப் பட்டுவிட்டது. உன் கவலை அவர் மனதை புண்படுத்துகிறது. அதனால் நானும் உனக்காக ஒன்றுமே சொல்லமாட்டேன். நீயும் அதன்படி நடப்பதாக வாக்களித்தால் தான் என் மனம் நிம் மதியுறும்.

அவள் சொன்னபடி வாக்களித்தாள் கலா.

"கலா! நீ சாதாரணப் பெண்ணல்ல, எதோ விட்ட குறையைப் பூர்த்தி செய்ய வந்த ஒரு மஹாத்மாவின் அம்சம். இல்லையேல் இவ்வளவு சாந்தமும் தீர்க்க தரிசனமும் வராது"

"அதுவல்ல லெக்ஷ்மி. அதோ நிற்கும் கலா தேவியின் அம்சமே இந்தக்கலா. குறைபாடு என் பதை எந்த விஷயத்திலும் கலாவினிடம் காண வே முடியாது." என்று சொல்லியவாறு பக்கத்து வாயிற்படி வழியாக அவர்கள் பக்கத்தில் வந்து நின்றார் அத்துல்யம். "சித்தப்பா!" என்றார்கள் இருவரும் ஏக காலத்தில்.

வாணியின் பாதத்தடியிலிருந்த குங்குமத்தை எடுத்து இருவர் நெற்றியிலும் பொட்டு வைத்து சிறிது புஷ்பத்தை எடுத்துக் கொடுத்தார். பிறகு இவன் எப்படி வந்தான்" என்று யோஜிக்கிறீர் களல்லவா? சொல்லுகிறேன். அவன் சென்ற நாட்களாக, தினம் இரவு ஒவ்வோரிடமாகப் பார்த்துவிட்டு நீங்கள் இருவரும் என்ன செய்கி றீர்களென்பதைக் கவனித்துவிட்டுத்தான் படுக் கச் செல்லுவது பழக்கம். வழக்கத்திற்கு மாறாக மேல் மாடியில் விளக்கெரிவதைப் பார்த்து அவ் விடம் வந்தேன். உன் பரிதாபத்தைக்கண்டேன் கதறி அழவேண்டும் போலிருந்தது. நீ கீழே இறங்கினபிறகும், பகவானை வேண்டி சசியை நொந்தவாறு சற்று நேரம் நின்றுவிட்டு கீழே இறங்கி வரும்பொழுது, லெக்ஷ்மியின் அறையில் விளக்கு எரிவதைக் கண்டு ஜன்னல் வழியாகப் பார்த்த சமயம்தான் நீ விஷப்பாலைக் கொட்டிக் கொண்டிருந்தாய்" என்று நிறுத்தினார்,

"சித்தப்பா! என்னை மன்னித்து விடுங்கள். பின்வருபவைகளைச் சிந்திக்காமல் அசட்டுக்

காரியம் செய்யத் துணிந்து விட்டேன்," என்று அவர் பாதத்தில் தலை படும்படியாக நமஸ்காரம் செய்தாள். "தீர்க்க சுமங்கலீ பவ" என்று வாழ்த்திவிட்டு "கலா! கவலைப்படாதேயம்மா உன் முயற்சி வெற்றிதரும்" என்று அன்புடன் அவள் முதுகில் தட்டினார்.

"லெக்ஷ்மி! ஒரு விஷயம் இப்பொழுதே சொல்லி விடுகிறேன். நான் மேடைமீது ஆடுவதற்காக தாளத்தில் ஓர் அடி எடுத்து வைத்ததுமே என்னை மறந்து விடுகிறேன். அதனால் எந்த இடத்திற்குப் போனாலும் கூட்டத்தில் அவர் இருக்கிறாரா என்பதைத்தான் நீ முதலில் கவனிக்க வேண்டிய விஷயம்."

"அது என் பொறுப்பு. கடமையும் கூட."

இருவரும் வாணியையும் அதுல்யரையும் வணங்கினார்கள் புறப்படுமுன்.

"சித்தப்பா இப்பொழுது நடந்த விஷயம் நம் மூவருக்குள்ளும் நிற்கட்டும்; அம்மாவின் காதுக்கு எட்டவேண்டாம். அவள் மனம் மிகவும் புண்படும்" என்றாள் கலா.

"அப்படியே இருக்கட்டும்." (தொடரும்)

வேலையும் கூலியும்

ந. சிதம்பரசுப்ரமண்யன்

வேலைக்குத் தகுந்த கூலி என்று சொல்லுகிறோம். வேலைக்குத் தகுந்த கூலி என்று எப்படி நிர்ணயிப்பது? வேலையும் கூலியும் இப்பொழுது மிகவும் அரசியலில் அடிபடும் பிரச்னை. அதனாலே அதைப்பற்றி சிறிது சிந்திப்பது அவசியமாகிறது. இன்றைய அரசியல் இலக்கியம், சோஷலிச அடிப்படையைக் கொண்டது என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய வேலைக்குத் தகுந்தாற்போலும் அவர்களுடைய தேவைக்குத் தகுந்தாற்போலும், கூலியை நிர்ணயமாக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தேவைக்குத் தகுந்தாற்போல் கொடுப்பது என்பது ஒரு தார்மீகக் கொள்கை. அதைப்பற்றி ஒன்றும் குறை சொல்லுவதற்கில்லை. ஆனால், தகுதிக்கு தகுந்தாற்போல் என்பதை எப்படி நிர்ணயிப்பது! இன்ன தொழிலுக்கு இவ்வளவு சம்பளம் என்று எப்படித் திட்டமாக ஒரு விதி ஏற்படுத்துவது.

ஓர் ஆசிரியர் கதை ஒன்று எழுதுகிறார். அது ஒரு பத்திரிகையில் பிரசுரமாகிறது. அவருக்கு ஏதோ சிறு சன்மானம் கிடைக்கிறது. அந்தக் கதையை ஒரு நாடகக்குழுவினர் நாடகமாக்கித்தரச் சொல்லுகின்றனர். நாடகத்திற்குக் கிடைக்கும் சன்மானம், பத்திரிகையின் சன்மானத்தை விட அதிகமாயிருக்கிறது. அந்தக் கதையை ஒரு சினிமா படப்பிடிப்பாளர் சினிமாக் கதையாகச் செய்துதரச் சொல்லுகிறார். பத்திரிகை சன்மானத்தைவிட ஆயிரக் கணக்கில் வித்தியாசமிருக்கிறது அவர் கொடுக்கத்தயாராயிருக்கும் சன்மானம். ஆகவே வேலை ஒன்றாக இருந்தாலும் வேலை வாங்குபவருடைய தேவை, அந்தஸ்து, தொழில்நிலை இவைகளைப் பொருத்து ஊதியமும் மாறிக் கொண்டு போகிறது அல்லவா?

சத்யாக்ரஹ இயக்க நாட்களில் ஒரு பத்திரிகை முதலாளி, சில அறிஞர்களை அவருடைய காரியாலயத்தில் அமர்த்தியிருந்தார். அவர்களுக்குச் சாப்பாடு, தங்கவசதி முதலிய தேவைகளைப் பூர்த்தி செய்துவந்தார். ஆனால் அவர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்குத் தகுந்த வருவாய் கிடையாது. ஆகவே அவர்களுக்குச் சம்பளமும் கிடையாது. கைச்செலவிற்குக்கூட ஒரு தம்பிடி கிடைக்காது அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒருவர், 'வேலைக்குக் கூலி வெறுஞ்சோறு' என்று அழகாக ஒரு கவிதை செய்திருந்தார். ஆனால் அந்தப் பிரசுர கர்த்தரைக் கேட்டிருந்தால் நான் பிரசுரகர்த்தர் வேலையா செய்துகொண்டிருந்தேன்! சத்திரம் வைத்துத் தண்டச் சோறல்லவா போட்டுக் கொண்டிருந்தேன் என்று சொல்லியிருக்கலாமல்லவா?

'ரேடியம்' என்ற உலோகத்தைக் கண்டுபிடித்த க்யூரி தம்பதிகளுக்கு ஒரு பெரிய பிரச்னை வந்தது. 'ரேடியத்தைப் பற்றியும் அதனால், மருத்துவத் துறையில் உள்ள உபயோகத்தையும், கைத்தொழிலுக்கு ஏற்படக்கூடிய உபயோகத்தையும் அறிந்துகொண்டிருந்த சில நிபுணர்கள், க்யூரி தம்பதிகளுக்குக் கடிதம் எழுதினர். ரேடியம் உற்பத்தி சம்பந்தமான சில குறிப்புகளைக்கொடுத்தால் அவர்களுக்கு ஏராளமான பொருள் கொடுப்பதாகச் சொன்னார்கள். க்யூரி தம்பதிகள் அப்பொழுது வறிய நிலையில்தான் கஷ்டப்பட்டுக கொண்டிருந்தார்கள். பணம் மிகவும் தேவையாகத்தானிருந்தது. அவர்கள் சோதனைக்கு வேண்டிய இயந்திரங்களை யாவது வாங்கப் பணம் உதவியிருக்கும். ஆனால் இருவரும் கலந்து யோசித்து முடிவுக்கு வந்தனர். "ரேடியம் நம் சொந்த சொத்து இல்லை. நாம் கண்டு பிடித்த அறிவு விஞ்ஞான சமூகத்துக்கே உரியது. அதை விலை கூறி விற்பது விஞ்ஞான தர்மத்திற்கு ஒவ்வாதது" என்று முடிவு கட்டினார்கள். அவர்கள் கண்ட உண்மைகளை, விஞ்ஞான பத்திரிகைகளில் வெளியிட்டார்கள். அதனால், பல முதலாளிகள், தொழிலாளிகள், விஞ்ஞானிகள் லாபமடைந்தனர். ஆனால் க்யூரி தம்பதிகள் அவர்கள் செய்த தொண்டிற்குத் தகுந்த கூலியைப் பெறவில்லை. அவர்களுக்குத் தகுந்த கூலியை யார் நிர்ணயிப்பது? எப்படி நிர்ணயிப்பது?

கலையுலகில் சில விபரீதமான செயல்களைக் காணலாம். கலைஞர்கள் தங்கள் கலைப் பொக்கிஷங்களான சித்திரங்களைச் சொற்ப காசுகளுக்கு விற்றுவிட்டுச் சோற்றுக்கும் துணிக்கும் திண்டாடிக் கொண்டிருப்பார்கள், ஆனால் அவர்களுடைய சித்திரங்களை வாங்கிய வியாபாரிகள் அதை லக்ஷக்கணக்கான ரூபாய்களுக்கு விற்று விட்டு, கொள்ளை லாபம் அடைந்திருப்பார்கள். பிகாஸிஸா என்ற கலைஞர் வீட்டிற்கு ஒரு ரசிகர் சென்றிருந்தார். அவர் வீட்டில் ஓர் ஓவியம்கூட பிகாஸிஸா எழுதியது இல்லை. "என்ன ஒரு பிகாஸிஸாவைக் கூடக் காணோமே" என்றார் வந்தவர். "அவைகளை வாங்குவதற்கு எனக்குச் சக்தியில்லை" என்றாராம் பிகாஸிஸா.



ஸ்ரீமான் கூனனின் விசித்திர வியாதி

தான் கீல்வாதத்தினுல் அவதிப் படுவதாக எண்ணினுன் ஸ்ரீமான் கூனன். டாக்டரிடம் ஓடினுன். அவனை நன்கு பரிசோதித்துப் 'பார்த்துக் களைத்தாரே தவிர அந்த விசித்திர வியாதியை அவரால் கண்டுபிடிக்க முடிய வில்லை. திடீரென அவருக்கு ஒரு யோசனை உதித்தது: அவன் தோள்பட்டைகளில் ஏற்பட்ட நோவின் காரணம், சுருங்கிப் போனதால் இறுக் கமான அவன் கோட்டுதான்! தம் அபிப்ராயத்தை வெளி யிட்டார்: ''நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கஜத் துணியிலும் 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று கவனித்து வாங்கினுல் பல சலவைக ளுக்குப் பிறகும் உங்கள் ஆடை கள் உடம்புக்குப் பொருந்தாத படி ஒருபோதும் சுருங்காது. இம்மாதிரி மர்ம வியாதியும் உங்களைப் பீடிக்காது.''

லேபில் மேல் ·SANFORIZED· REGD TD MK

என்ற முத்திரையுள்ளதா என்று பாருங்கள். உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந் தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ, இன்கார்ப்பொரேடட் (வரை யறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப் பெற்றது) அவர்க ளால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங் காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணி களில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனும திக்கப் படுகிறது.

விவரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன்டிரைவ், பம்பாய்-2.

SAN-58-5A-TAM

கலைப் பொருள்களை மற்ற சாதாரணப் பொருள்களைப்போல நாம் மதிப்பிட முடியாது. ஓவியனுடைய ஊதியத்தையும் மற்ற தொழிலாளிகளின் ஊதியத்தை தீர்மானிப்பது போல் கணக்கிட்டாலும் அது மிகவும் பொருத்தமற்றதாகத்தான் போகும். ஒரு ரசமான சம்பவம் ஞாபகம் வருகிறது.

விஸ்லர் என்ற ஓவியர் ஒரு சித்திரம் வரைந்திருந்தார். கலை நிபுணரான ரஸ்கின் அதைப் பற்றி பத்திரிகையில் விமரிசனம் செய்திருந்தார். விஸ்லர் 'கலை கலைக்காகவே' என்ற கொள்கை கொண்டவர். பல புதிய உத்திகளைக் கையாள்பவர். ரஸ்கின் புராதன கலைச் செல்வத்தின் மாண்புகளைப் பின் பற்றுவர். அடிப்படை தார்மீகத்தில் நம்பிக்கை கொண்டவர். இருவருமே அடிப்படையிலே கருத்து வேற்றுமை கொண்டவர்கள். ரஸ்கின், பொதுவாக விஸ்லர் கொள்கைகளையும் கையாளும் முறைகளையும் விரும்பாதவர். விஸ்லரின் ஓவியம் 200 கினி என்று விலை வைக்கப்பட்டிருந்தது. ரஸ்கின் அவர் விமரிசனத்தில் விஸ்லரின் ஓவியத்தை மிகவும் கண்டித்து விட்டுக் கடைசியில் "பொது ஜனத்தின் முகத்தில் ஒரு டப்பா வர்ணத்தை வீசி எறிந்ததற்கு அந்த டம்பாச்சாரி 200 கினிக்கள் கேட்கிறார்" என்று முடித்திருந்தார். விஸ்லர் ரஸ்கின் பேரில் மான நஷ்ட வழக்குத் தொடுத்திருந்தார். வழக்கு நடக்கும் பொழுது, விஸ்லர் விசாரிக்கப்பட்டார். எதிர் கட்சி வக்கீல் குறுக்கு விசாரணை நடத்தினார்.

"ஐயா, இந்த ஓவியம் தாங்கள் எழுதியது தானே!"

"ஆமாம்"

"அதன் விலை என்ன?"

"200 கினிக்கள்"

"அதை எழுத எவ்வளவு காலம் பிடித்தது"

"இரண்டு மூன்று நாட்கள் ஆகியிருக்கும்"

எதிர்க் கட்சி வக்கீல் முகத்தில் வெற்றிக் குறி தாண்டவமாடியது. தான் ஜயித்து விட்டதுபோல் எண்ணினார்.

"சரிதான் இரண்டு மூன்று நாள் வேலைக்கு 200 கினி கூலி எதிர்பார்ப்பது நியாயமா" என்றார்.

விஸ்லர் மகா புத்திசாலி. பேச்சு சாமர்த்தியம் அபாரமாக உள்ளவர். பளிச்சென்று பதில் சொன்னார்.

"அந்தக்கூலி என்னுடைய இரண்டுநாள் வேலைக்கல்ல. என் வாழ்க்கை முழுவதும் நான் தேடிக்கொண்ட அனுபவத்திற்கு" என்றார். எதிர் வக்கீல் வாய்மூடினார். ரஸ்கின் வழக்கில் தோற்றார்.

இதைப்போன்று நாம் மதிப்புப் போடும் பொழுது எதை வைத்து எடை போடுவது என்ற பிரச்னை வந்து தீரும். காலத்தையும். செய்தவேலையின் கணிசத்தையும் வைத்து மாத்திரம் எல்லாவற்றையும் நாம் ஒரேவித கணக்கிடமுடியாது. உடலினால் செய்யும் வேலை, புத்தியினால் செய்யும் வேலை, இதயத்தினால் செய்யும் வேலை எல்லாவற்றிற்கும் ஒரேவிதமாக நாம் ஊதியம் கொடுக்க முயற்சித்தால் அது பொருத்தமற்ற காரியமாகத் தான் ஆகும். அப்படிச்செய்ய முற்பட்ட தொரு கம்பெனி நிர்வாகிகளுக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைப் பார்க்கலாம்.

ஒரு தொழிற்சாலையில் ஓர் இயந்திரம் நின்று விட்டது. அத்தொழிற்சாலையில் வேலை பார்க்கும் இயந்திரத் தொழிலாளிகளுக்கு அதைச் சரி பார்த்து நேர் செய்ய முடியவில்லை. வேறு ஒரு பெரிய இஞ்சினியருக்குத் தந்தி கொடுத்து வரவழைத்தார்கள். அவர் வந்து பார்த்தார். உடனேயே அதில் உள்ள ஒரு கோளாறு புரிந்துவிட்டது. ஒரு சம்மட்டியால் ஒரு இடத்தை லேசாகத் தட்டினார். தட்டியவுடன் இயந்திரம் எப்பொழுதும் போல இயங்க ஆரம்பித்தது. அந்த நிபுணர் தன் சேவைக்கு ஆயிரம் ரூபாய்க்கு ஒரு பில் அனுப்பினார். கம்பெனி நிர்வாகிகள் அதை வாங்கிப் பார்த்து நினைத்தார்கள்: "இவர் வந்து என்ன பிரமாதமாகச் செய்தார். சம்மட்டியால் லேசாகத் தட்டினார். அதற்கு ஆயிரம் ரூபாயா? பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே" என்று சொல்லி இது மிகவும் அதிகம் என்பதையும் தாங்கள் நினைத்ததையும் சொன்னார்கள். இஞ்சினியர் சிரித்தார். "அந்தப் பில்லைக் கொண்டாருங்கள். நான் வேறு எழுதிக் கொடுக்கிறேன்" என்று அதைத் திருப்பி வாங்கிக் கொண்டார். பிறகு மற்றொரு பில் எழுதி அனுப்பினார். அதில் பின் வருமாறு கண்டிருந்தது.

இயந்திரத்தின் தவறைக்கண்டு பிடித்ததற்கு	999
இயந்திரத்தின் தவறைச் சரி செய்ததற்கு	1
ஆக	1000

நிர்வாகிகள் பேசாமல் தொகையை எண்ணிக்கொடுத்தார்கள்.

ஆகவே வேலைக்குத் தகுந்த கூலியையும் கூலிக்குப் பொறுமான வேலையையும் தீர்மானிப்பது மிகவும் சிரமமான காரியமல்லவா? அதிகமாகக் கூலி கேட்பவர்களும் அதிகமாக வேலை கேட்பவர்களும் அதைப் பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கட்டும்.

என்
எதிர்
காலத்துக்கு
உங்கள்
சேமிப்பு
அவசியம்
தேவை

அது நாட்டிற்கும் பயன்படும்



இவனுடைய வருங்காலத்தை **தேசீய சேமிப்புகள்** மூலம் பலப் படுத்துங்கள். தவருமல் சேமித்து இந்திய அரசாங்க சிறுசேமிப்பு உறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள். இது புதிய இந்தியாவை உருவாக்குவதுடன், உங்கள் மற்றும் உங்கள் குழந்தைகளின் வருங்கால வாழ்வு வளம்பெறவும் உதவும்.

- 12 ஆண்டு தேசீயத்திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டுகள்
- 10 ஆண்டு கஜாஞ சேமிப்பு டெபாஸிட் சர்டிபிகேட்டுகள்
- 15 ஆண்டு வருடாந்திர சர்டிபிகேட்டுகள்
- தபால் நிலைய சேமிப்புப் பாங்கி டெபாஸிட்டுகள்
- வளரும் மாதச் சேமிப்புத்திட்டம்

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

நாகபுரியிலுள்ள தேசீய சேமிப்புக் கமிஷனரும், உங்கள் ராஜ்யத்தில் உள்ள பிராந்திய தேசீய சேமிப்பு ஆபீசரும் தேவையான விவரங்களை உங்களுக்கு மகிழ்வுடன் தந்து உதவுவார்கள்.

திட்டத்துக்கு உதவுங்கள் முன்னேற்றம் அடையுங்கள்

DA 59/179

ராதை கண்ட தீபாவளி

வெங்கடலட்சுமி

ராதே! என்றழைத்தான் ஸ்ரீகிருஷ்ண பகவான்.

"ஏன் பிரபு?" என்று வினவிய தேவி, வெண் முகிற் கூட்டங்களுக்கிடையே கீழே தெரிந்த யமுனையின் நீர்ப்பரப்பையும், இரு கரையிலும் விரிந்து கிடந்த பிருந்தாவனத்தின் மலர்ப்பொழில்களையும், ஆவலுடன் நோக்கிக் கொண்டிருந்த தன் வட்டக்கரிய விழிகளை அவன் பக்கம் திருப்பினுள். அந்த விழிகளின் அன்பிற்கட்டுண்டு கிடந்த கார்மேகக் கண்ணன், ராதையின் மெல்லிய தளிர் விரல்களைத் தன் கரத்தினுல் அழுத்தியபடியே லேசாகப் புன்னகை கொண்டான். "ராதே! நான் ஒருவன் அருகிலிருப்பதையே மறந்து நெடு நேரமாக எதையோ பார்த்துக் கொண்டே வருகிருயே! உன் கவனத்தை அவ்வளவு அதிகமாகக் கவர்ந்த வஸ்து யாது? எனக்குக் காண்பித்தால் நானும் பார்த்து மகிழமாட்டேனு?" என்று கேட்டான் வேடிக்கையாக.

சின்னஞ்சிறு வெள்ளிச் சலங்கைகள் கொஞ்சுவது போன்று கலீரெனச் சிரித்தாள் ராதை.

"பிரபு! இவ்வளவு ஆயிரம் வருடங்கள் கழிந்த பிறகும் கூடப் பழைய குறும்பு உங்களை இன்னும் விடவில்லையே! உயிரில் உயிராகவும், ஒளியில் ஒளியாகவும், நானே நீங்களாகவும், நீங்களே நானுகவும் இருக்கும் பொழுது உங்களை மறப்பதென்பது சாத்தியமாகுமா? இது உங்களுக்குத் தெரிந்திருக்கும்பொழுது இப்படிப்பட்ட கேள்வியை நீங்கள் கேட்டதே அசம்பாவிதமல்லவா?" என்று பகவானையே மடக்கினுள்.

ஒரு விநாடி அவளை உற்று நோக்கினான் அவள் கணவன்.

"போகட்டும், --- முதற்கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டாய்! - அடுத்தது?"

"அதற்கும் பதில் நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும், - ஆனாலும் நீங்கள் கேட்கிறீர்களேயென்று என் வாயினால் சொல்லுகிறேன்! - "

"சரி சொல்லு,"-

"இப்பொழுது கீழே காண்பது பிருந்தாவனம் தானே!"

"கண்டுபிடித்துவிட்டாயே! கெட்டிக்காரி தான்!---"

"பார்த்தீர்களா? இந்தப் பரிகாசம் தானே வேண்டாமென்கிறேன்! போகட்டும்,-- இதைப் பார்த்தபொழுது, இவ்வளவு வருஷங்களுக்குப்பின்னும் பழைய எழில் மங்காமல், பச்சைப்பசுமையாக விதம் விதமாக வர்ண ஜாலங்களுடன் இவ்வளவு நேர்த்தியாகக் காண்கிறதே, என்று வியப்படைந்தேன் அவ்வளவுதான்" என்றாள் எழில் மிக்க ராதை.

கண்ணன் அவளுடைய சந்திரவதனத்தை வியப்புடன் நோக்கினான். அவனுடைய விழிகளில் ஓர் அபூர்வமான ஒளி தோன்றியது.-- அவனருகே வீற்றிருந்த கட்டழகி, நாணத்தின் செம்மை முகத்திற் படரத் தலை குனிந்தாள்.-

"ராதே! - - இவ்வளவு தானா உன் ஞாபக சக்தி? - - துவாபரம் முடிந்து எவ்வளவு கோடி ஆண்டுகள் ஓடிவிட்டனவே ! - - - நீயும் நானுமாகக் கொம்மாளமடித்த பிருந்தாவனம், ஊழி முடிந்த பின்னும் இவ்வளவு நேர்த்தியாக அப்படியேதங்க முடியுமா?- பெண்ணென்னும் பெயருக்குப் பேதமை

யென்பது பொருளென்பதை ரூபித்து விட்டாயே!''

குழப்பத்துடன் தன் காதலனை நோக்கி னாள் ராதை.

''எனக்கொன்றும் விளங்கவில்லையே ! - - நீங்கள் சொல்லுவது போல் இவ்வளவு வருஷங்களுக்குப் பின்னும் இந்தப் பிருந்தாவனம் மட்டும் அழியாமல் எப்படி அப்படியே உள்ள யிருக்கிறது? தெரியவில்லையே!''

கல கலவென்று நகைத்தான் வாசுதேவன்.

''மேவார் ராஜ்யத்தில் மீராவாய்ப் பிறந்து, ராணுவை மணந்து - - - - -,''

''ஐயையோ! - - அதை ஞாபகமூட்டாதீர்கள்!'' என்று முகம் சிவக்கக் காதுகளைப் பொத்திக்கொண்டாள் ராதை.

''பரவாயில்லை, - என்னுடைய சம்மதத்தின் பேரில் தானே ராணுவை மணந்து கொண்டாய்!-- அப்பொழுது பிருந்தாவனத்தை முற்றிலும் புதுப்பித்துக் கிரிதர கோபாலனுக்கு ஆலயமும் கட்டி முடித்தாயே நினைவில்லையா?'' என்று புன்னகையுடன் கூறினன் கோபாலன்.

''ஆமாம், ஆமாம்; ஆனல் எனக்குஇனிமேல் அதைப்பற்றியொன்றும் தாங்கள் நினைவு மூட்டவேண்டாம்!''

இதைச் சொல்லிவிட்டு முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டாள் அவன் நாயகி - அவளுக்கு ஒரே கோபம். கண்ணன் பார்த்தான். ''ராதே!-- கோபித்துக் கொள்ளாதே!- உனக்குப் பிரியமில்லையானல் இனிமேல் அதைப்பற்றிப் பேசவேயில்லை - - - இப்பொழுது நான் உனக்கு பெரியதோர் ஆச்சர்யம் காண்பிக்கப்போகிறேன்!'' என்றான் அவள் காதோடு.

சட்டென்று திரும்பினாள் தேவி. அவள் கோபம் எங்கேயோ ஓடிவிட்டது. அதற்குப் பதிலாக அவள் விழிகளில் ஆவல் நிறைந்த குறுகுறுப்பு . - - மாயகோபாலன் என்னத்தைக் காண்பிக்கப்போகிருனேவென்று -- ஆனல் கண்ணன் வாயைத் திறவாமல் இந்திரப்பிரஸ்தத்தை நோக்கி ரதத்தை வேகமாகச் செலுத்தினன். - ஆனல் இடையிடையே கடைக் கண்ணல் தன் காதலியைப் பார்த்துக் குறும்புப் புன்னகை செய்து கொண்டான். - அவனாக இஷ்டப்படும் வரையில் ஒன்றும் சொல்லமாட்டானென்பது ராதையின் அனுபவம். ஆகவே அவள் ஆவலே வடிவாகச் சிலைபோல் அமர்ந்திருந்தாள்.

2

ரதம் மேகமண்டலத்துக்குமேல் மின்னலைப் போல் கடுகியது. இந்திரப்பிரஸ்தத்தின் வனப்புமிக்க மாளிகைகளையும், உத்தியான வனங்களையும், கோட்டைக் கொத்தளங்களையும் தாண்டிவிட்டது. - எங்கே போகிறோமென்பதே தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்த ராதை குருக்ஷேத்திரத்தைக் கண்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தாள். - - ஆனல் ரதம் குருக்ஷேத்திரத்துக்குள் புகவில்லை. அதற்கு முன்னலே தென்பட்ட ஒருசிறு கிராமத்தில் ஒரு சிறிய கோயிலின் முகப்பில் நின்றுவிட்டது.

''ராதே! இறங்கு!'' என்றபடியே அவளுடைய மலர்க் கரத்தைப் பற்றி கீழே இறக்கினன் பகவான்.

தன்னைச் சுற்றிலும் வியப்புடன் நோக்கினாள் தேவி

''பிரபு! இது எவ்விடம்? இதற்கு முன்பு நாம் இங்கு வந்ததேயில்லையே! இங்கு யாரிருக்கிறார்கள்?''

''இங்கு என் தங்கை மாயா வசிக்கிருள்; அவளைப்பார்க்கத்தான் உன்னைக் கூட்டிவந்தேன்!''

''சுபத்திரையை எனக்குத்தெரியும்!- ஆனுல் மாயாவைப்பற்றி நான் கேள்விப்பட்டதேயில்லையே!- நம் கல்யாணத்துக்கு அவள் வந்திருந்தாளோ?''

'இல்லை;- ஏனென்ருல் அவள் அப்படியெல்லாய் கலகலப்பாய்ப் பழக விரும்புவதில்லை;- கூட்டம், சத்தம், இதெல்லாம் அவளுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது; ரொம்பவும் பயந்த சுபாவம்-ஆனுல் என்னிடம் அவளுக்கு அத்தியந்த பிரியம். எனக்காகத் தன் உயிரைக்கூட ஒருதரம் தியாகம் செய்ய முன் வந்தாள்''! என்று சொன்னுன் கண்ணன்.

இதையெல்லாம் கேட்கும்பொழுது ராதையின் முகத்தில் தோன்றிய வியப்புக்குறிகள் அவளுக்கு மிகவும் வேடிக்கையாயிருந்தன.

''அப்படியா?- அதிசயமாயிருக்கிறதே!- அவள் கணவன் யார்?-உங்களுக்காகத் தன்னுடைய உயிரைக் கூடத்தியாகம் செய்ய முன்வந்த அந்த அதிசயத் தங்கையைப் பற்றி நீங்கள் என்னிடம் ஒரு வார்த்தைகூட இதுவரையில் ஏன் சொல்லவில்லை?'' என்று தன் கணவனைப் பார்த்துச் சற்றுக் கோபத்தோடு கேட்டாள் ராதை.

வாசுதேவன் கலகலவென நகைத்தான்.- அவள் சொல்லுவதைக் கவனியாமல் ''வா!- வா!- போவோம்;- மாயா நமக்காகக் காத்துக் கொண்டிருப்பாள்!-'' என்று சொல்லிக் கொண்டே அந்தக் கோவிலுக்குப் பின் புறம் உத்யானவனத்துக்குள் நுழைந்தான் அவனைத் தொடர்ந்து நடந்த தேவி''- செய்வதெல்லாம் திரிசமன்;- கபட நாடகதாரி யென்பது சரியாயிருக்கிறது, என்று முணு முணுத்தது அவன் காதில் விழாமலில்லை .-ஆனுல் அதற்காக அவன் கோபித்துக்கொள்ள வில்லை. ஏனெனில் அவள் சொன்னது உண்மைதானே!

3

''ராதே!-[illegible] கண்ணை மூடிக் கொள்!'' என்று கட்டளையிட்டான் கண்ணன்.

''எதற்கு?- நான் மாட்டேன்!'' என்று மறுத்தாள் தேவி.

''ஒரே விஞடி தான்!--''

''மாட்டவே மாட்டேன்!-- அப்புறம் உங்கள் வழக்கப் பிரகாரம் ஏதாவது தில்லு முல்லு செய்துவிடுவீர்கள்! --- என்னை இங்கு தனியே விட்டுவிட்டுப் போனுலும் போய் விடுவீர்கள்! இங்கே கொடுங்கள் உங்கள் கையை!'' என்று கண்ணனின் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள் ராதை.

''இல்லை;-- நிஜமாக தில்லுமுல்லு ஒன்றும் செய்யவில்லை.-- மேலும், - நீதான் என் கையைப் பிடித்துக்கொண்டிருக்கிருயே! நான் எங்கே ஓடிவிட முடியும்? - ஒரே விஞடி கண்ணை மூடிக்கொள்! - முக்கியமான காரணமாகத்தான் சொல்லுகிறேன்!'' தேன் சொட்டும் குரலிற் கெஞ்சினுன் கோபாலன்.

''என்னை ஏமாற்றினீர்களோ அப்புறம் யுக யுகத்துக்கும் உங்களிடம் பேசவேமாட்டேன்!'' என்று கூறிவிட்டுக் கண்களை இறுக மூடிக்கொண்டாள் தேவி - ஆனுல் பகவானின் கைகளை மட்டும் விடவில்லை,

4

படார் படாரென்று பட்டாசுகளின் சப்தம் விதம்விதமான பூமத்தாப்புக்களின் வர்ண வெளிச்சங்கள். குழந்தைகளின் சந்தோஷக் கூச்சல்கள்.

''மன்னி!-- மன்னி — கண்களைத் திறந்து பார்! - - ஒரேயடியாக தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாயோ!-- நின்றுகொண்டே இவ்வளவு நன்ருக உனக்குத் தூங்கத் தெரியுமென்று அண்ணு எனக்குச் சொல்லவேயில்லையே!''

மதுரமான இம்மொழிகளைத் தொடர்ந்து இரண்டு மென்மையான கரங்கள் ராதையின் தோளைத் தொட்டு உலுப்பின.

திடுக்கிட்டுக் கண்களைத் திறந்த தேவி தன்னெதிரேயிருந்த காட்சியைக் கண்டதும் அப்படியே ஆச்சர்யத்தில் முழுகிப் போனாள் பொன்னும் மணியுமாக இழைத்து, விதம் விதமான வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டத் தேஜோமயமான ஓர் அரண்மனை அதன் நடுவே அழகான பளிங்குக் கூடம் அதன் புறத்தில் மெத்தென்று கால்புதைந்த இரத்தின கம்பளத்தின்மேல் நின்றுகொண்டிருந்தாள் அவள். எதிரே நின்றிருந்த கண்ணன் அவளைக் குறும்புச் சிரிப்புடன் நோக்கினான்.- அவன் பக்கத்தில் நின்றிருந்தாள் மன மோகன சௌந்தர்யவதியான ஒரு பாவை.- சுடர்தெறிக்கும் கரியவிழிகளும், அலைபடிந்த கரிய கூந்தலும், முத்துப் பல்வரிசையும் பவளவிதழ்களும், --- ஆகா! --- என்ன கண் கொள்ளாத வனப்பு? என்று ஆச்சரியப் பட்டாள் ராதை. - -

யாரோ முன்பின்னறியாத ஓர் இளம் பெண்ணின்முன்னால், இன்னமும் கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கிறோமே, என்ற எண்ணம் உண்டானவுடன் வெட்கம் வந்து கவிந்துகொண்டது அவளை. சட்டென்று கோபாலனின் கையை விட்டுவிட்டாள்.--

"ராதே! --- இவள் தான் என் தங்கை மாயா!" --- என்று புன்னகையுடன் தன் பக்கத்தில் நின்ற பொற்பாவையைத் தேவிக்கு அறிமுகப் படுத்தினான்.---

"மன்னீ!---இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது உன்னை இங்கு அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்று அண்ணாவுக்குத் தோன்றியதே! பலராம அண்ணாவும் ரேவதி மன்னியும்கூட இங்கு நாலைந்து தடவை வந்துள்ளார்கள்!--சின்ன அண்ணாவும் நீயும் தாம் ஒருதரம் கூட வந்ததேயில்லை!" என்று மகிழ்ச்சியுடன் ராதையைத் தழுவிக் கொண்டாள் மாயை.

இவ்வளவு அன்பான நாத்தனாரைப்பற்றித் தன்னிடம் இதுவரையில் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமலிருந்த கண்ணனிடம் மீண்டும் கோபம் பொங்கி வந்தது ராதைக்கு.---? உடம்பெல்லாம் கபடம்,- மனமும் கபடம்,' என மனதுக்குள்ளேயே கோபப் பட்டுக்கொண்டாள்:---ஆனால் ஒன்றும் வெளியிற் சொல்லவில்லை." வா! மன்னீ!- இந்த அரண்மனையெல்லாம் உனக்குச் சுற்றிக் காட்டுகிறேன்!" என்று ராதையைக் கையைப் பிடித்து அழைத்தாள் மாயா.--- கண்ணனைத் திரும்பிப் பார்த்தாள் அவன்.

"நான் வரவேண்டாமா"? என்று கேட்டான் அவன்.

"வேண்டாம் அண்ணா!- இத்தனை காலத்துக்குப் பிறகு மன்னியை இப்பொழுதுதான் முதல் முதலாகப் பார்க்கிறேன். - அவளிடம் எனக்கு எத்தனையோ விஷயங்கள் பேசணும்! நீ கூடவே வந்தால் சரிப்படாது,--" என்று கண்களைச் சிமிட்டியபடியே கண்டிப்பாய் மறுத்துவிட்ட மாயா அத்துடன் நில்லாமல் ராதையை அழைத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டாள். - - ஏமாற்றத்துடன் தங்களிருவரையும் பார்த்துக்கொண்டே நின்ற கண்ணனின் தோற்றம் ராதைக்குச் சிரிப்பையுண்டாக்கியது. -- ஆயினும் அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு நாத்தனார் பின்னால் நடந்தாள்.

விசாலமான பல அறைகள், பளிங்கு மாடங்கள் தங்கமும், வெள்ளியும் தந்தமுமாய் அங்கெல்லாம் நிரம்பிய விலையுயர்ந்த சாமான்கள், இதையெல்லாம பார்த்துக் கொண்டே போன ராதை, ஆச்சரியத்தினால் வாயடைத்துப்போனாள். - - கடைசியில் காலெல்லாம் அயர்ந்து போன நிலையில் அங்கு காணப்பட்ட தங்க ஊஞ்சலில் உட்கார்ந்து கால்களைப் பிடித்துக்கொண்டாள்.

"ஏன் மன்னி?-- கால் கடுக்கிறதா?-- நான் தடவிக் கொடுக்கட்டுமா"? என்று மாயா அன்புடன் கேட்டபொழுது வெட்கத்துடன் கால்களை பின்னுக்கு இழுத்துக்கொண்டாள்.

"இல்லையில்லை;-- சற்று நேரத்தில் சரியாகிவிடும்", என்று பதில் கூறிவிட்டு நெடுநேரமாகத் தன் மனதைக் குடைந்து கொண்டிருந்த விஷயத்தை அவளிடம் கேட்பதா, வேண்டாமா, என யோசித்தாள் ராதை. கடைசியில் கேட்கத் துணிந்துவிட்டாள்.

"மாயா!- உன்னை ஒரு விஷயம் கேட்கணும்!-- நீ கோபித்துக்கொள்ளமாட்டாயே!"

"கோபமென்ன, மன்னீ? தாராளமாகக் கேளு!--" என்று அவளை அன்புடன் தழுவிக் கொண்டாள் மாயை.

"இவ்வளவு பெரிய அரண்மனையில் உன்னைத்தவிர வேறு யாரையுமே காணோமே!-- உன் கணவர் யார்?---அவரெங்கே?--உனக்குக் குழந்தைகளில்லையா?--- பணியாட்கள் கூட இங்கு ஒருவரையும் காணோமே"

"ஐயோ, என் சாது மன்னியே! இது கூட உனக்குத் தெரியாதா இன்னும்? எனக்குக் கல்யாணமே ஆகவில்லையே!- இதற்குள் குழந்தைகளுக்குப் போய்விட்டாயே!- அண்ணா உன்னிடம் நம் குடும்ப விஷயமாக ஒன்றுமே சொல்லவில்லையா?" என்று மாயா கேட்டாள்.

கணவன் பேரில் மீண்டும் கோபம் கோப மாக வந்தது ராதைக்கு.- ஆனால்தன்னுடைய வழக்கப்பிரகாரம் அதை மனதிற்குள்ளேயே அடக்கிக் கொண்டு மேலுக்குக் காட்டிக் கொடுக்காமற் பேசினாள்.

“நன்றாயிருக்கு! எல்லோரைப்பற்றியும் நிறையச் சொல்லியிருக்கிறார்! சுபத்திரை அக்காவைப்பற்றி ரொம்பத் தெரியும்! அவர் கள் விட்டுக்குக் கூட எத்தனையோ தடவை அழைத்தும் போயிருக்கிறார்! அபிமன்யு கல்யாணத்துக்குப் பிள்ளையாத்துச் சம்பந்தி யாகத் தான் நான் போனேன்! ரேவதி மன்னிக்குக்கூட அதில் ஒரே கோபம்; வத்ஸலா வுக்காக இரண்டாம் நாள் கல்யாணத்துக்கு மட்டும் அவர்கள வீட்டிலேயே இருந்தேன்!” என்று பெருமையாகச் சொல்லி, அதிருக் கட்டும்! இங்கு நீ ஏன் இப்படி தனியாயிருக் கிறாய்? துணைக்குக் கூட யாருமில்லையே!” என்று கேட்டாள்.

பெருமூச்சு ஒன்று விட்டாள் மாயா. அவள் கண்களில் சோகம் தேங்கியது. “அதையேன் கேட்கிறாய், மன்னி? என் தலையெழுத்து! என்றைக்கும் நான் தனியாகத்தான் வாழ வேண்டும்!”

இதைக் கேட்ட ராதைக்கு சந்தேகம் ஒன்று தோன்றியது.

“இவ்வளவு அழகும் செல்வமுமிருக்கும் இவளுக்கு ஏன் கல்யாணம் ஆகவில்லை? ஒரு வேளை யாரையாவது காதலித்து, சே, சே, இராது! யாராவது ரிஷியின் வாயால் கன்னிகையாகவே இருக்குமாறு சாபம் கிடைத்திருக்குமோ? அப்படித்தானிருக்க வும், துர்வாசரோ, விசுவாமித்திரரோ? அவர்களுக்கு இதுதானே வேலை! அழகா யிருக்கும் பெண்களைக் கண்டால் சாபம் கொடுத்தாலொழிய அவர்களுக்குத் தபசு ஓடாதே!” என்று எண்ணமிட்டாள்.

ஆனால் அவள் பேசவாயெடுக்கு முன்பு வெளியே டுமீல், டுமீல், என்ற சத்தம் பளீர் பளீரென்று மின்னல் போன்ற வெளிச்சம் தோன்றி மறைந்தது. திடுக்கிட்டு எழுந்தாள் ராதை. “மாயா! அதென்ன சப்தம்?”

“ஒன்றுமில்லை, மன்னி-இந்திரப் பிரஸ்தத் தில் தீபாவளி கொண்டாடுகிறார்கள்!”

“அப்படியென்றால்?”

அவளை அனுதாபத்துடன் நோக்கினாள் மாயா.

“வா! காட்டுகிறேன்!” என்று எழுந்தாள்- அவளுடன் அவளைத் தொடர்ந்தாள் தேவி.

5

பளீர் பளீரென்ற மின்னலின் நடுவே தோன்றியது ஒரு ரதம். அதில் யார்? வில்லும் அம்புமாக நின்றான் கண்ணன். அவன் பக்கத்தில் கண்ணைப்பறிக்கும ஒரு கட்டழகி ராதையின் மனதில் லேசாக ஆத்திரம்தோன்றியது. “அப்படியா சேதி?” என்றெண்ணிக் கொண்டாள்.

“மாயா! யார் அந்தப்பெண்?” என்று கேட்டாள் மெதுவாக.

“பாமா மன்னி, சத்தியபாமையென்று சொல்லுவார்கள்; பேசாமல் என்ன நடக் கிறது பார்!” என அவள் காதிற் சொன்னாள் மாயா.

“ஐயோ, யார் அந்தக் கோரப்பிராணி?”

“உஸ் பேசாதே! அவன்தான் நரகாசுரன்! யுத்தம் நடக்கிறது பார்!”

மூச்சைப் பிடித்துக்கொண்டு கவனித்தாள் ராதை.

வில்லினின்றும் சர்சர்ரென்று கிளம்பிய அம்புகள் டங்டங்கென்ற சப்தத்துடன் அவன்மீது மோதிப் பாய்ந்தன. தன் கோரப் பற்களைக் காட்டியபடியே அலட்சிய மாக நின்றான் அந்த அரக்கன்.

கண்ணன்! ஐயோ! கண்ணனுக்கென்ன வந்தது? இதென்ன? மயக்கம் வந்துவிட் டதா? இல்லவேயில்லை! கண்ணன்! என் கண்ணன்! ஐயோ! ரதத்தில் சாய்கிறானே! இறந்துவிட்டானா? கண்ணா! கண்ணா!

அலறிக்கொண்டு முன்னால் பாய்ந்தாள் ராதை.

அவளை இமைக்குள் தடுத்து நிறுத்தி அணைத்துக்கொண்டாள் மாயா.

“சும்மாயிரு மன்னி! மேலே நடப்பதைக் கவனி!

ராதை நகரமுடியாமல் தன் செயலற்று அங்கே நின்று விட்டாள்! அவள் விழிகள் அகலவிரிந்தன.

கண்ணனைத் தாங்கி ரதத்திற் படுக்க வைத்துவிட்டு அம்பையும் வில்லையும் ஏந்திக் கொண்டு கீழே குதித்தாள் அந்த அழகி. மின்னல் போற் பாய்ந்த அம்பொன்று அவ ளுடைய வில்லினின்றும் விடுபட்டு அரக்கன் மார்பில்தைத்தது.

ஓவென்றலறிக் கீழே விழுந்தான் அவன்!

அடுத்த வினாடி, ஐய்யையோ! சத்திய பாமாவுக்கென்ன பைத்தியமா? அரக்கனை மடியில் போட்டுக் கொண்டு எதற்காக அழு கிறாள்? இதென்ன மந்திரமா? மாயமா?

“மாயா! மாயா! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! எல்லாம் ஒரே திகிலும் குழப்பமுமாயிருக்கிறது! வா! இங்கிருந்து போய்விடுவோம்! என்னவோ இந்திரஜாலம் போல் இருக்கிறது! உன் அண்ணாவிடம் போய்விடுவோம்! என்று உடலெல்லாம் பீதியால் நடுங்கக் கூறினாள் ராதை.

"இதெல்லாம் எப்பொழுதோ நடந்தவைகள், மன்னி! உனக்காகத் திரும்பவும் காண்பிக்கப்பட்ட நிழல் தோற்றங்கள்! பயப்படாமல் பார்!" என்று புன்சிரிப்புடன் அவளை அணைத்துக்கொண்டாள் மாயை. கண்களைத் துடைத்துக்கொண்டு மீண்டும் கவனித்தாள் ராதை. சந்தேகமேயில்லை! இது இந்திரஜாலம்தான்! சத்தியபாமாவின் மடியில் அரக்கனைக் காணவில்லை! அதற்கு மாருக அழகே வடிவான குழந்தையொன்று பவழக்கனிபோன்ற தனது வாய்திறந்து பேசுகிறது.!

"சத்தியம் செய்து கொடுப்பாயா, அம்மா?

"ஆகட்டும் கண்ணே! வருடமொருமுறை நீ மாய்ந்த தினத்தை உலகமக்கள் உன் நினைவாகக் கொண்டாடுவார்கள்! அது தீபாவளி என்று பெயர் பெறும்" என்று கையடித்துக் கொடுத்தாள் ஸத்தியபாமா.

கண்ணன் ரதத்திலிருந்திறங்கி மெதுவாக அண்டையில் வந்தான். பாமாவின் மடியிலிருந்த குழந்தையை வாரி மார்போடணைத்துக்கொண்டான். அடுத்த விநாடி அங்கு யாருமேயில்லை!

மீண்டும் பட்டாசுகள், வாணங்கள் இவற்றின் சத்தம் ஆகாயத்தைப் பிளந்து சென்றது.

6

"என்ன ராதே! அரண்மனையைச் சுற்றிப் பார்த்தாயா? மாயையின் இருப்பிடம் உனக்குப் பிடித்ததா? என்று மனதிற்குள்ளேயே சிரித்தபடி கேட்டான் கிருஷ்ணன்.

"மன்னி ரொம்பப் பயந்துபோய் விட்டாள், பாவம்! என்றாள் மாயா. "ஏன்? அப்படி அவள் பயப்படும்படியாக நீ அவளுக்கு எதைக் காண்பித்தாய்?

"ஒன்றுமில்லை அண்ணா! தீபாவளியென்றால் என்னவென்று கேட்டாள்; காண்பித்துக் கொடுத்தேன்! ஒரேயடியாகப் பயந்துபோய் விட்டாள்! என்று ராதையைத் திரும்பிப் பார்த்தாள் மாயா.

"இவ்வளவுதானே! இதற்கா பயம்-- என்று கிருஷ்ணன் கேட்டதும், வெட்கத்துடன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டாள் தேவி.

"திரும்பலாமா? நேரமாச்சே!

"என்ன அண்ணா? இந்தத் தீபாவளி விருந்து இங்கே தான் சாப்பிடணும்! நான் உங்களை விடவேமாட்டேன்!"

"இல்லையம்மா! அங்கே வைகுண்டத்தில் எல்லாரும் காத்துக் கொண்டிருப்பார்கள்! ராதையில்லாமல் தனியாக ருக்மணியால் ஒன்றுமே முடியாது திணறிப்போய்விடுவாள்! அடுத்த தீபாவளி உன்னுடன்தான்!"

உண்மையாகவா அண்ணா? அப்புறம் வார்த்தை பிசகக்கூடாது! பாமா மன்னி, ருக்மணி மன்னி, ராதா மன்னி, குழந்தைகள், எல்லாருடனும் வரணும்!"

"ஆகட்டும் அம்மா! கண்டிப்பாக வருவேன்?"

தேவி, அவ்விருவரையும் அதிசயத்துடன் மாறிமாறிப் பார்த்தாள். அவளுக்கு எல்லாமே ஒரு கனவு போல் ஆச்சர்யமாயிருந்தது.

"போய் வருகிறாயா மன்னி?" என்று கண் கலங்கக் கேட்டாள மாயா.

ராதையின் விழிகளிலும் நீர் தளும்பியது,

கண்களைக் கொட்டிக்கொண்டாள்.

பழைய அந்தச் சிறு கோயிலெதிரில் இருவரும் நின்றுகொண்டிருந்தார்கள். சற்று தூரத்தில் நின்றது அவர்கள் ஏறிவந்த ரதம், அரண்மனை, உத்தியானவனம், மாயா எல்லாம் மறைந்துவிட்டன. ராதை நாற்புறமும் குழப்பத்துடன் பார்த்தாள.

"ராதே!" என்று அன்புடன் அழைத்தான் கோபாலன்

"என் தங்கையான இந்த மாயையின் சக்தியால்தான் அண்ட சராசரங்களெல்லாம் இயங்குகின்றன. அவள் மூலமாகத்தான் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரமாகிய முத்தொழிலையும் நான் செய்து வருகிறேன்! அவளில்லாவிட்டால் இவ்வுலகம் உயிரும் பசுமையுமின்றி, வெறும் பாலைவனமாகிவிடும். அவள் தான் சக்தி, மாயை, நான் நீ, எல்லாம்! அப்படிப்பட்ட இயற்கைச் சக்தியான அவளை, எனக்காகத் தன்னையே தியாகம் செய்ய முன்வந்த அவளை, என்னுள்ளேயே ஒன்றிவிட்ட அவளை, உலக மக்கள மறந்து விட்டனர்! அவளுக்காக, அவளுடைய ஞாபகத்துக்காக, எந்த பக்தனும், ஒரு சிறு மண்டபம்கூடக் கட்டிவைக்கவில்லை! ஆனால், அந்தப் புனித கைங்கர்யத்தை ஒரேயொருவன் மட்டும் செய்தான். அவன் தான் தர்மபுத்திரனாகிய யுதிஷ்டிரன்! குருக்ஷேத்திர யுத்தம் முடிந்தவுடன், யோகமாயையாகிய என் தங்கைக்கு, இந்த இடத்தில் ஒரு கோயில் கட்டி வைத்தான்; ஆனால் அவளுடைய உருவத்தை யாருமே கண்டதில்லையாகையால் அவளைப் போன்ற ஒரு சிலையோ, பிரதிமையோ செய்ய அவனால் இயலவில்லை, ஆகவே அவள் பெயர் கொண்ட பீடம் மட்டும் ஒன்று இக்கோயிலில் இருக்கிறது! அதைத் தான் மக்கள் வழிபட்டு வருகிறார்கள்! பரத கண்டத்திலேயே அவளுக்கென இந்த ஒரு கோயில் தான் இருக்கிறது; தன்னை மறந்துவிட்ட ஜனங்களெதிரில் வரவே பிடிக்காமையினால்தான் அவள் இவ்வாறு ஒருவருடைய தொடர்புமின்றி, மறைந்திருந்து, தன் சக்தியினால் உலகையெல்லாம்

இயக்கி வருகிறான்!" என்று கூறி முடித்தான் கண்ணன்.

அதிசயத்துடன் அவனைக் கவனித்த ராதைக்குச் சட்டென்று ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

"என்ன இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு கபடம் கூடாது! தீபாவளியென்று சொன்னீர்களே! முதல்முதலாக நாத்தனாரைப் பார்க்க வரும்பொழுது வெறுங்கையுடனா வருவது? புறப்படு முன்பு சொல்லியிருந்தால் ஒரு புடவை ரவிக்கையாவது கொண்டு வந்திருப்பேனே! எனக்கு எவ்வளவு அவமானமாயிருந்தது, தெரியுமா?" என்று கிருஷ்ணனைக் கடிந்துகொண்டாள்.

"ஆமாம், ராதே! எனக்கு அந்த யோசனையே தோன்றவில்லை!"

"எப்படி தோன்றும்? யாராவது அழகான பெண்களைக் கண்டால் மட்டும் உடனே மனைவியாக்கிக் கொள்ளவேண்டுமென்று தோன்றும்! வேறொன்றும் உங்களுக்குத் தோன்றாது!" என்று சத்தியபாமையை நினைவு படுத்திக்கொண்டு ஆத்திரத்துடன் சொன்னாள் தேவி.

"எப்பொழுதோ நடந்துபோனதையெல்லாம் பற்றி இப்பொழுது எதற்குப் பேசணும்? வா போவோம்! நேரமாகிறது!" என்றபடி அவளைக் கையைப் பிடித்து ரதத்தை நோக்கி அழைத்துச் சென்றான் கண்ணன். ரதம் ஆகாயமார்க்கத்திற் சென்றது.

ராதை கீழே குனிந்து பார்த்தாள். இந்திரப்பிரஸ்தவாசிகள் பட்டாசுகளுடனும் மத்தாப்புகளுடனும் கோலாகலமாய்த் தீபாவளி கொண்டாடிக்கொண்டிருந்தனர்.

டபார் டபாரென்று பட்டாசுகள் வெடித்தன. புஸ் புஸ்ஸென்று வாணங்கள் ஆகாயத்தில் எழும்பின.

"ராதே!" என்றான் கண்ணன். மெல்ல அவள் கரத்தைப் பற்றினான்.

"கையை விடுங்கள்! தேவலோக வாசிகள் யாராவது பார்த்து வைக்கப் போகிறார்கள்! வெட்கக்கேடு!" என்று லஜ்ஜையுடன் கையைப் பின்னுக்கிழுத்துக்கொண்டாள் தேவி.

"பார்க்கட்டுமே!" என்ற கண்ணன் மீண்டும் அவள் கரத்தைப் பற்றினான். நாணத்தின் செம்மை படர, முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள் அவன் நாயகி. தூரத்தே பட்டாசுகள் வெடித்தன. மத்தாப்புக்கள் ஒளிவீசின. ★



மின்னல் வேகமும், அவசரமும் மிகுந்த இக்காலத்தில் விபத்துக்கள் எப்பொழுது, எங்கு, ஏற்படுமென்பதை யாரும் அறிய இயலாது!

எனினும் சகலவிதமான விபத்தினின்றும் பாதுகாப்பாக இன்ஷ்யூர் செய்து கொள்ளலாமென்பதை ஒவ்வொருவரும் அறிவதவசியம்.

ரூ. 5,000/-க்கு இன்ஷ்யூர்ன்ஸ் செய்து கொள்ள வருடாந்தர பிரீமியம் ரூ. 12-50 தான்.

விபரங்களுக்கு:

இந்தியன் மியூச்சுவல் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் சொசைட்டி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

35, மௌண்டு ரோடு, மதராஸ் — 2.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் புக்டிப்போ

புத்தக வியாபாரம்

சென்னை ◆ மதுரை ◆ திருநெல்வேலி

ஆங்கில ஆசான் அல்லது **ஆங்கில போதினி**

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் உபாத்தியாயர் இல்லாமல் 60 நாளில சுலபமாய் இங்கிலீஷ் பாஷையைக கற்றுக் கொள்ளலாம், 850 பக்கங்கள் விலை ரூ. 5—0—0.

தமிழ் தெரிந்தவர்கள் ஹிந்தியைக் இலகுவில் கற்றுக் கொள்ளலாம். **ஹிந்தி தமிழ் ஆசான்** 3-0-0

EXCELSIOR School DICTIONARY—English to English & Tamil—JUNIOR—Rs. 5—0—0
" " —SENIOR—Rs. 10—0—0

வியாசபாரத வசன சங்கிரகம்	விலை ரூ.	3—0—0
திருப்புகழ் பாகம் I—642 பாடல்கள் குறிப்புரையுடன்	,, ரூ.	5—0—0
ஷை பாகம் II—614 ஷை	,, ரூ.	5—0—0
நளவெண்பா மூலமும் விருத்தி உரையும்	,, ரூ.	5—0—0

மதுரைத் தமிழ்ப் பேரகராதி (புதிய பதிப்பு)

பல்லாயிரக்கணக்கான புதிய சொற்களுடன் 2 வால்யூம்கள் விலை ரூ. 25—0—0

N B.:—இன்னும் லைப்ரேரிகளுக்கு வேண்டிய புத்தகங்கள் கிடைக்கும.

இ. மா. கோபாலகிருஷ்ண கோன் புக் டெப்போ

புரொப்ரைட்டர்

E S. ராதாகிருஷ்ண கோன்

37, வடக்கு சித்திரை தெரு, :: மதுரை.

பிரியதர்சினிக்கு

வளவன்

தங்கத்தில் உருக்கி உருட்டி அழகாய், வனப்பாய், நளினமாய், வார்த்தெடுத்தவை போன்று அந்த ஐந்து விரல்கள் அவன் முன் நீண்டன. விரல்களின் உச்சி முதுகில் இரத்தப் பூக்களின் ஐந்து அரும்புகளா அவை? அல்ல, கள்ளிப்பழத்தின் சிவப்பு நிறம் மினுமினுக்க நகங்களுக்கு அளவாகச் சாயம் தீட்டியிருந்தாள் அந்தப் பெண். அந்த விரல்களில் நடுவான விரலில் வைரப் புழு ஒன்று வளைத்துச் சுருட்டிக் கொண்டு கிடப்பது போல் ஒரு சிறிய மோதிரம். மோதிரத்தின் ஒளிச் சிதறல்கள் விரலிடுக்குகளில் வெண்ணிழல் பரப்பின. நாட்டியத்திற்கு முத்திரைபிடித்துக் காட்டுவதுபோல் நீண்டு குவிந்த அந்த விரல்களின் நுனியில் சதுரமாக மடிக்கப்பெற்ற ஒரு வெள்ளைக் காகிதம் பிடிபட்டு நின்றது.

கண்ணன் தலையை நிமிரவே இல்லை. அவனுக்கு அப்போது ஏற்பட்ட கூச்சத்தையும், வெட்கத்தையும் வார்த்தைகளால் எழுதுவதற்குஇயலாது. 'அந்தக் கடிதத்தைக் கையில் வாங்கிக்கொள்ளலாமா? கவனிக்காததுபோல் பேசாமல் இருந்து விடலாமா?'—என்று அவன் மனத்தில் ஒரு சிறிய போராட்டம் எழுந்தது கிணின், கிணின், என்று வளைகள் குலுங்கும் அந்த அழகிய கை அவனுக்கு முன் நீண்ட நிலையிலேயே அப்படியே இன்னும் இருந்தது. உயர்ந்தரக முகப்பவுடர், கூந்தல் தைலம், குடைமல்லிகைப் பூ — மூன்றும் விரவிய ஒரு வாசனையைக் கண்ணனின் மூக்கு மிக அருகில் உணர்ந்தது. அவனுக்குச் சட்டைக்குள்ளேயுள்ள பனியன் நனைந்துபோய் உடம்போடு ஒட்டிக் கொள்ளுகிறாற்போல் வியர்த்துக் கொட்டியது. குனிந்த தலையை நிமிராமலே அறைக்குள் தன்னைச் சுற்றிலும் வேறு யார், யார், உட்கார்ந்திருக்கிறார்கள் என்று பயத்தோடும், கூச்சத்தோடும், ஓரக்கண்களால் பார்த்தான் கண்ணன்.

கணிதப் பேராசிரியர் சாமிநாதன், தமிழ்ப் பேராசியர் திருவேங்கடனார், — முதலிய வய

ஒரு வார்த்தை

மூதிர்ந்த பெரிய ஆசிரியர்களெல்லோரும் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். "சை! என்ன



பெண் இவள்? இவர்களெல்லோரும் சூழ உட்கார்ந்திருக்கும்போது இப்படித் திடுதிப்பென்று வந்து நின்றுகொண்டு கடிதத்தை மடித்து நீட்டினால் எத்தனை சந்தேகங்களுக்கு இடம் உண்டாகும்? இத்தனை பேருமாகச் சேர்ந்துகொண்டு இந்தப் பெண்ணையும், என்னையும் இணைத்து ஏதாவது கதை கட்டிவிட ஆரம்பித்துவிடுவார்களே!" — என்று தன் மனதுக்குள் நினைத்தான் அவன். துணிவை வரவழைத்துக்கொண்டு தலை நிமிர்ந்து அந்தக் கையின் சொந்தக்காரியைப் பார்த்தான் கண்ணன். நிர்மலமாக, அழகாகக் களங்கமற்றுச் சிரித்துக் கொண்டு அவனெதிரே நின்றாள் அந்தப் பெண். ஒரு நாளைப்போல் தவறாமல் இப்படியே செய்கிறாள் அவள்.

"சார்! இந்தக் கடிதத்தை வாங்கிக் கொள்ளுங்கள்." —பாலொடு தேன் கலந்தாற்போல் எவ்வளவு இனிமையான குரல் அவளுக்கு! அப்போது தனக்கிருந்த கூச்சத்திலும், பதற்றத்திலும், அந்தக் கடிதத்தை அவள் கையிலிருந்து நேரே வாங்கிக் கொண்டால் என்ன ஆகுமோ என்று உள்ளூரப் பயம் அவனுக்கு.

"இப்படி வை; நான் எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று மேஜையைச் சுட்டிக்காட்டினான் கண்ணன். குறுகுறுப்பான கண்களால் அவனை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு மெல்லச் சிரித்துக் கொண்டே கடிதத்தை மேஜைமேல் வைத்து விட்டுப் போனாள் அந்தப் பெண். வயதும், பொறுப்பும், அதிகமான பெரிய ஆசிரியர்கள் தன்னைச் சுற்றி உட்கார்ந்திருக்கும் போது ஓர் இளம் பெண் தன்னைத் தேடிக்கொண்டு வந்து தனக்காக வைத்துவிட்டுப்போன கடிதத்தை எப்படிக் கையில் எடுப்பது என்று தயங்கினான் கண்ணன். அந்த அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் அத்தனை பேருடைய கண்களும் தன்னைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருப்பதாக அவனுக்கு ஒரு பிரமை.

கல்லூரி வகுப்புக்கள் தொடங்குவதற்கு அறிவிப்பாக முதல் மணி அடித்தது. ஆசிரியர்கள் உட்கார்ந்திருந்த அந்த அறையில் உடனே பரபரப்பு உண்டாயிற்று. ஒவ்வொருவராக அவரவர் போக வேண்டிய வகுப்புக்களுக்குக் கிளம்பினர்.

வேண்டா வெறுப்பாக, அருவருப்போடு எடுத்து வைத்துக் கொள்ளுகிறவனைப்போல் பிரித்துப் பார்க்காமலே அந்தக் கடிதத்தை எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு வகுப்பிற்குப் புறப்பட்டான் கண்ணன். அந்தப் பெண் அப்படி வந்து நின்றுகொண்டு கடிதத்தை நீட்டியதால் அவனுக்கு ஏற்பட்ட வருத்தமும் கூச்சமும் பொய்யானது; வெளிப்படையானது. அவன் மனத்தின் அந்தரங்கமான பகுதியைத் திறந்து பார்க்க முடியுமானால் அங்கே மகிழ்ச்சி என்னும் உணர்வு கட்டுக் கடங்காமல் பொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். வனப்பும், இளமையும் செழித்துப் பருவம் மெருகேறி நிற்கும் ஒரு பெண்ணின் கவனத்துக்கு ஆளாவதைப் போல் சிறந்த சந்தர்ப்பம் ஓர் இளைஞனுக்கு வேறு இருக்க முடியுமா? கண்ணன் அந்தக் கல்லூரியில் வேலை பார்க்கும் எல்லா ஆசிரியர்களையும்விட வயதில் இளைஞன். புதிதாக ஒரு மாதத்துக்கு முன்னால்தான் அந்த வேலையில் சேர்ந்திருந்தான். நகரத்திலுள்ள மற்றக் கல்லூரிகளுக்கும், அந்தக் கல்லூரிக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. பெண்கள் மட்டுமே படிக்கும் தனிக் கல்லூரியாகவோ, அல்லது ஆண்கள் மட்டுமே படிக்கும் தனிக் கல்லூரியாகவோ, இல்லாமல் ஆண்களும், பெண்களும், சேர்ந்து படிக்கும் கூட்டுப் படிப்புக் கல்லூரியாக இருந்தது அது.

கண்ணன் அந்தக் கல்லூரியில் வேலைக்குச் சேரப் போகிறானென்று தெரிந்ததுமே பாதி வேடிக்கையாகவும், பாதி உண்மையாகவும் அவனை எச்சரித்துக் கேலி செய்தனர் நண்பர்கள்.

"அடே பழி! நீ எப்படி அங்கே காலங் கடத்தப்போகிறாய்? படுசங்கோஜப் பிராணி ஆயிற்றே நீ; புடவை கட்டின உருவத்தை ஒரு பர்லாங்குக்கு அந்தப் புறம் பார்த்தாலே தலையைக் குனிந்து கொண்டுவிடுவாயே. பெண்கள் உன்னிடம் படித்து உருப்பட்டாற்போல்தான்."— என்றான் ஒரு நண்பன்.

"நினைவிருக்கட்டும் அப்பனே! உன்னைத் தவிர அங்கே பிரின்சிபால் உள்பட அத்தனை ஆசிரியர்களும் ஓய்வு பெறத் தகுதியான அத்தனை வயதானவர்கள். நீ ஒருத்தன்தான் கட்டைப் பிரம்மசாரியாகப் போய் நுழையப் போகிறாய். பேரைக் கெடுத்துக்கொண்டு விடாமல் பார்த்துப் பிழை..." — இது வேறு ஒரு நண்பனின் அறிவுரை.

ஏற்கனவே கூச்சமும், நாணமும், அதிகமுள்ள சங்கோஜியான கண்ணன் மேலே கண்ட மாதிரி நண்பர்களின் அரட்டல்களைக் கேட்டு இன்னும் கலவரமடைந்து போயிருந்தான். அவன் கல்லூரி வேலை ஒப்புக்கொண்ட முதல் நாள் பிரின்ஸிபால் அரைமணி நேரம் அவனைத் தன் அறையில் தனியாக உட்கார்த்திவைத்துக்கொண்டு அறிவுரை கூறினார்.

"மிஸ்டர் கண்ணன்; நீங்கள் சுல்லூரியில் பட்டம்பெற்ற கையோடு ஆசிரியராக வந்திருக்கிறீர்கள். அதோடு மிகவும் இளைஞராக வேறு இருக்கிறீர்கள். என்னுடைய அனுபவத்திலிருந்து சில அறிவுரைகளை நான் உங்களுக்குச் சொல்லுவதற்குக்கடமைப்பட்டிருக்கிறேன். இது பெண்கள் அதிகமாகப் படிக்கும் கல்லூரி. பழிக்கு இடம் ஏற்படாமல் பொறுப்போடு கண்ணியமாக நடந்துகொள்ளுங்கள். உங்கள் பொறுப்பை நன்றாகத் தெரிந்துகொள்ளுவதற்காக இன்னொரு வேலையையும் உங்களிடமே ஒப்படைக்கப்போகிறேன். நம் கல்லூரியில் உள்ள நூல் நிலையத்தில் புத்தகம் எடுத்துப் படிக்க விரும்பும் பெண்கள் அதை உங்கள் மூலமாகக் கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்துவிடப் போகிறேன். நாளையிலிருந்து மாணவிகளுக்கு எந்தெந்தப் புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து வாங்கலாமோ அவற்றை அவர்கள் கேட்கும் போது கொடுத்து வாங்கவேண்டியது உங்கள் பொறுப்பு."—

வகுப்புக்களுக்குள்ளாவது பெண்கள் இருந்த பக்கம் திரும்பிப் பார்க்காமலே பாடத்தை நடத்திவிட்டு வந்துவிடுவான் கண்ணன். ஆனால் அவர்களுக்கு நூல் நிலயத்திலிருந்து புத்தகம் கொடுத்து வாங்குகிற வேலைதான் அவனைப் படாத பாடு படுத்தியது. கூச்சமும், நாணமும், உள்ள அவனை அதிகப் பெண்களோடு நெருங்கிப் பழகியே தீரவேண்டிய அவசியத்துக்கு ஆளாக்கியது அந்தப் பொறுப்பு.

அதுவும் அந்தப் 'பிரியதரிசினி'—என்ற பெண் நாள் தவறாமல், கண்ணனைத் தொல்லைப் படுத்தினாள். இடந்தெரியாமல், சமயந் தெரியாமல், திடீரென்று அவனுக்கு முன்னால் தோன்றி ஒரு கடிதத்தை நீட்டுவாள் அந்தப் பெண். கடிதத்தில் முதல் நாள் படித்த புத்தகத்தைப் பற்றித் தன் விமரிசனத்தை எழுதிவிட்டு அடுத்தாற்போல் தனக்குத் தேவைப்படுகிற புத்தகத்தையும் குறிப்பிட்டுக் கேட்டிருப்பாள் அவள். தன்னுடைய விமரிசனத்தையும், கடிதத்தையும், அவன் விரும்பிப் படிக்கிறானா, இல்லையா,—என்பதைப் பற்றிக் கவலையேபடாமல் தானாக அவன் மேல் ஒருவிதமான சுவாதீனம் கொண்டாடி எழுதிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். நெருக்கமும், உரிமையும் கொண்டாடி அந்தப் பெண் கடிதத்தோடு தன் அருகே வரும்போதெல்லாம் பயமும், மகிழ்ச்சியும் கலந்த ஒரு தயக்கத்துக்கு ஆளானான் கண்ணன்.

'அவள் அப்படிச் செய்யக் கூடாதென்று'— வெளிப்படையாகக் கண்டிக்கவும் அவனுக்குக் கூச்சமாயிருந்தது அவள் அப்படிச் செய்வதை நிறுத்திவிட்டாலும் தான் எதையோ இழந்து விட நேரும் என்றும் அவனுக்குத் தோன்றியது. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் ஒரு நிலை. ஊமைக் கனவின் இனிய சுகம். 'பிரியதரிசினி!' —எவ்வளவு அழகான பெயர். அந்தப் பெயர்த் தொடருக்குக் 'கண்ணுக்கினியவள்' — என்று தமிழில் பொருள். ஆனால் கண்ணுக்கும், மனத்துக்கும், நினைவுக்கும், கனவுக்கும். எல்லாவற்றுக்குமே இனியவளாக இருந்தாள் அந்தப் பெண்ணழகி. உலகத்தின் பழித் தழும்பேறிய பார்வை எப்படி எப்படி விளைவுகளை உண்டாக்குமோ என்று தான் கண்ணன் பயந்தான், கூச்சப்பட்டான்; பதறினான். அவனுடைய நெஞ்சின் அடி மூலையில் பிரியதரிசினியின் நினைவுகள் தென்றல் வீசிக்கொண்டிருந்தன.

"அந்தப் பெண்ணின் பெயரை வாய்விட்டுச் சொல்லிப் பார்த்துக் கொள்ளுவதிலேயே ஒரு வகை இன்பம் இருந்தது. நாவின் நுனியில் கரையும் இனிப்பு மிட்டாயின் இன்பத்தைப் போன்றது அது. அவளுடைய பெற்றோர்கள் கவிதை உணர்ச்சி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு அழகான பெயர் வைத்திருக்க முடியுமா?"—எனறெல்லாம் உள் மனதில் நினைத்துப் பார்ப்பதுண்டு அவன். நுனியிற் சிறுத்துக் குவிந்து நீண்ட அவள் விரல்கள் கடிதத்தோடு தன் முன் நீள்கிற போதெல்லாம் பயமும், மகிழ்ச்சியும் ஒருங்கு ஏற்படும் அவனுக்கு.

அன்று மாலை அவன் கல்லூரி முடிந்து வீட்டுக்குப் புறப்படும்போது பிரியதரிசினி வந்து சேர்ந்தாள். மறுபடியும் அதே தவற்றைச் செய்தாள் அவள். ஆசிரியர்கள் எல்லோரும் கூட்டமாக

நின்றுகொண்டிருந்த இடத்தில் அவனிடம் வந்து "சார்! நான் காலையில் கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்தீர்களா?"— என்று கேட்டுக் கொண்டு நின்றாள். அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்க்காமலே பைக்குள் போட்டுக்கொண்டது அப்போதுதான் நினைவுக்கு வந்தது அவனுக்கு. மற்ற ஆசிரியர்களெல்லோரும், ஒவ்வொருவராக வீட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தார்கள். "என்ன ஐயா கண்ணன்; பெண்களுக்கென்று தனியாக ஏதாவது தபாலாபீஸ் நடத்துகிறீரா நீர்?"— என்று போகிற போக்கில் சிரித்துக்கொண்டே குத்தலாகக் கேட்டுவிட்டுப் போனார் தமிழ்ப் பேராசிரியர் திருவேங்கடனார். அந்தப் பெண் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் போதே அவர் அப்படிக் கேட்டுவிட்டுப் போனது என்னவோ போலிருந்தது கண்ணனுக்கு.

அவனையும், அந்தப் பெண்ணையும் தவிர வேலோரும் போய்விட்டார்கள். காலையில் அவள் கொடுத்த கடிதத்தைப் பையிலிருந்து எடுத்துப் படித்தான் கண்ணன். முதல் வரியைக்கூட அவள் சரியாகப் படிக்கவில்லை.

"மிஸ்டர் கண்ணன்!"— இப்படி அவனை அழைத்த குரலைக் கேட்டவுடன் பதறியடித்துக் கொண்டு அரைகுறையாகப் படித்த கடிதத்தைப் பின்புறமாக மறைத்தவாறு நிமிர்ந்தான். எதிரே பிரின்சிபால் நின்றுகொண்டிருந்தார். பிரின்சிபாலைக் கண்டதும் அந்தப் பெண் பயபக்தியோடு ஒதுங்கி நின்றுகொண்டாள். பிரின்சிபால் சில விநாடிகள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தார்.

"நீங்கள் இன்னும் வீட்டிற்குப் போகவில்லையா கண்ணன்?"—

"இல்லை சார்;......இந்தப் பெண்ணுக்கு......"—பிரின்சிபாலுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவன் கையில் பின்புறமாக மறைத்து வைத்துக்கொண்டிருந்த கடிதம் காற்றில் படபடத்து நழுவிக் கீழே விழுந்தது.

"அது என்ன கடிதம்?"— பிரின்சிபால் கேட்டார். கண்ணன் தயங்கினான். அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தான் அவள் முகத்தில் கலவரம் தெரிந்தது. சற்றே பயத்தோடு கைகளைப் பிசைந்துகொண்டு நின்றாள் அவள். கண்ணன் அந்தக் கடிதத்தை முழுமையாகப் படிக்கவில்லையானாலும் வழக்கம்போல ஏதாவது புத்தகங்களைப் பற்றித்தான் எழுதியிருப்பாள் என்று அனுமானித்துக்கொண்டான்.

"சார் இது வந்து......வந்து..."— அவன் பதில் சொல்லி முடிப்பதற்குள் பிரின்சிபால் கீழே குனிந்து அந்தக் கடிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டுவிட்டார். கண்ணன் அதை அவர் எடுத்துக் கொண்டதற்காகக் கவலைப்படவில்லை. அந்தமட்டில் அக்கடிதத்தைப் படித்தாலாவது பிரின்சிபால் தன் மேல் சந்தேகப்படாமல் இருப்பார் என்ற நம்மதி அவனுக்கு. ஆனால் அந்தப் பெண் அவர் கடிதத்தை எடுத்துக்கொள்ளுவதைக் கண்டு ஏன் அப்படிக் கலவரமும், பரபரப்பும் அடையவேண்டும் என்று கண்ணனுக்குப் புரியவில்லை. 'என்ன எழுதித்தொலைத்திருக்கிறாளோ'— என்று கண்ணன் மனத்திலும், சந்தேகத்தோடு கூடிய பயம் எழுந்தது. கடிதத்தைப் படிக்கப் படிக்கப் பிரின்சிபாலின் முகத்தில் ஏற்படும் சாயல்களின் கடுமையையும், அதற்கேற்றாற்போல் பிரியதரிசினியின் தலை தாழ்ந்து குற்றம் புரிந்துவிட்ட பாவனையில் கீழ் நோக்குவதையும், கண்ணன் கவனித்தான். அவனுக்கு ஏற்பட்ட சந்தேகம் உறுதியாயிற்று.

பிரின்சிபால் அந்தக் கடிதம் முழுவதையும் படித்துமுடித்துவிட்டுப் பத்திரமாகத் தம் கையி லேயே மடித்துவைத்துக்கொண்டு அவர்கள் இரு வரையும் கடுமையாக நிமிர்ந்துபார்ந்தார்.

" உன் பெயர் என்னம்மா ? " — அவளை நோக்கிக் கேட்டார்.

"பிரியதரிசினி."

" எந்த வகுப்பில் படிக்கிருய் ? "

" பி. ஏ. கடைசி வருஷம்."

" ஓகோ ! ...."— சொல்லிவிட்டு அந்தப் பெண்ணின் முகத்தையே கூர்ந்து பார்த்தார் பிரின்சிபால். அவள் தலையை நிமிரவே இல்லை.

"சரி; இப்போது நீ வீட்டுக்குப் போ. நாளைக்கு உன்னைக் கூப்பிட்டனுப்பும் போது வா ......"— என்று பிரின்சிபால் அவளை அங்கிருந்து அனுப்பி வைத்தார். துவளத் துவள அசைந்து ஒசிந்து ஆடும் உயிருள்ள பூங்கொடி போல் நடந்து சென்று மறைந்தாள் பிரியதரிசினி.

" மிஸ்டர் கண்ணன் ; கொஞ்சம் இப்படி என் ளேடு வாருங்கள்..." — பிரின்சிபால் அவனைத் தன் அறைக்கு அழைத்துக்கொண்டு போனார். அமைதியாகப் பின் தொடர்ந்தான் அவன். " அப்படி உட்காருங்கள் " — தம் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு அவனுக்கு எதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினர் அவர். கண்ணன் உட்கார்ந்தான்.

" கண்ணன் ! உங்களைப்பற்றி நான் மிகவும் கண்ணியமாகவும், கௌரவமாகவும். நினைத் திருந்தேன். என் எண்ணத்தைப் பொய்யாக்கி விட்டீர்கள் நீங்கள."—

அவர் பேச்சைத் தொடங்கிய விதம் அவனைத் திடுக்கிடச் செய்தது. " சார் ! நீங்கள் இவ்வளவு கடுமையாகக் கண்டித்துப் பேசுகிறஅளவுக்கு நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே?"—என்று அவருக்கு அவன் பதில் கூறிய குரல் அழுது விடுவதுபோல் இருந்தது.

"பெற்றோர்கள் தங்கள் பெண்களைப் படிப்ப தற்காக இந்தக் கல்லூரிக்கு அனுப்புகிறார்களே ஒழிய உங்களைப் போன்றவர்கள் கூடஅழைத்துக் கொண்டு சினிமாவுக்கும், நாடகத்துக்கும், சுற்றித் திரிவதற்காக அனுப்பவில்லை!"— என்று சீறினர் பிரின்சிபால்.

"சார், நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே."—

"எல்லாம் இந்தக் கடிதத்தில் இருப்பதைத் தான் சொல்லுகிறேன்."—

"நான் அந்தக் கடிதத்தைப் படிக்கவே இல்லை. அதில் அந்தப் பெண் என்ன எழுதியிருக்கிரு ளென்றும் எனக்குத் தெரியாது. வழக்கமாக அந்தப் பெண் 'லைப்ரரி புத்தகத்துக்காகக் கடிதம் கொடுப்பாள். அப்படித்தான் இதுவும் இருக் கும் என்று நினைத்துக் கொண்டு வாங்கினேன்."

"யாரிடம் பொய் சொல்லுகிறீர்கள்? 'நேற்று நீங்கள் கூப்பிட்டதற் கிணங்கித்' தான் சினிமா வுக்கு வருவதாக இந்தக் கடிதத்தில் தெளிவாக அவள் பதில் எழுதியிருக்கிருளே ஐயா! எவ்வளவு துணிச்சல் உங்களுக்கு? கல்லூரியின் நல்ல பெயரே உங்களால் குட்டிச் சுவராகிவிடும்போ லிருக்கிறதே!"— என்று இரைந்தார் பிரின்சி பால்.

" சார்! அந்தக் கடிதத்தை இப்படிக் கொடுங் கள். நான் படித்துப் பார்த்து விடுகிறேன்."—

பிரின்சிபால் கடிதத்தை அவன் முன்னுல் விட்டெறிந்தார். அவன் ஆத்திரத் தோடும், ஆவலோடும், அதை எடுத்துப் படித்தான்.

"அன்புள்ள கண்ணு; உன் விருப்பப்படியே நாமிருவரும் இன்று மாலை சினிமாவுக்குப் போக லாம. நாலே முக்கால் மணிக்கு ஹாஸ்டல் வாச லில் நான் உன்னை வந்து சந்திக்கிறேன். போகிற வழியில் கடையில் எனக்குக் கொஞ்சம் டாய்லெட் சாமான்கள் வாங்கவேண்டும். வாங் கிக் கொண்டு அப்படியே போய்விடலாம். அதிக நேரமாகிவிட்டால் வீட்டுக்குத் திரும்பமுடியாது. ஹாஸ்டலில் ரூமில் உன்னுடனேயே தங்கி விடுகிறேன்.

இப்படிக்கு உன் அன்புள்ள

பிரியதரிசினி"

என்று தெளிவாக இருந்தது அந்தக் கடிதம். கண்ணனுக்கு உள்ளம் கொதித்தது. உடம்பு பயத்தால நடுங்கியது. எவ்வளவு சுவாதீனமாகக் 'கண்ணு' - என்று ஒருமையில் அழைத்து 'நீ, உனனை,' என்று எழுதியிருக்கிருளே! 'உன் விருப்பப்படியே சினிமாவுக்குப் போகலாம்'- என்று எவ்வளவு துணிச்சலாக எழுதியிருக்கிருள்? நான் எப்போது இவளிடம் சினிமாவுக்குப் போக வேண்டுமென்று குறைப்பட்டுக்கொண்டேன்? பெரிய அநியாயமாகவல்லவா இருக்கிறது? என்னை வம்பில் மாட்டிவைத்துக் காட்டிக் கொடுத்துக் கெட்ட பெயருண்டாக்கவேண்டு மென்று சதித் திட்டம் போட்டுக்கொண்டுதான் இப்படி ஒரு போலிக் கடிதத்தைத் தயாரிததிருக் கிருள்போலிருக்கிறது. ஏமாந்துபோய் வகை யாக மாட்டிக்கொண்டுவிட்டேனே! நான் காலை யிலேயே இந்தக் கடிதத்தைக் கையில் வாங்கிக் கொண்டிருக்கக் கூடாது! முட்டாள்தனமாக அத்தனைபேர் முன்னிலையில் கடிதத்தை வாங்கி அகப்பட்டுக்கொண்டுவிட்டேன்." என்று உள் ளத்தில் சிந்தனைகளை ஓடவிட்டுக்கொண்டே பிரின்சிபாலுக்கு முன்னுல் திருட்டுவிழி விழித் தான் கண்ணன்.

"என்ன மிஸ்டர் கண்ணன்? இப்போதாவது உங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?"

"சார்! எனக்கு ஒரு பாவமும் தெரியாது. இதில் ஏதோ சூது இருக்கிறது. நேற்று நான்

இந்தப் பெண்ணைப் பார்க்கவுமில்லை; சினிமாவுக்கு வரச்சொல்லிக் கூப்பிடவுமில்லை. வேண்டுமென்றே என்னைக் கெடுக்கும் நோக்கத்தோடு இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது"- இப்படிப் பிரின்சிபாலுக்குப் பதில் சொல்லும்போது கண்ணனுடைய குரலில் ஏறக்குறைய அழுகை கொப்புளித்துக்கொண்டுவந்துவிட்டது.

"கண்ணன்; இந்த மாதிரியெல்லாம் பொய் சொல்லி அழுது என்னை நீங்கள் ஏமாற்றிவிட முடியாது. இங்கு வேலைக்கு வந்த நாளிலிருந்து உங்களை நான் கண்காணித்துக்கொண்டுதான் வருகிறேன். மற்ற ஆசிரியர்களும் உங்களைப் பற்றி என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர் அறைக்குள் நீங்கள் இருக்கும்போது நிமிஷத்துக்கு ஒரு பெண் உங்களைத் தேடிவருகிறாளாம். கடிதங்கள் எழுதிக் கொடுக்கிறார்களாம். லைப்ரரியில் நீங்கள் நின்றுகொண்டிருந்தால் உங்களைச் சுற்றிப் பத்துப் பெண்களாவது கும்மாளமடிக்கிறார்களாம, எல்லாம் அடிக்கடி என் காதில் விழுந்துகொண்டுதான் இருக்கிறது."

"சார்; பெண்களின் முகத்தை ஏறிட்டுப்பார்க்கவே கூச்சப்படுகிறவன் நான். என் மேல் அபாண்டமாகப் பழி சுமத்துகிறீர்களே?"- என்று கதறினான் கண்ணன்.

"கூச்சப்படுகிறவர்கள் தான் இது மாதிரி விரைவாகக் கெட்டுப்போவார்கள். உங்களைப் போல் மணமாகாத இளைஞர் இது போன்ற இடங்களில் தூய்மையாகப் பழகத் தெரிந்து கொள்ள வேண்டும்."-

கண்ணனும், பிரின்சிபாலும், இப்படி ஒருவருக்கொருவர் இரைந்துகொண்டிருந்த போது அறைக்கு வெளியே யாரோ வேகமாக நடந்துவரும் காலடியோசை கேட்டது. இருவரும் ஒரே சமயத்தில் அறை வாயிலைப் பார்த்தனர். அங்கே பிரியதரிசினியும், அவளையொத்த வயதில் மற்றொரு இளம் பெண்ணும் நின்றுகொண்டிருந்தனர்.

"சார்! என்னை மன்னிக்கவேண்டும். ஒரு கோளாறு நடந்துவிட்டது."- என்று பதறிக் கொண்டே பிரின்சிபாலை நோக்கிக் கூறினாள் பிரியதரிசினி,

"இப்படி உள்ளே வந்து விவரமாகச் சொல்லு அம்மா!"- என்று பிரின்சிபால் உள்ளே அழைத்தார்.

பிரியதரிசினி தன்னோடு கூட வந்திருந்த பெண்ணையும் கூட்டிக் கொண்டு பிரின்சிபாலுக்கு முன்னால் வந்து நின்றாள். "சார்! இவள் என் பெரியப்பாபெண், 'கண்ணம்மா' என்று பெயர்.

சிறந்த அழகிய
விலை மலிவான
உயர்தரமான
உறுதியுள்ள
சிக்கனமான
எவர்சில்வர் பாத்திரங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

ஸ்ரீசக்தி எவர்சில்வர் ஸ்டோர்ஸ்

உங்கள் வீட்டு
தேவைக்கும் பரிசுகள்
வழங்கவும் இன்றே தாங்கள்
விஜயம் செய்து தேவையானதை
வாங்கி எங்களை ஆதரிக்கக் கோருகிறோம்

பொற்றாமரை வடகரை, கும்பகோணம்.

(ESTD 1924)

Proprietors: **R. S. & SONS**, Brass & Copperware Merchants

Store:
Sri Ramaswami Koil South Street & 99, Big Street
Phone No. 128 & Res. 176 KUMBAKONAM. Telegrams: ARYESSONS

நாங்கள் 'கண்ணு' என்று செல்லமாக அழைப்போம். இவள் இதே ஊரில் வேறொரு பெண்கள் கல்லூரியில் படிக்கிறாள். இவளோடு நான் இன்று சினிமாவுக்கு வருவதாக ஒரு கடிதம் எழுதினேன். அதே சமயத்தில் எனக்கு வேண்டிய லைப்ரரி புத்தகத்தின் பெயர் - எழுதியவர் எல்லாம் குறித்து சாருக்கு ஒரு துண்டுக் காகிதம் எழுதினேன். கடிதங்கள் மாறிவிட்டன, கண்ணம்மாவுக்குக் கொடுத்தனுப்ப வேண்டிய கடிதத்தை சாரிடம் கொடுத்துவிட்டு, சாரிடம் கொடுக்க வேண்டிய லைப்ரரி புத்தகக் குறிப்பைக் கண்ணம்மாவுக்கும் கொடுத்தனுப்பிவிட்டேன். இப்போது கண்ணம்மா வந்து சொன்ன போது தான் எனக்குத் தெரிந்தது"— என்றாள் பிரியதரிசினி. பிரின்சிபாலின் முகத்தில் அசடு வழிந்தது. "இவள் சொல்லுவது உண்மைதானா அம்மா?"— என்று பிரியதர்சினியின் பெரியப்பா பெண்ணைப் பார்த்துக் கேட்டார் பிரின்சிபால்,

"ஆமாம்"— என்று தலையசைத்தாள் அந்தப் பெண், பிரின்சிபால் கண்ணனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். "மிஸ்டர் கண்ணன்! சந்தர்ப்பம் உங்கள் மேல் வீணான சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது. இந்தப் பெண் செய்த அசட்டுத்தனம் உங்களை என் முன் குற்றவாளியாக்கி விட்டது. என்னை மன்னித்துவிடுங்கள்," —என்றார் அவர். கண்ணனுக்குப் போன உயிர் திரும்பிவந்த மாதிரி இருந்தது.

பிரின்சிபாலிடம் விடைபெற்றுக் கொண்டு அந்தப் பெண்களும், கண்ணனும், கல்லூரி வாசலுக்கு வந்தபோது, "பிரியதரிசினி! எனக்கு ஒரு சந்தேகம் உன்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். பிரின்சிபால் என் கையிலிருந்து நழுவிய கடிதத்தை எடுத்தபோது அது நீ எழுதிய 'லைப்ரரி' புத்தகக் குறிப்பு என்று தானே நினைத்துக்கொண்டிருந்தாய்! அப்படியானால் அவர் அதை எடுத்தபோது உன் முகத்தில் ஏன் கலவரமும், பதற்றமும் தோன்றின?"—என்று கேட்டான் கண்ணன். "அதுவா? நான் எழுதியிருந்த அந்தப் புத்தகத்தின் பெயரைப் பார்த்துவிடக்கூடாதே என்ற வெட்கம்தான் காரணம்."— உன்று சொல்லிவிட்டுக் கண்ணனை நோக்கிப் புன்னகை செய்தாள் பிரியதரிசினி கண்ணன் அவளைக் கேட்டான்!

"அப்படி என்ன புத்தகமோ அது?"

"இதோ. நீங்களே படித்துப் பாருங்களேன் சார்? என்று தன் பெரியப்பா பெண்ணிடமிருந்து அந்தத் துண்டுக் காகிதத்தை வாங்கிக் கண்ணனிடம் கொடுத்தான் பிரியதரிசினி. கண்ணன் அதைப் படித்தான்.-

"எனக்கு மிகவும் வேண்டிய மனிதரொருவரைக் கவருவதற்கு என்ன வழி யென்று புரியாமல் திண்டாடுகிறேன். அவர் என் முகத்தை

ஏறிட்டுப் பார்க்கவே கூச்சப்படுகிறார். பெண்ணுக்கு இருக்க வேண்டிய வெட்கமும், கூச்சமும் அந்த அழகிய வாலிபரிடம் இருக்கின்றன. என் மனத்தில் இடம் பெற்றுவிட்ட அவருடைய கவனத்தை எப்படியும் நான் கவர்ந்துதான் ஆகவேண்டும்.

ஆகவே தயவு செய்து பேராசிரியர் ஐங்கணைச் செல்வனார் எழுதிய 'ஆண்களைக் கவருவது எப்படி' என்ற புத்தகத்தை இன்று மாலையில் எனக்குக் கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

பிரியதரிசினி, பி. ஏ., இறுதியாண்டு."

படித்து முடித்ததும் கூச்சமின்றி அவளை ஏறிட்டுப் பார்த்துக் கலகலவென்று சிரித்தான் கண்ணன்.

"பிரிதரிசினி! இந்தப் புத்தகம் உனக்குத் தேவையேயில்லை. இதைப் படிக்காமலே நீ உனக்கு வேண்டியவனின் மனத்தைக் கவர்ந்து கொண்டுவிட்டாய். அந்த 'வேண்டியவனிடம்' இனிமேல் நீ கூச்சத்தையே காணமுடியாது."

"நிஜமாகவா?"— முகம் மலரக் கேட்டாள் அவள்.

"பிரின்சிபால் சாட்சியாக நிஜம்! இன்றைக்கு நாம் ஒரு சினிமாவுக்குப் போகலாம் வா."—என்று நெடுநாள் பழகியவன்போல் கூச்சமின்றி அவளைக் கூப்பிட்டான் கண்ணன். பிரியதரிசினியின் வனப்பு முகம் அழகாக மலர்ந்து சிவந்தது. அவள் செய்த புன்னகை கண்ணனின் கூச்சத்தைக் கரைத்துத் துணிவூட்டிக்கொண்டிருந்தது. ★

திருவனந்தபுரம்

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

பாரதத்தில் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவரும் இடம் காஷ்மீர் என்று சொல்லுகிறார்கள்; இருக்கலாம். ஆனால், மேற்குக் கரையோரமாக ஒருவன் திருவாங்கூருக்கு விஜயம் செய்தால் போதும்! காஷ்மீரில் காண முடியாத எழில் வாய்ந்த இயற்கைக் காட்சிகள், மேகம் தவழும் குன்றுகள், பச்சைப் பசேலென்ற தோட்டம் துரவுகள், பயிர்கள் மலிந்தவயல்கள், பள்ளத்தாக்குகள், அருவிகள், பீடபூமிகள், உப்பங்கழிகள், கடல் அயல் ஏரிகள் இவைகளைக் காணலாம்.

8300 அடி உயரமுள்ள யானை மலையும், 6200 அடி உயரமுள்ள பொதிய மலையும், ஏலக்காய் மலையும் இங்கே வெகு பிரபலமானவை. திருவாங்கூர் காடுகளில் மிகுந்த உபயோகமுள்ள பொருள்கள் கிடைக்கின்றன. இங்கே தேக்கு மரக் காடுகள் விசேஷம். தென்னை, பலா, மிளகு, யானைத் தந்தம், காப்பிக்கொட்டை, தேயிலை, ஏலக்காய் முதலியவை இந்நாட்டில் மிக்க அதிகமாக விளைகின்றன. பிற நாடுகளுக்கும் வருடந்தோறும் ஏராளமாக ஏற்றுமதியாகின்றன.

திருவாங்கூர் பாரத நாட்டின்தென் மேற்குக் கோடியில் சௌந்தரிய சிகரமாக - பாரத ராணியின் பூங்காவாகத் திகழ்கிறது.

திருவாங்கூர் - கொச்சி இராஜ்யத்தின் தலை நகரம் திருவனந்தபுரமாகும். இங்குதான் இந்நாட்டின் முன்னாள் அரசரும் இராஜப் பிரமுகருமான சித்திரைத் திருநாள் பால ராமவர்மா மஹாராஜா-வும் அவரது குடும்பத்தினரும் வசித்து வருகிறார்கள். இங்குள்ள அனந்த பத்மநாபஸ்வாமி அரசர்களுடைய குடும்ப தெய்வம்.

பத்மநாபஸ்வாமி ஆலயம் கோட்டையின் மத்தியில் உள்ளது. கி. பி. 1750-ம் ஆண்டில் ராஜ ராஜ மார்த்தாண்ட வர்மா என்ற அரசர் பத்மநாபஸ்வாமி முன்னால் தமது வாளை வைத்து, தமது ராஜ்ய முழுமையும் அவரடியில் சமர்ப்பித்துத் தம்மை அவரது சேவகனாகவும், பிரதிநிதியாகவும் அறிவித்து விட்டு வீடு திரும்பினார் எனக் கூறும் சரித்திரம். அன்று முதல் இன்று வரை திருவனந்தபுரம் ராஜ்யம் முழுமையும் பத்மநாபஸ்வாமியுடையது ஆயிற்று என்பர். மன்னர்கள் பத்மநாப தாசர்கள் என்ற பட்டப் பெயரோடு திருவாங்கூர் அரசர்கள்

நிலம், ஆகாயம், கடல் ஆகிய மூன்று மார்க்கங்களிலும் திருவாங்கூருக்குப் பிரயாணம் செய்யலாம். இங்கிருந்து சென்னை, பம்பாய், கொழும்பு, டில்லி முதலிய இடங்களுக்கு ஆகாய விமானங்கள் நாள் தோறும் செல்லுகின்றன. கொல்லத்திலிருந்து கொச்சி வரை உப்பங்கழிகளில் 'ஸ்டீம் போட்டின்' மூலம் எளிதில் செல்லலாம். செங்கோட்டையிலிருந்து மூன்று மலைகளைக் குடைந்து (Tunnels) செல்லும் ரெயில் மார்க்கமாகவும் இங்கு வந்துபோகலாம். இவற்றில் 'ஆரியங்காவுக் கணவாய்' மிகப் பெரிது. அரபிக் கடல் ஒருபுறம் அணைந்து வர, மேற்குத் தொடர்ச்சிமலை தழுவிச் செல்ல,



திருவனந்தபுரம் ஸ்ரீ அனந்தபத்மநாபஸ்வாமி கோயிலின் முன்புறத் தோற்றம்.

இறைவன் தரப்பில் நாட்டை ஆண்டு வந்தார்கள். ஆனால் தற்காலத்தில் இந்நாடு பாரத சர்க்காரின் ஆட்சிக்குட்பட்டு கவர்னர் மூலம் அரசாளப்பட்டு வருவது வெளிப்படை.

சரித்திரப் பாதையில்

திருவாங்கூரின் ஆதிகாலத் தலைநகர்களின் சரித்திரம் மிகப் பழமையானதும் சுவாரஸ்யமானதுமாகும். புராண இதிகாசங்களின் கூற்றுப்படி கொச்சியை அடுத்துள்ளதும் தென்னஞ் சோலை நிறைந்ததும் எவ்வித முக்கியத்துவமுமில்லாததுமான 'திரிக்காக்கரை' என்ற கிராமமே மஹாபலியின் தலைநகரமாயிருந்ததாம். வாமன மூர்த்திக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில்கள் வெகு சொற்பம். கொச்சி நகரத்திற்கு ஆறு மைல் தூரத்தில் உள்ள இந்தத் திரிக்காக்கரையில் வாமன மூர்த்தியான விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புராதனக் கோவிலொன்றுள்ளது.

ஓணத்தின்போது இக் கோயிலில் சேவிப்பது மிகப் புண்யமாகக் கருதப்படுகிறது. தவிரவும், இங்குதான் மஹாபலியின் ஆயுதச் சாலையும், பாண்டவர்களைக் கொல்லுவதற்கு கௌரவர்கள் கட்டிய அரக்குமாளிகையின் சிதிலங்கள் எனக்கூறும் மலைக்குகைகளுள்ளன. இக்குகையிலிருந்து பெயர்த்தெடுக்கப்படும் துண்டுகள் மருந்துக்காக இன்றும் உபயோகப்படுகின்றன. சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் இங்குள்ள கனிகளைப் பரிசோதித்தபோது இதில் அதிகமாக இரும்பு கலந்திருப்பதாக அறிவிக்கப்பட்டதாம்.

திரிக்காக்கரையிலிருந்து இருபது மைல் தூரத்தில் உள்ளதும் தற்காலத்தில் 'கிராங்கனூர்' என்று வழங்கி வருவதுமான 'திருவஞ்சிக்களந்தான்' சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள முதல் தலைநகரமாகும். கிராங்கனூர் ஒரு சிறு நகரம். கொச்சி நகரத்திற்கும் ஜில்லாவின் மற்றப் பகுதிகளுக்கும் எல்லா பருவ காலங்களிலும் கால்வாய்மூலம் படகுப் போக்கு வரத்துச் செய்யக்கூடிய மார்க்கத்திலுள்ளது. புராதனமான ஒரு பகவதி கோயிலும், அர்ச். தோமையரால் கி. பி. முதல் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டதென்ற கீர்த்தி வாய்ந்ததுமான ஒரு கிறிஸ்துவக் கோயிலும் இன்றைய கிராங்கனூருக்குப் பிரதான அம்சங்களாகும்.

வைஷ்ணவ கிரந்தமான பிரபந்தம் பாடிய குலசேகர ஆழ்வார் என்று கூறப்படும் குலசேகரப் பெருமாளின் வழி வந்தவர்களும் முன்னோர்களும் ஆண்ட நகரம் கிராங்கனூர் என்னும் இந்தத் திருவஞ்சிக்களமேயாகும். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே இந்தத் திருவஞ்சிக்களத்திற்கு எகிப்து, பாபிலோன், கிறிஸ்து, ரோமாபுரி, சீனா முதலிய நாடுகளிலிருந்து வரும் வியாபார யாத்திரீகர்களின் தொடர்பு உண்டு. கி. பி. 68 அல்லது 69-ல் ரோமானியர்களால் சித்ரவதை செய்யப்படுவதிலிருந்து தப்புவதற்கு யூதர்களுக்குப் புகலிடமாய் அமைந்ததும் இவ்வூரே என்பது இனிது விளங்கும்.

தவிரவும், பெருமாள் வம்ச மன்னர்களின் தலைநகராக 'இரணியல்' (Eraniyal) என்றழைக்கப்படும் ரணசிங்க நல்லூரும் சரித்திரத்தில் குறிப்பிடப்படுவது கண்கூடு. இது திருவாங்கூரின் தென் பகுதியில் உள்ள ஒரு சிற்றூராகும். நவம்பர் முதல் தேதியிலிருந்து இது சென்னை இராஜ்யத்திற்கு சேர்ந்துவிட்டது. தற்சமயம் கன்யாகுமரி ஜில்லாவில் இருக்கிறது. இங்குள்ள பழங்கால அரண்மனையில் ஒரு கருங்கல் கட்டில் உள்ளது இதில்தான பிரசித்திப்பெற்ற சேரமான் பெருமாள் தூங்கினார் என்பர் இவர் அரண்மனையின் பள்ளியறையிலிருந்து மாயமாய் மறைந்து சுவர்க்கம் சேர்ந்ததாக இவரைப் பற்றிய ஓர் ஐதீகம் நிலவிவருகிறது.

நாளடைவில் திருவாங்கூரின் ஐக்கியம் சீர்குலைந்தது. குறுநில மன்னர்கள் சிறு சிறு ராஜ்யங்களை அமைத்து தத்தமக்குரிய இடங்களில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். இப்படி அமைந்த தன்னரசுகளில் வடக்கே ஜாமரினால் ஆளப்பட்ட கோழிக்கோடும், (Calicut) மத்திய நாட்டில் கொச்சி மகாராஜாவின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசமும், தெற்கில் வேணாட்டுத் தலைநகரான பத்மநாப புரத்திலிருந்து ஆண்ட மஹாராஜாக்களின் பகுதியும் பிரதானமானவை.

1498-ல் கள்ளிக்கோட்டையில் வாஸ்கோடி காமாவின் வருகையைத் தொடர்ந்து ஐரோப்பியக் குடியேற்ற வல்லரசுகளால் ஜாமரின் ராஜா தன் சுதந்தரத்தை இழந்தார். அதன் பயனாக அவருக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டது. அவரது தலைநகரம் மலபார் ஜில்லாவின் தலைநகராகியது. ஆனால், ஜாமரின் கதி கொச்சி மஹாராஜாவுக்கு ஏற்படவில்லை. ஆனாலும், படிப்படியாக, போர்ச்சுக்கீசிய, டச்சு, பிரிட்டிஷ் ஆதிக்கங்களின் செல்வாக்கால் மஹாராஜா தன் அரண்மனையைத் திருப்புனித துறைக்கு மாற்றிக்கொண்டு கொச்சி வளைகுடாவின் மேற்குக் கரையில் உள்ள எர்ணாகுளத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார்.

திருவாங்கூர் இராஜ்யத்தின் புராதனப் பெயர் வேணாடு. 18-ம் நூற்றாண்டின் மத்தியில் மார்த்தாண்டவர்மன் காலத்தில் திருவனந்தபுரம் ஜில்லாவின் வடக்கெல்லையில் பாரூர் (Parur), மூணார் (Munnar) வரை இவ்வேணாடு வியாபித்தது. யுத்தவீரனும், ராஜதந்திரியும், தேச பக்தனுமான

கௌடையார் அரண்மனை.

ராமய்யன் இந்தப்பணியில் மார்த்தாண்ட வர்மனுக்கு உறுதுணையாக இருந்தார். இவருடைய ஆலோசனையின்படித்தான், ராஜ்யத்தைத் திருவனந்தபுரத்தில் அனந்தசயனத்திலிருக்கும் ஸ்ரீபத்மநாபஸ்வாமிக்கு அர்ப்பணம் செய்தார். அதோடு தானும் தன் சந்ததியார்களும் ஸ்ரீ அனந்த பத்மநாபஸ்வாமியின் தாஸர்களாக இருந்து இந்த ராஜ்யத்தைப் பரிபாலித்து வருவதாகச் சபதமும் செய்தார். திருவாங்கூர் ராஜ்யம் பத்மநாப ஸ்வாமியின் சொந்த சொத்தானபடியால் திருவனந்தபுரமும் அதன் தலைநகராகியது. அரசரும் தமது இருப்பிடத்தை பத்மநாப புரத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு மாற்றிக்கொண்டார் எனக்கூறும் சரித்திரம்.

ஆலயத்தின் மகிமை

திருவனந்தபுரம் ஆலயம் மிகப்பழமை யானது. பாரத நாட்டின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரீகர்கள் வந்துபோவது கண்கூடு. இப்பொழுது ஆலயம் இருக்கும்இடம் ஆதியில் அனந்தங்காடாக இருந்தது. அந்தக் காட்டில் ஈழவமரபைச் சேர்ந்த ஓர் ஏழைக் குடியானவனும் அவன் மனைவியும் வசித்து வந்தனர். அத்தம்பதிகளுக்குக் குழந்தைகள் இல்லை. ஆனால், விஷ்ணு மூர்த்தியினிடம் பக்தி இருந்தது. தம்பதிகள் இருவரும் நாடோறும் பயிர்த்தொழில் செய்து ஜீவித்து வந்தனர். ஒருநாள் அவர்கள் வயலில் வேலைசெய்து கொண்டிருந்தபோது ஈழவனின் மனைவி குழந்தையொன்றின் அழுகுரலைக் கேட்டுச் சுற்றுமுற்றும் பார்க்கவே தெய்வீகச் சின்னங்களோடு கூடிய ஆண் குழந்தையொன்று கைகளையும் கால்களையும் உதறி அழுவது தென்பட்டதாம்.

அவள் ஓடோடியும் வந்து குழந்தையை எடுத்து உச்சிமோந்து மார்பில் அணைத்து அக்குழந்தைக்குப் பாலூட்டிச் சீராட்டி அருகில் இருந்த மரத்தின் பரந்த நிழலில் அதைவிட்டு வைத்தாள். அவள் குடிசைக்குப் போய் வருவதற்குள் வானம் இருண்டு மழைபெய்யத் தொடங்கியது. இதற்குள் ஒருபெரிய நாகஸர்ப்பமானது குழந்தையை அம்மரத்தின் பெரியபொந்துக்குள் எடுத்துச் சென்று தன் படத்தால் அதை மழை காற்றினின்றும் காப்பாற்றியதாம். குடிசைக்குச் சென்று வந்த ஈழவனின் மனைவி அதைப் பார்த்துத் திடுக்கிட்டு, கணவனை அழைத்துக் காட்டவே, நாகம் குடைபிடிக்க விளங்கும் இக்குழந்தை விஷ்ணு மூர்த்தியாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணி, அவர்கள் நாடோறும் அதற்குப் பாலும் கஞ்சியும் நைவேத்தியமாக அளித்து வழிபட்டு வந்தார்கள். ஈழவ தம்பதிகள் பக்தி நாளடைவில் மன்னனுக்கு எட்டவே, அரசன் அந்த இடத்தில் ஓர் ஆலயம் கட்டினன். நாள்டைவில் அக்குழந்தை பல அற்புதங்களைச் செய்து மறைந்து விட்டதென இங்கு கர்ண பரம்பரையாய் சொல்லப்பட்டு வருவது வெளிப்படை.

ஸ்வாமியின் பெயர் அனந்தபத்ம நாபர். அதனுல் ஆலயமும் அனந்த பத்ம நாபர் ஆலயம் என வழங்கி வருகிறது. ஆலயம், கோட்டையின் மத்தியில் அரசர் பாதுகாப்பில் இருந்து வருகிறது. கோயிலின் ராஜ

கோபுரம் மிகப் பிரம்மாண்டமானது. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டதென்பர். இதன் ஏழடுக்குக் கோபுரமும், கட்டிடமும் மிகப்பழமை வாய்ந்தவை. கோபுரக் கதவுகளிலும், உத்தரங்களிலும் மிக அருமையான மரச் சித்திர வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. அவை பார்ப்போரின் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்வன. திருவாங்கூரின் சிற்பக் கலைக்கு இவையொரு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். தவிர, கோவிலுக்குள் ரதி, மன்மதன், துர்க்கை, கோபாலகிருஷ்ணன் இம்மாதிரிப் பல சிற்பங்களுமுள்ளன.

கோயிலின் கர்ப்பகிருகத்தின் மீதுள்ள விமானம் மலையாளத்துக் கோயில்களிலுள்ள கூருருளைக் கோபுர வடிவில் காணப்படுகிறது அதில் மிக உயர்ந்த செப்புத்தகடுகள் வேயப்பட்டுள்ளன. ஆலயத்தின் முன் கோபுர வாயில் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கும்; காரணம் தெரியவில்லை. திருவிழாக் காலங்களில்தான் திறந்து வைக்கப்பட்டிருக்கும் எனச் சொல்லுகிறார்கள். பக்கத்திலிருக்கும் மதிற்சுவரில் உள்ள ஒரு வாயில் வழியாகத்தான் உள்ளே செல்ல வேண்டும்; வேறுவழி இல்லை என்பது குறிப்பு.

முதற்பிரகாரம் மிகப்பெரிது. அங்கிருந்து வடக்கு வாயில் வழியாகச் சென்றால் மூலஸ்தானத்தை எளிதில் அடையலாம். கர்ப்பகிருகம் உயர்ந்த மண்டபத்தின்மீது உள்ளது மூலவரை மூன்று தலை வாயில்கள் வழியாகத்தான் சேவிக்கலாம். ஏனெனில் பத்மநாபஸ்வாமி மூல விக்கிரகம் மிகப்பெரிது. பெருமாள் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கிறார். ஸ்ரீரங்கத்தைப்போல! இதனால்தான் இந்த ஸ்தலம் 'அனந்த சயனம்' எனப்படுகிறது. இடதுபுறம் தலை வாயிலில் திருமுடியையும், மத்திய வாயிலில் திருநாபியையும், கோடிவாயிலில் திருவடியையும் சேவிக்க வேண்டும். மத்திய வாயிலில் நாபிக்கு முன்னால் தனிச் செம்பொன்னால் செய்த உற்சவ விக்கிரகம் இருக்கிறது. விக்கிரகம் சிறிதுதான். ஆனால், அழகு சொட்டும்பால் போன்ற கலை பொருந்தியது.

மேலும், அனந்த பத்மநாப ஸ்வாமி சந்நிதிக்கு முன்னால் ஓர் ஒற்றைக்கல் மண்டபம் உள்ளது. அம்மண்டபம் 20 அடி நீளம், 20 அடி அகலம், $2\frac{3}{4}$ அடி உயரமுள்ள ஒரே கருங்கல்லால் ஆனது. இங்குதான் உற்சவருக்குப் பூஜைகள் நடைபெறும். ஆனால், மூலவருக்குத் திருமஞ்சனம் இல்லை, அர்ச்சனை மட்டும் திருவடியில் செய்யப்படுகிறது. இக்கோயிலில் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் நடை திறக்கப்பட்டு உற்சவ மூர்த்திக்குத் திருமஞ்சனம் நடைபெறும். அப்பொழுது பக்தர்கள் ஏராளமாக வீற்றிருப்பர். மண்டபத் தூண்களில் பல எழில் வாய்ந்த சிற்பங்கள் உள்ளன. ஹனுமான், கருடன் வடிவங்கள் இதில் பெரிய ஆகிருதியில் தூணில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு நாடோறும் தனிப்பூஜைகள் உண்டு. மிக வரப்பிரசாதி என்பது வெகு பிரசித்தம்.

தவிரவும், ஆலயத்தினுள் ஒரு மின்சார விளக்குகள் கூட இல்லை. எண்ணெய் திரி போட்ட விளக்குகள்தான் இங்கு தனி விசேஷம். அதனால் கோயிலில் பகலில் சென்று வருவதுதான் விசேஷம்; இரவில் அவ்வளவு ரசிக்க முடியாது என்பது குறிப்பு. வாசலில் துப்பாக்கி பிடித்த சிப்பாய்கள் பாராக் கொடுக்கிறார்கள். யாவரும் தாராளமாக உள்ளே சென்று பெருமாளைத் தரிசித்துத் திரும்பலாம். ஆனால், நம் தமிழ் ஜில்லாக்களிலுள்ள கோயில்களைப்போல் குளிக்காமல், சட்டை தலைப்பாகையுடன்



தந்தி: KUMBA
Tiruvidaimarudur

போன் No 145
குமபகோணம் எக்ஸ்சேஞ்சு

பட்டுச் சேலைகள்
தயாரிப்பில்
பிரக்யாதிபெற்றவர்கள்

கும்பா. ராம. நாகேந்திரய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

—

சன்னிதித் தெரு
திருபுவனம்
(தஞ்சை மாவட்டம்)

KUMBA

விசேஷ தயாரிப்புகள்: ஜங்களா, கிராஸ்கொடி, கட்டம் புட்டா, டிஷ்யூ உயர்ந்த ரக பட்டு & ஜரிகை சேலைகள் எப்பொழுதும் கிடைக்கும்.

இங்குள்ள கோயில்களுக்குள் போக அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அனந்தசயன தரிசனத்திற்கு நேரம் நிச்சயித்திருக்கிறார்கள். காலையில் எட்டுமணிக்கு முன் யாவரும் போய் ஸ்வாமி தரிசனம் செய்யலாம். அதற்குப்பின் ''எழுந்நளத்து''-அதாவது பிரதி தினமும் பத்மநாப தாஸரான திருவாங்கூர் மன்னரும் முன்னாள் ராஜப் பிரமுகருமான சித்திரைத் திருநாள் மஹாராஜா இக்கோயிலுக்கு மடியுடன் வந்து தரிசனம் செய்து திரும்புவார் இத்தரிசனம் முடிய சுமார் பத்தரை மணியாகும் இதற்கு பின் யாவரும் போகலாம்.

முற்காலத்தில் இக்கோயிலில் அன்னதானங்கள் நடந்து வந்தன அதாவது காலையில் ''எழுந்நளத்துக்கு முன்'' கோயில் நான்கு பிரகாரங்களையும் சுற்றிப் பார்த்தால் ஆச்சரியப்படுவோம். பதினாயிரக் கணக்கான பிராமணப் பெரியார்களும், குழந்தைகளும், பெண்களும் முகமலர்ச்சியுடன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் காட்சி நம்மைப் பிரமிக்கச் செய்யும் இக்கோயிலில் வருடமுழுவதும் உற்சவந்தான். விசேஷமாக ஆறு வருஷங்களுக்கு ஒருமுறை கொண்டாடப்படுவது 'முறை ஜபம்' இவ்வுற்சவம் பெயர்போனது. நூற்றுக்கணக்கான 'நம்பூதிரிப் பிரதானிகள்' பங்குகொண்டு நடத்தும் யாகம் போன்ற உற்சவம் இது.

அனந்த பத்மநாப ஸ்வாமிக்குத் திருமுடி ஸ்தானம் திருவல்லம் என்பர் இது திருவனந்தபுரத்திலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ளது. ஆலயம இரண்டு பிராகாரங்களுடன் கூடியது பரசுராமர் பிரும்மா சிவன் ஆகியோருக்குச் சந்நதிகள் உள்ளன. பரசுராம சந்நதி வடக்கு நோக்கி காட்சியளிக்கிறது கட்டிடம் கீழிருந்து மேல்வரை கருங்கல்லால் கட்டப்பட்டு, செங்கல் விமானத்தோடு விளங்குகிறது. பரசுராமர் கோடரி, சங்கசக்கரங்கள் ஏந்தி நான்கு திருக்கரங்களோடு சேவை சாதிக்கிறார். பரசுராமருக்கு இங்கே ஆலயம் இருப்பது மிக்க விசேஷம். அதனருகில் மத்ஸ்யாவதார மூர்த்தி சந்நதியுமுள்ளது. அனந்த பத்மநாப ஸ்வாமியின் திருவடி ஸ்தானமாகிய 'பாதபூர்' இங்கிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ளது. யாத்திரிகர்கள் நாடோறும கூட்டம் கூட்டமாக விஜயம் செய்கிறார்கள். இதனால் பஸ்களில் இடம் கிடைப்பது சிறிது கடினம்

மலை நாட்டுக் கோயில்களின் அர்ச்சகர்கள் நம்பூதிரிகள் இவர்களைப் போத்திமார்கள் என்றும் அழைப்பதுண்டு. மிகுந்த ஆசாரமாக இருந்து பூஜைகள் செய்கின்றனர். தங்கள் பூஜை முறைக் காலங்களில் வீட்டிற்குப் போகக் கூடாது; மும்முறை ஸ்நானம் செய்யவேண்டுமென்ற நியதிகள் இவர்களிடம் காணப்படுகிறது. துளசியும் தீர்த்தமும் கோயிலில் வழங்குகிறார்கள். அனந்த பத்மநாபனுக்கு அன்று ஈழவன் அளித்த கஞ்சி உணவே இன்றும் அளிக்கப்படுகிறது. தேங்காய் கப்பறையில் ஏழை ஈழவன் கஞ்சியளித்த ஞாபகார்த்தமாகத் தங்கக் கப்பறையில் இன்று கஞ்சி நைவேத்தியம் செய்து வருகிறார்கள்.

கோயிலுக்குச் சிறிது தொலைவில் மித்ரானந்தபுரம் இருக்கிறது. இதனால் பத்மநாப ஸ்வாமி ஆலயம் திரு அனந்தபுரம் என மாறிற்று என்பர். 108 திவ்விய தேசங்களில் திருவனந்தபுரமும் ஒன்றாகும் இதனை.

''மடைத்தலை வாளைபாயும் வயலணியனந்தபுரம்'' என்றும், ''பெரியநீர் வேலை சூழ்ந்து வாசமே கமழும், சோலை வயலணி அனந்தபுரம்'' என்றும் நம்மாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார். கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே அதாவது ஆழ்வார் காலத்துக்கு முன்னரே சங்க காலத்தில் இந்த ஆலயம் புகழ்பெற்றிருந்தது என தல புராணம் கூறும்.

கோயிலிலுள்ள கல்வெட்டுக்களும் முறை ஜபத்தின் வரலாறும்:-

அனந்தபத்மநாபஸ்வாமியின் ஆலயம் தீக்கிரையானதன் காரணமாக பத்ம நாபேந்திர யோகி என்ற மகானின் ஆக்ஞைப்படி, பாலசந்திரன் என்ற அந்தணச் சிற்பியின் உதவி மூலம் விமானத்திலிருந்து தீபச்சாலை வரை ஆலயத்தைப் பால மார்த்தாண்டவர்மன் கட்டினான் மூலக்கிரகம் திருவெண்ணாழி, ஒற்றைக்கல் மண்டபம், தீபச்சாலை, அலங்கார மண்டபம், அர்த்தமண்டபம் முதலியன அப்போதே கட்டப்பட்டன. அதன் பிறகே பத்மநாபர்,பாம்பணை ஸ்ரீதேவி பூதேவி ஆகிய சிலைகள் திருப்பணி செய்யப் பட்டுக் கொல்லம் ஆண்டு 908-ல் மகா. கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகக் கல்வெட்டொன்று கூறுகிறது. வாரணாசி (Benaras)க்கு அருகே 'கோண்டக் நதி' (River Ghondaug) தீரத்திலுள்ள சாலக்கிராமக் கற்களைக் கொண்டு அனந்த பத்ம நாபர் சிலை திருப்பணி செய்யப்பட்டதாக மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது. கோயிலில் கிடைக்கும் மிகப்பழமையான கல்வெட்டு கி. பி. 1165-ம் வருஷத்தியது என்பர் ஆராய்ச்சியாளர்.

ஆறு வருஷங்களுக் கொருமுறை ஆலயத்தில் 'முறைஜபமும்' 'லட்ச தீப உற்சவமும்' நடைபெறும் காரணம்: திருவாங்கூர் அரசர் பெருமானொருவர் தாம் திக் விஜயம் செய்த போது இழைத்த கொடுமைகளுக்குப் பிராயச்சித்தமாக இந்த முறை ஜபத்தை ஆரம்



ஸ்ரீ பத்மநாபஸ்வாமி கோயிலும், குளமும்.

பித்து வைத்தார். முறை ஜபம் 56 நாட்கள் நடக்கும். 56-ம் நாள் மாலை ஒரே சமயத்தில் லக்ஷ தீபங்கள் ஆலயத்தைச்சுற்றி ஏற்றப் படும். அதோடு அவ்விழா முடிவடையும்.

ஆலயத்தில் இப்புரட்டாசி மாதத்தில் 'நவராத்திரி விழா' பத்து நாளைக்கு வெகு விசேஷமாக நடைபெறும். விஜயதசமியன்று மகாராஜா தங்க ரதத்தில் பவனி வருவார். மற்றொருவிழா ஆராட்டுவிழா எனப்படும் இவ்விழாவின் கடைசிநாள் அன்று பத்மநாப ஸ்வாமி, நரசிம்மர், கிருஷ்ணர் ஆகிய உற்சவ மூர்த்திகள் தனித்தனி வாகனத்தில் புறப் பாடு செய்து கோயிலை வலம்வந்து சமுத்திரத் தில் நீராடச் செல்லுவர். மன்னரும் மற்றப் பரிவாரங்களுடன் கையில் கத்தி ஏந்தி மூன்று மைல் தூரம் சுவாமியுடன் கடற் கரைக்கு நடந்தே செல்லுவர். யானைகள், குதிரைகள் முதலியன ஊர்வலமாகச் செல் லும். அஸ்தமனம் ஆனபிறகு விக்கிரங் களுக்குக் கடல் நீராட்டு நடக்கும். அரசரும் மற்றவரும் அப்போது கடலில் ஸ்நானம் செய்வர். பின் ஸ்வாமி கோயிலுக்குச் செல் லுவதோடு விழா பூர்த்தியடையும். பின்பு கொடி இறக்கப்படும்.

பத்மநாபதாஸர்கள் என்ற பட்டப் பெய ரோடு திருவாங்கூர் அரசர்கள் இறைவன் தரப்பில் நாட்டை ஆண்டு வந்தார்கள் என்று சொன்னோம். அதன் நினைவாக ராஜ்யத்தின் முத்திரை விஷ்ணுவின் ஆயுதமாகிய சங்க மாகும். நாணயங்கள் இதனால் 'சக்கரம்' என்று வழங்கி வந்தது. பிரிட்டிஷ் முழு ரூபாய்க்கு 28½ சக்கரம் கொடுத்து வந்தார் கள். ஆனால், இம்முறை இப்பொழுதுஇல்லை தவிரவும், மலையாளக் கோவில்களில் சிவ விஷ்ணு பேதம் எதுவும் காண முடியாது. சிவன் கோயிலிலேயே விஷ்ணுவுக்கும் சந்நிதிகள் உண்டு. அதுபோல விஷ்ணு கோயிலிலும் சிவபெருமானுக்குச் சந்நிதிகள் உண்டு.

முடிவுரை :

திருவனந்தபுரம் தென்னிந்தியாவிலுள்ள எல்லாத் தனிப்பட்ட நகரங்களையும் விட பெரிய நகரம். தலைநகராக இருப்பதால் தான் தற்போதிருக்கும் அளவுக்கு அது வளர்ச்சி யடைய முடிந்தது. ரயில்வே தொடர்பும் விமான நிலையமும், உள்நாட்டின் தொலை தூரத்திலிருந்து மூலப் பொருள்களைப்பெற்று நடத்த வேண்டிய ஒன்றிரண்டு தொழிற் கூடங்களும் இதனால் தான் இங்கு அமைக்கப் பட்டுள்ளன. திருவனந்தபுரம் எல்லாப் பருவங்களிலும் போக்குவரத்துக்குத் தோதான ஒரு துறைமுகமல்ல. அதை அடுத்து தெற்கே ஏழுமைல் தூரத்தில் 'விழிஞ்சம்' என்ற துறைமுகமே பழங்காலத் தில் நல்ல சுபிட்சமான துறைமுகமாகும். இதை ஒரு மீன் பிடி துறைமுகமாக மாற்றி னால் ராஜ்யத்திற்கு மிகுந்த வருவாய் கிடைக்குமென கூறுவோருமுளர்.

தவிரவும், வானளாவிய அழகிய கட்டிடங் களையுடைய கம்பீரமான கடைவீதிகளில் கண்ணைப்பகட்டும் விதவிதமான மின்சார விளக்குகள் ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்க இப் பட்டணத்தின் அழகை இரவில்தான்

நன்குணரலாம். இங்கு ஒரு பிரதான நகரத்துக்குத் தேவையான சகல வசதிகளும் இருக்கின்றன. ஊரைச் சுற்றி நாலுபுரமும் பல்வேறு கைத் தொழிற்சாலைகள் புதிது புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நடந்து வருகின்றன.

இங்கு அநேகமாக எல்லா உலோகங்களும், முக்கியமாக அலுமீனியத்தின் கனிகளும் ஏராளமாகக் கிடைக்கின்றன. சோப்பு, சர்க்கரை, காகிதம், ஓடு, மரவேலை, பிளைவுட் ஆகிய பல்வேறு தொழிற்சாலைகளும், ஊரைச் சுற்றிலுமுள்ள மலைச்சாரல்களில் காப்பி, ரப்பர் எஸ்டேட்டுக்களும் ஏராளமாயுள்ளன. எல்லாவற்றிற்கும் சிகரம் போல் இந்நாட்டின் தந்தவேலைகள் (Ivory Arts) விளங்குகின்றன. மேனாட்டினரும் கண்டு வியக்கத் தக்க முறையில் இங்கு யானைத் தந்தத்தினாலும், எருமைக் கொம்புகளினாலும் செய்யப்படும் சிற்ப வேலைகள் பலராலும் புகழப்பட்டுள்ளன. இங்கு சட்டக் கல்லூரி, கண்காட்சி சாலை, மிருகக் காட்சிசாலை, நட்சத்திர சாலை, தண்ணீர் சப்ளை சாலை, அரண்மனைகள் போன்றவைகள் இடம்பெறும் கட்டிடங்கள் கம்பீரமாயுள்ளன. பார்க்கவேண்டிய இடங்களில் இவைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

திருவனந்தபுரத்தில் எல்லாவகையிலும் நிச்சயமான பல அனுகூலங்கள் உள்ளன. எல்லாப் பருவ நிலைகளிலும் சுத்த ஜலம் கிடைக்கும் வசதி இந்நகருக்கு வாய்த்திருக்கிறது பிற இடங்களில் இல்லை என்பது குறிப்பு. கிள்ளி, காரமனை என்ற இரண்டு நதிகள் இவ்வூரின் ஊடே பாய்கின்றன. உபயோகத்தில் இல்லாத பல பெரிய அரண்மனைகள், கட்டிடங்கள் உள்ளன. திருவாங்கூர் ராஜ வம்சத்தின் சம்பிரதாயங்களில் ஒன்று குறிப்பிடத்தக்கது. தனக்கு முன் ஆண்ட ராஜாவின் அரண்மனையில் எந்த அரசனும் வசித்ததில்லை என்பது.

இங்குள்ள மிருகக் காட்சிசாலையிலிருக்கும் சிங்கம், புலிகளை அரசாங்கத்தார் சுடுவதும் இல்லை; அடித்துக் கொல்லுவதும் இல்லை. ஆனால், நல்ல தீனி போட்டு வளர்த்து வருகிறார்கள். இங்குள்ள நட்சத்திரசாலை, மீன் காட்சி சாலையில் பல்வேறு வர்ணங்களுடன் வெவ்வேறு உருவமுள்ள அநேகவித மீன்களும், பலவித பக்ஷி ஜாலங்களும், பாம்பு வகைகளும் உள்ளன; அனந்த பத்ம நாப ஸ்வாமி கோயிலைச் சுற்றியுள்ள கோட்டையையும் அதற்குள் அமைந்துள்ள கட்டிடங்களையும், சர்க்கார் அலுவலகங்களையும் அவசியம் பார்க்க வேண்டியவை.

கலைகளிலும் கேரளம் முன்னணியில் நிற்கிறது. கதக்களி ஓட்டம் துள்ளல், சாக்கியர் கூத்து, கும்மி இவை எல்லாம் சிறந்த ஆட்டங்கள். ஓணம் விழாவின்போது படகுப் பந்தயம் காணவேண்டிய காட்சிகளில் ஒன்று, தவிர, மலையாளிகள் உடை விஷயத்தில் மிகவும் எளிமை காட்டுபவர்கள். முன்பெல்லாம் பெண்மணிகள் கூட உடலின் மேல் பாகத்தை மூடுவதில்லை. ஆனால் இப்போது அதெல்லாம் போய்விட்டது. நாகரீகம் அங்கும் வந்துவிட்டது. சந்தனத்தை மலையாளிகள் நெற்றியில் கீற்றாக இட்டுக் கொள்ளுகிறார்கள். இது ஒரு தனி அழகைக் கொடுக்கிறது. இவ்வளவு சிறப்பான திருவாங்கூரை முன்னணிக்குக் கொண்டுவந்தவர் மாஜி திவான் ஸர். ஸி பி. ராமஸ்வாமி அய்யர் என்பது நாடறிந்த, ஏன் உலகம் அறிந்த உண்மை! புகழ்ச்சியில்லை.

இவ்வளவு எழில் வாய்ந்த திருவாங்கூர் - கொச்சி இராஜ்யத்தில் இன்று மந்திரிசபை நிர்வாகத்தில் இல்லை. நீடித்த ஜனநாயகம் ஏற்படவேண்டியது அவசியம்! பொதுத் தேர்தலுக்குப் பிறகு கேரள அசெம்பிளி கூடும்போது இந்தப் பிரச்னைகள் விவாதத்திற்கு வரலாம்

இறுதியாக ஒருவார்த்தை! காஷ்மீர், உதக மண்டலம், மைசூர், என்று போகிறவர்கள் ஒருவாரம் அல்லது பத்து நாட்கள் கேரளம் போய்வரலாம். ஆனால், மழை காலமாகப் பார்த்துப்போய்விடாதீர்கள்; வெளியே தலை நீட்ட முடியாது!

தீபங்களை ஒளிக்கச் செய்கின்றனரா?
மக்கள் உள்ளங்களில் இன்பம் ஒளிக்கச் செய்கின்றனரா?

1. பத்மினி — 2. ராகினி
3. ராஜசுலோசனா — 4. பண்டரிபாய்






5. B. சரோஜாதேவி 6. லக்ஷ்மிபிரபா — M. சரோஜா 7. அம்பிகா 8. தாம்பரம் லலிதா

இதற்கே பெரும் பாராட்டு - பெரிய

ஹிந்துஸ்தான் அம்பாஸடர் புதிய, திறமை மிக்க

ஓவர்ஹெட் வால்வ் எஞ்சின்

இன்று இந்தியாவில் இதற்குப் பெரிய கிராக்கியை உண்டாக்கியிருக்கிறது!



ஓவர்ஹெட் வால்வ் எஞ்சின்

சக்தி வாய்ந்த புதிய **ஓவர்ஹெட் வால்வ்** எஞ்சின் பொருந்திய இப்போதைய பெரிய அம்பாஸடர், உங்களுக்கு உல்லாச வேகத்தையும், பாதுகாப்புடன் முந்தும் வல்லமையையும் ஒப்பற்ற எழிலோட்டத்தையும், கணிசமான சிக்கனத்தையும் தருகிறது.

அழகிய அம்பாஸடரில் புதிய OHV எஞ்சின் இருப்பதனல், ஏற்கனவேயுள்ள பல தனிப் பண்புகளோடு ஒய்யாரமாக முன் நிற்கும் கம்பீரமும் இதற்கு வாய்த்திருக்கிறது; தாராளமாகப் புழங்க இடம், நீண்ட தூரம் ஆனந்தமாகச் செல்ல வசதி, லக்கேஜ் வைக்க நிறைய இடம் உண்டு; இப்போது பின்னும் உறுதி, சிக்கனம்.



இன்று இந்தியாவில், பெரிய அம்பாஸடரே சிறப்பாக வாங்கக்கூடிய ஆஸ்தி என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்கிருர்கள்; நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள்.

ஹிந்துஸ்தான்
மோட்டார்ஸ் லிட்,
கல்கத்தா.

கீழ்க்கண்ட இடங்களில் எமது அதிகாரம் பெற்ற டீலர்கள்: ஆக்ரா; அம்பாலா கண்டோன்மெண்டு; அஜ்மேர்; அஹமதாபாத்; அஹமத்நகர்; அலகாபாத்; பரோடா; பங்களூர்; போபால்; பெர்ஹாம்பூர்; பம்பாய்; பரேலி; கல்கத்தா; கட்டாக்; கோயம்புத்தூர்; டேராடூன்; டிரக்; டும்கா; திப்ருகர்; தன்பாத்; கௌஹாட்டி; இம்பால்; இந்தூர்; ஜயபூர்; ஜபல்பூர்; ஜோத்பூர்; ஜல்காம்; ஜோர்ஹாட்; ஜம்ஷெட்பூர்; ஜல்லந்தர் ஸிடி; ஜம்மூ; கான்பூர்; கோல்ஹாபூர்; லக்னௌ; சென்னை; மதுரை; மங்களூர்; மீரட்; நாக்பூர்; புது டில்லி; நேபால்; பாட்னு; புனு; புதுச்சேரி; ராஜ்கோட்; ராஞ்சி; ஸம்பல்பூர்; ஷில்லாங்கு; ஸெகந்தராபாத்; ஸில்சர்; ஸ்ரீநகர்; ஸாத்னு; தேஜ்பூர்; தஞ்சாவூர்; திருச்சி; திருவனந்தபுரம்; வாரணுசி கண்டோன்மெண்டு; விஜயவாடா; விஜயநகரம் ஸிடி.

மலையில் தீபாவளி

நா. கி. நாகராசன்

தீபாவளி யன்று மாலை. அன்று முழுவதும் பல வீடுகளில் பலகாரங்களைச் சுவைத்திருந்த எனக்கு அலுப்போடு இன்னொரு குறையும் சேர்ந்து விட்டது. ஓயாது வேலை செய்த என்வயிறு முணு முணுக்கத் தொடங்கியது! அதைச் சமாதானப்படுத்தும் பொருட்டு ஒரு சோடா வரவழைத்தேன். 'கிரீச்' சென்ற ஒலியுடன் சோடா பாட்டிலின் மூடி திறந்தது. அழுத்தத்தில் அடைப்பட்டுக் கிடந்த சோடாத் தண்ணீர் நுரைத்துப் பொங்கி வெளியே வழிந்தது. தீபாவளிக் கென் வந்திருந்த என் நண்பர் நீலகண்டன் இதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இதைப் பார்த்தால் 1944-ம் ஆண்டு மார்ச் மாதம் எனக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம் நினைவு வருகிறது" என்று அவர் கூறினர். அவர் அருகே அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த என் பெண் ஜயா அவரைப் பிடித்துக்கொண்டாள்.

"மாமா, அது என்ன அனுபவம்? அதைப் பற்றிச் சொல்ல மாட்டீர்களா?" என்று அவள் கேட்டாள்.

நண்பர் நீலகண்டன் போரின்போது ராணுவ அதிகாரியாக இத்தாலியிலும் எகிப்திலும் சிறப்பாகப் பணியாற்றியவர். அவரது போர்க்கால அனுபவங்களைக் கேட்க மிக்க ரசமாக இருக்கும். அதனல் தற்கால இந்திய அரசியல் குழப்பத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிந்த நானும் அதை நிறுத்தி, அவரது அனுபவத்தைக் கூறுமாறு கேட்டுக்கொண்டேன்.

நண்பர் தொடங்கினர்: "அப்போது நேசத் துருப்புக்களோடு நானும் இத்தாலியில் இருந்தேன். நேப்பிள்ஸ் நகரின் அருகே உள்ள வெஸ்ட்வியஸ் எரிமலையைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள், சுமார் 1,700 ஆண்டுகளுக்கு முன் சீறி எழுந்து, கல்லையும், சாம்பலையும், சேற்றையும் வெள்ளமாகப் பெருக்கிப் பாம்பே (Pompeii) என்னும் நகரை நொடிப்பொழுதில் நிர்மூலமாக்கிய அரக்கன் அது. விஞ்ஞானம் அமைத்த நாசக் கருவிகள் முழுமூச்சுடன் இயங்கி வந்த 1944-ம் ஆண்டில் புவியன்னையும் தனது கைத்திறனைக் காட்டி ஊழிக் கூத்தாட முடிவு செய்தாள் போலும். பல ஆண்டுகளாக அமைதியாக இருந்த அம்மலை அன்று உறக்கம் விழித்தெழுந்து குமுறத் தொடங்கியது. அதன் வாயிலிருந்து கற்குழம்பு பொங்கிவந்து நாற்புறமும் வழிந்தது. கடைக்காரப் பையன் சோடாவை உடைத்தபோது அது நுரைத்துப் பொங்கி வழிந்ததல்லவா, அதைப் போல் இருந்தது. அக்காட்சி இரண்டு நாட்களில் அதன் சீற்றம் அதிகமாகிவிட்டது. பெரிய அளவில் அதிலிருந்து சாம்பல் போன்ற தூசும், பழுக்கக் காய்ந்து ஒளிர்ந்த சிறு கற்களும், சிறு பாறைகளும் பேரதிர்வுடன் வலிமையுடன் வெளிவரத் தொடங்கின. அந்த மலையரக்கனிடம் பஞ்சாங்கம் இல்லைபோலும்! மனந்தடுமாறி பங்குனி மாதத்திலேயே அவன் தீபாவளி கொண்டாடத் தொடங்கிவிட்டான். மலையின்மேல் நடந்த அவ்வாண வேடிக்கையை இரவுநேரத்தில் பார்த்தால், பயங்கரமான அவ்வியற்கைக் காட்சியிலும் உள்ளத்தைக் கவரும் ஓர் அழகு இருக்கத்தான் செய்தது, கற்குழம்பு ஆருகப் பெருகிக் கீழே பாய்ந்தது. முப்பதடி ஆழமும், நூறு அடி அகலமும் கொண்ட அந்தப் பாறையாறு தங்கநிறத்துடன் ஒளிவிட்டுக் கொண்டு மெல்ல முன்னேறியது இதைக் காணும்போது மலையரக்கன் தனது பெரு நாக்கை நீட்டி இரையைத் தேடுவதுபோல் இருந்தது. வழியெங்கும் இருந்த வீடுகளையும் வயல்களையும் புதைத்தும், எரித்தும் சர்வ நாசம் விளைவித்த அரக்கனின் நா சான்செபஸ்டியானே என்னும் ஒரு நகரத்தை அறவே அழித்து விட்டது. அந்தச் சில நாட்களில் நாங்கள் போரையே மறந்து விட்டோம். இயற்கையின் அழிவுத் திறனின் முன் நாம் எவ்வளவு அற்பர்கள் என்பதை அப்போது நான் கண்கூடாகக் கண்டேன். என் வாழ்

நாளிலேயே மறக்க முடியாத அனுபவம் அது” என்று நண்பர் கூறி முடித்தார்.

“அப்பா, இவ்வாறு தீபாவளி கொண்டாடும் மலை நம்நாட்டில் எங்காவது உண்டா?” என்று ஜயா கேட்டாள்.

“நல்லகாலம், நம்நாட்டில் இவை இல்லை ஆனால் ஒரு காலத்தில் நம் நாட்டிலும் புவியிலிருந்து மிகப் பெரிய அளவில் கற்குழம்பு வெளியே வந்து இறுகியது. தக்காணப் பீடபூமி என்று நீ பூகோள பாடத்தில் படித்திருப்பாய், பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் எப்போதோ பூமியில் இருந்த பிளவின் வழியே எரிமலைக் குழம்பு வெளி வந்து, இரண்டு லட்சம் சதுர மைல் பரப்புக்குப் பரவிப் பாறையாக இறுகியது. சில இடங்களில் இது 6,000 அடி ஆழம்வரை உள்ளது. அக்காலத்தில் இவ்விடங்களில் நகரங்களும் மனிதர்களும் இருந்திருந்தால் அவர்கள் கதி என்ன என்று யோசித்துப்பார். இப்பாறைகள் காலப்போக்கில் தூளாய், மண்ணுகமாறின. அதனுல் இது இப்போது செழிப்பான நிலமாக இருக்கிறது. எரிமலையினுல்கூட இவ்வாறு நன்மை ஏற்படக்கூடும்.

“ஆனல் இக்காலத்திலும், பசிபிக் சமுத்திரத்தில் ஜப்பான். ஹவாய், பிலிபீன் தீவுகளிலும் மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, இத்தாலி ஆகிய இடங்களிலும் எரிமலைகள் பல உள்ளன. உலகில் இப்போது சுமார் 500-க்கும் மேற்பட்ட எரிமலைகள் இருக்கின்றன. இவற்றைத் தவிர தூங்கிக்கொண்டிருக்கும் எரிமலைகள் பல. பசிபிக் சமுத்திரத்தில் கடலுக்கடியில் பல எரிமலைகள் உள்ளன. அவை வெளிவிடும் கற்குழம்பும், தூசும் நீர் மட்டத்திற்கு மேலே வருவதில்லை. ஆனுல் அவற்றின் இயக்கத்தால் கடலில் பேரலைகள் தோன்றிக் கப்பல்களுக்குஅபாயம்நேரிடுவதுண்டு. நீராக இருந்த இடத்தில் திடீரென்று தீவுகள் தோன்றுவதுண்டு. இவ்வாறு கடலில் ஒரு தீவு தோன்றியது. புதிதாகத் தோன்றிய இடமல்லவா? அது யாருக்குச் சொந்தம்? எனக்கு, உனக்கு என்று பல நாடுகளும் அதற்காகப் போட்டியிட்டன. இச்சச்சரவு ஒருவாறு தீருமுன் ஒருநாள் திடீரென்று அத்தீவே வெடித்துக் கடலில் மறைந்து விட்டது. சண்டைக்கு இடமில்லாது போயிற்று.

“பல ஆண்டுகள் தூங்கிக் கொண்டிருந்த எரிமலைகள் கூட ஒருநாள் திடீரென்று விழித்துக்கொண்டு தனது அரக்க வேலையைச் செய்யத் தொடங்குவதுண்டு. கும்பகர்ணனைப்போல் நூறுஆண்டுகள் தூங்கிய பின் விழித்தெழுந்த எரிமலைகள் உண்டு. மேற்கிந்தியத் தீவுகளில் மார்ட்டினிக் என்பதும் ஒன்று. அதன் தலைநகர் செயிண்ட்பியர் என்பது. அதன் வடக்கே பெலீ மலை என்று ஒரு சிறு மலை இருந்தது. அது ஒரு காலத்தில் எரிமலையாக இருந்தது. பிறகு தூங்கிப்போய் விட்டது. அதற்கு மீண்டும் உயிர் வராது என்றே மக்கள் நம்பியிருந்தார்கள். தீவுக்கு அது ஒரு ரட்சை என்றும், புயற்காற்று தீவை அணுகாமல் அம்மலை அதை விரட்டிவிடுகிறதும் நம்பி அதன்மேல் அவர்கள் பக்தியே வைத்திருந்தார்கள். அங்கே வந்தவர்கள் எல்லாம் அதன் அழகைக் கண்டு வியந்தார்கள். ஆனுல் 1902-ம் ஆண்டு அது ஒரு நாள் உறுமவும், புகைக்கவும் தொடங்கியது. அப்போதும் மக்கள் அஞ்சவில்லை. பின்னர் வரவிருந்த பேராபத்தின் முன்னறிவிப்பு இது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. பதினைந்து நாட்கள் கர்ஜனை செய்துகொண்டிருந்த மலை ஒருநாட்காலை சுக்கு நூருக வெடித்துவிட்டது. பெரிய தீப்படலம் ஒன்று தோன்றி நகரில் இருந்த 40,000 மக்களையும் நொடிப் பொழுதில் அழுத்திவிட்டது. கடல்நீர் கொதித்து ஆவியாகி மேகமாகி வானில் பரவியது. எரிமலையின் இயக்கத்தால் நச்சு வாயுக்கள் தோன்றின. மக்கள் மூச்சுத் திணறி மூர்ச்சையாகி விட்டனர். அச்சமயத்தில் வாயுக்கள் பற்றி எரிந்து அவர்களைச் சுட்டுச் சாம்பலாக்கி விட்டது.

“இதில் ஒரு விசேஷம் என்ன தெரியுமா? எரிமலையின் அருகே இருந்த மக்கள் தாம் இவ்வாறு மடிந்தார்கள். எரிமலை உறுமத் தொடங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்னிருந்தே கால்நடைகளும், பறவை விலங்குகளும் ஏதோ கிலி பிடித்தவைபோல் இருந்தன. விபத்து நேருமுன் காட்டு விலங்குகளும் பாம்புகளும் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டன. ஆறு அறிவுள்ள மானிடனுக்குமட்டும் மலை செய்த எச்சரிக்கையைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இதைவிடக் கொடிய நாசம் விளைவித்த எரிமலைகளும் உண்டு” என்று நான் கூறினேன்.

“நீங்கள் விஞ்ஞானம் கற்றிருக்கிறீர்களே, எரிமலைகள் எவ்வாறு தோன்றுகின்றன என்று கூற முடியுமா?” என்று என் நண்பர் கேட்டார்.

“புவி என்பது சுமார் 8,000 மைல் விட்டமுள்ள ஓர் உருண்டை, இதன் மேற்பகுதி சுமார் 40 அல்லது 50 மைல் தடிப்புள்ளது. இதைப் புவியின் மேற்புறணி (Crust) என்பார்கள். உருளைக்கிழங்கு போண்டாவைப்போல்...” என்று நான் தொடங்கினேன்.

“என் வயிறு இருக்கும் நிலையில் பலகாரங்களின் பெயரைச் சொன்னாலும்கூட என்னவோ செய்கிறது!” என்று நீலகண்டன் இடை மறித்தார்.

“என் வயிற்றைவிடவா? தவிர, இன்று நாம் உருளைக்கிழங்கு போண்டா சாப்பிடவில்லையே. புவியை உருளைக்கிழங்கு போண்டாவுடன் ஒப்பிடுவது மிகவும் பொருத்தமானது. மாவினால் உள்ள மேற்பொருக்கும், உள்ளே கிழங்குக் கறியும் இருப்பதுபோல் புவிக் கோளத்தின் மேற்புறணியும் அதன் உள்ளே உள்ளீடும் (Core) இருக்கின்றன. போண்டாவை வாணலியிலிருந்து எடுத்த சிறிது நேரத்தில் மேற்புறம் குளிர்ந்துவிடுகிறது. உட்புறம் மட்டும் சூடாக இருக்கும். அதைப் போலவே புறணி சற்றுக் குளிர்ச்சியாகவும், உள்ளீடு கற்பனைக்கும் எட்டாத அளவு வெப்பமாகவும் இருக்கும். புவியின் பரப்பிலிருந்து உள்ளே செல்லச் செல்ல வெப்பமும், அழுத்தமும் அதிகமாகின்றன. பல வேறு காரணங்களால் மேற்புறணியில் மாறுதல்கள் நிகழ்கின்றன. இதனால் பெரு வெடிப்புக்களும், உடைப்புக்களும் தோன்றக்கூடும். புறணியில் ஓர் இடத்தில் பிளவு நேர்ந்தால் உள்ளீட்டுப் பொருளின் அழுத்தம் குறைகிறது. சோடா மூடி கழன்றதும், நீரின் அழுத்தம் குறைந்து அது மேலே பொங்கி வருவதுபோல், உள்ளீட்டுப் பொருள் திரவமாக உருகிக் கற்குழம்பாக மேலே வரத் தொடங்குகிறது. அதில் பல வாயுக்கள் கரைந்திருக்கும். கற்குழம்பு மேலே வரவர அதன் அழுத்தம் குறைகிறது. அதில் கரைந்திருக்கும் வாயுக்கள்



உத்திரவாதத்திற்கும், உன்னத உழைப்பிற்கும்

PHILIPS

பிலிப்ஸ்

ரேடியோ

PHILIPS VALUE FOR MONEY

பிலிப்ஸ் மேஸ்ட்ரோ



பெரிய, அழகான வினீர் போடப்பட்ட, மர காபினெட 7 வால்வுகள் 11 வால்வுகள வேலைகளைச செயவது, சிற்றலைமீது முழுதும் பாண்டு ஸபிரெட செயயபபட்டுளள 5 வேவ பாண்டுகள, 'ஸோனோவிஷன்' த்வனி இன்டிகேடடார் அடங்கிய ஹை-லோ நோட் கனட்ரோல் கொண்ட பை-ஆம்பளி, பிளீவீல டயூனிங, உஷ்ண பிரதேசத்துககு முற்றிலும பரிசோதிககப பெறறது.

பி 6 சிஏ 67எ
விலை ரு.795/-
(வரிகள தனி)

PHILIPS

பிலிப்ஸ் நோவோஸோனிக் ரேடியோ

நாதத்தில ஒரு புதிய உலகம

அனுமதிககப பெற்ற ரேடியோ டீலர்

மாடர்ன் ரேடியோஸ்
கும்பகோணம்

PSPD 18

தஞ்சை, தென்னாற்காடு ஜில்லாக்களுக்கு அதிகாரம்பெற்ற விற்பனை உரிமையாளர்கள்.

மாடர்ன் ரேடியோஸ்

11, பெரியதெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு: 51, கச்சேரி ரோட்,
விழுப்புரம்.

மாதத் தவணையிலும் எல்லா ரேடியோக்களும் கொடுக்கப்படும்.

உங்கள் பூரண திருப்தியே எங்கள் மூலதனம்

அதிலிருந்து வெளிவந்துவிடும். இதனால் அது நுரைத்துக்கொண்டு இன்னும் விரைவாக மேலே வருகிறது இப்போது அது வரும் வழியில் நீர் ஊற்றுக்கள் இருந்தால் நீர் ஆவியாகிக் கற்குழம்பை வலிமையுடன் மேலே உந்துகிறது. இச்சக்திகளால் பாறையும், கல்லும் வெடித்துச் சிதறுகின்றன. தூசும், சாம்பலும், பாறைத்துண்டுகளும் நாற்புறமும் சிதறுகின்றன, வாயுக்கள் எரியும் தன்மை கொண்டவை. ஆதலால் அவைபற்றி எரிந்து மலையில் வாண வேடிக்கை நிகழ்கிறது இயற்கையன்னையின் மகத்தான ஆற்றலைக்கண்டு உலகோர் வியந்து நிற்க நேரிடுகிறது" என்று நான் சொன்னேன்.

"பள்ளிக்கூடத்தில் எதற்கெடுத்தாலும், 'அதன் பயன என்ன?' என்று கேள்வி கேட்கிறார்கள். அதைப்போல் எரிமலையின் பயன் என்ன?" என்று ஐயா கேட்டாள்.

"எரிமலைகளாலும் நமக்குச் சில நன்மைகள் இருக்கத்தாம் செய்கின்றன, புவியின் உள்ளே இருக்கும் பொருள்கள் கற்குழம்பாக மேலே வந்து பரவுவதால் பல உலோகங்களும், மற்றத் தாதுப் பொருள்களும் நமக்கு எளிதில் கிடைக்க வகையேற்படுகிறது. கந்தகம் இல்லாவிட்டால் உனக்கு அநேகமாகத் தீபாவளிப் பட்டாசே இல்லை. இது எரிமலைகள் உள்ள பகுதியில் மிகுதியாகக் கிடைக்கிறது' கற்குழம்பில் வாயுக்கள் கலந்து அதை நுரைக்கச் செயவதால அது மிக இலேசான பஞ்சுபோன்ற பொருளாக மாறி இறுகுகிறது. இதைத் தொட்டால் நுண்ணிய தூளாய்விடும. இப்பொருளைப் 'பமீஸ்' (Pumice) என்பார்கள், மெருகிடவும், சாணை தீட்டவும் இதைப் பயன்படுத்துகிறார்கள். கற்குழம்பு இறுகிய பாறையாகிறது. இதை வெட்டியெடுத்துக் கட்டடம் கட்டப் பயன்படுத்துகிறோம். எரிமலைப் பகுதிகளில் தரைக்கடியில் உள்ள நீர் ஆவியாகி அடைபட்டுக் கிடக்கிறது. இந்நீராவியை வெளியே கொணர்ந்து எந்திரங்களை ஓட்டி மின்சாரத்தைப் பெறுவதில் சில இடங்களில் வெற்றி கண்டிருக்கிறார்கள்! வெப்ப நீர் ஊற்றுக்களில் குளிப்பது வெகுநாட்களாக வழங்கும் சிகிச்சை முறைகளில் ஒன்று. இந்த பம்பாய் நகரத்துக்கு அருகே வஜ்ரேஸ்வரி என்னும் இடத்தில் வெப்பநீர் ஊற்றுக்கள் இருக்கின்றன. அதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று நண்பரைக் கேட்டேன்,

"இதுவரை நான் அங்கே போக வாய்ப்புக் கிட்டவிலலை. நாளை உங்களுக்கும் விடுமுறைதானே. நாளைக்கு அங்கே போகலாம்" என்று நண்பர் என் அனுமதியின்றியே திட்டம் போட்டுவிட்டார்.

"எரிமலையின் ஆற்றல் அணு வாற்றலைபோல் மகத்தானது. ஹவாய் தீவுகளில் 'கிலாவியர்' என்று ஓர் எரிமலை இருக்கிறது. அதன் ஆற்றலைக் கட்டுப்படுத்திப் பயனபடுத்தத் திட்டம் போட்டிருக்கிறார்கள். எரிமலையின் கொடுமையைக் கட்டுப்படுத்தவும் இப்போது மானிடன் முயன்று வருகிறான். உறுமி எச்சரிக்கை செய்யும் எரிமலையின் வாயில் வெடி குண்டுகளைப் போட்டு அதற்குள் இருக்கும் அழுத்தத்தைக் குறைத்து அதை அமைதியாக்க முயன்றிருக்கிறார்கள். ஆற்றல் மிகுந்த அணு ஆயுதங்கள் இந்த வேலைக்கு மிகவும் உகந்தவை இவற்றின் உதவியால் எரிமலையின் கொடுமையையே தீர்க்கும் காலம் வரலாம். சந்திர மணடலத்துக்கு வாணம் அனுப்பும் மனிதன் வேறு என்னதான் செய்ய மாட்டான்?" என்று நணபரைக் கேட்டேன். பதிலே இல்லை. பார்த்தால் நண்பர் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்.

அவசியம் உங்களுக்கு

ஒரு சிறந்த வழிகாட்டி தேவை!



நம் தென்னிந்திய சகோதர, சகோதரிகள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவைகளை சிறந்ததாகவும், நீடித்து உழைக்கக் கூடியதாகவும் தேர்ந்தெடுக்கிறார்கள். அதிலும், ஆபரணங்கள் வாங்குவதில் **"நம்பிக்கை, நாணயம், கை ராசி"** *முதலானவைகள் முக்கியம். அதற்கு பாரதம் பூராவிலும் உள்ள தென்னிந்திய மக்களுக்கு* **"கோபால்தாஸ் ஜுவல்லர்ஸ்"** *ஐ நன்றாகத் தெரியும்.*

வைரம், தங்க ஆபரணங்களுக்கும், வெள்ளிப் பாத்திரங்களுக்கும், கட்டிட வேலைகளுக்கும், பழைய நகைகளை சிறந்த பாணியில் புதுப்பிக்கவும் பிரக்யாதி பெற்றவர்கள்

N, கோபால்தாஸ் & கோ

நகை வியாபாரிகள்

போன்: **85**
121, *பெரியதெரு,*
கும்பகோணம்

போன்: **61**
6, சின்னகடைத்தெரு,
திருச்சி-2

அஞ்ஞானம்

பூவாளூர் சுந்தரராமன்

"என்னமோ, அம்மா! அவன் கிடக்கிறதைப் பார்த்தாலே எனக்கு என்ன சொல்றதுனு தெரியவில்லே; உம்... இருந்தாலும் அந்தக் கோடியாத்து மனுஷன் இருந்தும் இருந்தும் சனிக்கிழமையைப் பார்த்தா கண்ணை மூடி வைக்கணும் அது ஒண்ணுதான் எல்லாத்தையும்விட 'அச்சானியமாகப் படறது!'' என்று ஐந்தாவது தடவையாக அம்மணிப் பாட்டி கோமதியிடம் சொன்னாள்.

''பாவம் அவர் என்ன செய்வார், பாட்டி? அவர் கையிலா பிராணன் இருந்தது. பிடித்து வைத்துக்கொள்ள?

''இதோபார், கோமு! இந்தக் கர்நாடகம் இப்படித்தான் பேத்தும்னு நீ நினைப்பாய் ஆனாலும் எனக்கும் வயது எழுபத்தஞ்சு ஆகப் போகிறது; இதுவரைக்கும் நம்ப ஊரிலே 'சனிப்பிணம்'தனிப்போனதில்லே'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

கோமதிக்கு அந்த முதியவளின் பேச்சு சாகுருவியின் அலறல்போலத் தோன்றிற்று. துக்கம் தொண்டையை அடைத்துக்கொள்ளப் பேச நா எழவில்லை.



‘எதற்கும் சுவாமி மேலே பாரத்தைப் போட்டுவிட்டு இரு! நம்மாலே என்ன ஆகும்?’ என்று மேலுக்கு தைரியமும் சொல்லிவிட்டு நகர்ந்தாள் அம்மணிப் பாட்டி.

வாசல் திண்ணையிலேயே நிலை குத்திட்டு நின்ற கோமதிக்கு உள்ளே செல்ல மனம் விழையவில்லை. என்னென்னவோ பயங்கர நினைவுகள் அவள் மனக் கண்முன் நின்று பேயாட்டமாடின.

2

இரண்டு வாரங்களுக்கு முன் ராகவன் காரியாலயத்துக்குப் புறப்பட்ட பொழுது ‘பிரபுவுக்கு இன்று ஞாபகம் இருக்குமோன்னோ?’ என்று கேட்டாள் கோமதி.

‘எதற்கு?....’

‘அவ்வளவுதான் ஞாபகம்! காரியம் ஆகிற வரைக்கும்தான் கையையும் காலையும் பிடிப்பீர்கள்!.... நேற்று ராத்திரி நாளைக்கு ‘நல்லகாலம்’ என்கிற சினிமாவுக்கு போகலாமென்று சொன்னீர்களே!’

‘ஓ, அதுவா மறந்தேவிட்டேன்; கண்டிப்பாக இன்றைக்குப் போகலாம்; இன்றைக்கு சனிக்கிழமைதானே; ஒரு மணிக்கே வந்து விடுவேன்!’

‘ஆனாலும் யாராவது உங்கள் அருமை நண்பர்கள் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு போய்விட்டால், வீட்டைப் பற்றியோ என்னைப்பற்றியோ ஞாபகம் இருக்காதே?’

‘கண்டிப்பாகப் பாரேன், இன்றைக்கு!’ என்று சொல்லிவிட்டு அவளுடைய ரோஜா நிறக் கன்னத்தை இலேசாகக் கிள்ளிவிட்டு புறப்பட்டான்.

கோமதி ஒரு மணிக்குள் ராகவனுக்கு மிகவும் பிடித்த சிற்றுண்டியான சப்பாத்தியும், ‘வெஜிடபிள்’ கூட்டும் செய்து வைத்துக் கொண்டு காத்திருந்தாள், ஒன்றரை மணி சுமாருக்கு ராகவன் ஒரு ரிக்ஷாவில் வந்து மெதுவாக இறங்கினான். அவன் கண்கள் கோவைப்பழம் போல சிவந்திருந்தன. அவன் கால்கள் தள்ளாடின; வந்ததும் வராததுமாக படுக்கையில் தொப்பென்று விழுந்தான்.

கோமதிக்கு சினிமா ஆசை பறந்து விட்டது. கணவனுடைய உடல்நிலை அவளைப் பதறச்செய்தது.

“உடம்புக்கு என்ன?...” என்று கேட்டுக் கொண்டே அவனுடைய நெற்றியைத் தடவினாள்; உடம்பு அனலாகக் கொதித்தது.

“உம்...... உடம்பெல்லாம் ஒரே வலி!....... காய்ச்சல் அடிக்கிறது போல இருக்கு!.... என்று முனகினான் ராகவன்.

“டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போகட்டுமா?”

“வேண்டாம், கோமு! நாளைக்கு எல்லாம் சரியாகப்

போய்விடும்!'' என்று தடுத்து விட்டான்.

ஆனால் ராகவனுக்கு மறுநாளும் காய்ச்சல் நிற்கவில்லை. டாக்டர் வீட்டிற்கு வந்து மருந்து கொடுத்துவிட்டுப் போனார். ஒரு மாறுதலும் ஏற்படாமலே, விளையாட்டாக நாலைந்து நாட்கள் ஓடிவிட்டன. அவனுடைய முகத்தில் இனம் காணமுடியாத ஒரு விகாரம் படர்ந்து கொண்டது. கோமதிக்கு மிகவும் பயமாகப் போய்விடவே, தன் பெற்றோர்களுக்குத் தந்தி அடித்து வரவழைத்தாள்.

ராகவன் படுக்கையில் படுத்த எட்டாம் நாள்; சனிக்கிழமை; அன்று அந்தத்தெருவில் இருந்தவர்களையே கலக்கும்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவள் வசித்த தெருவில் ஒருவர் இறந்துவிட்டார். அவர் சென்ற சில வருஷங்களாகவே பாரிசவாயுவால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய வீட்டார் எப்பொழுது இந்தக் கிழம் கண்ணை மூடுமோ?'' என்று தவியாகத் தவித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் அவர் இறந்ததும் அவர்களுக்கு ஒரு பெரிய பளு தலையைவிட்டு இறங்கினது மாதிரி இருந்தது. ஆனால் அந்தத் தெருவில் உள்ளவர்கள் அப்படி நினைத்தார்களா என்றால் அதுதானில்லை! 'மனுஷன் இருந்தும் கெடுத்தான்; செத்தும் கெடுத்தான்! சனிக்கிழமையன்னிக்கா செத்துத் தொலையணும் ஒருநாள் முந்தித்தான் சாகக்கூடாதா? அல்லது ஒருநாள் பிந்தித்தான் சாகக் கூடாதா?'' என்று அருவருப்புடன் பேசிக் கொண்டார்கள். அவர்களுடைய மன உளைச்சலுக்கும் காரணம் இல்லாமல் இல்லை. சனிக்கிழமையன்று அந்தத்தெருவில் எவராவது இறந்தால் ஒரு வாரத்திற்குள் இன்னொரு பிணம் விழுந்துவிடும் என்று அவர்கள் அனுபவபூர்வமாக நம்பினார்கள்! அந்த ஒருவாரம் எப்படிக் கழியப் போகிறதோ என்று எல்லோரும் அஞ்சினார்கள்! இதுதான் சமயம் என்று மாடி வீட்டு மார்க்கண்டேயர் மன்னார்குடிக்குத் தன் மகள் வீட்டுக்கு புறப்பட்டுவிட்டார்; தினம் மூன்று முறை வாய்க்காலில் குளிக்கும் அம்மணிப் பாட்டிகூட வாய்க்கால் பக்கம் எட்டிப் பார்க்காமல் வீட்டில் வெந்நீரிலேயே முழுகினாள்; இரண்டிலே மூன்றிலே தவறாமல் இரவு கடைசி 'ஆட்டத்துக்கு' வழக்கமாக போய்விட்டு வரும் குருசாமியும் விளக்கு வைத்தால் வீட்டைவிட்டு இறங்குவதில்லை! எது எப்படி இருக்குமோ என்று சங்கரசாஸ்திரிகள் தன் வீட்டுத் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தார்! தெருவில் எவருக்குத் தலைவலி என்றாலும் உடனே பக்கத்தில் இரண்டு மைல் தூரத்தில் இருந்த லால்குடிக்குப் போய் பெரிய டாக்டரிடம் மருந்து வாங்கிக்கொண்டார்கள். சிலர் ஊசி போட்டுக்கொள்ளக் கூடத் தவறவில்லை!

இந்த இக்கட்டான நிலையில்தான் ராகவன் ஒரு வாரமாக படுத்த படுக்கையாக இருக்கிறான் என்றதும் ஊராருக்கு அவன் மீது பலத்த சம்சயம் ஏற்பட்டுவிட்டது. அம்மணிப் பாட்டி போன்ற 'நாலுந் தெரிந்தவர்கள்' அவனுடைய மரணத்தை தீர்மானித்துவிட்டார்கள்! கோமதிக்கும் நாளாக நாளாகக் கலக்கம் வளர்ந்து கொண்டே வந்தது.

3

பாவம் கோமதி! தன் வாழ்க்கையில் சனிக்கிழமை அவ்வளவு பெரிய 'இடியை'க் கொடுக்குமா என்று அவளால் நமபமுடியவில்லை! மூன்று வருஷங்களுக்கு முன் அவளுக்குக் கல்யாணம் ஆகவில்லை. கோமதியினுடைய தகப்பனார் அப்பொழுது வரன் வேட்டையில் இறங்கியிருந்தார். அவள் ஜாதகத்தைப் பார்த்த ஒரு ஜோசியன் அவளுக்கு சனி வக்கிரித்துக்கொண்டிருப்பதாகவும், அது இடம் பெயர்ந்தால் கலியாணம் ஆகும் என்றும் சொல்லிவைத்தான். அன்று முதல் கோமு ஒவ்வொரு சனிக்கிழமையும் கோவிலுக்குப் போய் நவக்கிரகங்களைச் சுற்றிவந்தாள். ஒரு தடவை அவள் நவக்கிரகங்களின் கோவிலுக்குள் நுழைவதற்கும், ஒரு வாலிபன் அவளை இடித்துக்கொண்டு வேகமாகச் செல்லுவதற்கும் சரியாக இருந்தது ஒரு கணம் தப்பிற்று; இல்லாவிட்டால் அவள் கீழேயே விழுந்திருப்பாள்! அவளுக்கு அந்த வாலிபன் மீது மிகுந்த கோபம் வந்துவிட்டது. அவன் வேண்டுமென்று அப்படி இடித்திருப்பான் என்றுகூட அவள் நினைத்துவிட்டாள்! ஆனால் செக்கில் பூட்டிய மாட்டைப் போல, நவக்கிரகங்களைச் சுற்றிச் சுற்றி வரும்பொழுது அவ்விருவருடைய பார்வையும் சந்தித்தன! அவனுடைய கவர்ச்சியான தோற்றமும், கள்ளமறியாத பார்வையும் வெகு சீக்கிரத்தில் அவளுடைய கோபத்தை ஆற்றியதுடன் அவள் கொண்ட எண்ணத்தையும் மாற்றி

SERVICE IS OUR MOTTO - SAFETY IS OUR BADGE.



ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் (பிரைவேட்) லிட்.,

கும்பகோணம்.

கடந்த 19 ஆண்டுகளாக எமது போக்குவரத்துசாதனங்களால் திருப்தியானமுறையில் சேவைபுரிந்து பொது மக்களின் நல்லாசியும், நன்மதிப்பும் பெற்று வருகின்றோம்.

போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொதுமக்களுக்கு சேவைபுரிவதோடன்னியில் தொழிற்சாலை மூலம் கீழ்க்கண்ட தொழில் வசதிகளால் பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றுவருகின்றோம்.

★ சிறந்த முறையில் பஸ், ஆடோ ஸைக்கிள், டெலிவரி வான் முதலியவைகளுக்கு [Body] பாடி கட்டுவது

★ எலெக்ட்ரோ பிளேட்டிங்

★ ARC, GAS & Spot வெல்டிங்

★ ஸ்பிரே பெயிண்டிங்

★ நவீனமுறையில் லூப்ரிகேஷன் Tecalemit Unit

★ இஞ்சின்களைப் பழுது பார்த்து புதுப்பித்தல்

★ இரும்பு, பித்தளை, வார்ப்பட வேலை (Casting–Ferrous and non - ferrous)

பொதுமக்கள் யாவரும் எமது கும்பகோணம் தலைமைத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து தொழிலை ஆதரிக்க வேண்டுகின்றோம்.

விட்டது. அவள் பார்வை அவன்மீது விழுந்தபோதெல்லாம், அவனுடைய அழகிய உதடுகள் அவளிடம் ஏதோ ரகசியம் கூறுவது போல அவளுக்குப் பட்டது. நவக்கிரகங்களைச் சுற்றிவிட்டு முதலில் அந்த வாலிபன் தான் வெளியேவந்து மணலில் உட்கார்ந்து கொண்டான். கோமதிக்கு ஏனோ அன்று சிறிது நேரம் வெளியே மணலில் உட்கார வேண்டும் போலத் தோன்றிற்று. சிறிது தூரத்தில் போய் உட்கார்ந்துகொண்டாள். ஆனாலும் இருவருடைய விழிகளும் எங்கெங்கோ சுற்றி அலைந்துவிட்டு முடிவில் சந்திக்கத்தான் செய்தன!

அவன் திடீரென்று 'உனக்கு இந்த ஊர் தானே!' என்று சிறிது மரியாதையுடனேயே அவளைக் கேட்டான்.

'ஆமாம்; ஏன் ...' என்று கேட்கும் பொழுது அவள் அநாவசியமான வெட்கத்தையோ, அச்சத்தையோ காட்டவில்லை.

'உனக்கு மேலத்தெரு ராமனுதய்யரைத் தெரியுமோ?...' என்ருன்.

'ஏன்?...'

'உனக்குத் தெரியுமா, சொல்லேன்!'

'தெரியும்; எதற்குக் கேட்கிறீர்கள்?'

'எனக்கும் அவருக்கும் ஓர் அற்ப விஷயத்தில் அநாவசியமாகச் சச்சரவு ஏற்பட்டு விட்டது; அதற்காக இப்பொழுது நான் வருந்துகிறேன்!'

'ஏன், அவருடைய சிநேகம் அவ்வளவு அவசியமா?' என்று தைரியமாகவே கேட்டாள் கோமதி.

"சொன்னுல் சிரிக்கமாட்டாயே!" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அவன்.

"இல்லை... இல்லை!...."

"அவருக்குக் கல்யாணத்துக்கு ஒரு பெண் இருக்காம்!...."

"ஆமாம்!..."

"அந்த பெண் நல்ல லட்சணமாம்; எனக்கு அந்தப் பெண்ணை கொடுக்கவேண்டுமென்று அவர் நினைத்து இருந்தாராம்!',

"எல்லாம் 'ஆம், ஆம்' என்கிறீர்களே; உங்களுக்கு நேரடியாக ஒண்ணுமே தெரியாதே?"

அந்த வாலிபன் பிறகு சொன்ன கதை இதுதான்.

ராகவனுடைய பெற்ருேர்கள் செங்கல் பேட்டை அடுத்த கிராமத்தில் இருந்தார்கள்; அவனுக்கு கலெக்டர் ஆபீசில் வேலை. 'பஸ்' ஸ்டாண்டிற்கு அருகில் ஒரு வீட்டில் வாடகைக்கு ஓர் அறை எடுத்துக்கொண்டு, ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு காரியாலயத்திற்குச் சென்றுவந்தான்; காரியாலயத்தை விட்டதும் அவனும் அவனுடைய நண்பர்களுமாக இரவு ஒன்பது மணி வரையிலும் கடற்கரையில் 'அரட்டை' அடித்துக் கொண்டிருப்பார்கள். அந்த கோஷ்டியில் ராமநாதனும் ஒருவர்.

இரண்டு நாட்களுக்கு முன் அந்த அரட்டைப் பேச்சில் ராமநாத ஐயருக்கும் ராகவனுக்கும் மனஸ்தாபம வந்துவிட்டது. ராமநாத ஐயர் ராஜாஜியின் 'சுவதந்தரா' கட்சியைத் தாக்கிப்பேச, ராகவன் அதை ஆதரித்துப் பேசபேச்சு முற்றி, வாய்ச்சண்டையில் முடிந்தது. அன்று முதல் அவன் கடற்கரைக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டு, கோவிலுக்கு வரத் தொடங்கினுன்.

அதற்குப் பிறகுதான் அவனுடைய நண்பர்கள் அவனுடைய பெரிய நஷ்டத்தை எடுத்துக் கூறினுர்கள். எப்படி அவன்மீது ராமநாத ஐயர் ஒரு கண் வைத்திருந்தார் என்றும், 'அப்ஸரஸ்' போன்ற அவருடைய மகளை அவனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டுமென்று எத்தனை ஆசையாக நினைத்திருந்தார் என்றும் சொல்லி அவனுடைய மனதில் ஒரு புயலை உண்டாக்கிவிட்டார்கள்.

இவ்வளவையும் சொல்லிவிட்டுக் கடைசியாக, 'மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை!' என்று முடித்தான்.

'நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்; நாளை மாலை அந்தப் பெண்ணை நான் இங்கே கூட்டிக் கொண்டு வருகிறேன். நீங்களே அவளுடன் பேசி ஏதாவது வழி கண்டு பிடித்துக்கொள்ளுங்கள்!' என்று சொல்லிவிட்டு மின்னல் போல மறைந்தாள்.

மறுநாள் கோமதி மட்டும் கோவிலுக்கு வந்தாள். அதைக் கண்டதும் ராகவனுக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது.

'அவள் வரவில்லையா?...'

'வந்து...' சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்தாள்.

'சீக்கிரம் சொல்லேன்...' என்று அவசரப் படுத்தினுன்'

'வந்து...'

'என்ன வேண்டிக்கிடக்கு இந்த 'வந்துக்கு?' வேண்டுமென்றே என்னைப் பரிகாசம்தானே செய்கிறாய்?'

'இல்லை...நான்தான் ராமநாத...' என்று முடிக்காமலே முகத்தைத் தன் இரண்டு கைகளாலும் மூடிக்கொண்டாள்!

அவனுக்கு 'மின்சார விசை' தாக்கினதுபோல் இருந்தது. ஆனாலும் சமாளித்துக்கொண்டு 'எனக்கு மட்டும் சந்தேகம்தான், நீயே அந்தப் பெண்ணாக இருப்பாயோ என்று!...' என்று கொஞ்சினான்.

'உங்களுக்கு எப்படி சந்தேகம் ஏற்பட்டது!'

'என்னுடைய நண்பர்கள் உன் வட்டக் கருவிழிகளையும், மின்னல்வெட்டு நடையையும், கருநாகப்பாம்பு பின்னலையும்...எல்லாவற்றிற்கும் மேல் அந்த மருதோன்றியின் வர்ணம்படிந்த விரல்களையும் ஒன்றுவிடாமல் வர்ணித்திருந்தார்கள்!'

'நீங்கள் ரொம்பப் பொல்லாதவர்!...' என்றாள், குழைந்துகொண்டே.

'சரி நம்முடைய சந்திப்பு சனிக்கிழமையன்று ஆரம்பித்தது. ஸ்திரவாரத்தில் ஆரம்பித்தது ஸ்திரமாகத்தான் இருக்கும்' என்று ஆரம்பித்த பேச்சு முடிவில் கலியாணத்தில் முடிந்தது. இப்படி சனிக்கிழமை அவ்விருவர்களுடைய வாழ்க்கையில் இன்பத்தைத்தானே தந்தது என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

4

அடுத்த ஆறு நாட்கள் ஓடிவிட்டன. விடிந்தால் சனிக்கிழமை. எப்படியும் அந்த சனிக்கிழமைக்குள் எவராவது இறந்து விடுவார்கள் என்றே அந்த தெருவில் இருந்த அத்தனைபேரும் நம்பினார்கள்! அதற்குக் காத்துக்கொண்டுகூட இருந்தார்கள்!

அன்று காலையில் ராகவனைப் பார்த்த டாக்டரின் முகத்தில் எவ்வித மாறுதலையும் கோமதி காணவில்லை. வழக்கம்போல ஓர் 'ஊசி' போட்டுவிட்டு "இந்த மருந்தை நான்கு மணிக்கு ஒரு தடவை கொடுங்கள், பார்க்கலாம்?" என்று வரண்ட குரலில் சொல்லிவிட்டு அவர் செல்ல முனைந்தபோது, 'டாக்டர்... இன்றைக்கு?...' என்று மிகுந்த குழப்பத்துடன் கோமதி கேட்டாள்.

'அப்படியேதான், அம்மா இருக்கு, முன்னைக்கு இப்பொழுது திருந்தவுமில்லை; மோசமாக மாறவுமில்லை.'

'எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு, டாக்டர்! பார்த்தவர்கள் எல்லாம் ஏதேதோ சொல்லுகிறார்கள்!...'

'அதற்கெல்லாம் கலவரப்படாதீர்கள், அம்மா! என்னால் ஆனமட்டும் செய்துகொண்டு இருக்கிறேன். கடவுள் இருக்கிறார், எதற்கும்!'

'என்ன டாக்டர், இப்படி சொல்லுகிறீர்களே! நான் என்ன செய்வேன்?' கோமு அழுதே விட்டாள்.

'இதோ பாருங்கள்; எனக்குக்கூட மனசு கலங்கத்தான் செய்கிறது! ஆனால் நிச்சயமாக நம்புங்கள், நேற்று இருந்ததைவிட இன்று சிறிதுகூட மோசமில்லை! நாளைக்கு சரிப்பட்டுவிடும் என்று

நினைக்கிறேன்; நீங்கள் வீணாக அழாதீர்கள்!...' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அப்பொழுதுதான் அம்மணிப்பாட்டி மேலே கூறியபடி அழுத்தந் திருத்தமாகச் சனிப் பிணத்தைப் பற்றிக் கூறிவிட்டுப் போனுள். ஊரின் வழக்கமும் டாக்டரின் 'பிடிகொடாத' பேச்சும் அவளுக்கு மிகுந்த அச்சத்தைக் தந்தன. அந்த ஒரு க்ஷணநேரம் கோடியகத்துக்காரர் சனிக் கிழமையன்று இறக்காமல் இருந்திருக்கக் கூடாதா என்றுகூட நினைத்தாள்!

6

அவளுடைய திகிலடைந்த உள்ளம் அந்தத் தெருவில் வீட்டுக்கு வீடு இருந்தவர்களை எல்லாம் நினைத்துப் பார்த்தது. எவருக்காவது வெகு நாட்களாக உடம்பு அசௌகரியமாக, படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்களா என்று ஆராய்ந்தது. அவளுடைய உள்ளத்துக்கு உரன் அளிக்க எவரும் அப்படிக் கிடக்கவில்லை' எந்தக் குழந்தைக்கும் மாந்தம், வயிற்றில் கட்டி என்று இப்படி வியாதி இருப்பதாக அவள் ஞாபகததிறகு வரவில்லை.

மிகுந்த வயதானவர்கள் பலர் இருந்தாலும் எல்லோரும் 'புளியங்கொட்டை' மாதிரி திண்டு திடமாகவே இருந்தார்கள்! முனிசீப்தார் வெங்கடராமய்யர்...வயது அறுபத்தைந்துக்கு மேலாகிறது; நான்கு பிள்ளைகள்; மூன்று பெண்கள்; எல்லாருக்கும் நல்ல இடத்தில் கலியாணம் ஆகி. குழந்தையும் குட்டியுமாக வாழ்கிறார்கள்; கிழவர் இன்னும் வரப்புக்குப் போகிறார்: உடம்பில் ஒரு நரை, நடுக்கம் இல்லை!

இப்படியே ஒவ்வொருவராக அவள் மனத்திரையில் காட்சி அளித்தனர்!

அம்மணிப் பாட்டிக்குக்கூட ஒரு குறைவுமில்லை! பேரன் பேத்தியுமாக வீடு முழுவதும் நிறைந்திருந்தார்கள்; அவளுக்கு ஒரே பையனுகை இருந்தாலும், மூன்று பெண்களும் உள்ளூரிலேயே வாழ்க்கைப்பட்டிருந்தார்கள். 'தஸ்க்' என்று தும்மினுல் கூட எல்லோரும் சேர்ந்து விடுவார்கள். பாட்டி போகாத க்ஷேத்திரம் ஒன்று பாக்கி கிடையாது. சென்ற வருஷம்தான் காசிக்குப் போய் வந்து பிரமாதமாக சமாராதனை செய்தாள். அவளுக்கு ரிஷி பஞ்சமி விரதம் முதலிய எல்லா நோன்புகளும் நிறைவேறிவிட்டன. அவள் கண்ணை மூடினுல் அவளுடைய சாவு ஜாம் ஜாமென்று கல்யாணம் போல நடந்துவிடும்! கொடுத்து வைத்தவள்! ஆனல் அவள் தேகக் கட்டையும் உடல் நிலையையும் கண்டவர்கள் இன்னும் குறைந்தது பத்து வருஷங்களாவது தள்ளி விடுவாள் என்றே சொன்னுர்கள்!

இப்படி கிழங்கட்டைகள், சாகவேண்டியவர்கள் எல்லோரும் திடமாக இருக்கும்பொழுது முப்பது வயதுகூட நிறையாத தன் கணவனுக்கு 'ஓலை' வரப்போகிறதென்றால் அவள் உடம்பு பதருதா?

அன்று அவளுக்கு ஒரு வேலையுமே ஓடவில்லை. வாழ்க்கையில் வெறுப்பும் விரக்தியுமே தென்பட்டன. அன்று மாலை ராகவனுடைய உடல் நிலை மோசமாகிவிட்டது. அவனுக்கு வரவர மூச்சு விடுவது கஷ்ட .மாகிக்கொண்டே வந்தது. தொண்டையில் 'களகள'வென்று சத்தம் கேட்கத் தொடங்கிற்று. முகத்தில் பிரேதக்களை படர்ந்துவிட்டது. அண்டை அசலில் இருந்தவர்கள் ராகவனைப் பார்த்துவிட்டு கோமதிக்கு ஒரு வார்த்தைகூட ஆறுதல் சொல்லவில்லை. யாவரும் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு கண் கலங்கச் சென்றுர்கள்.

ஆறு மணிக்கு அம்மணிப்பாட்டி கோவிலுக்குப் போய்விட்டு வரும் வழியில் கோமதியின் வீட்டுக்கும் வந்து ராகவனை பார்த்துவிட்டுப் போனுள். அவள் மூலமாக தெருவில் விளக்கு வைத்ததோ இல்லையோ எல்லோருடைய வீட்டிலும் சாப்பாடு ஆகிவிட்டது. ஊர்வழக்கம் அப்படி—பிணம் விழுந்து கிடக்கும்போது சாப்பிடக் கூடாது என்று!

இரவு எட்டு மணிக்குள் தெருவே மசான அமைதியில் மூழ்கிவிட்டது; எங்கோ ஒருநாயின் அழுகுரல் கேட்டது, தொலைவில் ஆலமரத்தி லிருந்து ஓர் ஆந்தை கூவிற்று. இந்த அசாதாரணமான சூழ்நிலை கோமதிக்கு ஒரே பயங்கரத்தைத் கொடுத்தது. கொஞ்சங் கொஞ்சமாகக் கசப்பான உண்மையைப் பற்றிச் சிந்திக்கக்கூட அந்த அமைதி இடம் கொடுத்தது.

ராகவன் இறந்துவிட்டால்.......அவளுடைய எதிர்காலம்?...அவள் நிறுத்திய படிப்பைத் திரும்பவும் ஆரம்பிக்கவேண்டியதுதான்; சிறிதுமறந்து போயிருக்கும்; ஆனுலும் சிறிது கஷ்டப்பட்டுப் படித்தால் எப்படியும் தேறிவிடலாம்; பிறகு 'டிரெயினிங்' போவதா அல்லது டாக்டருக்குப்படிக்கலாமா? 'டீச்சராகப்போனுல் நூற்றுக்கணக்கான குழந்தைகளுடன் பழகலாம்; கள்ளங் கபடமற்ற அந்தச் சிறுவர்களுடன் வெகு சுலபமாகக் காலத்தைக் கடத்திவிடலாம்; நல்ல உத்தமமான சேவை!... ஆனுல் டாக்டராகப் போனுல்!... அதுவும் உயர்ந்த சேவைதான்! காசு பணம் கூட சேரும்; ஆனல் ஓய்ச்சல் ஒழிவு இராது; வியாதிக்காரர்களுடன் பழகி, யமனுடன் போராட வேண்டும்!... எப்படியோ?...

டாண்...டாண் என்று மணி பத்து அடித்தது. ராகவன் பயங்கரமாக இருமினுன். கோமதியின் பெற்றோர்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

அவள் ராகவனைத் தொட்டுப் பார்த்தாள் உடம்பு சில்லென்றிருந்தது. கண்கள் எங்கோ உச்சிமேட்டை மிரள மிரளப் பார்த்தன. இந்த நிலையைப்பற்றி அவள் கேள்விப்பட்டிருக்கிருள்! யமன் அவர்களுடைய கண்களுக்குத் தென்படுகிருனும்! பைத்தியம் போல அவளும் அவன் கண்கள் பார்த்த திக்கையே பார்த்தாள். அங்கு பல்லி ஒன்று ஒரு பூச்சியை விழுங்கக் குறி

உங்கள் சருமத்திற்கு

மிருதுத்தன்மை அளிக்க
அதிக கிளிஸரின்

பாதுகாப்பிற்கு
லனோலின்

கிருமிகளை அழிக்க
ஆக்டமெர்

மகிழ்வளிக்கும் புதுமை மிகுந்த

OK ஓ.கே. சந்தன சோப்

இதோ உங்கள் கனவு நனவாகிறது. பரிபூர்ண அழகும், வசீகரமும், வழி வழியாக வந்த உன்னதச் சிறப்பு மங்காமல், உங்களுக்குச் சுலபமாகக் கிடைக்க வழி, பரவசமூட்டும் புதிய ஓ. கே. சந்தன சோப். பரிசுத்தமான சந்தனத்தைலம் வேண்டிய அளவு இதில் இருக்கிறது. அதோடு நன்மைகள் பல அளிக்கும் நவீன லனோலின்; ஆக்டமெர்; அதிகப்படியான கிளிஸரின் ஆகியவற்றின் தன்மைகளையும் சோதித்துக் கணக்கிடுங்கள். இந்திய டாய்லெட் சோப்புகளிலேயே சிறந்தது இந்த சோப்புதான் எனக் கூறுகிறோம் நாங்கள். ஏனென்றால்,

- வரளச்செய்யும் வெய்யில், காற்று, உஷ்ணம் ஆகியவற்றை எதிர்த்து, மிருதுவான சருமத்தின் பட்டுத் தன்மைக்கு அவசியமான ஈரப்பசையை பாதுகாக்கிறது லனோலின்.
- அழுக்குக் கிருமிகள் மூலம் அபாயம் நேராமல் பாதுகாத்து, சருமத்திற்கு ஆரோக்கியம் அளிக்கிறது ஆக்டமெர்.
- மிகவும் மென்மையான சருமத்திற்கும் இதம் அளிப்பது அதிகப்படியான கிளிஸரின்.

எல்லாவற்றிற்கும் மேலாக சந்தனத்தின் இனிமை மிகு சுகந்தம்

இனும்

ஓ. கே. அறிமுகப்
பரிசளிப்பு

(3 மாதங்களுக்கு மட்டும்)

3 கட்டி ஓ. கே. சந்தனசோப் வாங்குங்கள் கவர்ச்சிகாமான தந்த முலாம் சோப்புப்பெட்டி ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

EP

பார்த்துக்கொண்டிருந்ததை அந்த மங்கின வெளிச்சம் காட்டிற்று! அந்தப் போராட்டத்திற்கும், தன் கணவனுடைய உயிர்ப் போராட்டத்திற்கும் அவளால் வேறுபாடு கற்பிக்க முடியவில்லை!

அந்த சூழ்நிலை—மினுக் மினுக்கென்று ஒளி விடும் தனி விளக்கும், மசான அமைதியும், தன் கணவனுடைய பயங்கரமான தோற்றமும்—அவளுடைய உடலை நடுக்கின.

அந்தச் சமயத்தில், அந்த சூழ்நிலையில் அவளால் கடவுளை நினைத்து வேண்டிக் கொள்ளக்கூட மனநிலை இடங் கொடுக்கவில்லை! ஒரு வாரத்திற்கு முன் அவள் எத்தனையோ தெய்வங்களை வேண்டிக் கொண்டாள் என்பதென்னவோ உண்மைதான்! முக்கியமாக, தன் கணவன் பிழைத்து எழுந்தால் சனீஸ்வர பகவானுக்கு ஓர் அபிஷேகமே செய்வதாக வேண்டிக்கொண்டாள்! இந்த ஒரு வாரத்திற்குள் நம்பிக்கை குறைந்து சீர் குலைந்துவிட்டது. அறையில் இருந்த கடிகாரம் 'டக்டக்' என்று ஒலித்துக்கொண்டிருப்பது போல அவளுடைய நினைவுச் சுழலும் 'எதிர்காலம்' 'எதிர்காலம்' என்ற ஒரே குரலில் சென்று கொண்டிருந்தது.

திடீரென்று அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு 'ஐயோ! பாட்டி! போய்விட்டாயா?' என்று அலறும் குரல் கேட்டது' தொடர்ந்து 'ஐயோ! அம்மா!' என்றும் 'ஐயோ! மாமி!' என்றும் அழுகுரல்கள் கேட்டன.

கோமதிக்குத் தூக்கி வாரிப்போட்டது. விடு விடு என்று எழுந்து வாசலுக்கு ஓடினாள். அம்மணிப் பாட்டி வீட்டுக்குள் ஆண்களும் பெண்களுமாக அவசர அவசரமாக ஓடுவதைப் பார்த்தாள்.

அதற்குள் அம்மணிப் பாட்டி வீட்டுக்குப் போய் விஷயத்தை அறிந்து வந்த பக்கத்து வீட்டு அம்மாள், ஓடோடியும் வந்து 'கோமு! போடி அம்மா, இந்தக் கண்டத்துக்கு உன் புருஷன் பிழைத்துக் கொண்டுவிட்டான்! அம்மணிப் பாட்டி கண்ணை மூடிவிட்டாள்!' என்றாள்.

கோமதியால் நம்பவே முடியவில்லை!

'என்ன, நம்ம அம்மணிப் பாட்டியா! சாயந்தரம்கூடப் பார்த்தேனே!'

'என்னவோ மயக்கமா வர்ரதுனு எட்டுமணி சுமாருக்குப் படுத்தாளாம்; டாக்டரைக் கூட்டிக் கொண்டு வந்து காண்பிப்பதற்குள் மூச்சே நின்னுடுத்தாம்!'

'பாவம், ரொம்ப நல்ல பாட்டி!' என்றாள் கோமதி ஒரு பெரு மூச்சுடன்; ஆனால் மனத்திற்குள் 'நல்லவேளை, இன்றைக்கு சனிக்கிழமையில்லை! என்னமோ அஞ்ஞானம்!' என்று நினைத்துக்கொண்டே உள்ளே போனாள்.

ராகவனுடைய முகம் சிறிது தெளிவடைந்து இருந்தது!

கும்பகோணம் கூட்டுறவு நில அடமான பாங்கு லிமிடெட். T. 785

21, ஸ்ரீ நாகேச்வரன் கீழவீதி, : : கும்பகோணம்.

ஸ்ரீ R. கந்தசாமி மூப்பனர், B. A., B. L., தலைவர்
ஸ்ரீ K. சாரங்கபாணி அய்யங்கார், உபதலைவர்
ஸ்ரீ A. R. ராமய்யர், டிரஷரர்

விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும், முந்திய கடன்களைத் தீர்க்கவும், நில அடமானத்தின்பேரில், ஷை பாங்கு கடன் வழங்குகின்றது. கடனை 15 முதல் 20 வருடங்களில் திருப்பிச் செலுத்தலாம். விவசாயிகள் ஷை பாங்கின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

A. ரெங்காச்சாரி,
காரியதரிசி.

ஏ. சுப்பையா

நல்ல செய்திகளையும் கெட்ட தகவல்களையும் அறிவிக்கும் தபால் கட்டுகளைச் சுமந்து வந்து விருப்பு வெறுப்பின்றி உரியவர்களிடம் அந்தந்தத் தபால்களைச் சேர்ப்பதையே தொழிலாகக்கொண்ட தபால்காரன் அன்றையதினம் விமலாவுக்கும் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்றான்; அது ஒரு சந்தோஷ செய்தி தாங்கிய திருமண அழைப்புப் பத்திரிகைதான், ஆனால் அக்கடிதத்தைப் பார்த்ததும் விஷப்பாம்பு தீண்டியதுபோல அப்படியே மயங்கிவிட்டாள் விமலா.

விமலா ஒரு விபரீதமான பெண். செல்வத்தில் பிறந்து வறுமையில் வளர்ந்தவள். பத்து வயதில் தந்தையை இழந்தாள். அன்னைக்குத் துணை ஆறுதலளிக்கும் குல விளக்கு அவள் ஒருவள் தான். படித்துப்பட்டம் பெற்று உயர்ந்த உத்தியோகம் வகிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் குடியிருக்கும் வீட்டைத் தவிர, தாயின் நகை - நட்டுகள் உள்பட எல்லாவற்றையும் காலி செய்து விட்டாள்.

ஏழ்மையின் இரும்புப்பிடியில் வாழ்ந்தாலும் படிப்பும், பருவமும் அவளது வளர்ச்சிக்கும் வண்ண வனப்பிற்கும் அரண் வகுத்து நின்றன. கல்லூரியில் படிக்கும் அழகுக் கன்னியரின் பல படிகளில் அவள் முதல் வரிசையில் முதலிடம் பெற்று வந்தாள். படிப்பிலும் அப்படித்தான்; பி. ஏ. யில் அவள் முதலாவதாகத் தேறக்கூடும் என்பது மாணவர்கள்—பேராசிரியர்களது ஏகோபித்த அபிப்ராயம்.

அத்தகைய பெண் ஒருநாள் வழக்கம்போல் கலாசாலைக்குச் சென்று கொண்டிருந்தாள். அவள் பின்னால் வந்த இரண்டு மாணவர்கள் 'குசுகுசு'வென்று ஏதோ பேசிக்கொண்டு 'கலகல'வென்று சிரித்தனர். திரும்பிப் பார்த்தாள் விமலா. அந்த மாணவர்களின் பார்வை கலாசாலையின் காம்பவுண்டுச் சுவரின்மீது பதிந்திருந்தது. அவளும் அந்தச் சுவரை நோக்கினாள். சுவரில் ஓர் ஆணுருவமும்- ஒரு பெண்ணுருவமும் கரியினால் வரையப்பட்டிருந்தன. 'விமலா-வேணு' என்று எழுதப்பட்டிருந்தன!

விமலாவின் தலை சுற்றிற்று. வெட்கமும் வேதனையும் அவளை நிலை தடுமாறச் செய்தன. அவளால் நடக்கவே முடியவில்லை. கலாசாலைக்குச் செல்லுவதா, வீட்டிற்குத் திரும்பி விடுவதா என்ற கேள்விகள் சில வினாடி நேரம் அவளைத் தடுத்து நிறுத்தின. இறுதியில் எப்படியோ அவளது கால்கள் அவளை இழுத்துச் சென்றன, காலேஜ் ஹாஸ்டலில் வதியும் அவளது சினேகிதி சியாமளாவின் அறைக்குள் தள்ளிவிட்டது.

உண்மையில் அந்த வேணு யார் என்றே விமலாவுக்குத் தெரியாது. பொதுவாக, அவள் எந்த மாணவனிடமும் பேசுவதில்லை. படிப்புண்டு—அவளுண்டு என்றுதான் இதுவரையில் நடந்து வந்திருக்கிறாள். அப்படியிருக்க, இத்தகைய அபாண்டமான ஒரு பழியை—அவமானத்தை அவள் மீது சுமத்தியவன் யார்? ஏன் அவ்வாறு செய்தான்?

சியாமளா, விமலாவை தெளியவைத்ததும்தான் இத்தகைய கேள்விகள் விமலாவின் உள்ளத்தில் எழுந்தன.

"என்ன விமலா, உடம்பு சரியில்லையா? ஏன் திடீரென்று உனக்கு மயக்கம் வந்தது?" என்று வினவினாள் சியாமளா.

விமலா, தான் சுவரில் கண்ட சித்திரத்தைப் பற்றிக் கூறினாள்.

"..ப்பூ! இதற்காகவா இவ்வளவு வேதனைப் படுகிறாய்? கலாசாலையில் இதெல்லாம் சாவசாதாரணமான விஷயந்தானே! எவனாவது ஒரு குறும்புக்கார மாணவன் செய்திருப்பான். சில மாணவர்களுக்கு வேலையே இதுதானே. உம்... அதுசரி, உண்மையாகவே உனக்கும் வேணுவுக்கும் சம்பந்தம் கிடையாதா? நெருப்பில்லாமல் புகை வெளி வராதே" என்று நளினமாகப் பேசினாள் சியாமளா.

விமலாவின் கண்கள் கலங்கின "சியாமளா! என்னோடு நீண்டநாள்பழகி, என் சுபாவத்தை நன்குணர்ந்த நீயே இப்படிப் பேசுகிறாயே. நான் இதுவரையில் எந்த ஆணுடனாவது பேசியதை நீ பாத்திருக்கிறாயா? சத்தியமாகச் சொல்லுகிறேன், அந்த வேணு யார் என்றே எனக்குத் தெரியாது."

வகுப்புகள் ஆரம்பிப்பதற்கான கடைசி மணி அடித்தது.

சியாமளா, "உம்...எழுந்திரு! வகுப்பிற்குப் போவோம்" என்ருள்.

"எனக்குப் பயமாகயிருக்கிறது, சியாமளா" என்ருள் விமலா.

"ஏன்! உன்னை யாரேனும் விழுங்கிவிட்டார்களா என்ன? சரி, சரி! நேரமாகிறது, போவோம், வா!" என்று சொல்லி விமலாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வகுப்பிற்குச் சென்ருள் சியாமளா.

வகுப்பில் ஒரே கிசுகிசுப்பு. விமலா தன் ஆசனத்தில் அமரும் வரையில் எல்லா மாணவர்களும் அவளையே முறைத்துப் பார்த்தனர். குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள் விமலா.

ஆசிரியர் வந்தார். பாடம் ஆரம்பமாயிற்று. விமலா மெதுவாகச் சியாமளாவிடம் கேட்டாள். "வேணு யார்?"

"அதோ இரண்டாவது வரிசையில் நான்காவதாக உட்கார்ந்திருக்கிருனே அவன்தான் வேணு" என்ருள் சியாமளா.

விமலா, திரும்பி வேணுவை நோக்கினுள். அதைப் பார்த்துவிட்ட மாணவர்கள் 'கொல்' லென்று நகைத்தனர். கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்தவர்கள் 'படபட' வென்று மேஜையின் மீது தட்டினர்.

விமலாவினுல் அங்கு உட்கார்ந்திருக்க முடியவில்லை. சியாமளாவையும் இழுத்துக்கொண்டு வகுப்பிலிருந்து வெளியேறிவிட்டாள். ஆசிரியருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. விளக்கம் பெறுவதற்கு அவர் முயற்சியும் செய்யவில்லை. அமைதி நிலவிய பின்பு அவர் பாடத்தைத் தொடர்ந்தார்

விமலாவும் சியாமளாவும் ஹாஸ்டலை அடைந்தனர். விமலாவின் வேதனையும் துக்கமும் ஒன்று திரண்டு கண்ணீராக வெளிப்பட்டது. அவளுக்கு ஆறுதல் கூறினுள் சியாமளா.

"சியாமளா! நான் இனிமேல் படிக்க போவதில்லை" திடமான முடிவோடு பேசினுள் விமலா.

"அட! உனக்குப் பைத்தியமா என்ன? இந்தச் சாதாரண விஷயத்திற்குப் படிப்பை விட்டுவிடப் போகிருயா?"

"ஆம். உனக்கு இது சாதாரண விஷயமாகத் தோன்றலாம். ஆனுல் நான் பெரிய அவமானமாகக் கருதுகிறேன். மனித இனத்தைச் சேர்ந்தவர்களாகவா நம் வகுப்பு மாணவர்கள் நடந்துகொள்ளுகிருர்கள். சீ! நாகரீகமற்றவர்கள்; படித்தும் பாமரர்கள் போல இருக்கிருர்களே. இவர்களென்ன அக்காள்-தங்கைகளுடன் பிறக்கவில்லையா?" மிகவும் ஆவேசத்துடன் பேசினுள் விமலா.

படிப்பை நிறுத்திவிடவேண்டாம் என்று சியாமளா எவ்வளவோ மன்ருடினுள்.



வசீகரத் தோற்றம் ... ... !

நரையை நீக்க பிரதிதினமும்

‘லீனா’

உபயோகியுங்கள்

அது கேசத்தை இயற்கையாகவே கருமையாக்குகிறது.
லீனா கேசத்தின் பிரச்னைகளை ஆச்சரியப்படும்விதம்
தீர்த்துவைக்கிறது.

ஸௌராஷ்டிரா சுகந்தி ஸ்டோர்ஸ்
அகமதாபாத்—1

சப் டிஸ்டிரிபியூட்டர்கள் :
ஷா. ஏ. நத்மல் & பிரதர்ஸ்
கும்பகோணம், S. India.



புத்திமதிகள் சொன்னாள். ஆனால் விமலா பிடிவாதமாக அன்றோடு கலாசாலைப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள். தன்னுடைய ஏழ்மை நிலையையும், எதிர்காலத்தையும் பற்றி அவள் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மானம்! மானம் ஒன்றுதான் அந்த நேரத்தில் அவளுக்குப் பெரிதாக தோன்றிற்று. அன்றைய சம்பவத்திற்குப் பிறகு அதே மாணவர்கள் மத்தியில் அமர்ந்து படிக்க முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை

வீடே கதியானாள் விமலா. ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே அவளது மூளை சுழல ஆரம்பித்தது. எதிர்காலம் ஒரே இருளாகத் தென்பட்டது. என்ன செய்வதென்றே அவளுக்குப் புரியவில்லை. வேதனை, விம்மல், பொருமல், கண்ணீர்! இவைகளில் தான் ஆறுதலைக் கண்டாள் அவள்.

படித்தவள், பருவப்பெண். வேலையெதுவுமில்லாமல் எவ்வளவு காலந்தான் வீட்டிற்குள்ளேயே அடைந்துகிடக்க முடியும்? யாரையாவது மணந்துகொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தலாம் என்றாலும் அதற்கும் கொஞ்சமாவது பணம் வேண்டுமே. பணத்திற்கு எங்கே போவாள்?

எல்லாவற்றையும்விட, மேலாக, விமலா திடீரென்று கலாசாலைப் படிப்பை நிறுத்தி விட்டதையும், வீட்டைவிட்டு வெளியே வராமல் அடங்கிக் கிடப்பதையும் வைத்து அக்கம் பக்கத்தவர்கள் செய்துகொண்ட விபரீதமான ஊகம், வதந்தியாக மாறி பலரது மத்தியிலும் பரவிக்கொண்டிருந்தது. விமலாவின் காதிற்கும் அந்த வதந்தி எட்டிற்று. அணுவளவும் உண்மைக் கலப்பில்லாத—வெறும் கட்டுக்கதைச் சித்திரத்திற்கு மனம் தாளாமல் படிப்பையே உதறித் தள்ளிவிட்ட அவளை, 'மானமிழந்தவள்' என்று பட்டம் சூட்டிற்று அந்த வதந்தி! அவளால் பொறுக்க முடியுமா?

ஆதரவற்ற நிலைமை, அவதூறு, ஏழ்மை எல்லாம் சேர்ந்து விமலாவைத் திக்குமுக்காடச் செய்தன. அதே சமயத்தில், அவளுக்கு உடலளித்து, உயிரளித்து, தன்னுயிரையும் அவளுக்காகவே வைத்திருந்த அன்னையையும் சூழ்நிலை பாதித்தது. உடல் நலம் குன்றி வியாதிப் படுக்கையில் விழுந்தாள் அவள்.

ஒவ்வொரு விநாடியும் விமலா நரக வேதனை அனுபவித்தாள். வேதனைகளுக்கு ஒரு முடிவும், தன் வாழ்க்கையில் விடிவும் காண முயன்றாள். எவ்வளவு சிந்தித்தும், தற்கொலை ஒன்றுதான் சரியான மார்க்கம் என்று அவளுக்குத் தோன்றிற்று எப்படித் தற்கொலை செய்துகொள்ளுவது என்பதையும் சிந்திக்காமல் விடவில்லை. எத்தனையோ முறைகள்—வழிகள் தென்பட்டன. ஆனால் அந்த வழியில் செல்லுவதற்குப் போதியதைரியம் அவளுக்கு ஏற்படவில்லை.

நடைப் பிணமாக நாட்களை ஓட்டிக்கொண்டிருந்தாள் விமலா. அறிவுக்கும் ஆசைக்கும் விடுமுறை கொடுத்துவிட்டாள். இயற்கையின் போக்கில் தனக்கு விரைவான ஒரு முடிவு கிடைக்கட்டும் என்று ஏங்கி நின்றாள்.

அந்நிலையில் ஒருநாள் திடீரென்று ஒரு வாலிபன் விமலாவின் வீட்டிற்கு வந்தான். அவன் வேறு யாருமல்ல, அவளுடன் கலாசாலையில் படித்த வேணுதான்!

அவனைக் கண்டதும் ஆச்சரியமடைந்தாள் விமலா. ஆத்திரமும் அவளுக்கு ஏற்பட்டது. பின்பு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "வாருங்கள், மிஸ்டர் வேணு. ஏது, என்ன விசேஷம்? என்றாள்.'

நின்றுகொண்டே பேசினான் "மிஸ் விமலா! என்னால் உங்களுக்கு நேர்ந்த அவமானத்திற்காக நான் மிகவும் வருந்துகிறேன். நான் என் மனத்தினால்கூட உங்களைப்பற்றித் தவறாக நினைத்ததில்லை. எந்தச் சண்டாளனோ என் பெயரை உபயோகித்து உங்களை அவமானப் படுத்தி விட்டான். அதனால் நீங்கள் படிப்பையே நிறுத்தி விட்டீர்கள் என்பதை அறிய என்மனம் மிகவும் வேதனைப்படுகிறது என்னால் உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கும், கஷ்டத்திற்கும் நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராகயிருக்கிறேன். முதலில், நான் குற்றமற்றவன் என்று தாங்கள் நம்பினால் அதுவே எனக்குப் பெரிய திருப்தி," அவனது வார்த்தைகளில் உணர்ச்சி ததும்பிற்று.

விமலா, "நான் உங்களைத் தவறாக நினைக்கவில்லை. என் கெட்டகாலம் எவனையோ அவ்வாறு செய்யத் தூண்டிவிட்டது, அவ்வளவுதான்" என்றாள்.

"எவனோ ஓர் அயோக்கியன் செய்த அற்ப விஷயத்திற்காக நீங்கள் ஏன் படிப்பை நிறுத்தினீர்கள்? இவ்வளவு காலமும் நீங்கள் செலவு செய்த பணமும், எடுத்துக்கொண்ட சிரமமும் வீண்தானே?"

"ஆம்! என்ன செய்வது?"

"மிஸ் விமலா! நான் சொல்லுவதைக் கேளுங்கள். உங்கள்மீது நம் பிரின்ஸிபாலுக்கு உயர்ந்த அபிப்ராயமும், அபிமானமும் இருக்கிறது. என்னுடைய செக்ஷனில் படிப்பதற்கு உங்களுக்கு இஷ்டமில்லையென்றால் வேறு செக்ஷனிலாவது நீங்கள் படிப்பதற்கு பிரின்ஸிபாலிடம் சொல்லி நான் ஏற்பாடுசெய்கிறேன். உங்கள் சினேகிதி சியாமளாகூட நீங்கள் படிப்பை நிறுத்திவிட்டதைப்பற்றி மிகவும் வருத்தப் படுகிறாள். ஆகவே மீண்டும் நீங்கள் கல்லூரிக்கு வாருங்கள். இல்லாதபோனால்..."

"மிஸ்டர் வேணு! நீங்கள் என் விஷயமாக எடுத்துக் கொண்ட சிரமத்திற்கு மிகவும் நன்றி, கலாசாலையை நான் அன்றைய

தினமே மறந்துவிட்டேன். வேறு ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லுங்கள்." கண்டிப்பாகப் பேசினுள் விமலா.

"நீங்கள் மீண்டும் கலாசாலேக்கு வரவில்லேயென்ருல் நான் படிப்பை நிறுத்தி விடுவதென்று தீர்மானித்து விட்டேன்."

"ஏன்?"

"அப்படித்தான்! நான் உங்கள் படிப்பிற்கு இடையூருக நின்றேன். அதன் மூலம் உங்கள் எதிர்காலத்தையும் பாழ்படுத்தி விட்டேன். அதற்குப் பிராயச்சித்தமாக என் எதிர்காலத்தையும் கெடுத்துக் கொள்ளப் போகிறேன்."

வேணுவின் பேச்சில் வெளிப்பட்ட அந்தரங்கத்தை உணர்ந்து கொண்டாள் விமலா. அவனுடைய உருவமும் அவளே ஆகர்ஷித்தது. படுபாதாளத்தில் விழுந்து கிடக்கும் தனக்கு அவன் கைகொடுக்கிருன் என்று மனம் பூரித்தாள்.

"மிஸ்டர் வேணு! உங்களுடைய உண்மையான விருப்பந்தான் என்ன?"

"உனக்காக...உம்... உங்களுக்காக என் வாழ்க்கையையே தியாகம் செய்ய நான் தயாராகயிருக்கிறேன்."

"எப்படி?"

"எவனுடைய கற்பனையினுலோ நாம் இருவரும் பிணைக்கப்பட்டோம் அந்தக் கற்பனையை நாம் உண்மையாக்கி விடுவோம்."

இந்த வார்த்தை விமலாவின் உள்ளமாகிய வரண்ட பாலேவனத்தில் நீரூற்று தோன்றியது போலிருந்தது. உடனே அவளால் பதில் சொல்லமுடியவில்லே. சிறிது வெட்கமும் அவளுக்கு உண்டாயிற்று.

விமலாவின் நிலேமையை அவளது முக பாவத்திலிருந்தே நன்கு தெரிந்துகொண்ட வேணு "விமலா! நீ எதற்கும் கலங்க வேண்டாம். நான் இன்னெரு நாள் வருகிறேன். நாம் இருவரும் மனம் விட்டுப் பேசி விரைவில் ஒரு முடிவு செய்துவிடுவோம். நான் வரட்டுமா?" என்று அன்பு ததும்ப வினவினுன்.

விமலாவும் மலர்ந்த உள்ளத்தோடு, புன்னகை பூத்தமுகத்துடன் கனிந்த பார்வையால் அவனுக்கு விடையளித்தாள்.

* * * *

அன்றிலிருந்து அடிக்கடி வேணு விமலாவைச் சந்தித்தான். அவள் மனம் குளிரப் பேசினுன். அவ்வப்பொழுது பண உதவியும் செய்தான். உள்ளத்தால்

இருவரும் ஒன்று பட்டுவிட்டனர் என்று சொல்லும் அளவுக்கு அவர்களது உறவு வளர்ந்துகொண்டிருந்தது.

இங்கிலேயில், விமலாவின் அன்னையை வியாதி பலிகொண்டு விட்டது தன்னந் தனியாக சமுதாயத்தில் விடப்பட்டுவிட்டாள் விமலா. வேணுவைத் தவிர அவளுக்கு வேறு உறவினரே இல்லை என்ருகி விட்டது. ஆதலால் தங்களது திருமணத்திற்குச் சீக்கிரம் ஏற்பாடு செய்யும்படி அவள் வேணுவை வற்புறுத்திஞள்.

"பரீட்சை முடிந்ததும் முதல் நடவடிக்கை நம் திருமணந்தான்" என்று உறுதியாகச் சொல்லிவிட்டான் வேணு.

பரீட்சைக்கு ஆறு மாதங்கள் இருந்தன. அதுவரையில் விமலா எப்படி ஆளேயில்லாத அவளது வீட்டில் தன்னந்தனியாகக் காலந் தள்ள முடியும்? ஒரு வேலையும் இல்லாமல் ஓரிடத்தில் அடங்கிக்கிடப்பது அவளுக்குப் பெரும் பாரமாகத் தோன்றிற்று. வேணுவின் அனுமதி பெற்று சில கம்பெனிகளுக்கு வேலைக்காக மனுப்போட்டாள். அவளுடைய அதிர்ஷ்டம், மாதம் இருநூறு ரூபாய் சம்பளத்தோடு, பிரபலமான ஒரு ஸ்தாபனத்தின் நிர்வாகிக்குக் காரியதரிசியாக நியமனம் கிடைத்தது. நாட்கள் ஒரு தினுசாக ஓடிக்கொண்டிருந்தன.

பரீட்சை நெருங்கிக்கொண்டிருந்ததால் முன் போல அடிககடி வேணுவால் விமலாவைச் சந்திக்க முடியவில்லை. அவனது தொடர்பாலும் ஆதரவாலும் நரகவேதனையிலிருந்து விடுதலை பெற்ற விமலா விரகவேதனை அனுபவித்தாள். வேணு பரீட்சையில் தேற வேண்டும, விவாகததை விரைவில முடிக்க வேண்டும், இல்லற வாழ்க்கையின் இன்பத்தைச் சுவைக்க வேண்டும் என்று ஏங்கித் துடித்துக் கொண்டிருந்தாள்.

ஓர் இளம்பெண், அதிலும் விமலாவைப் போன்ற அழகிய பெண் ஆண்களின் ஆசைப் பார்வையிலிருந்து நிச்சயமாகத் தப்பமுடியாது விமலா வேலை செய்த ஸ்தாபனத்தின் நிர்வாகிக்கு விமலாவின் வனப்பும், வாக்குச் சாதுர்யமும் மிகவும பிடித்துப் போய் விட்டது அவளைத் தனக்குத் துணைவியாக ஏற்றுக் கொள்ளலாம் என்ற ஆசையும் அவர் மனத்தில் எழுந்தது அந்த ஆசையை அவர் பல ரூபத்தில் விமலாவுக்குத் தெரியப்படுத்திஞர். ஆனல் வேணுவின் உருவத்தைத் தன் இதயக் கோயிலில் அவள் பிரதிஷ்டை செய்து விட்டிருந்ததால், நிர்வாகியின் விருப்பத்தை உணர்ந்தும் உணராதவள் போல அவள் நடந்து கொண்டாள். அந்த உத்தியோகமே வேணுவுக்குப் பரீட்சை முடியும் வரையில்தானே என்ற தைரியம் அவளுக்கு உறுதுணையாக நின்றது.

கலாசாலைப் பரீட்சை முடிந்து விட்டது. வேணுவின் வரவை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் விமலா. காலையில் தான் வேலை செய்யும் காரியாலயத்திற்குப் போவதற்கு முன்னரும், மாலையில் காரியாலயத்திலிருந்து வீட்டிற்கு வந்த பின்னரும் "வேணு இப்பொழுது வந்து விடுவான்" என்று எண்ணி ஏங்கிஞள். ஆனல் ஒரு வாரம் ஆகியும் அவன் அவளிடம் வரவில்லை. அவன் தன் சொந்த ஊருக்குப் போய்விட்டான் என்று அவளுக்குப் பின்பு தெரிந்தது,

வேணுவின் போக்கு விமலாவுக்குப் பெரும் புதிராக இருந்தது. அவன் ஊருக்குச் சென்றதைப் பற்றிக்கூட அவள் அவ்வளவு கவலைப்படவில்லை; தன்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் போய் விட்டானே என்றுதான் அவள் வருத்தப் பட்டாள். அவன் அவ்வாறு சென்றதற்குக் காரணங்களை விளக்கி, தன்னிடம் மன்னிப்புக் கேட்டு அவனிடமிருந்து கடிதம் வரக் கூடும் என்று அவள் தன் மனத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டாள்.

ஒவ்வொரு நாளும் வேணுவின் கடிதத்தை எதிர்பார்த்தாள் விமலா. ஒரு மாதம் ஆகியும் கடிதம் வரவில்லை. அவனுடைய விலாசம் தெரிந்திருந்தால் அவளே கடிதம் எழுதியிருப்பாள், தெரியாததால் திண்டாடிஞள். பற்பல விதமான எண்ணங்கள தோன்றி அவள் மனத்தைக் குழப்பின வேணுவின் மீதுள்ள நம்பிக்கையை அவளால் இழக்கவும் முடியவில்லை. பலப்படுத்தவும் இயலவில்லை. எது எப்படியானலும் அவன் தன்னைக் கைவிட மாட்டான் என்று அவள் தனக்குத்தானே தைரியம் சொல்லிக்கொண்டாள்.

இங்கிலேயில்தான் அந்தத் திருமண அழைப்புப்பத்திரிகை விமலாவுக்குக் கிடைத்தது.

வேணுவுக்கும் விஜயா என்ற ஒரு பெண்ணுக்கும் திருமணம் நடைபெறப்போவதாகவும், அநதத் திருமண வைபவத்திற்கு விமலாவும் சென்று மணமக்களை ஆசிர்வதிக்க வேண்டும் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது! அதைப் படித்த விமலாவுக்கு மயக்கம் வராமல் இருக்கமுடியுமா?

மயக்கம் தெளிந்து விமலா தெளிவடைவதற்கு வெகுநேரம் பிடித்தது. வேணுவை அவள் மனத்திஞல் சபித்தாள். அன்று அவள் காரியாலயத்திற்கும் போகவில்லை. சமைத்துச் சாப்பிடவுமில்லை. சிறிது நேரம் உட்கார்ந்து கண்ணீர் வடித்தாள்,

பின்பு படுத்துப் புரண்டு புலம்பினள். சோர்வின் மிகுதியால், துக்கத்தால் துடி துடித்தாள். இறுதியில், உச்சி முதல் உள்ளங்கால் வரையில் போர்த்துக் கொண்டு, இறந்தவள் போலக் கிடந்தாள்.

சூரியன் உச்சிக்குச் சென்றதும், மாலைக்கு இடமளிக்க மலைவாயில் நுழைந்ததும் விமலாவுக்குத் தெரியாது. அவளைப் போர்த்தியிருந்த துணிக்குள் நிலவிய இருளில் அவள் தன்னையும் ஒன்றுபடுத்தி விட்டிருந்தாள்.

அவ்வமயம் வாசற்கதவு தட்டப்பட்ட சத்தம் விமலாவின் காதில் விழுந்தது. "யாரது?" என்று கம்மிய குரலில் படுக்கையில் கிடந்தவாறே கேட்டாள் அவள்.

"நான்தான், கதவைத் திற".

பசியின் மயக்கத்தினாலும் சோர்வினாலும் விமலாவின் காதுகள் அடைத்துப் போயிருந்ததால் வெளியிலிருந்து வந்த குரலின் அடையாளத்தை அவளால் புரிந்துகொள்ளமுடியவில்லை. மெதுவாக எழுந்து சென்று கதவைத் திறந்தாள். சிரித்தவண்ணம் அவள் எதிரில் நின்றான் வேணு!

விமலாவுக்கு அவன் முகத்தில் விழிப்பதற்கே விருப்பமில்லை. கதவை மீண்டும் சார்த்திவிட்டு உள்ளே போவதற்கு அவள் முயன்றாள், ஆனால் வேணு கதவிற்கும் வாசலுக்கும் நடுவே நின்று கொண்டான்.

"ஏன் விமலா, என்மீது உனக்கு இவ்வளவு கோபம்?"

விமலா பதில் சொல்லவில்லை; திரும்பிச் சென்று தன் படுக்கையில் விழுந்தாள். வேணுவும் அவள் பின்னால் சென்று அவளருகில் உட்கார்ந்தான்.

"நான் விஜயாவை மணந்து கொள்ளப் போகிறேன் என்று நீ என் மீது ஆத்திரப்படுகிறாய்; அப்படித்தானே?"

விமலா விம்மி விம்மி அழுதாள்.

வேணு அவள் முகத்தை வருடினான். "விமலா! நீ என்னை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. உனக்கு நான் அனுப்பிய திருமண அழைப்புப் பத்திரிகையில் உள்ள விஜயா நீதான், வேறு யாருமல்ல!"

வேணுவை ஏறிட்டுப் பார்த்தாள் விமலா "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று வினவினாள். ஆச்சரியம், ஆனந்தம் ஆவேசம்

அதிவெண்மையான சலவைக்குச் சிறந்தது
சுலபமான முறையில் துணிமணிகளுக்குக் கெடுதி
யில்லாமல் வெண்மை தரக்கூடியது

'ஜெயபால் சோப்'

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எங்கள் சோப்புகளை வாங்கி
உபயோகித்து உண்மை தெரிந்து ஆதரவளிக்க
வேண்டுகிறோம்.

Pro: U. பெருமாள் வன்னியர்
ஜெயபால் சோப் ஒர்க்ஸ்
நாச்சியார்கோவில் P. O.
கும்பகோணம் S. Ry.

ஆகிய மூன்றும் அவள் தொனியில் கலந்து நின்றன.

"நான் சொல்லுவது உண்மை விமலா? அந்த விஜயா நீதான்;" சிரித்துக்கொண்டே சொன்னான் வேணு.

படுத்திருந்த விமலா எழுந்து உட்கார்ந்தாள், "நீங்கள் சொல்லுவதை என்னால் நம்ப முடியவில்லை" என்றாள்.

"நீ நம்பினாலும் சரி, நம்பாத போனாலும் சரி. இன்றிரவு நீ என்னோடு ஊருக்குப் புறப்படவேண்டும். உன்னை அழைத்துச் செல்லுவதற்கு என் பெற்றோர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்தில் அவர்களை இங்கு அழைத்துவரப் போகிறேன். நீ சீக்கிரம் உன்னை அலங்கரித்துக்கொள்."

விமலாவின் உள்ளம் குதூகலத்தால் துள்ளிக் குதித்தது. சோர்வெல்லாம் எங்கோ பறந்துவிட்டது. "அதுசரி..., என் பெயரை ஏன் விஜயா என்று மாற்றினீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து குளியறைக்குச் சென்றாள்.

வேணுவும் விமலாவின் பின்னால் நடந்தான். "உனக்கு அனுப்பிய பத்திரிகையில் மாத்திரந்தான் விஜயா என்று அச்சடிக்கப் பட்டிருக்கிறது. மற்றெல்லாப் பத்திரிகைகளிலும் விமலா என்றுதான் இருக்கிறது. இதோபார்!" என்று சொல்லி தன் ஜேபியிலிருந்து ஒரு திருமணப் பத்திரிகையை எடுத்து அவள் கையில் கொடுத்தான் அவன்.

விமலா, "இப்படியெல்லாமா ஒரு பெண்ணின் மனத்தைச் சோதிப்பது? பரீட்சை முடிந்ததும் என்னிடம் சொல்லிக்கொள்ளாமலே ஊருக்குப் போனீர்கள் அங்கிருந்து ஒரு கடிதம் கூடப் போடவில்லை. ஒரு மாதத்திற்குப் பின்பு திடீரென்று, 'விஜயாவுக்கும் உங்களுக்கும் திருமணம்' என்ற கடிதம் வந்தது என்றால் என் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? உம்... அதுசரி... எனக்கு அனுப்பிய கடிதத்தில் ஏன் விஜயா என்று போட்டீர்கள்?" என்றாள்.

"நான் போடவில்லை. திருமணப் பத்திரிகை அச்சடிப்பதற்குக் கொடுத்தோம். 'புருப்' பார்ப்பதற்காக நான் அச்சாபீசுக்குச் சென்றேன். என்னிடம் அந்த 'புருப்' பில் விமலாவுக்குப் பதில் விஜயா என்றிருந்தது, அதைப் பார்த்ததும் என் மூளையில் ஒரு விபரீதமான ஆசை எழுந்தது. அன்று, கலாசாலையில் என் பெயரை உன் பெயரோடு பிணைத்ததற்காக நீ படிப்பையே விட்டுவிட்டாய் அல்லவா? இப்பொழுது என் பெயரோடு வேறொரு பெண்ணின் பெயரைப் பிணைத்தால் நீ என்ன செய்வாய் என்று பார்க்கவேண்டும் என்பதுதான் அந்த ஆசை. ஆதலால், விஜயா என்ற பெயருடன் ஒரேயொரு பத்திரிகையை மாத்திரம் அச்சடித்து வாங்கி உனக்கு அனுப்பிவிட்டு, விஜயாவை விமலா என்று திருத்திக்கொடுத்துவிட்டேன். அவ்வளவுதான்.

"நான் உன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் ஊருக்குச் சென்றதும், ஒரு மாதம் வரையில் உனக்குக் கடிதம் போடாமல் இருந்ததும் எதற்குத் தெரியுமா? உன்னை நான் மணந்து கொள்ளுவதற்கு என் பெற்றோர்கள் சம்மதத்தைப் பெறுவதில் நான் அவ்வளவு சிரமப் பட வேண்டியிருந்தது, ஊரில் நான் என்னென்ன தந்திரங்களையெல்லாம் கையாண்டேன், எப்படியெல்லாம் என்பெற்றோர்களைப் பயமுறுத்தினேன் என்பதையெல்லாம் சொல்லப்போனால் அது ஒரு பெரியகதையாகிவிடும். இந்த விவரத்தையெல்லாம் நம் மணம்முடிந்த பின்பு உன்னிடம் சொல்லுகிறேன். உம்...! நான் போய் வரட்டுமா? இன்னும் அரை மணி நேரத்திற்குள் நீ நன்கு அலங்கரித்துக் கொண்டு ரம்பை போல இருக்கவேண்டும் நான் என் அன்னை, சகோதரிகளோடு திரும்பி வருவேன்."

வேணு நகர்ந்தான். குளியறையில் நின்ற விமலாவின் மனம் அவன் பின்னாலேயே சென்றது.

சித்திரங்களில் சிறந்தவை
அஜந்தா
வர்ணங்களில் வனப்பு மிகுந்தவை
ஸ்பார்ட்டன் Spartan

Addisons PAINTS

அடிஸன்ஸ் பெயின்ட்ஸ் & கெமிகல்ஸ்
பிரைவேட் லிமிடெட், செம்பியம், மதராஸ்-11

APG-58

கௌசானியிலிருந்து பனிமூடிய இமாலயத் தோற்றம்

லெக்ஷ்மணபுரியா

"எனக்கு 'டாமிள்' கூட வரும். நான் 'டான்ஜோர்' போயிருந்த பொழுது அங்கு அந்த பாஷையைக் கற்றுக் கொண்டேன். 'மெஜூரா'வில் 'டாமிள்' அவ்வளவு நன்றாக இல்லை" என்று ஒரு தெலுங்கு நண்பர் சமீபத்தில் என்னிடம் பேசியபொழுது எனக்கு அவர் 'டாமிளி'ல் இடி விழாதா அல்லது அவர் கழுத்தைப் பிடித்து நெறிக்கக் கூடாதா என்று தோன்றிற்று. அவர் தெலுங்கர், அதுவும் அலகாபாத் வாழ் தெலுங்கராதலால் கங்கைக்கரை கோதுமை அவர் கழுத்தை வண்டியின் கட்டைப்போல் வளர்த்திருந்தது. இந்தப் பிரகிருதிதான் எனக்கு 'லக்னௌ' எப்படித் திரிந்தது என்று விவரித்தார்.

வருஷம் 1931 என்று ஞாபகம். பண்டித மோதிலால்நேரு இறந்து தேசம் துக்கத்தில் ஆழ்ந்திருந்த சமயம், அந்த நாளில் ஏதாவது சம்பவம் நிகழ்ந்தால் மதுரையிலிருந்தோ அல்லது தஞ்சையிலிருந்தோ அதைப்பற்றி ஒரு நொண்டிச்சிந்து கிளம்பிவிடும். காலணாவுக்கு ஒரு புத்தகம். அதை விளம்பரப்படுத்துபவர்கள். ரயிலில் பாடுபவர்கள். காதில் வலது கையை வைத்துக் கொண்டு தஞ்சையில்பாட ஆரம்பித்தால் கும்பகோணம் வருமுன் கையில் இருந்த புத்தகங்கள் தீர்ந்துவிடும். இந்த ரகத்தை சேர்ந்த கவிதானோ என்னவோ பண்டிதரின் மரணத்தைப்பற்றி ஒரு பாட்டு கவனம் செய்திருந்தார். அதை இசைத்தட்டில் ஸ்ரீமதி சுந்தராம்பாள் அருமையாகப் பாடியிருந்தார். சமயத்தில் கல்யாணங்களில் கூட இந்த இசைத் தட்டை அம்பிப் பையன் வைத்து ஓட்டிவிடுவான். 'பறிகொடுத்தோமே மனம் பரிதவித்தோமே' என்று ஆரம்பமாகுமுன் பெண்ணைப்பெற்றவர் பல்லை நெறிப்பார். அம்பி அந்தர்த்தியானமாகிவிடுவான், கிராமபோன் சங்கீதம் முற்றுப்பெறும்.

அந்தத் தட்டில்தான்:

''பிப்ரவரி தேதியாறில்.
... ...
எப்படி லெக்ஷ்மணபுரியில்
இறந்த மாயமே''

நைனிதால் ஏரி

லக்னௌவா?

என்ற அடிகள் வருவது வழக்கம். லக்ஷ்மண புரி எங்கு இருக்கிறது என்று அப்பாவைக் கேட்க பயம். ஏனென்றால் ஆங்கில இலக் கணத்தையும் பூகோளத்தையும் கையில் எடுத்துக்கொண்டால் நாள் இரண்டானாலும் விடமாட்டார். ''சரி, இந்தப் பரந்த உலகத்தில் ஊருக்கா குறைவு? லக்ஷ்மணபுரி இந்தியாவில் தான் இருக்கவேண்டும்'' என்று லக்ஷ்மண புரிகவலையை விட்டுவிட்டேன். வயதானபிறகு சரித்திரம்வாசிக்கும்பொழுது பண்டிதமோதி லால் நேரு லக்னௌவில் இறந்தார் என்று தெரியவந்தது. ''அம்ரிட்ஸர்'' என்ற ஊரை அமிர்தசரஸ் என்றும் ''அம்ரிட்கௌர்'' என்ற மாதுவை அமிர்தகௌரி என்றும் விரிவாக்கும் தமிழ்வாணர் யாரோதான் 'லக்னௌ'வை லக்ஷ்மணபுரியாக்கியிருக்க வேண்டும் என்று சமாதானம் செய்துகொண்டேன். லக்னௌ வுக்கும் லக்ஷ்மணபுரிக்கும் என்ன சம்பந்தம்? ''இருக்கிறது'' என்றார் 'டாமிள்' பேசும் தெலுங்கு நண்பர்.

ராமர் ஆண்ட இடம் அயோத்தியாபுரி. இது தான் அயோத்தி என்று குறுகி பிறகு அவத் என்று முஸ்லிம்கள் ஆட்சிகாலத்தில் ஆயிற்று. அயோத்தி இன்னும் இருக்கிறது. ஸரயூ நதிக்கரையில் ராமர் ஆண்ட அயோத்தி ஒரு குக்கிராமமாக இருக்கிறது, இங்கிலாந் தில் ஷேக்ஸ்பியர் வாழ்ந்த இடம் என்றால் அதை மிகவும் பிரமாதப்படுத்துவதுடன் ஜனங்கள் பார்க்கவென்று கண்காட்சிச் சாலை ஏற்படுத்தி கவியின் ஆயுட் காலத்தில் உபயோகப்படுத்திய பொருள்கள், கையெழுத் துப் பிரதிகள் முதலியவற்றை அங்கு வைக் கிறார்கள். அயோத்தியில் பண்டா என்ற பண்டாரம் சொல்லுவதைத் தான் வேத வாக்காகக் கருத வேண்டும். "இங்கு தான் ராமர் உட்கார்ந்து சீட்டாடினார்" என்று சொல்லுவதுதான் பாக்கி. சில பண்டாக் களுக்கு சீதா சுயம்வரம் எங்கு நிகழ்ந்தது என்றுகூடத் தெரியாது. நிற்க.

கே. ஸ்ரீநிவாஸன்

ராமர் ஆண்ட அயோத் திக்கு அருகே அவர் தம்பி லக்ஷ்மணன் ஒரு நகரத்தை



காசி — கங்கைக்கரை

ஸ்தாபித்தாராம் இது தான் லக்ஷ்மணபுரி, இன்றைய லக்னௌ. ஏன் அயோத்தி மறைய வேண்டும்; லக்ஷ்மணபுரி தழைக்கவேண்டும் என்பதற்கு என் தெலுங்கு நண்பர் அருமை யானவியாக்யானம்செய்தார். "லக்ஷ்மணனைப் போன்ற தம்பி பிற்காலத்தில் உலகில் அவ தரித்ததில்லை, தன் வாழ்நாளில் கண்ணிமை போல தன்னைக் காத்து சேவை செய்த தம்பியின் பெயர் ஸ்தாபிதம் ஆகவேண்டும் என்பது ஸ்ரீராமரின் இச்சையாக இருந்திருக் கலாம் என்றார். மிகவும் பொருத்தமான வியாக்கியானம் என்று எனக்குப்பட்டது.

லக்னௌ டில்லிக்குக் கிழக்கே 300 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கிருந்து ஹிந்துக் களின் புனித க்ஷேத்திரமான அலகாபாத் சுமார் 90 மைல். அங்கிருந்து காசி 80 மைல். லக்னௌ உத்தர பிரதேசத்தின் தலைநகரம் என்றாலும் சுமார் 50 மைல் தெற்கேஉள்ள கான்பூரில் அமோகமாக பஞ்சாலைகளும்மற்ற தொழிற்சாலைகளும் மண்டிக் கிடக்கின்றன. கான்பூரில் லக்னௌவில் உள்ளதை விட ஜனத் தொகை இருமடங்கு. கான்பூரில் தனம் சிருஷ்டி செய்யப்படுகிறது. லக்னௌ வில் சேர்த்துவைக்கப்பட்ட தனம் விரயம் செய்யப்படுகிறது. கான்பூர் உழைப்பாளி கள் நிறைந்த நகரம். லக்னௌ உல்லாச வாசிகள் நிறைந்த பெருங்காய டப்பா. பழைய வாசனைதான் வீசுகிறதேதவிர, வாசனையை உண்டாக்கிய பொருள்கள் மறைந்து விட் டன. பழைய நாளில் 10 வேலிக் குடித்தனம் செய்திருக்கலாம். மைனர் விளையாட்டில் எல்லாவற்றையும் காலி செய்த மிராசுதாரி டம் என்ன மிஞ்சுகிறது? வெறும் முள் வேலி களும் தாத்தா கட்டி வைத்து விட்டுப்போன மாடிவீடும்தான். அதே மாதிரி லக்னௌவின் பண்டைய நாள் பெருமையை முரசடிக்க பல பெரிய நவாப் கட்டிடங்கள் இன்று இருக்கின்றன. பல கட்டிடங்களில் சர்க்கார் காரியாலயங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர் அரண்மனை பாழடைந்ததுபோல பழைய கட்டிடங்கள் ஜீர்ணம் ஆகாமல் அவைகளைப் பாதுகாக்கும் உத்தரப்பிரதேச சர்க்காரை கட்டாயம் மெச்சவேண்டும்,

சுமார் 35 வருஷங்களுக்கு முன் உத்தரப் பிரதேசத்தின் தலைநகரம் அலகாபாத்தாக இருந்தது. இன்றுகூட அலகாபாத் இந்த மாகாணத்தில் ஒருமுக்கியநகரம். ஏனென்றால் அகில இந்தியப் பிரசித்திபெற்ற அலகாபாத் ஹைகோர்ட் இன்னும் அந்த நகரில் தான் இருக்கிறது. உ. பி. யின் அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸ், சர்க்கார் அச்சகம், கல்வி டைரக்டர் காரியாலயம் முதலியவை அலகா பாத்தில்தான் இருக்கின்றன. (நல்ல வேளை; எல்லா ஆபீஸ்களும் லக்னௌவில்தான் இருக்கவேண்டும் என்று உ. பி. அரசியல் வாதிகள் இதுவரை கூப்பாடு போடவில்லை) உண்மையில் உ. பி. யில் லக்னௌ, அலகா பாத், பனாரஸ் இம்மூன்று நகரங்களுக்கு தனித்தனியே மகிமை இருக்கத்தான் இருக் கிறது. நிற்க

எப்படி லக்னௌ உ. பி. யின் தலைநகரமா கிற்று என்பதைப்பற்றி ஒரு குறிப்பு உள் ளது, அந்த நாட்களில், அதாவது பிரிட்டி

மகாமேளா — (அலகாபாத்)

ஷார் ஆண்டகாலத்தில், கவர்னர் தானே சர்வ வல்லமை பொருந்தியவர்? 1921 முதல் 1925 வரை உ. பி. யின் கவர்னராக இருந்த ஸர் ஹார்க்கோர்ட் பட்லரும் மகமூதாபாத் அரசரும் இணைபிரியா நண்பர்களாம். ஒரு சமயம் இருவரும் உடல்நலம் சரி இல்லாமல் போனதால் சிறிது நீடித்த காலம் சந்திக்க முடியவில்லையாம். இப்படி ஏன் ஏற்பட வேண்டும்? மகமூதாபாத்துக்கு அருகிலேயே அதாவது கோடை வாசஸ்தலமான நைனி தாலுக்கும் அலகாபாத்துக்கும் நடுமத்தியில் தலை நகரை அமைத்து விடுவது என்று ஸர் ஹார்க்கோர்ட் தீர்மானித்து 1921-ல் லக்னௌவில் அஸ்திவாரம் போட்டாராம். இப்பொழுது மக்கள் சபையும் சர்க்கார் காரியாலயங்களும் கொண்ட கௌன்ஸில் ஹௌஸ் கட்ட மகமூதாபாத் ராஜாவும் நன்கொடை கொடுத்தாராம்.

லக்னௌவில் உள்ள கௌன்ஸில் ஹௌஸ் பண்டைய நாள் கம்பீரத்தையும் கட்டிடம் கட்டுவதன் அழகுக்கும் பண்புக்கும் கொடுக்கப்பட்ட ஸ்தானத்தையும் எடுத்துக் காட்டுகிறது. நடு மத்தியில், இரண்டாவது தளத்தில், மக்கள் சபை. வட்டத்திலிருந்து ஆரம் பிரிந்து போவது போன்ற காரியாலய சிறகுகள். தேவையென்றால் எந்த இலாகா காரியதரிசியும் சபைக்கு தன் ஆபீஸிலிருந்து ஒரு நொடியில் வந்துவிடலாம்.

மக்கள் சபை ஒரு காளிங்கராயன் கோட்டையை ஒத்தது. எந்தப் பக்கத்திலிருந்தும் அதற்குள் நுழையலாம். வட்ட வடிவமான இந்த சபையின் சுவர்களின் மேல் தேக்கு மரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. பாதி கோள வடிவம் உள்ள ஓட்டிலிருந்து 'சண்டாவியர்' என்று சொல்லப்படும் அழகு கண்ணாடி விளக்குகள் தொங்குகின்றன. இருபக்கங்களிலும் அங்கத்தினர்கள் உட்கார்ந்து படிக்கவோ, சம்பாஷிக்கவோ, 'லௌஞ்ச்' என்று சொல்லப்படும் விச்ராந்தி அறைகள் உள்ளன. (இன்று இவைகளில் உள்ள சாய்வு ஆஸனங்களிலும் சோபாக்களிலும் பாதி கால்கள் வரை ஒதுங்கிய வேஷ்டியுடன் அங்கத்தினர்கள் கொறட்டை விடுவது சகிக்க முடியாத ஆபாச காட்சி.)

தம்பி லக்ஷ்மணனின் ஞாபகத்தை ஜனங்களுக்குக் கொடுத்த லக்ஷ்மண 'திலா' என்று குன்றுபோன்ற உயர்ந்த ஸ்தலம் மச்சி என்ற கோட்டையில் இருக்கிறது, ரூகாரா என்ற கிராமம் பாணாசூரனின் மகளான ரூகாவை ஞாபகமூட்டுகிறது. ரூகா கிருஷ்ணபரமாத்மாவின் பேரனான அனிருத்தனை கடத்தி சென்றதாகவும் ஸ்ரீ கிருஷ்ணனும் அர்ஜுனனும் அவனை மீட்டதாகவும் புராண வரலாறு. அர்ஜுனபுரி என்ற கிராமம் இந்த சம்பவத்தை ஞாபகமூட்டுகிறது.

லக்னௌவுக்கு வருபவர்களுக்கு மிருகக் காட்சிசாலை ஒரு கண்காட்சி. "என்ன ஸார், மிருகக் காட்சி சாலை. எல்லா ஊரிலும் ஒன்று தானே?" என்று நான் அலுத்துக்கொண்டபொழுது என் நண்பர் "உமக்குத் தெரியாது. உள்ளே வந்தால் மிருகங்கள் பார்த்து



கௌன்ஸில் ஹௌஸ்

அனுபவிக்கும் காட்சியை நீங்கள் பார்க்கலாம்'' என்றார்.

லக்னௌ மிருகக் காட்சி சாலையை நல்ல மரங்களும் செடிகளும் உள்ள பூங்காவைப் போல் வைத்திருக்கிறார்கள். ஆனால் உ. பி. வாசிகளில் பலர் தலை மயிரை கழுத்து வரை பரட்டையாக வளர்த்திருப்பதுபோல் புல்லும் அடர்ந்து வளர்கிறது; அதை வெட்ட வேண்டும் என்று யாருக்கும் தோன்றுவதில்லை.

காண்டாமிருகம் இருக்கும் இடம் எனக்கு மிகவும் பிடித்தது. ஏனென்றால் இந்த மிருகம் பார்ப்பவர்களுக்கு தன் பின் பாகத்தை மட்டும் காட்டிக்கொண்டு அலட்சியமாக கம்பி கிராதிகளுக்கு அப்புறம் உற்று நோக்கிக்கொண்டிருந்தது. ''என்ன, இந்த காண்டாமிருகத்துக்கு என்ன அலட்சியம் பார்த்தீர்களா?'' என்று என் நண்பரைத் தூண்டினேன். "அலட்சியம் இல்லை ஸ்வாமி, அது கண்காட்சியை அநுபவிக்கிறது''.'' என்றார். "என்ன கண்காட்சி?''. "கம்பி வேலிக்கு மறுபுறம் பாரும்'' என்றார் நண்பர்.

கம்பிக்கு அப்பால் சில சிறு பங்களாக்கள் தெரிந்தன. "ஆம், அங்கு சில கட்டிடங்கள் தெரிகின்றன.'' என்றேன். "அவை மிருகங்களுக்கு கண்காட்சி அல்லவா?'' என்று நண்பர் கோடியில் உள்ள பங்களா முக்கிய மந்திரியுடையது, அடுத்தது ஸ்ரீதிரிபாதியுடையது என்று மந்திரிகளின் பெயர்களை அடுக்கிக்கொண்டே போனார். மிருகங்கள் பார்க்கும் கண்காட்சி என்ன என்று அப்பொழுதுதான் விளங்கிற்று. பலவிதத தலைமயிர் மோஸ்தருடனும் பலவித உடைதினுசுகளுடனும் உலவி வரும் மந்திரிகளை காண்டா மிருகம் தினம் பார்த்து "ஐயோ பாவம் கம்பிக்குள் இவர்களை அடைத்து வைத்திருக்கிறார்களே'' என்று அனுதாபப்படலாம். கம்பிக்கு ஒருபுறம் நின்று நாம் மிருகங்களைப் பார்த்தால் மறுபுறம் இருக்கும் அவை நாம் கூண்டில் அடைபட்டு இருப்பதாக நினைக்கலாம் அல்லவா?

லக்னௌவில் மிகவும் அவசியம் பார்க்க வேண்டிய கட்டிடம் "பூல்பூலியான்'' என்ற விசித்திர இடம் உள்ள இமாம்பாரா என்ற பிரும்மாண்ட கட்டிடமும் ரூமிதர்வாஜா என்ற சிருஷ்டியும். இந்த இமாம்பாரா எப்படிக் கட்டப்பட்டது என்பதுபற்றி ருசிகரமான சரித்திரக் குறிப்புகள் உள்ளன. அவத் வம்சத்தை ஸ்தாபித்தவர் ஸாதத்கான் என்ற பிரசித்திபெற்ற வீரர். இவருக்குப்பின் வந்த மூன்று வாரிசுகள் பைஸாபாத்தை தங்கள் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். அஸாவுத்தௌலா என்ற நான்காம் வாரிசு தன் தலைநகரை லக்னௌவுக்கு மாற்றினார். இவர் ஆடம்பரப் பிரியர். இவருக்கு வாழ்க்கை லட்சியமெல்லாம் திப்புவிடம் எவ்வளவு வைரம் உள்ளது, நைஜாமிடம் யானை ஜாஸ்தியா; தன்னிடம் ஜாஸ்தியா என்று கணக்கெடுப்பது தான். 1784-ல் சாலிஸாபஞ்சம் என்ற பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது ஜனங்களுக்கு ஜீவனமார்க்கம் தேவை ஆயிற்று. அப்பொழுதுதான் அஸாவுத்தௌலா எதேஷ்டமாகப் பணம் செலவு செய்து இந்த இமாம்பாராவைக் கட்டினாராம். பெரிய மனுஷர்கள் என்று சொல்லப்படும் வர்க்கத்தாருக்கு உழைப்பது என்பது கௌரவக் குறைவு அல்லவா? அவர்கள் அவமானப்படாமல் உழைக்க அஸாவுத்தௌலா இரவில் அவர்களுக்குக் கட்டிட வேலை கொடுத்தாராம்.

இமாம்பாராவின் விசேஷம் என்னவென்றால், இது சிற்ப அம்சங்களில் மொகலாய மோஸ்தரை அனுசரிக்காமல் தனக்கே பிரத்தியேகபாணியில் அமைந்திருக்கிறது. மேற்கத்தி கட்டிடக் கலப்பு இல்லாத இந்த இமாம்பாரா 162 அடி நீளமும் 53½ அடி அகலமும், இருபுறங்களிலும் வராந்தாக்களும் கொண்டது. உலகத்திலேயே மிகவும் நீளமான ஹால் என்று புகழ்பெற்ற இந்த இமாம்பாராவில் வளைவு ஓட்டைத் தாங்க கம்பங்களோ, வௌவால் வளைவு தாங்கிகளோ கிடையா. சாதாரண காரையைக் கொண்டு தஞ்சை பெரிய கோவிலைக் கட்டியதுபோல இங்கு சிற்பி அபார வேலைத் திறமையைக் காட்டியிருக்கிறார். இன்று

கட்டப்படும் ஹால்களில் எதிரொலி பிரதான அம்சம். 'அகூஸ்டிக்ஸ்' என்ற தனி விஞ்ஞானம் முன்னேறாத நாட்களில் கிபாயத்துல்லா என்ற சிற்ப சிரேஷ்டர் அபார வேலைத்தனத்தை இங்கு காட்டியிருக்கிறார்.

இமாம்பாராவின் மாடியில்தான் 'பூல்பூலியான் என்ற மர்ம வழி சந்துகள் அமைந்துள்ளன. இதன் விசேஷம் என்னவென்றால் நன்றாக பழக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் உள்ளே சென்றால் வெளியே வருவது துர்லபம். சுற்றிச் சுற்றிச் சென்றுகொண்டு திரும்பத்திரும்ப வந்த இடத்துக்கே வரவேண்டும். நானும் என் நண்பரும் இங்கு சென்ற பொழுது ஒரு சுற்றிக்காட்டி ஒரு ரூபாய்தான் கேட்டார். பர்ஸை சாதாரணமாக திறக்க இஷ்டம் இல்லாத என் நண்பர் பேரம் பேசி சுற்றிக்காட்டிக்கு எட்டணாதான் கொடுப்பேன் என்று முடிவு செய்தார். சுற்றிக்காட்டி ''பூல்பூலியானு''க்குள் எங்களை விட்டுவிட்டு ''என்னைப் பிடித்துவிட்டால் நீங்கள் எட்டணா கூட கொடுக்கவேண்டாம்'' என்று சொல்லி ஒரு க்ஷணத்தில் மறைந்துவிட்டார். ''ஞானி ஞானிச பாபானி'' என்று சொல்லாமல் சுமார் அரை மணி திண்டாடிய பிறகு என் நண்பர், "மியான்பாயி நாங்கள் ஒரு ரூபாய் கொடுத்துவிடுகிறோம், நீர் தயவுசெய்து வாரும்" என்று உரக்கக் கூவினார். உரக்க கத்தவேண்டியிருந்திருக்காது ஏனென்றால் மியான் பாயி புன்சிரிப்புடன் நாங்கள் நின்ற இடத்திலிருந்து பிரிந்த ஒரு உப சந்துக்குள்ளிருந்து சிகரெட் பிடித்துக்கொண்டுபிரசன்னமானார். "பூல்பூலியான்" என்றால் மறதி சமாசாரம் என்று அர்த்தம். இங்கு நாம் வழியையே மறந்துவிடுகிறோம். "பூல்பூலியானி" லிருந்து வந்த பிறகு ரூமிதர்வாஜாவைப் பார்க்கலாம் என்று மியான்பாயி சொன்னது என்நண்பர் காதில் விழவே இல்லை.

"ஏன் இன்னும் ஒரு ரூபாய் விழுங்கப் பார்க்கிறாப்போல் இருக்கிறது" என்று சொல்லி ஓட்டமும் நடையுமாக வெளியேறினார்.

லக்னௌவில் உள்ள பழைய சரித்திரப் பிரசித்தி பெற்ற கட்டிடங்களைப் பற்றியும் அவைகளைக் கட்டிய மகாராஜாக்களைப் பற்றியும் எழுதுவதற்கு ஆரம்பித்தால் ஒரு புத்தகமே உருவாகிவிடும். சுருக்கமாகச் சொன்னால் அந்த நவாப்வம்சத்தினர் கட்டிய பெரிய மாளிகைகளும் மன்றங்களும் இன்றும் லக்னௌவுக்கு அழகைக் கொடுக்கின்றன. அந்நாள் ராஜாக்களின் முன் யோசனையால் தான் லக்னௌ இன்று பூங்காக்கள் நிறைந்த நகரமாக விளங்குகிறது. இன்றைய நாள் அதிகாரிகள் முன்னாளில் இருந்திருந்தால் பூங்காக்கள் கட்டாந்தரை

ஸ்ரீ கேதாரநாதர் ஆலயம்

களாகவும் நகரங்கள் நரகங்களாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை,

லக்னௌவின் சர்வகலாசாலை மிகவும் வனப்பு வாய்ந்தது. கோமதி (என்ன அழகான பெயர்) நதியின் எதிர்க்கரையில் அமைந்த இந்த சர்வகலாசாலை முன்னாள் பம்பாய் கவர்னராக இருந்த ராஜா சர் மகராஜ் சிங்கின் நிலத்தில் இருக்கிறது. கலைகள், விஞ்ஞானம், பொருளாதாரம், சட்டம், வைத்தியம் கற்பிக்கும் கல்லூரிகள் எல்லாம் ஒரே இடத்திலேயே இருப்பது விசேஷம். அகில இந்தியாவும் மதித்த ஆசாரியா நரேந்திரதேவ் வெகுகாலம் இந்த சர்வகலாசாலையுடன் தொடர்பு வைத்திருந்ததுடன் அதற்கு வைஸ் சான்ஸலராகவும் இருந்தார், அவர் செய்த சேவை என்றென்றும் மக்கள் மனதில் பதிந்திருக்கச்செய்ய அவர் பெயரில் ஒரு புஸ்தகாலயமும் ஏழைப் பையன்கள் படிக்க இரண்டு விஸ்தார படிப்பு அறைகளும் உருவாகி வருகின்றன.

லக்னௌ "மாட்லா" என்று, ஹிந்தியில் சொற்கள் இங்கு உள்ள மரியாதையைக் குறிக்கும். எது செய்வதாக இருந்தாலும் இங்கு "பஹ்லே ஆப்" என்று சொல்லுவது வழக்கம். (அதாவது "முதலில் நீங்கள்" என்று சொல்லுவது வழக்கம்.) பஸ்ஸில் உட்காருவது முதல் கக்கூஸுக்குப் போவதுவரை இந்த உபசாரம் உண்டு. இதை பற்றி வேடிக்கையாகப் பல கதைகள் கூட உண்டு. ஒரு மாது கருத்தரித்திருந்தாளாம். பத்து மாதங்களுக்கு மேலாகியும் பிரசவம் ஆகவில்லையாம். டாக்டரைக் கூப்பிட்டுக் கேட்டபொழுது டாக்டர் சொன்னாராம்; "ஊர் லக்னௌ என்பதை மறந்து விட்டீர்களா? அம்மாளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்க இருக்கின்றன. இரண்டும் "நீ முதலில்" என்று ஒன்றிற்கொன்று மரியாதை காட்டிக்கொண்டு உள்ளேயே இருக்கின்றன" என்று சொன்னாராம். காலம் மாறிவரும் இந்நாளில் இந்த மாதிரி மரியாதைகள்கூட மறைந்துவருகின்றன.

(லம்பினி) – மாயாதேவி ஆலயம் — இடதுபுறம்: அசோகரின் ஸ்தூபி

லக்னௌவின் மஸ்லின் முஸ்லிம்களுக்கு உயிர். மஸ்லினில் பல "சிக்கன்" அபூர்வ வேலைப்பாடுகள் செய்வதில் முஸ்லிம் மாதுகள் வல்லவர்கள். பிரிட்டிஷார் ஆட்சி காலத்தில் இம்மாதிரி அபூர்வ கைவேலைகள் நசித்து இன்று வெகு சிலரே நாஸூக் வேலைகள் செய்கிறார்கள். அவர்களுடன் மறைந்து விடாமலிருக்க சர்க்கார் அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுத்து அவர்கள் தயார் செய்யும் வஸ்துக்களுக்கு மார்க்கெட் வசதிகளும அளிக்கிறார்கள்.

உண்மையில் முஸ்லிம்களுக்கு மஸ்லினும், ஹிந்துக்களுக்கு பட்டும் இந்த பக்கத்தில் உயிர். லக்னௌவில் மஸ்லினில் ஆபூர்வ கைவேலைகள், பாத்திரங்களிலும் மற்ற பித்தளை சாமான்களிலும் குடைந்து வெள்ளி வேலை செய்வதிலும் அவர்கள் சமர்த்தர்கள். பனாரிஸில் (அதாவது காசியில்) பட்டுப் புடைகளும் ஜரிகை வேலைகளும் பிரசித்தம். இன்றும் காசி கொழிக்கிறது, அங்கு உள்ள கைத்திறன் படைத்த வேலைகள் அமோகமாக முன்னேறுகின்றன, லக்னௌவில் அவை க்ஷீணித்துவருகின்றன, ஏன் காசி பிரதானம்; மதத்தையும் கடவுளையும் அடிப்படையாகக்கொண்டது. ஹிந்துக்கள் எதைச் செய்தாலும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்கிறார்கள். நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நகரம் காசி. ஆதலால் அதற்கு அமோகமான பொது ஜன ஆதரவும் யாத்திரிகள் ஆதரவும் கிடைக்கிறது, லக்னௌவில் சர்க்கார் காரியாலயங்கள் இல்லாவிடில் அதை ஒருவரும் சீந்த மாட்டார்கள்.

லக்னௌவில் படித்த சோம்பேறிகளுக்கும் "காப்பி ஹௌஸ்" கனவான்களுக்கும் கணக்கே இல்லை. காலையில் காப்பிஹௌஸ் எங்கு திறக்கப்போகிறது என்று காத்திருந்து அவர்கள் திறந்தவுடன் ஓர் இடம் பிடித்துக் கொள்ளுவார்கள். நாள் பூராவும் ஒரே பேச்சு: டாக்டர் சம்பூர்ணானந்தயோக்கியரா, உள் நாட்டு மந்திரி ஸ்ரீ திரிபாதி நாணயஸ்தரா அல்லது முன்னாள் மந்திரி ஸ்ரீ ஸி. பி. குப்தா நல்லவரா? என்று விவாதம் செய்வார்கள். முன்பின் தெரியாத ஒருவர் ஒருநாள் லக்னௌவில் மலிவான வெற்றிலை பாக்குக் கடையில் எனக்கு வெற்றிலையும் குளிர்ந்த பானமும் வாங்கிக் கொடுத்தார். அவர் யார் என்று விசாரித்ததில் அவர் முன்னாள் தனவந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் இப்பொழுது அவர் சும்மா இருப்பதாகவும் தெரியவந்தது.. "சாப்பாட்டிற்கு என்ன செய்கிறார்" என்று கேட்டேன். "ஓ, அதுவா? மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறை ஒரு காணி நிலம் விற்பார்" என்று பதில் வந்தது.

THE INDIAN BANK LTD · ESTD·1907

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

*

'மாண்பொடு மனைவியும், மக்களும், செல்வமும்
மகிழ்வொடு கல்வியும், வாழ்வும், சிறந்திட

காண்பவர் கேட்பவர் நினைப்பவர் யாவரும்
களித்திட, நெடுநாள் வாழ்வீர்!' என்றே

யாண்டுமே உள்ளனும் ஈசனை வேண்டியே,
இந்தியன் பாங்கு இத் தீபாவளியினில்,

ஆண்டுகள் ஐம்பதும் மூன்றும் நிரம்பிட,
அன்புடன் உங்களை வணங்கி வாழ்த்துமே.

*



D. P. பார்த்தசாரதி
காரியதரிசி

யாவரும் விரும்புவது

மணத்திலும் குணத்திலும் நிகரற்ற

வி. எஸ். & சன்ஸ்

பெப்பர்மெண்டுகளே.

தயாரிப்பாளர்கள்:-

தென்இந்திய பெப்பர்மெண்ட் தொழிற்சாலை,

கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1925.

ஒன்றுபட்ட அபிப்பிராயம்!

அண்ணு அய்யருக்கும், அனந்தாச்சாரிக்கும் எந்த விஷயத்திலும் அபிப்பிராய பேதம் தான். இருவரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் தர்க்கம் செய்வார்கள். ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் இவர்களுக்குள் அபிப்பிராயபேதமே கிடையாது! அது தான்

"நிஜாம் லேடி"

புகையிலை

(ரிஜிஸ்டர்ட் நெ, 158711)

நீங்களும் இன்றே ஒரு பாக்கெட் "**நிஜாம் லேடி**" புகையிலையைச் சுவைத்துப் பாருங்கள். இதன் சக்தி மற்றெந்தப் புகையிலையிலும் இல்லை என்பதைக் காண்பீர்கள்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:

A. M. அப்துல்ரஹிமான் ராவுத்தர் அண் கோ.

தபால்பெட்டி இலக்கம்—4

புதுக்கோட்டை.

2 -NOV 959

முன்கதை சுருக்கம்

'அர்ச்சுனன்' என்ற புனைப்பெயர் தரித்த துரைசாமி ஒரு நாவலாசிரியர். நாற்பது வயதானாலும் முப்பது வயதென மதிக்கத்தக்க தோற்றங் கொண்ட சுக சரீரி. ஆண்–பெண் அன்பின் அற்புத விஞ்ஞானியென இரு பாலர்களாலும் புகழப் பெறுபவர். இளம் பெண்களின் மலரம்புகளுக்கு இலக்காகுபவர்; மலரம்புகளை தொடுத்து விடுவதிலும் சமர்த்தர். ஜான்ஸிராணிக் கல்லூரி மாணவிகளில் நால்வர் வந்து தங்கள் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் பெருவிழாவிற்குத் தலைமை வகிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர். அவரும் தனது சம்மதத்தைத் தருகிறார். அவரிடம் விடை பெற்றுச் செல்லும்பொழுது ஒரு பெண் அவரைத் தன் கண்வீச்சில் அடிமை கொள்ளுகிறாள். அதனைச் சமாளிக்குமுன் வேறோர் அழைப்பு வரச்சென்று, ஏமாற்றத்துடன் திரும்ப அவரது வீட்டில், தன் மனைவியின் தோழியால் அவ்வேமாற்றத்தை மறக்கடிக்கப் படுவதோடு கிளர்ச்சிகளுக்கு ஆளாகிறார். மனைவியின் தோழியும், அவள் கணவனும் விடைபெறறு சென்றபின் 'அர்ச்சுனன்' கிளர்ச்சிகளாலுந்தப்பட்டு இருவித உணர்ச்சிகளில் மூழ்கி, பழைய நினைவுகளில் ஆழ்கிறார்.-மேலே படியுங்கள்.

6. குழந்தைக் கை திறந்த தங்க வாசல்.

துரைசாமிக்குத் தூக்கமே வரவில்லை, சரஸாவும் சிங்காரியும் மாறி மாறி அவர் உள்ளத்தை மிதித்துத் துவைத்தனர். கசக்கி நசுக்கினர் ஒரு பெண் நெருப்புப் பந்தங்களை அள்ளி எறிந்தாள்: வேதனை தாங்காமல் துடித்தபோது மற்றொருத்தி பூச் செண்டுகளால் தாக்கினாள், ஒருபெண் கொதிக்கும் வெறுப்புக் குழம்பைக் கொட்டினாள் வெந்து புரளும்போது மற்றொருத்தி இன்ப ரசத்தை ஊற்றித் தடவினாள். இப்படி வெந்து தணிந்தார் அவர்.

தடவிக் கொடுத்ததைவிட கிள்ளிவிட்டது; குளிர்ந்ததைவிட சுட்டதே நினைவில் அதிக நேரம் தங்க முடியும். அவர் சிங்காரியைப் பற்றியே எண்ணினார்.

நான்கு வருஷங்களுக்கு முந்தி,—

துரைசாமி கோயில் வாசலில் நின்றிருந்தார். கையிலிருந்த குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு

தேவியைக் கும்பிட்டார். 'அம்பிகே தயவுசெய் இந்தக் குழந்தையை வைத்துக்கொண்டு ஊர் சுற்ற விடாதே!' என்று மனம் உருக வேண்டி விட்டு அவர் அந்தக் குழந்தையை மீண்டும் தூக்கிக் கொள்ளக் கையைக் நீட்டினார். அந்தக் குழந்தை 'அதோ பார் மாமா'! என்று சத்தம் போட்டுவிட்டு ஒரு துள்ளலுடன் கோவிலுக்குள் ஓட ஆரம்பித்தான்.

துரைசாமி பார்த்தார். கோயிலுக்குள்ளிருந்து அவள் வந்து கொண்டிருந்தாள்• குழந்தையைக்கூட ஒருகணம் மறந்து அவர் அவளையே பார்த்தார். கோபுரவாசலில் மின்சார 'வாழைத் தண்டு' விளக்குகள் மஸாலா போட்டுக் காய்ச்சின பால் நிறத்தில் ஒளியைப் பாய்ந்து பரவ விட்டுக் கொண்டிருந்தன. அந்த ஒளிக்குள் புகுந்து வந்து கொண்டிருந்தாள் அவள்' கற்பனையைப் பரவ விட்டார் அவர்.

பால் நிலவில் பாயும் ஆற்றின்மேல் அன்னம் மிதந்து வந்தால்; வெள்ளி வீதியில் வெண்ணிறக் காளை நடந்து வந்தால், உள்ளத்தில் உணர்ந்து பாயும் அன்பு வெள்ளத்தில் காதல் கண் சிமிட்டி வந்தால்— இப்படி இருக்குமா?

குழந்தையைக் கண்ட அவள் பரக்கப் பரக்க ஓடி வந்தாள், அதைவிட அவசரமாக அவள் வாயிலிருந்து சொற்கள் வந்தன.

'கண்ணு! ஐயையோ! நீ எப்படி அப்பா இங்கே வந்தே?" பாய்ந்து குனிந்து அவள் அந்தக் குழந்தையைக் கவ்வி எடுத்து இடுப்பில் ஏற்றிவைத்துக் கொண்டாள்.

துரைசாமி பார்த்தார்.

அவள் குனிந்து நிற்கும்போது அவர் ஒரு முறை பாக்கு வெட்டும் நேரம் கவனித்தார். சுருங்கிய வெண்பட்டுப்புடவை இடது தோளில் பெருமைபெற்றுக் கொண்டிருந்தது; வெள்ளை வாயில் ரவிக்கை வலது தோளில் உப்பி உயிர் பெற்றுக் கொண்டிருந்தது. கழுத்தில் இருந்து ஒரு மெல்லிய சங்கிலி தொங்கிக் கொண்டிருந்தது. தலை முடியப்பட்டிருந்தது அதில் பூச்சரத்தைக் காணோம் கைகளில் ஒன்றிரண்டு வளைகளே இருந்தன. அவள் தோளமைப்பு வாளிப்பாய் இருந்தது. கைகள் கடைந்தெடுத்தாற்போல் இருந்தன. அந்த ஒளியில் அவள் நிறம் உள்ளே மஞ்சள் ஓடும் பளிங்குக் கல்லின் நிறம் கொண்டிருந்தது. அவள் ஒடிந்து விழுபவள் போலும் இல்லை; அறுத்துத் திணித்தாற்போலவும் இல்லை. பூசிவிட்டாற் போல் உடல் அமைப்புக் கொண்டவள் அவள்.

துரைசாமி கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஏன் சிங்காரி என்னை விட்டு விட்டுப் போனே! நான் தொலைஞ்சு போய்ட்டேன். இந்த மாமா தான் என்னைக் கண்டு பிடிச்சார்" என்றான் அந்தக் குழந்தை.

குழந்தையை எடுத்துக் கொண்டு நிமிர்ந்த அவளுக்கு மிகவும் பக்கத்திலேயே துரைசாமியும் வந்துவிட்டார்.

அவள் நெற்றியில் திருநீறறின் ஒரு சிறிய பொட்டு இருந்தது. அவள் முகத்தில் ஒரு கலவரமும் அதனிடையே கண்களில் ஒரு நன்றியொளியும், உதடுகளில் புன்முறுவலும் தோன்றி நின்று கொண்டிருந்தன. நன்றாக இழைய இழைய வாரி முடிந்திருந்தபடியால் கேசக் கற்றைகள் எங்கும் புரளவில்லை. படிந்து வளர்ந்த குழந்தை தாயின் மடியில் அமர்ந்திருப்பதுபோல அது அவள் தலையில் அமுங்கி அமர்ந்து ஓர் அழகைத் தந்துகொண்டிருந்தது, நிலவுகொண்ட வானில் மேகம் மறைக்க இருட்டினாடே ஒளி விடும் ஓர் இயற்கைத் தோற்றத்தின குளுமை துரைசாமியின் கற்பனை நெகிழ்ச்சிகொண்ட மனதிலே எழுந்து நனைத்தது.

அவளிடம் கேட்டார்.

'இது உங்கள் குழந்தையா...!'

'ஆம்!' என்று உடனே சொன்ன அவள் ஏனோ சற்றுத் திகைத்தவாறு பார்த்தாள்.

பிறகு சற்று ஒதுப்புறமாக நடந்துகொண்டே, "இவன் எங்கே இருந்தான்" என்றாள். துரைசாமியும் பின்னாலேயே நடந்து, "மேல ரதவீதியும் கடை வீதியும் சந்திக்கும் இடத்தில் நின்று, "சிங்காரி; சிங்காரி" என்று கத்திக்கொண்டிருந்தான். குழந்தையின் அழகு என்னைக் கவர்ந்தது; என்றவர் நிறுத்தி "அம்மாவின் அழகு குழந்தைக்கு இல்லாமலா போகும்!" என்றார்' அப்படிச் சொல்லிவிட்டு அவர் அவள் முகத்தைக் கவனித்தார். முதலில் ஒரு முறுவல் கீற்று உதட்டை நகர்த்த முயன்றாலும் அவள் அதை ரஸிக்கவில்லை என்பது தெரிந்தது. அவள் மேலே கேட்பதில் ஆர்வம் காட்டினாள். துரைசாமி இந்த உணர்ச்சிப் போட்டிகளின் குழப்பத்தில் சிக்கிக்கொண்டு மீள முயன்றார். ஒருவாறு சமாளித்துக்கொண்டு மேலே தொடர்ந்தார்.

"அருகில் சென்று பார்த்தேன். 'சிங்காரி அம்மாவைத் தேடுகிறேன்!' என்றான் பையன்; கெட்டிக்காரன்" என்று சொல்லிய துரைசாமி அவளருகே சென்று பையன் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டினார்.

சிங்காரி கொஞ்சம் நகர்ந்து கொண்டாள் "மிகவும் வந்தனம். நன்றி. என் வயிற்றில் பால் வார்த்தீர்கள்!"

"நான் என்ன செய்தேன்? அந்தப் பக்கம் வந்தேன்· வராமலிருந்தால்......? இதில் நான் செய்ததென்ன இருக்கிறது?"

"இருந்தாலும்" என்று நன்றி நிறைந்த உள்ளம் கொண்ட அவள் பேச ஆரம்பித்தவுடனேயே குழந்தை கண்ணன் "மாமா, நீ எங்க வீட்டுக்கு வாயேன். இங்கேத்தான் இருக்கு!" என்று சொல்லவே. இருவரும் களுக்கென்று சிரித்து விட்டனர். "போடா போக்கிரி.



தொலைஞ்சுபூட்டேன்னு அழுதே! இப்பொழுது வழி தெரிஞ்சவன் மாதிரிச் சொல்றயே!" என்று இருவருமே கிட்டத் தட்டச் சேர்ந்துசொல்லினர்.

"நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்" என்று கேட்டார் துரைசாமி. அவள் சொன்ன பதில் அவரைத் திகைக்க வைத்தது.

"கன்னிமாடத்தெரு நாலாம் நம்பர் வீடு."

"கன்னிமாடத்தெரு நாலாம் நம்டர் வீடா? இந்த நகரம் ஒரு சமயம் அரசொன்றின் தலை நகராயிருந்தது. அந்த சமயம், அதாவது தமிழரசர்கள் அரசாண்ட சமயத்தில் அங்கே கன்னிமாடமொன்று கட்டியிருந்தனர். இப்போது கன்னிமாடமுமில்லை. வேறு அடையாளமுமில்லை. ஆனால் அதன் பெயர்மட்டும் இருந்தது' அர்ஜுனன் இருந்த பட்டக்காரர் தெருவுக்குப் நேர் பின்னால் இருந்தது. அந்தத்தெரு இரண்டும் தெற்கு வடக்காக சமதூரக் கோடுகள் போல் சென்ற தெருக்கள். சில இடங்களில் இந்தத் தெரு வீடுகளின் உள்ளே புகுந்து அந்தத் தெருவில் வெளியேறிவிடமுடியும். அப்படி ஒன்றன்பின் ஒன்றாக மாறி எதிர்புறத்தில் வெவ்வேறு வீதிகளில் வாயில்கொண்டனவாக அந்தத் தெருவில் சில வீடுகள் இருந்தன' நான்காம் நம்பர் வீடு ஒருக்கால் துரைசாமி இருந்த வீட்டுக்கு நேர்ப் பின்னால் கூட இருக்கலாம். அவர் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்பினார். அவர் ஆசை மிகத்தூரம் ஓடிற்று.

"நான்காம் நம்பர் வீடு பங்களா அல்லவா?"

"ஆம்! சுகபவனம் என்று பெயர்!"

"எனக்குப் பட்டக்காரர் தெருவில் தான் வீடு"

"அப்படியா!" என்றாள் சிங்காரி திரும்பிப் பார்த்து அவர்கள் அதற்குள் நடக்க ஆரம்பித்திருந்தனர். இருவரும் கிட்டத்தட்ட ஒரே இடத்துக்குப் போகவேண்டியிருந்ததாகத் தெரிய வந்துவிட்டபடியால் சேர்ந்தே போகலாம் என்று தனித் தனியே முடிவு செய்து கொண்டனர்.

'உங்களுக்கும் என் வீட்டுக்கும் இடையே ஒரு சிறிய சந்து தான் பிரிந்து நிற்கிறது!' துரைசாமி சந்தை அழுத்திச் சொன்னார். அவள் பதில் சொல்லவில்லை.

"ஆனால் என் வீட்டு மதில் சில இடங்களில் இடிந்து இருக்கிறது" என்றார். அதற்கும் பதில் இல்லை.

துரைசாமிக்குக் கோபம் வந்தது. என்ன பெண்பிள்ளை இவள்! முதுகையும், அகன்ற இடுப்பின் கீழ்ப் பாகத்தையும் நடக்கும்போது பட்டுப் புடவைக்கு உயிரையும் அழகையும், பாம்பு நெளிவையும் தந்துகொண்டு செல்லும் பின் அழகையும் மட்டும் ரஸித்துக் கொண்டு வரட்டும், போதுமே! என்று எண்ணுகிறாளா? ராங்கிக்காரி! பேசினால் முத்து உதிரும் என்று பயப்படுகிறாளா இந்த மான் விழிக்காரி!

"இடிந்திருக்கிற இடங்களில் வெறும் முள் தான் வைத்து அடைத்திருக்கிறோம்!" என்று

கடைசிக் கருத்தையும் சொல்லி அந்தப் பாரா வின் கடைசி வாக்கியத்தை எழுதினர்.

அவள் இதற்கும் பதில் சொல்லவில்லை. ஆனல் பேசினுள், யாருடன்? குழந்தையுடன!

'ஏண்டா ராஜா. நீ மாட்டில் போய் விட் டாயே! அப்பா வந்தால் என்னைச் சும்மா விடுவாரா? இந்த மாமா மட்டும் வராமல் இருந் தால் என்ன ஆயிருக்கும், போக்கிரி!" என்று கேட்டாள் அவள் அந்தக் குழந்தையை.

துரைசாமி கேட்டுக் கொண்டு தானிருந்தார். கேள்வியின் முதல பகுதி வரை அவருககு ஆத் திரத்தை அளித்தது விடு விடு என்று போய அவளை மறித்து "நீ என்ன தான நினைத்துக கொண்டிருக்கிருய்" என்று கேட்டு விடலாமா என்று நினைத்தார். ஆனல பண்பாடு என்று ஒன்று இருக்கிறதே! அதற்குள் அவள 'இந்த மாமா' என்று ஆரம்பித்தவுடன வரண்ட பாலை வனத்தில் வானம் கூடுவதைக் கண்டார்.;உடனே தூற்றலும் போட ஆரம்பித்ததாக உணர்ந்தார் கடைசியில் அவள் சற்றே தரும்பி அவரைப் பார்த்துப் புன் முறுவல் சிந்தியவுடன் உள்ளம் குளிர்ந்தே போய்விட்டது

இன்று தன்னை ஆற்றுக்கு அழைத்துப்போன தன் அதிர்ஷ்டத்தை மெச்சிக் கொண்டார்.

சாதாரணமாக வேறு வேலையில்லாத மாலை நேரங்களில் அவர் ஆற்றுக்குத்தான் செல்லுவது வழக்கம்.

கதை எழுத வேண்டும் என்ருல் முதலில் கருவில் திரு இருக்கவேண்டும் என்பது உண்மை. ஆனல் வைரம் ஒளி பெறுவது கடைந்தெடுப்ப தால்தான்; கடைந்தெடுப்பவனுக்குத் திறமையும் வேண்டும், பழக்கமும் வேண்டும்.

அதே போலக் கதை எழுத நுணுக்கத் திற மையும் வேண்டும்; பழக்கமும் வேண்டும். இவற் றிற்கு நேரம் வேண்டும், ஊக்கம் வேண்டும். தானே ஊக்கம் இருக்குமானல் நல்லது தான். ஆனல் அந்த ஊக்கத்தை இருவகையானவர் தான் தரமுடியும். ஒருவர் அதைப் பிரசுரித்துப் பரப்ப உதவுபவர். மற்ருருவர் விலைகொடுத்து வாங்கிப் படித்துப் பாராட்டி, பிரசுரமாகி வெளியே வர உதவுபவர் - வாசகர்கள். ஆனல் அவர்கள் தரும் ஊக்கம் மட்டும் போதாது. ஊக்கம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு நிம்மதியான நேரமும் தேவையே. சூழ்நிலையை மறந்து கற்பனையும் தானுமாய் ஒன்றி வாழ நேரம் இடம் வேண்டும். மாட்டின் மடியி விருந்தே பாலைச் சாப்பிட முடியாது. காய்ச்சிச் சாப்பிட மாடு இல்லாத இடம்வேண்டும், அடுப்பு வேண்டும்; மாட்டுக் கொட்டிலிலே அமர்ந்து சாப்பிடவும் முடியாது; சாணி, மூத்திரத்துக் கிடையில்! கற்பனைக்கு ருசி கொடுக்கத் தனிச் சூழ்நிலை வேண்டும். அதைத் தேடித்தான் கலைஞன் போகிருன். அது சில சமயம் தானே கிட்டுவதும் உண்டு: கற்பனை வளிவு மிகவும் ஏற்றவன் தன்னைத்தானே மறந்து தனக்கென்று ஓர் உலகம் ஏற்படுத்திக்கொள்ள முடியும் வெல்லப் பிள்ளையாரையே விண்டு அவருக்கே அர்ப்பணம் செய்தால் பிள்ளையாரும் மூளியாவார்; நைவேத்யத்துக்கும் போதாது, கற்பனையை அதற்கும் செலவழிக்கும் ஒரு பகுதியை வீணடிப்பதாக ஆகும்.

அர்ஜுனன் இருந்த நகரத்தின் எல்லையில் உள்ள ஆறு மிகவும் அழகு பொருந்திய ஆறு' ஆற்றின் பெயரைத்தான் அந்த ஊருக்கும் இட்டிருந்தார்கள். மாவட்டத்தில் பல ஊர்கள் இருந்தாலும் மாவட்டத்தின் பெயரை ஓர் ஊர் தான ஏற்றுக் கொள்ளுகிறது. மற்ற ஊர்கள் அதற்கு மௌனமாகவே சம்மதமும் தந்துவிடு கின்றன. அதே போல ஆற்றின் கரையில் அநேக ஊர்கள் அங்கங்கே உண்டு. அரிச்சந்திர நதியின கரையில் உள்ள அந்த ஊருக்கு மட்டும் தான் அரிச்சந்திரபுரம என்று பெயர்வந்திருந்தது அந்த ஆறு ஊரை அநேகமாகச் சுற்றி வளைத்தி ருந்தது என்னலாம். ஒரு புறத்தில் தான் அது இல்லை அநேகமாக அந்த நதியில் ஆண்டு பூராவும் நீர் ஓடிக் கொண்டிருக்கும். ஆற் றின் படுகையில் மட்டுமல்ல, இடையி லேயும் கூட சில மரங்கள் உண்டு. நீர் குறைவாக இருக்கிற நாளில் ஜனங்கள் அந்த மரத்தடியில் சென்று அமர்வார்கள்' அதற்கு என அதன் அடியில் காரைமேடு கட்டி யிருந்தார்கள், எப்பொழுதும் ஆற்றில் ஜனங் கள் கூடியிருப்பார்கள்; காலை மாலை இரண்டு நேரமும் மக்கள் நீராடவருவார்கள். மங்கையர் வளைந்த இடுப்பில் தங்கம் என ஒளிரும் குடம் ஏந்தி நீர் வார வருவார்கள். நித்தியக் காலை மாலைக் கடன் தீர்க்க அந்தணர்கள் வருவார்கள். அந்த ஊரில் அதை ஒருவரும் நையாண்டி செய்த தில்லை. ஒருகால் அங்கே தமிழரசு நிகழ்ந்த காரணமாயிருக்கலாம் அல்லது அந்த ஊரில் இருந்த மக்களுள் ஒவ்வொரு பகுதியினர் நடத் தும் வாழ்க்கை முறை பற்றி எவருக்கும் உகந்த தாகவும் நன்மையே பயப்பதாகவும் இருக்க லாம். ஏதானுலும் தங்கள் பழைய வாழ்க் கையை முறைப்படி நடத்துகிறவர்களும் அங்கே இருந்தனர். முற்றிலும் மாறியவரும் உண்டு. ஆனல் யாரும் யாரையும் பழிப்பதில்லை, குறைத் தும் பேசுவதில்லை.

துரைசாமி அங்கே சென்று ஆறு மணிவரை அமர்ந்திருந்தார். அரித்தோடும் ஆறும், கட்டிக் காக்கும் மரங்களும், இன்பம் மாந்தும் மக்களும் அவர் உள்ளத்தைக் கிளு கிளுக்கச் செய்தன(ர்). பிறகு எழுந்து ஊர்ப்புறம் திரும்பினர் வழியில் தான் அந்தக் குழந்தையைக் கண்டார். நிரம்ப நகையுடனும், நல்ல அழகுடனும் நிற்கும் தங்கப் பதுமை போன்ற அக்குழந்தை தனித்து வந்தி ருக்கிறது என்பதைக் காண அதிக நேரம் பிடிக்க வில்லை. பாய்ந்து அதனருகேச் சென்ருர் அவர். அதுவரை அது நடந்து கொண்டேயிருந்திருக்க வேண்டும் எங்கேயாவது நின்றிருந்தால்

சுதேசி டைப் பவுண்டரி

[ஸ்தாபிதம் 1906]

கிளை காரியாலயம்: ஹைதராபாத்–18. **கிளை காரியாலயம்: பெங்களூர்–1.**

தலைமைக் காரியாலயம்:

51, குருவப்ப செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்–2.

டெலிபோன்: 84469 *தந்தி: "புவன"* *தபால் பெட்டி: 2433*

✱

தமிழ், ஹிந்தி, மலையாளம், தேவநாகரி, தெலுங்கு, கன்னடம், உருது, கிரந்தம், மகாராஷ்டிரம், ஸம்ஸ்கிருதம், சிங்களம், குஜராத்தி, ஒரியா, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய பதினைந்துபாஷைகளிலும் எழுத்துக்கள் தயாரிக்கப்படும் பவுண்டரி இது ஒன்றே தான். இந்த "தீபாவளி மலரில்" உபயோகப்பட்டிருக்கும் எழுத்துக்கள் பல பகுதிகள் 'கணபதி' புதிய தமிழ் எழுத்துக்களே. இந்த எழுத்துக்களின் உறுதிக்கும், அழகான அமைப்பிற்கும் இந்த "தீபாவளி மலர்" தக்க சான்று.

✱

'கணபதி' ... புதிய தமிழ் எழுத்துக்களும்,

'ஆறுமுகம்' ... புதிய தெலுங்கு எழுத்துக்களும்,

'மணி' ... புதிய கன்னட எழுத்துக்களும்,

'சுதேசி' ... புதிய மலையாள எழுத்துக்களும்,

புகழ் சிறந்த பல்லோராலும் போற்றிப் பாராட்டப் பெற்றன.

இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற கண்ட்ராக்டர்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

தொ. ஆ. சுப்பிரமணிய முதலியார்,
நிர்வாக பாகஸ்தர்.

ஸ்தாபகர்.
டி. ஆறுமுக முதலியார்,

யாராவது அதன் நகைக்கு ஆசைப்பட்டு அள்ளித் தூக்கிக்கொண்டு போயிருப்பான் அதை நினைத் ததும் அவருக்குப் பகீர் என்றது. ஒரு கணம் கடவுள் லீலையை நினைத்தார். குழந்தையும் அவரைக்கண்டவுடன் 'மாமா' என்று டாய்ந்தது; பேசாமல் தூக்கிக் கொண்டார், நடக்க ஆரம் பித்தார்.

தலை மயிரைக் கோதிவிட்டு ஒரு முறை அவன் கன்னத்தில் முத்தமிட்டார். குழந்தை முத்தம் இட்ட இடத்தைக் கையால் துடைத்துவிட்டது. பிறகு அவர் மேல்வாய்க் கட்டையைத் தொட்டு 'மாமா, தாடி' குத்தறது!' என்றது. துரைசாமி சிரித்தார்!

பிறகு, 'நீ யார்' — என்றார்

"மணி, கண்ணன், ராஜா.

'உங்க அப்பா யாரு?'

'வக்கீல்—'

'பெயர்?'

'வக்கீல் ஐயா!'

'வீடு எங்கே இருக்கிறது?'

"அங்கே தான் எங்க வீட்டுக் கொல்லைலே பெரிய பசுமாடு கூட இருக்கே என்னை அம்மா கிட்டக்கொண்டுபோய் விட்டுடறயா மாமா?"

துரைசாமி சிரித்தார். வயது இரண்டரைக்கு மேல் இராது. என்ன சுட்டியாகப் பேசுகிறான்.

'கொண்டுபோய் விடுகிறேன். அம்மா எங்கே யிருப்பார்கள்?'

"நீ எந்த அம்மாவைக் கேக்கறே? சிங்காரி அம்மா கோயிலுக்குப் போறேன்னு சொன்னாள். இன்னுனு அம்மா......!'

துரைசாமிக்கு ஒரு பிடி கிடைத்துவிட்டது. இருந்தாலும் மேலே தெரிந்துகொள்ள ஆசைப் பட்டார்.

'அவளும் அப்பாவும் காரிலே போயிட்டாள் துரைசாமி கேட்டார்.

'என் கண்ணு! உன் இந்தச் சங்கிலியை மாமாவுக்குக் கொடேன்!'

"ஊம்ஹூம் சிங்காரி அம்மா கோச்சுக்குவா. நீ ஆத்துக்கு வா. அப்பாகிட்டச் சொல்லி வேறே செஞ்சு தரச் சொல்றேன்.

துரைசாமிக்கு அவன் பேசுவதெல்லாம் கேட்கக் கேட்க இனிமையாயிருந்தது கொஞ்ச தூரம் நடந்து வந்த குழந்தை காலை வலிக்கிறது என்று சிணுங்கவே அவனைச் சுமந்தும் தூக்கி வந்தார்.

பேசிக் கொண்டே அவனுடன் கோயில்வாச லுக்கு வந்ததெல்லாம் அவருக்கு ஞாபகம் வந் தது. அவன் சொன்னதெல்லாம் மீண்டும் நினை வுக்கு வந்தது ஆனால் அவன் பேசிவந்ததைவிட அவனைத் தூக்கி வந்ததனால் இவளுடைய பரிச் சயம் கிடைத்தது அவருக்கு மிகவும் இன்பத் தைத் தந்தது. ஆனால் இவள் பேசவே மாட் டேன் என்கிறாளே!

அவள் வயது இருபத்தைந்து இருக்கும் என்று அவர் மதிப்பிட்டார். இருபத்திரண்டுக்குக் குறையாது. மணம் ஆகியிருக்காது போலிருக் கிறது. இந்த நாளில் தான் முப்பது வயதுவரை மணமாகாத மங்கையர் காணக் கிடைக்கின்ற னரே. அவர் அவளைப்பற்றி எவ்வளவோ அறிய விரும்பினார்! அவளோ இவ்வளவோ உதவின அவரைப்பற்றிச் சட்டை செய்யாமலே போகி றாளே! பணக்கார வீட்டுப் பெண் தான் உதவி பெற உரிமையுடன் பிறந்தவள் என்று நினைக் கிறாளோ?

அதே சமயம் அவள் திரும்பிப் பார்த்தாள். இவரும் சற்று நெருங்கினார். எப்படிக் கோவி லுக்குக் கொண்டு வந்தீர்கள்?

இன்பம் பெருவெள்ளமாக உள்ளத்தில் பாய்ந் தது. "எல்லாம் அவன் தான் சொன்னான்!" என்றார்.

மீண்டும் அவர் அவனைத் தாங்கி வந்தது நினை வுக்கு வந்தது எவ்வளவு பேர் அவருக்குத் தெரிந் தவர் எதிர்ப் பட்டனர். எல்லோரும் அது அவர் குழந்தையே என்று எண்ணி விட்டனர், சிலர் அப்படியும் கேட்டனர். "உங்களுக்கு இந்த வயதில் ஒரு குழந்தை இருக்கிறதா?" அவர் ஒன்றும் பேசாமல் வந்துவிட்டார். வார்த் தையை வளர்த்துக் கொண்டு நிற்க அது இடமு மில்லை, நேரமுமில்லை.

மேலே அவள் கேட்பாள் என்று நினைத்தார். அவள் கேட்டாள்!

"நான் இங்கே வராதபோனால் என்ன செய் திருப்பீர்கள்?

அதை அவர் இதுவரை நினைத்துப் பார்க்கவே இல்லை. "ஊம் — ஊம் என்ன செய்திருப் பேன்?" என்று அவரும் கேள்வியே கேட்டார்.

அதற்குள் பட்டக்காரர் தெருவின் தெற்கு முனை வந்துவிட்டது. 'இதுதான் என் தெரு' என்றார் அவர். அவள் ஏதாவது கேட்பாள் என்று எதிர்பார்த்தார். அவள் போய்க் கொண்டே யிருந்தாள்.

7. போட்ட கல்லும் எழும்பிய அலைகளும்

"யார் நீங்களா?"

துரைசாமி கேட்ட இந்தக் கேள்வி கொல்லை மதில் கதவைத் தாளிட்டுக் கொண்டிருந்த சிங்காரியின் கையைத் தடுத்து நிறுத்திற்று அவள் செங்கமல முகம் மதில் சுவரின் கதவு வாயிலுக்கு வெளியே நீண்டது' கண்கள் எதிரே தேடின. பார்வை துரைசாமியைத் தேடிக் கண்டது.

துரைசாமி மதில்ச் சுவருக்கு அடுத்துள்ள சந்துக்கு மறுபுறம் உள்ள வேலிக்கு உட்புறம் தன் வீட்டுக் கொல்லையில் நின்றிருந்தார். அவர் வீட்டின் கொல்லையின் எல்லையைக் காத்து நின்ற சுவர் சில இடங்களில் ஏழையின் சேலைபோல் வேலிகளின் ஓட்டுக்கள் கொண்டு கொல்லையின் மானத்தையும் கொல்லையையும் இயன்ற அளவு காப்பாற்றிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட ஓர் ஓட்டு வேலியின் பின் புறம்தான் நின்றிருந்தார் அவர்.

சற்றுத் தயங்கினுள் சிங்காரி பிறகு ஒருமுறை உள்ளே பார்த்தாள். மீண்டும் கதவைச் சாத்தி விட்டு சந்துக்குள் இறங்கி வந்தாள்.

"நீங்களா?" என்று கேட்டுக்கொண்டே இவர் எதிரே வந்து நின்ருள்.

துரைசாமி ஒரு கணம் திகைத்துவிட்டார். மேல் தோல் பசுமையாகவே இருக்கும் சில பழங்கள் உண்டு, மாம்பழங்களிலும் அந்த வகை உண்டு. வாழைப்பழங்களிலும் அந்த வகை உண்டு. காய் என்று ஏமாறுவோர் கனி என்று கண்டால், அதுவும் பசித்த ஒருவர் கண்டால் அவர் பெறும் எதிர்பாரா இன்ப உணர்ச்சியை எப்படி வருணிப்பது?

"ஓகோ! இவளும் பொல்லாதவள்தான்" என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார் அவர். அவள் அடுத்துச் சொன்னது இன்பக் கேணியில் அமுதத்தைச் சொரிந்தது.

"நானே அன்று முதல் உங்களைச் சந்திக்க வேண்டும் என்றிருந்தேன்".

மாம்பழக் கன்னங்கள் ஆப்பிள்களாக மாறி வருவதை அவர் கவனித்தார். ருசி தெரிந்தவர் அவர். உள்ளத்தில் உவகை கரும்புப் பாகுபோல் பொங்கிப் பொங்கி வருவதைக் கண்டு தாளமுடியாமல் தவித்தார்.

"ஏன், எதற்காக?"

"நீங்கள் யாரென்று தெரிந்தவுடன் எனக்கு எவ்வளவு வெட்கமாகப் போயிற்றுத்தெரியுமா?"

துரைசாமி அவளையே ஒரு கணம் பார்த்தார். 'சரி அங்கே நின்று பேசுவானேன்! இங்கே வாருங்களேன், உள்ளே: அங்கே யாராவது பார்த்துவிட்டால்?...'

"பார்த்தாலென்ன? அர்ச்சுனன் போன்ற பெரிய மனிதருடன் பேசுவதனால் பெருமையே தவிர...?

"அர்ச்சுனனா? அது எப்படி தெரியும்?"

"அதைத்தான் சொல்ல வந்தேன், அன்று—அது தான் குழந்தையை எடுத்துக் கொடுத்தீர்களே அன்று—நான் தன் பாட்டில் வந்துகொண்டிருந்தேன். நீங்களும் பின்னால்தான் வந்து கொண்டிருக்கிறீர்கள் என்ற நினைப்பு எனக்கு திடீர் என்று திரும்பிப் பார்த்தேன். உங்களைக் காணோம். அதே சமயம் வாருங்கள் "மைத்துனரே" என்ற குரல் கேட்டது. அதே குரல் "பார்த்துக்கொள் அப்பா இவர்தான் என் தங்கையின் கணவன். பிரபல எழுத்தாளர், ஆண்—பெண் அன்பின் அற்புத விஞ்ஞானி!" என்று சொல்லிக்கொண்டிருந்தது. உடனே உங்கள் குரலும் கேட்டது. அப்பொழுதுதான் உங்கள் வீட்டின் "உள்ளே புகுந்திருக்கிறீர்கள் சற்று நிறுத்தி, அப்பொழுது எனக்கு எப்படியாகிவிட்டது தெரியுமா?" என்றாள் அந்தத் தித்திப்புப் பலாச்சுளை. நெஞ்சில் அலை அலைகளாக எழுந்து வந்தன கேள்விகள். தொடர்ந்து கேட்க விரும்பினார் அவருக்கு நிலை கொள்ளவில்லை.

'சிங்காரி!' என்றார் அந்தச் சொல்லை ஆவலின் அடித்தொண்டையிலிருந்து உடனே "நான் உங்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால் வித்தியாசமாக நினைக்கமாட்டீர்களே!' என்றார்

'இல்லை கூப்பிடுங்கள்...ஏன்?'

"உங்களிடம் அநேகம் கேள்விகள் கேட்க வேண்டும் போலிருக்கிறது. பேசிக்கொண்டேயிருக்கவேண்டும் போலிருக்கிறது இப்படியே நின்றுதான் பேசவேண்டுமா?'

சிங்காரி சற்று சங்கோசப்பட்டாள்.

துரைசாமி உள்ளப்போக்கு நன்றாகத் தெரிந்தவர். காற்றின் போக்கைக் கண்டே எப்பொழுது மழைவரும் என்று தெரிந்துகொண்டு வெள்ளத்துக்கேற்ற அணை கட்டவோ, கால்வாய் வெட்டவோ கற்றவர் அவர்.

'வாருங்கள், உள்ளே கூடப் போகவேண்டாம் அதோ கிணற்று மேடையில் உட்கார்ந்து சற்று நேரம், ஓர் ஐந்து நிமிஷங்கள் பேசலாம்!'

வேலியைப் பார்த்தாள் அவள். அவர் திடீர் என்று நட்டிருந்த ஒரு மூங்கில் காலையே பிடுங்கிவிட்டார். அது உளுத்திருந்தது கையுடன் வந்து விட்டது.

'பார்த்து வாருங்கள்' என்று சொல்லிவிட்டு அவர் கிணற்றுமேடைக்குச் சென்றார் துணி துவைப்பதற்காகப் போடப்பட்டிருந்த கல்லைப் பார்த்தார். அதன் மேல் காக்காய் எச்சம் இட்டிருந்தது வெயிலில் காய்ந்திருந்தது. தன் மேல் துண்டால் அதைத் தட்டி அப்புறப் படுத்தினார்.

அதற்குள் சிங்காரியும் வந்துவிடவே 'உட்காருங்கள்' என்றார்.

"வேண்டாம், உட்காரவேண்டாம் திரும்பிப் போகவேண்டும் சை. வெட்கக்கேடு யாராவது தெரிந்துகொள்ளுவதற்குள் போகவேண்டும்...!"

'சரி அப்படியானால்'சரி' இனிமேல் அடிக்கடி வரலாமே!'

"வரலாம் வீட்டில் ஒருவரும் இல்லையா? உங்களுக்கு......?"

துரைசாமி ஆவல் கிழித்து வந்த குரலில் சொன்னார்: "நான் உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள மிகவும் ஆசைப்படுகிறேன். ஆகவே அதற்கு அச்சாரமாக என்னைப்பற்றிச் சொல்லி விடுகிறேன். என்மனைவியும் என் இரண்டு குழந்தைகளும் ஊருக்குப்போயிருக்கிறார்கள் என் மாமனார் உயிருடன் இல்லை. அன்று வந்திருந்தது என் மனைவியின் அண்ணன் அவளை அழைக்கத் தான் வந்திருந்தான். இன்னும் ஒரு வாரத்தில் வந்துவிடுவார்கள்......இப்பொழுது நீங்கள்...!'

அவள் பதில் பேசவில்லை.

'ஏன்?'

'என்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ள ஒன்றும் இல்லை!' அவள் கண்களில் நீர் சுரந்து வந்தது இடையிலே உதட்டில் ஒரு புன் முறுவலை நெளிய விட்டுக்கொண்டான். துரைசாமி எதிர்பார்த்த படி 'என் வாழ்க்கையில் யாரும் அக்கறையும் கொள்ளமாட்டார்கள்!' என்றாள் அவள்.

துரைசாமி சற்று அருகே சென்று அவள் கண்களையே பார்த்தவாறு கேட்டார்:

"கொள்ளமாட்டார்கள் என்று சொல்லுகிறீர்களா? கொள்ளவேண்டாம் என்று சொல்லுகிறீர்களா?"

கேள்வியின் அடித் தளத்தைக் காண முயன்ற அவள் ஆழத்திலேயே தடுமாறினாள். பிறகு ஒருவாறு மேலே ஏறிவந்து ஒரு மூச்சு விட்டாள்.

துரைசாமி கேட்டார்—அது இருக்கட்டும் "உங்கள் குழந்தை எங்கே?"

என் குழந்தையா?

"ஆமாம்...அன்று காணாமல்...மணி...!"


நாட்டின்
நிர்மாண திட்டங்களுக்கு
அவசியமான
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்
தயாரிப்பாளர்களிடமிருந்து
உங்களுக்கு
தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
SANKAR
I C
BRAND
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்.
சென்னை-1.
தொழிற்சாலை :
சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா
வினியோகஸ்தர்கள்:- ஸிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்

அவள் சிரித்தாள். மாலை மஞ்சள் வெயிலில் முத்து வரிசைகள் தகதக என்று பொன்மயமாகக் காட்சி அளித்தது. அது என் குழந்தை என்று யார் சொன்னார்கள்?"

"நான் அப்படித்தான் எண்ணினேன். சிங்காரி அம்மா என்றான்..."

ஆம் அவன் என்னை அப்படித்தான் கூப்பிடுவான்.

"பிறகு?

"அவன் வக்கீலுடைய குழந்தை. நான் வக்கீல் வீட்டில் சமையல் செய்கிறவளுடைய பெண்!

இதைச் சொல்லிவிட்டு அவள் 'நான் போகிறேன்!' என்றாள், திரும்பியும் விட்டாள். அவள் முகத்தில் ஏற்பட்ட கலவரத்தைக்கண்ட துரைசாமி, "சிங்காரி" என்று கூப்பிட்டார். அவள் போகாமலே நின்றாள்,

"திரும்பு இந்தப் பக்கம்."

அவள் இயந்திரம் போல் திரும்பி நின்றாள்

'ஏன் பயப்படுகிறாய்?"

'இல்லை—வந்து.........!'

'சும்மாச் சொல். நீ சமையற்காரி மகள் என்றால் குறைவாக நினைத்து விடுவேன்! என்று அஞ்சுகிறாய் அல்லவா?

அவள் பேசவில்லை "அசடே அசடே! அது இருக்கட்டும் இதைச் சொல் உனக்கு அர்ச்சுனனைப் பற்றி எப்படித் தெரியும்?

'நீங்கள் எழுதிய புத்தகத்தைக் கூடப் படித்திருக்கிறேன்....'

"எந்தப் புத்தகம்?"

"இப்பொழுது வெளியானது—கைபடாத மலர்!"

"அதைப் படித்தாயா? உனக்குப் பிடித்திருந்ததா?

பெண்ணின் அருகே நிற்கும் ஆண் பிள்ளையின் உள்ளே உள்ள எழுத்தாளர் தலை தூக்கினார் அவர் உள்ளம் வாசகரின் பாராட்டுக்குக் கை நீட்டிற்று.

'நீங்கள் மிகவும் நன்றாக எழுதுகிறீர்கள்; அதைத்தான் வக்கீலும் சொல்லுகிறார்'

வக்கீல் சொல்லுகிறாரா? அவரும் இப்படிக் கதைகள் எல்லாம் படிப்பாரா?

'ஓ!'

'நீ, மன்னிக்க வேண்டும்...நீங்கள்...!'

'இல்லை, நீ என்றே சொல்லுங்கள்......!'

'நீ வேறு என்ன படிப்பாய்?

'சாதாரணமாக நான் இராமாயணம், குறள், பாரதம் தான் படிப்பேன். பாகவதம் படிப்பேன். ஆனால் உங்கள் கதை ஒன்றிரண்டு படித்ததிலிருந்து உங்கள் எழுத்தில் மோகம் வந்து விட்டது.

'நீ எவ்வளவு வரை படித்திருக்கிறாய்?

'வக்கீல்தான் என்னை S. S. L. C. வரை படிக்க வைத்தார், அவர் ஆதரவில் தான் நான் வளர்ந்து வருகிறேன்.!'

'ஏன் என் கதை உனக்குப் பிடித்திருக்கிறது!'

'என் வாழ்க்கையில் நடந்தது போல் இருக்கிறது. நீங்கள் எழுதியிருக்கிறது...!'

'அப்படியானால்...நீ!'

'ஆம்...நான் இப்பொழுது விதவை. அப்பொழுதும் அவரால், என் கணவரால் ஒதுக்கப் பட்டேன்!

துரைசாமி பேச்சைத் திருப்பினார். "வக்கீலுக்கு வயது என்ன?"

"நாற்பத்தைந்துக்கு மேல் இருக்கும். ஏன்?'

'கேட்டேன் அந்த அம்மாளுக்கு"

"நாற்பதிருக்கும்."

'உங்களை எப்படி நடத்துகிறார்கள்?'

"குழந்தைபோல் பார்த்துக்கொள்ளுகிறார்கள் —துரைசாமி சிரித்தார்"

நீங்கள் குழந்தையா?

அது இருக்கட்டும் வீட்டில் வேறு யாரும் ஆண்கள் இல்லையா?

சற்று புருவத்தைச் சுளித்துச் சிணுங்கினாள் அவள். பலூனைக் குழந்தை விரல் அமுக்குவது போல் ஒரு கற்பனை தோன்றிற்று அவருக்கு மீண்டும் சுளுக்கம் நீங்கிற்று சிங்காரிசொன்னாள்.

"இல்லை ஒருவரும் இல்லை."

"யாராவது வருகிறார்களா? வருவதுண்டா?"

"வருவார்கள், அடிக்கடி வருவார்கள் இரவு பகல் எந்நேரமும் வருவார்கள்!"

துரைசாமி அகாரணமாகப் பரபரப்புக் காட்டினார்,

"யார், யார், யார்?"

"கட்சிக்காரர்கள்!" என்ற அவள் கண்ணாடி மேஜையில் சில்லரை கொட்டியதைப் போல் சிரித்தாள். துரைசாமியும் சிரித்தார்,

புரட்சிகரமான தயாரிப்பு.

விலை குறைவு
நீடித்த உழைப்பு
பூராவும் பித்தளையாலானது
அழகானது
எல்லோராலும் புகழப்படுவது
மிதிலா
பெட்ரூம் லைட்
ஒவ்வொரு வீட்டிற்கும்
அத்தியாவசியமானது.
எல்லாக்கடைகளிலும் கிடைக்கிறது.
விபரங்களுக்கு:
மிதிலா மெடாலிக்
இண்டஸ்ட்ரீஸ்
(சந்திரன் மார்க் எவர்ஸில்வர் பாத்திரங்கள்
ஆஸ்பத்திரி கருவிகள் உற்பத்தியாளர்கள்)
குஞ்சிதபாதம் செட்டியார் ரோடு
கும்பகோணம்.
போன்: 24 & 54 தந்தி: DIAMOND

"இல்லை அவருக்கு ஒரு மைத்துனன் உண்டு?"

வயது என்ன இருக்கும் என்று கேட்கத்தான் எண்ணினர் அவர். தன் கயமை வெளியாய் விடுமோ என்று பயந்தார். ஆகவே அவர் என்ன செய்கிறார்?' என்று மட்டும் கேட்டுவைத்தார்.

அலுப்பும் இரக்கமும் நிறைந்த குரலில் அவள் பேச ஆரம்பித்தது திடீரென்று வண்டி தடம் மாறியது போல் இருந்தது. அவள் சொன்னாள்.

"நீங்கள் கேட்பதற்கெல்லாம் அர்த்தமேஇல்லை. நான் விதவை" என்றாள் அவள்.

அவள் சொன்ன விஷயம். சொன்ன விதம் இரண்டுமே அவருக்குப் புதியவை. கைத்துப் போன மோர், களிம்பு பிடித்த புாயஸம், திரிந்த பால், கிழிந்த படம் இவை பேசினல் தம்மைப் பற்றி எப்படி அறிமுகம் செய்துகொள்ளும்!

ஏதோ அவள் வீடு சூனியமானது போல், பாத்திரம்கவிழ்ந்து பால் கொட்டிவிட்டதுபோலபேசினாள். இனி அவளை எவரும் சீண்டமாட்டார்கள் என்பதுபோல் பேசினாள். விதவையாகிவிட்டால், பெண்மை போய்விட்டது போல், பள்ளம் மேடாகிவிட்டது போல், பழம் விஷமாகிவிட்டது போல், பூ முள்ளாக மாறிவிட்டதுபோல், குளத்தைச் சுற்றி முள்வேலி எழுந்துவிட்டது போல் பேசினாள், அவள் உலகம் அறியாதவள். அந்த அறியாமை எழுப்பிய கற்பனை வேலிதான் அது என்று அவள் தெரிந்துகொள்ளவில்லை. கற்பனைக்கு உண்மை கிடையாது. சுவராகக் காணப்பட்டது தோற்றமே. தானாக எழுப்பிக்கொண்ட பிரமையே! கனவில் கை எரியக் கண்டவன் எழுந்து நீர் எப்படிக் குடிப்பேன்? என்று அழுதால் இரக்கம்தான் வரும், சீக்கிரமே அவனுக்குள்ள அந்தப்பிரமையை நீக்கவேண்டும் என்றே நினைப்போம், பூ! இப்பொழுதும் பூத்தால் மணம் உண்டு குணம் உணடு. அதற்கு என்ன நேர்ந்துவிட்டது? ஒன்றுமில்லை, ஒரு வண்டு உட்கார்ந்தது போய்விட்டது. அவ்வளவுதான்; குளத்தில் எவ்வளவோ பேர் முழுகலாம்... ஆனாலும்...?

"விதவையா நீங்கள்!" என்றார் ஒரு திகிலுடன் அவர்.

"ஆம். நான் கசந்துபோன பழம். நாற்றம் எடுத்த மலர்?"

துரைசாமி "நிறுத்துங்கள்" என்றார்.

"நீங்கள்எந்த உலகத்தில் இருக்கிறீர்கள் இந்த அசட்டு எண்ணத்தை எல்லாம் எந்தப்பாட்டி உங்கள் உள்ளத்தில் ஊட்டிவிட்டாள்?"

இதுவரை குழந்தைபோல பேசி வந்தவள் சிங்காரி ஒரே கணத்தில் திகைத்துவிட்டாள்.

"நான் இந்த உலகத்தில்தான் இருக்கிறேன். ஏன் அவ்விதம் பார்க்கிறீர்கள்? நான் சொல்லுவதெல்லாம் பொய்யா? விதவைக்கு வாழ்வுண்டோ?"

"சிங்காரி! இல்லை உன்னை நான் இனி உஷா என்று கூப்பிடப் போகிறேன்-சம்மதம்தானே?"

"உஷா, உஷா! தையல் மிஷின்!"

"சை, நீ என்ன பெண்! நீ இவ்வளவு தானா? நான் என்னமோ ஏமாந்து போனேன்!"

"என்ன ஏமாந்துபோனீர்? சொல்லுங்களேன்!"

துரைசாமி எதைச் சொல்லுவார்? அது சரி நான இனி உன்னைச் சிங்காரி என்று அழைக்க மாட்டேன்!

"வேண்டாம்"

"பிறகு என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?"

"உங்கள் இஷ்டம் நீங்கள் சொன்னபடி தான் கூப்பிடுங்கள் அல்லது எங்கள் ஊர் மீனாட்சிப் பாட்டி கூப்பிட்டபடி கூப்பிடுங்கள்!"

"அவள் என்ன கூப்பிட்டாள்?"

"அவள் துக்குறி என்று கூப்பிடுவாள்"

துரைசாமிக்கு அழுகையே வந்துவிட்டது அவர் உள்ளம் நைந்தது உணர்ச்சி வேகத்தில் அவரால் அதிகம் பேசமுடியவில்லை.

'உஷா, இதோ பார். நான் உன்னை இனி உஷா, என்று தான் அழைக்கப் போகிறேன். நீ இனி இப்படி எல்லாம் பேசக் கூடாது. பால் மேல் தூசி விழுந்தால் பாலைக் கொட்டி விடுவதில்லை. புதுப்புடவையில் எண்ணெய் பட்டுவிட்டால் அதைக் கிழித்து எறிந்து விட மாட்டார்கள். அது போகட்டும் நீ இப்பொழுது போ பிறகு வா!

"ஊஹூம் நான் போகமாட்டேன் போனால் வரமாட்டேன்!"

"இது என்ன பிடிவாதம்!"

அவள் சொன்னாள், "நீங்கள் இப்பொழுது என்னை எந்தச் சந்திக்கு இழுத்து வைத்துவிட்டீர்கள் என்று தெரியுமா உங்களுக்கு? அமைதியாயிருந்த குளத்தில் ஒருகல்லை எடுத்துப்போட்டு விட்டீர்கள் எழும் அலைக்கு என்ன விளைவு வருமோ. சரி வருகிறேன்."

துரைசாமிக்கு உள்ளூர ஆனந்தமே!

(தொடரும்)

Manufacturers:

KUMARAN SOAP WORKS,

ERODE.

Distributors:

The Premier Trading Co., Kumbakonam.

பண்டை மகளிரின் பண்பு

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

தமிழ் மக்கள் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே நாகரிகமும் பண்பாடும் உடையவர்களாகச்சிறப்புற்று வாழ்ந்திருந்தனர். அவர்கள் பலவகைக் கைத்தொழில்கள், வாணிகம், படைக்கலப் பயிற்சி, போர் முறை, அரசாட்சி முறை முதலியவற்றில் ஒப்பில்லாதவர்களாய் விளங்கினர். அவ்வாறே, இல்வாழ்க்கையிலும் அன்பு, சுற்றந் தழுவுதல், விருந்தோம்புதல், அறம் புரிதல், தெய்வந்தொழுதல் முதலியவற்ருல் மற்றையோர் புகழும்படி நடந்து வந்துள்ளனர்.

ஒரு தலைவி தனக்கும் தலைவனுக்கும்உண்டான அன்பின் மிகுதியைக் கூறுமிடத்து; அவனோடு உண்டாகிய நட்பு பூமியைக் காட்டிலும் அகலத்தால் பெரியது; ஆகாயத்தினும் உயர்ந்தது; கடல்நீர் ஆழத்தினும் மிக்க அளவினையுடையது என்று சொன்னாள்.

'நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆரள வின்றே; சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.'

[உயர்ந்ததன்று—உயர்ந்தது. நீர்—கடல். அளவின்று—அளவினுடையது.]

இதில், உணவுப் பொருளை நல்கும் நிலத்தையும், உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத நீரைத் தரும் வானத்தையும், சிறந்த பொருளாகிய முத்து, பவளம் முதலியவற்றை உதவும் கடலையும் எடுத்துக்காட்டியது, இம்மூன்றனுலும் உண்டாகும் நன்மை தலைவனது நட்பு ஒன்றினுலே உண்டாகும் என்பதையறிவித்தற்கு. இச்செய்யுளில் 'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடு' என்றதன் கருத்தைக் கவனிப்போம்.

குறிஞ்சி மலை நிலத்தில் உண்டாகும் ஒரு சிறு செடி. இது பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறை பூக்கும். ஆகலின், இந்தப் பூவிலிருந்து வண்டுகள் தேனெடுப்பது எப்போதும் நடைபெறுவதன்று; ஒரு காலத்தில் மட்டுமே நிகழ்வது. ஆகலின், இதிலிருந்து தேனையெடுப்பது அருமையாகும். அத்தகைய மலைநாட்டை உடையவன் என்றதனுல், அவனோடு உண்டாகும் நட்பும் கிடைத்தற்கு அருமையாகும். அத்தகைய அரிய நட்பு தனக்குக் கிடைத்த தன் அருமையைப் பாராட்டிக் கூறுகின்ருள்.

தலைவனோடு உண்டாகிய அன்பு பெருகி, நிலைபெற்ற பின்னரே மணம் நிகழும். மணம் நிகழ்ந்தபின் தலைவனோடு கூடிவாழும் இல்வாழ்க்கையே கற்பொழுக்கம் எனப்படும். இனி, மணம் நிகழாமல் தலைவன் தலைவியை உடன் கொண்டு போய் தன் ஊரில் மணந்து வாழ்தலும் உண்டு. இவையெல்லாம் மிகப்பழைய காலத்தில் நிகழ்ந்தவை. இவற்றைச் சங்கப் புலவர் செய்யுட்களில் அமைத்துப் பாடியிருக்கின்றனர். அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு நோக்குவோம்.

தலைவன் மணஞ் செய்துகொள்ளாமல், தலைவி இருக்குமிடத்து நாள்தோறும் வரின் அது வெளிப்பட்டுவிடும். அப்பொழுது, அவள் வெளியே போகாதபடி தாய் காவல் செய்து வருத்துவாள். அதனுல், தோழி, ஆலோசித்துத் தலைவியைத் தலைவனோடு அனுப்பிவிட உறுதி செய்து அதனைத் தலைவிக்கு அறிவிப்பாள். அவ்வாறு ஒரு தோழி தலைவிக்குக் கூறுபவள்,

'ஊரார் நம்மைக் குறித்து வெளிப்படையாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். நமது தெருவில் இருப்பவர் பெரிதாக ஆரவாரஞ் செய்கின்றார்கள் தாயோ தருமநெறியை நினைக்காமல் ஓயாது துன்புறுத்துகிறாள். இவ்வாறு இருத்தலின் தொலைவில் இருக்கின்ற தலைவனது ஊருக்கு அவனோடு போய்விடுதல் நல்லது என்று நினைக்கின்றேன். வழியில், யானையின் அடி அழுந்திய இடத்தில் இருக்கும் தண்ணீரைக் குடித்துக் கொண்டு போய்விடலாம்' என்று சொன்னாள். அதற்குத் தலைவி உடன்பட்டாள். அச்செய்தியைத் தோழி தலைவனிடம் சொன்னாள். அதைக் கேட்ட தலைவன், 'நான் போகும் வழியில் பாழ் பட்ட ஊர்களும் பெரிய காடுகளும் இருக்கும்; யானைகள் திரியும். ஆகலின், மிக்க துன்பம் உண்டாகும்' என்ருன். அதற்குத் தோழி,

'பெருங்காடு
இன்னு என்றிர் ஆயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனேயே'

[இன்னு - துன்பந்தருவன. தமியோர்க்கு— தனித்து இருப்பவர்க்கு.]

என்று கூறி, 'தனியே வீட்டில் இருப்பதுவே துன்பம்' தரும். உம்மோடு காட்டில் நடந்து வருவது துன்பம் தாராது. ஆதலின், தலைவியை உம்மோடு அழைத்துச் செல்லுதலே தக்கது' என்று தெரிவித்தாள். அவனும் காதலியை உடன் கொண்டுபோக உடன் பட்டான்.

தோழி, தலைவியைத் தலைவனிடம் அழைத்துச் சென்று அவனை நோக்கி, 'பெரியோய்! நீ பொய் சொல்லமாட்டாயென்று உன் சொல்லை நம்பி, இவள் (தலைவி) உன்னோடு வருகின்றாள். ஆகவின், நீ இவளுடைய நிமிர்ந்த உறுப்பு தளர்ந்து போனாலும், பொன்மேனி ஒளி மாறினும், கரிய மணியைப் போன்ற நெடிய கூந்தல் முழுதும் வெள்ளையாக நரைத்து முடிக்கப் பெற்றாலும் அக்காலத்தில், 'இவள் நமது வாழ்க்கைக்குப் பயன்படமாட்டாள்; மிக்க முதியவளாகிவிட்டாள்' என்று எண்ணி இவளை கைவிடலாகாது; பாதுகாத்தல் உன்கடமை' என்று கூறி அடைக்கலப் பொருள் போல அவனிடம் ஒப்படைத்தாள்.

அவ்வாறு தலைவனோடு சென்ற தலைவி, பின்னர்த் தாய் வீட்டுக்கு வந்தபோது அவளைப் பார்த்துத் தோழி, 'நீ தலைவனோடு சென்ற வழியில் நல்ல தண்ணீர் கிடைக்காதே. என்ன செய்தாய்?' என்று கேட்டாள். அதற்குத் தலைவி சொல்லிய மறுமொழி;

"நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ
மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே."

என்பது.

[படப்பை-சோலை. தேன் மயங்கு - தேனோடு கலந்த. உவலை - இலை. கூவல் கீழே-சிறுகுழியின் அடியில். எஞ்சிய-மிஞ்சிய கலிழிநீர் கலங்கியநீர்.]

'தோழி, நான் அவரோடு சென்றபோது அவர் நாட்டில் ஓர் இடத்தில் தழைகள் விழுந்து கிடந்த சிறுகுழியில் இருந்த நீரை மான் குடித்துச் சென்றது. அதன்பின் அடியில் கலங்கிய தண்ணீர் சிறிது இருந்தது. அதைக் குடித்தேன் அது எவ்வளவு நன்றாயிருந்தது தெரியுமா? நமது சோலையிலிருந்து கிடைக்கின்ற தேனோடு கலந்த பாலைப் பார்க்கிலும் மிக்க இனியதாயிருந்தது' என்பது மேற்காட்டிய அடிகளின் பொருள் இதனால், தன் தலைவன் நாட்டில் கிடைக்கும் இழிந்த பொருளையும் உயர்வாக மதித்து மகிழ்ந்த பெருந்தகைமை நன்கு அறியப்படும்.

இனி. தலைவனோடு சென்ற மகளைக் குறித்துத் தாய் சொல்லியிருப்பது இங்கு நோக்கத்தக்கது. 'பொற்பாத்திரத்தில் பொரி கலந்த பாலை ஊற்றிக் கொண்டு போய்க் குடிக்கச் சொன்னால், "பால் அதிகமாயிருக்கிறது: இவ்வளவு பாலை நான் குடிக்க மாட்டேன்" என்று சொல்லி மறுத்துவிடுவாள். அப்படிப்பட்ட இளம்பெண் நிழலும் நீரும் இல்லாத காட்டிலும் தலைவனோடு போய், வழியில் தண்ணீர் வற்றிய சுனையில் வெயிலினால் வெப்பமாயிருக்குங் கலங்கல் நீரைக் குடித்தற்கு எப்படி அறிந்தவளானாளோ" என்று வருந்தினாள். கணவன் பால் உள்ள அன்பினால் தனக்கு நேருந் துன்பத்தை யெல்லாம் இன்பமாகக்கொண்டாள் என்னும் உயர்குணம் இதனால் விளக்கமுறும்.

தலைவனோடு சென்றவள் அவன் மனையில் மணஞ் செய்யப் பெற்று அவனோடு வாழ்ந்து கொண்டிருந்தாள். அவள் வாழ்க்கையின் நிலையை அறிந்துவரச் சென்ற செவிலி (வளர்ப்புத்தாய்) அங்குச் சென்று சிலநாள் இருந்து நிலைமை நன்கு அறிந்துவந்து தலைவியின் தாய்க்குத் தெரிவித்தாள். அவள்:

'முன்பு செவிலித்தாய் தேனோடு கலந்த பாலையுடைய பொன்பாத்திரத்தை ஒரு கையில் ஏந்திக் கொண்டு, ஒரு கையில் கோலை வைத்துக்கொண்டு "இந்தப் பாலைக்குடி. குடிக்காவிட்டால் அடிப்பேன்" என்று கோலை ஓங்கி அடிக்கப் போனால் ஓடிப்போய்ப் பந்தலில் இருந்து கொண்டு, "குடிக்கமாட்டேன்" என்று சொல்லுவாள். அப்படிப்பட்ட விளையாட்டுப் பெண்ணுக்கு இப்போது என்ன அறிவு! என்ன ஆசாரம்! இவற்றை எங்கே அறிந்து கொண்டாளோ, தெரியவில்லை. அவள் கணவன் வீட்டில் இப்போது செல்வம் தீர்ந்து விட்டது; வறுமை அதிகமாயிருக்கிறது. இந்தச் சமயத்தில் தமப்பன் வீட்டிலிருந்து வேண்டியவளவு தானியம் முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடாதா? அந்த எண்ணமே இல்லை- வயிற்றுக்குச் சாப்பாடு உண்டா? இல்லை. ஒருவேளை சாப்பிடாமல் கழித்துவிட்டு, நெடு நேரத்தின்பின் சாப்பிடுகிறாள். அவ்வளவு நேரமும் பசியைப் பொறுத்துக் கொள்ளத் தான் எப்படிச் சக்தி உண்டாயிற்றோ? ஆச்சரியமாயிருக்கின்றது' என்று தாயிடம் தெரிவித்தாள்.

இதனால், கணவன் வீட்டில் வறுமையின் மிகுதியால் உணவின்றிப் பட்டினி கிடந்தாலும் பெருஞ் செல்வனான தகப்பனுடைய வீட்டிலிருந்து ஒரு பொருளையும் வாங்கிக் கொள்ளக் கூடாது. அப்படி வாங்கினால் கணவனுக்கு இழிவு நேரும் என்று எண்ணிக் கணவனோடு துன்பமடைதலையே உயர்வாகக் கருதி ஒழுகிய தன்மை அறியப்படும். இதைக் கருதித்தான்

'அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்' என்று செவிலி கூறினாள்.

[யாண்டு - எவ்விடத்தில் சொல்; அசை நிலை பொருளில்லாத சொல்]

வேறொரு செவிலித்தாய், தன் மகளின் வாழ்க்கை நிலையை அறிந்து வந்து அதைத் தாய்க்குக் கூறியதை நோக்குவோம்.

'நம்மகள் (தலைவி) ஒருநாள் தன் கணவனுக்கு விருப்பமான மோர்க்குழம்பு வைக்க எண்ணி, தாளித்தற்கு ஒரு பாத்திரத்தில் நெய் உலைபெய்து அதனை அடுப்பில் வைத்துவிட்டுத் தயிரைப் பிசைந்தாள். தயிர் கட்டியா யிருந்ததனால் நன்ருகப் பிசைதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. அதற்குள் தாளிதம் பக்குவம் முற்றிவிடும் என்று நினைத்து, அவசரத்தில் கையையும் கழுவாமல் உடையில் துடைத்துக்கொண்டு விரைந்து அதைத் தாளிதப் பாத்திரத்தில் ஊற்றினுள் நெய் அதிகமாகக் காய்ந்திருந்தனால் உடனே புகை கிளம்பிக் கண்களை மறைத்துவிட்டது. ஆகலின், அவளால் சரியாகத் துழாவ முடியவில்லை. ஒருவாறு பக்குவஞ் செய்து முடித்தாள். "தாளிதம் முற்றி விட்டதே! சட்டியின் அடியிற் குழம்பு பற்றியிருக்குமோ! எப்படி இருக்குமோ! அவர் என்ன சொல்லுவாரோ! என்று மனத்தில் கவலையுற்றிருந்தாள். ஆயின், அவள் கணவன், 'மிக்க சுவையாயிருக்கிறது' என்று சொல்லி விருப்போடு உண்டான்' அதனால் அவளுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று; முகம் சிறிது மலர்ச்சி அடைந்தது.

இவ்வாறு அவள் கணவனுக்கு விருப்பமான உணவை ஜாக்கிரதையாகச் சமைக்கிருள். அவனும் விருப்போடு உண்டு மகிழ்கின்ருன். இப்படி அவர்கள் இன்பமாய் வாழ்கின்றனர்' என்று சொன்னுள்.

இவ்வாறு உடன் போக்கு நிகழாமல், தலைவியினிடத்தில் சில நாள் வந்து ஒழுகுந்தலைவன், அவளைத் தான் மணஞ்செய்து கொள்ளுவதாகக் கூறி, அதற்கொரு காலத்தைக் குறிப்பிட்டுப் பிரியலுறுவான். அவ்வாறு பிரிய எண்ணிய தலைவன் தன் கருத்தைத் தோழியினிடம் தெரிவித்தான். அதைக் கேட்ட தோழி அவனை நோக்கி, 'பெரியோய், ஒரு தாய் தன் சிறு குழந்தையைக் கோபித்து அடிக்கும் போதும், அக்குழந்தை 'அம்மா' என்றே வாய்விட்டுக் கதறும். அந்தக் குழந்தையின் நிலைமையில்தான் என் தலைவி இருக்கின்ருள். நீ அவளுக்குத் துன்பத்தைச் செய்தாலும், மகிழ்வோடு நல்லவற்றைச் செய்தாலும் அவள் உன்னுடைய பராமரிப்பிற்குள்ளேயே இருப்பாள். தாய் அடித்துத் துன்புறுத்தும் குழந்தையை, அப்பொழுது பிறர் ஆதரிக்கின்ருர்களா? ஆதரித்தல் இல்லை. அவளே அக்குழந்தையை ஆதரித்து அழுகையை நீக்கி மகிழும்படி செய்கின்ருள். அதைப்போல நீ தலைவிக்குத் துன்பம் இழைத்தால் அதை நீக்குபவர் பிறர் இலர். நீயே அன்பு கூர்ந்து அவள் துன்பத்தைத் தீர்க்க வேண்டும், இப்பொழுது நீ பிரிந்தால், பிரிவுக்காலத்தில் உன்னை வெறுத்து என் தலைவி வேருெருவரை மணம் புரிந்துகொள்ளமாட்டாள். ஆதலின், நீ விரைவில் வந்து குறித்த நாளில் அவளை மணஞ் செய்துகொள்ளுவது நின் கடமையாகும்' என்று கூறி விடுத்தாள். இங்கு,

'தாய் உடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு
"அன்னாய்!" என்னுங் குழவி போல,
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப்பினள் என் தோழி
தன் உறு விழுமம் களைஞரோ இலரே.'

என்று தோழி கூறியிருப்பது மனங்கொள்ளுதற்குரியது.

[உடன்று - கோபித்து, அலைக்குங் காலையும் - அடிக்குஞ் சமயத்திலும், இன்னா - துன்பம். தலையளிப்பினும் - அன்பு கூர்ந்து நன்று செயினும். நின்வரைப்பினள் - உனது எல்லைக்குள் இருப்பவள். விழுமம் - துன்பம். களைஞர் - நீக்குபவர்.]

தலைவன் தலைமகளைத் தான் வரையாது சில நாள் கழிப்பானுயின் தலைவி அவனை நினைந்து நினைந்து உடல் மெலிவாள்; முகம் ஒளி மழுங்கிப் பசக்கும்; அந்நிலைமையைப் பார்த்த தாய் தன் மகள் தினைப்புனம் காக்கச் சென்ற இடத்தில் ஏதோ பேய் பிடித்திருக்குமோ என்று ஐயுற்று, முருகக் கடவுளை வணங்கும் வேலனை அழைத்து வந்து சிகிச்சை செய்வாள். இதைத் தலைவி அறிந்தால் அவ்வாறு நடக்காமலிருக்க அதனை விலக்கும்படி தோழிக்குக் கூறுவாள். தலைவி விரும்பிய நாயகனுக்கன்றி, மற்றையோருக்கு மணம் பேசிவரின், அப்பொழுதும் தோழி செவிலியிடஞ் சொல்லி அதனை நீக்குவாள். தலைவி தான் விரும்பியவனைத் தவிர மற்றயோரை மணஞ் செய்தல் இல்லை. இதனுல், மகளிரின் ஒழுக்கநெறி அறிதலாகும்.

இனி, தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தை மனையில் சில நாள் வசிப்பான். அச்செய்தி தலைவிக்குத் தெரியவரும். பின்னர், தலைவன் தன்வீட்டிற்கு மீளும்பொழுது, 'தன் மனைவி என்ன சொல்லுவாளோ?' என்று எண்ணி, அச்சத்தோடு வருவான். அவ்வாறு வந்த தலைவனை நோக்கி, தோழி கூறியதை இங்கே நோக்குவோம்.

'பெரும! வயலில் களைபறிப்பவர் தங்களுடைய வேலையை விரைவில் முடித்ததற்காக நல்ல மணமுள்ள மலர்க்கொடிகளைக் களைந்து வரம்பிற் போட்டுவிடுவார்கள். அவை வெயிலால் வாட்டமடையும். ஆயினும், அப் பூங்கொடிகள், 'இந் நிலத்தினர் கொடியவர்கள்: அருள் இல்லாதவர்கள். அதனுல், நம்மைக் களைந்து வாடும்படி

தந்தி: YAYENYEM
Tiruvidaimarudur

PHONE: 49
Kumbakonam Exchange

தென்னுடெங்கும் புகழ்பெற்ற அம்மாசத்திரம் முதலியார் ஜவுளிக்கடை

எங்களிடம் உயர்ந்த ரக பட்டு ஜரிகை சேலைகளும், ஜரிகை, ஜங்களா, கிருஸ் கொடி, கட்டம், புட்டா, டிஷ்யூ, சேலை களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

அ. ந. முத்துக்குமர முதலியார் & சன்ஸ்

சொந்த நெசவு பட்டுஜவுளி

உற்பத்தியாளர்கள்

அம்மாசத்திரம்

கும்பகோணம் - தாலுக்கா

வரம்பிற் போட்டார்கள். ஆதலால், நாம் இனி இங்கிருத்தல் கூடாது. வேறோர் இடத்திற் போய்த் தங்கியிருப்போம்' என்று நினைத்தல் இல்லை; பின்னும், அந்த வயலிலேயே தங்கி, அங்கேயே பூப்பூக்கும். இதனை உன் ஊரில் நீ பார்த்திருப்பாயே. நாங்களும் அவற்றை ஒத்தவர்களாய் இருக்கின்றோம். நாங்கள் துன்பமடையும்படி நீ எங்களுக்கு எத்தனை இடையூறுகளைச் செய்தாலும், நீ இல்லாமல் நாங்கள் வாழ முடியாது. ஆகலின், நீ செய்யும் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு உன் மனையிலேயே தங்கியிருக்கின்றோம்' என்று கூறினள். இதில், தலைவன் வருகைக்குத் தலைவி உடன்பட்டாள் என்பதைத் தெரிவித்திருப்பது அறிக. இங்கு,

'நீடிய வரம்பின் வாடிய விடினும்
"கொடியோர் நிலம் பெயர்ந்து உறைவோம்"
[என்னுது.
பெயர்த்தும் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்தல் அனையேம்; பெரும!'

என்னும் அடிகள் நோக்கத் தக்கன.

[வாடிய - வாடும்படி. கொடியோர் நிலம் பெயர்ந்து - கொடியவருடைய இந்த நிலத்தை விட்டு நீங்கி. பெயர்த்தும் - திரும்பவும். கடிந்த - தம்மை நீக்கிய. செறுவில் - வயலில். அனையேம் - ஒத்தவராயிருக்கின்றோம்.]

இவ்வாறே, சில நாள் பிரிந்து தங்கி வந்த தலைவன் தன் வீட்டுக்கு வந்த போது, தலைவி தன் ஆற்றுமை நீங்கப் பெற்றாள். பின்னர் தனியிடத்தே தலைவனோடு இருக்கும்போது, அவனைப் பார்த்து 'நீ இவ்வாறு உனக்கு விருப்பமான பரத்தையரை விரும்பிச்சென்று அங்குச் சில நாட்கள் தங்கிவிடுகிறாய். அப்பொழுது என் நிலைமையை நீ நினைத்தல் இல்லை. நீ இவ்வாறு இருக்கவும், நான் இந்தப் பிறவிபோய், வேறு பிறப்பிற் பிறந்தாலும் 'நீயே எனக்குக் கணவனாக வேண்டுமென்றும், நானே உன் மனத்துக்குகந்த மனைவியாக வேண்டுமென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

'இம்மை மாறி மறுமை யாயினும்
நீ யாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே.'

என்று கூறினள்.

[இம்மை - இப்பிறப்பு. மறுமை - மறுபிறப்பு. ஆகியர் - ஆகுக. நெஞ்சு நேர்பவள் - மனத்துக்கு ஒத்தவள்.]

தலைமகன் வேறு காரணத்தால் பிரிந்து சென்ற காலத்தில் அப்பிரிவைப் பொறுக்கமாட்டாமல் வருந்திய தலைவி தோழியை நோக்கி, 'தோழி தலைவர் வருவதாகச் சொன்ன நாள் கடந்துவிட்டது. அதனால் அப்பிரிவை நினைந்து நினைந்து வருந்துவதனால் என் தோள்களும் வாட்டமடைந்தன; அவர் வரும் வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்களும் ஒளியற்றுக் காணும் தன்மை குறையப் பெற்றன. என்னுடைய அறிவும் மயக்கம் அடைந்து முன்னினும் வேறாயிற்று. அவர் பிரிவினால் எனக்கு உண்டாயிருந்த நோயும் என் உயிர் போகும் சமயமாயிருத்தலின் என்னைவிட்டு நீங்குவதாயுளது. இப்பொழுது துன்பத்தைத் தருகின்ற மாலை நேரம் வந்துளது. நான் யாது செய்வேன்? என் நிலைமை யாதாகும்? பிறந்தவரெல்லாம் இறப்பது இயற்கை ஆதலின், நான் பிரிவாற்றாமையால் இறந்துவிடுவேனே என்று இறப்பிற்கு அஞ்சவில்லை, பின் 'எதற்கு அஞ்சுகிறாய்?' என்று நீ கேட்கலாம். நான் இறந்துவிடுவேனாயின் இனி நான் பிறக்கும் பிறப்பு வேறு பிறப்பாகி அதில், 'நான் என் தலைவனை மறந்துவிடுவேனோ' என்று எண்ணியே அஞ்சுகின்றேன்?' என்று கூறினாள். இங்கு.

'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்
பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவென்கொல் என் காதலன் எனவே'

என்னும் அடிகளைக் காண்க.

[அஞ்சுவல் - அஞ்சுவேன். சாவில் - சாவினால் பிறிது - வேறொரு பிறப்பு; மக்கட் பிறப்பு அல்லாத பிறப்பு.]

இங்குக் காட்டிய இரண்டு செய்திகளால் தலைமகள் தனக்குத் தலைவன் பால் உள்ள அன்பு பல பிறப்புக்களிலும் தொடர்ந்து வரவேண்டும் என்று எண்ணுவதும், அவ்வாறே தலைவனும் தன்னிடம் நீங்காத அன்புடையவனாய் இருத்தல் வேண்டும் என்று வேண்டுவதும் உட்கொள்ளத் தகும்.

இவ்வாறே பண்டைய மகளிரின் ஒழுக்க நெறிகள் பலவற்றைச் சங்க இலக்கியங்களில் அறிதல் கூடும். அவ் இலக்கியங்களே நம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிதற்கு இன்றியமையாதன ஆகும்.

பூர்வதேசம்

தி. நா. சுப்பிரமணியன்.

தஞ்சாவூரைத் தலைநகராகக்கொண்டு அரசு புரிந்த சோழ மன்னர்களிலே முதலாம் இராஜேந்திர சோழனே தலைசிறந்தவன் ஆவான். அவன் காலத்திலேதான் சோழ ஸாம்ராஜ்யம் மகோந்நதநிலையில் விளங்கியது. அவனுடைய சாசனங்கள் பெரும்பாலும் "திருமன்னி வளர" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியுடனே ஆரம்பமாகும். அவன் தன் ஆட்சியிலே இரு பெரும் வெற்றிகளை அடைந்தான். அவை கங்கா விஜயமும், கடார வெற்றியும் ஆகும். அவற்றின் பயனாக அவன் 'கங்கை கொண்டான்', 'கடாரங் கொண்டான்' என்ற விருதுகளையும் முறையே தரித்துக்கொண்டான். சில சாசனங்களிலே 'திருமன்னி வளர' என்னும் பெரிய மெய்க்கீர்த்தி இல்லாமல், 'பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட' என்னும் சிறிய விருது மட்டுமே ஆரம்பத்தில் காணப்படும். இந்த விருதின் கடைசியில் உள்ள கொண்ட என்னும் சொல்லுக்குப் பதிலாகக் 'கொண்டருளின' என்றோ 'ஆண்ட' என்றோ காணப்படுவதும், கடாரம் என்பதைச் சேர்க்காமல் 'பூர்வ தேசமும் கங்கையும் கொண்ட' என்று மட்டுமே காணப்படுவதும் உண்டு. இன்னும் இந்த வரிசையை மாற்றி, 'கங்கையும் பூர்வ தேசமும் கடாரமும் கொண்ட' என்று தொடங்கும் சாசனமும் உண்டு. இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள திருப்புத்தூரிலிருந்து கிடைக்கும் இம்மன்னனுடைய மகனை வீரராஜேந்திரனுடைய சாசனம் ஒன்றிலே அவன் தன் தந்தையைக் கங்கையும் பூர்வ தேசமும் கடாரமும் கொண்ட நம் ஐயர்' என்று முறையை மாற்றியே கூறியிருப்பதிலிருந்தும் இது விளங்கும்.

இவ்விதம் பெரிய மெய்க்கீர்த்தியில்லாமல் சிறிய விருதுடனே ஆரம்பிக்கும் சாசனங்கள் பெரும்பாலும் மைசூர் ராஜ்யமான கன்னட தேசத்திலும் அதை ஒட்டிய பிரதேசங்களிலுமே காணப்படுகின்றன. அம்மன்னன் தொலைவில் உள்ள நாடுகளிலே கொண்ட முக்கியமான வெற்றிகளையே சுருக்கமாக அந்த விருது தெரிவிப்பதாகவே கொள்ளுவர். இவற்றைக் கவனிக்கும்போது அவன் கங்கைக் கரையிலும் கடாரத்திலும் கொண்ட வெற்றிகளைப் போலவே பூர்வ தேசத்தில் அடைந்த வெற்றியும் முக்கியமானது என்பது பெறப்படும்.

ஆனால் 'திருமன்னி வளர' என்று தொடங்கும் அவனுடைய மெய்க்கீர்த்தியிலே வேறு எத்தனையோ இடங்களில் அவன் அடைந்த வெற்றிகள் கூறப்பட்டிருப்பினும் பூர்வ தேசம் என்ற பெயர் காணப்படவில்லை. அவ்வளவு முக்கியமான வெற்றியை அவன் தன்னுடைய மெய்க் கீர்த்தியில் கூறாமல் விட்டிருப்பான் என்று கொள்ளவும் முடியாது. அதனால் பூர்வ தேசம் என்பது அவனுடைய மெய்க்கீர்த்தியில் அவன் வெற்றி கொண்டனவாகக் காணும் இடங்களில் ஏதோ ஒன்றையே குறிப்பதாக இருத்தல் வேண்டும்.

பூர்வதேசம் என்ற சொல்லுக்கு முன்னாளில் வாழ்ந்த நாடு அல்லது கிழக்குப் பக்கத்தில் உள்ள நாடு என்று பொருள். இராஜேந்திர சோழனைப் பொருத்த வரையில் அவன் வெற்றிகொண்ட பூர்வ தேசத்துக்கு மேலே கூறிய இருவகைப் பொருளும் பொருந்தாது. சோழ நாட்டுக்குக் கிழக்கே கடல்தான். தமிழ் நூல்களிலும் சாசனங்களிலும் சோழர்களே குணதிசை மன்னர் என்று குறிக்கப் பெறுவர். அதனால் அவன் வெற்றிகொண்ட பூர்வதேசம் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பெயராகவே இருத்தல் வேண்டும்,

பூர்வதேசம் என்பது வேங்கி நாடாகவே இருக்கவேண்டுமென்று காலஞ்சென்ற வெங்கையர் அவர்கள் கருதினர். அவ்விதம் இருக்கமுடியாதென்றும் மத்திய இந்தியாவில் மைகால் மலைத் தொடரை ஒட்டி முன்னாளில் பூர்வ ராஷ்டிரம் அதாவது கிழக்கு மாகாணம் என்று குறிக்கப் பெற்ற பகுதியாகவே இருக்கவேண்டுமென்றும் வேறு சிலர் கருதுவர். அந்தப் பகுதி அந்நாளிலே தென் கோசல நாட்டைச் சார்ந்திருந்தது; தனிப் பிரதேசமாக வழங்கப்பெற்றதில்லை.

எனினும் பூர்வதேசத்தைப்பற்றித் தமிழிலே வேறு குறிப்புக்கள் கிடைக்காமலும் இல்லை. மணிமேகலையில் காணப்படுவதை முக்கியமானதாகக் கொள்ளலாம்.

மணிமேகலா தெய்வத்தினால் நள்ளிரவில் மணிபல்லவம் என்னும் தீவிலே தனியே விடப்பட்ட மணிமேகலை பொழுது புலர்ந்ததும் தன்னுடைய தனிமையை உணர்ந்து அங்கும் இங்கும் சுற்றிய போது புத்த பீடிகை ஒன்றைக் கண்டாள். அதனை வணங்கியவுடன் அவளுக்கு முற்பிறப்பில் நிகழ்ந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. அதை அவளே பின்வருமாறு கூறிக்கொள்ளுகிறாள்.

"மாதவ! உறுதிப் பொருளை உணர்ந்தோய்! காயங்கரை என்னும் நதிக் கரையில் நீ சொல்லியவை எல்லாம் உண்மை என்பது விளங்க அறிந்தேன். காந்தாரம் என்னும் பெரியதொரு நாட்டிலுள்ள பூருவதேசத்தில் இடவயம் என்பதைத் தலைநகராகக்கொண்டு அரசாளும் அத்திபதி என்னும் அரசனுடைய மைத்துனனாகிய பிரம தரும! நீ அவ்வரசனுக்குத் தருமோபதேசம் செய்கையில், 'இன்றைக்கு ஏழாம் நாள் இந்தச் சம்புத்தீவில் நில நடுக்கம் உண்டாகும். அப்போது இந்நகரும் நாகநாட்டின் நானூறு யோசனைப் பரப்பும் பாதாளத்தில் விழுந்து கேடுறும். ஆதலால் நீ இந்நகரை விட்டு வேற்றிடம் செல்' என்று சொன்னாய். அரசனும் அதைப் பறையறைவித்து நகரத்தார் எல்லோருடனும் கிளம்பி வடதிசையில் அவந்தி நகரத்துக்குப் புறப்பட்டவன் இடை வழியிலே காயங்கரை ஆற்றின் கரையில் பாடி இறங்கியிருந்தான். அப்போது குறித்த நாளிலே நில நடுக்கம் ஏற்பட்டு இடவயமும் (நாகநாடும்) கேடு உற்றது

அதனை யறிந்த மன்னனும் மக்களும் நின்பால் அன்புமிக்கு உன்னைச் சரணடைந்தனர். நீ அவர்களுக்குத் தருமோபதேசம் கொண்டிருந்தாய். அப்போது நானும் என் கணவரும் அவ்விடம் வந்தோம். அசோதர நகரத்து அரசனாகிய இரவிவன்மன் தேவியான அமுதபதியின் வயிற்றில் பிறந்த நான் இலக்குமி என்ற பெயருடன் இருந்தேன். சித்திபுரத்து அரசன் சிதரன் மகளும் அத்திபதியின் தேவியுமான நீலபதிக்குப் பிறந்த ராகுலனை மணந்திருந்தேன் என்னை நோக்கி "இன்றைக்குப் பதினாறும் நாளில் உன் கணவன் ராகுலன், திட்டிவிடம் என்னும் (பார்வையே விஷமாகக் கொல்லும்) பாம்பால் இறப்பான்; நீ இவனோடு தீயில் புகுவாய்; பின் காவிரிப்பூம் பட்டினத்தில் பிறப்பாய்; அப்போது உனக்கு ஒரு துன்பம் வரும்; மணிமேகலா தெய்வம் நள்ளிரவில் தோன்றி உன்னை எடுத்துச் சென்று முப்பது யோசனை தெற்கே கடலிலுள்ள மணி பல்லவம் என்னும் தீவில் விட்டுச் செல்லும். ஆங்குள்ள புத்த பீடிகையைத் தொழுதவுடன் உனக்கு முற்பிறப்பில் நிகழ்ந்தவற்றை அறிந்து இன்று நான் சொன்னவற்றையும் தெரிந்து கொள்ளுவாய்' என்று நீ உரைத்தாய்." (மணிமேகலை: பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை).

இதிலிருந்து முன்னாளிலே காந்தார நாட்டில் பூர்வதேசம் என்பது அடங்கியிருந்ததென்று தெரியும். நம் நாட்டுக்கு வடமேற்கே, காபூல் பள்ளத்தாக்குப் பகுதியிலே காந்தாரம் என்னும் தேசம் இருந்ததை நாம் அறிவோம். அதைப் பற்றிய குறிப்புகள் மஹாபாரதத்திலும் மற்றப் புராணங்களிலும் காணப்படுகின்றன. ரிக் வேதத்தில் காணப்படுவதாகவும் கூறுவர். அது ஸிந்துநதியின் இரு கரையிலும் அமைந்திருந்தது. அதிலே இரண்டு ராஜ மா நகரங்கள் இருந்தன. ஸிந்துநதிக்குக் கிழக்கே அமைந்த தக்ஷசிலம் ஒன்று; மேற்கே அமைந்திருந்த புஷ்கலாவதி மற்றொன்று. இராமபிரானுடைய தம்பியான பரதனுடைய மகன் புஷ்கலன் ஏற்படுத்திய நகரமே புஷ்கலாவதி என்பர். 'தாமரை மலர் நிறைந்த இடம்' என்று அதன் பெயர் விளக்கும். கிரேக்க ஆசிரியர்களும் சீன ஆசிரியர்களும் காந்தார நாட்டைப்பற்றித் தங்கள் நூல்களில் குறித்திருக்கிறார்கள்.

புஷ்கலாவதிதான் அந்நாட்டின் பழைய தலைநகரம். கிரேக்க மன்னனான அலெக்ஜாந்தர் இந்தியாமீது படையெடுத்துவந்த காலத்தில் அதுவே தலைநகரமாக இருந்தது. விசாலமாக, ஜனங்கள் நிறைந்த பெரிய பட்டணமாக விளங்கியதாம். அஸ்திஸ் (Astes) என்ற அரசனுடைய ராஜதானியாக இருந்ததாம். ஹெபஸ்டியன் (Hephaestian) என்னும் கிரேக்க சேனாதிபதி அந்நகரை முப்பது நாள் முற்றுகையிட்டு அம் மன்னனைக் கொன்று நகரைக் கைப்பற்றி அலெக்ஜாந்தரிடம் ஒப்படைத்தானாம். ஸ்வாட் (Swat) நதியும் கீழ்ப்பிரதேசத்திலே இப்போது 'ஹஷ்ட்நகர்' என்று வழங்கப்பெறும் பிரதேசமே அது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அஷ்ட நகரம் அதாவது எட்டு ஊர்கள் அடங்கியதால் அந்தப் பெயர் வந்தது என்று தற்காலத்தில் கூறுவர். எனினும் அது ஹஸ்தி நகரம் என்பதன் திரிபே என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.

இப்போது பெஷாவர் (Peshawar) என்று வழங்கப்பெறும் புருஷபுரமே பிற்காலத்தில அதன் தலைநகராக இருந்திருக்கிறது. குஷான் வம்சத்து அரசனான கனிஷ்கன் அந்நகரைச்சிறும் சிறப்பும் உடையதாகச் செய்தான். அங்கே புத்தர் ஆலயம் ஒன்றையும் எழுப்பியிருந்தான். தக்ஷசிலம் அசோக மன்னனன் காலத்திலேயே பிரபலமாக விளங்கி வந்தது. அவன் காலத்திலே ராஜப்பிரதிநிதி ஒருவன் அங்கே இருந்துவந்தான்.

கிரேக்க நூல்களில் கண்டுள்ளபடி பார்த்தால் காந்தாரநாடு ஐந்து நதி பாயும் பிரதேசமான பஞ்சாபிலும் பரவியிருந்ததென்று தெரிகிறது. அதுவும் இருபகுதிகளாகப் பிரிந்திருந்தது. செனாப் அல்லது சந்திரபாக நதிக்கும் ராவி அதாவது ஐராவதி நதிக்கும் இடைப்பட்ட பாகத்தையும் அவர்கள் காந்தாரம் என்றே குறிக்கிறார்கள். காந்தாரத்தின் கிழக்குப்பகுதியே போலும் அது. அதை இளைய பொரோஸ் (Poros, the Younger) ஆண்டுவந்தானும். மற்றொன்று செனாப் நதிக்கும் ஜீலம் நதிக்கும் இடையில் உள்ளது. அதை மூத்த பொரோஸ் (Poros, the Elder) ஆண்டுவந்தானும். அலெக்ஜாந்தருக்கும் இந்திய மன்னனான பொரோஸ் என்பானுக்கும் நடந்த போர், ஜீலம் நதிக்கரையில்தான் நிகழ்ந்தது. அந்நதியைத்தான் கிரேக்கர்கள் ஹைடாஸ்பீஸ் (Hydaspes) என்று குறித்தனர். பொரோஸ் என்ற பெயரைப் பௌரவன் என்று கொள்ளுவர். பூர்வதேச அரசன் என்பதே அவ்விதம் வந்ததுபோலும். பொரோஸ் என்பதும் பூர்வதேச மன்னனையே குறிக்கும்.

அப்படியானால் இராஜேந்திர சோழன் வெற்றி கொண்ட அந்தப்பகுதியாக இருக்கமுடியுமா?

அவன் கங்கா விஜயத்தின்போது வடநாடுகள் பலவற்றை வென்று அடிப்படுத்திய செய்தி அவன் மெய்க்கீர்த்தியில் காணப்படுகிறது. அவன் சக்கரக்கோட்டம், மதுரை மண்டலம், நாமணைக்கோணம், பஞ்சப்பள்ளி, மாசுணிதேசம், ஒட்டவிஷயம், கோசலைநாடு முதலியவற்றுடன் வங்காளத்தின்பகுதிகளையும் வெற்றிகொண்டான் என்று அது கூறுகிறது. மேலே தனித்தனியாகக் குறிக்கப்பட்ட பிரதேசங்கள் எல்லாமே மத்திய இந்தியாவில் கோசலத்தை அடுத்து இருந்தன வென்றே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். மதுரை மண்டலம் என்பது கிருஷ்ண பகவான் பிறந்து விளையாடிய வடமதுரையைத் தலைநகராகக் கொண்டது என்பதையும் மாசுணிதேசம் என்பது ஸிந்துநதிக்கரையில் மாசணி என்னும் வகுப்பார் வாழ்ந்த பிரதேசம் ஆகும் என்பதையும் நான்

தீபாவளி வாழ்த்துக்கள்!

அன்பர்களனைவரும் சகல சௌபாக்கியங்களும்
சாந்தியும், நல்லனவும் பெற்று வாழ்வீர்களாக!

கும்பகோணத்தில் நம்பிக்கையும் நாணயமுமுள்ள

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள்
வைர நகைகளுக்கு

பிரசித்திப்பெற்ற இடம்

A. R. விஸ்வநாத செட்டியார்

"ரெங்க விலாஸ்"

100, பெரியதெரு — நகை வியாபாரம் — கும்பகோணம்

தந்தி: "டைமண்ட்" போன்: 54

போன் 183

PL. S. K. பேப்பர் ஸ்டோர்ஸ்

157, பெரிய கடைத்தெரு :: கும்பகோணம்

Sub Agents: **Ganges Printing Inks**

எங்களிடம்

- நேபா மில்ஸ் நியூஸ் பிரிண்ட்,
- டால்மியா பேப்பர்கள்,
- டிட்டாகர் பேப்பர்கள்,
- மைசூர் பேப்பர்கள்,
- சிர்பூர் பேப்பர்கள்,
- புனலூர் பேப்பர்கள்,
- அரவிந்த் ஸ்டிராபோர்டுகள்

மற்றும் எல்லாவித அயல்நாட்டு பேப்பர்களும் கிடைக்கும்.



நமது கைத்தறிகள்

பல நூற்றாண்டுகளாக இந்தியப் பொருளாதார அமைப்பில் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை முறையை கைத்தறிகள் வகுத்துத் தந்துள்ளன. சுமார் 70 லட்சம் நெசவாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்து இன்று இந்தியாவின் குடிசைத் தொழில்களில் மிகச் சிறந்ததாக விளங்கி வருகிறது. தங்களுடைய தேர்ச்சி, ஒப்பில்லாத வேலைத் திறனால் அந்நெசவாளிகள் அழகிய ஆடைகள் உற்பத்தி செய்யும் துறையில் இந்தியாவின் மங்காது வளர்ந்து வரும் கலைத் திறனின் புகழை நிலை நிறுத்தி வருகின்றனர்.

இந்தியப் பொருளாதாரத்தின்

இன்றியமையாத ஓர் அம்சம்

அகில இந்தியக் கைத்தறி போர்டு
தபால் பை நம்பர் 10004,
பம்பாய்-1

ALL INDIA HANDLOOM BOARD

DA 59-237

வேறோர் இடத்தில் விளக்கியிருக்கிறேன் [தென்னிந்திய கோயிற்சாசனங்கள், மூன்றாம் பாகம் இரண்டாம் பகுதி ஆராய்ச்சிக் குறிப்புகள்] ஸிந்துநதியின் மேல்கரையில் பஞ்ச்பீர் என்ற மலைப்பிரதேசம் இன்றைக்கும் இருக்கிறது. ஐவருடைய கோயில்கள் உள்ள இடம் என்பர் அதை. அந்த ஐவரும் இஸ்லாம் மதப் பெரியோர்கள் என்று முஸ்லீம்கள் கூறுவர்; பஞ்சபாண்டவர்களே என்று இந்துக்கள் கூறுவர். எவ்விதமாயினும் பஞ்சப்பள்ளி என்பதை அந்த இடமாகக்கொள்ளலாம். அது காந்தார தேசத்தில் அடங்கியதுதான்; கங்கைக் கரைக்குச் சிறிதும் சம்பந்தமில்லாமல் வெகுதூரம் தள்ளியே இருக்கிறது. அதனால் அதைத் தனியாக எடுத்துக் கூறியிருத்தல்கூடும்.

ஆயினும் இராஜேந்திரன் காலத்தில் அந்தப் பகுதிக்குப் பூர்வதேசம் என்ற பெயர் வழங்கி வந்ததாகத் தெரியவில்லை. அன்றி, மணிமேகலையில் குறிக்கப்பட்டுள்ள காந்தாரம் இந்தியாவின் வடமேற்குப்பகுதியில் உள்ள பிரதேசமாகக் காணவில்லை. அதனின்றும் வேறானதாகவே தெரிகிறது.

நில நடுக்கத்தின் பயனாக அத்திபதியின் தலைநகரான இடவயம் அழிந்தபோது நாகநாட்டின் நானூறு யோசனையும் கடலில் அமிழ்ந்தது என்று மணிமேகலையில் காணப்படுகிறது. இன்னும் அம்மன்னன் அந்த இடத்தைத் துறந்து அதற்கு வடபாலில் உள்ள அவந்தி நகரை அடைவதற்குச் சென்றான் என்றும் மணிமேகலை கூறுகிறது. நம்நாட்டுச் சரித்திரங்களிலே அவந்தி என்று பிரசித்தமாகச் சொல்லப்பெறும் நகரம் மத்திய இந்தியாவில் உள்ளது. காந்தாரத்தினின்று அதற்கு வரவேண்டுமானால் தெற்கே வரவேண்டுமேயல்லாமல் வடக்கேபோகவேண்டாம். காந்தாரத்திலிருந்து வடக்கேபோனால் இமயத்தைத் தாண்டி மத்திய ஆசியப் பகுதியை அடையலாம்.

நம் நூல்களில் நாகநாடு என்பது கடல்கடந்த தீவாந்தரப் பிரதேசத்தைக் குறிப்பதாகவே காணப்படுகிறது. அதனால் கடலில் அழிந்ததாக மணிமேகலையில் விவரிக்கப்பட்டுள்ள காந்தாரமும் அந்தப்பகுதியில் இருப்பதாகவே கொள்ள வேண்டும். உண்மையில் அத்தகைய பிரதேசம் ஒன்று அங்கே இருந்ததாகச் சீனதேசத்துச் சரித்திரங்களிலிருந்து தெரியவருகிறது. சீன சரித்திரங்களிலே இம்மாதிரியான விவரங்கள் அந்த அந்த நாட்டு மன்னர்கள் எந்த? எந்தக் காலங்களில் சீன சக்கரவர்த்திக்குத் திறைசெலுத்தினர்கள் என்பதைக் குறிக்கும் இடங்களிலேதான் காணப்படுகின்றன. அவற்றைச் சீன நூல்களிலிருந்து திரட்டுவதில் சிரமம் இருக்கிறது. சீன மொழியிலே ரகரம் கிடையாது. அதை லகரமாகவே எழுதுவர். அதனால் லகரம் ர, ல, ழ, ள ஆகிய நான்கு எழுத்துக்களுக்கும் பொதுவாக அமைந்துவிடுகிறது. இன்னும் நம் நாட்டுப் பெயர்களை அம்மொழியிலே எழுதும்போது மிகவும் சிதைத்துவிடுவார்கள். அன்றி, சீன எழுத்துக்களின் உச்சரிப்பிலும் இடத்துக்கு இடம் வித்தியாசம் உண்டு. தவிர, அந்தப் பெயர்களை ஐரோப்பிய மொழிகளிலே எழுதும்போது ஆங்கிலத்தில் ஒரு விதமாகவும் பிரஞ்சு மொழியிலே வேறுவிதமாகவும் எழுதுகிறார்கள். சீன சரித்திரங்களைப்பற்றி ஆராய்ச்சிகள் பெரும்பாலும் பிரெஞ்சு மொழியிலேதான் வெளியாகியுள்ளன. அந்த ஆசிரியர்கள் சீனமொழியில் காணும் இந்திய மொழிப் பெயர்களின் ஆதி வடிவம் எந்தவிதமாக இருந்திருக்கக்கூடும் என்பதை நிச்சயித்து அவற்றின் சாயையையும் கொடுத்திருக்கிறார்கள். பெரும்பாலும் அவை ஸம்ஸ்கிருதப் பெயர்களாகவே அமைந்துள்ளன. பிறமொழிப் பெயர்களும் இருந்திருக்கக்கூடும் அன்றோ! அதனால் மேலே காட்டிய குறைகளுக்கு உட்பட்டே அந்த விஷயங்களை அறிய வேண்டியிருக்கிறது.

தீவாந்தரப் பிரதேசத்தில் விளங்கிய காந்தார தேசத்தைப்பற்றிய முக்கியமான குறிப்பு கி. பி. 502 முதல் 556 வரையில் சீனாவையாண்ட லியாங் (Liang) வமிசத்துச் சரித்திரத்தில் காணப்படுகிறது. அங்கே அந்நாடு கான்-தா-லி (Kan-ta-li) என்று உள்ளது.

காந்தாலி என்னும் நாடு தென் கடலில் ஒரு தீவில் உள்ளது, அதன் பழக்கவழக்கங்கள் கம்போஜம், சயாம் ஆகியவற்றில் உள்ளன போலவே காணப்படுவன. அங்கே பல வர்ணங்களில் பூப்போட்ட துணி, பருத்தி, மற்ற இடங்களில் கிடைப்பதைக்காட்டிலும் உயர்தரமான அடைக்காய் ஆகியவை உற்பத்தியாகின்றன.

“ஸுங்(Sung) வமிசத்துச் சக்கரவர்த்தியான ஹியா-வூ (Hiau-Wu)வின் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 454-464) அந்நாட்டு மன்னனான செ-ப.ல-ரூ-லின்-தோ (ஸ்ரீவரநரேந்திரன் அல்லது ஈசுவர நரேந்திரன்) தன்னுடைய பிரதான அதிகாரிகளுள் ஒருவனான சு-லு-தா (ருத்திரன் என்றும் இந்தியன் அல்லது சிரீதரன்) மூலம் தங்கம் வெள்ளி முதலியவற்றால் ஆன விலை மதிப்புள்ள பொருள்களைத் திறையாக அனுப்பி வைத்தான்.

“கி. பி. 502 ஆம் ஆண்டில் கு-தன் சியு-பொ-தொ-லொ (கௌதம ஸுபத்திரன் அல்லது கோ தஞ்சபுத்திரன்) என்னும் அரசன் நாலாம் மாதம் எட்டாம் நாளில் ஒரு கனவு கண்டான். புத்த பிக்ஷு ஒருவர் அவனிடம் ‘சீனாவிலே இப்போது புண்ணிய சீலனான அரசன் ஒருவன் ஆள்கிறான். இன்னும் பத்து ஆண்டுகளிலே அங்கே தருமம் தழைத்தோங்கும். நீ அம்மன்னனுக்குப் பணிந்து திறையனுப்பினால் உன்னுடைய நாடு செழிக்கும்; வெளிநாட்டு வணிகர் பலரும் வருவர்; வியாபாரமும் நாலு மடங்கு அதிகமாகும். நான் சொல்லுவதை நம்பாவிட்டால் உன் நாட்டின் அமைதி குலைந்துவிடும்’

என்றாராம். அரசன் முதலில் அதை நம்பவில்லை மறுபடியும் அதே பிக்ஷுவை அவன் கனவில் கண்டார். 'நான் சொல்லுவதை நீ நம்பவில்லை. ஆகவே நான் உன்னையே அவ்விடம் அழைத்துச் சென்று சக்கரவர்த்தியைக்காட்டுகிறேன்.' என்று அவர் சொன்னார். அம்மாதிரியே அவன் கனவிலே சீனாவுக்குச் சென்று, சக்கரவர்த்தியைப் பேட்டி கண்டான். கண்விழித்த போது அவன் மிகவும் ஆச்சரியம் அடைந்தான். அவன் ஓவியம் எழுதுவதிலே நல்லதிறமை வாய்ந்தவன். அதனால் அவன் தான் கண்ட விதமே சக்கரவர்த்தியின் முகத்தைப் பலவர்ணங்களிலே எழுதினான். பிறகு அவன் லிகிதத்தோடு ஒரு தூதுவனைச் சக்கரவர்த்தியிடம் அனுப்பி விலையுயர்ந்த கற்களையும் இதர பொருள்களையும் திறையாகச் செலுத்தினான். அந்தத்தூதுவனோடு சித்திரக்காரன் ஒருவனையும் அனுப்பி இருந்தான். தலைநகரை அடைந்ததும் அந்த ஓவியன் சக்கரவர்த்தியின் உருவத்தைப் படமாக எழுதிக்கொண்டான். ஊர் திரும்பியதும் அந்த ஓவியத்தை முதலில் கனவில் கண்டது போலவே அரசன் வரைந்திருந்த சித்திரத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தார்கள் இரண்டும் ஒன்று போலவே இருக்கக்கண்ட மன்னன் சீன சக்கரவர்த்தியின் உருவத்துக்குச் சட்டம் போட்டுப் பூஜையில் வைத்துப் பக்தியோடு தினமும் வணங்கி வந்தான்.

"சிறிது காலத்தில் அவன் இறந்துவிடவே அவன் மகன் பி-யெ-பொ-மொ (பிரியவர்மன் அல்லது விஜயவர்மன்) முடிசூட்டப்பெற்றான் 519-ஆம் ஆண்டில் அவன்-பி-யுன்பொ-மொ (வி......வர்மன்) என்னும் உயர்தர அதிகாரி ஒருவனை லிகிதத்துடன் சக்கரவர்த்தியிடம் அனுப்பிவைத்தான். 520ம் ஆண்டிலும் அவன் தன் தேசத்துப் பொருள்களைத் திறையாக ஒரு தூதுவன் மூலம் அனுப்பி வைத்தான்."

அதற்குப் பிறகு 563-ஆம் ஆண்டில் அந்நாட்டு மன்னன் சீனாவுக்கு ஒரு தூதுவனை அனுப்பியதாகச் சேன் (Chen) வமிசத்துச் சரித்திரம் குறிப்பதாகக் கூறுவர். அப்பால் அந்நாட்டைப் பற்றிய பிரஸ்தாபமே இல்லை.

பிற்காலத்திலே சீனாவை ஆண்ட மிங் (Ming) வமிசத்தின் சரித்திரத்திலே (கி. பி; 1368-1643) பின்வருமாறு காணப்படுகிறது. "காந்தாலி என்று முன்னாளில் வழங்கப்பெற்ற ஸங்-பொ-சி (San-fo-si) பேரரசு முதல் முதலாகப் பழைய ஸுங் வமிசத்துச் சக்கரவர்த்தி ஷியா-ஊ காலத்தில் (454—564) தூதுவர்களை அனுப்பியது; லியாங் வமிசத்துச் சக்கரவர்த்தி ஊ காலத்திலும் (502—549) அடிக்கடி அவர்கள் வந்தார்கள்; இரண்டாம் ஸுங் வமிசத்தின் ஆட்சிக் காலத்தில் (960—1279) அவர்கள் இடையறாமல் தொடர்ந்து திறை செலுத்தி வந்தார்கள்."

இவற்றைக் கவனித்தால், கார்-தாலி என்ற நாடு இந்திய நாகரிகம் நிறைந்த நாடு என்பதும் அது கி. பி. ஆறாம் நூற்றாண்டில் மறைந்துவிட்டது என்பதும் தெரியவரும். அது மலாயா நாட்டில் இருந்திருக்கவேண்டும் என ஆராய்ச்சியாளர்களில் சிலர் கருதுவர். அது பிற்காலத்தில் ஸங்-பொ-சி என்ற பெயரில் விளங்கிய ஸ்ரீ விஜயமாக மாறியதால் அது சுமத்திரா தீவில் இருந்ததாகவே கொள்ளவேண்டுமென்பர் வேறு சிலர்.

காந்தாரம் என்ற பெயர்கொண்ட மற்றொரு நாடும் முன்னாளிலே சீன நூல்களிலிருந்து தெரியவருகிறது. ஆனால் அது மலாயாவில் இல்லை. வெகுதூரம் வடக்கே இந்தோ சீனாவை ஒட்டிய பிரதேசத்தில் இருந்தது. பர்மா தேசத்தின் வட எல்லையில் இந்தோ-சீனாவுக்கும் திபெத்துக்கும் இடையில் உள்ள யூனான் (Yunnan) என்னும் சீன மாகாணத்தில் அது இருந்தது. தாய் (Thai) என்று வழங்கப்பெறும் மக்கள், அதாவது இப்போது சயாம் அல்லது தாய்லாந்து என்று குறிக்கப்பெறும் நாட்டின் மக்களுள் பெரும் பகுதியினரின் மூதாதையர் வாழ்ந்து வந்த அந்த நாட்டுக்கு நான-சோ (Nan-Chao) என்ற வேறு பெயரும் உண்டாம். அதன் மன்னனுக்கு மஹாராஜா என்ற பட்டத்தோடு, 'கிழக்குத் திசையின் அரசன்' என்று பொருள் படக் கூடிய விருது ஒன்றும் உண்டாம். அந்த விருது 'பூர்வராஜர்' என்பது போன்றதொன்றாக இருத்தல் வேண்டும். அது கி. பி. 650-ஆம் ஆண்டுக்குச் சிறிது முன்னதாகத்தான் ஏற்பட்டது என்று கூறுவர்.

இன்னும் பூர்வராஜர் என்பாருக்கும் தமிழ் நாட்டுக்கும் அந்நாளிலே நெருங்கிய தொடர்பு இருந்துவந்ததென்றும் தெரிகிறது.

பாண்டிய மன்னனான பராந்தக நெடுஞ்சடையனுடைய வேள்விக்குடிச் செப்பேடுகளிலே அந்த சாசனத்தின் ஆணத்தியும், அரசனுடைய அதிகாரிகளுள் ஒருவனும், மூவேந்தமங்கலப் பேரரையனுமான மாறங்காரியைப் புகழுமிடத்திலே பூர்வராஜர்களுடைய குறிப்பு காணப்படுகிறது. கங்கராஜனது கன்யாரத்தினத்தைக் கொங்கர்கோனுக்கு மணஞ்செய்விக்கப்போந்த சமயம் வெண்பை என்னுமிடத்தில் வல்லபனுக்கும் பூர்வராஜருக்கும் பெரும்போர் எழுந்ததாம். அதிலே மாறங்காரியும் பூர்வராஜரோடு சேர்ந்து வல்லபனை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றி கொண்டானாம் அதிலே 'ஆர்ப்பரு அடற்றானைப் பூர்வராஜர்' என்று குறிக்கப்பட்டிருப்பதிலிருந்து பூர்வராஜரிடம் அஞ்சாநெஞ்சம் படைத்துத் திறமைவாய்ந்த போர்ப்படை இருந்ததென்பதும் அவர்கள் தமிழ் நாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பதும் தெளிவாகும். இன்னும் அந்தப் போரில் ஈடுபட்ட வல்லபன், மாறங்காரி ஆகிய இருவரும் பெரிய கடற்படை கொண்டிருந்தார்களென்றும் கூறுகிறது. இவைகளைக் கவனித்தால் பூர்வராஜர் என்பார் கடல் கடந்த பிரதேசமான பூர்வ தேசத்து மன்னரே என்பது நன்கு விளங்கும்.

பண்டிட்

டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

ஸ்திரீகள் டானிக்

ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிமிடெட்

சென்னை-17.

கிருஷ்ணன் பேப்ரிக்ஸ்

கைக்குறி துணியில்

மெஷின் பிரிண்ட்

சீட்டிகள்

... அழகு விரும்பும் அழகு...

- கண்கவர் கெட்டிச் சாயம்
- எண்ணற்ற நவநாகரீக டிசைன்கள்
- மலிவான விலை

தென்நாட்டில் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்

உற்பத்தியாளர்கள் :

சிவன் பிரிண்டிங் & டையிங் பேக்டரி

ஈஸ்வரன் கோவில் வீதி, ஈரோடு.....

TEL: "PRODUCERS"

அவ்விதமானல் இராஜேந்திரசோழன் வெற்றி கொண்ட பூர்வதேசமும் தீவாந்தரப் பிரதேசத்தில் உள்ள இடமாகவே கொள்ளவேண்டும்.

இராஜேந்திரன் கடற்படை கொண்டு சென்று கடாரம் எறிந்த செய்தி அவனுடைய மெய்க்கீர்த்தியில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அவன் கடாரத்தரசனைச் சிறைசெய்து ஸ்ரீவிசயத்தின் வித்யாதர தோரணத்தைக் கைப்பற்றினன். இன்னும், பண்ணை. மலையூர். மாயிருடிங்கம், இலங்காசோகம், மாபப்பாளம், மேவிளிம்பங்கம், வளைப்பந்தூரு, தலைத்தக்கோலம், தாம்ரலிங்கம், இலாமுரிதேசம், நக்கவாரம் கடாரம் முதலிய இடங்களையும் வெற்றிகொண்டான். அந்த இடங்கள் எல்லாம் எவை எவை என்பது. இன்னும் தெளிவாக நிச்சயிக்கப் பெறவில்லை. பெரும்பாலும் அவை மலாயா சுமத்திரா பிரதேசங்களிலே இருக்கவேண்டும் எனக் கொள்ளுவர். அவனுடைய திக்குவிஜயம் இந்தோசீனவில் இருந்த சம்பா தேசம் வரையில் நிகழ்ந்ததாகவும் வேறு சிலர் கருதுவர்.

சிறிது காலத்துக்கு முன்னே கிடைத்த இராஜேந்திர சோழனுடைய கரந்தைத் தமிழ்ச் சங்கத்துச் செப்பேடுகளிலே அவன் காம்போஜ தேசத்து மன்னனிடம் திறைபெற்றான் என்ற செய்தி காணப்படுகிறது. சிதம்பரத்திலிருந்து கிடைத்த முதற் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டு ஒன்றிலே இராஜேந்திரனுக்குக் காம்போஜத்து அரசன் காட்சியாக வழங்கிய கல் ஒன்றை தில்லையம்பலத்தின் எதிர் அம்பலத்திலே வைக்கப்பெற்ற செய்தியும் காணப்படுகிறது.

சம்பா தேசத்தை அந்த நாளிலே அன்னம் மன்னர்கள் அடிக்கடி படைகொண்டு தாக்கித் தொந்தரவு கொடுத்து வந்தார்கள். அதனல் சம்பா மன்னர்கள் சீனசக்கரவர்த்தியின் உதவியை நாடியதாகச் சீன சரித்திரத்திலே காணப்படுகிறது. அவ்விதம் கி. பி. 1030-ஆம் ஆண்டில் யங்-பு-கு-செ-வி-பி-லாங்-தொ-கொ-பு-மோ-தி என்பானும் ஒரு தூதுவனை அனுப்பிய செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெயரை யம்புகு ஸ்ரீவிக்ராந்தவர்மன் என்று கொள்ளுவர் ஆராய்ச்சியாளர். அது சரியல்ல. உண்மையில் அது யம்புகோ ஸ்ரீபராந்தகவர்மதேவன் என்றே ஆகும். கோ என்பது அரசனைக் குறிக்கும் சொல். அதற்கு முன்னதாகவும் சம்பா தேசத்து மன்னர்பலர் அதைத் தரித்து வந்திருக்கிறார்கள். யம்பு என்பது இப்போது போ-நகர் என்றும் முன்னளில் கௌடாரம் என்றும் யம்பு நகரம் என்றும் வழங்கப்பெற்ற இடமாகும். அது சம்பா தேசத்து ராசமா நகரங்களுள் ஒன்றாக இருந்திருக்கிறது. அதனல் பராந்தகவர்மன் என்று மேலே குறிக்கப்பெற்றவன். யம்பு நகரத்து அரசன் என்பது விளங்கும்.

பராந்தகன் என்ற பெயரைத் தமிழ் நாட்டிலே சோழ மன்னர்கள் பாண்டிய மன்னர்கள் தரித்து வந்ததை நாம் அறிவோம். பிற இடங்களில் அந்தப் பெயர் வழக்கில் காணப்படவில்லை. ஆகவே அதைத் தமிழ் நாட்டு மன்னர் பெயராகவே கொள்ளலாம். இராஜேந்திர சோழன் தீவாந்தரப்பிரதேசங்களின் மீதுபடையெடுத்துச் சென்று வெற்றி கொண்டது கி. பி. 1025-ம் ஆண்டில் ஆகும். அதையடுத்து ஐந்து வருஷத்தில் பராந்தகன் சம்பா தேசத்தில் ஆட்சி புரிந்து வந்திருக்கிறான். இராஜேந்திரன் தன் ஆட்சிலே சோழ ஸாம்ராஜ்யத்தின் பல பகுதிகளுக்கும் தன் மக்களையும் உறவினர்களையும் ராஜப்பிரதிநிதிகளாக அனுப்பி வைத்த செய்தியையும் நாம் அறிவோம். அதைக்கொண்டு பார்க்கும்போது பராந்தகனும் அவர்களுள் ஒருவனக இருக்கக் கூடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இவற்றைக் கவனித்தால் இராஜேந்திர சோழன் வெற்றிகொண்ட தேசம் இந்தோ-சீனவை ஒட்டிய பிரதேசத்தில் இருந்த காந்தாரா தேசத்தின் பகுதியாகவே இருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆசையும் அதிர்ஷ்டமும்

க. சந்தானம்

மனித சமூகத்தைச் சுழற்றும் முக்கிய சக்திகள் ஆசையும் அதிர்ஷ்டமும். இவ்விரண்டும் ஒற்றுமையுடன் ஒரே திக்கில் இழுத்தால் வாழ்க்கை வண்டி சுகமாக நல்லவழியில் விரைந்து செல்லும். ஆனால் இது துர்லபம். வெவ்வேறு திசைகளை நோக்கி இழுப்பதே சகஜம். ரகுபதியின் பெண்கள் உமாவையும், பூமாவையும் போல.

இஞ்சினீரிங் இறுதிப்பரிக்ஷையில் ரகுபதி முதல் ஸ்தானம் பெற்றபொழுதே, மணமாக வேண்டிய பெண்களின் பெற்றோர்களுக்கெல்லாம் இலக்கானான். அவர்கள் கூறும் ஏலத்தை பொருட்படுத்தாமல், மறு வருஷத்தில் மத்திய வேலைக் கமிஷனின் போட்டிப் பரிக்ஷையிலும் முதல் ஸ்தானம் பெற்று, ரயில்வே இஞ்ஜினீயராக நியமனம் பெற்றதும், அவன் பெறுமானம் வானமளாவி நின்றது. அவனுடைய பெற்றோர்களிடம் ஜாதகங்கள் குவிந்தன. தனவந்தர்களும், உயர்தர உத்தியோகஸ்தர்களும் அவர்களைக் காணவந்த வண்ணமாக இருந்தனர். அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தொகைகளையும், பெண்களின்

தரங்களையும் பற்றித் தந்தை ஜான்ஸியில் புதிதாக வேலையில் அமர்ந்த ரகுபதிக்குத் தாமதமின்றி தகவல் அனுப்பிவந்தார். அவற்றையெல்லாம் படித்துவிட்டு அவன் குப்பைத் தொட்டியில் போடுவதை அவர் அறிந்தால் எவ்வளவு வருத்தப்பட்டிருப்பார்?

ராணி மேரிக் கல்லூரியில் படித்து வந்த வைதேகியின் பி. ஏ. பரீக்ஷை முடிந்ததும் இந்த நாடகத்தின் கடைசி காட்சியும் நிறைவேறிற்று. அவள் ஓர் ஏழை நாயுடு குடும்பத்தைச் சேர்ந்தவள். ரகுபதியோ ஓர் பணக்கார பிராம்மண வாலிபன். இவ்விருவருக்கும் எங்கு, எப்படிப் பழக்கமாயிற்று என்று ஒருவருக்கும் தெரியாது. ஜான்ஸியில் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்ட செய்தி பத்திரிகைகளில் பிரசுரமான பிறகே இரண்டு குடும்பங்களுக்கும், அவ்விருவர்களின் அந்தரங்க நண்பர்களுக்கும் கூட தெரிய வந்தது. சீர்திருத்தக்காரர்கள் மெச்சினர். இரு குடும்பங்களும் துக்கத்திலாழ்ந்தன. அவற்றோடு தம்பதிகளின் தொடர்பும் முறிந்துவிட்டது. இதுவுமோர் நன்மையாகவே அவர்களால் கருதப்பட்டது.

அடுத்த மூன்று வருஷங்களுக்கு ரகுபதிக்கும் வைதேகிக்கும் இந்த பூமியே சொர்க்கலோகமாயிற்று. தனக்குரிய பணியைத் திறமையுடன் செய்வதோடு திருப்தியடையாமல், பலவித பத்திரிகைகளையும், புதிய புத்தகங்களையும் படித்து அறிவையும் ஆற்றலையும் ரகுபதி நன்கு பெருக்கி வந்தான். தனது அழகாலும், குணத்தாலும் வைதேகியும் அவனுக்கு வீட்டில் இன்பத்தையும், வெளியில் மதிப்பையும் வளர்த்து வந்தாள்.

2

எல்லாப் பெண்களுக்கும் முதல் பிரசவம் சோதனைக் காலம். அப்பொழுது அன்னையின் ஆதரவைத் தேடுவது இயற்கை. கருத்தரித்து பிரசவ மாதங்கள் வரையிலும், வைதேகி புத்தகங்களைப் படித்தும், டாக்டர்களிடம் கலந்தும் தைரியமாக இருந்தாள். ஆனால், பிரசவ காலம் நெருங்கவே அவளை அறியாமலே மனத்தில் அச்சம் குடிகொண்டது. அவளுடைய மனக்கலக்கத்தைக் கண்டு ரகுபதியும் தளர்ச்சியடைந்தான். வீட்டில் எப்பொழுதும் துணையாக இருப்பதற்கு ஓர் மருத்துவப் பெண்ணை அமர்த்தினான். தினம் தோறும் டாக்டர் வந்து பார்த்துப் போவதற்கும் ஏற்பாடு செய்தான். ஆனால் வைதேகிக்கு நிம்மதி ஏற்படவில்லை. தான் கற்றறிந்த பக்திப் பாடல்களை ஓயாமல் பாடத் தொடங்கினாள். திருப்பதி வேங்கடேசன் படத்தை வைத்துப் பூஜை செய்யலானாள். சுகப்பிரசவமாகி விட்டால் ஆயிரம் ரூபாய் உண்டியில் சமர்ப்பிப்பதாக பிரார்த்தனை செய்தாள்.

வைதேகியின் அச்சத்திற்குக் காரணமிருந்தது. பிரசவம் மிகவும் கஷ்டமாகயிருந்தது. ரணச்சிகிச்சை செய்தே, குழந்தைகளை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் கடவுள் கிருபையால் தான் உயிர் பிழைத்தது மன்றி இரட்டைப் பெண்களைப் பெற்றாள்.

மனைவியின் பிரசவகாலத்தில் கணவன் பக்கத்திலிருக்கக்கூடாதென்ற இந்திய சம்பிரதாயம் மிகவும் சிறந்ததென்றே சொல்லவேண்டும். வைதேகியின் வேதனைகளைக்கண்டு ரகுபதிக்கு சகிக்க முடியவில்லை. வீட்டை விட்டுப் போகவும் மனம் இடம் தரவில்லை. தனது கவலைக்கு ஆறுதலாக சுருட்டுப்பிடிக்கத் தொடங்கினான். ஆஸ்பத்திரியில் வைதேகிக்கு ரணச்சிகிச்சை என்று கேட்டதும், மயக்கம் போட்டு விடுவான் என்று எண்ணி, டாக்டர் அவனுக்குப் பிராந்தி கொடுத்தார். இதன்பயனாக, வைதேகி பதினைந்து நாட்களுக்குப்பின் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்தபொழுது இரண்டு அழகான பெண் குழந்தைகளை மட்டுமல்ல, இரண்டு சக்களத்திகளையும் சமாளிக்க வேண்டியிருந்தது. கணவனுக்கும் மனைவிக்குமுள்ள மனோபாவம் முற்றிலும் மாறிவிட்டது. ரகுபதிகுத் தான் பதவியில் உயருவதும், மற்ற ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்குள் தனது அந்தஸ்தை வளர்ப்பதுமே முக்கிய ஆசைகளாய் விட்டன. தனது மனத்தை ஆராய்ந்தபொழுது, வைதேகிக்கு முன்னிருந்த காதல் குறைந்து அதனிடத்தில் தெய்வபக்தி வேரூன்றிவருவதையும் உணர்ந்தான். செத்துப் பிழைத்தவர்களுக்கு இவ்வாழ்க்கையில் எவ்விதம் முழுநம்பிக்கை இருக்கக்கூடும்? ஆனால் இருவரும் புத்திசாலிகளானதால், இம்மாற்றத்தை வெளிப்படைக்கு மறைத்துக்கொண்டு, குழந்தைகள்மீது தமது அன்புகளைச் செலுத்த முயன்றனர். தங்கப்பதுமைகள் போன்ற இரட்டைப் பெண்களுக்குப் பெயர்களும் ஒத்திருக்க உமா, பூமா, என்று நாமமிட்டனர்.

3

முதல் தோற்றத்திற்கு உமாவும், பூமாவும் ஒரே மாதிரியாகயிருந்தனர். உமாவுக்கு இடது கன்னத்தில் ஒரு மச்சம். பூமாவுக்குச் சுருட்டை மயிர். இவைகளைக் கொணடே பெற்றோர்களும் முதலில் அடையாளம் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இது ஆறு மாதங்களுக்குத்தான். பின்னர் குழந்தைகளின் பார்வை, குரல் குணங்கள் அனைத்தும் மாறுபட்டிருப்பதைக் கண்டனர். இந்த வித்தியாசங்களுக்கு தற்காலத்திய விஞ்ஞானிகள் முன்னோர்களின் சுபாவங்கள் பலவிதமாக வித்திலும், முட்டையிலும் பதிந்து சந்ததிகளிடம் தோன்றுவதாகக் கூறுகின்றனர். நிறம் உருவம், உயரம் முதலிய உடல் தோற்றங்களுக்கு இது பொருந்தக்கூடும். ஆனால், அறிவின் கூர்மை, அன்பு, கோபம், பயம் முதலிய மனோகுணங்கள் எவ்வாறு இம்முறையில் பரம்பரையாகப் பிரதிபலிக்கக்கூடும் என்பது விளங்கவில்லை. [உடல் உறுப்புகளில் ஏறக்குறைய ஒரே மாதிரியான உமா, பூமாவின் குணங்கள்

இன்றல்ல! நேற்றல்ல!

50 ஆண்டுகளாகப் புகழ்பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(Regd.)

தலைவலி, ஜலதோஷம், கைகால்வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து.

இது வீட்டில் இருந்தால் உங்கள் அருகே ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம் 1909)

த. பெ. எண் 99 ... 214 & 215 மேலமாசிவீதி, மதுரை

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண் 172 .... 213, மேலமாசி வீதி, மதுரை-1.

வாய்ப்புகையிலை, எல்லாவித தயாரிப்புகளுக்கான

உயர்ந்த **புகையிலை** *ரகங்களுக்கு*

நம்பிக்கை, நாணயம் மிகுந்த இடம்

P. பிச்சையா & A. C. ராஜமாணிக்கம்

புகையிலை மொத்த வியாபாரிகள்

202, பாண்டிரோடு, விழுப்புரம்

தந்தி: "*அமிர்தம்*" *போன்:* 42

தந்தி: 'DIENSON'
TIRUNAGESWARAM.

போன்: 95
KUMBAKONAM EXCHANGE.

து. நாராயண அய்யங்கார் ஸன்

ஜவுளி வியாபாரம்,

திருநாகேஸ்வரம்.

(தஞ்சாவூர் ஜில்லா, தென் இந்தியா)

100^{s}ல் உயர்ந்த முறையில் வேஷ்டி, துப்பட்டா ரகங்கள், சாதா ஜரிகை பேட் இவைகளில் தயாராகின்றன. மலேயா, ஸிலோன், முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம்.

விபரங்களுக்கு விண்ணப்பிக்க.

For Dependable

Sales & Service

K. O R R & Co.

40, Chinnathambi Street Madras-1

Phone: 3519

Grams: PRESUNDRY

Paper, Printing Machines, Printing Ink, Printers' Materials, Sand and Emery Paper, Match Chemicals, Stitch Buttons and Zips.

முற்றிலும் மாறுபட்டிருப்பதை இந்த ரீதியில் வியாக்யானம் செய்வது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. தேகம் பிரகிருதியைச் சேர்ந்தது. மனம் ஆத்மாவை அனுசரித்தது. ஒவ்வோர் உயிரிலும், இவ்விரு பரம்பரைகளும் சேர்ந்திருக்கின்றன. மனிதப் பிறவியில் மனம் ஓங்கியிருப்பதால், பூர்வ ஜன்மத்தின் பரிணாமங்களை நன்கு உணருகிறோம் என்ற ஹிந்து மதக்கொள்கை அதிக திருப்திகரமாகயிருக்கிறது. ஆனால், வேதாந்த விசாரத்தில் இறங்க இச்சிறு கதையில் இடமில்லை.

உடல் தோற்றத்தில் எவ்வளவு ஒற்றுமையாகயிருந்தார்களோ, மனோகுணங்களில் உமாவும், பூமாவும் அவ்வளவு வேற்றுமையாகவிருந்தனர். இது குழந்தைப் பருவத்திலிருந்தே தெளிவாயிற்று. உமா அதிகம் அழமாட்டாள். ஆனால் அழ ஆரம்பித்தால் எளிதில் நிறுத்துவதுமில்லை. பூமாவே ஒரு நிமிஷம் சிரிப்பும் அடுத்த நிமிஷம் அழுகையுமாகவுமிருந்தாள். உமாவின் கண்கள் எதையும் ஆழ்ந்து ஊடுருவிப் பார்த்தன. பூமாவின் கண்கள் இடைவிடாமல் சுழன்று வந்தன. குளிப்பதற்கும்;

சாப்பிடுவதற்கும் உமா எவ்விதத் தொந்தரவும் கொடுப்பதில்லை. பூமாவை குளியாட்டி உணவு ஊட்டுவது தினசரிச் சோதனையாகயிருந்தது.

மாறுபட்ட குணங்களைக் கண்டு பெற்றோர்கள் மகிழ்ந்தனர். ஆனால், இரண்டு குழந்தைகளும் ஒரு வயதிலிருந்தே ஓயாமல் போட்டியும், சண்டையுமாகச் சச்சரவு செய்வதைக் கண்டு கலங்கினர். மற்றவள் அருகிலில்லாத பொழுது ஒரு குழந்தையை தாயோ தந்தையோ தூக்கிக் கொஞ்சினால் போதும். அதை எங்கிருந்தோ கண்டுவிட்டுப் புயல் காற்றுப்போல் ஓடி வந்து தன்னையும் அவ்விதமே கொஞ்சும் வரையில் மற்றவளுக்கு வெறிபிடித்துவிடும். ஓரே வேலைக்காரி இரண்டு குழந்தைகளையும் சமாளிக்கமுடியவில்லை. அறை, பெட்டி, அலமாரி, எல்லாம் தனித் தனியாக ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது. தினம் சிறிது நேரம் இருவரும் சமாதானமாக விளையாடும்பொழுது வைதேகியின் மகிழ்ச்சிக்கு அளவிராது, ஆனால் இதுமாரி காலத்தில் சூரியனுதித்ததுபோல் தானிருக்கும்.

ஐந்து வயதில் இருவரும் பள்ளிக்கூடம்போக ஆரம்பித்தபொழுது, சிலநாட்களுக்கு இருவரும் சகோதரிகள்போல் நடந்துகொண்டனர். புதிய உடை, புஸ்தகம், தோழிகள், பாடங்கள் இவற்றில் ஈடுபட்டு பொல்லாச் சண்டைகளை மறந்திருந்தனர். உமா எளிதில் பாடங்களைக் கற்று வகுப்பில் முதல்ஸ்தானம் பெற்றாள். பூமாவோ பள்ளியில் ஆசிரியர் சொல்லுவதையும் கவனிப்பதில்லை. வீட்டிலும் படிப்பதற்கு மனம் வருவதில்லை. தனது புத்தி சாதுர்யத்தாலும், வீட்டில் தனியாகப் போதிக்கப்பட்டதாலும் மற்ற சாதாரணப் பெண்களைப்போல் மேல் வகுப்புக்குப் போவதற்கு வேண்டிய அளவு தேர்ச்சிபெற்று வந்தாள். புத்தகப்பாடத்தைத் தவிர்த்து, பாட்டு, ஆட்டம், விளையாட்டு எல்லாவற்றிலும் உமாவுக்கு விருப்பமில்லை. பூமா இவற்றில் நிகரற்று விளங்கினாள்.

இவ்விருவர்களையும் வளர்ப்பது வைதேகிக்கு மிகவும் சிரமமாகவிருந்தது. ரகுபதியோ இருவருக்கும் வேண்டிய சாமான்களையும், உடைகளையும் தாராளமாக வாங்கிக்கொடுத்து அவர்களின் அன்பைப் பெற்றுவிட்டான். அவன் வீட்டிலிருக்கும்பொழுது அவர்கள் சண்டைபோடுவதில்லை. ஆனால், பரஸ்பரம் வெறுப்பு வளர்ந்து வருவதை அன்னையிடம் எவ்வாறு மறைக்கமுடியும்? பிறர் முன் அதை வெளிப் படுத்தாமல் பாசாங்கு செய்தாலொழிய குடும்பத்தின் கௌரவம் குலைந்துவிடுமென்பதை வற்புறுத்துவதோடு விட்டுவிட்டான். படிப்பு முடிந்து, விவாகமான பின் இந்த சிக்கல்தானே தீர்ந்து விடுமென்று எதிர்பார்த்தாள்.

4

பல இடங்களில் உயர்ந்த பதவிகளை வகித்து விட்டுத் தனது 44 ஆம் வயதில் ரகுபதி ரயில்வே போர்டில் டைரக்டராக நியமிக்கப்பட்டான். இதற்குள் பெண்களுக்கு பதினெட்டு வயதாகி விட்டது. உமா பள்ளியை சிறப்புடன் முடித்தவுடன் அவளை வைதேகி தனது பழைய கல்லூரிக்கே அனுப்பிவிட்டாள். பூமா பள்ளி பரீக்ஷையில் தேறவில்லை. படிப்புக்கு முழுக்கு போட்டுவிட்டு பாட்டும், நடனமும், பலவித வேலைகளும் கற்றுத் தேர்ச்சியடைந்தாள். அவள் அழகையும், பேச்சையும், சாமர்த்தியத்தையும் கண்டவரெல்லோரும் பிரமித்தனர். ஆனால் தனது அக்காளைப்போல் காலேஜுக்குப் போகவில்லையே என்ற ஏமாற்றம்தானோ என்னவோ பெற்றோரிடமிருந்து விலகித் தனியாகச் சகிகளுடன் ஆனந்தமாக வாழ வழியில்லையே என்று வருந்தினாள். உமாவோ பெற்றோருடன் சுகமாக வசிப்பதை விட்டு வெகுதூரத்தில் ஹாஸ்டல் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருப்பதற்கு அலுத்து பூமாவின் அதிர்ஷ்டத்தைஎண்ணி பொறாமைபட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் பி. ஏ. பாஸ் செய்து பெரிய உத்தியோகமுள்ள கணவனை மணந்து, வெளி நாடுகள் சென்று பெரிய பெயர் எடுக்க வேண்டுமென்று கனவு கண்டு தனது படிப்பில் முனைந்தாள்.

டில்லியில் பெரிய பதவி கிடைத்ததைப பற்றி, வைதேகியை மற்ற ரயில்வே உத்தியோகஸ்தர்களின் மனைவிகள் பாராட்டி விருந்தளித்தனர். ரகுபதிக்கும் பாராட்டுப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியே. பூமாவுக்கு அவனைவிட ஆனந்தம். வைதேகிக்கு மட்டும் மனதில் கவலை குடிகொண்டிருந்தது. தனது கணவனின் போக்கு அவளுக்கு வெறுப்பைக் கொடுப்பது மட்டுமின்றி, அவனுடைய உயிருக்கும் ஆபத்து விளையுமோ என்று அஞ்சினாள். ஆனால் இதையெல்லாம் யாரிடம் சொல்ல முடியும்! காதல் மணத்தின் மீது கூட நம்பிக்கை இழக்கலானாள்.

இரண்டு வருஷங்கள் சென்றன. உமா பி. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறிவிட்டு டில்லியில் எம். ஏ. படித்துக்கொண்டிருந்தாள். அந்த வருஷத்திய ஐ. ஏ. எஸ். பரீக்ஷையில் வெற்றி பெற்ற மோகனின் பெற்றோர்களிடம் பேசி அவனுக்கு உமாவை மணம் செய்விப்பதென்று ரகுபதி தீர்மானித்தான். மோகனும், அவனுடைய பெற்றோர்களும் பெண்ணைப் பார்க்க ரகுபதியின் பங்களாவுக்கு வந்தனர். உமாவும் பூமாவும் தனியாக மூலைநாற்காலிகளில் உட்கார்ந்திருந்தனர். இருவரையும் பார்த்த மோகனின் கண்கள் பூமாவிடம் லயித்துவிட்டன. அவன் பெற்றோர்களுக்கோ இரண்டு பெண்களுக்குள் தங்கள் மருமகளாக வரப்போகிறவள் எவள் என்று அடையாளம் புரிந்துகொள்ள முடியவில்லை. இரட்டைகள் என்று ரகுபதி விளக்கினான். உமாவைக்காட்டி அவள்படிப்பு முதலிய வரலாறுகளையும் தெரிவித்தான். இதற்குள் மோகன் பூமா பக்கத்தில் போய் உட்கார்ந்து அவளைப்பற்றி நேரில் விசாரிக்கத் தொடங்கினான், அவள் சிரித்துக்கொண்டே 'நான் படிக்காதவள்' அதோ என் அக்காதான் எம். ஏ. படிக்கிறாள்.

பேப்பர்களுக்குச் சிறந்த இடம்

தந்தி "PAPERKING"
டெலிபோன்: {260. {251.

பழனியப்பா அன் கோ.

பேப்பர் வியாபாரிகள்

219, பெரியகடைத் தெரு :: கும்பகோணம்

எங்கள் கும்பகோணம் ஆபீஸ் ஆரம்பித்து இரு தீபாவளிகள் முடிந்த காலத்தில் எதிர்பாராத ஆதரவுகள் தந்த எல்லா வாடிக்கைதாரர்களுக்கும் இந்தத் தீபாவளி தினத்தன்று எங்கள் நன்றி கலந்த வாழ்த்துக்கள்!

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

- ★ *ஓரியண்ட் பேப்பர் மில்ஸ் லிமிடெட்,*
- ★ *சிர்ப்பூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்,*
- ★ *டால்மியா ரோட்டாஸ் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்,*
- ★ *ஸ்ரீ கோபால் பேப்பா மில்ஸ் லிமிடெட்,*
- ★ *தி திருவாங்கூர் ரேயான் மில்ஸ் லிமிடெட்,*
- ★ *நேஷனல் நியூஸ் ப்ரிண்ட் & பேப்பர் மில்ஸ் லிமிடெட்,*

மற்றும் பல.

தவிர எங்களிடம் வெளிநாட்டு பேப்பர்வகைகளும், தாம்பூலப்பை, காபி பவுடர் பேப்பர் பைகளும், திருமண அழைப்பு டிஸைன் பேப்பர் & கார்டு வகைகளும், பிரிண்டிங் மை தினுசுகளும், காலிகோ ரகங்களும், மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

தங்கள் ஆதரவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

உங்களோடு பெரிய பிரச்சினைகளை வாதிக்க அவளால்தான் முடியும்' என்று பரிகசித்தாள். மோகனின் தாய் உமாவைப் பார்த்து பாட்டுப் பாடச் சொன்னாள். 'உமாவுக்குப் பாடத் தெரியாது. பூமா நன்றாகப் பாடுவாள்' என்று கூறி வைதேகி பூமாவைப் பாடச் சொன்னாள். அவளும் அந்த அவகாசத்தைப் பூரணமாகப் பயன்படுத்தி கர்நாடக, ஹிந்தி சங்கீதங்களில் தனது திறமையைக் காட்டிவிட்டாள். மோகன் அவளையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்த உமாவுக்கு முகம் சிவந்தது. உதடு துடித்தது. தனக்குள் பொங்கி வரும் கோபத்தை அடக்க முடியாமல் அவள் தவிப்பதைக் கண்ட வைதேகி அவளை வந்தவர்களுக்குக் காப்பியும் பலகாரமும் கொண்டுவரும்படி சொல்லி உள்ளே அனுப்பினாள்.

அடுத்த மாதம் மோகனுக்கும் பூமாவுக்கும் விமரிசையாக விவாகம் முடிந்தது, அவள் புருஷனோடு வசிக்கப் போய்விட்டாள். அவனுக்கு ஆக்ரா ஜில்லாவில் வேலை கொடுக்கப் பட்டது. பூமாவின் சுறுசுறுப்பையும், சாமார்த்தியத்தையும் கண்டு மோகனின் ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஒரு வாரத்திற்குள் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டு, தானே கணவனின் டிரைவர் ஆனாள். வீட்டு வேலைகளைத் திறம்பட கவனித்தாள். ஒரு மாதத்திற்குள் ஊரிலிருக்கும் பெண்களெல்லோரும் அவளுடைய ஆருயிர்த் தோழிகளாய் விட்டனர். வீட்டில் எப்பொழுதும் கூட்டமும், பாட்டும், ஆட்டமுமாக இருந்தது. மாதம் இருமுறை டில்லிக்குப் போய்ப் பெற்றோர்களைப் பார்த்து வந்தாள். உமாவையும் சமாதானபடுத்த முயன்றாள். ஆனால் அக்காள் அவளுடன் பேச மறுத்தாள்.

5

உமா எம். ஏ. பாஸ் செய்து விட்டாள். அதற்குமேல் என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ரகுபதியும், வைதேகியும் சிந்திக்கலானார்கள்.

இத்தருணத்தில் ஒருநாள் திடீரென்று ரகுபதிக்கு காரியாலயத்தில் இருதய நோய் கண்டு உடனே அவனை வில்லிங்டன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். செய்தி கேட்டு, வைதேகியும் விரைந்து சென்றாள். ஆனால் இதைப் பல வருஷங்களாக எதிர் பார்த்ததால், அவளுக்கு எவ்வித அதிர்ச்சியும் ஏற்படவில்லை. மூன்று மணி நேரத்திற்குப் பின், ரகுபதி உயிர் நீத்தான். பூமாவுக்குப் பிரசவ காலமாகவிருந்ததால் அவளும், மோகனும் தகனத்திற்கு வர முடியவில்லை. வைதேகியும் உமாவும் இறுதிக் கடன்களை முடித்துவிட்டு டில்லியிலிருந்து சென்னை போக ஏற்பாடு செய்தனர். ரகுபதி அவர்களுக்கு அதிகப் பணம் வைத்துப் போகவில்லை. மாத வருமானத்தில் பெரும்பகுதி குடியிலும், சூதாட்டத்திலும், சீட்டாட்டத்திலும் போய்விட்டது. பூமாவின் விவாகத்திற்காகச் சேமநிதியிலிருந்து கடன் வாங்கியிருந்தான். எல்லாக் கணக்குகளையும் தீர்த்தபின் அவர்களுக்கு ரூ. 30,000 மிஞ்சியது. அதை மூலதனமாக வைத்துக்கொண்டு, உமாவுக்கு ஒரு வேலை தேடிக்கொடுத்துச் சென்னையில் எளிய வாழ்க்கை நடத்த வைதேகி தீர்மானித்தாள். நண்பர்களுக்கெழுதி, தியாகராய நகரில் மாதம் ரூ. 75 வாடகையில் ஒரு பாகம் அமர்த்தி, சாமான்களைச் சென்னைக்கு அனுப்பி விட்டு, பூமாவைப் பார்ப்பதற்கு இருவரும் ஆக்ரா சென்றனர்.

வைதேகி ஆக்ராவைச் சேர்ந்த மறுதினமே பூமாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது, ஆஸ்பத்திரியில் இருந்தாள். மோகன், வைதேகி, உமா, மூவரும் தினம் இருமுறை அவளைப்போய் பார்த்து வந்தனர்.

முதலில் தந்தையைப்பற்றிய பேச்சில் சகோதரிகளுக்குள் ஓர் புதிய நட்பு தோன்றியது போல் காணப்பட்டது. ஆனால் உமாவும், மோகனும் சகஜமாகப்பேசிப்பழகுவதைக்கண்டு பூமாவுக்குப் பிடிக்கவில்லை. மோகனும் வெள்ளை மனத்துடன் உமாவிடம் செய்யும் தர்க்கங்களைப் பற்றி பூமாவிடம் சொல்லும் பொழுது பழைய பகையும் பொறாமையும் மீண்டும் புத்துயிர் எடுக்கலாயின. உமா தன் குழந்தையை எடுத்துக்கொஞ்சுவதைக் கூட பூமா சகிக்கவில்லை. மிகவும் சிரமப்பட்டுத் தனது உணர்ச்சிகளைத் தாயும், உமாவும், அறியாமலிருக்கும்படி நடந்துகொண்டாள். ஆஸ்பத்திரியை விட்டு வீட்டிற்கு வந்து, நான்கு நாட்களுக்குப் பிறகு தாயிடம் தனிமையில் சென்னை போய் விடும்படி கேட்டுக்கொண்டாள்.

சென்னையில் ஓர் உயர்தரப் பெண் கல்லூரியில் உமா ஆசிரியையாக அமர்ந்து பணி செய்யலானள்' அவளுக்குக்கிடைத்தமாதம் ரூ. 200-யையும் தந்தை வைத்திருந்த பணத்தின் வட்டியையும் கொண்டு அமைதியாக வசித்து வந்தாள். தனக்கேற்ற கணவன் தானாக வரும் வரையில், தனி வாழ்வே நலமென்றும் தீர்மானித்திருந்தாள். இரண்டு வருஷங்கள் இவ்வாறு கழிந்தன. பூமாவுக்கு மற்றோர் ஆண் குழந்தை பிறந்து, இரு குழந்தைகளுடன் அவள் அலகாபாத்தில் இருந்தாள். வைதேகியுடன் கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொண்டிருந்ததை தவிர, உமாவுக்கும், பூமாவுக்கும் எத் தொடர்புமில்லை.

வாசுதேவன் சென்னை சர்வகலாசாலையில் ஓர் பேராசிரியன். வயது நாற்பது. கணிதத்தில் மேதாவி. கணித ஆராய்ச்சியிலேயே தனது வாழ்நாளைக் கழிப்பதென்று முடிவு கட்டியிருந்தவன். திடீரென்று அவனுக்கு உமா பேரில் பிரியம் ஏற்பட்டது. அவளுடைய குடும்ப வரலாற்றைக் கேட்டு அது காதலாக மாறிவிட்டது. உமாவும் அவனை வரவேற்றாள். ஆடம்பரமின்றி ரிஜிஸ்தர் கல்யாணம் செய்துகொள்ளத் தீர்மானித்தனர். மே மாதத்தில் மணந்து

டாட்ஜ்

டீஸல் டிரக்குகள் மற்றும் பஸ்கள்

பார்கோ

தீபாவளி
வாழ்த்துக்கள்

தி பிரிமியர்
ஆட்டோமோபைல்ஸ்
லிமிடெட்,
பம்பாய்.

கொண்டு இருவரும் காஷ்மீருக்குப் போகத் திட்டம் போட்டனர்; அச்சமயம் வைதேகி பூமாவைப் பார்க்க அலகாபாத் போகத் தீர்மானித்தாள். ஆனால் மறுபடியும் கொடிய விதி மீண்டும் குறுக்கிட்டது. விவாக தினத்திற்குப் பதினைந்து நாட்களுக்கு முன் பூமாவும், மோகனும் மோட்டார் விபத்தில் இறந்துவிட்டதாகவும், குழந்தைகளை வந்து எடுத்துப் போக வேண்டுமென்றும் அலகாபாத் கலெக்டரிடமிருந்து தந்தி வந்தது. வைதேகி உமா இருவரும் விமானத்தில் டில்லி சென்று அங்கிருந்து அலகாபாத் சேர்ந்தனர். அவர்களுக்காக இரு பிரேதங்களும் பனி பாத்திரத்தில வைக்கப்பட்டிருந்தன. பாலு, கோபு இரு குழந்தைகளும் வேறொரு உத்தியோகஸ்தரின் மனைவியின் ஆதரவில் இருந்தனர். மோகன் பூமா இருவர் பேரிலும் அங்குள்ளவரனைவருக்கும் பிரியமானதால், துக்கம் விசாரிக்க வந்தவர்களுக்குக் கணக்கில்லை. பிரயாக்கைகரையில் தகனம நடந்தபொழுது இருநூறு நண்பர்கள் கூடியிருந்தனர்.

பிரயாகையில் ஸ்நானம் செய்து வெளிவரும் பொழுது உமா கண்களில் அருவி பாய்ந்து கொணடே 'அம்மா எனது ஆசைகளுக்கெல்லாம் முழுக்குப்போட்டுவிட்டேன்' என்றாள். வைதேகி திடுக்கிட்டாள், ஆனால் அப்பொழுது ஒன்றும் சொல்லவில்லை. வீடுவந்து சேர்ந்ததும் குழந்தைகளிருவரும் உமாவின் காலை ஓடிவந்து கட்டிக் கொண்டனர். அவளைத் தமது அன்னை என்றே கருதினர். வைதேகிக்குத் தாங்காத துக்கத்திலும் இக்காட்சிகள் இன்பத்தையளித்தன.

அன்று இருவருக்கும் நீண்ட விவாதம்நடந்தது.

வை—பிரயாகையில் நீ ஏதோ சொன்னாயே அதன் அர்த்தம் என்ன?

உமா. நான் இனி மணம் செய்துகொள்ளப்போவதில்லை; இன்றே வாசுதேவனுக்கு எழுதி விடப் போகிறேன்.

வைதேகி: இதென்ன பைத்தியக்காரத்தனம்? இருவரும்கூடி இச்சிறுகுழந்தைகளை வளர்ப்பது சௌகரியமாக இருக்கும். பூமாவின் அதிர்ஷ்டத்தை விதிகெடுத்துவிட்டதால், உன் அதிர்ஷ்டத்தை நீயே தள்ளி விடவேண்டுமா?

உமா: எது அதிர்ஷ்டம், எது துரதிர்ஷ்டம் என்று யார் கூற முடியும்? இந்தக் குழந்தைகளை வளர்க்க வேண்டியது எனது கடமை அதையே அதிர்ஷ்டமாக நினைப்பேன். அதற்கு வேறுபந்தங்கள் குறுக்கிடலாகாது.

வைதே: இவ்விதம் உன் வாழ்வைக் கெடுப்பது சரியல்ல. தவிர, வாசுதேவன் நிலையையும் நீ நினைத்து பார்க்கவேண்டும், உனக்காகத் தன் நீண்டநாள் விரதத்தை கைவிட்டிருக்கிறார்.

உமா: அதுவும் பெரிய தவறு என்றுதான் நினைக்கிறேன். அவருக்கு கணிதத்தில் உண்மைப் பற்றுண்டு. ஏதோ நடுவில் இந்தப் பாசம் புகுந்தது. இது தீர்ந்தால் இவருக்கும் நன்மையே. நீயே சொல். தந்தையும் நீயும் இளமையில் காதலுக்காக உலகை புறக்கணித்து மணம் புரிந்து கொண்டீர்கள். ஆதனால் மிகவும் சுகப்பட்டாயா!

வை; மற்றவர்களின் குடும்ப வாழ்க்கையைப் போலவே எனதுமிருந்தது. ஆனால் அதைத் துறந்திருந்தால் என் மனதில் என்றும் நிராசை குடிகொண்டிருந்திருக்கும். இப்பொழுது அதன் பலாபலன்களை அனுபவத்தால் அறிந்து அமைதி ஏற்பட்டிருக்கிறது. பிறவியிலேயே துறவியாகத் தோன்றினவர்களே குடும்பமின்றி சாந்திபெற முடியும். வீணில் பிடிவாதம் செய்யாதே.

உமா: குடும்ப சுகத்தில் பாதி இக்குழந்தைகளால் கிடைத்து விடும். நீ கவலைப்படாதே. மற்ற ஆசைகளை யெல்லாம் துறந்துவிட்டேன். என்னை நிர்ப்பந்தம் செய்யாதே.

அதற்கு மேல் வற்புறுத்த வைதேகிக்கு இஷ்டமில்லை. உமாவின் தீர்மானம் தவறு என்று அவள் உண்மையில் கருதவில்லை. ஆனால், துக்கத்தின் காரணமாகச் செய்த முடிவால் பின் பச்சாத்தாப படுவாளோ என்று கலங்கினாள். பக்கத்தில் படுத்திருந்த பாலுவையும், கோபுவையும் நோக்கினாள். பெற்றோரை இழந்த இக்குழந்தைகள் அனாதைகளா? உமாவைப் புதிய தாயாகப் பெற்றது அவர்களின் பேரதிர்ஷ்டமா? கடவுளுக்குத் தான் தெரியும். கவலைகளைக் கண்ணனின் பாத மலர்களில் அர்ப்பணம் செய்வதொன்றே வழி என்பதை உள்ளத்தில் உணர்ந்தாள்.

ஹிந்து மதமே ஆதி மதம்!

எஸ். விஜயா

ஹிந்து, முஸ்லிம், பௌத்தம், கிருஸ்தவம், யூதம், ஷின்டோ, கன்பூசியஸ், ஜொராஸ்ட்ரியன், டோயிஸ்ட் என இன்று உலகில் பல மதங்கள் உள்ளன. இம் மதங்கள் எல்லாவற்றிற்கும் முதன்மையானது ஹிந்து மதமே. உலக மதங்களின் தாயும் அதுவே எனச் சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இது உண்மையாக இருக்கமுடியுமா?

வெளிநாடுகளில் ஹிந்துக்கள்

இன்று உலகிலேயே ஹிந்துக்கள் பெரும் அளவில் வசிப்பது நம் நாடேயாகும். ஆனால் நம் நாடு ஒரு ஹிந்து ராஜ்யமல்ல. நம் அண்டை நாடான நேபாளம் ஒரு ஹிந்து ராஜ்யம் உலகில் உள்ள ஒரே ஹிந்து ராஜ்யமும் அதுதான். சமீபத்தில் எடுத்த ஒரு கணக்குப்படி நம் நாடு உட்பட ஆசியா முழுவதும் 31,8467,610, ஆப்பிரிக்காவில் 3 லட்சம், தென் அமெரிக்காவில் 2/75 லட்சம் இந்தோனீசியாவில் 1 லட்சம், வட அமெரிக்காவில் 10,000 ஹிந்துக்கள் வசிப்பதாகத் தெரிய வந்துள்ளது. ஆசியாவுக்கு வெளியே இந்தோனீசியாவைச் சேர்ந்த பாலித் தீவு, தென் அமெரிக்க நாடுகள். மெக்சிகோ, வட அமெரிக்கா போன்ற பகுதிகளில் வாழும் பூர்வகுடிகள் ஹிந்து மதத்தினராக உள்ளனர்,

ஆதாம் ஏவாள் அவதரித்த இடம்.

இப்பொழுது இராக் எனப்படும் பிரதேசத்திற்கு முதல் மகா யுத்த காலத்தில் மெசபடோமியா எனப்பெயர் இருந்தது. அலெக்சாண்டர் காலத்தில் பாபிலோன் என்ற ராஜ்யம் ஒன்று இருந்ததாக நாம் சரித்திரப் புத்தகங்களில் படிக்கிறோமல்லவா? அக் காலத்தில் இராக்குக்குத்தான் பாபிலோன் ராஜ்யம் எனப்பெயர். இந்த பாபிலோன் ராஜ்யத்திற்கு ஆதியில் என்ன பெயரோ நமக்குத் தெரியாது. ஆனால் ஆதிமனிதன் தோன்றியது அங்குதான். மனித இனத்துக்கே மூல புருஷர்கள் என கிருஸ்துவ வேதம் கூறும் ஆதாம் ஏவாள் அவதரித்ததும் அங்கு தான். அவர்கள் வசித்த ஈடன் தோட்டம் (Garden of Eden) அங்கு தான் இருந்தது என ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர்.

ஆரிய மொழி பிறந்த இடம்

மொழி ஆராய்ச்சியில் நிபுணர்கள் பலர் ஆரியர்கள் ஆதியில் வசித்த இடம் தென் கிழக்கு ஐரோப்பா பகுதி என்றும் அங்கு தான் ஆரிய மொழி பிறந்ததென்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். சம்ஸ்கிருதம் போலவே பாரசீக மொழியும் ஆரிய மொழியே என அவர்கள் கூறுகின்றனர். கிடைத்துள்ள சம்ஸ்கிருத மொழிப் புத்தகங்களுள் ரிக்வேதம் எவ்விதம் பழமையானதோ அதேபோல் பாரசீக மொழிப் புத்தகங்களுள் மிகப் பழமையானது "ஜெண்ட் அவஸ்தா" என்பதாகும். இந்த ஜெண்ட் அவஸ்தா இயற்றப்பட்ட காலம் கி. மு. ஏழாம் நூற்றாண்டு என ஆராய்ச்சியாளர்கள் பலர் கூறுகின்றனர். ஜெண்ட் அவஸ்தா இயற்றப்பட்டுள்ள மொழிக்கும் சம்ஸ்கிருத மொழிக்கும் அதிக வேறுபாடு கிடையாது.

பர்சு ஆரியர்

இதுமட்டுமல்ல. பாரசீக மொழியில் "ஹர்ஹவதி" "ஹரயு" என்ற நதிகளின் பெயர்கள் "ஸரஸ்வதி" "பஸரயு" என்ற நம் நாட்டு நதிகளின் பெயர்களும் ஒரே விதமாக அமைந்துள்ளன. பாரசீக நாட்டின் வடகிழக்கு எல்லையாக ஓடும் நதிக்கு "ஹரி" எனப்பெயர். முன்காலத்தில் பாரசீகத்திற்கு "பர்சு" எனப்பெயர் வழங்கி இருக்கிறது. ஆரியர்களில் "பர்சு" என்ற ஒரு பிரிவினர் நம் நாட்டில் "மத்ர" என்ற பகுதியில் வாழ்ந்ததாக நம் சரித்திரஏடுகள் செப்புகின்றன. தற்போது மேற்குப் பாகிஸ்தானின் பகுதிகளாக உள்ள பஞ்சாப் வடமேற்கு எல்லைப்புறம் ஆகியவைகளுக்கே அக்காலத்தில் "மத்ர" எனப்பெயர் இந்த இனத்தவரே பாரசீகத்தில் வாழ்ந்தவர்கள். இந்த "பர்சு" என்ற பெயரே "பாரஸ்" ஆகி இருக்கிறது. தமிழில் "பாரஸீகம்" ஆங்கிலத்தில் "பெர்ஸியா" என உருமாற்றம் அடைந்திருக்கிறது. நாம்

இன்று சாதாரணமாக வைத்துக் கொள்ளும் "பரசுராம்" என்ற பெயர் ஆதியில் "பர்சுராம்" என இந்த இனத்தவருக்குரிய பிரத்தியேகப் பெயராக இருந்திருக்கிறது "ஆரியன்" என்ற பெயரே "இரான்" என இன்று மருவி அந்நாட்டுப் பெயராக வழங்குவதாகவும் சிலர் கருதுகின்றர். சிந்து, ஹிந்து என்ற பெயர்கள் ஜிந்து என்ற பாரசீக வார்த்தையின் அடியாகப் பிறந்தவை எனக்கருதுவாரும் உண்டு. பாரசீக நாட்டின் பூர்வகுடிகளான பார்சிகள் ஆரியரைப் போலவே ஆரியனையும் அக்னியையும் வணங்குகிறவர்கள் என்பதும் சிந்தனைக்குரியதாகும்.

ஆரியர்கள் ஆதிஸ்தானம்

ஆரியர்களின் ஆதியில் யுரால் மலைக்கு தெற்கே—அதாவது காஸ்பியன் கடலுக்கு வடபகுதியில் வசித்தனர், அங்கிருந்தே அவர்கள் பிறகு உலகின் பலபகுதிகளுக்குப் பரவினர் என்பதுசரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் பலர் கருத்து. தென்மேற்குப் சைபீரியாவோ—அதாவது காஸ்பியன் கடலுக்கு கிழக்குப் பகுதியே ஆரியர்களின் ஆதிஸ்தானம். அங்கிருந்தே அவர்கள் இந்தியாபோன்ற நாடுகளுக்கு குடிபெயர்ந்தனர் என்பது வேறு சில ஆராய்ச்சிக்காரர்கள் கருத்து. ஆரியமொழி பிறந்த இடம் தென்கிழக்கு ஐரோப்பா— அதாவது காஸ்பியன் கடலுக்கு மேற்கே உள்ள பகுதிஎன மொழி ஆயாய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள். மனிதன் முதன் முதலாகத் தோன்றியதாக கிருஸ்தவ வேத ஆராய்ச்சிக்காரர்கள் கூறும் பாபிலோன் காஸ்பியன் கடலுக்கு தென்மேற்கே உள்ள பகுதியேயாகும். ஆரியர் நாடென சரித்திர ஏடுகள் செப்பும் பாரசீகம் அதே காஸ்பியன் கடலின் தென் கரை நாடேயாகும். மேலே விவரித்த பல தரப்பட்ட ஆராய்ச்சியாளர்களின் கருத்தை ஊன்றி நோக்கினுல் ஓர் உண்மை புலனுகிறது. இன்று காஸ்பியான் எனப்படும் காஸியபன் கடலைச் சுற்றியுள்ள பிரதேசமே மனிதநாகரீகத்தின் பிறப்பிடம். ஆரிய நாகரீகத்தின் பிறப்பிடமும் அதுவே. ஆகையால் ஆரிய நாகரீகமே ஆதிநாகரீகம் ஆரியமதமான ஹிந்து மதமே ஆதி மதம் என்பதும் பெறப்படும். புரபசர் வில்லியம் ஜாக்சன் எழுதியுள்ள "The Cambridge History of India" இக்கருத்துக்கு ஆக்கம் அளிப்பதாகவே இருக்கிறகு.

கலைக் கோயிலுக்குள் வாருங்கள்

ஜெமினி கணேசன்

திறமையும் தகுதியும் வாய்ந்த புது முகங்கள் நமது படவுலகுக்குத் தேவை. எனவே, "புதுமுகங்களை வரவேற்று ஆதரவளிக்க நமது தமிழ்ப்பட ரசிகர்கள் முன் வரவேண்டும்" என்று நான் சமீப காலமாக வலியுறுத்தி வருகிறேன்.

புதுமுகங்களைத் தேடிப் பிடிப்பது எப்படி? புதுமுகங்கள் எங்கே இருப்பார்கள்? என்றெல்லாம் இதையொட்டி கேள்விகள் பிறப்பதும் இயற்கை.

இதற்குப் பதிலாக என் படவுலகப் பிரவேசத்தையே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மதறாஸில் கல்லூரி ஒன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்த எனக்கு ஜெமினி ஸ்டுடியோவிலிருந்து அழைப்பு வந்தது. என்னை முதலில் நடிக்கத்தான் அழைத்திருந்தார்கள். ஆனால் உடனடியாக எனக்கு வேஷம் எதுவும் கொடுக்கப்படவில்லை. இங்கு நான் காலம்சென்ற சினிமா மேதை திரு. ராம்னாத் அவர்களின் கீழ் உதவி அதிகாரியாக வேலைபார்த்து வந்தேன். படங்களில் நடிப்பதற்காக வருபவர்களின் புகைப் படங்களையும் விலாசங்களையும் சேகரமிட்டு, படப்பிடிப்புக்குத் தேவையானவர்களை அழைப்பது வழக்கம், அப்போதெல்லாம் நடிக்க வந்துள்ள புதுமுகங்களின் புகைப்படங்களைக் காணும்போது நானும் நினைப்பேன். 'என் புகைப்படத்தையும் ஒரு படத்தயாரிப்பு தேர்வு நிர்வாகி தேர்ந்தெடுக்கமாட்டாரா?' என்று.

திரு எஸ். எஸ். வாசன் அவர்களுக்கும், 'மிஸ் மாலினி' படத்தின் தயாரிப்பாளராக இருந்த கே. ராம்னாத் அவர்களுக்கும் என்மீது ஒரு கண் எப்போதுமே இருந்தது. அவர்களிருவருமே என்னைப் படவுலகில் புகுத்தினார்கள்.

ஒருநாள் திடீரென்று வேஷம் என்னைத் தேடி வந்தது. திரு கே. ராம்நாத் அவர்கள் மிஸ் மாலினியில் நடிக்க ஒரு சந்தர்ப்பம் கொடுத்தார். மாலினி படத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட பாகம் மிகச் சிறிது. 'கலாமந்திர்' டைரக்டர் திரு ஜாவர் சீதாராமன் அவர்களுக்கு (படத்தில் தான்) உதவியாளனாக நான் அதில் நடித்தேன். நான் முதலில் பேசிய வசனம் 'ஸார் எல்லா கிளாஸூம் புல், எல்லா சீட்டும் புக்காயிடுச்சு, இன்றைய வசூல் ரிக்கார்டு பிரேக்' இந்த வசனத்தைக் குறிப்பிட்டுக் கூட என் நண்பரொருவர் விளையாட்டாகக் கூறினார், "ஸார், நீங்கள் நடித்த படங்கள் கூட, ஹவுஸ்......புல்"லாகப் போகிறது என்றார். இதைப் பெருமைக்காகக் குறிப்பிடவில்லை. அன்று நான் பேசிய முதல் வசனம், இன்று நேயர்கள் என்மீது கொண்டுள்ள அபிமான நிலைக்குப் பொருந்துகிறது என்று எண்ணுகிறேன்.

நான் திரைப்படத்தில் நடிக்கும் முன்பு நாடகங்கள் மூலம் அனுபவம் பெற்று வரவில்லை. என் போன்று இன்னும் எத்தனையோ இளைஞர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்தால் நல்ல நடிகராக வந்து விடுவார்கள்.

அமைச்சூர் நாடகங்களில் நமது தயாரிப்பாளர்கள் ஒரு கண்ணோட்டம் வைத்திருக்க வேண்டும். காரியாலயங்களில் வேலை பார்த்துக் கொண்டு நாடகங்களில் நடிக்க விருப்பம் கொண்டு நடித்துக்கொண்டிருக்கிற இளைஞர்கள் பலரிடம் நல்ல நடிப்புத் திறமை இருக்கிறது. அவர்களுக்குத் திரைப் படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கொடுத்தால் இருசாராருக்கும் பலன் உண்டு. அந்த வாய்ப்புடன் ரசிகர்களின் ஆதரவும் கலந்தால் எதிர்காலம் அவரை பெரிய நடிகராக்கி விடும்.

படித்த வாலிபர்கள் இந்தக் கலைத்தொழிலுக்கு வரவேண்டும். ஆனால் அவர்கள் தங்கள் நினைவில் இருத்திக்கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் "திரைப்படத் தொழில் ஒரு சொப்பன உலகம்; புகுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் கொள்ளையாகப் பணலாபம் அடையலாம் என்று குறுகிய மனப்பான்மையை வளர்த்துவிடக்கூடாது. உண்மையான கலையார்வம் கொண்டுள்ளவர்களே இதில் நுழைய வேண்டும்."

சங்கீதம், நாட்டியம் என்று பலதரப்பட்ட லளித கலைகளும் கொண்ட திரைக்கலையை, புனித கலைக்கோயிலாக எண்ணி வாருங்கள். கலைத் தேவியின் அருளுக்குப் பாத்திரமாகுங்கள். இதுவே என் வேண்டுகோள். விருப்பமும் கூட.

வாழ்க கலை!

✸

கையும் கையும் இணைந்தது போலவே அவர்களது இதயமும் இணைந்து விட்டது. ஏவி. எம். 'களத்தூர் கண்ணம்மா'வில் ஜெமினி கணேசன், சாவித்திரி.

நினைவுப் பாதையில் நிலைத்த நிகழ்ச்சிகள்

பத்மினி

என் வாழ்க்கையில் நடைபெற்ற மறக்கமுடியாத சம்பவங்களைப் பற்றி எழுதிக் கொடுக்கும்படிச் சொல்லுகிறார்கள். என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் பல நடைபெற்றிருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் எனக்கு புதிய படிப்பினையையும், உர்சாகத்தையும் அளித்துள்ளன.

என் நினைவுப் பாதையில் நீக்கமுடியாதபடி அமைந்துவிட்ட சில மைல் கல்களைப் பற்றி மட்டும் சொல்லுகிறேன்.

என் வாழ்நாளில் நான் மறக்க முடியாத சம்பவம் பள்ளியில் படிக்கும்போது நடந்தது. நானும், எனது அக்கா லலிதாவும் ஒரே பள்ளியில்தான் படித்து வந்தோம், எங்கள் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழியில் ஒரு விமான நிலையம் இருக்கிறது, பிரதி தினமும் நான் அங்கிருந்து கிளம்பும் விமானத்தையும், இறங்கும் விமானத்தையும் பார்ப்பேன். என்றாவது ஒருநாள் இம் மாதிரியான விமானமொன்றில் ஏறிப் போக வேண்டும் என்றெல்லாம் நான் நினைப்பேன்.

ஒரு நாள் நான் விமான நிலையத்தில் இருந்தபோது திடீரென மழையும் காற்றும் அடிக்க ஆரம்பித்து விட்டது. நான் என் கையிலிருந்த கிழிந்த குடையை விரித்துப் பிடித்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். ஒரு பலத்த காற்று வீசியது. குடையுடன் அலாக்காக நானும் மேலே போய் பல அடிகள் தூரம் சென்று விழுந்தேன். இது ஒரு மறக்க முடியாத நிகழ்ச்சியாக என் மனதில் பதிந்துவிட்டது.

பள்ளி நாட்களில் நான் ஒற்றை நாடியாகத்தான் இருப்பேன். என் உடலில் சதை பிடிக்க வேண்டும் என்ற காரணத்துக்காகவே எனக்கு நடனம் சொல்லித் தரப்பட்டது.

நடனத்தை முறைப்படிப் பயின்றதும் திருவாங்கூர் அரண்மனையில் அரசரின் முன் நானும் லலிதாவும் ஆடினோம். அன்றைய தினம் நாங்கள் ராதா-கிருஷ்ண நடனத்தை ஆடிக்காட்டினோம். அரசரின் முன் ஆடுவதற்கு எனக்கு மிகவும் கூச்சமாகவே இருந்தது. ஆனால் நாட்டியம் முடிந்ததும் அரசர் எங்களைப் பாராட்டிய இரண்டொரு வார்த்தைகள் எனக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தன. திருவாங்கூர் அரசரின் முன் நான்ஆடிய அந்த முதல் நடனத்தை என்றும் மறக்கமுடியாது.

நமது தலைவர்களில் பாரதப் பிரதமர் நேருஜி அவர்களிடம் எனக்குத் தனி மதிப்பும் மரியாதையும் அன்பும் உண்டு. நான் பள்ளியில் படிக்கும்போது அவரது கையெழுத்தை வாங்க முயற்சித்திருக்கிறேன், அவரை அருகில் கண்டு பேச வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு நிறைய இருந்தது.

ஒரு சமயம் எங்களது நடனமொன்று நடைபெற்றது; என்ன ஆச்சர்யம்! எங்கள் நடனம் பூராவையும் இருந்து பார்த்து விட்டு, என்னையும் எனது சகோதரி லலிதாவையும் தன் அருகில் அழைத்து அவர் தட்டிக் கொடுத்து பாராட்டிய போது எனக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது! அன்றைய நிகழ்ச்சியை நினைப்பூட்டும் வகையில் இன்றும் எங்கள் வீட்டு ஹாலில் அப்பொழுது எடுத்த புகைப்படம் ஒன்றை மாட்டி வைத்திருக்கிறோம்.

1943-ம் வருஷம் சென்னையில் நாங்கள் இருந்தோம். அப்போது 'கல்பனா' படத்தில் நடிப்பதற்காக வந்திருந்தோம். சென்னையே எங்களது நிரந்தர வாசஸ்தலமாகிவிடும் என்று அப்போது நான் நினைத்தது கிடையாது. அப்போதெல்லாம் நான், என் சகோதரி லலிதா, மற்றும் சில நடிகைகள் சைக்கிளில் செல்லுவோம். தோட்டத்தில் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவோம். ஒரு சமயம் இம்மாதிரிச் செல்லுகையில் பஸ் விபத்துக்குள்ளானோம் நாங்கள். இதையும், மற்றொரு

பிரதமர் நேருவின் வலதுபுறம் இருப்பவர் பத்மினி.
இடதுபுறம் அமர்ந்திருப்பவர் லலிதா.

சந்தர்ப்பத்தில் எங்களுடன் நடனம் பயின்று வந்த மாணவியை விளையாட்டாக எனது அக்காள் அலமாரியில் வைத்து மூடிவிட, அவள் மயக்க முற்றதையும் நான் மறக்க முடியாது. அன்றைய தினம் நான் பயந்ததுபோல், என் வாழ்நாளில் மற்றொரு சமயத்திலும் பயந்திருக்கிறேன்.

என் வீட்டு மொட்டை மாடியில் நான் படுத்திருந்தபோது, திருடனொருவன் வந்து கத்தியைக் காட்டிப் பயமுறுத்தியதுதான் அது. நான் சமயோசிதமாக நடந்துகொள்ளவே, அவனிடமிருந்து தப்பினேன்.

ஜெமினி ஸ்டுடியோ என்ற பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சினிமா எடுப்பதைப் பார்க்கவேண்டும் என்றும் நான் விரும்பியதுண்டு. அந்தப் பிரபலமான ஜெமினி ஸ்டுடியோவில், என் வாழ்நாளிலேயே காமிராவின் முன் நான் முதலாக நின்ற சந்தர்ப்பத்தை நான் மறக்க முடியாது' முற்றிலும் புதிய சூழ்நிலையில், சுற்றிலும் விளக்குகள் எரிய, நான் காமிராவின் முன் நடனமாடியபோது, ஏதோ கனவு காண்பதுபோல் இருந்தது.

மாஸ்கோவில் தயாரான 'பரதேசி' என்ற படத்தில் நடிப்பதற்காக நானும், என்நடனத்தை டைரக்ட் செய்வதற்காக நடன டைரக்டர் என்ற தோரணையில் ராகினியும் சென்றிருந்தோம். அப்போது அங்கு நடந்துவந்த 'உலக வாலிபர் திருவிழா'வில் கலந்துகொண்டு நடனமாடினோம். நாங்கள் நடனம் ஆடி முடிப்பதற்குள்ளாகவே, மேடையில் நாங்கள் ஆடிய நடனமொன்றைப் படமெடுத்து, போஸ்ட் கார்டாக வெளியிட்டிருந்தனர். எங்களிடம் அந்தக் கார்டைக்காட்டி, கையெழுத்து வாங்கியபோது நாங்கள் மலைத்துப் போய்விட்டோம். இதேபோல் நாங்கள் அங்கு தங்கியிருந்த ஹோட்டலின் முன்பு வெட்டவெளியாக இருந்த இடத்தில், ஒரு பெரிய பூங்காவையே மறுநாளில் ரஷ்யர்கள் நிர்மாணித்ததையும் மறக்க முடியாது.

மூத்தவள் என்று வீட்டில் ராகினி எனக்கு அடங்கி நடப்பாள்; ஆனால் 'பரதேசி' படப்பிடிப்பின்போது நடன டைரக்டரான அவள் என்னை அடக்கிவிட்டாள். மாஸ்கோவில் நடைபெற்ற இச்சுவையான சம்பவங்கள் என் நினைவில் நீங்காத இடம் பெற்றுவிட்டன.

என்னுடைய இருபத்திமூன்றாவது பிறந்தநின விழாவையும் நான் மறக்க முடியாது. அன்றைய தினம் என் வீட்டின் வாயிலில் பசியுடன் நின்ற பிச்சைக்காரனொருவனைக் கண்டேன்; வாழ்க்கையில் வறுமை என்பது எவ்வளவு கொடுமை வாய்ந்தது என்பதை அன்றுதான் அறிந்தேன். அன்றுமுதல் என் ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் ஏழைகளுக்கு அன்ன, வஸ்திர தானங்கள் செய்ய முடிவுசெய்தேன். என்னை இந்த நல்ல முறைக்கு வரச்செய்த அந்த பிறந்தநாள் விழாவை என் ஆயுள் உள்ள வரை மறக்கமாட்டேன்.

இவை எல்லாவற்றையும் விட மேலானது என் தாயார் எனக்கு அளித்துவரும் அன்பு. எதை மறந்தாலும் இதையும், ரசிகர்கள் எனக்கு அளித்த ஆதரவையும் நான் என்றும் மறக்க முடியாது! ✕



கே. ஜே. மகாதேவனின் 'அவள் யார்?' படத்தில் மாலினியின் கவர்ச்சிமிக்க நடனம் இடம்பெற்றிருக்கிறது.

திரை உலகம்

விஸ்வம்

விஜயதசமி

விஜயதசமியன்று குழந்தைகளைப் படிக்கவைப்பது பழங்கால வழக்கம்.

"என்ன. உங்க பையனுக்கு வயசு 5 ஆயிடுத்தா, பள்ளிக்கூடம் போருனே?"

"இப்பத்தான் 5-வது வயசு நடக்கிறது. இந்த விஜயதசமிக்குத்தான் படிக்கவைக்கப் போறேன்"

பழங்காலத்தில் நடந்த பேச்சு இது. அப்போதெல்லாம் குடுமிவைத்து குருமுகமாக அட்சராப்பியாசம் தொடங்கி வைத்த காலம். வரவர குடுமி வைக்கும் பழக்கம் குறைந்து ஒழிந்து, படிக்க வைக்கும் பழக்கமும் மறைந்துவிட்டது,

இப்போதெல்லாம் சென்னையில் விஜயதசமி நெருங்கினுல் பூஜை போடுவதைப்பற்றித் தான் பேச்சு.

ஆனந்தத்தின் எல்லையைக் கண்டுவிட்ட இவர்கள் முகத்தில் மகிழ்ச்சி பிரதிபலிப்பதில் அதிசயமென்ன? உமா பிக்சர்ஸ் "சித்தூர் ராணி பத்மினி"யில் வைஜயந்திமாலாவும், சிவாஜி கணேசனும்.

"என்ன உங்க படத்துக்குப் பூஜை போட்டாச்சா!"

"இதோ, இந்த விஜயதசமியன்னிக்குத் தான் பூஜை போடப்போறேன்... உங்க படம்?"

"நானும் அன்னிக்கித்தான் போடப்போறேன்"

இந்த வருடம் விஜயதசமியன்று சென்னையில் ஏராளமான படங்களுக்கு முகூர்த்தங்கள் நடந்தன.

பம்பாய் விழாக்கள்

"உன்பாத்" (தற்குறி)

இப் பெயர் கொண்ட படத்தின் துவக்கவிழா பம்பாயில் துர்க்காஷ்டமி தினத்தன்று நடைபெற்றது. பால்ராஜ் சகானி, மாலாசின்ஹா, பிரதம பாத்திரங்களில் நடிப்பார்கள் என்று தெரிகிறது. படத்தின் பாகஸ்தர்களில் ஒருவரான மோகன்குமாரின் கதையை, இன்னொரு பாகஸ்தர் சுந்தர் சைகால் டைரக்ட் செய்கிறார்.

மறுபடி ராஜ்கபூர்-நூதன்

ராஜ்கபூர்—நூதன் ஜோடியாக நடித்த அனாரி புகழும் பணமும் குவித்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். மறுபடி இதே ஜோடி நடிக்கும் "சோட்டி-சி-துனியா" என்னும் படத்துக்கு பம்பாயில் வெகுவிமரிசையாக ஆரம்பவிழா நடந்தது. டைரக்டர் பிரபல எழுத்தாளர் ராஜ் ஆனந்த்,

"டூப்ளிகேட்டை ஆதரிக்கமாட்டேன்"

இவ்வாறு தீவிரமாகச் சொல்லி விட்டார் கைகிரீன் என்ற டைரக்டர். அவருடைய "S. O. S. Pacific" தீரச் செயல்கள் நிறைந்தது, அந்தத் தீரச் செயல்களையெல்லாம் அந்தந்த பாகங்களில் நடிக்கும் நட்சத்திரங்களே செய்ய வேண்டும், டூப்ளிகேட் கூடாது என்கிறாராம் அவர். என்ன அநீதி? இதைக்கண்டு நட்சத்திர உலகம் சகிக்குமா? புகழ்ப் பெற்றுப் பிரகாசிக்கத்தான் நட்சத்திரங்களே தவிர செயலாற்றுவது அவர்கள் வேலையா? சே! என்ன அக்ரமம் என்று சீறுகிறார் ஒரு கத்திக் கதாநாயகன்.

ஆறடி உயரத்திலிருந்து குதிக்க வேண்டுமா? டூப்ளிகேட்! வேகமாகக் குதிரை சவாரிசெய்ய வேண்டுமா? டூப்ளிகேட்! கத்தியை வேகமாய்ச் சுழற்ற வேண்டுமா? டூப்ளிகேட்! தண்ணீரில் நீந்த வேண்டுமா? பாம்போடு, புலியோடு, மாட்டோடு, ஆட்டோடு சண்டை செய்ய வேண்டுமா?— எல்லாம் டூப்ளிகேட்தான் செய்ய வேண்டும். பிரபல ஸ்டண்டு ஹீரோக்கள் இதையெல்லாம் செய்ய மாட்டார்கள். கஷ்டப்பட்டு உயிரை வெறுத்து இத்தனையும் டூப்ளிகேட்டுகள் செய்த பின்தான் கத்திச்சண்டை கதாநாயகர்களுக்கு வேலை. இடையிடையே இவர்களுடைய முகத்தைநீட்டி, உணர்ச்சிகள் என்ற பெயரில் முக்குதலையும், முனகுதலையும்காட்ட வேண்டிதான். படம் பார்ப்பவர்களுக்கு, இவர்களே

பூரா தீரச் செயலையும் செய்து விட்டதாகத் திருப்தி. பாவம்! டூப்ளிகேட்டுகளுக்கு என்ன கிடைக்கிறது தெரியுமா? ஆபத்து, ரத்தகாயம், அரைவயிறுக் கஞ்சி. இவ்வளவுதான்.

ஒரு பிரபல சண்டை நடிகர் சண்டை போட வேண்டிய ஒருகட்டம். அவரே செய்துவிட்டால் என்ன இருக்கிறது? டூப்ளிகேட் தயாராக இருந்தார். டூப்ளிகேட் ஒருவேளை நன்ருக சண்டை போடாவிட்டால் தன்பெயர் கெட்டு விடுமே யென்று அஞ்சி. அந்தசண்டை நடிகரும் அதற்காக செட்டில் வந்து உட்கார்ந்திருந்தார். டூப்ளிகேட் கஷ்டப்பட்டு அரைமணிநேரம் ஒத்திகைபார்த்து ஒரு டேக் முடிந்தது' உடல் வியர்க்க, வயிறு வாட மேல்மூச்சு கீழ்மூச்சு விட்டுக்கொண்டு வந்து ஹீரோவின் அருகில் நின்ருர். அப்போது தான் ஒருடஜன் சாத்துக்குடிகளைப் பிழிந்து அருந்திக் கொண்டிருந்த ஹீரோ டூப்ளிகேட்டை ஒரு தினுசாகப் பார்த்தார். "இந்தாப்பா ரங்கா! இவ்வளவு மோசமாக சண்டை போடறையே இதனலே என்பேருன்னு கெட்டுப் போயிடும் அடுத்த டேக்குலே நன்ருகச்செய்யணும்' தெரியுமா?" என்ருர் இறுமாப்போடு. அருகில் நின்று கொண்டிருந்தார் உதவி டைரக்டர்.

"ஆமாம் சார் அவர் கண்டபடி சண்டை போட்டு உங்கள் பேரைக் கெடுத்து விடலாம். ஆகையால் நீங்களே சண்டை போட்டு விட்டால் நன்ருகயிருக்குமே" என்று சொல்லிவிட்டார் விதரணை தெரியால் ஹீரோ பார்த்த பார்வையின அர்த்தம மறுநாள் தான் புரிந்தது. மறு நாளே அந்த உதவி டைரக்டருக்குச் சீட்டு கொடுத்து விட்டார் படமுதலாளி. ஆமாம் அவருக்குத் தேவை நட்சத்திரமா? உதவி டைரக்டரா?

இந்த "டூப்..." சண்டையிலும் தீரச் செயல்களிலும் மாத்திரமல்ல. பாட்டெழுத டூப்ளிகேட், வசனம் எழுத டூப்ளிகேட், இசையமைக்கக்கூட டூப்ளிகேட் இருக்கிருர்கள். என்ன செய்வது. யாராவது இதையெல்லாம் செய்தாக வேண்டுமே! செய்பவர்களுக்கும் பிழைப்பு வேண்டுமே!

"என்று தணியும் இந்த டூப்ளிகேட் மோசம்?" என்று ரசிகர்கள் ஒரு குரலாய்ப் பாடவேண்டும்.

டூப்ளிகேட்டிடம் வேலை வாங்கிக் கொண்டு நட்சத்திரத்திற்குப் பணத்தைக் கொட்டிக் கொடுக்கத் தயாராயில்லாத ஒரு படாதிபதி துணிந்து டூப்ளிகேட்டையே ஹீரோவாக்கி விட்டார்! இதைப் போல் மற்ற படாதிபதிகளும் செய்தால்...? ம்...எங்கே செய்யப் போகிருர்கள்?

"கட்டபொம்மன்"
தமிழ்நாட்டின் பெருமை

ஒரு படம் சாதாரணமாக 50 நாட்கள் ஓடினலேயே வெற்றிப்படம் என்று பெயர் பெற்று விடுகிறது. சில வருஷங்களாக 100 நாட்கள் ஓடிய படங்கள்தான் வெற்றிப்படங்கள் என மதிக்கப்பட்டு வந்தன. சில படங்கள் ஓடும் வகையைப் பார்த்தால் 100 நாட்கள் இனி போதாதுபோல் தோன்றுகிறது. வீரபாண்டிய கட்டபொம்மன் 150 நாட்கள் வெற்றிகரமாக ஓடிவிட்டது. அன்றைய விழா பல தியேட்டர்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று நடிகர் திலகம், ஜெமினி முதலியவர்கள் சேலம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் தியேட்டர்களில் நேரில் தோன்றி ரசிகர்களை மகிழ்வித்தனர். கட்டபொம்மன் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் அழியாத இடம் பெற்று விட்டான் வீரபாண்டிய கட்டபொம்மன் தமிழ்த் திரைப்படச் சரித்திரத்தில் அழியாத இடம் பெற்றுவிட்டது.

கணேசனை சிவாஜி என்றழைப்பதா? பாரதி என்றழைப்பதா? கட்டபொம்மன் என்று அழைப்பதா? ஒரே குழப்பம்!

பானை நிரம்புவிட்டாலும், அவரது இதயம் நிரம்பியுள்ளது என்பதை அவரது பார்வையே சொல்லுகிறதே! 'சபாஷ் ராமு'வில் M. N. ராஜம்.

நாடகக் கலை வளர....?

சென்னை ராஜ்ய சங்கீத நாடகத்தின் ஆதரவின் கீழ் நாடகக் கலை ஆராய்ச்சி மாநாடு ஒன்று சமீபத்தில் சென்னையில் நடந்தது. அதில் பங்கெடுத்துக் கொண்ட பலரும் தாங்கள் எதற்காகக் கூடியிருக்கிருர்கள் என்பதையே புரிந்து

ஆனந்தத்தின் எல்லையைக் கண்டுவிட்ட இவர்கள் முகத்தில் மகிழ்ச்சி பிரதி பலிப்பதில் அதிசயமென்ன? உமா பிக்சர்ஸ் "சித்தூர் ராணி பத்மினி"யில் வைஜயந்திமாலாவும், சிவாஜி கணேசனும்.

"என்ன உங்க படத்துக்குப் பூஜை போட்டாச்சா!"

"இதோ, இந்த விஜயதசமியன்னிக்குத் தான் பூஜை போடப்போறேன்... உங்க படம்?"

"நானும் அன்னிக்கித்தான் போடப்போறேன்"

இந்த வருடம் விஜயதசமியன்று சென்னையில் ஏராளமான படங்களுக்கு முகூர்த்தங்கள் நடந்தன.

பம்பாய் விழாக்கள்

"உன்பாத்" (தற்குறி)

இப் பெயர் கொண்ட படத்தின் துவக்கவிழா பம்பாயில் துர்க்காஷ்டமி தினத்தன்று நடை பெற்றது. பால்ராஜ் சகானி, மாலாசின்ஹா, பிரதம பாத்திரங்களில் நடிப்பார்கள் என்று தெரிகிறது. படத்தின் பாகஸ்தர்களில் ஒருவரான மோகன்குமாரின் கதையை, இன்னொரு பாகஸ்தர் சுந்தர் சைகால் டைரக்ட் செய்கிறார்.

மறுபடி ராஜ்கபூர்-நூதன்

ராஜ்கபூர்—நூதன் ஜோடியாக நடித்த அனாரி புகழும் பணமும் குவித்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். மறுபடி இதே ஜோடி நடிக்கும் "சோட்டி-சி-துனியா" என்னும் படத்துக்கு பம்பாயில் வெகுவிமரிசையாக ஆரம்பவிழா நடந்தது. டைரக்டர் பிரபல எழுத்தாளர் ராஜ் ஆனந்த்,

"டூப்ளிகேட்டை ஆதரிக்கமாட்டேன்"

இவ்வாறு தீவிரமாகச் சொல்லி விட்டார் கை கிரீன் என்ற டைரக்டர். அவருடைய "S. O. S. Pacific" தீரச் செயல்கள் நிறைந்தது, அந்தத் தீரச் செயல்களை யெல்லாம் அந்தந்த பாகங்களில் நடிக்கும் நட்சத்திரங்களே செய்ய வேண்டும், டூப்ளிகேட் கூடாது என்கிறாராம் அவர். என்ன அநீதி? இதைக்கண்டு நட்சத்திர உலகம் சகிக்குமா? புகழ்ப் பெற்றுப் பிரகாசிக்கத்தான் நட்சத்திரங்களே தவிர செயலாற்றுவது அவர்கள் வேலையா? சே! என்ன அக்ரமம் என்று சீறுகிறார் ஒரு கத்திக் கதாநாயகன்.

ஆறடி உயரத்திலிருந்து குதிக்க வேண்டுமா? டூப்ளிகேட்! வேகமாகக் குதிரை சவாரிசெய்ய வேண்டுமா? டூப்ளிகேட்! கத்தியை வேகமாய்ச் சுழற்ற வேண்டுமா? டூப்ளிகேட்! தண்ணீரில் நீந்த வேண்டுமா? பாம்போடு, புலியோடு, மாட்டோடு, ஆட்டோடு சண்டை செய்ய வேண்டுமா?— எல்லாம் டூப்ளிகேட்தான் செய்ய வேண்டும். பிரபல ஸ்டண்டு ஹீரோக்கள் இதை யெல்லாம் செய்ய மாட்டார்கள். கஷ்டப்பட்டு உயிரை வெறுத்து இத்தனையும் டூப்ளிகேட்டுகள் செய்த பின்தான் கத்திச்சண்டை கதாநாயகர்களுக்கு வேலை. இடையிடையே இவர்களுடைய முகத்தைநீட்டி, உணர்ச்சிகள் என்ற பெயரில் முக்குதலையும், முனகுதலையும்காட்ட வேண்டிதான். படம் பார்ப்பவர்களுக்கு, இவர்களே

பானை நிரம்பாவிட்டாலும், அவரது இதயம் நிரம்பியுள்ளது என்பதை அவரது பார்வையே சொல்லுகிறதே! 'சபாஷ் ராமு'வில் M. N. ராஜம்.

பூரா தீரச் செயலையும் செய்து விட்டதாகத் திருப்தி. பாவம்! டூப்ளிகேட்டுகளுக்கு என்ன கிடைக்கிறது தெரியுமா? ஆபத்து, ரத்தகாயம். அரைவயிறுக் கஞ்சி. இவ்வளவுதான்.

ஒரு பிரபல சண்டை நடிகர் சண்டை போட வேண்டிய ஒருகட்டம். அவரே செய்துவிட்டால் என்ன இருக்கிறது? டூப்ளிகேட் தயாராக இருந்தார். டூப்ளிகேட் ஒருவேளை நன்றாக சண்டை போடாவிட்டால் தன்பெயர் கெட்டு விடுமே யென்றுஅஞ்சி. அந்தசண்டை நடிகரும் அதற்காக செட்டில் வந்து உட்கார்ந்திருந்தார். டூப்ளிகேட் கஷ்டப்பட்டு அரைமணிநேரம் ஒத்திகைபார்த்து ஒரு டேக் முடிந்தது' உடல் வியர்க்க, வயிறு வாட மேல்மூச்சு கீழ்மூச்சு விட்டுக்கொண்டு வந்து ஹீரோவின் அருகில் நின்றார். அப்போது தான் ஒருடஜன் சாத்துக்குடிகளைப் பிழிந்து அருந்திக் கொண்டிருந்த ஹீரோ டூப்ளிகேட்டை ஒரு தினுசாகப் பார்த்தார். "இந்தாப்பா ரங்கா! இவ்வளவு மோசமாக சண்டை போடறையே இதனாலே என்பேருன்னு கெட்டுப் போயிடும் அடுத்த டேக்குலே நன்றாகச்செய்யணும்' தெரியுமா?" என்றார் இறுமாப்போடு. அருகில் நின்று கொண்டிருந்தார் உதவி டைரக்டர்.

''ஆமாம் சார் அவர் கண்டபடி சண்டை போட்டு உங்கள் பேரைக் கெடுத்து விடலாம். ஆகையால் நீங்களே சண்டை போட்டு விட்டால் நன்றாகயிருக்குமே'' என்று சொல்லிவிட்டார் விதரணை தெரியாமல் ஹீரோ பார்த்த பார்வையின அர்த்தம் மறுநாள் தான் புரிந்தது. மறுநாளே அந்த உதவி டைரக்டருக்குச் சீட்டு கொடுத்து விட்டார் படமுதலாளி. ஆமாம் அவருக்குத் தேவை நட்சத்திரமா? உதவி டைரக்டரா?

இந்த "டூப்..." சண்டையிலும் தீரச் செயல்களிலும் மாத்திரமல்ல. பாட்டெழுத டூப்ளிகேட், வசனம் எழுத டூப்ளிகேட், இசையமைக்கக்கூட டூப்ளிகேட் இருக்கிறார்கள். என்ன செய்வது. யாராவது இதையெல்லாம் செய்தாக வேண்டுமே! செய்பவர்களுக்கும் பிழைப்பு வேண்டுமே!

"என்று தணியும் இந்த டூப்ளிகேட் மோசம்?" என்று ரசிகர்கள் ஒரு குரலாய்ப் பாடவேண்டும்.

டூப்ளிகேட்டிடம் வேலை வாங்கிக் கொண்டு நட்சத்திரத்திற்குப் பணத்தைக் கொட்டிக் கொடுக்கத் தயாராயில்லாத ஒரு படாதிபதி துணிந்து டூப்ளிகேட்டையே ஹீரோவாக்கி விட்டார்! இதைப் போல் மற்ற படாதிபதிகளும் செய்தால்...? ம்...எங்கே செய்யப் போகிறார்கள்?

''கட்டபொம்மன்''
தமிழ்நாட்டின் பெருமை

ஒரு படம் சாதாரணமாக 50 நாட்கள் ஓடினாலேயே வெற்றிப்படம் என்று பெயர் பெற்று விடுகிறது. சில வருஷங்களாக 100 நாட்கள் ஓடிய படங்கள்தான் வெற்றிப்படங்கள் என மதிக்கப்பட்டு வந்தன. சில படங்கள் ஓடும் வகையைப் பார்த்தால் 100 நாட்கள் இனி போதாதுபோல் தோன்றுகிறது. வீரபாண்டிய கட்டபொம்மன் 150 நாட்கள் வெற்றிகரமாக ஓடிவிட்டது. அன்றைய விழா பல தியேட்டர்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று நடிகர் திலகம், ஜெமினி முதலியவர்கள் சேலம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் தியேட்டர்களில் நேரில் தோன்றி ரசிகர்களை மகிழ்வித்தனர். கட்டபொம்மன் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் அழியாத இடம் பெற்று விட்டான் வீரபாண்டிய கட்டபொம்மன் தமிழ்த் திரைப்படச் சரித்திரத்தில் அழியாத இடம் பெற்றுவிட்டது.

கணேசனை சிவாஜி என்றழைப்பதா? பாரதி என்றழைப்பதா? கட்டபொம்மன் என்று அழைப்பதா? ஒரே குழப்பம்!

நாடகக் கலை வளர....?

சென்னை ராஜ்ய சங்கீத நாடகத்தின் ஆதரவின் கீழ் நாடகக் கலை ஆராய்ச்சி மாநாடு ஒன்று சமீபத்தில் சென்னையில் நடந்தது. அதில் பங்கெடுத்துக் கொண்ட பலரும் தாங்கள் எதற்காகக் கூடியிருக்கிறார்கள் என்பதையே புரிந்து

M. R. ராதா ரீடாவுடன் ஏன் சல்லாபம் செய்கிறார்? அவருக்கென்ன 'கவலையில்லாத மனிதன்' எதுவும் செய்யலாம்.

கொள்ளாததுதான் மகாநாட்டின் விசேஷ அம்சம்.

தலைமை தாங்கிய பழையகால அமெச்சூர் நடிகரான ஸ்ரீ V. C. கோபாலரத்தினம் அவர்கள் நாடகக் கலையில் புதிய முறைகளும், உத்திகளும் கையாளப்படுவதைத் தீவிரமாகக் கண்டித்தார். புதுமுறை நாடக அமைப்போ, பாடல்களோ, ஒளி அமைப்போ கூடாதாம். பின்னணிப் பாடலை ஒழித்துவிட வேண்டுமாம். இவருடைய புத்திமதியை எல்லோரும் பின்பற்றினால் நாடகம் வளர்ந்த மாதிரிதான். ஒரு வேளை அவர் வளர்ந்து வரும் நாடகக் கலை ஒழிந்து தெருக் கூத்து மறுபடியும் தலையெடுக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ என்னவோ! இல்லாவிட்டால் அவர் தயாரித்து நடத்தும்—இல்லை அவருடைய சிஷ்யபரம்பரை நடத்தும் நாடகங்கள் இன்னும் பழைய பாணியிலேயே தெருக்கூத்திலும் கீழ்த்தரத்திலே இருக்குமா என்ன? ஆந்தையின் அழகையும் குரலினிமையையும் புகழ்ந்தெழுதத்தான் சில பத்திரிகைகள் இருக்கின்றனவே!

திரு டி. கே. ஷண்முகம் ஒருவர்தான் மகாநாட்டின் நோக்கத்தைப் புரிந்து கொண்டிருந்தார். ஏன் அதில் பங்கெடுத்துக் கொண்டவர்களில் நாடகக் கலை வளர்ச்சியில் அக்கறை கொண்டவரும், கலையைப்பற்றி அநுபவ பூர்வமாக அறிந்தவரும் அவர் ஒருவர்தானே. மற்றவர்களெல்லாம் "எங்கள் வீட்டுக் காரரும் கச்சேரிக் போகிறார்" என்ற ரகத்தைக் சேர்ந்தவர்கள் தான்.

திரு டி. கே. ஷண்முகம் பேச்சில்தான் சுவையும் பொருளும் இருந்தன. நாடகம் தற்கால வாழ்கையையும் அதன் பிரச்னைகளையும் சித்தரிப்பதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் ஒரு திறந்த வெளி நாடக அரங்கு இருக்க வேண்டும். கோயில்களில் இருக்கும் திறந்த வெளிகளை மதசம்மந்தமான. மக்களின் மனத்தை உயர்த்தக் கூடிய நாடகங்களை நடிக்கப் பயன்படுத்த வேண்டும்" என்று பேசினார். எவ்வளவு அநுபவ பூர்வமான ஆசை! ஆம்! ஊருக்கு ஊர் கோயில் எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் கலையரங்கு. இரண்டையும் ஒன்றாக்க ஷண்முகம் ஆசைப்படுவதில் தவறென்ன?

மற்றவர்களும் பேசினார்கள் — எத்தனையோ வருஷங்களாக, யார் யாரோ பேசியதையெல்லாம். டாக்டர் ராமமூர்த்தி என்ற அமெச்சூர் நடிகர் பேசியதுதான் என்னை—என்னைப் போல் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. சென்னையில் நாடகத்திற்கு வேண்டிய சீன்கள் வாடகைக்கு விடும் கம்பெனிகள் இரண்டேதான் உள்ளனவாம். அவைகளும் பழைய படுதாக்களையே வைத்துக் கொண்டிருக்கின்றனவாம்! என்னே அவருடைய அறிவு வளர்ச்சி சீன்கள் வாடகைக்குக் கிடைத்து விட்டால் நாடகத்தின் தரம் உயர்ந்துவிடுமாம் பாவம். அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! இப்பவும் மேடை நுழையும் போது ஒரு பாட்டு, வெளியேறும் போது ஒரு பாட்டு பாடுவதுதான் நாடகம் என்று எண்ணியிருப்பவருக்கு வேறு என்ன தெரியும்?

நாடகக் கலையின் சரித்திரத்தை ஆராய்ந்தறியக் கூடிய கூட்டம், விருந்துக்கு வந்தவர்கள் சாப்பிடமறந்து பிரிந்ததுபோல் முடிவடைந்தது.

Edited & Published by N. R. Ramanujam, B.A., & Printed by S. Rangaswami, B.A., at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.